# உத்தர காண்டம்

ராஜம்கிருஷ்ணன்



தாகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# உத்தரகாண்டம்

## ராஜம் கிருஷ்ணன்


**தாகம்**

ஃப்ளாட் எண் G3/ 8, மாசிலாமணி தெரு
பாண்டி பஜார், தி. நகர் சென்னை–600 017
✆ 2434 5904

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வெப் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

**உத்தரகாண்டம்** (சமூக நாவல்)

முதற் பதிப்பு : டிசம்பர் 2002

**விலை : ரூ. 95-00**

**UTHTHARAKAANDAM**

tamil social novel

by **Mrs. RAJAM KRISHNAN**

First Edition : December, 2002

Pages : 336

Cover Design : **K. UMA**

●

**DHAGAM**

G-3/8 (15), Masilamani Street

Pondy Bazaar, T. Nagar

Chennai - 600 017

✆ 2434 5904

E-Mail : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

Website : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

Price : **Rs. 95-00**

Laser typeset at Laserlink Systems Chennai-17 ✆: 5212 7214

Printed at : Jaiganesh Offset Printers, Chennai - 04

# முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், தொண்ணூறுகளின் பிற் பகுதியில் இந்திய சுதந்தரத் திருநாளின் பொன்விழா கொண்டாடப் பட்டது. முதல் சுதந்தரத் திருநாளின் பரவச உணர்வுகளை, அநுபவித்த அந்நாளை மக்கள், அன்றைய மகிழ்ச்சி அநுபவத்தில் நூற்றில் ஒரு பங்கு கூடப் பிரதிபலிக்காத கொண்டாட்டத்தைக் காண்கையில், பழைய நினைவுகளையே அசைபோடுவது தவிர்க்க இயலாததாக இருந்தது. புதிய தலைமுறைகள், நுகர் பொருள் வாணிப அலையிலும், சினிமா, சின்னத்திரை மாயைகளிலும், வெளி நாட்டு வாய்ப்புகளைத் தேடி, நுழைவுக்கான அனுமதி தேடி அந்த அலுவலக வாயில்களில் இரவு பகலாகத் தவம் கிடக்கும் உறுதி நிலையிலும், தங்களை மூழ்கடித்துக் கொண்டிருந்தன. நடுத்தர வர்க்கம் என்று அடையாளமிடப்பட்ட வர்க்கம், அன்றாடம் ஏறும் விலை வாசிகளிலும் தேவையில்லாப் பொருட்களின் 'திணிப்பு' தேவை நெருக்கடிகளிலும் வரவுக்கும் செலவுக்கும் தாக்குப்பிடிக்க இயலாமல், 'உபரி' வருமானங்களுக்காகச் சத்தியங்களைத் தொலைப்பதுதான் தருமம் என்று பழக்கப்பட்டுவிட்டிருந்தது. வறுமைக்கோடு மேலே மேலே உயர்ந்து, மக்கள் தொகையின் அதிக விழுக்காட்டைத் தன் வரையறைக்குக் கீழே தள்ளிக் கொண்டி ருந்தது. அந்த அடித்தளத்துக்கு இன்றியமையாத தேவைகளாகப் பெருகியிருந்த சாராய, சூது, பெண்வாணிப விவகாரங்கள், கோட்டு வரையறை கடந்த உச்சாணிவரை கோலோச்சிக் கொண்டிருந்தன. நாளொரு கொலையும் பொழுதொரு கொள்ளையுமாக அழிவுகள் சாம்ராச்சியப் படையெடுப்பையும் விஞ்சிக் கொண்டிருந்தன. நம்

அறிவியல் மேம்பாடுகள், 'ராக்கெட்' ஏவுகணை, விண்வெளி ஆய்வு, வீரிய விதைக்கண்டுபிடிப்பு என்ற சாதனையாளரால் மட்டும் பெருமை பெறவில்லை. இத்தகைய தொழில் நுட்பங்கள், உலகளாவிய மோசடி களாலும், பெண் வாணிபங்களாலும் 'வாணிபம்' நடத்தும் அளவுக்கும் 'பெருமை' பெற்றிருக்கின்றன.

இந்தச் சூழலிலும், அரசியல் கட்சிகளின் பதவி பிடிப்புக் கூட்டணிச் சதுரங்க ஆட்டக்காய் நகர்த்துதலின் இடையே ஒரு முக்கியப் புள்ளியாக, சுதந்தரப் பொன்விழா அரங்கேற்றப்பட்டது. புத்தாயிரம், புதிய நூற்றாண்டு என்ற எதிர்பார்ப்பும் இந்தக் கொண்டாட்டங் களுக்கு ஒரு விறுவிறுப்பூட்டியது. அரசு சார்ந்தும், சாராமலும், சோர்ந்து கிடந்த மேற்பரப்புக்கு, ஒரு 'காபி' குடிக்கும் விறுவிறுப்பு உற்சாகம் ஊட்டியது. சின்னத்திரை, பெரிய திரைகள், பத்திரிகைகள், நட்சத்திர இரவுகளை உருவாக்கி, தேசபக்திப் பாடல்களை அரங் கேற்றின. கண் பார்வையும் மங்கி, செவிப்புலனும் கூர்மை குறைந்து, இக்கால நடப்பியலுக்குச் சிறிதும் தொடர்பில்லாமல், வாழும், சுதந்தரப் போராட்ட கால முதியவர்களைத் தேடிப் பிடித்து, அவர்கள் அரை குறையாக உதிர்க்கும் நினைவுகளைப் பதிவு செய்து மக்கள் தொடர்பு சாதனங்கள் கடமையை நிறைவேற்றின. இந்தக் கொண்டாட்டங் களில், சுதந்தரப் போராட்ட நாட்களில் இருந்து தொடர்ந்து பொது வாழ்விலும், அரசியல் வாழ்விலும், ஒரே இலட்சியத்துடனும் வேகத்துடனும் செயல்பட்டு வரக்கூடிய ஒரு மனிதரைக்கூட அடையாளம் காண முடியவில்லை. ஏனெனில், 'சுதந்தரம் வரும்' என்ற விடிவெள்ளி உதயமாகும் போதே, நாடு துண்டாடப்பட்டதும், குறிக்கோள்களை எட்டும் பாதைகளில் இருந்து குறுகிய இடைவெளிகளில் போராளிகள் தள்ளப்பட்டதும் குழுக்களாகப் பிளவுகள் ஏற்பட்டதும் தவிர்க்க முடியாத நிகழ்வுகளாயின.

காந்தியடிகள் கண்ட சுயராச்சிய, கிராம ராச்சியக் கனவுகள், தனிமனிதத் தூய்மை, ஒழுக்கப் பண்புகளின் அடிப்படையில் அமைந்தவை. ஆனால் அந்த வரையறைகள் மெல்ல மெல்ல,

தன்னலம், பதவி, புகழ் ஆகிய பூச்சிகளால் அழிக்கப் பெற்றன. அதே பூச்சிகள், மனித வாழ்வியலின் அனைத்து நல்லணுக்களையும் விழுங்கி, புற்று வளர்ச்சி போன்றதொரு சமுதாய வளர்ச்சியை, மேன்மையைத் தோற்றுவித்திருக்கிறது. வாழ்க்கை வசதிகள் ஏராளம். ஆனாலும் அடிப்படை வாழ்வாதாரங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன.

இந்தப் பின்னணியில், நான் இந்தப் புதினத்தை எழுது வதற்கான உந்துதல் பெற்றதற்கொரு காரணம் உண்டு.

'ஸ்டாலின் குணசேகரன்' என்ற ஈரோட்டு வழக்கறிஞர், தம் தொழிலை ஒதுக்கி வைத்துவிட்டு, 'விடுதலை வேள்வியில் தமிழகம்' என்ற தலைப்பில், ஓர் அரிய நூலைத் தொகுக்கும் முயற்சியில் இறங்கினார். அந்த நண்பர், இதற்காக நாடு முழுதும் மக்களைச் சந்தித்தும், நூலகங்கள், ஆவணக் காப்பகங்கள் என்று அலைந்து திரிந்து தேடியும் தகவல்கள் திரட்டுகையில் அவ்வப்போது வந்து என்னைச் சந்திப்பார். ஆர்வமுடன் விடுதலைப் போராட்ட வீரர்களை, தியாகிகளைப் பற்றிய செய்திகளை விவரிப்பார். தேச விடுதலைப் போராட்டத்தில் பங்கு பெற்ற வீரர்களைப் பற்றிய நூல்கள், நாடு தழுவியும், பல்வேறு பிராந்தியங்கள் சார்ந்தும் வெளியிடப்பட்டி ருக்கின்றன. ஆனால், அந்த நூல்களிலெல்லாம், தமிழகம் சார்ந்த வீரர்களின் போராட்டம் பற்றிய விவரங்கள் முழுமையாகப் பதிவு செய்யப் படவில்லை என்ற உண்மை புலனாயிற்று. எனவே அவருடைய பெருமுயற்சியின் பயனாக, பல்வேறு சான்றோர்களால் எழுதப்பட்ட நூறு கட்டுரைகள், சுமார் ஆயிரத்து இருநூறு பக்கங் களைக் கொண்ட நூல் இரு தொகுப்புகளாகப் பதிப்பிக்கப்பட்டு விடுதலை வேள்வியில் தமிழகம் என்ற தலைப்பில் 2000ம் ஆண்டில் வெளிவந்தது.

இந்த அரிய தொகுப்பு நூலைப் படித்தபின், சுதந்தரப் போராட் டங்களில் கலந்து கொள்ளக் கூடிய வாய்ப்போ, அனுபவங்களோ எதுவும் இல்லை என்ற நிலையிலும், என் சிறுமிப் பருவத்தி

லிருந்து, எழுபத்தெட்டு வயதை எட்டியிருக்கும் இந்நாள் வரை, இந்நாட்டில் பிறந்த ஒரு பெண்ணாய், பார்வையாளராய், ஓர் எழுத்தாளராய் மலர்ந்த உணர்வுகளுடன் இந்த தேசிய நீரோட்டத்தில் கலந்த கொண்டிருக்கிறேன் என்ற தன்னுணர்வு ஏற்பட்டது. நான் அறிந்த பழகிய பலரும் என் மன அரங்கில் உயிர் பெற்றார்கள்.

இந்திய சுதந்தரப் போராட்டம் என்பது, உலகிலேயே முதன் முதலாக, அஹிம்சை நெறியில் மக்களை ஒன்று திரட்டி, அந்தப் பேருணர்வில் விளைந்த ஆற்றிலனாலேயே, அந்நிய ஆதிக்கத்தை எதிர்கொள்ளத் துணிந்த வரலாறாகும். அதைச் சாதித்தவர், இந்த இருபதாம் நூற்றாண்டின் மாமனிதராகிய காந்தியடிகள். அந்த 1947ம் ஆண்டு, ஆகஸ்ட்–14–15 நாள்ளிரவுக் கொண்டாட்டங்கள் நடந்த போது நான் சென்னையில் இருந்தேன். புதிய இளமை; புதிய விடிவெள்ளி. மக்களின் அந்த மகிழ்ச்சியை, அந்த ஆரவாரங்களை, எதிர்பார்ப்பை, நம்பிக்கையை, குடிசையில் இருந்து கோமான் வரையிலுமான மகிழ்ச்சிப் பிரதிபலிப்பை நானும் அநுபவித்தேன்.

இந்நாட்களில் கொண்டாட்டம் என்றால், குடி, கூத்து, விரசமான ஆட்டபாட்டங்கள் என்பது நடைமுறையாகி இருக்கிறது; குற்றமற்ற அந்த மகிழ்ச்சி ஆரவாரங்களை, ‘ஆடுவோமே, பள்ளுப்பாடுவோமே’ ஆனந்த சுதந்தரம் அடைந்துவிட்டோமென்று’ பாடல் முழங்கும் சூழலை மறக்கவே இயலாது.

1972 இல், நாம் சுதந்திரத் திருநாட்டின் வெள்ளி விழாவைக் கொண்டாடினோம். ஆனால் விடுதலைப் போராட்டத்தில் ஆக்க சக்தியாகப் பரிணமித்த அஹிம்சைத் தத்துவமும், மொழி, சமயம், சாதி, இனங்கள் கடந்த நாட்டுப் பற்றும் இந்நாள், முற்றிலும் வேறு பாட்டு, பிரிவுகளும், பிளவுகளும், சாதி–சமய மோதல்களாகவும், வன்முறை அழிவுகளாகவும் உருவாகியிருந்தன. 72இல், இந்தச் சறிவை அடிநாதமாக்கி, காந்தியக் கொள்கைகள் இலட்சியமாக ஏற்க இயலாதவையாக, இந்நாட்டின் மேம்பாட்டுக்கு அக்கொள்கை

களைச் செயல்படுத்துவது மதியீனமா, என்ற வினாக்களை எழுப்பினேன். 'வேருக்குநீர்' என்ற புதினம் காந்தி நூற்றாண்டும், தீவிரவாதமும் முரண்பாடும் சூழலில் உருவாயிற்று.

காந்தியடிகள், சமுதாயத்துக்கும் அரசியலுக்குமாக ஏழு நெறிகளைக் குறிக்கிறார். 1. கொள்கையோடு கூடிய அரசியல், 2. பக்தியோடு இணையும் இறைவழிபாடு, 3. நாணயமான வாணிபம், 4. ஒழுக்கம் தலையாய கல்வி, 5. மனிதநேய அடிப்படையிலான அறிவியல் வளர்ச்சி, 6. உழைப்பினால் எய்தும் செல்வம், 7. மனச்சாட்சிக்குகந்த இன்பம். இந்த ஏழுநெறிகளில் ஒன்று பழுதுபட்டாலும், சமுதாயமாகிய மரத்தில் பூச்சிகள் மண்டி பயன் நல்கும் உயிர்ச்சத்தை உறிஞ்சிவிடும் என்றார்.

இந்த நெறிமுறைகளில்— வழிமுறைகளில் சிற்சில வேற்றுமை கள் பிரதிபலித்த போதிலும், அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபடும் இலட்சியம் ஒன்றுபட்ட குரலாக ஓங்கி, அதைச் சாதித்தது.

பொது உடமைச் சித்தாந்தம் 'தனிமனித' அடிப்படையில் உருவாகவில்லை. அது ஓர் இயக்கமாகவே செயல்படுத்தும் தத்துவமாகிறது.

ஆனால் தனிமனித ஒழுக்கத்தை முன்னிறுத்தியே 'சத்தியக் கிரகப்போர்' செயல்படுத்தப்பட்டது.

வறுமையும், எழுத்தறியா அறியாமையும் பல்வேறு சமய கலாசாரங்களும் இருந்தாலும், 'பாரத கலச்சாரம்' என்ற பண்பாடு— இருந்தத் துணைக் கண்டத்து மக்களை ஓர் ஆலமரமாக, விழுது களாக, ஒன்றுபடுத்தித் தாங்கி நின்றது.

இந்நாள், முப்பது கோடிகளாக இருந்தவர்கள், நூறு கோடியைத் தாண்டி விட்டவர்களாக மக்கள் பெருகியிருக்கிறோம். இந்தப் பெருக்கமும், அறிவியல் காரணமாக பலதுறை வளர்ச்சிகளும், மக்களை ஒருங்கிணைக்கும், சமுதாய மேம்பாட்டு எல்லைகளைத் தொட்டாலும், நடப்பியல வாழ்வில் குரேதங்களும், வன்முறை அறிவுகளும், மனித நேயம் மாய்ந்து விடும் வாணிப அவலங்களும்

இரைபடுவதற்கு என்ன காரணம்? கிராமங்கள் தன்நிறைவு கண்டு, மக்களை வாழவைத்து, நலங்களைப் பெருக்கி, அவசியமான நகரங்களுக்கும் வளங்கொடுக்க வேண்டும் என்ற அடிப்படைப் பொருளாதாரம் என்னவாயிற்று? இயற்கை தரும் கொடையை என்னுடையது 'உனக்கில்லை' என்று சகமனிதரைச் சாகவைக்கும் பிளவுகளில், அரசியலும் ஆதாயம் தேடுகிறது. ஏவுகணைகளை வெற்றிகரமாகச் செலுத்தும் சாதனை நிகழும் களத்திலேயே, பட்டினியாலும், குண்டு வெடிப்புகளாலும் எந்தப் பாவமும் அறியா மனிதர், ஊருக்குச் சோறு போடும் தொழில் செய்பவர் மடிகின்றனர்.

இந்த அவலங்களுக்குத் தீர்வு இல்லையா? எங்கு தொடங்கி எப்படிச் செயல்படுவோம்? எதிர்கால இந்தியாவுக்கு நம்பிக்கை உண்டா? உண்டு. அழிவுகளிலும், சில நல்ல விதைகள் தோன்றி யிருக்கின்றன. அடிமைப்பட்டுக் கிடந்த நாட்களில், பாரத விடுதலையைப் பற்றிய ஊக்கம் பெற்ற தலைவர்கள், அந்நிய மண்ணில் தான் கிளர்ச்சி பெற்றனர். வெளிச்சத்தில் நின்று பார்க்கும் போது தான், இருள் துல்லியமாகத் தெரிகிறது. நம் வேர்களை உணர்ந்து, சுயநம்பிக்கையும் எழுச்சியும் பெற்று, இலட்சியத்துக்காக உடல் பொருள் ஆவி அனைத்தையும் முன் வைத்தார்கள்.

இந்நாட்களில், புதிய கல்வியும் தொழில் நுட்பமும் பெற்ற இளைஞர் பலர், நம் வேர்களைத் தேடப் புத்துணர்வு பெற்றிருக் கின்றனர். பல்வேறு தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் இயக்கங்கள் நாட்டின் மூலை முடுக்கெல்லாம் அறியாமை யையும் வறுமையையும் அகற்ற, அவற்றுக்குக் காரணமான ஊற்றுக் கண்களைத் தகர்க்க, செயல்படத் தொடங்கி இருக்கின்றன. நலிந்த இடங்களில் எல்லாம், புதிய ஊக்கமும் விழிப்புணர்வும் ஊட்ட, இந்த இயக்கங்கள் செயல்படுகின்றன. 'சிப்கோ' இயக்கத்தில் இருந்து, மகளிர் சுயஉதவிக் குழுக்கள், எழுத்தறியாமை ஒழிப்பு, சிறார் தொழில் சிறுமைகளைதல், சாதி சமய மோதல்களில் நிகழும் குரூர வன்முறைகளைக் கண்டறிந்து, அவற்றுக்குக் காரணமான சமூக அவலங்களைக் களைதல், என்றெல்லாம் பல இலக்குகளில்

இளைஞர் பலர் செயல் படத் தொடங்கியுள்ளனர். புலம் பெயர்ந்து அந்நாட்களில் கூலித் தொழில் செய்து சிறுமைப் படச் சென்ற தலைமுறையில் இருந்து, இந்நாள் புலம் பெயர்ந்து சென்றிருக்கும் இளைஞர் வேறுபட்டவர்கள். இந்நாட்களில் தலையெடுத்து நிமிரும் இளைஞர் நம்பிக்கைக்குகந்தவர்களாய், புதிய புதிய துறைகளில் சாதனைகள் செய்பவர்களாய்த் திகழ்கிறார்கள். அவர்கள் தம் வேர்களைக் கண்டறிந்து, புதிய ஆற்றலுடன், பாரதத்தை மீண்டும் புத்துயிர் பெறச் செய்வார்கள்.

மகாபாரதமும், இராமாயணமும், பாரதத்தின் பெருமை சொல்லும் இதிகாசங்கள். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டம் இவ்வுலகில் இடைவிடாமல் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. அழிவு, உயிர்ப்பு இரண்டையும் மாறி மாறிக் காட்டும் காலத்துக்கு முடிவோ எல்லையோ இல்லை.

இராமாயணம், இராமனின் முடிசூடுதலுடன் முடிந்து விடுவதில்லை. அதேபோல் குருட்சேத்திரப் போருடன் மகாபாரதம் நிறைவு பெற்றுவிடவில்லை. சீதை வனவாசம் தொடருகிறது; யாதவர்களின் அழிவும் நிகழ்கிறது. நம் சுதந்தரப் போராட்டமும் ஒரு காப்பியம் போன்றதுதான். அரசியல் விடுதலையைத் தொடர்ந்து இந்த ஐம்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளில் சரிவுகளும் மோதல்களும் வன்முறைகளும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. காரிருள் கவியும் போதே, விடிவெள்ளி தோன்றும் என்பது நிச்சயமாகிறது. உறைபனியில் கருகும் பசுமைகள் மீண்டும் உயிர்க்கின்றன. எனவே ‘உத்தர காண்டம்’ என்ற தலைப்பிட்ட இந்தப் புதினத்திலும் அந்த நம்பிக்கை விடி வெள்ளிகளைக் காட்டியிருக்கிறேன். இந்தப் புனைகதை, சற்றே வித்தியாசமாக, முன்னும் பின்னுமாகப் புனையப்பட்டிருந்தாலும், என் சிறுமிப் பருவத்திலிருந்து இந்நாள் வரையிலும் நான் கண்டு பேசிப் பழகி, அறிந்து உணர்ந்த பாத்திரங்களையே உயிர்ப்பித்திருக்கிறேன். தன்னார்வத் தொண்டியக்கங்கள் வாயிலாக, இந்நாட்டின் வேர்களைக் கண்டு புத்துயிரூட்ட முனைந்துள்ள இளைய தலைமுறையினரும் கற்பனையில் உதித்தவரல்லர்.

இந்நூலை அச்சிட்டு வெளியிடும் பதிப்பகம் தமிழகத்தில் பெருமைக்குரியதாகும். இப்பதிப்பகத்தைத் துவங்கிய அமரர் கண. முத்தையா அவர்கள் ஒரு விடுதலைப் போராட்ட வீரர்; சிறந்த இலக்கிய அறிஞர்; இந்தப் பதிப்புத் தொழிலின் வாயிலாக, மொழிக்கும், இலக்கியத்துக்கும் சேவை செய்தவர் மட்டுமல்லாமல், தம் உயர் பண்புகளையும் அச்சேவையின் வாயிலாக உணர்த்தியவர். விடுதலைப் போராட்டத்தை அந்நிய மண்ணில் செயல்படுத்த இந்திய தேசிய இராணுவம் அமைத்த நேதாஜி சுபாஷ் சந்திர போசின் அணுக்கத் தொண்டராகவும் மொழி பெயர்ப்பாளராகவும் திகழ்ந்த அவர், இலக்கிய மேதை ராஹுல் சாங்க்ருத்யாயனின் 'வால்காவி லிருந்து கங்கை வரை' நூலைத் தமிழாக்கம் செய்து தமிழருக்கு அந்த இலக்கிய மேதையை அறிமுகப்படுத்தியவர். அவருடைய நினைவலைகள் 'முடிவுகளே தொடக்கமாய்' நூல், இந்நாட்களின் சாதிமதப் பூசல்களால் நொந்து போன இதயங்களுக்கு நன்னீரலை களாகத் திகழ்கின்றன. சுமார் நாற்பதாண்டுகளுக்கு முன்பு, அப்பெரியார், என் நூல்களைப் பதிப்பிக்க முன் வந்து ஆதரவளித் தார். அந்த ஊக்கமும், பேராதரவும், இந்நாள் வரை, என் இலக்கிய வாழ்வில், புதிய முயற்சிகளை மேற்கொள்ளவும், வணிக நோக்குடன் வெளியாகும் பத்திரிகைகளை நாடாமலிருக்கவும் எனக்குத் தெம்பளித்திருக்கின்றன. அவருடைய வழித் தோன்றல்களாக, இந்தப் பதிப்பகப் பணியைச் செம்மையுடன் தொடரும், திருமிகு. மீனா, அகிலன் கண்ணன், செல்வி உமா ஆகியோர் இந்நாள் என் நூல்களைத் தொடர்ந்து பதிப்பித்திருப்பது போன்றே, இந்த 'உத்தரகாண்டம்' நூலையும் அருமையாக அச்சிட்டு வடிவமைத்து வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களனைவருக்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். தமிழ் வாசகப் பெருமக்கள், இதை வரவேற்று ஆதரிப்பார்கள் என்று நம்புகிறேன்.

நன்றி; வாழ்த்துக்கள்.

— ராஜம் கிருஷ்ணன்

# உத்தரகாண்டம்

## 1

**வா**சலில் வண்டி வந்து நின்று கதவு அறைபடும் ஓசை கேட்கிறது. முற்பகல் நேரம். தாயம்மாள் கூடத்தில் மேலே மாட்டப்பட்ட காந்தியடிகள் படத்தை, சிறு மேசையில் ஏறித் துடைத்துக் கொண்டிருக்கிறாள். அன்றாடம் அதைத் துடைப்பது, அவளுக்கு ஒரு வழிபாடாக இருக்கிறது. காந்தியடிகளின் படத்துக்குக் கீழே, ஐயாவின் படமும் அம்மாவின் படமும் இருக்கின்றன. அவற்றுக்குச் சற்றுக் கீழே, ராதாம்மாவின் படம்.

இவர்கள் யாரும் இன்று இல்லை. ஆனால் இவர்களுடைய வாழ்நாளின் நினைவலைகள் அவள் உள்ளக் கடலில் மாயவேயில்லை.

அழுக்குப்படியாமல் துடைப்பது மட்டுமே அவள் செய்யும் பணி. பொட்டு, பூ, மாலை என்று எதுவும் இல்லை.

அய்யா இருந்த நாட்களில், காந்தி படத்தைக் கையால் நூற்ற நூலினால் மலர்மாலை போல் செய்யப்பட்ட மாலை ஒன்று அலங்கரித்துக் கொண்டிருந்தது. அய்யா நூற்பதை விட்ட பின்னரும், மதுரை ஆசிரமத்திலிருந்து, ஒவ்வொரு காந்தி ஜெயந்தி நாளிலும் நஞ்சுண்டையா வருவார். பழைய மாலையை எடுத்துவிட்டுப் புதிய மாலையை இசைப்பார். அய்யா, படுக்கையோடு விழுந்தபின், நஞ்சுண்டையா அடிக்கடி வந்து உட்கார்ந்திருப்பார். பேசவே மாட்டார்கள். அய்யா இறந்தபின் உடனே வந்தார். அடுத்த ஆண்டுக்கு அவரும் இல்லை...

மின்னல் கோடுகளாக நினைவலைகளின் தாக்கத்தில் அப்படியே பெஞ்சியின் மீது நின்ற அவள், சட்டென்று இறங்க முயன்று சாயுமுன் இருகரங்கள் அவளைத் தொட்டுத் தாங்குகின்றன.

கூச்சத்தில் குறுக இறங்கி நிலை பெறுகிறாள்.

''ஓ... இவனா?...'' வெறுப்பு முகத்தைச் சுளிக்க மேலிடுகிறது.

'என்னை ஏதற்கடா தொட்டுத் தாங்கினாய்? உன்னைப் பத்துமாதம் இந்த வயிற்றில் வைத்துக் கொண்டு, பால் கொடுத்து, பாசம் காட்டி வளர்த்ததற்காக அணு அணு வாய்ச் சிதைந்து கொண்டிருக்கிறேன்...' என்று மனம் குமைகிறது.

''வாங்கையா? வாங்க?'' என்று கொல்லைப்புறம் இருந்து வரும் ரங்கசாமி, மேலே சுழலும் விசிறிக்கான விசையைப் போடுகிறான். கூடத்தில் நாற்காலி ஏதுமில்ல. அகலமான பெஞ்சு ஒன்றுதான் இருக்கிறது. அய்யா கடைசி நாட்களில் அதில் தான் படுத்திருந்தார். அந்தக் கூடத்தில் உத்தரக்கட்டைக் கொக்கிகளில் தொங்கிய தேக்குமர ஊஞ்சல் அது. ராதாம்மா உட்கார்ந்து ஆடுவாள். தேனாம் பேட்டை வீடும் சுற்றுப்புறங்களும் ''சேவாகுருகுலம்'' என்றான பிறகு, அந்த ஊஞ்சல் இங்கு வந்தது. இந்த வீடும், சுற்று வட்டம் மனைகளும் அம்மாவின் பிறந்த வீட்டு வழியில் வந்தவை.

"உக்காருங்கையா? விசிறில காத்தே வரல..."

அவள் துடை துணியை எடுத்துக் கொண்டு சமைய லறைக்குள் வந்து, அடுப்பைப் பார்ப்பது போல பாவனை செய்கிறாள்.

ராகிக்கூழோ, ஓர் அரிசிப் பொங்கலோ தான் இவள் சமையல்.

ஏதேனும் காய், கீரை—மோர்.

ரங்கசாமி சமையற்கட்டின் வாயிற்படியில் நிற்கிறான். "எதுனாலும் வாங்கிட்டு வரட்டுமாம்மா?"

"என்ன வாங்கணும்? பச்சக் கொத்துமல்லி துவையல் அரச்சிக்கிறேன். எனக்கு ஒண்ணும் வாங்கித் தரவேணாம்!" நறுக்கென்ற துண்டிப்பு.

"ரங்கசாமி?"

"ஐயா?" என்று அவன் ஓடி வருகிறான்.

"சில்லுனு கொஞ்சம் மோர்... அம்மா...!"

உள்ளே வந்து அடைந்த அவளைக் கொக்கி போட்டு இழுக்கிறானா? உழக்குத் தயிரைக் குறுக்கி, பானையில் இருந்த நீரை ஊற்றி, உப்பும் சீரகத்தூளும் தூவி தவலைச் செம்பில் கொண்டு வந்து பலகையில் வைக்கிறாள்.

என்ன வீராப்பானாலும், வயிற்றுச்சதை அசையாமலில்லை. இவனை அவள் எப்போது பார்த்தாள்? இந்தப் பக்கம் ஏதோ விழா— கல்யாணம் என்று வந்ததாகச் சொன்னான். மாலை சால்வை என்ற வரிசைகளை ஒரு கட்சிக்காரன் அவளுக்குத் தெரிவதற்காக வாங்கிக் கொண்டு நின்றான். இவள் அப்போது வாசல் மேல் திண்ணையில் அமர்ந்திருந்தாள்.

அப்பனைப்போல் கறுப்புத்தான். எடுப்பான முகம். சாதிப்பேன் என்ற திமிர் தெரியும் பார்வை. கட்சிக்கரை வேட்டி.

இவள் அலட்சிய பாவத்துடன் விசிறிக்கட்டையை ஆட்டிக் கொண்டிருந்தாள்.

"எப்படி இருக்கீங்கம்மா? உங்க மருமவதா பாத்துட்டு, கூட்டிட்டு வாங்கன்னு நச்சரிக்கிறா. மஞ்சு கல்யாணத்தப்ப வந்திட்டு உடனே கிளம்பிட்டீங்க. புது வீடு வசதியா கட்டி ருக்கு. உங்க இஷ்டப்படி கிணத்துல எறச்சி ஊத்திட்டுக் குளிக்கலாம். வயசு காலத்துல, மகன் செல்வாக்கா இருக் கறப்ப நீங்க இப்ப இருக்கலாமா?..." என்று கெஞ்சினான்; குழைந்தான்.

ஆப்பிலும் மலை வாழையுமாகத் தட்டுக்கள் வந்தன.

"இதெல்லாம் இங்க எதுக்குக் கொண்டாரீங்க? எனக்கு கூழுகுடிச்சித்தா பழக்கம். எனக்கு எதுவும் வாணாம். இதெல்லாம் கொண்டு போயி அதா அங்க ரோட்டோரம்

கட்டிடம் இடிக்கிற ஏழைக்கும்பல் குஞ்சும் குழந்தையுமா பிழைக்க வந்திருக்கு. கொண்டு கொடுங்க!'' என்று திருப்பினாள்.

ஆனால் அன்று பார்த்த அந்த உருவமா? அவனா இவன்? ஐம்பதைத்தானே கடந்திருக்கிறான்? எழுபது எழுபத்தைந்து என்று மதிப்பிடும் அளவுக்கு எப்படிச் சோர்ந்து போனான்? மழையும் காற்றும் வெயிலும் புரட்டிப் போட்டதாகச் சொல்ல முடியாது. சொகுசு கார்; ஏ.ஸி. என்று ஏதேதோ சொல்கிறார்கள். உழவோட்டி, சேற்றிலும் சகதியிலும் ஊறி, கால் வயிற்றுக் கஞ்சியும் கள் மொந்தையும், பண்ணையடிமையின் உலகில் முழு வாழ்வையும் கழித்த பாட்டன் அவளுக்கு நினைவு தெரிந்து தொண்ணூறு வயதிலும் இப்படித் துவளவில்லையே?

"தாயம்மா? உங்காயா நல்ல செவப்பு. அதா நீயும் செவப்பா இருக்கிற... ஏந்தெரியுமா?" என்று ஒரு பல் தெரியச் சிரிப்பான்.

"அட, சீ! நீ எதும் பேசாதே? பச்சப்புள்ள கிட்டப் போயி இதெல்லாம் பேசிக்கிட்டு!'' என்று சின்னாயி அதட்டுவாள். அந்தப் பாட்டன் பொடுக்கென்று செத்துப் போனான்.

அடிமை வருக்கம் மேல் படியில் வந்ததும், மேல் படிக் குரிய எல்லாக் கசடுகளும் படிந்து விடுமோ? அவளுக்குத் தோன்றவில்லையே? மேலும் இவன் மேல் வருக்கத்தில் தானே கண் விழித்தான்?

அவன் மோரைக் குடித்துவிட்டுக் குளிர்ச்சியை அநுபவிப்பவனாக முகம் கனியப் பார்க்கிறான்.

"பானைத் தண்ணி ஊத்திக் குடுத்தியாம்மா? என்ன இருந்தாலும் பானைத் தண்ணி சுகம் சுகம்தான். ஃபிரிட்ஜ்ல வச்சத எடுத்தா தேள் கொட்டுறாப்புல இருக்கும். வெளில வச்சாலும் தாகம் அடங்காது..."

''உப்புத் தின்னுறவனுக்கு வெளில வச்சாலும், ஃபிரிட்ஜுக்குள்ளாற வச்சாலும் தாகம் அடங்காது?''

சுருக்கென்று ஊசிக் குத்து பாய்கிறது.

பேச்சு எழவில்லை.

ஆனால் அவள் மனம் புலம்புகிறது.

'மேல் படி'யில் தான் அந்த அய்யா கண் விழித்தார். படிகளைத் தட்டி, எல்லோரும் சமம் என்று பெரிய கைகளை நீட்டி எல்லோரையும் அணைத்துக் கொள்ளவில்லை?

இதழ்கள் துடிக்க மேலே படங்களைப் பார்க்கிறாள்.

காந்தி... மகான் காந்தி... மகாத்துமா காந்தி... அந்தச் சொல்லின் காந்தியில், கீழ் வரிசையில் உள்ள அய்யாவும் அம்மாவும் தங்கள் வாழ்க்கையையே காணிக்கையாக்கினார்கள்.

அவர்கள் புழங்கிய மண்; தண்ணீர்... கிணறு. இன்றும் அதில் நீர் அடியில் தெரியும் பாறையைக் காட்டிக் கொண்டு பளிங்காய், ஊற்றுக் கண்களால் வாழவைக்கிறது...

"அம்மா... உன்னைக் கூட்டிட்டுப் போகணும்னு வந்திருக்கிறேன். புது வீட்டில் உன் அடிபடணும்னு கெஞ்சிக்கிறேன்..." அவள் காலைப் பிடிக்கவும் விழைகிறான்.

"ஏய், இந்தக் காலுல விழற சாகசமெல்லாம் வேணாம். நா எதுக்கு அங்க வரணும்? எனக்கு ஒரு உறவும் யாருடனும் இல்ல. நீ என் வயித்தில் குடியிருந்த தோசத்துக்கு என்னை எப்பவோ பெருமைப் படுத்தி கவுரவிச்சிட்ட. அதுவே எனக்கு இந்த சன்மம் முச்சூடும் போதுமப்பா!"

"அம்மா... நீங்க இப்படிப் பேசலாமா? அரசியல்ங்கறது, சொந்த பந்தத்துக்கு அப்பாற்பட்டது. நீங்க ஆயிரம் மறுத்தாலும், நா உங்க மகன்ங்கறது இல்லாம போயிடுமா? ரஞ்சிதம் படுபடுக்கையாயிருக்கா. அவதா அம்மாளை எப்படின்னாலும் கூட்டிட்டுவாங்க. அவங்க மனசெரியும்படி நடந்து போச்சு, வாஸ்தவந்தா. ஆனா அதுக்குப் பிறகு எத்தனையோ

மாறிப்போச்சி. நேத்து பரம விரோதியா இருந்தவன்லாம், இன்னைக்கு அரசியல் மேடையிலே கட்டித் தழுவி சொந்தம் கொண்டாடுறா. தாய் மகன் தொடர்பு, பெத்த மக்கள் தொடர்பு விடுமா, விடாது...'' என்று என்னைக் கட்டாயப் படுத்தி அனுப்பிச்சிருக்கா... அவ பேச்சுக்கு மதிப்புக் குடுக்கக் கூடாதா?''

அவள் பார்க்கிறாள். இவன் மகா சாமர்த்தியக்காரன். நாடகம், வசனம், சினிமான்னு ஊறியவன். அரசியலில் சூது வந்திட்டதுன்னு, அன்றைக்கு அய்யா உதறித்தள்ளினார். அந்த அரசியல் மக்களை நல்ல மனிதர்களாக்கும் ஒழுக்க இலட்சியத்தை முதலில் வைத்தது... இவர்கள் அடிப்படையே வேறு தூ...! மனசுக்குள் காறி உமிழ்ந்து கொண்டு அவள் சமையலறைப் பக்கம் திரும்புகிறாள்.

"அம்மா... அம்மா...''

அவன் அவள் பின் வந்து காலடியில் விழுகிறான்.

"இதபாரு. இந்த நடிப்பெல்லாம் எனக்கு வேண்டாம். என்னால் இந்த நிழலை விட்டுவர முடியாது...''

தொண்டை கம்மி, கண்கள் கலங்குகின்றன.

"சரி, அதைப்பத்தி நா இப்ப எதும் பேசல. பேயானா லும் தாய்ம்பாங்க. ரஞ்சிதத்துக்கு நாளைக்கு ஆபரேசன்... அதுக்கு முன்ன உங்களைப் பார்க்கணும்னு சொல்றா...''

அப்படி உருகுபவள் என்றேனும் வண்டியெடுத்துக் கொண்டு வந்திருக்கலாமே? இனி என்ன ஆபரேசன்? முப்பத்திரண்டு வயசிலேயே கர்ப்பப்பையை எடுத்துப் போட்டாயிற்று. பெரிய பையனே அப்பனின் வாரிசாக சரித்திரம் பண்ணிக் கொண்டிருப்பதாக அவள் செவிகளில் விழுகிறது— அடுத்த பெண்தான் மஞ்சு. இரண்டுக்கும் ஒரே மாசம்தான் வித்தியாசம். அது பதினெட்டாகுமுன் ஒரு காதலில் விழுந்து, வயிற்றில் வாங்கிக் கொண்டு, கல்யாணம் பண்ணினார்கள்... அது என்னவோ டிவோர்சாம்.

குப்பைகள் மேலே மேலே சேர்ந்தால், அடங்காத துர்நாற்றத்தில் ஆவியடிப்பதுபோல் இருக்கிறது.

"அம்மா, இப்படி, முன்னும் இல்லாமல், பின்னும் இல்லாமல் நீ எதற்காக இந்த வீட்டைக் கட்டிக் காத்துக் கொண்டு இருக்கணும்? எஸ்.கே.ஆர். இருந்த வரை சரி. அவர் போய் பதினாறு வருசமாயிடிச்சி. வாரிசுன்னு யாரும் இல்லை. இது டிரஸ்ட்டைச் சேந்தது. அந்தப் பரசுராமன் நீ கட்டிக் காக்குறதாக நினைக்கும் இலட்சியத்தை என்னிக்கோ குழிதோண்டிப் புதைச்சிட்டான். உன்னை ஒருநாள், வேலைக்கார நாயே, வூடு சொந்தம்னு நினைக்காதே, வெளியே எறங்குன்னு சொல்லு முன்ன, நீ முடிவெடுக்கணும்!"

அவள் ஒருகணம் திகைக்கிறாள். அவன் சொல்வானோ, சொல்லமாட்டானோ, இவன் சொல்கிறான்.

நெஞ்சு கொதிக்கிறது.

"தாயம்மா, நீ தகுந்த பேர வச்சிட்டு, இங்கே ஏழைப் பெண்கள் தொழிற் கூடம் எதானும் வைக்கணும். நான் உயிலில் எழுதி இருக்கிறேன். கடைசி வரையிலும் நீதான் இருந்து கவனிக்கணும்... ராதாம்மா பேரை வைத்து நடத்தணும். எங்கெங்கோ பெண் குழந்தைகளைக் கொல்லுறாங்களாம். அந்த அவநம்பிக்கையைக் கிள்ளி எறியணும்..."

அவருடைய சொற்கள் ஒலிக்கின்றன.

அப்போது பெரிய டிஃபன் காரியருடன், ரங்கன் அய்யாவுக்குச் சாப்பாடு கொண்டு வருகிறான்.

"கிருஷ்ணா ஹோட்டல் முதலாளி ஐயாவைப் பார்க்க வரேன்னாருங்க..." ரங்கன் குழைந்து நிற்கிறான். இவன் போய்ச் சொல்லி இருப்பான். சாராய, லாட்ஜ் சாம்ராச்சியம் என்பது தெரியும். 'இவனெல்லாம் அரசியல் மேடைகளில் புகழ் மாலைகளைத் தேடுகிறாங்க!' என்று அய்யா புழுங்கிக் குமைந்தார். அவன் பஞ்சாயத்து, நகராட்சி என்று தேர்தல்

காலங்களில் அவரைக் காண வருவான். "தாயம்மா நல்ல தண்ணீர் ஊற்றிக் கழுவு! கறைபடிந்த தடங்கள்'' என்பார்.

இன்று பெரிய சாலையில் பெரிய ஓட்டல் கட்டி விட்டான். காரோடு வந்து தங்குறாங்களாம்...

"அய்யா, சாப்பாடு வைக்கட்டுங்களா?..."

பெரிய பெஞ்சின் பக்கம், சிறிய மேசையைப் போட்டு அவன் பின்பக்கம் வாழை இலை அறுக்கச் செல்கிறான். ஆனால் அதற்குள் தலைவர் விடுக்கென்று திரும்பி கோபத் துடன் வெளியே நடக்கிறார். அவருடைய மேல் வேட்டியின் விசிறியில் காரியரின் நீண்ட ஆணி மாட்டி, அது நிலைகுலையச் சரிகிறது. குப்பென்ற மசாலா வீச்சமும் வறுத்த அசைவமும், தாயம்மாளின் உள்ளக்கனலை வீசி விடுகின்றன.

## 2

கார்க்கதவு பட்டென்று அறைபடும் ஓசை கேட்கிறது.

கோபம்... கோபம் பாவம்... அது நீசத்தனமான செயல் களுக்கு வழி வகுக்கும். அவளும் கோபப்படுகிறாள்.

''ஏய் ரங்கா? என்ன எழவுடா இது? எதுக்குடா இதெல்லாம் இங்க கொண்டு வந்த?..."

அவன் தலையைச் சொறிந்து கொண்டு நிற்கிறான். சேவாகுருகுல அறங்காவலர் குழுதான் அவனை இங்கு நியமித்திருக்கிறது. அய்யா இறந்தபின், கிராமத்திலிருந்து வந்தவன்தான். இந்தப் புள்ளியைச் சுற்றி இவன் உறவுகள் ஏதேதோ காரணம் சொல்லிக் கொண்டு நகரச்சந்திக்கு வந்தி ருக்கின்றனர். "இந்த நகரத்தில் குடியிருப்பவர் அதிகமானவர் கள் கிராமங்களில் இருந்து, பல்வேறு காரணங்களுக்காக வந்து வேர்விட்டவர்கள்தா... எங்கப்பாவுக்கப்பா அந்தக் காலத்தில் வியாபாரம்னு வந்தார். டவுனில் மளிகைக்கடை வைத்தாராம். எங்கப்பா, சித்தப்பா அத்தை எல்லோருமே

ஊரைவிட்டு வந்து குடியேறினாங்க...'' என்று அய்யா படுக்கையோடு விழுந்த நாட்களில் அந்தக் கதை எல்லாம் சொல்வார். பதினாறு வயதில் கல்யாணத்தைப் பண்ணி வைத்து, பையனை மேல் படிப்புக்கு வெளிநாட்டுக்கு அனுப்ப வேண்டும் என்று கனவு கண்ட அப்பாவைமீறி, அவர் கனவைப் பொய்யாக்கினார். காங்கிரசில் சேர்ந்து கதர் உடுத்தும் விரதம் ஏற்றதும், கள்ளுக்கடை மறியல், தீண்டாமை ஒழிப்பு என்றெல்லாம் மகன் அன்றைய நடை முறை சட்ட திட்டங்களை உடைத்தார். இந்த வீடு, அவரை மணம் புரிந்த பத்தினி தெய்வத்துக்குச் சொந்தமானது. அந்நாளில் அரிசி மண்டி மொத்த வியாபாரம் செய்த குடும்பத்தின் ஒரே வாரிசு. ரங்கூனில் இருந்து வேர்பற்றிய குழந்தையும் குட்டியுமாக வந்த குடும்பங்களை வரவேற்று ஆதரித்த காலத்தில் கட்டப்பட்ட வீடு. தாயம்மாவுக்கு அப் போது இருபது இருபத்திரண்டு பிராயம் இருக்கும். பானை பானையாகப் பொங்குவார்கள். பெரிய துண்டுகளாகக் காய்களை நறுக்கிப் போட்டு, பருப்புடன் வேக வைத்துக் குழம்பு காய்ச்சுவார்கள். இந்தக் கிணற்று நீரை இரைத்து இரைத்து சந்தோசமாக மனித நேய அநுபவங்களைக் கொண்டாடிய காலம் அது. அம்மாவும் அய்யாவும் சேர்ந்து ஈடுபட்ட பெரிய தொரு கொண்டாட்டம் அது. நெருப்பு எரிந்து கொண்டே இருக்கும். சாதி மதம், ஏழை பணக்காரர் என்று பாராமல் வயிற்றுப் பசியை அவிக்கும் நெருப்பு அது.

ஆனால் இப்போது இவள் மன நெருப்பை அவிக்க எந்த வழியும் தெரியவில்லை.

"நம்ம தாயம்மாவுக்குப் புள்ள பெறந்திருக்கு. முத ரெண்டும் பொண்ணுன்னு இருந்திச்சி. இப்ப பையன்...''

நாட்டுப் பிரிவினையின் போது, காந்தி மகான் தன்னந் தனியாகக் கலவரப்பட்டு வெட்டும் குத்துமாக இருந்த இடங்களில் செருப்பில்லாமல் நடந்தாரென்று, அய்யாவும் அங்கெல்லாம் சென்று பார்த்துவிட்டு வந்திருந்தார்.

சோகமாக இருந்த நாட்கள். சேவா குருகுலத்துக்குள் இருந்த குடிலில் தான் இவள் பெற்றிருந்தாள். கார்ப்பரேஷன் ஆசுபத்திரி மருத்துவச்சி, சிந்தாமணி வருமுன் இவன் பிறந்துவிட்டான்... பத்துப் பதினைந்து நாட்களிருக்கும்... உள்ளே வந்து அம்மா குழந்தையை வெளியில் எடுத்துச் சென்றாள். குடில் வாசலில் அய்யா...

“என்ன பேரு வச்சிருக்கீங்க?”

இவளுக்குக் குரல் செவிகளில் விழுந்தது...

அவள் புருசனும் பக்கத்தில்தான் நின்றிருந்தான்.

“அய்யா, நல்ல பேரா வையுங்க...”

“அதுசரி, நீ முதல்ல, இனிமே காள்ளுசாராயம் பார்க்கிறதில்லேன்று பிரதிக்ஞை எடுத்துக்க.... என்ன? பொண்ணுக பிறந்து சம்சாரி ஆனபிறகு பனந்தோப்புக்கள்ளைத் தேடிட்டுப் போக மாட்டேன்னு நினைச்சேன். நாங்களும் இங்க ஒவ்வொரு குப்பமா போயிப் பிரசாரம் பண்ணுறோம். எங்க நிழலிலேயே இருந்திட்டு நீ மொந்தை போட்டுட்டு வரது வெட்கமாயிருக்கு...”

“இனிமே இல்ல சாமி...”

“இந்த இனிமேக்கு உயிர் உண்டா? நந்தனார் சரித்திரம் தெரியுமா உனக்கு? கள்ளுமொந்தைச் சூழலிலே பிறந்து, சிதம்பரம் போகணும்னு கனவு கண்டார். நாளைக்குப் போவேன், நாளைக்குப் போவேம்பாராம். திருநாளைப் போவார்”னு சொன்னாங்களாம். அது போல் உன்னை ‘இனிமே குடிக்காதவர்’னு சொல்லவா?”

“இல்ல சாமி... நிச்சியமா இனிமே குடிக்கமாட்டேன்...”

“எப்படினாலும் நீ குடிக்க முடியாம வழி பண்ணிடுவோம். ஏன்னா, சுதந்தர சர்க்கார் வந்திடும். உடனே மது விலக்குச் சட்டம் நெறிப்படுத்துவோம்!”

“அப்படி வந்திட்டா, எத்தனை ஏழைகள் மனம் குளிரும்?...” அப்போதுதான் ராதாம்மாவின் குரல் கேட்டது.

“அப்பப்பா, குழந்தையை ஏங்கிட்டக் குடும்மா...”

வாணாம்மா, பூக்குழந்தை. எப்படியேனும் தூக்கினால் குழந்தைக்கு வலிக்கும். கழுத்து நிற்க நாளாகல..."

"அப்ப நா உக்காந்துக்கறேன். என் மடில வையி..."

இப்போது நினைத்தாலும் தாயம்மாளின் நெஞ்சுருகிக் கண்கள் கசிகின்றன.

"இவனுக்கு 'மோகன்தாஸ்'னு பேர் வைக்கிறேன்... மோகன்தாஸ்! மோகன்தாஸ்..."

"அய்யா! இது காந்திஜி பேரில்ல, அப்ப?"

"ஆமாம்மா. நம்ம நாட்டுக்கு சுதந்தரம் வந்து, சாதி மதம், பட்டினி, பசி, எல்லாம் ஒழிய, நிறையப் பேர் அவர் போல வளரணும். சுதந்தரம் வந்த பிறகு நாட்டை வழி நடத்த நிறையப்பேர் அவர் மாதிரி வரணும்.

"மோகன்... மோகன்... மோகன்னு கூப்பிட்டா நல்லா இருக்கும்."

அம்மா புள்ளையை வாங்கிக் கொண்டு வந்து அவளிடம் கொடுத்தாள்." உம்புள்ளைக்கு அய்யா காந்தி பேரை வச்சிட்டார். அவன் அமோகமா இருக்கணும் தாயம்மா!"

'மோகன்தாசு, மோகன்தாசு, மோகன்தாசு' என்ற அந்தப் பூஞ்செவியில் தாய் ஒலி எழுப்பினாள்.

ஐந்து மாதம் ஆனபோது, அவள் சமையல் கூடத்து மூலையில் கந்தலில் போட்டுவிட்டு வேலை செய்து கொண்டிருப்பாள்.

மோகன், மோகன்... என்று, பஞ்சமியும் சந்திரியும் கொஞ்சுவார்கள்.

'மோகன்?' என்று சத்தமாக ராதாம்மா கூப்பிட்டால் திரும்பிப் பார்ப்பான். அவன் படிக்க வந்த போது, குடில் பள்ளி பெரிய குருகுலப் பள்ளியாக வளர்ந்துவிட்டது...

ஒன்பதாவது படிக்க வெளியே சென்றுவிட்டான்.

அப்போதே பேரை மாற்றிக் கொண்டுவிட்டான். அப்போது புருசன் உயிருடன் இல்லை. எந்த அடிப்படையை

அவள் நிலையான தென்று நம்பினாளோ, அது ஆட்டம் கண்டுவிட்டது. பஞ்சமி பள்ளிப் படிப்பு முடித்து, கிராம சேவிகா பயிற்சியும் முடித்து, காஞ்சிபுரம் பக்கம் சேவிகா வாக வேலை பார்க்கையில் கல்யாணமாயிற்று. கிராமத்துப் பையன்தான். 'எலக்ட்ரிகல்' வேலை தெரிந்து தொழில் செய்தான். படப்பைப் பக்கம் குடும்பம் வைத்திருந்தார்கள். சந்திரி பள்ளி முடித்து 'நர்ஸ்' படிப்புக்குச் சேர்ந்திருந்தாள்.

"அம்மா, தம்பி பேரை மாத்திக்கிடிச்சி!..."

பஞ்சமியும் மருமகனும் தீபாவளிக்கு வருவார்கள் என்று, பலகாரம் சுட மாவரைத்து வந்திருந்தாள் அவள்.

"என்னடீ சொல்ற?"

"ஆமா... இத பாரு, நோட்டுப் புத்தகத்திலெல்லாம் எழுதிட்டிருக்கு!" அவள் துணுக்குற்றுப் பார்த்தாள்.

இளவழகன்... இளவழுதி, இளவரசன்...

"ஸ்கூல்ல பேர் மாத்திட்டானா?"

"தெரியல. ஆனா, அவன் மோகன்தாஸ் காந்தியில்ல. அது மாத்திரம் நிசம்..."

அப்போதே அவள் மருண்டு நின்றாள். ஆதாரக் கல்வியை அடிப்படையாகக் கொண்ட, குருகுலம் பள்ளியில் அவன் படிக்க விரும்பவில்லை. இவர்கள் குடிசை, அந்த வளாகத்தில் தான் இருந்தது. பள்ளி வகுப்புகள் ஏறி ஒன்பது, பத்து என்று வந்துவிட்டது. அங்கேயே சாப்பிட்டுத் தங்கிப் படிக்க, முப்பது பிள்ளைகள் போல இருந்தார்கள். மரத்தடி யில் பராங்குசம், மருதமுத்து, சுசீலாதேவி எல்லாரும் வகுப் பெடுப்பார்கள். ஆங்கிலம் தமிழ் இந்தி எல்லாப் பாடங் களும் உண்டு. சுதந்தர இந்தியாவின் குடிமக்களை உருவாக்க வேண்டும் என்ற அடிப்படையில் பெரிய தலைவர்கள் அங்கே வருவார்கள். அம்பர் சர்க்காவில் நூல் நூற்று, ஏழைப் பெண்களுக்குத் தொழில் புரிய வசதி செய்திருந்தார். ராதா அம்மாவுக்கு எளிய முறையில் அங்குதான் கல்யாணம்

நடந்தது. மருமகன், கப்பலில் போகும் என்ஜினியராக இருந்தார்... 'சுதந்தர இந்தியாவின் கடற்படையில் வேலை' என்ற பெருமையுடன் அம்மா சொல்வாள்... பையன் அவள் அதிகார வட்டத்துக்கப்பால் அப்போதே நழுவிவிட்டான். நெடுநேரம் கண்ணாடியின் முன் தலைவாரிக் கொள்வதும் மோவாயில் மீசை அரும்புவதைப் பெருமையுடன் தடவிக் கொள்வதும் வயசுக் கோளாறு என்று பொருட்படுத்த வில்லை. தீபாவளி பொங்கல் என்றால் அய்யாதான் அவர்கள் எல்லோருக்கும் கதர் வேட்டி சேலை சட்டை வாங்கித் தருவார்.

"போம்மா! எனக்கு இந்தச் சட்டையும் அரை டவுசரும் பிடிக்கல. எங்கிட்ட காசு குடு, நான் எனக்குப் புடிச்சதை வாங்கிக்கிறேன்..." இதுதான் முதல் படி. அவன் உயரமாக வளர்ந்த பிறகு வேட்டி, துண்டு சட்டை என்றுதான் வாங்கித் தந்தார். அவன் அவர்கள் முகத்தில் படாமல் நழுவினான்.

அவன் சிகரெட் பீடி குடிப்பதையும், மூச்சுவிடாமல் வசனங்களைப் பேசுவதையும், அவனுக்கென்று ஒரு நண்பர் குழாம் இருப்பதையும் பஞ்சமி புருசன் கந்தசாமிதான் அவ்வப்போது வந்து சொன்னான். பாதி நாட்கள் பள்ளிக்குச் செல்வதில்லை. நாடகம் பார்ப்பது, எழுதுவது, பேசுவது என்று ஈடுபாடு காட்டியதில், ஒன்பதில் தேற வில்லை. அழகரசன் என்று ஒரு பையன் இவனைத் தேடி வருவான். அப்பன் பர்மாவில் இருந்து வந்தவன். இங்கே வந்தபின் கல்யாணம் கட்டி குடும்பமாக இருக்கிறான். தையல் கடை வைத்திருந்தான்.

அவன்தான் கருப்புச் சட்டைக் கட்சி.

அவள் அந்த ராசமணியைத் தேடிச் சென்றாள்.

தேனாம்பேட்டைச் சந்தில் 'கதிரவன் தையலகம்' என்று பலகை மாட்டி இருந்தான். ஓட்டுத் திண்ணையில் அவன் மிசின் வைத்துத் தைத்துக் கொண்டிருந்தான். கீழே ஒரு பொடிசு பித்தான் தைத்துக் கொண்டிருந்தான்.

மிசின் ஓட்டத்தோடு, அவன் யாரையோ திட்டிக் கொண்டிருந்தான். அவளுடைய வளாகத்துக்கு வெளியே யுள்ள 'தமிழ்' மொழியே அவளுக்குப் புரியாது. ஏனெனில் அவர்கள் கிராமத்தில் இப்படி 'கீது, கிறாரு' என்ற மொழி பேசிக் கேட்டதில்லை.

"ஏம்ப்பா, ராசமணி இருக்கிறாரா?"

அவன் நிமிர்ந்தான். அடர்ந்த முடி பின்பக்கம் விழுந்தது. அடர்ந்த மீசை. "ஏம்மே? நாந்தா ராசமணி?"

ஒரு கணம் திகைத்துவிட்டு, "ஏம்ப்பா, நான் தாயம்மா... என்னைத் தெரியல? அப்பாரு சௌக்கியமா? ரொம்ப நாளாயிடிச்சி, உன்னையும் எனக்கு அடையாளம் தெரியல, எனக்கும் உன்னை அடையாளம் தெரியல..." என்றாள்.

"அடே...டே...ஆமாம்! தியாகிவூட்டு வேலைக்காரங் களாச்சே? இளவழகு இப்பதா காஞ்சிவரம் புறப்பட்டுப் போச்சி... உம்புள்ள ஒரு அருமையான நாடகம் எழுதிருக்கு. அத்தப்பத்திப் பேசத்தா, தலைவரு கூப்பிட்டனுப்பிச்சாரு. நாந்தா புதுச்சட்டை தச்சிகுடுத்தேன். போட்டுட்டுப் போயிருக்கு..."

அவளுக்கு அப்போதுதான் புரிந்தது. இது முளை இல்லை, வேர்விட்டு விட்ட பயிர் என்று தெரிந்து கொண் டாள். அவன் குருகுலப் பள்ளியை விட்டு வெளிச் செல்லத் துடித்த காரணம் அப்போது தெரியவில்லை. இந்தக் கதர், பிரார்த்தனை, உடற்பயிற்சி, இந்தி, தமிழ், ஆங்கிலம் என்ற மரத்தடி வகுப்புகள் எல்லாமே பிடிக்கவில்லை. எப்போது முரண்டு செய்யத் தொடங்கினான் என்றே குறிப்பாகச் சொல்ல முடியாது. காலை ஆறு மணிக்கு எழுந்திருக்க மாட்டான். உடற்பயிற்சி ஆசிரியர் மருதமுத்து அவனை வீட்டின் முன் வந்து காதைத் திருகி அழைப்பார்.

"எந்நேரம் தூங்குறான்? எந்திரிடா?" என்று சந்திரி பாயில் இருந்து தள்ளி உருட்டுவாள். சிற்றப்பன் ஒருவன்

அவ்வப்போது காணங் குப்பத்தில் இருந்து வருவான். ரிக்ஷா ஓட்டுபவன். குடிகாரன். அவள் புருசனைக் கெடுத்தவனே அவன்தான். "ஏண்டி பொட்டச்சிறுக்கி, முதல்ல பிறந்திட்டா, நீ மகாராணியா? சாண்பிள்ளைன்னாலும் ஆம்புள. அது செத்த நேரம் தூங்கட்டுமே?" என்று அதட்டுவான். இது தாயம்மாளின் செவிகளில் அநேகமாக விழாது. ஏனெனில் அதிகாலையில் எழுந்து அவள் குடிலைச் சுற்றிய இடங்களில் சாணி தெளித்துப் பெருக்குவாள். பத்துப் பசுக்கள் உள்ள கோசாலை இருந்தது. சாணி சுமந்து போட எருக்குழி உண்டு. பால்கறந்து, தயிர், மோர் வேலைகள் இருக்கும். சமையற்கட்டில் அங்கேயே உறையும் மாணவிகளும் ஆசிரியர்களும் வேலை செய்வார்கள். பெரிய கிணறும் இருந்தது. உடலுழைப்பு மிக முக்கியமாகக் கருதப்பட்டது.

ஆனால் அவள் பையன் பிறவியிலேயே யாரேனும் தனக்காக எல்லாம் செய்ய வேண்டும் என்று அடம் பிடித்தான். இந்தி எழுத்துக்களை, பாடங்களை பஞ்சமி எழுதிக் கொடுப்பதும் இவன் கொண்டு போவதுமாக இருந்ததை ஆசிரியர் சுப்பையா கண்டுபிடித்துவிட்டார். ப்ஞ்சமி ஏழிலோ எட்டிலோ படித்துக் கொண்டிருந்தாள். "நீ இரண்டு நாட்களுக்கு, அந்த வகுப்பிலேயே உட்கார்ந்திரு இங்கே வரவேண்டாம்" என்று அவளுக்கு வகுப்பில் நுழைய முடியாதபடி தண்டனை கொடுத்தார். இந்தப் பயலை செமையாக உதைத்து, வகுப்பில் இருந்து அத்தனை பாடங்களையும் எழுத வைத்தார்.

ஆனால் அவனைத் திருத்த முடியவில்லை. காசு எங்கே வைத்தாலும் களவு போயிற்று. அவளுக்கு இவனை அய்யா முன் கொண்டு நிறுத்தத் துணிவு வரவில்லை. அந்தக் கால கட்டத்தில், குடும்பத் தலைவன், இறந்து போன புதிது. அவன் சுதந்தரம் வந்ததும் பெரிதாக எதிர்பார்த்திருந்த வாய்ப்புக் கிடைக்கவில்லை.

"சுதந்தரம் வந்திடிச்சில்ல? அய்யா எப்படியும் மந்திரி ஆயிடுவாரு. தாயம்மா, நீதான் எனக்கு இந்தத் தோட்டக்

காரன் வேலை இல்லாம, கவுரவமா அவருகிட்ட ஒரு வேலை போட்டுத்தரச் சொல்லணும். சுதந்தரச் சர்க்காரில் ஒரு டவாலி சேவுகன். சிவப்புப்பட்டைவில்லை போட்டுட்டு தலைப்பா கட்டிட்டு நான் நிப்பேன். இத்தினி வருசமா, இந்தக் குடும்பத்துக்கு நானும் உழச்சிருக்கிறேன்...'' என்று ஒருநாள் அவன் சொன்னபோது அவளுக்குத் தூக்கிவாரிப் போட்டது.

அந்த வீட்டிற்குப் பெரிய பெரிய தேசத்தலைவர்கள் அவளுக்குத் தெரிந்து வந்திருக்கிறார்கள். நாடு அடிமைப் பட்டுக் கிடந்த போது, சிறைவாசம் அநுபவித்தவர்கள்; பெண்டு பிள்ளைகளை மறந்தவர்கள் உனது எனது, சாதி, மதம் என்ற பாகுபாடில்லாமல் அந்த வீட்டை அறச்சாலை யாகக் கருதியவர்கள், எல்லோருமே வந்தார்கள். தேசப் பிரிவினை, மகாத்மாவின் மரணம் இதெல்லாமே சுதந்தர சந்தோஷத்தில் பீடித்த கருநிழல்களாகிவிட்டன. தாயம் மாளுக்கு அப்போதெல்லாம் இதைப்பற்றிய விவரங்களோ, உணர்வுகளோ இல்லை. அவர் தேர்தலுக்கு நிற்கவுமில்லை. எந்தப் பதவியையும் ஏற்கவுமில்லை. பதவி ஏற்கவில்லையே தவிர, ஏழை எளியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் படிக்க வேண்டும், அவர்களுக்காகப் பள்ளிகள் நிறுவ வேண்டும் என்பதற்கெல்லாம் முன் நின்றார் என்பது தெரியும். குரு குலம் பள்ளியில் அவன் படிக்க முரண்டு செய்து ஆறாவதில் தவறியபோது, அய்யாவேதான் அவனுக்குச் சீட்டு சிபாரிசும் கொடுத்து, மாம்பலம் பள்ளிக் கூடத்தில் சேர்த்தார். அப் போதே சம்பளம் இல்லாத இலவசக் கல்வி நடைமுறைக்கு வந்துவிட்டது.

அவள் ராசமணியைப் பார்த்துவிட்டு வந்த சேதி அவருக்குத் தெரிந்திருக்கிறது "ஏம்மா? பையன் நல்லாப் படிக்கிறானா?''

அவள் தலையைக் குனிந்து கொள்ள வேண்டி இருந்தது. குறுகிப் போனாள். சுதந்தரம் வந்து முதல் தேர்தல் வந்து

இரண்டாவது தேர்தலும் நடக்க இருந்ததென்று நினைப்பு. இவள் சமையற் கொட்டகையில் வேலை செய்து கொண்டிருக்கையில் யார் யாரோ வருவார்கள்; பேசுவார்கள். நேருவே அய்யாவைத் தேர்தலில் நிற்கச் சொல்லி இருக்கிறார்; நிற்பார் என்றார்கள்.

அந்தக் காலம் அது.

"என்னம்மா, பேசல?..." அவள் எதைச் சொல்வாள்? கதரை விட்டுக் கறுப்பணிந்தது சொல்வாளா? காசு திருடுதல், பொய் பேசுதல், புகை குடித்தல் ஆகிய மூன்று தீமைகளைப் பற்றிக் கொண்டதைச் சொல்வாளா?

"அய்யா, அவனை அனுப்பிச்சி வைக்கிறேன், கண்டிச்சி வையுங்க, உங்க பார்வையை விட்டு அனுப்பிச்சதே சரியில்லய்யா!" என்றாள் நெஞ்சு தழுதழுக்க.

அவர் சிரித்தார்.

"இதே போன்ற தப்புகளை மகாத்மா காந்திகூட அந்தக் காலத்தில் செய்திருக்கிறார். இந்த வயசு அப்படியானது. அவன் வயசில் 'கோட்டை'த் தாண்டணும்னு ஒரு வேகம் வரும். துடிக்கும் வயசு. தாண்டட்டும். ஆனால் தாண்டுற போதும், ஓடுற போதும் ஒழுக்கம்ங்குற தறி கெட்டுப் போயிடக்கூடாது. அதுதான் தாயம்மா, முக்கியம்..." பையன் தறிகெட்ட தடத்தில் போகிறான் என்று எப்படிச் சொல்வாள்? தறிகெட்ட தடம், பொய், களவு, சூது, கள், புகை...

பதினான்கு பதினைந்து வயசு கட்டுப்படுத்த வேண்டிய வயசு. அப்பன் எடுத்துக்காட்டாக இருக்கவில்லை. அவன் குடித்துவிட்டு வந்ததும் இவள் திட்டியதையும் அவனே அறிந்திருக்கிறான். அம்மாவின் மீதும் சகோதரிகள் மீதும் மதிப்பு இல்லை...

இவள் பேசாமல் நிற்கையில் அவர் தொடர்ந்து பேசியது நினைவில் மின்னுகிறது.

நானும் அந்த வயசில் பெற்றோரை எதிர்த்துப் போனேன். எனக்குப் பதினாறு வயசில், சரோஜாவைக் கல்யாணம் செய்து வைத்தாங்க. அப்ப அவளுக்குப் பன்னி ரண்டு வயசு. சொந்த பந்தமுள்ள குடும்பம்தான். சொத்து பத்து, வியாபாரம்னு சம்பந்தம் பண்ணிட்டாங்க. அவங் களுக்கு இல்லாத உயர்ந்த படிப்பு நான் படிக்கணும்னு சேர்த்தாங்க. ஆனா, அவங்க என்னை மேல் நாட்டுக்குக் கல்வி பயில அனுப்பி வைத்து வெள்ளைக்காரன் மெச்ச பதவி அடையணும்னு நினச்சது நடக்கல. காந்தி வந்திட்டார். படிப்பை விட்டுப் போராட்டம். பிறகு தொடர்ந்து வக்கீல் படிப்பு. சட்ட மறுப்பு, சத்யாக்கிரகம்னு, முழுசுமாக மாறிப் போச்சு. சரோஜாவுடன் பேசியது கூட இல்லை. அவளே, என் வழியைத் தேர்ந்து, கள்ளுக்கடை மறியல், கதர்ப்பிர சாரம்னு போட்டிபோட்டுக்கிட்டு ஜெயிலுக்குப் போனாள். இதெல்லாம் நினைச்சிப் பார் தாயம்மா?..."

"அய்யா, நீங்க எதானும் வழி காட்டுவீங்கன்னா, இப்படிச் சொல்றீங்களே?"

"இல்லே தாயம்மா. எனக்கு இப்ப ஒண்ணு புரியிது. விடுதலைப் போராட்டத்தில் யாரும் எங்களைக் கட்டாயப் படுத்தி இழுத்துவிடல. ஆனால், காந்தி மகானின் வாழ்க்கை, சத்திய சோதனை. அந்த காந்தி, அவர் பேச்சு, நடப்பு எங்களையறியாமல், ஒரு தியாக வாழ்க்கையை மேற் கொள்ளச் செய்தது. ஒட்டு மொத்தமாக இந்த தேசத்தின் குரல், சாதி, மத, பாஷை, எல்லாத்தையும் மீறி சுயராச்சி யம்னு முழக்கியது இப்ப... அந்த இலக்கு வரு முன்னரே, குரல்களில் பிசிறடிக்கிறது எனக்குத் தெரியிது. பையனைத் திருடினியான்னு கேட்டா எகிறிப்பான். சிகரெட் ஊதுறி யான்னு நான் கேட்டாலும் அவன் என்னைத்தான் வெறுப் பான். இந்தப் பள்ளிக் கூடத்திலேயே உணவு ஒழுக்கம், உடற்பயிற்சி, பிரார்த்தனை எல்லாம் எதற்கு?... ஒழுக்கம்ங் கறது வெளில இருந்து வலியுறுத்துவதாக இருந்தால் வராது. அகக்கட்டுப்பாடு வேணும்...."

இப்படிச் சொல்லிவிட்டு அவர் யோசனையில் ஆழ்ந்து விட்டார். தாயம்மாள் கண்களைக் கட்டிக் கொண்டு எங்கோ நிற்பது போல உணர்ந்தாள்.

'மோகன்தாசு' என்று வைத்த புள்ளி உயிர் பெற்றதும் தன்னையே அழித்துக் கொண்டது. இந்த 'இளவழுதி'க்கு சுயம் என்று ஒன்று இருக்கிறதா? இருந்தால் மேலும் மேலும் தப்புகள் செய்திருப்பானா?

வேட்டி விசிறலும் நடை அரவமும் அவளைச் சுய உணர்வுக்குக் கொண்டு வருகின்றன. ரங்கன் பின்புறத்தி லிருந்து ஓடி வருகிறான்.

"வாங்க, வாங்க சார்...!"

யாரிவன்? வாட்டசாட்டமாக, வெள்ளை முழுக்கைச் சட்டை, கரை வேட்டி, மேல் வேட்டி, தங்கச்சங்கிலி மோதிரங்கள், நெற்றியில் ஒற்றை நாமம், கிருதா, மீசை...

"அம்மா, வணக்கம்!" என்று குனிந்து அவள் எதிர்பாரா விதமாகக் கால்களைத் தொட்டுக் கும்பிடுகிறான்; ஏதோ ஒரு சென்ட்வாசனை அழையா விருந்தாளியாக மூக்குக்குள் இவன் புகுந்தது போல் நுழைகிறது. "புரவலர் அண்ணாச்சி யப் பாக்க வந்தேன். வந்திருக்கிறதா ரங்கன் சொன்னான். சாப்பாடு அனுப்பினேன். வரேன்னு சொல்லி அனுப்பி னேன்... அம்மா நலமாயிருக்கிறீங்களா?"

கார் டிரைவர் போலிருக்கிறது. ஆப்பிள், ஆரஞ்சு, மலை வாழை பிளாஸ்டிக் பைளைச் சுமந்து வருகிறான். அவளிடம் அவற்றைக் கொடுக்க, அவள் முகத்தைத் திருப்பிக் கொள்கிறாள்.

"அம்மாவைப் பார்க்க வரணும்னு அடிக்கடி என்ன, தினமும் நினைக்கிறதுதான். வேலை நெருக்கடி, முடியல. எங்கம்மா இருந்த நாள்ள, தியாகி அய்யாவைப் பத்தி ஒரு நாக்கூடப் பேசாம இருந்ததில்ல. அவங்க போனப்ப கூட நீங்க வந்திருந்தீங்க. கஷ்டப்பட்டு எங்களை முன்னுக்குக்

கொண்டு வந்தவங்க. இப்ப அவங்க ஆசில நல்லா இருக்கிறம். அம்மா பேர் வச்சித்தான் முதல்ல ஆச்சி மளிகைன்னு ஆரம்பிச்சோம். இப்ப புரவலர் அண்ணாச்சிதா, சூப்பர் மார்க்கெட்டையும் ரூஃப் கார்டன் ஓட்டலையும் திறந்து வச்சாங்க. சிவலிங்கம் பயல்கிட்ட அழைப்புக் கொடுத்து உங்களை கூட்டிட்டு வரச் சொன்னேன். நீங்க வரல...''

சுரீலென்று உணர்வில் தைக்கிறது, ஆனாலும் குரலில் காரம் காட்டவில்லை.

"சர்வோதயா தலைவர், ராதாகிருஷ்ணனை அழைச்சிட்டு பார்க்கில் வந்து, அத்தனை ரிக்சாக்காரங்களையும் கூட்டி வச்சோம். அப்ப, அத்தினி பேரும் இனி குடிக்கிறதில்லன்னு சத்தியம் பண்ண வச்சோம். திருட்டுச்சாராயமும், உசந்த ஒயினும் விக்கப்படாதுன்னு உங்கிட்ட சத்தியம் வாங்கணும்னு அந்தப் பெரியவரையும் கூட்டிட்டு உங்க வீட்டுப்படி ஏறி வந்தேன். நினப்பிருக்கா?...''

"ஏம்மா, நினப்பில்ல? அப்படிப் பொய் சொல்ற ஆளில்ல நானு. இந்தக் கடை வைக்க, ஏழுமலை தெருவில, தியாகி அய்யா உதவி செய்துதான் தொடங்கினோம். முதமுதல்ல, உடம்பு முடியாம, ரிக்சாவில வந்து, மஞ்சளும் குங்குமமும், அரிசியும் பருப்பும் வாங்கினாங்க. அதெப்படிம்மா மறக்கும்? அய்யா வளர்த்த தியாகக் கட்சி இன்னிக்கு இல்ல. நீங்க சாராயம் காச்சக்கூடாது, குடிக்கக் கூடாதுன்னு சத்தியம் வாங்கி என்ன பிரயோசனம்? காச்சி வித்து மாமூல் குடுக்கலன்னா போலீசுகாரன் ஏதோ ஒரு பொய்க்கேசைப் போட்டு உள்ள தள்ளுறான். அவன் பொஞ்சாதி ஏங்காலுல தான் வந்து விழுவா. கரிமங்கலம் கிராமம்பூரா போலீசு ஆதரவில்தான் தொழில் நடக்குது. நம்ம புரவலர் அண்ணாச்சி கிட்ட இதெல்லாம் 'டிஸ்கஸ்' பண்ணனும்னு தா வந்தேன். அதுக்குள்ள புறப்பட்டுப் போயிட்டாங்க போலிருக்கு?...''

அவள் உறுத்துப் பார்க்கிறாள். ஆனால் பேசவில்லை.

"அப்ப வரேம்மா... வணக்கம்..." வந்தது போல் திரும்பிச் செல்கிறான்.

ரங்கன் பின்னால் வழியனுப்பச் செல்கிறான்.

"அய்யாவப் பார்க்கணும்னு வந்திருக்காங்க. சொல்லி அனுப்பிச்சாங்க. நீங்கதா வந்தவங்களை..." சொல்லத் துணியாமல் தலையைச் சொறிந்து கொண்டு நிற்கிறான்.

"நீ ஒண்ணும் எனக்கு வெளக்கவாண்டாம். டிபன் காரியர் சோத்தை எங்கே கொண்டு போனியோ, அங்கேயே இதெல்லாம் கொண்டுபோ! பாவப்பட்ட சோறு பண்டம் பழம் எதும் இங்கே வாணாம்."

உள்ளத்தின் ஆழத்தில் எங்கோ நீறு பூத்து அவிந்தாற் போல் கிடந்த பொறி கிளர்ந்து பொறிப் பொறியாய்ச் சுடர்ந்து தகிக்கிறது.

இவன், போலீசு சரியில்லை என்று இழுத்து மூடுகிறான். போலீசு, எங்கிருந்து வந்ததுடா? ஆட்சிக்காரனை மீறிப் போலீசு எதற்குடா, ஏழையை அடித்துக் கள்ளச்சாராயம் காய்ச்சச் சொல்லுறான்? 'மாமூல்'னு யாருக்கடா வாங்குறான்? படுபாவிகள் சுதந்தர நாள், காந்தி ஜெயந்தின்னு அடுக் கடுக்காக் கொண்டாடுறான்! தாய்க்குலம், அன்னைக் குலம்னு, பேச்சுக்குப் பேச்சு பூசுறான். பாவிக, எத்தினி பொண்ணுங்களைத் தொட்டு சீரழிக்கிறானுவ! அந்தக் காலத்து நாடக மேடைகளில், சுந்தராம்பா, கிட்டப்பா, விசுவ நாத தாஸ்னு பாடினாங்க. அப்பவும் போலீஸ் இருந்தது. நாடகக்காரன் குடிப்பான். விடிய விடியப் பாட்டுப் பாடி பேசி நடிப்பான். மேடையில் பெண்ணுங்களைத் தொடக் கூட மாட்டாங்க. அப்படி நடித்த ஜோடிகள்கூட, நிசவாழ்க் கையில் கற்பு விரதம் காத்ததுண்டு... தெரிந்தும் தெரியா மலும், கட்டிய மனைவிக்குத் துரோகம் செய்பவன், மனச் சாட்சியை ஒட்டு மொத்தமாகத் துடைத்தவன்தானே?

புரவலராம், அண்ணாச்சியாம்! யாருக்குப் புரவலர்? புரவலர், புலவர் எல்லாம் ஒண்ணுதானா? என்ன இழவோ, யார் கண்டார்கள்? எல்லாருக்கும் பட்டம்.

“ஆச்சியம்மா?...” இப்படிக் கூப்பிடுபவள் சங்கரிதான்.

“ஒரு வாழஇல தரீங்களா? சம்முகம் வந்திருக்கிறான். ஊருக்குப் போறான். சோறு கட்ட ஒரு எல வேணும்...”

“தரேனே?...”

விடுவிடென்று உள்ளே செல்கிறாள். கிணற்றடி முற்றம் அகலமானது. அதற்கு அப்பால் கழூவும் நீர்வீணாகாமல் இருக்க வைத்த வாழை. மொந்தன், குலை தள்ளி இருக்கிறது. கன்றிலிருக்கும் இலையை இழுத்து, வேலி வழி வந்த ஆடோ மாடோ கடித்திருக்கிறது. எம்பி, கத்தியால் அவளே ஓர் இலையை அரிகிறாள். பால் சொட்டுகிறது.

“மெள்ள... வெள்ள சீல, ஆச்சி. கறை விழுந்திட்டா போகவே போகாது...” சொல்லிக் கொண்டே வாங்கிக் கொள்கிறாள்.

“எதுக்கு இத்தினி பெரிசு? சோறொண்ணும் வாணாம் அத்தைன்னுதா அவஞ்சொல்லுதா. எனக்கு மனசு கேக்கல. இம்புட்டுப் புள்ளயா இருக்கறப்பவே அவம்மா விட்டுப் போட்டு ஆபீசுக்குப் போயிடுவா. புனாவிலதா அப்ப இருந்தம். இப்ப அண்ணனும் மதனியும் டில்லிக்கு அந்தால இருக்காங்க. சம்முவத்துக்கு இங்கதா, பக்கத்துல பொத்தூர்ல இன்ஜினீரிங் காலேஜில எடம் கிடைச்சி, படிப்பு முடிச் சிட்டுப் போறான். ஒட்டி வளர்ந்த புள்ள. இனி செறகு முளச்சி எங்கோ பறந்து போகும்...”

“அண்ணம்புள்ள, பாசமா வச்சிருக்கே. பாசமா இருக்கும்மா, வருத்தப்படாத!” என்று இவள் ஆறுதல் சொல்கிறாள்.

“நானே சொல்லிக்கக்கூடாது ஆச்சி. புனாவிலை இருந் தப்ப எங்கண்ணன் அப்பப்ப சிகரெட் குடிக்கும். பார்ட்

டின்னு... அதுவும் உண்டு. மதனி எங்களுக்குக் கேக்காம திட்டுவா. எங்கம்மா படுக்கையோடு கெடந்தா. அப்பா செத்த பிறகு ஆறு வருசம் இருந்தா; எதோ ஆச்சி. நா இங்கியே கெடந்து கழிச்சிடுவ. அஞ்சு வருசமாச்சு, இங்க வந்து. இனி இதா இடம்...”

இவள் இலையை இரண்டாக்கிக் கொடுத்து விட்டு ஊமையாகப் பின் தொடருகிறாள். நடை முடிந்து வாசல் மேல் திண்ணைப் படி இறங்கு முன் சங்கரி திரும்புகிறாள். சிறுகூடு. முன் நெற்றியில் சில நரைமுடிகள் விழுகின்றன. நல்ல சிவப்போ கவர்ச்சியோ இல்லை. நெற்றியில் சிறு குங் குமப் பொட்டும் அதற்குமேல் சிறிது திருநீறும் அவள் மங்கலத் தன்மைக்குச் சாட்சியமாக இருக்கின்றன. ஆனால் கழுத்தில் கயிறு இல்லை. ஒரு மணி மாலையும் ஒரிழைச் சங்கிலியும் தெரிகின்றன. பாஷனில்லாமல் கழுத்து மூடிய ரவிக்கை; நூல் சேலை...

“ஆச்சி, காஞ்சிபுரம் ரோடில, புதிசா ஓர் அம்மன் கோயிலும், ஆசிரமும் கட்டிருக்காங்களாம். ராஜராஜேஸ்வரி அம்பாளாம். அம்பாளின் பதினாறு வடிவங்களை சலவைக்கல் மண்டபத்தில் வைத்து பூசை நடக்குதாம். சுத்தி மரமும் சோலையுமா மனசுக்கு ரொம்ப எதவா, அமைதியா இருக்குதாம். பஸ் போற வழிதானாம். ரேவதி டீச்சர் பௌர்ணமி பௌர்ணமி போயிட்டு வராங்க. அவங்க என் னியக் கூப்பிடத்தான் செய்றாங்க... ஆனா, அவவூட்டுக்காரர் மத்தவங்க கூட நா எப்பிடிப்போக? ஆச்சி, நீங்க வாறீங் களா? ஒருநா போயிட்டு வருவோம்?”

“போலாம்மா, போனாப் போச்சி” என்று வழியனுப்பி வைக்கிறாள்.

சங்கரி, இதே நீளத்தில், பழைய வீட்டில் இருக்கிறாள். இந்தத் தெருவுக்குப் பேரே பழையனூர் தெருதான். இந்தப் பெரிய வீடு அம்மாளின் வழி வந்த சொத்து. அப்போ தெல்லாம், சுற்றிலும் எதிரே பனமரங்கள் இருந்தன. மாந்தோப்பு... எல்லாம் ருமானி மாம்பழம். மாந்தோப்பைக்

காப்பவர்கள் என்று குடிசை வீடுகள் இருந்தன. பின்னால் ஒரு குளம் இருந்தது. பக்கத்தில் புற்று இருந்தது... எதுவுமே இப்போது நினைவில்லாதபடி மாறிவிட்டது. கோடியில் இப்போது, மூன்றடுக்கில் இந்தப் பதினைந்து வருஷங்களில் வெங்கடேசா பள்ளிக் கூடம் வந்திருக்கிறது. பழைய கடை வீதியில் சுதந்தரம் வந்த வருசத்தில் அய்யா திறந்து வைத்த பஞ்சாயத்துத் துவக்கப்பள்ளி இப்போது, நகராட்சி பெரிய பள்ளிக்கூடமாக இருக்கிறது. எல்லா மூலைகளிலும் இங்கிலீசு பள்ளிக்கூடம் தான். எங்கேயோ பொத்தூரு காலேஜ் என்று இன்ஜினீர் படிப்புப்படிக்க சங்கரியின் அண்ணன் பிள்ளையையும் அவளையும் இங்கே குடிவைத்தார். அவள் வாசலில் உட்கார்ந்திருக்கையில் பார்ப்பார். இடப் பக்கம் வயல்களாக விரிந்திருந்த இடங்களை வீடுகளும் ஏதேதோ கட்டிடங்களும் விழுங்கிவிட்டன. இந்த நாலைந்து ஆண்டுகளில் சாலை போட்டுவிட்டார்கள். காலை ஏழரை மணி, எட்டுமணி என்று கல்லூரி பஸ்கள் போகின்றன. பெண் பிள்ளை ஆண் பிள்ளை வித்தியாசம் இல்லாமல் முதுகில் ‘பில்ட்’ போட்ட மாதிரி சுமையை மாட்டிக் கொண்டு பள்ளிக்கு எதிரே நிற்கும். எதிர்ச்சாரியில் வரிசையாகக் கடைகள்— கட்டிடங்கள் இப்போதுதான் முளைக்கின்றன. கடைகள் என்றும், வங்கி வருகிறதென்றும் சொல்கிறார்கள். பள்ளிக் கூடத்தை நடத்தும் பத்மதாசன், தெலுங்கா, தமிழா, கன்னடமா, இந்தியா என்று தெரியாது. பள்ளிக்காகப் பொது இடங்கள் எல்லாவற்றையும் வளைத்துக் கொண்டு விட்டான். மாந்தோப்பு, குடிசைகள் எல்லாம் இல்லை. குளம் இருந்த இடமும் அவர்கள் வசம். புற்றைச் சுற்றி ஒரு கோயில் எடுத்து, பக்திமான் என்று காட்டிக் கொண்டிருக்கிறான்.

இந்த வீட்டு அய்யா படுக்கையோடு இருந்த நாட்களில், காலமாவதற்கு ஒருமாதம் முன்பு வந்தான். கருவலாக, ஒட்டைக்குச்சிபோல இருந்தான்.

கைத்தறித்துண்டும், வாழைப்பழமுமாக வந்தான். பழத்தை வைத்துவிட்டு, 'நமஸ்காரம்' என்று பணிந்தான்.

"வாங்க... உக்காருங்க..." என்றவர் மெதுவாகத் தலையணையைச் சரி செய்து கொண்டு உட்கார்ந்தார்.

"எப்பேர்ப்பட்ட தியாகி நீங்கள்? உங்கள் தியாகங்களில் நாங்கள் வாழ்கிறோம்... நீங்கள் இங்கே ஊர் உலகம் தெரியாமல் இருக்கிறீர்கள் என்றறிந்ததும் நான் கண்ணீர் விட்டேன்..."

இப்படிச் சொல்லிக் கண்களைத் துடைத்துக் கொண்டு அந்தக் கைத்தறித் துண்டை, வணக்கத்துடன் அவர் கைகளில் வைத்தான்.

"இதெல்லாம் இப்ப எதுக்கு? நீங்க..."

"சொல்றேன். எங்களுக்குப் பூர்வீகம் கேரளம்னு சொல்லுவாங்க. ஆனால் தாத்தா காலத்தில் மகாராஷ்டிரம் போயிட்டாங்க. தாத்தா, திலகரின் கேஸரியில் இருந்தாராம்... எல்லாரும் போயிட்டாங்க. எங்கம்மா கன்னடம். அவங்கப்பா யுத்த காலத்தில் கன்ட்ராக்ட் எடுத்து நிறையச் சம்பாதித்தாராம். எங்கப்பா அநாதை போல் அவர்கள் குடும்பத்தை அண்டி படிச்சு, மகாத்மா சொன்ன மாதிரி ஜாதி மத பேதமில்லாம வாழணும்னு லட்சியம் வச்சிருந்தார். அந்த நடவடிக்கைக்காகவே, சாதி வெறியர்கள் அவரை ஒரு நல்ல வயசில் வெட்டிப் போட்டுட்டாங்க. எங்கம்மா என்னை அழைச்சிட்டு யு.பிக்குப் போய், மகாதேவி வர்மா தெரியிம்ல? அவுங்க கல்வி ஸ்தாபனத்தில் இருந்து என்னைப் படிக்க வச்சாங்க. எனக்கு இருபத்தொன்றாம் நூற்றாண்டில், இளைஞர்களை அறிவியல் கல்விபெற வாய்ப்பளிக்க நல்ல பள்ளிக் கூடம் வைக்கணும்னு ஆசை. ஆசை என்ன, இலட்சியமே அதுதான். உங்க குருகுல நிர்வாகி, பராங்குசம் எங்க வித்யா பீடத்துக்கு வந்திருந்தார். அவர்தான் இங்கே வந்து நீங்கள் கல்விப்பணி செய்யணும்னு சொன்னார். நான் நேராக இங்கே உங்களைப் பார்க்க வந்திட்டேன்..."

"அப்படியா?... நல்ல கருத்துத்தான். ஆனால் அந்தக் காலத்தில நாங்கள் கல்வி ஒரு மனிதரை, ஒரு குழந்தையை முழு மனிதராக்க வேண்டும்னு நினைச்சோம்..."

"இப்பவும் அதேதான். நான் நேராகக் குருகுலம் ஸ்கூலைப் பார்த்திட்டுத்தான் வரேன். ரொம்ப ஆச்சரியம், அங்கே, இந்தி, இங்கிலீஷ் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறாங்க. அங்கேயிருந்து போகும் பிள்ளைகள் ஐ.ஐ.டி.க்கு நேராகப் போகும் அளவுக்குக் கல்வித்தரம் இருக்கு."

ஐயா ஒன்றுமே பேசவில்லை.

"....நான் தொந்தரவு செய்ய விரும்பல. கல்விப் பணிக்கு இந்த இடம் ஒதுக்கித்தரணும். நான் கவர்மென்ட் மூலமா, வேண்டிய ஏற்பாடு செய்ய முடியும். கல்விப் பணிக்கு, தியாகி அய்யா, நன்கொடையாகத் தந்து உதவணும்..."

குரல் தழதழத்தது—

"ஐயாவப்பத்தி, ஒரே வாரிசான அம்மா, அந்த சகோதரியின் மறைவு எல்லாம் கேள்விப்பட்டு உருகிட்டேன். இந்த முழு பாரத நாட்டிலும், இப்படி ஒரு தியாகி இருக்க முடியுமா?"

உள்ளிருக்கும் அழுக்கை, நான்கு நாட்கள் குளிக்காத வியர்வையை மறைக்கத்தான் மருக்கொழுந்து சென்ட்டைப் பூசுவார்கள்? குறிப்பிட்ட ஒரு பத்திரிகை வரும்போதே அந்த சென்ட்மணம் வீசும். ராதாம்மா உடம்பு சரியாக இல்லாத நாட்கள்.

"தாயம்மா, இந்தப் பத்திரிகைக்கு ஏன் இப்படி சென்ட் போடுறான் தெரியுமா?... என்று கேட்பாள்.

"சென்ட் விளம்பரத்துக்கு இதில சென்ட் போடுறானா?"

"இல்ல தாயம்மா. இதில் இத்தனை அழுக்கு குப்பைகள் அச்சாயிருக்கு. அத்தைப் படிக்க இப்படி ஒரு சென்ட்டை போட்டு இருக்கிறாங்க..." இதெல்லாம் இப்போது ஏன் நினைவுக்கு வருகிறது? அறங்காவலர் குழு என்பார்கள். பராங்குசம் வந்து அய்யாவிடம் கையெழுத்து வாங்கிச்

செல்வான். பிறர் பார்க்கும் போது மிக மரியாதையாக அவளிடம் நடந்து கொள்வான். அய்யாவும் அவனும் பேசும் போது அவள் கேட்கக் கூடாது என்று கருத்தாக இருப்பான். போகும் போது அவளை உறுத்துப் பார்த்து உறுமுவது போல் கருவிக் கொண்டு செல்வான். அவனுடைய சந்தனக் கீற்றும், காவி வண்ணக் கதர் சட்டையும் அந்த நடப்பின் கபடங்களை மூடும் வேசம் என்று தோன்றும்.

பள்ளிக்கூடம் விட்டு விட்டார்கள் போல் இருக்கிறது. தொங்குபைகள் ஆட, கோழிக்குஞ்சுகளைப் போல் பிள்ளை களை அடைத்துக் கொண்டு தடதடவென்ற சத்தத்துடன் மோட்டார் சைக்கிள் வண்டி ஓடுகிறது. உதிரிகள் போல் ஆட்டோ ரிக்சாக்களில் சில குழந்தைகள் செல்கின்றன. சொர்ணம் ஒரு பிஞ்சை இடுப்பில் ஏற்றிக் கொண்டு, கையில் புத்தகப்பை, தண்ணீர் குப்பி வகையறாக்களுடன் வருகிறாள். சொர்ணத்தின் புருசன், மாதா கோயில் பக்கச் சந்துக் குடிசைக்காரன். ரிக்சா ஓட்டிக் கொண்டிருந்தான். ஏற்கெனவே அவனுக்கு ஒரு பெண் சாதி இருக்கிறாள் என்று தெரியாமல், இவளையும் சேர்த்துக் கொண்டான். அவன் குடித்தான். இவள் இட்டிலிக்கடை போட்டுக் குடிக்கக் காசு கொடுத்தாள். கரைவேட்டிக் கட்சிகள் ரிக்சாக்காரர் சங்கம் இவனை ஒரு நல்ல குடிமகனாக்கி, தேர்தல் காலங்களில் ஆட்டோரிக்சா வாங்கும் கனவை வளர்த்தன. கைவசம் இருந்த ஓட்டை ரிக்சாவும் பறிபோக, குடித்துக் குடித்துச் செத்தான். நல்ல வேளையாகக் குழந்தை இல்லை...

படி தாண்டிப் போகுமுன் இவளைப் பார்த்துக் கொண்டு திரும்புகிறாள். “அம்மா, கொஞ்சம் குடிக்கத் தண்ணீதாங்க. இந்த வருசம் என்ன இப்படிப் பூமி காயுது, இன்னும் பங்குனியே பிறக்கல...”

இவள் உள்ளே செல்கிறாள். இன்னும் சாப்பிடாமலே நினைவுகளை அசை போட்டுக் கொண்டிருந்த உணர்வு பசியாய்க் கிளர்ந்தெழுகிறது. தண்ணீரைச் செம்பில் எடுத்துக்

கொண்டு வருகிறாள். குழந்தையைக் கீழே இறக்கி இருக்கிறாள்.

"இந்தாம்மா..."

'எனக்குத் தண்ணி..." என்கிறது பிஞ்சு.

'இந்த வெங்கடேசுவரா பள்ளியில் 'பொடி' நிறமல்லவா? இது 'ரோஸ்' நிறமாயிருக்கு? எந்த ஸ்கூல்?"

"இது குட் செப்பர்டம்மா... நீளப்போயி, செந்தில் ஸ்டோர் பக்கம் சந்துல இருக்கு..."

"அங்கதான மோகன் ஸ்கூல்னு ஒண்ணு இருந்திச்சி?"

"மோகன் வித்யாலயா பெரிசாயி, பார்க் பக்கம் மூணு மாடி கட்டிட்டாங்க. அங்கதான் பல் டாக்டர், கண் டாக்டர், தோல்டாக்டர் எல்லாரும் ஆஸ்பத்திரி வச்சிருக்காங்க. இந்த ஸ்கூல், மின்ன ஜாலி டீச்சர் இல்ல, கான்வென்ட்ல...? அவங்க மருமக நடத்துது..."

"எனக்குத்தண்ணி" என்று பிஞ்சு நினைவு படுத்துகிறது. வெள்ளை 'ரிப்பன்' அவிழ்ந்து தொங்க, முடி கட்டையாகப் பிரிந்திருக்கிறது. செம்புத் தண்ணீரில் கொஞ்சம் உறிஞ்சு குழாய்க் குப்பியில் ஊற்றிக் கொடுக்கிறாள். பிறகு, தான் குடிக்கிறாள்.

"வாரேம்மா!" என்று வெண்பற்கள் தெரிய நன்றிச் சிரிப்பு மலரத் திரும்புகிறாள்.

"இந்தப் பக்கம் போற...?"

"அதா... செவந்திபுரம் புத்துக்கோயிலண்ட போகணும்..." மூன்று வயசு நிரம்பாத குழந்தைக்குப் படிப்பு...

"நீ அங்கே வேலை செய்றியா?"

"ஆமாம்மா, இவங்கம்மா போஸ்ட் ஆபீசில வேலை பாக்குறாங்க. வூட்ல இவங்க பாட்டி இருக்கு. புச்சா வூடு கட்டிட்டு வந்திருக்காங்க. நா முன்ன இவங்க ஏழுமல தெருவில ஸ்கூல் பக்கத்தில இருந்தப்ப வேலை செய்துகிட்டி

ருந்தேன். இப்ப இவங்க பொழிச்சலூருக்கு மாத்திட்டாங்க. எனக்கு அங்கேந்து இத்தக் கொண்டாந்து விட்டுட்டுப் போறது கஸ்டமாத்தானிருக்கு. காலம அவங்க பைக்ல ஆபீசுக்குப் போறப்ப ஸ்கூல்ல கொண்டாந்து விட்டுடுவாங்க. இப்ப நாங் கொண்டுவிட்டுவ...”

“அப்பா எங்கே வேலை பண்ணுறாங்க?”

“அவரு சவுதிக்குப் போயிருக்காரு. கிழவிதா வூட்ல...”

“பதனமாப் போய்ச்சேரு...”

அவள் போகிறாள்.

சுதந்தரம் வந்ததும் தேனாறும் பாலாறும் ஓடும் என்று நம்பிய ஏழைகளை நினைக்கிறது மனம்.

நினைப்பில் கஞ்சிக்கான பசியும் அமுங்கிப் போகிறது.

## 3

**பி**ன் பக்கம் மாமரத்தடியில் சருகுக் குப்பைகள் நிறைந்திருக்கின்றன. குட்டை, குளம், புற்று எல்லாம் போன பிறகு, இந்த வீட்டைச் சுற்றி அறங்காவலர் குழு, ஒரு கம்பி வேலி போட்டிருக்கிறது. கம்பி வேலிகளில் நொச்சி, தூதுவளை, ஆடாதொடை போன்ற எல்லா மூலிகைகளும் கிடைக்கும். ஒரு பக்கம் ராதாம்மாவின் நினைவாக இன்னமும் மருதோன்றிச் செடிகள் வேலியைக் காக்கின்றன. இந்த மருதோன்றி அரைத்து வைத்த ஒரு மணியில் பற்றி விடும். இரவு சாப்பிட்டுப் படுக்கு முன் அரைத்து வைத்து விட்டுக் காலையில் எழுந்ததும் கைகளும் கால்களும் சிவப்புப் பவழங்களைக் கோத்து ஒட்டினாற்போல் அழகு மிளிரும் அதிசயத்தைக் குழந்தைகள் அநுபவிக்கும். பைசா செலவில்லாத அழகு... இது அரைப்பதற்கே பயன்பட்ட கல்லுரல் இன்னமும் கிணற்றடியில் கிடக்கிறது.

இந்தக் காலம் எப்படி மாறிப்போயிற்று?

யார் மீதோ கோபம் பொங்குகிறது. யார் மீது? யார் மீது? பறட்டுப் பறட்டென்று பெருக்குகிறாள்.

“அம்மா?...”

ரங்கன்தான்.

“ஏம்ப்பா, வைக்கோல் பிரிக்காரன் வந்திருக்கானா?”

“இல்லம்மா. சாயபு மவுத்தாயிட்டாராம்.”

அவள் துடைப்பத்தைக் கீழே போடுகிறாள்.

“யாரு... தியாகி சாயபுவா? ஒரு மாசம் முன்ன சைக்கில் ரிக்சாவில் ஏறிட்டு வந்தாங்க. அய்யாவின் நினைவு நாள்னு...”

“என்னமோ நெஞ்சு வலிக்கிதுன்னாப்புல. ஒருநா சங்கரி நர்சிங் ஹோம்ல வச்சிருந்தாங்களாம். அங்கியே ரா போயிட்டாராம். இத, ரமணி வந்திருக்கு...”

அந்தக் காலத்து மனிசன், ஒரே மனிசன்... போயிட்டீங் களா? என்று மனம் குன்றுகிறது.

இந்த ரமணி பால் பாக்கெட் போடுவான். அப்படியே படித்துக் கொண்டிருந்தான்.

“ஏம்ப்பா? எந்த வீட்டில இருக்காங்க? மகன் வீட்லதானா?”

“மெயின் ரோடுக்கப்பால, பேரன் சித்திக் வூட்டிலதான் வச்சிருக்காங்க. அவுருதா உங்ககிட்ட சொல்லிட்டுவரச் சொன்னாங்க...”

“ஓ, மருந்துக்கடை வச்சிருக்கான்னு சொன்னாங்க. ஜமிலா புள்ள.”

“ஆமா. அந்த மருந்துக்கடையிலதா நா வேலை செய்யிறேன்...”

“ஓ...” அவள் பேசாமல் அவனைப் பின் தொடர்கிறாள்.

இவள் அந்த ‘மெயின் ரோடை’த் தாண்டிப் போய் வெகுநாட்களாகிவிட்டன. பழைய சாலையா அது? அது

வெறும் பொட்டலாக இருந்த காலத்தை அவள் அறிவாள். இரண்டாம் உலகப் போர்க் காலத்தில், இராணுவ வண்டிகள் செல்லத்தான் அந்தச் சாலை பெரியதாகப் போடப் பட்டதாக அய்யா சொல்வார். அருகில் விமான தளம், பயிற்சிக் கூடம்... என்று சூழலே மாறிற்று! இப்போதெல்லாம் அந்தப் பக்கம் செல்லவே முடியாது. அருகே இரயில் நிலையம், மிகப் பெரிதாக இறக்கை விரித்துக்கொண்டு இரு புறங்களிலும் படிகளும் தளங்களும்மாக மனித நெருக் கடிக்குச் சாட்சியாக இருக்கிறது. பேருந்து நிலையம் என்று ஒதுக்கிய இடம் பிதுங்கி எங்கே பார்த்தாலும் பேருந்துகள், கடைகள் என்று மனித — இரண்டு சக்கர, மூன்று சக்கரங் களின் போக்குவரத்து நெரிசல்கள். ஆனாலும் இந்தப் பெருவழிச்சாலை துப்புரவான, ஆரோக்கியமான வணிக வீதிகளைச் சந்திக்கும் சாலையாக இல்லை. என்னென் னமோ கடைகள். இவளுக்குத் தெரிந்ததெல்லாம் காபிக் கிளப், வெற்றிலை பாக்கு சோடாக் கடைகள், மளிகை, வீட்டு சாமான் கடைகள், துணிக்கடைகள், தையல் கடைகள்தாம். அந்த அடிப்படையே இல்லை. ஒரு கஜம் மல்துணி என்றால் துணிக்கடைக்காரருக்குத் தெரியவில்லை. இவளுக்குக் கைத்தறி முழு வெள்ளைச் சேலை கூடக் கிடைப்பதில்லை.... குஞ்சிதம் ஸ்டோரில் மட்டுமே கிடைக்கும்.

நடுச்சாலையில் கோழி உரிக்கிறான். மாட்டுச்சதையைக் கண்டம் போடுகிறான். வண்டியில் சமையல் நடக்கிறது. காலை, மதியம், இரவு உணவு வகைகள் இங்கேயே. சாலை கடந்து, ரயில் பாதையும் கடந்து ரமணி அவளைக் கூட்டிச் செல்கிறான். கிளைத் தெருவொன்றில் கடைகள் திறக்கும் நேரம். ஜமீலா மெடிகல்ஸ் என்ற பெயர் விளங்கும் சிறு கடை திறக்கவில்லை. அருகே, டாக்டர் யமுனாதேவி, குழந்தை நல, பெண்கள் மருத்துவர் என்ற பலகையும் தெரிகிறது.

அந்த சந்தில்தான் மரணம் நிகழ்ந்த வீடு என்பதை அறிவிப்பது போல் ஆட்கள் தெரிகின்றனர். சாயபுவின்

மூத்த மகன் அகமது தான் பெரிய சாலையில் மளிகைக் கடை நடத்தி வந்தான். குடும்பம் ஒன்றாகத்தான் இந்த வீட்டில் இருந்தது. இரண்டாவது மகனுக்குச் சிங்கப்பூரில் இருந்து பணக்காரர் ஒருவர் சம்பந்தம் கிடைத்ததும், குடும்பம் பிளவு பட்டுவிட்டது. மூன்று பிள்ளைகளும் ஆளுக் கொரு பக்கம் 'பிஸினஸ்' என்று போய் விட்டார்கள். ஏழெட்டு வருசத்துக்கு முன்பே அவர் வந்து இதைச் சொல்லி வருத்தப்பட்டார். ஜமீலாவின் புருசன் சிறு வயசிலேயே இறந்துவிட்டான். இந்தப் பையனைப் படிக்க வைத்து, இந்தக் கடையும் வைத்திருக்கிறான். இந்த மருந்துப் படிப்புத்தான் படித்திருக்கிறான் என்றார்.

பேரன் பெண்சாதி பாசமாகத் தாத்தாவைப் பார்த்துக் கொண்டிருந்தாள். இவனுக்கு இரண்டு பிள்ளைகள்.

தாயம்மாளைக் கண்டதும் பேரன் பெண்சாதி அவள் கைகளைப் பற்றிக் கொண்டு அழுகிறாள். வழக்கமான துக்க விசாரணைகளில், எல்லா இனத்தவரையும் அவள் பார்க் கிறாள். ரமணியின் அம்மா, பொட்டும்பூவும் இழந்த கைம் பெண். ஆயிஷாவின் செவிகளில், வந்தவர்களுக்குக் காபி கலந்தி ருப்பதாகத் தெரிவிக்கிறாள். ஊதுவத்தி, மாலைகள் என்று சூழல் இறந்த வீட்டுக்குரியதாகத் தெரிவித்தாலும், துயரும் ஆன்ம சாந்திக்குரிய அமைதியுடனேயே தோன்றுகிறது.

சந்துக்கு வெளியே கார்கள் வந்து நிற்கின்றன. இந்தச் சூழலில், ஏதோ விபரீதம் புகுவது போல் இவளுக்குச் சுருக் கென்று உறைக்கிறது. காஜிபோல் அவர்கள் மதச்சடங்கு செய்பவர் வருகிறார்.

தாயம்மாள் மெள்ள வெளியேறுகையில், சீதாவையும் பத்மநாபனையும் பார்க்கிறாள்.

"மாமி? எப்படி இருக்கிறீங்க? கால செத்தமுன்ன தான் ரமணி ஃபோன் பண்ணினான். சாயபு மாமாவை நான் பத்து நாளைக்கு முன்ன யதேச்சையா பஸ்ஸ்டாப்புல பார்த்

தேன். "என்னம்மா, எம்மு? எப்படி இருக்கே?"ன்னு கேட்டாரு. அப்பா இறந்து போனப்ப வந்திருந்தாரு. இவங்ககிட்ட எப்பவும் பிரியமா, "எப்படிப்பா இருக்கே, சீதா நல்லா இருக்கா? அவங்கம்மா குடிசைப் பிள்ளைங்களுக்கு எழுத் தறிவுத் தொண்டு பண்ணுறதாத் தெரிஞ்சிட்டேன். அவங்கள ஆதரவா வச்சுக்குங்கப்பா, ஆண்டவன் நல்லதே பண்ணு வான்னு சொல்வாங்க..."

சீதா இவளிடமே துக்கம் விசாரிப்பவள் போல் மடை திறக்கிறாள். சாயபுவின் சொந்தக் குடும்பத்துக்கு அவரிடம் நெருக்கம், ஜமிலாவின் பையனுடன் சரி. இவர் சுதந்தரப் போராட்டத்துடன் நிற்கவில்லை. சமூக சமத்துவம் சார்ந்த ஒரு விடுதலைப் போராட்டங்களிலும் தம்மை அடையாளப் படுத்திக் கொண்டார். சுதந்தரம் வரும்போதே அரசியல் கட்சி காந்தியின் கொள்கைகளுக்கு ஒத்துப் போகாத செயல்பாடு களில் பிளவுகளுக்கு இடம் கொடுத்த காரணத்தால் அரசியல் பதவி, ஆட்சி என்ற எல்லைகளை விட்டு விலகியே தொண்டில் ஈடுபட்டவர், அவள் கண்டிருந்த தியாகி. ஆனால் இந்த சாயபு அய்யா, சமத்துவ சித்தாந்தத்தின் பக்கம் உறுதியாக நின்று தெழிற் சங்கப் போராட்டங்களில் முழு முனைப்பாகச் செயல்பட்டவர். அந்தக் கட்சியே பிளவு பட்டதும் இவர் உளம் உடைந்து போனார்...

எப்ப பாத்தாலும் "என்னம்மா, எம்மு? எப்படி யிருக்கே?" ம்பாரு இப்பக்கூட. நா சின்னப்பிள்ளயா இருக் கையில, அப்பா ரொம்பத் தீவிரம். எங்க வீட்டுக்கு சாயபு மாமா, மணி மாமா, செந்தில் மாமா, ராசு மாமா எல்லாரும் வருவாங்க. எனக்கு சொந்த உறவுக்காரங்களும் தெரியாது, சாதி மத பேதமும் தெரியாது. அப்படி இருக்கறச்சே, இவங்க கட்சி பிரிஞ்சதும், சாயபு மாமா, மணி மாமா வந்தாக்க, அவங்ககூட பேசக் கூடாதுன்னு அம்மாகிட்ட அப்பா சொன்னாங்க. எனக்குப் புரியல. அப்புறந்தான் தெரிஞ்சிச்சு. நாங்க வெளையாட்டுல கட்சி— சோடி சேருறாப்பல,

இதுவும்னு நினைச்சிட்டேன். அப்ப எங்கண்ணன் ரமணா, “சீதா, நாமெல்லாம் எம்மு. சாயபுமாமா, மணிமாமால்லாம் அய்யி. ஐயி, எம்மு. எம்முதா நல்லவங்க. ஐயி கெட்ட வங்க”ன்னான். ‘சீ போடா, சாயபுமாமா எப்ப வந்தாலும் என்னைக் கூட்டிட்டுப் போயி மிட்டாயும் மிக்ஸ்சரும் வாங்கித் தராங்க. அவங்க ஒண்ணும் கெட்டவங்க இல்ல!...’ன்னேன். அன்னிக்கு சாயங்காலம் சாயபு மாமா வந்தாங்க. நான் வழிமறிச்சிட்டு, “மாமா, எனக்கு ஒண்ணு தெரியணும்... நீங்க எம்தானே?”ன்னேன்.

“மாமா, சிரிச்சிட்டு, எம்முன்னா என்னம்மா?”ன்னாரு.

“எம்முன்னா நல்லவங்க, ஐயின்னா கெட்டவங்க. நீங்க நல்வங்கதானே?”

அவங்க பெரிசாச் சிரிச்சாங்க. எங்கம்மா உள்ளேந்து ஓடி வந்தாங்க.

“வாங்கண்ணே... ஏண்டி போக்கிரி? இப்பிடியா கேக்கிறது? உள்ள வாங்க. இவங்க போக்கு புடிக்கல. பிள்ளைங்க கூட இப்பிடி நினைக்கும்படியா சொல்லிக் குடுப்பாங்க? நீங்க மனசில வச்சிக்காதீங்கண்ணே”ன்னு சொன்னது எனக்கு இப்ப போல நினப்பு வருது...”

“அம்மா அண்ணங்கிட்டத்தா இருக்காங்களா?”

“இருக்காங்க. இவங்க கட்சி கிட்சி இல்லேன்னாலும், ஏழைப்பிள்ளைங்களத் தேடிட்டுப் போயி படிப்பு சொல்லிக் குடுக்கிறாங்க. பொண்ணு சம்பந்தமா போராட்டம்னு வந்திட்டா கலந்துக்குறாங்க. இதெல்லாம் ரமணா சம்சாரம் அதா அண்ணிக்குப் புடிக்கல. பனிப்போர் சமாசாரம்தான்...”

“சரிம்மா, நீ பாத்திட்டுவா... ஏதோ நம்ம காலத்துல மிச்சமிருந்த ஒரு தொடர்பு அதும் முடிஞ்சி போச்சி...”

எம்மு, அய்யி...

சிரிக்கும்படி இருந்தாலும், துயரம் தான் முட்டுகிறது. கிளையும், பூவும், காயும், கனியுமாகத் தாங்கிய மரத்தில்

இருந்து, எல்லாம் விடுபடுகின்றன. மரத்தின் வேரில் பூச்சி பிடித்துவிட்டதா?

அரிவாளும் சுத்தியலும் சின்னமிட்ட கட்சி பற்றி அவளுக்குத் தெரியும். சுதந்தரப் போராட்டத்தில் ஒன்றாகப் போராடியவர்கள் வருவதற்கு முன் பிரிந்து போனார்கள். வெடி மருந்து, சதி என்று பலரும் சுதந்தரம் வந்த பின்னரும் கொடிய சிறை தண்டனை அநுபவித்தார்கள். கேரளத்து ராமுண்ணி தூக்கு மேடைக்குப் போய், விடுதலை பெற்று வந்தவர். கட்டைக்குட்டையாக, குடையை இடுக்கிக் கொண்டு அய்யாவைப் பார்க்க வருவார். எப்போதும் மகிழ்ச்சி கூத்தாடும் முகம். பேச்சு "தாயம்மா அக்கா? எப்படி இருக்கிறீங்க? சுகமா?" என்று விசாரிப்பார்.

"தியாகி சார்? எனக்கு உங்களப் பார்க்கிறப்ப வல்ய சந்தோஷமாகும். ஏன் தெரியுமா?"

"தெரியலியே?"

"பால்யத்தில் விவாகம் கழிச்சும், ரொம்பக் காலம் பார்யையின் முகம்பாராமல் ஸ்பரிசம் இல்லாமல் இருந்ததும், அவங்களும் சத்யாக்கிரகம்பண்ணி ஜெயிலுக்குப் போனதும் எத்ர ஒரு பாக்கியம்? இம்சையை விட அஹிம்சைக்கு வலிமை அதிகம்; அதை நான் உங்களையும், சரோஜனி ஏடத்தியையும் பார்க்கிறப்ப தெரிஞ்சிப்பேன்..."

"தம்பி, நான் உங்களைப் பார்க்கிறப்ப, குற்ற உணர்வு கொள்கிறேன். ஏன் தெரியுமா? சுதந்தர சர்க்காரின் சிறைக் கொடுமைகளை நீங்கள் அநுபவித்தீர்களே? நீங்கள் மட்டும் கடைசி நேரத்தில், விடுதலையாகிவிடவில்லை என்றால்...?"

அவர் சிரிப்பார். மகிழ்ச்சி பொங்கி வரும். "ஓ, அது எந்தொரு கிளைமாக்ஸ், வாழ்க்கையில்? நாற்பது வயசில் நான் மறுஜனனம் ஆகி, சுதந்தர பூமியில் வாழ்க்கையைத் தொடங்க அடி வைத்தபோது, கையில் காசில்லை, தங்க நிழலில்லைன்னு கவலைப்படலை. அதே விடுதலை

சந்தோஷம் சொல்லி முடியாது. வெளியெங்கும் சிநேகம் நிறைஞ்ச ஜனங்கள். என் அநுபவங்களே மறுவடிவம் எடுத்தப்ப எல்லாரும் எனக்குப் பிரியப்பட்டவர்களானார்கள். பிரேமையை நான் கல்யாணம் செய்து கொண்டேன். எண்டே பையனுக்கு அச்சன் நாராயணன் பெயர்தான். பிரேமை, நான் பத்திரிகையில் எழுதியதைப் பார்த்து, என்னைத் தேடிவந்தவள். காலமே எல்லாம் செய்து கொடுத்திட்டு ஆஸ்பத்திரி ஜோலிக்குப் போகும்...''

வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்தையும் மகிழ்ந்து அநுபவிக்கும் ராமுண்ணி தான் ராதாம்மாவுக்கு உடல் நிலை சரியில்லாமல் எல்லோரும் பம்பாய் சென்றிருந்த போது ஒருநாள் பதறிப்போய் வந்தார்.

“தாயம்மா அக்கா?... நாள் கேள்விப்படுவது நிசமா?.... மோளுக்கு லுகேமியாவாமே?''

அந்தப் பெயர் சடைப்பூரான் போல் செவிகளில் நுழைந்தது.

“ஐயோ இதென்ன ஒரு சோதனை? தியாகி சாருக்கு, சரோஜினி எடத்திக்கு இப்படி ஒரு சோதனை வருமா? எனக்கு நேத்து, ஒரு சினிமாக்கதைக்கு வசனம் எழுதணும்னு நடராசன் வந்து கூப்பிட்டான். அப்ப உங்க மகனப் பத்திப் பேச்சு வந்திச்சி. அவுரு படத்தில ஒரு சில்லறை வேசமிருக்கு, வரீங்களான்னு கேட்டாரு... ‘ஐநூறு, ஆயிரம்னாக்கூட எனக்குக் காசுதான். அதுக்காக, நான் எந்த ஒரு இடத்துக்கும் போய் நிக்கத் தயாராயில்ல’ன்னேன். அப்பத்தான் அவன் சொன்னான், இந்த மாதிரின்னு; உங்க மகன், ஒரு பெண் சாதி குழந்தைகன்னு இருக்கையிலே, இன்னொண்ணும் கட்டி, அரசியலில் இருக்கிறவங்களுக்கெல்லாம் ஒழுக்கம் தேவையில்லன்னு ஒரு சட்டமால்ல வச்சிட்டாங்க? இப்பக்கூட, புதுசா பின்னணி பாடுற ஒரு பொண்ணுகூட... அடசீ! அதவிடுங்க. நீங்க, பெத்தபுள்ள, அவர் பதவி, பணம், செல்வாக்கு எல்லாத்தையும் ஒதுக்கிட்டு இருக்கிறது எவ்வளவு பெரிய விசயம்?''

"நீங்க அதையெல்லாம் இப்ப எதுக்கு நினைப்பூட்டு றீங்க?... ராதாம்மா நோயி, நா வேண்டாத தெய்வமில்ல. ஒரு புழு பூச்சிக்குக் கூடத் தீம்பு நினைக்காதவங்க... அய்யா, நாட்டுக்குச் சுதந்தரம் கிடைக்கணும், அதுவரை பிரும்ம சரியம்னு இருந்தாங்க. அம்மா மனசு ரொம்ப இடிஞ்சி போனாங்க. அப்ப காந்தி வந்திருக்காங்களாம். அய்யா பாத் திட்டு வந்த பிறகு, அம்மா, தனியாப் பாக்கணும்னு போனாங்களாம். பாபுஜி, இவங்க இப்படி விரதம்னு சொல்றாங்க. எனக்கு ஒரே ஒரு புள்ள வேணும். பெண் ணாகப் பிறந்ததன் பலனை, தாயாக அநுபவிக்கணும்னு சொன்னாங்களாம். உடனே காந்திஜி கூப்பிட்டனுப்பி ஆசீர்வாதம் பண்ணினாராம். அதுக்குப் பிறகு இந்தப் பொண்ணு பிறந்ததும் தந்தியடிச்சுத் தெரிவிச்சு, அவுரே ராதாபாயின்னு பேருவக்கச் சொல்லி பதில் தந்தி குடுத்தாராம்..." என்று தொண்டைக்கரகரக்கச் சொன்ன போது, "அப்படியாம்மா? எவ்ளோ பெரிய விசயம்? அந்தக் காலத்துல, எங்க இயக்கத்துல யு.ஜில— இருப்பம். அப்ப எங்களுக்குப் பாதுகாப்புக் குடுக்கிற குடும்பத்தில் வயசுப் பெண்கள், இருப்பாங்க. அவங்கதா, பல சமயங்களிலும் தெரியாம சாப்பாடு கொண்டாந்து குடுப்பாங்க. போலீசின் துப்பாக்கியவிட, பசிக் கொடுமை பெரிசு. பின்னால அந்தப் பொண்ணுங்க பேருக்கோ, கட்சிக்கோ களங்கம் வரக் கூடாதுன்னு அந்தத் தோழர்கள், சாதி, மதம், ஏழை பணக் காரர், படித்தது படியாதது என்று வேத்துமையெல்லாம் தூக்கி எறிஞ்சிட்டு பகிரங்கமா கல்யாணம் பண்ணிட்டாங்க. கட்சி—கொள்கை வலுப்பட்டது... அந்தக் கட்சி பிளவு பட்டது, சோகம்..." என்று வருந்தியது நினைவில் மின்னுகிறது.

"ஆயா? புள்ள கிட்ட சொல்லிட்டு வந்திட்டியா?... ரோடு மேல போற?" என்ற கூச்சலில் திடுக்கிட்டு சாலை ஓரம் வருகிறாள். ரயில் கேட் வரவில்லை. சாலை முழுதும் பெரிய பேருந்துகள், இரு சக்கர மக்கள் ஊர்வலங்கள், உறுமும் லாரிகள், ஆட்டோ வாகனங்கள்...

டக்கென்று சிமிட்டிப் பலகை போடப்பட்ட நடை பாதையில் ஏறுகிறாள். வரிசையாகக் கடைகள். 'நடைபாதை' என்று போடப்பட்ட சிமிட்டிப்பலகைகள் வரிசையாகப் பெயர்க்கப்பட்டு இடுக்குகளில் குடியிருக்கும் குடும்பங் களைக் கரையேற்றிக் கொண்டிருக்கின்றன. புத்தகங்கள், பழைய பத்திரிகைகள் என்று அடுக்கி வாணிபம் செய்யும் கடைக்கும், ஜிராக்ஸ் என்ற பலகையின் பின் உள்ள இடுக்குக்கும் இடையே ஒரு குழந்தை அழுது கொண்டி ருக்கிறது. வெயில் பட்டுப் பட்டுச் சவுங்கிப் போன மாதிரி யான முகமுடைய பெண் ஒருத்தி, இடுப்பில் பிளாஸ்டிக் குடத்தில் நீருடன் வருகிறாள்...

"எந்தா... அம்மே... தியாகி எஸ்.கே.ஆர். வீட்டம்மை யில்ல?" இவருக்கு நினைவுப் பொறி தட்டுகிறது.

அவள் உள்ளே செல்ல வழிவிடுவது போல் கீழே அழும் பெண் குழந்தையை இடுப்பில் எடுத்துக்கொள்கிறாள்.

"நீ... சிவலிங்கத்தின் சம்சாரமில்ல?"

"ஆமாம். நல்ல நினைப்பு வச்சிருக்கிறீங்க..." என்று குழந்தையை வாங்கிக் கொண்டு, "உள்ள வாங்கம்மா, வாங்க..." என்று கூப்பிடுகிறாள்.

"நான் இப்ப உள்ள வர்றதுக்கில்லம்மா. உன் பேரு மறந்து போச்சி.... நான் இப்ப ஒரு துட்டிக்குப் போயிட்டு வரேன். வேண்டப்பட்ட ஒருவர் இறந்து போயிட்டார். இங்க தான் பக்கத் தெருவில்—"

"ஓ.... மருந்துக்கடை சாயபுவா?... நேத்தே காலம, உடம்பு சரியில்லன்னு சங்கரி நர்சிங் ஹோமுக்குக் கூட்டிப் போனாங்க. ராமுண்ணிசேட்டன் மோன் இன்ஜினீரிங் காலேஜில படிக்கிது. அதைப்பாக்கணும்னு சொன்னாராம். இப்பதா, குழாயடில, மரகதம் ஆயா சொல்லிட்டிருந்தது. அவங்க நைட் முடிச்சிட்டுப் போகுது..."

என்ன சொல்கிறாள் இவள்?...

சிவலிங்கத்தின் சம்சாரம், கொழுகொழுவென்ற கன்னங்களுடன் இருந்த பெண் வற்றித் தேய்ந்து, கண்கள் பாதாளத்தில் இறங்க... பேச்சில் மலையாள வாடை வீச...

"எந்தா அம்மே அப்படிப் பார்க்கிறது? நான் சுந்தரிதா. சிவலிங்கத்தின் சம்சாரமான்னு கேட்டீங்க..."

குழந்தையை இடுப்பில் இடுக்கிக் கொண்டு அதன் இரு குஞ்சுக்கரங்களையும் சேர்த்து, "பாட்டிக்கு வணக்கம் சொல்லு..." என்று ஒரு சிரிப்பை இழைய விடுகிறாள்.

"நீ முன்ன சீலை உடுத்திருந்தேம்மா. இப்ப இந்தக் கவுனு போட்டிருக்கிறியா. புரியல... ஆமா, நீ ராமுண்ணி சேட்டான்னு சொன்னே. யாரு, தூக்கு தண்டனையிலேந்து மீண்டு வந்து கலியாணங்கட்டிக் கிட்டிருந்தாரு. அவரு போயி ஏழெட்டு வருசமாச்சி போல. அவுரு மகனா?..."

"ஆமம்மா... அவரு போனப்ப பையன் எய்த் படிச்சிட்டி ருந்தது. அதுக்கு மின்னயே அவருக்கு உடம்பு சரியில்லாம போயி, ரொம்பக் கடனாயிட்டது. துபை ஆசுபத்திரில நல்ல வேலை வந்திச்சி. ஆனா புள்ளைய அழச்சிட்டுப் போக முடியல. சாயபு அய்யாதாப் பாத்து, ஹோம்ல சேர்த்தாரு. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் போயிப் பாப்பாங்களாம். மாசாமாசம் அம்மை பணம் அனுப்பிச்சிக் குடுக்கும் போல. பையனைப் புள்ளலூர் இன்ஜினீரிங் காலேஜில சேத்தி ருக்காங்க. படிக்கிதோ, படிச்சிரிச்சோ தெரியல...." அவள் பேசி முடிக்கும் வரையிலும் குழந்தையின் கை இவளைக் கும்பிட்டுக் கொண்டே இருக்கிறது.

தன்னிச்சையான செயல் போல், அவள், புடை வைக்குள் செருகியிருந்த சுருக்குப் பையைத் திறந்து கசங்கிய ஐந்து ரூபாய் நோட்டொன்றை எடுத்துக் குழந்தை கையைப் பிரித்து வைக்கிறாள்.

"அய்யோ, இதெல்லாம் எதுக்கம்மு?" என்று மொழிந்த சுந்தரி, "தாங்க்ஸ் சொல்லு, குட்டி, தாங்க்ஸ் சொல்லு?" என்று குழந்தை கையை நெற்றியில் மலர்த்தி வைக்கப் பணிக்கிறாள்.

கரப்பான் பூச்சியைத் தொட்டுவிட்டாற்போல் இருக்கிறது. இருட்டு அறையில் பட்டாம்பூச்சி பறக்காது. கரப்பான் பூச்சி...

சிவலிங்கம் அவள் கண்களில் வெகு நாட்களாகப் படவில்லை. அன்றையப் பொழுதில் அவள் பார்த்த மனிதர்கள், சந்திப்புகள், துக்கத்துக்குச் சென்ற இடத்தில் வந்து விழுந்த செய்திகள்...

எதையுமே அவளால் சீரணம் செய்து கொள்ள முடியவில்லை. வீட்டுக்கு வந்ததும், கிணற்றில் இருந்து நீரிறைத்து, வாளி வாளியாக ஊற்றிக் கொள்கிறாள். சாயபு... ஒரு பந்தம் போய்விட்டது.

ராமுண்ணி, உடம்பு சரியில்லாமல், நடக்க முடியாமல் படுத்திருப்பதாக, சாயபு தான் வந்து சொன்னார். அவருடனே அவள் பழைய மாம்பலம் வீட்டில் பார்க்கச் சென்றாள். சாக்கடையும் கொசுக்களும் நிறைந்த பகுதியில் ஒரு பழைய ஓட்டு வீட்டில் இருந்தார். அவர்கள் சென்ற போது, பையன் பள்ளிக் கூடம் சென்றிருந்தான். பிரேமா, அவள் பணி புரிந்த ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தாள்.

"குனிஞ்சு வாங்க தாயம்மா, இந்த வாசல் இடிக்கும்" என்று அவர் எச்சரித்த குரல் கேட்டு, நாடாக் கட்டிலில் படுத்திருந்த ராமுண்ணி எழுந்து உட்கார்ந்தார். சிரித்தார்.

''இந்த நாட்டின் சிறந்த மனிதர்களை, உயர்ந்த மனிதர்களைத் தலை குனிய வைக்கும் வாசல் இது."

சாயபுவும் சிரித்தார். பையில் இருந்த ஆரஞ்சுப் பழங்களையும் பிஸ்கோத்துப் பொட்டலத்தையும் அருகில் இருந்த சுவரலமாரியில் வைத்தாள். சாயபு கட்டிலில் ஒரு பக்கம் உட்கார்ந்தார். "உட்காருங்கம்மா?" என்று அவளை உபசரித்தார்.

"மூணு மணிக்கு பிரேமை வந்திடுவா. அந்த நாற்காலிய இழுத்திட்டு உட்காருங்க..."

எப்போதும் மகிழ்ச்சி பொங்கிப் பூரித்து வரும் முகம், சோக உருவமாக இருந்தது. பேச்சே எழவில்லை. சிறிது நேரத்

தில் விம்மி விம்மி அழலானார். "அம்மே, நான் தூக்குக் கயிற்றில் முடிந்திருக்கலாம்... இந்த பாரத சமுதாயம், கனவு கண்ட, சமத்துவ, ஜனநாயக, அஹிம்சைச் சமுதாயம் அந்தக் கனவு துண்டுதுண்டாய் போயிட்டதம்மா..." என்று அழுதார்.

## 4

காலம் எதற்காகவும் யாருக்காகவும் காத்திருக்க வில்லை. ஆனால், தங்கள் கனவுகள் உடைந்து சிதறுவதைக் காண முடியாமல், அந்த நொறுங்குதலுக்குச் சாட்சிகளாக இருக்க விரும்பாமலே கண்களை மூடிவிட்டார்களே? ராமுண்ணி இறந்த போது, ஐயா இறந்து சில நாட்களே ஆகியிருந்தன. அவருக்கு வாரிசு போல் அவருடைய பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவதாக உலகுக்கு அடித்துக் கூறுவதுபோல், அந்த மரணத்தைப் படம் எடுக்கச் செய்து, விளம்பரப் படுத்தினான் பராங்குசம். சாதிமதம் தெரியாமல் அநாதையாகப் பிச்சை எடுத்த தலையெழுத்தை அழித்து, ராமகிருஷ்ணர் விடுதியில் சேர்த்து ஒழுக்கப்பிடிப்பு படிக்க வைத்தார் என்று அம்மா சொல்வார். அவளுக்குத் தெரிந்து அவன் சேவாகிராமத்தில் ஆதாரக்கல்விப் பயிற்சி பெற்று வந்தவன். சுப்பய்யா, மருதமுத்து, சுசீலா என்று தங்கள் மிக விசாலமான தோட்டத்தில் ஆங்காங்கு கூரைக் கொட்டகை போட்டு, குருகுல வித்யாலயத்தைத் துவக்கிய போது, இந்தப் பெரிய வீட்டில் பர்மா அகதிகளின் புகலிடத்தில் ஊழியம் செய்து கொண்டிருந்த அவள் தேனாம்பேட்டை இல்லத்துக் குப் பெயர்ந்தாள்.

சரோஜாம்மாவின் மூதாதையர் வீடு இது. பெரிய சிவப்புக் கல் தோடும், பிடிபிடியாகச் சங்கிலியும் வளையல் களும் அணிந்திருந்த பாட்டியை அவள் சிறு வயதில் பார்த்திருக்கிறாள். கண்ணமங்கலம் கிராமத்தில் அங்காயி திருவிழாவின் போது வருவார்கள். பாட்டனையும் தெரியும். பெரிய மீசையும், திறந்த மார்பில் உருத்திராட்சமுமாக

இருப்பார். அவருடைய படம் கூட இன்றும் மாடியில் உள்ள படங்களிடையே இருக்கும். அந்தப் பாட்டன் முன்பே இறந்துவிட, பாட்டி காது தொள்ளையாக, உருத்திராட்ச மாலைக் கழுத்தாக, வெற்றுக்கைகளாக மாறிப் போனாள். இங்கிருந்த பனந்தோப்புகளில் கள்ளுக்காகக் கலயங்கள் கட்டக் கூடாதென்று, அம்மாவோடு பாட்டியும் சின்னம்மா, பெரியம்மா என்ற சொந்தங்களும் கூடக் காவல் இருந்திருக்கிறார்கள்.

பர்மா அகதிகள் வந்திறங்கிய போது, இது புகலிடமாக மாறியது. தொண்டர்கள் குழந்தையும் குட்டியுமாக இங்கே அழைத்து வருவார்கள். இங்கே கொல்லையில் கோசாலை இருந்தது. பால் கறப்பதும், தயிர் கடைவதும், வீட்டில் தவலை தவலையாக வடிப்பதும் குழம்புக்கு உரலில் மசாலை அரைப்பதுமாக நித்திய கல்யாணம். பூந்தமல்லிப் பக்கமிருந்து ஓர் ஐயங்கார் சுவாமி தையல் இலை கொண்டு வருவார். ஆயிரக்கணக்கில் வாங்குவார்கள். சாலை முழுதும் ஆலமரங்களில் இருந்து விழும் இலைகளைச் சுத்தம் செய்து, ஈர்க்கு ஒடித்துத் தைக்கும் தொழிலில் சீவனம் செய்தார்கள்... இப்போது?

பூதான முனிவர் வந்த போது பலரும் ஓடியொளிந்தார்கள். அய்யா, பொன் விளையும் பூமியை, இல்லாதவர்களுக்கென்று வழங்கினார். இப்போது அப்படி அவர் வழங்கிய காவேரி ஆற்றுப்பாசனத்து விளை நிலங்களை அரசியல்வாதியான மேல் சாதி ஆதரவுடன், எவனோ அநுபவிக்கிறானாம். இவள் செவிகளில் எத்தனையோ செய்திகள் விழுகின்றன. குருகுல வித்யாலயா வளைவில் அவள் கால் வைத்து எத்தனையோ ஆண்டுகளாகிவிட்டன. இந்த வீடு, சுற்றுப்புறங்களெல்லாம் 'டிரஸ்ட்' என்றுதான் செய்திருக்கிறார்கள். மகளின் பிரிவுத் துயரம் தாங்காத சரோஜினி அம்மை, ஓராண்டுக்கு மேல் இருக்கவில்லை. அவர்கள் இருவரும் போன பின், அய்யா சிறகொடிந்த பறவையானார். அவர்கள் போனது மட்டுமில்லை; இந்த நாட்டு அரசியலில்,

அவர்கள் கண்டிருந்த கனவுகளும் நொறுங்கிப் போனதுதான்.

ராதாம்மாவுக்கு அவள் காலமான போது ஒரு பையன் இருந்தான். அய்யாவைப் பார்க்க அந்த மருமகன் ஒரே ஒரு தடவை வந்தார். "குழந்தை நல்லாயிருக்காங்களா?" என்று மட்டும் துக்கம் தொண்டையடைக்கக் கேட்டாள். அவள் அவரை நன்றாக நிமிர்ந்து பார்த்ததாகக் கூட நினைவு இல்லை. அவள் திருமணம் முடிந்ததும், மஞ்சட் கதர்ச் சேலையும், பூமாலையும் தாலியுமாக, அதே மாதிரி கதர் வேட்டி உடுத்திய மருமகப்பிள்ளையிடம் அவளை அறிமுகம் செய்வித்ததை எப்படி மறப்பாள்? "எங்க தாயம்மா. அம்மா எங்கே போவாங்களோ, வருவாங்களோ, நேரம் தவறாமல் என்னை ஊட்டி வளர்த்தது தாயம்மா தான். இந்த வீட்டுக்கு எப்போதும் உயிர் தரும் தாயம்மா. இந்தச் சரணாலயத்தில் எத்தனை பறவைகள் வந்தாலும் தாயம்மா கவனிச்சிப்பா" என்று சொன்னதும் அவர்கள் இருவருமாக அவளைப் பணிந்ததும், சிறிதும் நிறம் மாறாத காட்சி.

இந்தச் சரணாலயம் வெறுமையாகிவிட்டது. அறங் காவலர் குழுத்தலைவன் பராங்குசம்தான். அய்யாவின் மறைவுக்குப்பின், கீழிருந்த மரப்பீரோக்கள் முதல், படங்கள் புத்தகங்கள் எல்லாமே மாடிக்குப் போய்விட்டன. பெரிய பாத்திரம் பண்டங்கள் எல்லாமும் போய்விட்டன. கூடத் தில் காந்தி படமும், பெரிதாக்கப்பட்ட அம்மாவின் படமும், ராதாம்மாவின் படமும் ஏற்கெனவே இருந்தன. அய்யாவின் படத்தையும், குருகுலத்தில் இருந்து கொண்டு வந்து மாட்டச் சொன்னாள். அய்யா இருந்த போதும் மறைந்த பின்னரும் வெள்ளிக்கிழமை மாலைகளில் பிரார்த்தனை பஜனை நடந்து கொண்டிருந்தது. பின் ஒவ்வொருவராக... பர்மா நிக்கொலஸ், சாயபு, ராமுண்ணி, குஞ்சம்மா, சுபலட்சுமி, ராமசுப்பிரமணியம்... பிறகு... ஏதோ வசந்த காலச் சாரல் போல் பக்கத்தில் வந்து குடியிருந்த மிலிடரிக்காரர்...

பராங்குசம் அனுப்பித்தான் அவர் இங்கே வந்தார். காடாகக் கிடந்த இடத்தை அவரே சுத்தம் செய்தார். கம்பி வேலி கட்டினார். இந்த வீட்டுக்கும் ஓர் அரண் போல் அது அமைந்தது. வேலியில் மூலிகைச் செடிகளை அழகாக விட்டு, ஒழுங்கு செய்தார். கொவ்வைக் கொடிகளை அடர்த்தியாகப் படரும்படி பின்புறம் மாமரம் வரையிலும் கட்டினார். இந்த வேலையில் தாயம்மாவும் பங்கு கொண்டாள். "நீங்க எதுக்கும்மா, வயசானங்க. ஆள்வச்சி செய்துக்குங்கன்னுதா, சொன்னாங்க. நா ஒரு ஆள்தானே?..."

நல்ல சிவப்பு; ஒட்ட வெட்டிய கிராப்பு. மீசை எள்ளும் அரிசிபோல் இருந்தாலும் அழகாக வெட்டி இருந்தார். அடிக்கடி பல்லால் கடித்தபடி, வரிசை பற்கள் தெரியச் சிரித்தார். ஒரு பனியனும் காக்கி அரை நிஜாரும் தான் உடை.

"அய்யா, நீங்க இத்தே பெரிய வீடு இருக்கையிலே, எங்கே போய்த் தங்கிட்டு வரீங்க? இங்க வீடு கட்டுற வரையிலும் நம்ம வீட்ல தங்கிக்கலாம், சாப்பாடு நான் செய்து தாரேன். அசைவம் தான் கிடையாது. சைவம். ஒரு சோறு சாம்பார் பொரியல் ரசம் செய்வேங்க..." என்றாள்.

அதற்கும் ஒரு சிரிப்பு. ஆனால் அவர் சாப்பிட வரவில்லை. "வீடு ஒன்றும் பெரிதில்லை. ஒரு கூரைக் குடில் தான் போட்டுக் கொள்ளப் போறேன், மா. நாலு நாள்ள சுவர் எழுப்பிடுவாங்க. காலேஜ் பக்கம் என் சிநேகிதங்க இருக்காங்க. பஞ்சாபுக் காரங்க. அவங்க ஒருவாரம்னாலும் தங்கணும்பாங்க!" என்றார்.

"எங்கே, பொத்தூரு காலேஜிங்களா?"

"ஆமா. அதா வரிசையா இருக்கே?..." என்றார்.

சரசரவென்று ஒரே வாரத்தில் சுவரெழுப்பி, பூசி, தரையை உயர்த்தி சிமிட்டிபூசி, மேலே அழகாகக் கூரை போட்டுவிட்டார். தோட்டமாக மாற்ற, பூச்செடி விதைகள், வேம்பு நாற்று, எல்லாம் வைத்தார். இந்த வீட்டு எல்லையில் தாவரவேலி இருந்தாலும் பின் பக்கம் மாமரத்தடிக்குப்

போக முடியும். பின்புறம் புற்றுக் கோயில் வரை எல்லை இருந்தது.

இந்த வீட்டுக்குள் வந்து, படங்களின் கீழிருந்த பெஞ்சியில், காலையில் பூத்த பூக்களைக் கொண்டு வைப்பார். காசித்தும்பை, ஒற்றை, இரட்டை என்று வண்ண வண்ணமாகப் பூத்துக் குலுங்கின. செம்பருத்திச் செடிகள், கன்றாகவே கொண்டு வைத்திருந்தார். வாசல் பக்கம், ஒரு மூங்கில் பிளாச்சுக்கதவுதான். வாசலில் ஒரு சாய்வு நாற்காலி— துணி போட்டு மடிக்கக் கூடியது, அதைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்து ஏதேனும் படித்துக் கொண்டிருப்பார். உள்ளே அவர் சமைத்துச் சாப்பிட்டதில்லை. தெருநாய்க்குட்டி ஒன்று அவரைச் சுவீகாரம் செய்து கொண்டிருந்தது. காலையில் அவர் நடந்து போனால் அதுவும் போகும். அது ஆறு மாதத்தில் பெரிய நாயாக வளர்ந்துவிட்டது.

"இங்கே வெள்ளிக்கிழமை பஜனை செய்வீங்களாமே?" முதல் நாளே அவர் கேட்டார்.

"ஆமாங்கையா. அய்யா எத்தனை வருசமாகவோ நடத்திட்டிருந்தாங்க. அவரு போனப்புறமும், அவங்கல்லாம் வராங்க. யார் வந்தாலும் வராவிட்டாலும், சாயபு அய்யாவும் குஞ்சம்மாவும் விடாம வருவாங்க..." என்றாள்.

அடுத்த வெள்ளியன்று வீடுகட்டும் வேலை முடிந்து அவர் சிநேகிதர் வீட்டுக்குப் போய்க் குளித்து, வெள்ளைச் சட்டை, பனியன் அணிந்து, ஒரு சைகிளில் ஒரு பானையையும் கொண்டு வந்தார். அன்றைக்கு நிறையப் பேர் பஜனைக்கு வந்து இருந்தார்கள். நிக்கலஸ், சந்தானம், ராமமூர்த்தி, என்று வராதவர்களும் வந்திருந்தார்கள். அவருடைய பஞ்சாபி நண்பன் சிங், அவர் மனைவி, இரண்டு குழந்தைகளும் வந்திருந்தார்கள். அந்தக் கல்லூரி வளாகத்தில் இருந்து வந்திருந்த ராமசாமி "ஸார், ரொம்ப நல்லாப் பாடுவார். கடம் வாசிப்பார்; மிருதங்கம் வாசிப்பார்..." என்று சந்தோசமாகச் சொன்னார். சிங் உடனே, "வெஸ்டர்ன், இந்துஸ்தானி, எல்லாம் பாடுவாங்க!" என்றார்.

அவளுக்கு அன்றைய பஜனை மிகவும் சந்தோசமாக இருந்தது. அய்யாவும், அம்மாவும், ராதாம்மாவும் உட்கார்ந்திருப்பதுபோல் தோன்றியது. எல்லோரும் உணர்ச்சி பூர்வமாக ஈடுபட்டார்கள். அய்யாவுக்கு மிகவும் பிடித்த 'ஹரி தும்ஹரோ' பாட்டை அவர் தனியாகப் பாடினார். ஒரு இங்கிலீஷ் பாட்டும் இடம் பெற்றது. எல்லோரும் ராம்துன் பாடினார்கள். அந்தக் கூடத்தில் தொங்கிய 'பல்ப்' வெளிச்சம் போதவில்லை என்று நினைப்பாள். அன்று அப்படித் தோன்றவில்லை. இந்த பஜனையில் சுண்டல் கிடையாது. கர்ப்பூரம், மணி அடித்தல் எதுவுமே கிடையாது. பழங்கள் கொண்டு வருவார்கள். அதைப் பங்கிட்டு ஆளுக்குக் கொஞ்சம் எடுத்துக் கொள்வார்கள். ஆங்காங்கு குடிசைகளில் உள்ள பிள்ளைகள் சில சமயங்களில் வரும்... அவர் பொறி கடலை வாங்கி வைத்திருந்து கொடுப்பார்.

"அய்யாக்கு, மக்க மனுசங்க...?" என்று அவள் கேட்டாள்.

"எல்லாம் இருக்காங்க..." என்று மனம் துளும்பும் பாவத்துடன் கண்கள் மூட விடை கூறினார்.

அதற்குமேல் எங்கே இருக்காங்க, எதற்கு நீங்கள் இங்கே தனியாக இருக்கிறீங்க என்று கேட்க, தூண்டித் துருவ அவளுக்குத் தெம்பு இல்லை. அப்போதெல்லாம் கொட்டிலில் ஒரு கறவைப் பசு இருந்தது. உழக்குப்பால் எடுத்துக் கொண்டு சென்று "அய்யா, பால் கொண்டாந்திருக்கிறேன். காச்சிருக்கிறேன். காபி, டீ எதுனாலும் போடட்டுமா?" என்று கேட்டபோது அவர் சிரித்தார்.

"நான் பால், காபி எதுவும் சாப்பிடுறதில்ல. சுத்தமான தண்ணீர், அதுதான் குடிப்பேன். உங்கள் கிணற்று நீர் அம்ருதம்" என்றார்.

அவள் மலைத்தாற்போல் நின்றாள்.

"சாப்பாடுதான் வேணாம்னு தெரிவிச்சிட்டீங்க. நீங்க இங்க சமைக்கிறாப்பலவும் தெரியல. ஒரு கஞ்சி, கிஞ்சி... எங்கய்யாவுக்குக் கேழ்வரகு முளை கட்டிக்காய வச்சு

அறைச்சுக் கஞ்சி வைப்பேன். நானும் அதான் குடிக்கிறது. உங்களுக்கு வச்சித் தரட்டுமா?'' என்றாள்.

இதற்கும் ஒரு சிரிப்பு மறு மொழியாக வந்தது.

“அம்மா, நீங்க எனக்குத் தாயாக இருக்கும் வயசில் இருக்கிறீங்க. இந்த வயசில் மகன்தான் உங்களுக்கு எல்லாம் செய்து காப்பாத்தணும். மணிக் கூண்டுக்குப் பக்கத்தில், ராமையா சந்தில் ஒரு அம்மா மெஸ் மாதிரி வச்சிருக்காங்க. நோயில் விழுந்த புருசனைக் காப்பாத்தி, புள்ளையைப் படிக்க வைக்க இப்படித் தொழில் பண்ணுறாங்க. சும்மா பணம் குடுத்தா அது அவங்களுக்குக் கௌரவமாகாது. அங்கே தான் சாப்பிடுறேன். தப்பா நெனைச்சுக்காதீங்க!'' என்றார்.

அப்போது ரங்கசாமி இங்கே வேலைக்குச் சேர்ந்து ஒருவருசம் தானாகி இருந்தது. பஞ்சமியின் புருசன் வகை என்று சொல்லிக் கொண்டு புதுக்கோட்டைப் பக்கமிருந்து, இவன் அம்மா இவனைக் கூட்டிக் கொண்டு அவளிடம் வேலைக்குப் பரிந்துரை செய்யக் கோரி வந்தாள்.

பஞ்சமி, இரண்டு தரம் கருவுற்று முழுப்பிள்ளை பெற வில்லை. மூன்றாம் பேற்றில், பிள்ளையோடு மாண்டு போனாள். அவள் அண்டியிருந்த குடும்பத்திலும் சொந்த வாழ்க்கையிலும் பெரும் புயலடித்துச் சோர்ந்த நேரம். வளர்த்த கடாவே மார்பில் பாய்ந்து குத்திவிட்டது. அவள் புருசன் பிறகு அங்கே இருக்கப் பிடிக்காமல் ஊரோடு போனான். அவனுக்குச் சொந்தமாம். அந்தப் பையன் நல்ல பையன். 'எலக்ட்ரிக்' வேலை செய்து கொண்டு, சேவிகா வேலை செய்த பஞ்சமியுடன் அன்பாகக் குடும்பம் பண்ணி னான். குடி, கிடி, சூது ஒரு மாசு மருவில்லாத பிள்ளை.

தலை முழுகிய போது கண்ணீரும் அருவியாக வந்தது. நல்லவர்களுக்கு மட்டும் ஏன் நல்ல வாழ்வு அமைவ தில்லை? அவள் பெற்றதில் நல்ல கொடி எச்சமில்லாமல் பட்டுப் போயிற்று. இவன் பராங்குசத்தின் 'சிபாரிசில்' இங்கு வந்திருக்கிறான் என்று தெரியும். ஒப்புக்கு இவளுக்கு ஒரு சேதி, அவ்வளவுதான். மாகா கோயில் வளைவில் கங்கச்சி

அவள் புருசன், இவன் மனைவி, அம்மா என்று குடும்பம் வைத்து ஊன்றிவிட்டான். 'அம்மா'வின் நெருக்கத் தொடர்பு, தன்னைத் தவிர வேறு யாருக்கும் இருக்கக் கூடாது என்பது போல் நடந்தான்... ராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்ற அய்யா மிக நெருக்கமாக இவளிடம் உறவு பாராட்டுவது அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் கவடும் சூதும் நிறைந்த தன்மையை அப்போதுதான் அவள் உணரத் தலைப் பட்டாள்.

## 5

"சின்னக்கா..."

கூடத்துக்குள் நுழையும் போதே குரல் கொடுப்ப வளைக் கொல்லையில் இருக்கும் தாயம்மா புரிந்து கொண்டு விரைந்து வருகிறாள்.

வெயில் சுட்டெரிக்கிறது. "ஆயா, உள்ளே கீழே விழுந்தி ருக்கும் மாங்காயெல்லாம் எடுத்துக் கிடலாமா?" என்று பின் பக்கம் வேலிக்கப்பாலிருந்து ஒரு குழந்தை கேட்டது. எண்ணெய் கண்டு யுகமான முடி. புழுதி படிந்த மேனி. இடுப்பில் ஒரு அழுக்குக் குழந்தையுடன் இன்னொரு சிட்டு...

அந்தக் குழந்தைகள் எங்கிருந்து வந்திருக்கிறார்கள் என்று அறிய வேண்டும் என்ற ஆவலுடன் "அதுக்கென்ன, எடுத்துத்தாரேன்..." என்று சொல்லும்போது, மேலிருந்து ஏதோ அவள் கையில் விழுந்ததும் நெருப்புத்துண்டு பட்டாற் போல் உறைத்ததும் திடுக்கிட்டு, கையைத் தேய்த்துக் கொண் டாள். அப்போதுதான் அந்தக் குரல் அவளை இழுக்கிறது. அவள் கிணற்றுக்கரை தாண்டி வரும்போது, ராசம்மாளே பின் நடை கடந்து வந்து விடுகிறாள். அவளுடன் ஒரு இளம் பெண், பேரப் பெண்ணா? தெரியவில்லையே?

"எப்ப வந்தே ராசம்மா? இது பரிமளத்தின் மூத்த மகளா?"

"இல்ல, சின்னக்கா. இது... இவதா மூணாவது, மேகலா..."

"அடே... மேகலாவா? என்ன இப்படி வத்தக் குச்சியா, கறுத்து... வா... வாங்க..."

கிணற்றுக் கரையில் வாளியில் இருந்து, தண்ணீரை எடுத்துத் தேய்த்துக் கொள்கிறாள். "என்னமோ பூச்சி விழுந்தாப்பல கடிச்சிச்சி, எரிச்சலா எரியிது... நேத்தே ரங்கசாமி சொன்னா, மாமரத்துல பூச்சி புடிச்சிருக்குன்னு. பிஞ்செல்லாம் உதிருது; எலெயெல்லாம் சருகாக் காயுது. இத்தன நாள்ள, இப்படி ஒரு பூச்சி வந்ததில்ல..."

"பெரிம்மா... இதபாருங்க, உங்க வெள்ளச்சீலை... பச்சையா புழு போல..." என்று மேகலா, அவள் மேல் மாராப்பில் ஒட்டி இருக்கும் சிறு புழுக்ளை எடுத்துப் போட்டுக் காலால் தேய்க்கிறாள்.

கழுத்தண்ட... சுரீல்னு... "அய்யோ, இந்தப் புழுவா இப் பிடிக் கொட்டுது?..." என்று அவளே எடுத்துப் போடுகிறாள். மாராப்பை உதறுகிறாள்.

"இந்த வருசம் எங்குமே மா சரியில்ல. தை அறுப்பும் போது மழ கொட்டிச்சி. மாம்பூவெல்லாம் நாசமாச்சி. காஞ்சு காஞ்சு, குறுவைய நாஸ்தியாக்கிச்சி. ஆத்துல தண் ணியே இல்ல. கிராமத்துல, மனிசங்க இருக்கவே தோதில் லாம ஆகுது சின்னக்கா. பஞ்சாயத்துத் தேர்தல் வருமின்னயே சாதிச்சண்ட. காலனிப் பொண்ணு ஒண்ணுகூட, தெக்குத் தெரு மேச்சாதிப் பையன் ஓடிட்டான். கேபிள் டி.வி. வச்சி ருந்தவ. காதல்... ஓடிடிச்சின்னு சொல்லிக்கிட்டாங்க. அது ஓடல. அப்படியே தோப்புல வெட்டிப் போட்டிருந்தாங்க..."

அவள் செவிகளைப் பொத்திக் கொள்கிறாள்.

"முருகா...!"

"எப்டீப்படியோ ஆயிட்டது சின்னக்கா. சாமியில்லன்னு சொன்னதும் சாதியில்லேன்னு சொன்னதும் புள்ளார ஓடச் சதும், பூணூல அறுத்ததும் ஒரு காலம். இப்ப சாதி மட்டு

மில்ல. சாமி மட்டுமில்ல. எத்தினியோ கட்சிங்களும் சனங்களக் கூறுபோட்டுக் கிட்டிருக்கு சின்னக்கா..."

கீழ்த்தஞ்சையின் ஆற்றுப்பாசனத்தில் வேலி வேலியாக நிலம். அந்தப் பெரிய வீட்டில் ராசம்மா கல்யாணம் கட்டி வந்தது அவளுக்குத் தெரியும். இந்த அய்யாவும், ராசம்மா மாமனாரும் சம வயதுக்காரர்கள். அவருடைய அண்ணன் மூத்தார் ஒருத்தரைப் பற்றி உயர்வாகப் பேசுவார்கள். அன்னிபெசன்ட் அம்மை அவர்கள் ஊரில் வந்து தங்க, அவர் கிராமத்தில் அழகாக ஒரு கட்டிடம் கட்டினாராம். தாயம்மாளும் அதைப் பார்த்திருக்கிறாள்...

ராசம்மாவின் புருசன் அந்தக் கலத்தில் காசியில் படிக்கப் போனான். நெடுநெடு என்று உயரம். நல்ல சிவப்பு. சுருட்டை சுருட்டையான முடி. படிப்பை முடிக்கு முன்பே இவர்களின் அஹிம்சைக்கு மாற்றான புரட்சி ஆயுதம் என்ற கிளைக்குத் தாவினான். துப்பாக்கியை எடுத்துக் கொண்டு புலியூர் மிராசைச் சுட்டான். மூட்டை மூட்டையாக நொய்—அரிசி எல்லாம் குடிபடைகளுக்கு அளந்துவிட்டான். போலீசின் கண்களுக்குப் படாமல் ஓடி ஒளிந்து, கடைசியில் பிடிபட்டான். அரசுத் துரோகக் குற்றம் சாட்டி, அவனுக்குத் தண்டனை விதிக்குமுன், அவனுக்குத் தூக்குத் தண்டனை வந்து விடுமோ என்று அஞ்சி, பெற்றவர்கள், அவனுக்கு மூளை சரியில்லை என்று பொய்யாக ஒரு 'டாக்டர் சர்ட்டிபிகேட்' காட்டி, அவனுக்கு ஆயுள் தண்டனைக்கு மாற்றாக, பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லச் செய்தார்கள்...

ராசம்மா... பட்டணத்துக்கு, மாமன் மாமியுடன் வரும் போதெல்லாம் அவர்கள் வீட்டில்தான் தங்குவார்கள். ராதாம்மாவுக்கு ஏழெட்டு வயசிருக்கும். கீழ்ப்பாக்கத்து ஆஸ்பத்திரியில் இருந்து, ஓரிரவு அழைத்து வந்து, ஊருக்குக் கூட்டிச் சென்றார்கள்...

அதற்குப் பிறகு இவள் ஐந்து பேறு பெற்றிருக்கிறாள். ஆனால், மையன் குடிகாரனானதும், தாயாதி பங்காளிச்

சண்டைகளில் குடும்பம் சிதறிச் சின்னாபின்னமானதும் காணப் பொறுக்காமலே மனமுடைந்து பெரியவரும், மனைவியும் போய்விட்டார்கள்...

வேர்க்க விருவிருக்க வெயிலில் வந்திருக்கிறாள். எங்கிருந்து நடந்து வந்தாள்?

இடையில் ஒரு எண்பது ரூபாய் நைலக்ஸ் சீலை. தாலிச் சரடு மட்டுமே உடம்பில் இருக்கும் நகை. நெற்றி, கன்னமெல்லாம் சுருக்கங்கள். இவள் கண்கள் துளும்ப உற்றுப் பார்க்கையில், அவள் "சின்னக்கா...!" என்று தழுவிக் கொள்கிறாள். விடுவித்துக் கொண்டு பானையில் இருந்து செம்பில் நீர் மொண்டு கொண்டு வருகிறாள்.

"உக்காரு, தாயி... கண்ணு உக்காரு......" ராசம்மா கண்களைத் துடைத்துக் கொள்கிறாள், சீலை முன்றானையால் துடைத்தவாறு.

"இது சனிய, துடைச்சிக்கக்கூட உதவாது..." என்று சொல்லிக் கொண்டு செம்பு நீரைப் பருகி ஆசுவாச மடைகிறாள். "கண்ணு, பானையிலேந்து, இன்னுங் கொஞ்சம் தண்ணி கொண்டுவா..." என்று செம்பை மகளிடம் கொடுத்து விட்டு, சின்னக்கா, நீங்க உக்காருங்க!" என்று அந்த பெஞ்சில் உட்கார்த்துகிறாள்.

"காலம, எட்டு மணிக்கு நானும் இவளும் குடப்பேரி தாசில்தாராபீசுக்கு வந்தம்..." என்று சொல்லிவிட்டு அந்தச் செம்பு நீரில் பாதியைக் குடிக்கிறாள்— மீதியை, "நீ குடிச்சிக்கம்மா?" என்று சொல்லும்போது கண்களில் கரகர வென்று கண்ணீர் சுரந்து கன்னத்தில் வடிகிறது. அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

"குடப்பேரி தாசில்தாராபீசா?... இங்கியா? மெயின் ரோடுக்கப்பால... பஸ்ஸ்டாண்டு தாண்டி...? அங்கதானே அந்த ஆபீசெல்லாம் இருக்குன்னு ரங்கசாமி சொன்னா?"

"ஆமா, சின்னக்கா. இவளுக்கு ஒரு சர்ட்டிபிகேட்டுக்காக வந்தே..."

"என்ன சர்ட்டிபிகேட்?"

"வேலைக்குத்தா. அது சம்பந்தமாத்தா, உங்களையும் பாக்க வந்தோம், சின்னக்கா?... உங்க குருகுல வித்யாலயா வில ஒரு டீச்சர் வேலைக்குன்னு நப்பாசையோட வந்தம். நம்ம புதுக்குடி கருமுத்து தெரியுமில்ல? அவப்பாருகூட, சுதந்தரப் போராட்டத்துல அடிபட்டு, செயில்லியே செத்துப் போனாரு...."

இவளுக்கு வெறுப்பாக வருகிறது.

"ராசம்மா, சொதந்தரப் போராட்டம்னு சொல்லாத. சொதந்தரம் வந்து என்ன வாழுது? அந்தப் போலீசு தேவல. இப்ப லாக்கப்புல அடிபட்டு சாவுறது மட்டுமா? போலீசுடே சன்க, பொம்புள மானம் குலைக்கிற எடங்களாகவே ஆயிட்டுது. புருசனக் கொண்டிட்டுப் போறது, அவன அடிச்சிக் குத்துசிராக்குது. பெறகு, பொண்சாதியக் கூட்டிட்டு விசாரணைங்கற பேரில அவன் முன்னாடியே இந்தத் தடியங்க அதைக் கதறக்கதறக் குலைக்கிறது. பெறகு அத்த ளியே விடுறது. அது வூட்டுக்கு வந்து, காகிதம் எழுதி வச்சிட் டுத் தூக்கு மாட்டிக்கிச்சி. இப்படிக் கொஞ்ச நாமின்ன ஒரு பாதகத்தை எதித்து, பொம்புளங்க போராட்டம் வச்சாங்க. 'மனிச உரிமை'ன்னு பேசுனாங்க. மின்ன மாதிரியா ராசம்மா? இப்ப எத்தினி வக்கீலு, டாக்டரு, பெரிய பெரிய ஆபீசரு பொம்புளங்க இல்ல? போலீசிலயே பொம்புளங்க இருக்காங்க. நம்ம கிஷ்னாம்மா இல்ல?... பழைய சர்வோத யக்காரங்க? அவங்க கூட வந்தாங்க. உண்ணாவிரதம்னு போனே. நானும், அய்யா போன பிறகு இந்த மாதிரி போராட்டம்னா, வந்து கூப்பிடுவாங்க. போயிட்டிருந்தே. .... இப்ப அந்தக் கதையெல்லாம் எதுக்கு? நீ தாசில்தார் ஆபிசுக்கு என்ன சர்ட்டிபிகேட் வாங்க வந்த? அத்தச் சொல்லு?"

"எத்தச் சொல்ல? இதுன் எதிர்காலம் என்ன, எப் பிடின்னு ஒண்ணும் புரியல. அண்ணன் புள்ளன்னு

கலியாணம் கட்டி வச்சேன். அந்தப்பாவி இத்த நிர்க்கதியா நிறுத்திப்பிட்டு, இன்னொருத்திகூட இருக்கிறான்..."

"நிசந்தானா ராசம்மா, நான் கேள்விப்பட்டது?"

"நெசந்தா. பம்பாயில, நல்லா சம்பாதிக்கிறான்; ஒண்ணுக் குள்ள ஒண்ணுன்னு கட்டி வச்சேன். அண்ணி உக்கி உடஞ்சி போயிட்டா. கோர்ட்டுல போட்டு ஜீவனாம்சம் வாங் கலாம்னா, அவன் என்ன வேல செய்யிறான், எங்கே இருக் கிறான்னு ஒரு வெவரமும் தெரியல. நாலு நா முன்ன மதுரையிலிருந்து சிங்காரம் வந்திருந்தான். அண்ணியோட தங்க புருசன். அவன் சொல்லுறான், அந்தப் பொண்ணயும் வச்சிக்கல, அவன் துபாய்கோ எங்கோ போயிட்டாப் புலன்னு சொல்லுறான். அது நர்சாயிருக்காம். ரெண்டு புள்ளீங்க. 'வாஷில' இவன் பார்த்தானாம். எங்க போயி இந்தப் பாவத்தக் கொட்டிக்க, சின்னக்கா?"

"தீர விசாரியாம கலியாணம் கட்டிருக்கக் கூடாது. ஒறவாவது ஒட்டாவது? பத்து மாசம் வயித்தில வச்சி நோவும் நொம்பரமும் அநுபவிச்சி, ஒழுக்கமும், சீலமுமா இருக்கிற ஒரு எடத்துல வளத்த பயிரே நச்சுப்பயிரா, மண்டி யிருக்கு..."

"ஒண்ணுமே தோணல சின்னக்கா. அவ லீவுல வந்ததும், இது அப்படியே அவன் வாங்கிட்டு வந்த சீலை, பவுடர் அது இதுன்னு குடுத்து உறவாடியதிலை இவந்தா புருசன்னு மயங்கியதும் அண்ணி முன்னால நின்னு எதோ போட்டதப் போடுன்னு கட்டி வைச்சதும்... பம்பாயில வூடு கிடைக்கலன்னு, ஆறு மாசம் குடும்பமில்லாம வூட்டோடயே கழிஞ்சி போச்சி. பெறகுதா விசயம் புரிஞ்சிச்சி. இந்த... தியாகி அய்யாவோட பங்காளி வூட்டு மனிசர், சரவணன், வூடுதேடிவந்து குட்டை உடைச்சாரு. அவுரு எங்க மூத்தாரு வகையில ஏதோ ஒறவு. "அம்மா, அவன் ஏற்கெனவே ஒரு நர்சுகூடத் தொடர்பு வச்சிட்டு ஒரு குழந்தையும் இருக் கும்மா. ரெண்டு பேரும் ஒரே பிளாட்டிலதா இருக்காங்க.

நான் கண்டு திட்டினேன். பாவி, இப்படி அநியாயமா ஒரு பொண்ணு வாழ்க்கையைக் கெடுத்திட்டியேன்னு... மாமா, மாமா, வூட்டுக்குச் சொல்லாதீங்க, இவள நான் கட்டிக்கல. அந்தப் புள்ளங்க— அவ முதப் புருசனுக்குப் பிறந்ததுங்க. அவன் ஆக்ஸிடன்ட்ல செத்திட்டான். எரக்கப்பட்டு ஆதரவு குடுத்தேன், அவ்வளவுதான். மணிய கூடிய சீக்கிரம் கூட்டிட்டு வந்து குடும்பம் வைக்கிறேன்"னானாம்! அன்னைக்கே கூரை இடிஞ்சி விழுந்திடிச்சி, சின்னக்கா!" என்று அழுகிறாள்.

அந்தப் பெண் மரமாக நிற்கிறாள்.

இவளுக்கும் எதுவும் பேசத் தோன்றவில்லை.

"வெறும் எஸ்.எஸ்.எல்.ஸிதான் படிச்சிருந்தா. பிறகு மேலே சேர்த்து படிக்க வச்சாச்சி. அண்ணாமலையில ஒரு பி.எட்டும் முடிச்சிருக்கா. ஆனா ஒழுங்கா ஒரு வேலை கிடைக்கல. சன்னாநல்லூர்ல ஒரு அஞ்சுமாசம், தீபங்குடில ஒரு எட்டுமாசம்னு காலேல வீட்டவிட்டு ஏழு மணிக்குக் கிளம்பி, ஒரு பஸ் ரெண்டு பஸ் புடிச்சிப் போயிட்டு வந்தா. எல்லா வியாபாரம் பண்ணுற ஸ்கூல். ஆயிரம் ரூபாய்க்கு கையெழுத்து வாங்கிட்டு, கையில எழுநூறுதான் கொடுத் தான். ஸ்கூல் நடத்துறவங்க எல்லாருமே பெருச்சாளிங்கதா. ஒரு நல்ல சீல நாலு வாங்கிக் குடுக்கக் கூட முடியல. சாந்தா வீட்டிலேந்துதா படிச்சா, பி.ஏ. அவ புருசன் சரியில்ல. அக்கா தங்கைக்குள்ள பிரச்னை வரக்கூடாது, நான் போக மாட்டேன்னிட்டா. புதுக்குடியில ஒரு ஸ்கூல்ல சேந்தா. ஆறுநூறு தான் குடுத்தான் கையில. பெரீ...ய தர்மஸ்தாபனம் நடத்துற ஸ்கூல். ஒருநா, அட்டென்டரா வேலை பார்த்த பொண்ணேட மாராப்புச் சீலயப்புடிச்சு இழுத்திட்டு லாப் கதவைச் சாத்திட்டானாம் அந்தச் சண்டாளன். புதுக்குடியே அல்லோல கல்லோலப் பட்டிச்சி. நானே நீ இனிமே அந்த ஸ்கூல்ல வேல பாக்கப் போவாணாம்னிட்டேன், சின்னக்கா..."

"உம் புருசன் எப்படி இருக்கிறான்?"

"இருக்கிறா. எனக்குத் தாலிக்கயிறும் பொட்டும் இருக்கு. இந்த ஆளு இருக்கிறது தா இப்ப பாரம். அண்ணன்னைக்கு மாட்டுவாகடக்காரன் வரலேன்னா, போடுற கூச்சல் சொல்லி முடியாது. முதுகில பொளவ வந்தது. என் உயிரை வாங்கினாரு. சின்னக்கா, நா ஒருத்தி எதுக்குப் பொண்ணாப் பெறந்தேன்? இப்பல்லாம் பொண்ணு பெறந்ததுமே எருக்கம் பால ஊத்திக் கொல்லுறாங்களாம். அது ரொம்ப சரின்னு தோணுது..."

இவள் மனம் தாளாமல் அவள் தோள்களைப் பற்றி ஆதரவாகக் கண்களைத் துடைக்கிறாள்.

"அழாத ராசம்மா, நீயே இப்படி அழுதா, இந்தச் சிறிசுக்கு என்ன கதி? கண்ணைத் துடை. காலம் சாப்பிட்டீங்களா, இல்லையா?"

அவள் கண்களை மேலும் மேலும் துடைத்துக் கொள்கிறாள். கண்கள் சிவந்து மூக்கு நுனி சிவந்து...

செவிகளிலும் இரண்டு மூக்கிலும் வயிரங்கள் பூரிக்க, இளமையின் பால் கொஞ்சும் முகம், இன்று எப்படியாகி விட்டது? உள்ளும் வெளியுமாகச் சூறாவளியில் சிக்குண்டு அலைபடும் ஒரு குடும்பப் பெண்...

"ஏம்மா, மணிமேகல, காலம எதாச்சும் சாப்புட்டீங்களா இல்லியா?"

"உம்... சாப்பிட்டம்..."

"எங்க வந்து தங்கியிருக்கிறீங்க?..."

"சம்பக அண்ணியோட தங்கச்சி வீட்டில... மாம்பலத்தில. அங்கதா தங்கிட்டு நேத்து குருகுல வித்யாலயா போனம்..."

அவள் துணுக்குற்றுப் பார்க்கிறாள். "குருகுலத்துக்கா போனீங்க?"

"ஆமா சின்னக்கா. சம்பகம்தா சொன்னா. குருகுல வித்யாலயா, மூணு இடத்துல பிரான்ச் வச்சிருக்காங்க. உங்களுக்கு, ரொம்ப வேண்டப்பட்டவங்கன்னு சொல்வீங்

கனே? போயி ஒரு வேலை கேளுங்க. இந்தக் காலத்துல உக்காந்திருந்தா, வேல தானா மடில வந்து வுழாது... ன்னா... கண்ணன் சவுதிலேந்து அங்கதா பணம் குடுக்கிறான். நாகபட்டணம் போயி படிகுடுன்னு அவகிட்ட கேட்டுப் போறதுக்கே குன்னிப்போறோம். சின்னவன் ராசு, அந்தக் கட்சி இந்தக்கட்சின்னு ஒரு பத்து பைசாக்குப் புண்ணிய மில்லாம திரியிறான். பத்தாவதே தேறல. அப்பனிடம் வந்து சவடால் பேசுறான்..."

எங்கே தொடக்கம், எங்கே முடிவு என்ற தொடர்பு தெரியாமல் நிலை குலைந்திருக்கிறாள்.

"ரெண்டுபுள்ள இருந்தும், வழிவழியாக வந்த சொத் தொண்ணும் மிஞ்சல. ஏசண்டு சோத்துக்கு நாலுமூட்டை அரிசி குடுக்கவே ஆயிரம் கணக்குச் சொல்லுறான். வூடு பூச்செல்லாம் வுழுந்து படைபடையா சுவர் பொள்ளை, தரை பொள்ளைன்னு சிலோன்னு இருக்கு. மாடி மிச்சூடும் வெளவால் தொங்கிட்டுக் கெடக்கு... இங்க வந்தா, எல்லாம் சரியாயிரும்னு கோட்டை கட்டிட்டு வந்தோம். அந்தத் தலைவரைப் பார்க்கவே முடியல..." விரக்தியில் வேதனை கூடுகிறது.

"யாரு பராங்குசத்தையா சொல்ற? குருகுலம் நல்லாத் தானே நடக்குது?"

"அவரு அங்க வாரதே இல்லியாமே? பெரிய கட்டிடம், மூணுமாடி. காம்பௌண்ட் சுவரே மதில் போல இருக்கு. வெளியே கூர்க்கா யாரு என்னன்னு ஆயிரம் கேள்வி கேக்குறான். அந்தக் காலத்துல எப்பவோ நாங்க போன எடம் இல்ல அது. போன உடனே ஒரு ஆலமரம் இருக்குமே? எனக்கு அதுதான் ஞாபகம். அதெல்லாம் வெட்டிட்டாங்க. நீளக்கூரை போட்ட எடங்கள் எதுமே இல்ல. மின்னாடிதான் ஆபீஸ்னு இருந்திச்சி. எல்லாம் அந்தப் பொம்புள கையில தான் இருக்கு. அவுரு அங்க வாரதே இல்லையாம். சோத்துப்பாக்கத்துக் கந்தாண்ட யாரோ சாமியாமே? அங்கதான் இருப்பாராம். இன்ஜினீரிங்

காலேஜ், சயன்ஸ் காலேஜ், பாலி டெக்னிக்னு ஏகப்பட்ட காலேஜ் வச்சிட்டாங்க. இதுக்குள்ளயே ஸ்கூல், அதா குருகுல வித்யாலயா, டெக்னிகல் இன்ஸ்டிட்யூட், கம்ப்யூட்டர் மையம், எல்லாம் கட்டியாச்சி. நீங்க இருந்த வூடு, குளம், மரங்கள், கிரவுண்டு, எதும் இல்ல. மாடி மாடியா கட்டிடம். அடையாளமே தெரியல.... இவளுக்குப் பேச்சே எழும்பவில்லை.

“அந்தப் பொம்புளன்னா யாரு? செங்கமலமா? அவளுக்கு அம்புட்டுப் படிப்பு ஒண்ணும் கிடையாதே? பாகீரதியம்மா வீட்டுல கூடமாட சமையல் செய்திட்டிருந்திச்சி. அப்படியே அய்யா முதமுதல்ல குருகுலத்துக்குக் கூட்டி வந்தாங்க, படிக்க. பாக்க நல்லாயிருப்பா. பராங்குசத்துக்குக் கட்டி வச்சாங்க. எனக்குத் தெரிஞ்சு ஒரு பொம்புளப் புள்ளயும் ஆம்புளப்புள்ளயும் பொறந்திச்சி. சாதுவான குணம்...”

“அதென்னமோ, இப்ப இந்தப் பொம்புளயத்தா சொல்றாங்க...” என்று குரலை இறக்குகிறாள் ராசம்மா.

“டாக்டர் எமிலின்னு பேரு. கிறிஸ்தவங்க. இவங்கதா எல்லா நிர்வாகமும். வெளிரூம்ல காத்துக் காத்து உள்ள போனம். அங்க சுவரில அய்யா, அம்மா, காந்தி படம் மாட்டிருக்காங்க. ஒரு சின்னப்பலகையிலே ஊது வத்தி, பூ எல்லாம் வச்சிருந்தாங்க. மத்தப்படி வெளி ரூம்ல, சுவருபூர, அந்த வித்யாலயத்துக்கு வந்த பெரிய... மனிசங்க, ஸ்டாருங்க, அரசியல் வாதிகள், மந்திரிகள்... உங்க மகன் கூட மாலை போட்டுக்கிட்டு வருகை தந்தது பட்டமளிப்பு விழா நடத்தியது... எல்லாத்திலும் இந்த அம்மாதான் முதலா இருக்காங்க. அவரும் இருக்காரு. அவுரு சேர்மன்... இவங்கதான் எல்லாம். எத்தனையோ வெளிநாட்டுக்காரங்க... சேவாதிலகம்னு சாமி பட்டம் குடுத்திருக்காரு...”

கேட்கக் கேட்கத் தலை சுற்றுவது போல் இருக்கிறது.

“அப்ப, பராங்குசத்தை நீ பாக்கவே இல்லையா?”

“அதா சொன்னனே? அவுரு மடம், சாமின்னு என்னமோ ஆராய்ச்சி அது இதுன்னு பேசுறாங்க. மாசத்துல ஒருக்க வருவாராம். தாடி, முடி, காவி சட்டை, உருத்தி ராட்சம் போட்டுட்டு சேவாதிலகம் பட்டம் வாங்குறபடம் இருந்திருச்சி. இந்த எமிலி அம்மாதா பக்கத்துல...”

“பட்டம் குடுத்தது ஆரு?”

“அது எனக்குத் தெரியல. ஒரு தாடிவச்ச வெள்ளக்காரர்...”

“இந்தக் கத கெடக்கட்டும், நீ வந்த காரியம் என்ன ஆச்சி?”

“முதல்லயே சம்பகத்தின் தங்கச்சி, அப்ளிகேசன் ஃபார்ம் வாங்கி அனுப்பிச்சிருந்தா. அதை எழுதி, ஒரு ஏழெட்டு சர்ட்டிபிகேட்டோட இணைச்சி, சாதிச்சான்று, அப்பா, தாத்தா தெரிஞ்சவங்ககிட்ட வாங்கினது, நன்னடத்தைக்கு வேலை செஞ்ச இடங்களில் வாங்கினது எல்லாம் அனுப்பி ரிஜிஸ்தர்ல அனுப்பியது உள்பட முந்நூறு ரூபா ஆச்சி. ஒண் ணும் வரலேன்னு தான் நேர கூட்டிட்டு வந்தேன்... அங்க ஹிஸ்டரி டீச்சருக்கு இடம் இல்லையாம். பாடனி எம்.எஸ்.ஸின்னாத்தான் பார்க்கலாமாம். சின்னக்கா, இஸ்டரின்னா, சாபக்கேடா? ஊரில, இப்ப ஸ்கூல் இல்லாம இல்லை. நாலு கிண்டர் கார்டன் இருக்கு. எங்க ஏசண்டு, ஆறுமுகம், ஒண்ணுமில்லாம, மாமா முன்னாடி வந்து நின்னு, “தேங்கா எறக்களாங்களா? காயப்போட்டுடலாம், நூறுநூறா திருட்டுப் போகுது”ன்னு கேப்பான். ஆறு புள்ளங்க. வருசா வருசம் பெத்துப் போடுவா. எல்லாம் இங்கேந்து வளந்தது தா. இன்னைக்கு, அவவ, கழுத்து கொள்ளாம நகை என்ன, வயிரம், பட்டுன்னு, கிராமத்திலேந்து டாக்சில போறாங்க, வராங்க. டிராக்டர் நிக்கிது. ஒரு பயல் விவசாயம் படிச்சி ஆடுதுறையில் ஆபீசரா இருக்கிறான்... எங்கனாலும் கல்யாணம் காட்சின்னா, ஏங்கிட்டேந்து சங்கிலி, வளைன்னு வாங்கிட்டுப் போவா... இப்ப அத்தனியும் தோத்துட்டு நா, தலைகுனிஞ்சி அவங்ககிட்டப் போயி, நூறுக்கும் இருநூறுக் கும் கையேந்துறேன்... சத்தியமா இந்த இவ இல்லன்னா,

நா உசுர விட்டிருப்பேன்... வூட்டுல ஒரு ரேடியோ இருந்திச்சி. அத்தக்கூட அந்த மாட்டுவாகடம் எடுத்துப் போயிட்டா, பாவி. அன்னாடம் இவருக்குக் குடி சப்ளை பண்ணுறான்ல? சிலப்பா, ராவுல, கழுத்த நெறிச்சுக் கொன்னிட்டு, போலிசில போய் விழுந்திருவமான்னு தோணும்... ஆனா, இந்தப் புள்ளய ஓரிடத்துல சேக்கணும்... இதை நினைச்சிப் பொறுக்கிறேன்..."

"ஏம்மா, படிச்ச பொண்ணுதானே? இப்பல்லாம் டூசன் எடுக்கலாமே? இப்பதா— ரங்கசாமி கூடச் சொல்லுறான்— ஏழை பாழை, வயித்துக்கில்லாததுங்க கூட, ஸ்கூல் படிப்புக்கே ஒண்ணொன்னும் டூசன் இல்லாம சரிப்படலியே? இதா ரோட்டுப் பக்கம் ஒவ்வொரு தெருவிலும், கம்ப்யூட்டர், டூசன்னு புள்ளங்க போகுதுங்க. ரங்கசாமி அவம்புள்ளங் களுக்கு, அஞ்சாம்கிளாஸ், ஆறாங்கிளாசுக்கு மாசம் தலா நூறு ரூவா குடுத்து டூசன்னு சொல்றா. படிப்பு என்னமோ இலவசங்கறாங்க. ஆரம்பத்துல எழுநூறு எண்ணூறு கட்ட னும். பின்னால மரத்திலேந்து மாங்காயும், தென்னமரத்துத் தேங்காயும் கொண்டு வித்தெடுத்துக்கிறான். போகட்டும்னு நானும் எதும் கேட்டுக்கிறதில்ல... டூசன் எடுக்கலாமேம்மா?"

இது புதிய வயிற்றெரிச்சலைக் கிளப்பி விடுகிறது.

"அதையேன் கேக்குறீங்க சின்னக்கா? இவ படிப்பு, பத்தாதாம். 'மாத்ஸ்' அதா கணக்கு பி.எஸ்ஸி, எம்.எஸ்ஸி படிச்சிருக்கணுமா. இவ, அப்ப அதுதா கெடச்சது. படிச்சா. பர்ஸ்ட் கிளாஸ்தா, பி.ஏ. அதுக்கு ஒரு மதிப்பு இல்ல. ஒண் ணும் வாணாம், ஏசண்டு ஆறுமுகத்தின் மக பரமேசுவரி, டூசன், மட்டுமே எடுக்குறா. சின்னவ. அவ புருசன் காலேஜ் புரொபசர். புதுக்குடிக்குப் போயிட்டுவரான். பைக் வச்சிருந்தான். எட்டு லச்சமாம். காரு வாங்கியாச்சி. அவ 'மாத்ஸ்' பி.எஸ்ஸிதா. மாடில கொட்டாய் போட்டு, டூசன் எடுக்கிறா. மாசம் ஏழாயிரம் எட்டாயிரம் வருதாம். பொறந்தவூட்டோடதா இருக்கா. இவளுக்கு, பி.ஏ. படிப்புக்கு, பி.எட் படிப்புக்கும், அஞ்சாவது ஆறாவது கணக்குக் கூடவா சொல்லிக் குடுக்க முடியாது? நா எட்டாவதுதா படிச்சே,

அந்த காலத்துல. கண்ணன், பரிமளா, ஏ, இவளுக்குக்கூட நாந்தா சின்னக்கிளாசில வீட்டுப்பாடம் சொல்லிக் குடுப்பேன். இப்ப இப்பிடி இந்தப் படிப்பு உதவாக்கரையா யிடும்னு புரியல...''

''அது சரி, நீ என்னமோ தாசில்தார் சர்ட்டிபி கேட்னியே? அது எதுக்கு?''

"நா வேலைக்கு மட்டும் கேக்கல. அவுங்க ஒரு தர்ம ஆஸ்டல் வச்சிருக்காங்க. எஸ்.கே.ஆர். அய்யா காலத்துலியே இருந்தது தானாமே அது? இவ எங்கனாலும், கிளார்க், ரிசப்ஷனிஸ்ட்னு வேல செஞ்சிக் கிட்டு அதுல தங்கிக் கலாம்ங்கறதுக்காகக் கேட்டோம். அதுக்குத்தான் இவ புருசனில்லாதவ, ஆருமில்லன்னு சர்ட்டிபிகேட் வேணும் னாங்க. என்ன எழவு சர்ட்டிபிகேட்டோ? வெவரம் புரியாம போயி நின்னோம். ஆபீசா அது? முதல்ல போரப்பவே ப்யூன் புடிச்சிக்கிறான். 'யாரு, எதுக்கு, தாழ்த்தப்பட்ட சாதிச் சான்றிதழா? நிலமா, சொத்தா, வாரிசு உரிமையா'ன்னு கேட்டு பணம் புடுங்கறாங்க. அந்த எடத்துல எத்தினி ஆபீசர் கள் இருக்காங்கன்னு புரியல. கோவாலுன்னு எங்கூர்க்காரப் பய்யன் அங்க பாத்தான். "எங்கக்கா இங்க...?"ன்னு மணிய விசாரிச்சான். அவனுக்கு அரசியல் கட்சித் தொடர்பு. "போயி நீங்க, டெஸர்டட் வைஃப்னு போட்டு சான்றிதழ் வாங்கிடுங்க போதும்..."னு அவனே ஃபாரம் வாங்கிட்டு வந்தான். நூறு ரூபா குடுத்தாப் போதும்னான். அங்கியே எழுதி எடுத்திட்டு அவன் முன்னே போயி, அந்த ஆபீசருக்கு முன்ன எங்களையும் கூட்டிட்டு நுழைஞ்சான். அவுரு மேசையச்சுத்திப் பெரிய கூட்டம். அங்கே ஒரு ஆளப்புடிச்சி இவ, நூறு ரூபாயையும் தாளையும் குடுத்தா....

"அவன் அவரு பக்கமா நின்னிட்டிருக்கையில, ஒரு வயசான அம்மா, நிக்கிறாங்க. பின்னால ரெண்டு பேர். துண்டு போட்டவ, போடாதவன்னு ஒரெழவும் புரியல. அந்தம்மாகிட்ட, "ஏம்மா, உங்க புருசருக்கு, இன்னொரு

சம்சாரம் இல்லேங்கறது நிச்சியமா?''ன்னு கேக்குறான் அந்தத் தாசில்தார்.

“இல்லீங்கையா... நிசமாலும் இல்ல...''ன்னு நடுங்கிக் கிட்டே அவுங்க சொல்றாங்க.

“ஏம்மா, உங்களுக்கோ புள்ள இல்ல. அப்ப அவருவேறு ஒரு கலியாணம் செய்து கொண்டிருக்க மாட்டாருன்னு எப்பிடி நம்புறது? நாளைக்கு அவுங்க வேற, ‘பென்சன் ‘க்ளைம்’ பண்ண வந்தா எங்களுக்குப் பிரச்னையாயிடுமே? ஆமா... உங்களுக்குத்தான் ஒண்ணுமில்ல. நீங்களே உங்க புருசருக்கு இன்னொரு கலியாணம் பண்ணி வச்சிருக்க வேண்டிதுதான?''ன்னு கேட்டாம் பாரு, அப்பவே எனக்கு அந்தச் சண்டாளன அடிச்சி நொறுக்கணும் போல இருந்தி ருச்சி. “ஏ, கோவாலு? இங்க வா!''ன்னு கத்தினே. எனக்கு இங்க ஒரு சர்ட்டிபிகேட்டும் எழவும் வாணாம்''ன்னிட்டு வெளிய வந்தேன்.

“ஏன் பெரிம்மா? அவங்கிட்ட நூறு ரூபாயும். ஃபார்மும் குடுத்தாச்சி. அஞ்சே நிமிசத்துல வந்திடும்...'' ன்னா. அதுக் குள்ள அம்மாக்குப் பொறுக்கல... அந்தப் பொறுக்கி, எம் மகள இதுபோல எதானும் கேக்கமாட்டான்னு என்ன நிச்சயம்? படுபாவிக...

“சாதிச் சான்றிதழ் பெற ஒரு இருளப் பொம்புள வந்து நிக்கிது. அஞ்சுநூறு குடுத்திருக்காம். பாம்பு கொண்டா றேன், புடிச்சிக் காட்டுறியான்னு கேட்கிறானாம் தடியன்...'' என்று தாசில்தார் அலுவலகக் காட்சிகளை விரிக்கிறாள்.

“சரிம்மா, உள்ள வாங்க. கஞ்சியும் சோறுமா ஏதோ ஆக்கி வச்சிருக்கிறேன்...'' என்று அவர்களைச் சமையல் அறைக்குள் அழைத்துச் செல்கிறாள்.

## 6

**கா**லையில் சாணிகரைத்து வாசலைத் தெளித்துப் பெருக்கிக் கொண்டிருக்கையில், விடாதே, பிடிபிடி... என்ற

கூச்சலும், ஓலமுமாக ஒரு கூட்டம் தெருவில் புகுந்து வருகிறது. இந்தத் தெருவில் ஒரு காலத்தில் இந்த பங்களாவே பாதி இடத்தை அடைத்துக் கொண்டிருந்தது. பின் பக்கம் மட்டும் குளம் இல்லை, எதிரிலும் பெரிய நீர் நிலை இருந்தது; மரங்கள் இருந்தன; பன மரங்கள் உண்டு. பெரிய சாலையைத் தொடும் இடத்தில் ஜட்ஜ் பங்களா இருந்தது. ஜட்ஜ் யாரென்று தெரியாது. வில்வண்டி இருந்தது. கடுக்கன் போட்டுக் கொண்டு சிவப்பாக ஒரு ஐயர் வருவார். அவருடைய தாயார் பத்மாசனி அங்கே இருந்தார். அந்த அம்மை இறந்த பிறகு அவர்கள் யாரும் வரவில்லை. அதை அடகுக் கடைக்கார சேட் வாங்கி, முழுதுமாகத் தகர்த்து, வீடுகள் கட்டினார். அதேபோல் எதிர்ச்சாரியிலும் வீடுகள்.... குளம் தூர்ந்து குப்பை மேடான போது, சீராக்கி, மறுபடி மரங்கள் வைத்தார். சிவப்புப்பூக்கள் பூக்கும் மரங்கள், வேம்பு, எல்லாம் நட்டார். இடது கைப்பக்கம் தள்ளி, பொட்டலாக இருந்த இடங்களில் கற்கள் நட்டு, பிளாட் போட்டுவிட்டார்கள். ஒவ்வொரு ஊராக முளைத்துக் கொண்டிருக்கிறது... அந்தப் பக்கம் தான் குஞ்சும் குழந்தையும் குடும்பமுமாக எங்கிருந்தோ பெயர்ந்து வந்து பிழைக்கிறது. பழைய காலங்களில் வெள்ளைக்கார துரை கட்டிய பங்களா என்று ஒன்று இருந்தது. இப்போது அதையும் இடிக்கிறார்கள். அங்கு யாரோ சாமியார் மண்டபம் கட்டப் போகிறாராம். பின்புறம் வேலிப் பக்கம் நின்று மாம்பிஞ்சு கேட்ட குழந்தைகள் அந்தக் கும்பலில் இருந்துதான் வந்தார்கள்...

"யம்மா, இப்பிடி ஒரு பய கருப்புக் கட்டம் சட்டை பேன்ட் போட்டுட்டு தொப்பி வச்சிட்டு ஓடினானா?" என்று விர்ரென்று வந்து நிற்கும் மோட்டார் சைகிள்காரன் கேட்கிறான். அவன்பின் உட்கார்ந்து வந்த பெண், "பாவி, சங்கிலிய அத்திட்டுப் போயிட்டான், டாலர் தாலியோட் ஏழு சவரன் மா? வூட்டு வாசல்ல கோலம் போட குனிஞ்சி ருந்தேன், ஒரு நிமிசமா வந்தது தெரியாம அத்திட்டுப்

போயிட்டா. அவன் கையில புத்து வைக்க, வெளங்காம போக...." மோட்டார் சைகிள் பாய்ந்தோடுகிறது.

"நெதமும் நடக்குறது தா, இவளுவ, சயினும் டாலரும் தெரியும்படி எதுக்குப் போட்டுக்கணும்?""

"வாயக்கட்டி வயித்தைக் கட்டி சீட்டு நாட்டுப் போட்டு குருவி சேர்க்கிறாப்பல பணம் சேத்து நகை வாங்குறத இப்படிக் கொள்ளை கொடுக்கணும்னா வயிறு எரியாதா?..."

"பவுன் வெல ஆகாசத்துக்குப் போவுது, ரெண்டுவேள சோத்துக்கு உத்தரவாதமில்ல. எப்பிடியோ வாங்கிப் போட்டுக்கிறாளுவ..." ஆளாளுக்குப் பேசிக் கொண்டு போகிறார்கள்.

"தங்கம் தங்கம்" என்று ஒரு வெறியே எல்லோரையும் பிடித்து ஆட்டுவதாகப் படுகிறது. மோட்டார் சைகிள் காரனை எங்கோ பார்த்த நினைவு வருகிறது. ரங்கசாமி வருகிறான்."மைனாவதி ஆசுபத்திரிப் பக்கம் இவ புருசன் இளநீரு விக்கிறான். அன்னாடம் குடிச்சிட்டு வருவான். இவ தம்பிக்காரன்தான் கழட்டிட்டு ஓடிருக்கிறா...." என்று விவரம் சொல்கிறான்.

மேலே கேட்கவில்லை அவள். துடைப்பத்தைத் தட்டி விட்டு சுவர் பக்கமாகப் பின் பக்கம் செல்கிறாள். சாணம் ஒட்டியிருந்த வாளியைக் கழுவி வைக்கிறாள். கொட்டிலில் ஒரே ஒரு கிடாரிக்கன்று தான் இருக்கிறது. பதத்துக்கு வரவில்லை. இதன் தாய் சென்ற வருசம் கழிச்சல் கண்டு இறந்து போயிற்று. இப்போதெல்லாம் ஊசிக்கரு செலுத்தித் தான் கருவடையச் செய்கிறார்கள். இதன் அம்மா லட்சுமி குருட்டுக் கன்றை ஈன்றது. அது தடுக்கித் தடுக்கி விழும் போது இவள் வயிறு துடிக்கும். தாயிடம் பால் குடிக்கக் கூடவிட வேண்டும். மழை பெய்து, எதிரே, பசுமையாக இருந்தது. பசுவையும் கன்றையும் காலாற மேய விடுவதாக நினைத்து நின்று கொண்டிருந்தாள். அப்போ பார்த்து, மோட்டார் சைகிளில் சிவலிங்கம் குறுக்கே வர, கன்று

பயந்து மிரண்டு தடுக்கித்தாவ, அது சக்கரத்தில் அடிபட்டுச் செத்தது.

"அடாடா... ஸாரி, ஸாரிம்மா..." என்று வண்டியை நிறுத்தி இறங்கினான், சிவலிங்கம்... சிவலிங்கம்தான் இப்போது சென்றவன். சட்டென்று நினைவு வருகிறது. அன்று கன்றை நசுக்கிய போது இப்படித்தான்... அவன் கோலத்தைப் பார்த்த போது ஒன்றும் சொல்லத் தோன்றவில்லை. அய்யா படுத்திருந்த நாட்களில், ஒரு வெள்ளிக்கிழமை பஜனையின் போது வந்தமர்ந்தான். அந்த சிவலிங்கம், மாறி மாறித் தோன்றுகிறான்.

"பையன் யாரு? ஏம்ப்பா? எங்க படிக்கிற?"

"இங்கதான் ஸார், நகராட்சி ஸ்கூலில. அப்பா அம்மா யாருமில்ல. பாத்திரக் கடையில வேலைக்குன்னு வந்தேன். அவங்க வீட்டு மாடில தான் கடைப் பையன்களுக்கு சமையல் சாப்பாடெல்லாம். ஊரில நைன்த் படிச்சிட்டிருந்தேன். அப்பதா எங்க பாட்டியும் செத்துப் போச்சி. இங்க வேலைன்னுதான் அழச்சிட்டு வந்தாங்க. ஆனா எனக்குப் படிக்கணும்னு இருக்கு... ஹெல்ப் பண்ணுங்க ஸார்!" என்று அப்படியே காலில் விழுந்து, காலைப் பற்றிக் கொண்டான்.

"டேய், எழுந்திரு. இங்க வீட்ல இருந்திக்க! தாயம்மா. இவ இங்கியே இருக்கட்டும். வீடு எவ்வளவு பெரிசு? உனக்கு இடமிருக்கு. நல்லா படி!" என்று தட்டிக் கொடுத்தார். அந்த வருசம் முடிந்து பத்தில் எட்டு முன் அவர் இறந்து போனார்.

அய்யா, அய்யா என்று விழுந்து புரண்டான். "பையன் இங்கேயே இருக்கட்டும் தாயம்மா? உனக்கு ஒரு ஊன்று கோலா இறைவன் அனுப்பி இருக்கிறான். "தம்பி, அப்பா அம்மா இல்லேன்னு நினைக்காதே. நீ நல்லபடியா, புதுப் பயிரா வளரணும். இந்த அரசியல் சேற்றிலும் நல்ல பயிர் வரும் என்று நம்புறேன். உழைச்சுப் பிழைக்கணும்; பொய், சூது எதுவும் ஒட்டக்கூடாது..." என்று அவன் தலையில் கை வைத்து, ஏதோ ஓர் அமைதி வந்தாற் போல் பேசுவார்.

அவன் வந்த பிறகு அவனே மலசலப் பீங்கான்களைக் கொண்டு கொட்டிக் கழுவுவான். ஒருநாள் பாத்திரக் கடை நாடார் இவரை விசாரிக்க வருவது போல் வந்து, பெருத்த குரலெடுத்துக் கடிந்தார்.

"ஏலே, நீ பாட்டுக்குச் சொல்லாம கொள்ளாம வந்திட்டா என்ன அருத்தம்? கடையில ஆளில்லாம சங்கட்டமா இருக்கு...? ஸார், இவன நாங்க படிக்க வைக்கிறோம்னுதான் சொல்லிக் கூட்டி வந்தோம். இவனுக்குத் துட்டு வேணும். படிப்பு வாணாம், கடையில வேலைக்கிருக்கிறேன்னா. இப்ப... நீங்கல்லாம் என்ன நினப்பீங்க ஸார்?"

"அப்படி ஒண்ணுமில்லிங்க. நீங்க தப்பா நினைக்கா தீங்க. வேலை செய்துக்கிட்டுப் படிக்கிறத வாணான்னு சொல்லமாட்டேன். காலம எட்டு மணிக்கு ஸ்கூல் போய் விட்டு, ஒருமணியோடு முடிந்து, பையன்கள் வேலையும் செய்யவேணும்ங்கறது என் கருத்து..." என்றார்.

"எலேய், சாயங்காலம் வூட்டுக்கு வந்திடு. அங்கேயே சாப்பிட்டுட்டு ஸ்கூல் போகலாம்!" என்று சொல்லிவிட்டுப் போனார்.

பையன் அவர் கால்களைப் பிடித்துக் கொண்டு அழுதான். "அம்மா, அவங்க வீட்டுக்கு அனுப்பிச்சிடாதீங்க! நான் அத்தினி பேருக்கும் சமையல் செய்து, பாத்திரம் கழுவி வீடு துடைச்சி... ரா படுக்குமுன்ன பன்னண்டாயிடும். காலம நாலுமணிக்கு எழுப்பிடுவாங்க. இவங்க பெரியாத்தா அடிக்கும். அம்மா, நா இங்கியே இருக்கிறன், அனுப்பிடா தீங்க. உங்க மகன் போல நினைச்சிக்குங்க. நான் பெத்த தாயப் பாத்ததில்ல, நீங்க தாயி..." இழுத்துப் பிடித்துக் கொண்டு இருந்தான். அய்யா இறந்த பிறகு, அவனைக் கையோடு அழைத்துச் சென்றுவிட்டார்கள்.

நாலைந்து வருடங்கள் அவனைப் பார்க்கவில்லை.

பிறகு ஒருநாள் தேர்தல் களேவரத்தில், கூட்டம் கூட்ட மாக வாக்காளரைச் சந்திக்க வந்த கரை வேட்டிக் கூட்டத்

தில் இவன் தென்பட்டான். இவள் மகன் எம்.எல்.ஏ.வாக இருந்த நாட்கள். தடாலென்று இவள் கால்களில் நெடுஞ்சாண்கிடையாக வந்து விழுந்தான்.

இவள் துணுக்குற்று நின்றாள். "ஏம்பா? சிவலிங்கமா?" அரசியலுக்கு வந்திட்டியா?... நீ நல்லாப் படிச்சி, உழைச்சி வாழணும்னு அய்யா சொன்னாரே? கடையில வேலை செய்திட்டு... கடேசில அரசியல்...?"

"ஆமாம்மா, அரசியல் நல்லதில்லையா? முழுநேர தொண்டனாயிட்டே—உங்க... மக புரவலர்கட்சிலதாங்க தொண்டனாயிருக்கிற. ஆசீர்வாதம் பண்ணுங்கம்மா?" என்றான்.

அவள் வாயடைத்துப் போனாள்.

பிறகு அவன் கல்யாணம் செய்து கொண்டதாகச் சொல்லி ஒரு பெண்ணை அழைத்து வந்தான். "காலில வுழுந்து கும்பிடு, சுந்தரி. நம்ம தலைவர் முன்னிலையில்தான் கட்டிக்கிட்டேன்..." என்றான்.

"உங்க ஆசீர்வாதத்துல நல்லா இருக்கிறேன். ரியல் எஸ்டேட் பிஸினஸ் பண்ணுறேன்..." என்றான்.

அதற்குப் பிறகு கன்றை நசுக்கிவிட்டு, "ஸாரி" சொல்லும்போது தான் தட்டுப் பட்டிருக்கிறான். சலவை வேட்டி, வெள்ளைச் சட்டையில் இரத்தத் துளிகள் தெளித்த கோலத்துடன் தலைகுனிந்தவாறு, "தெரியாம நடந்திட்டதும்மா..." என்றான். "மன்னிச்சிடுங்க..." என்றவன் ரங்கனைப் பார்த்து, "அண்ணே, பார்க் பக்கம் மண்ணாங்கட்டி அண்ணே இருப்பாரு. அவுரக் கூட்டிட்டு வந்து, இதை அப்புறப் படுத்தி சுத்தம் செய்திடச் சொல்லுங்க. நா அவுசரமாப் போயிட்டு இருக்கிற. இல்லாட்டி...."

அவள் அவன் வேட்டி மடிப்பில் இருந்து அவனிடம் ரூபாய் நோட்டுக் கொடுப்பதைக் கண்டும் காணாதவளாகி, லட்சுமியையும், இந்த முதற்கன்றையும் ஓட்டிக் கொண்டு கொல்லைப்புறம் சென்றாள்.

'ரியல்எஸ்டேட் பிஸினஸ்' என்பது, புறம்போக்கு நிலங் களை வளைத்து, ஆட்சியாளரின் பைகளுக்குக் காசு சேர்க்கும் தொழில் என்று சாயபு சொல்வான்.

அவன் பெண்சாதியைத்தான் அன்று சாயபு மரணத் துக்குச் சென்ற அன்று பார்த்தாள். ஆனால் அவன் பின் நகை யைப் பறி கொடுத்துப் பிரலாபித்துக் கொண்டு சென்ற பெண், அன்று பார்த்த அவன் மனைவியாகத் தெரிய வில்லையே?...

ஒன்றும் புரியவில்லை. இதுவும்... அரசியல் கட்சித் தலை வரின் 'அடி'யைப் பின்பற்றும் தொண்டோ? பின்பக்கம்மா பெருத்தாலும் காம்பு பழுத்து வளைந்தும் நெளிந்தும் உதிர்ந்தி ருக்கின்றன. சருகுகளில் நெருப்பு வைத்துப் புகை காட்டிய தாலோ?.... பூச்சிக்கு மருந்தடிக்க வேண்டும் என்று ரங்கனி டம்தான் சொல்ல வேண்டும். அவனுக்கு இவள் நடப்பு, போக்கு ஒன்றுமே புரியவில்லை. "இத்தே பெரிய வூட்ட சும்மா போட்டு வச்சிருக்கிறீங்க. மூவாயிரம் போல வாடகை வரும்..." என்று அடிக்கடி சொல்கிறான். அந்த வீட்டில் அவள் இருக்க உரிமை இல்லை என்பதை உணர்த்துவது போல் தோன்றுகிறது. இருக்கட்டும், இவன் யார்? நாளைக்கு இதில் ஒரு ஓட்டல், சாராயக்கடை என்று திறந்து விட்டால்? பெண்களை வைத்துச் சம்பாதிக்க 'லாட்ஜ்' கட்டினால்? அவள் அய்யா அம்மாவின் நிழலில் இருந்து, அவர்கள் உப்பை உட்கொண்ட நன்றிக்கு, நீசத்தனமான காரியங் களுக்கு இடம் கொடுக்கலாகாது.

ராதாம்மாவின் பையன் அமெரிக்காவில் இருப்பதாக நிகொலஸ் பையன் ஜார்ஜ் சொன்னதாக சாயபுவே சொல்லி இருக்கிறார். மருமகனும் வேலையில் இருந்து ஓய்வு பெற்று, எங்கோ இமாலயத்தில் இருப்பதாகச் சொன்னார். அவர் களில் யாரேனும் இந்த வீட்டுப் பக்கம் நிச்சயமாக வருவார் கள் என்று நம்புகிறாள். குருகுல வித்யாலயம் தொடங்கி ஐம்பது வருசம் கொண்டாடினார்கள். பெரிய விழா நடந்தது. அதற்கு ராஷ்டிரபதி வந்தார், அவர் வந்தார், இவர்

வந்தாரென்றெல்லாம் செய்திகள் வந்தன. ஆனால் இந்தப் பராங்குசம் அவளுக்கு ஓர் அழைப்பிதழ்கூட வைக்கவில்லை. அவளும் அப்போது சோகமாக இருந்தாள். பக்கத்தில், அந்த மிலிடரிக்காரத் தம்பி காம்பு ஒடிந்து சாய்ந்தாற்போல் திடு மென்று போய்விட்ட புதிசு. அவளால் ஏற்றுக் கொள்ளவே முடிந்திருக்கவில்லை...... எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார். இந்தத் தோட்டத்தை எவ்வளவு அழகாக வைத்திருந்தாள்! சனி ஞாயிறு நாட்களில் அந்தப் பஞ்சாபி சிநேகிதர் சம்சார மும், இரண்டு குழந்தைகளும் வருவார்கள். வரிசையாகப் பல நிறங்களில் பூத்திருந்த அடுக்குக்காசித்தும்பைப்பூவை அழகாக வாழை நாரில் தொடுத்து, பெண் குழந்தைக்குக் கொடுப்பார். இவள் இந்தப் பக்கத்தில் நின்று அதை அவர் தொடுக்கும் அதிசயத்தைப் பார்ப்பாள். ஒருநாள் காசித்தும் பை மலர்களை இந்த வீட்டில் படத்தின்முன் அழகாக ஒரு கிண்ணத்தில் நிரூற்றி அதில் பரப்பிக் கொண்டிருக்கையில், "ஏன் தம்பி? இந்தப் பூக்களை எப்படி நீங்க இவ்வளவு அழகாகத் தொடுக்கிறீங்க? ஜாதிமல்லி, முல்லை, அரளி எல்லாம் தொடுக்கலாம். அதுகூட முல்லையும் மல்லியும் காம்பு நீளமில்ல. இதில காம்பே தெரியாது தொடறப்பவே உதிந்து போயிடுது. அந்தப்புள்ளங்க ரெண்டு சடையிலும் வச்சிட்டிருந்தாங்க. நானே கண்ணு போடக் கூடாது. நீங்க நல்லாயிருக்கணும் தம்பி...." என்றாள் மனம் துளும்ப.

மீசையைக் கடித்துக் கொண்டு ஒரு சிரிப்பைச் சிந்தியது இப்போது போல் இருக்கிறது.

ரங்கனுக்கு அவர் ஒரு முள் போல இருந்தார்.

"அந்த ஆள் மிலிடரி இல்ல, குடிக்கிறாரு! ராத்திரி வாசப்புறம் ஈசிசேரில சாஞ்சிட்டு அவரு குடிச்சத நான் பார்த்தேன்..." என்றான் ஒருநாள். "சும்மா பழி சொல்லாத. யார் மேல வாணாலும் எதுவும் சொல்லுறதா?" என்று அவள் கடிந்தாள்.

இரவில் நட்சத்திரங்களைப் பார்த்த வண்ணம் அவர் அப்படி உட்கார்ந்திருந்த நாட்கள் உண்டு. வேலியில் மயில்

மாணிக்கக் கொடி தாறுமாறாகப் படர்ந்திருந்ததை ஒருநாள் இரவு ஒழுங்கு செய்து காண்டிருந்தார். குடிசைக்கு வெளியே ஒரு மின்விளக்கு உண்டு. இவரை நாம் எதற்காகக் கண் காணிக்கிறோம் என்று தெரியாமலே அவள் பார்த்தாள். ஒருநாள் இரவு ரங்கன் கூறியதுபோல் அவர் பட்டையான சிறு பாட்டிலில் இருந்து குடிப்பதைக் கவனித்தாள். என்றாலும் அவளுள் அவர் மீது இருந்த மரியாதை போகவில்லை.

ஒரு வருசமோ என்னமோ அவர் இருந்த காலத்தில், முன்னும் பின்னும் இருந்திராதபடி, பஜனை நிகழ்ந்தது. முடிவில் அவர் தாம் ஓம்... சாந்தி... சாந்தி... என்று பாடுவார். அனைவரும் கண்களை மூடி இலயித்திருப்பார்கள். அதில் சில வார்த்தைகள் இன்னும் அவள் நினைவில் மின்னுகின்றன. பிருதிவி சாந்தி... ஆப... சாந்தி... அந்தரிக்ஷம் சாந்தி... இந்தப் பாட்டைச் சொல்லுமுன் இதன் பொருளை அவர் எடுத்துச் சொன்னார். "எல்லாம் உலகத்தில் சாந்தியடையணும். நீர் நிலைகள், கடல், மரங்கள், வளங்கள், மூலிகைகள், ஆகாசம், எல்லாமே அமைதியாக இருக்க வேணும். பசு, பட்சி மட்டுமில்லாமல்... இதற்கெல்லாமும் உயிர், துடிப்பு, உணர்வு எல்லாம் இருக்கு. மனிதனுக்கு ஆண்டவன் பகுத்தறிவு கொடுத்திருக்கிறான். நாம் இணக்கமாக வாழ்ந்து, அமைதியாக, யாருக்கும் தீமை கொடுக்காமல் இயற்கையை நேசிக்க வேணும். ஒரு போர் ஏன் வருகிறது?... மனிதன் இந்த விதியை பகுத்தறிவினால் மீறி, இம்சை செய்கிறான்...."

அவர் சொற்கள் இனிய நாதம் போல் விழுகின்றன.

'தம்பி?' உன்னை ஏன் அந்த ஆண்டவன் இப்படி எடுத்துக் கொண்டான்? 'நிர்வாண தேசத்தில் ஒரு கையகலத் துணி கொண்டு மானம் மறைத்தவன் பைத்தியக்காரனா? நீ அப்படித்தான் யமனுக்குப் பிடித்தவனானாயா? அவளாகக் காலையில் அவர் எழுந்திருப்பதற்கு முன் அந்த முன் வாயிலில் சாண நீர் தெளித்துப் பெருக்க முனைந்த போது அவர் வெளியே வந்து "அம்மா, இருங்க; நீங்க என்ன இதெல்லாம் செய்ய?..." என்று துடைப்பத்தைப் பிடுங்கினார்.

“விடுங்கையா, அந்த முன் வாசல் தெளிச்சுப் பெருக்குறேன், அதோடு இதையும்...”

“வாணாம், விடுங்க. நீங்க தாய். நான் இங்க வெட்டியா இருக்கிறேன்.” அன்று அது போராட்டமாக இருந்தது. அவள் வென்றாள் என்றாலும் ஓர் உடன்படிக்கை செய்து கொண்டார்கள்.

“அம்மா, நீங்க முன் வாசல்ல அழகாகக் கோலம் போடுறீங்க. எனக்கு அந்த மாதிரி இழை, சன்ன இரட்டை இழை வர்றதில்ல... இங்க கோலம் போடுங்க...” என்று ஒத்துக் கொண்டார். அவளுக்குப் புள்ளி சுற்றும் சுழிக்கோலங்கள் நிறையத் தெரியும். ராதாம்மா முதலில் இவளிடம் கற்றுக் கொண்டு, அவளுடைய கல்வியறிவு கொண்டு அந்தக் கோலங்களில் பல்வேறு வடிவங்களும் மாதிரிகளும், புள்ளி களின் எண்ணிக்கைகளைக் கோர்த்தும் பிரித்தும் போடுவ தற்கான நுணுக்கங்களைச் சொல்லிக் கொடுத்தாள். குருகுலத்துப் பிரார்த்தனை மண்டபத்தில், அவை அழகுற வடிவம் பெறும். மார்கழி மாதம் வந்தால், புதிய புதிய கோலங்கள் வகுப்பறை முற்றங்களிலேயே விரியும். பஞ்ச மிக்குக் கொஞ்சம் ஆர்வம் உண்டு. அடுத்தவளுக்குச் சுத்தமாக இதில் ஈடுபாடு இல்லை.

ஒருநாள் பஞ்சாபி நண்பர்கள் கோலத்தைப் பார்த்து விட்டு, அவளிடம் வந்தார்கள்... “மாதாஜி, அந்தக் கோலம் போடக் கத்துக் குடுங்க?” என்றாள். “அட என்னம்மா? அந்தத் தம்பி சொன்னாரா?...”

அவள் கணவன் உடனே கொச்சைத் தமிழில் “தேவாவுக்கு ஆகாசத்தில் தான் கோலம் போடத் தெரியும், இங்க தெரியாது, பூமிலன்னேன். இவ நம்பல. பிறகுதான் கேட்டோம், நீங்க ரொம்ப நல்லா வரஞ்சிருக்கிறீங்க...” என்றான். அந்தத் தம்பி வழக்கம்போல் மீசையைக் கடித்துக் கொண்டு சிரித்தார்.

"ஆகாசத்துக் கோலம், அழிவு.... நாசம். இது அழகு. சுபம். அமைதி. அதை இவங்க செய்யிறாங்க!" அது என்ன பேச்சுத் திறமை?

அதனால் குடிக்கிறாரோ என்ற குறுகுறுக்கும் உறுத்தல், நெஞ்சில் தோன்றியிருந்தது. ஒருநாள் கிணற்றடியில் ஒரு நாய்க்குட்டி வந்திருந்தது. ஒரு மாசமான தெருநாய்க்குட்டி. அதன் கழுத்திலே காயம் இருந்தது.

"அடாடா?..." என்று அதைத் தூக்கிக் கொண்டு போய் மருந்து போட்டு, வைத்தியம் செய்தார். அதற்கு நாள் தோறும் பால் ஊற்றுவார்; ரொட்டி, பிஸ்கோத்து என்று கொடுத்தார். பஞ்சாபி சிநேகிதர் குழந்தைகள் வந்து விளை யாடும். பந்து போட்டால் கவ்வி வரும். அதற்கு 'சக்தி' என்று யெர். "சக்திமான்! டேய் சக்தி! பேப்பர்காரன் வரான், வாங்கிட்டுவா. கோலத்தை அழிக்கக்கூடாது!" என்றெல்லாம் பேசுவது காதில் விழும். பஜனையின் போது உள்ளே வந்து ஓரமாக இருக்கும். ஓம் சக்தி, சாந்தி சொல்லும் போது எழுந்து அசையாமல் நிற்கும். அதை அழைத்துக் கொண்டு காலையிலும் மாலையிலும், நடக்கப் போவார். பகலுண வுக்குச் செல்லும் போதும் செல்லும்.

ஒருநாள் அதிகாலையில் எப்போதும் போல் அவர் நடக்கச் சென்றிருக்கிறார். நாயும் கூடச் சென்றிருக்கிறது. அப்போதெல்லாம் கிழக்குப் பக்கம் வீடுகள் எழும்பி இருக்கவில்லை. ஏரிக்கரை வரையிலும் செல்வார் என்று நினைப்பாள். அவர் ஓடி வரும் போது அதுவும் தாவித்தாவி ஓடி வரும். இவளுக்கு இதெல்லாம் ரசிக்கும்படி இருக்கும். இவர்கள் முன்பாக சாணமிட்டுப் பெருக்கிக் கொண்டி ருப்பாள். இப்போதெல்லாம் அவர் குடிசை வாசலுக்கும் அவளே நீர் தெளித்துப் பெருக்கிவிடுகிறாள்.

வீடு திரும்பும் போது கிழக்கில் ஒளி உதயமாயிருக்கும். சிறிது நேரம் இளைப்பாறுவார். நாய்க்குப் பாலும் ரொட்டி யும் கொடுப்பார். அவரும் கிணற்றடியில் நீராடித் துணி தோய்த்து உலர்த்திவிட்டு, வெளியேறி கிளம்புவார்.

நாலைந்து மாதங்களில் நாய் நன்றாக வளர்ந்து, குரல் அச்சுறுத்துமளவுக்குக் குலைக்கத் தொடங்கிவிட்டது.

தெருமுனையில் யாரேனும் பழக்க மில்லாதவர் தென்பட்டாலே அதன் குரல் வித்தியாசமாகக் கேட்கும். “ம்... சக்தி... உறுமாதே!... யார் அங்கே?” என்று அவருடைய குரலும் தொடரும். அவளும் வெளியே வந்து பார்ப்பாள். அன்று அவர் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்தார்.

கடைப்பையனாக இருந்து, படிக்க வேண்டும் என்று ஒதுங்கிய பின் மீண்டும் கடைக்குச் சென்ற சிவலிங்கம் அந்த வளைவில் வந்திருந்தான். அவனுடைய உடல் வளர்த்தி, அவனை அடையாளம் தெரிந்து கொள்ள முடியாமல் மாற்றியிருந்தது.

“சிவலிங்கமாப்பா? அடையாளமே தெரியல? எங்கே இந்தப் பக்கம்?”

“எங்க முதலாளி இவங்களப்பாக்க அனுப்பிச்சாங்க...”

நாய்விடாமல் குலைத்தது. “குலைக்காதே சக்தி. நம்ம பைய தெரிஞ்சவதா” என்று சொல்லிவிட்டு, “இன்னும் அதே கடையில் தானிருக்கிறியா?” என்றாள்.

“இல்லீங்க. இது வேற கடையிங்க...” என்றான். அதற்குள் அவர் வந்துவிட்டார். அங்கு நின்று கேட்பது நாகரிகம் இல்லை என்றுணர்ந்தவளாக வீட்டுப் பக்கம் வந்து விட்டாள்.

அன்று அவள் ஒயர்பை போட, அளவெடுத்துக் கத்திரிக்கும் போது ரங்கன் வந்தான். “புரிஞ்சிட்டிங்கல்ல? அந்தப் பயல், ஒயின் ஷாப்லதான் வேலை செய்யிறான். இவுரு மிலிட்டரி கான்டீன்லேந்து வாங்கித் தாராரு, சல்லிசு வெலக்கி...”

உண்மையில் அவளுக்குக் குத்துப்பட்ட வேதனை உண்டாயிற்று. அப்படியும் இருக்குமோ? இந்த வேதனை, அவருடைய நடத்தையில் ஒரு குத்து உறுதியானதால் ஏற்பட்டதா? அல்லது, கவடறியாத பிள்ளை, படித்து ஒழுக்கப் பாதையில் முன்னேற முடியாதபடி ‘ஒயின்’ கடைக்கு வந்து,

கள்ள வாணிபம் பழகுவதால் ஏற்பட்டதா என்று வரைய றுக்க முடியவில்லை. அவர் வழக்கம் போல் பஜனைக்கு வந்தார்; எல்லோரும் வந்தார்கள்; பாடினார்கள்; பழகி னார்கள். ஆனாலும் கருநீலம் படிந்தாற்போல்தான் இருந்தது.

இதனால் அவள் வாசல் தெளித்துக் கோலம் போட்டு விட்ட பிறகு அதிகமாக அந்தப் பக்கம் கவனிப்பதில் ஆர்வ மும் சந்தோசமும் கொள்ளவில்லை. எப்போதேனும் தட்டுப் பட்டால், உதிர்க்கும் இரண்டொரு செற்களைத் தவிரப் பேசுவதில்லை.

வைகாசிக்கடைசியில், கோடையின் வறட்சி புழுக்க மாக இரவுகளில் தூக்கம் பிடிக்காமல் வதைத்த ஒரு நாளில், விடியற்காலையில் அவள் அயர்ந்து வெளித்திண்ணையில் உறங்கியிருந்தாள். 'ஊ' என்று நாயின் அழுகை அவள் புலன் களை உசுப்பி எழுப்பியது. கண்களைத் திறந்து பார்க்கையில் காலை புலர்ந்தது தெரிந்தது. அவசரமாகச் சாவி எடுத்து, வாயில் கம்பிக் கதவைப் பூட்டைத் திறந்து கொண்டு போனால், நாய்தான் அழுகிறது என்று புரிந்தது.

"டேய், சக்தி ஏண்டா? ஏனழுற?..." மூங்கில் பிளாச்சுக் கதவைக் கொக்கியை அகற்றித் திறந்து கொண்டு அவள் சென்றபோது, அது அவளுக்கு முன் சென்று வீட்டுக்குள் நுழைந்தது. உயரக்கதவுதான் என்றாலும், திறந்தே இருந்தது; சாய்வு நாற்காலியில் அவர் படுத்திருந்தார். விளக்கு, மேசை விளக்கு எரிந்தது. அதுவரையிலும் அவள் உள்ளே சென்று பார்த்ததில்லை. வெள்ளையடித்த சுவரில் ஒரு மாசுமரு வில்லை. மடக்கக்கூடிய கட்டிலில், படுக்கைவிரிப்பு, தலை யணை கசங்கவில்லை. மடக்கு மேசையில், புத்தகங்கள் நலைந்து ஒழுங்காக மடக்குப்பலகையில் வைக்கப்பட்டி ருந்தன. துணி வைத்துக் கொள்ளும் அலமாரியும் மூடியில் லாததுதான். அதன்மேல் சிறு கைப் பெட்டி; அவர் குடை அவர் தாளம் வாசிக்கும் பானை கவிழ்த்தியிருக்கிறது... பழைய பேப்பர் அடுக்கு... ரேடியோ...

"ஐயா... ஐயா?..."

அவள் குரலில் அழுகை தழுதழுத்தது... நாய் சுற்றிச் சுற்றி வந்து குலைத்தது. அவள் சேலையைப் பற்றி இழுத்தது. "ஐயா, தம்பி...?"

தோளைப்பற்றி உலுக்கினாள். எப்போதும் போன்ற ஓர் அரைக்கை பனியன்; வேட்டி. தூங்குவதுபோல் இருந்தார்.

அவள் அலறிக் கொண்டே வந்தாள். அப்போதுதான் ரங்கன் வந்து கொண்டிருந்தான்.

"ரங்கா, ரங்கா... என்ன ஆச்சுன்னு தெரிலயப்பா, அவுரு அந்தத் தம்பி..."

அவன் சலனமில்லாமல் உள்ளே வந்து பார்த்து விட்டுப் போனான். இடி இறங்கின மாதிரி இருந்தது.

பத்து மணிக்குள் எல்லோரும் கூடிவிட்டார்கள். பராங்குசம் காரைப் போட்டுக் கொண்டு வந்தான். நிக்கொலசு, சாயபு, ஜானகியம்மா, கடைக்கார நாடார், இன்னும் யார் யாரோ, பெருங்கூட்டம் கூடிவிட்டது. யார்யாரோ ராணுவத்தினர் கூட வந்திருந்தனர்.

துரும்பாக அவள் அலைபாய்ந்தாள்.

மாலைக்குள் எல்லாம் அடங்கிப் போயிற்று. பஞ்சாபி நண்பர்கள், நாயை அழைத்துச் சென்றனர். அவருடைய கட்டில், அலமாரி, புத்தகங்கள் எல்லாமே கொண்டு போனார்கள். சடங்கு என்று புரோகிதர் யாருமே வரவில்லை. வண்டி வந்து உடலை மயானத்துக்கு எடுத்துச் சென்றது. நிக்கொலசுதான் கொள்ளி வைத்தாகச் சொன்னார். அடுத்த நாள் பெரிய பிரார்த்தனை கூட்டம் எப்போதும் போல் அவர்கள் வீட்டுக் கூடத்தில் நடந்தது. அப்போது, அவருக்குச் சாப்பாடு போட்டுக் கொண்டிருந்த அலமேலும்மா வந்து கதறி அழுதாள். ஒரு வண்டியில், பொங்கல், வடை, சுண்டல் எல்லாம் வந்து இறங்கியது. வீடு காலிபண்ணுமுன், ஒரு பக்கம் பழைய பேப்பர் கட்டுடன், இரண்டு சிறிய பிராந்தி பாட்டில்களோ எதுவோ

இருந்ததாம். ரங்கன் வெந்த புண்ணில் வேல் செருகும் நியாயத்தைச் சொன்னான்.

"என்னமோ, இல்ல இல்லன்னீங்களே? குடி.... அதான் மாரடச்சி உசிர் போயிடிச்சி, மக்க மனிசங்க யாரும் வரவில்ல..."

அவனை எரித்து விடுபவள் போல் பார்த்தாள். "இப்ப என்னத்துக்கு இந்த நியாயம்? அவுரு எப்படிப் போனா என்ன? போயிட்டாரு..." என்றாள்.

அன்றைய பஜனையில், அவரைப் பற்றி பஞ்சாபிக் காரர், நிக்கொலசு, சாயபு எல்லோருமே பேசினார்கள்.

"சுதந்தர நாட்டின் உண்மையான தேசியவாதி. பல வகையான ஆற்றல், திறமை, வீரம், துணிவு எல்லாம் கூடிய அற்புத மனிதர். உயிர்களைக் கொல்லும் ஒரு சேவையில்—தாய்நாட்டுக்குச் சேவையில் இருந்து, வீரம் காட்டி வென்றும் பணியைத் தொடராமல், அஹிம்சை வழி வந்தவர். உலகம் முழுவதும், போர்ப்படைகள் இல்லாமல் ஒருவருக்கொருவர் என்று வாழணும்னு சொல்வார்'' .....என்றெல்லாம் நிக்கொலஸ் பேசினார். அவரும் இராணுவத்தில் இருந்தவர். அவர் பையன் டாக்டராகத் தொழில் செய்பவன். அவன் கூடப் பேசினான். "அங்கிள், நீங்கள் அதிகமாக ஃபிஸிகல் ஸ்ட்ரெயின் பண்ணிக்கக் கூடாதுன்னு சொன்னேன். அவர் எதையும் பொருட்படுத்தியதில்லை. "இதபாரு ஜார்ஜ், நான் நினைக்காமலே எனக்கு மரணம் ஒரு இனிமையான முடிவாக இருக்கணும், கர்நாடக சங்கீதத்தில்— மும்மணி கள்னு சொல்லுவாங்க. அதில் ஒருத்தர் முத்துசுவாமி தீட்சிதர். அவர் எட்டையபுரத்தில்தான் அமரரானதாகச் சொல்றாங்க. பாரதியின் ஜன்ம பூமி. அவர், தமக்கு முடிவு வரும்னு முன்னமேயே அறிந்திருந்தார்னு சொல்றாங்க. சீடர் களெல்லாம் இருக்க, பாடிட்டே இருந்தாராம். "மீனாட்சி மேமுதம்னு, பாட்டு, "மீனலோசனி, பாசமோசனி..."ன்னு குரலெழுப்பிப் பாடறப்ப, சமாதியாயிட்டாராம். 'பாசம்' விடுபட்டு, அம்பிகையின் மடிக்குப் போயிட்டார்னு சொன்

னாரு ஒருநாள். அவர் கண்களில் அப்படியே தண்ணி வழிஞ்சிச்சி...” என்று கூறும்போதே கண்ணீர் தழுதழுக்க நின்றான்.

“அங்கிள் வந்தா, அவர் பேசறதக் கேட்டுக்கிட்டே இருக்கணும்னு தோணும். “டெய்ஸி, இப்ப ஒரு ஆர்க்கெஸ்ட்ரான்னா எத்தினி வாத்தியம் இருக்கு? காத்து வாத்தியம், தோல்வாத்தியம் கம்பி வாத்தியம்னு எத்தினி இருக்கு. அதெல்லாமும் சேர்ந்துதானே ‘ஹார்மனி’ உண்டாகுது? அதுபோல உலகத்து மனிசங்களெல்லாம் ஒண்ணா, குத்து வெட்டு, பகை இல்லாம, ‘ஹார்மனி’ங்கறது வராதா என்ன? இப்ப மேல் நாட்டு சங்கீதம், இந்துஸ்தானி, கர்நாடகம்னு எல்லாத்தையும் சேத்து... ஒரு தனி இசை வரல?”ம்பாரு. அத்தை எதானும் பேசி, நான் வாட்டமா இருந்தா உடனே கண்டு பிடிச்சிடுவாரு. ரெண்டு பேரையும் சேத்துவச்சி... ‘ஹார்மனி’ம்பாரு...” என்று நிக்கொலசின் மருமகள் அழுதாள்.

‘ஹார்மனி’ என்றால் என்னவென்று பொருள் தெரியவில்லை அவளுக்கு. ஆனால் மனசுக்குப் புரிந்தது.

பின்னால் வாழைகள் செழித்திருந்தன. இலை அறுத்துக் கொண்டு அலமேலு செல்கையில், இவளுக்கு அந்த சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளக் குடைந்தது. அவளே புரிந்து கொண்டாற்போல், “சாயபு சாரும், சந்தானம் சாரும் வந்து, இந்த ஏற்பாட்டைச் செய்யச் சொன்னாங்க. பணம் குடுத்தாங்க. எனக்குக் கூடப் பிறந்து, ஒட்டுறவெல்லாம் முள்ளுகதா. ஆனா... இப்படி ஒரு மனுசர். ஞானி. அதிர்ந்து பேசாமல் ஒரு சிரிப்பு. மீசை வச்சிண்ட மிலிடரிக்காரன், குடிப்பனோ என்னமோன்னு, ரொம்ப பயப்பட்டேன். உருத்திராட்சம் சந்தனக்கீத்தெல்லாம் போட்டுண்டு, ஒரு கடன் வரும். மருந்துக் கடைக்காரன். பார்வையே நன்னாருக்காது. கிட்டப் போனாலே அந்த வாடை வரும். அவனை வராதேன்னு சொல்ல முடியாது. ஏன்னா, அந்தக் கட்டிடத்துச் சொந்தக்காரன். குடும்பம் செங்கல்பட்டாம். ஞாயித்துக்கிழமை

கடைய மூடிட்டுப் போவான். "ஏமாமி, சாம்பாரா இது? பாலாத்துத் தண்ணின்னாலும் தாகம் அடங்கும்... கத்திரிக்காப் பொறியல் கசக்குது... நீ எப்ப ருசியா எல்லாம் போடப்போற?"ம்பான், கடங்காரன்.

"அப்ப இவர்தான் ஒரு சிரிப்புச் சிரிச்சிட்டே, 'சுவாமி, நீங்க சாப்பாடு நல்லாயில்லன்னா, இங்கேயே ஏன் வரீங்க? பேசாம, அட்சயா ஓட்டல்ல சாப்பாட்ட வச்சிக்கிறது?..' ம்பாரு. அந்தாள் சிரிச்சிட்டே, இல்லே... என்னன்னாலும் ஐயர் மாமி சமையல் பண்ணிப்போடுதுன்னா... அது ஒரு... இது தானே?"ன்னாரு.

"அதென்ன சுவாமி, இது?..."ன்னு எந்திரிச்சி அவன் உருத்திராட்சத்தைப் புடிச்சி இழுத்தாரு. வெலவெலத்துப் போயிட்டான். அவர் வந்து சாப்பிட உக்காந்தார்னா ஒரு பய பேசமாட்டான்...

"ராத்திரில சாப்பாட்டுக்கு உக்காரமாட்டார். வந்து ரண்டு இட்டிலியோ, ஒரு சப்பாத்தியோ வாங்கிட்டுப் போவார். அங்கே எதிரே படுபாவிங்க ஓயின் கடையத் திறந்து வச்சிருப்பாங்க. கூட்டமா இருக்கும். ராத்திரி சாப்பாடுன்னு வர பாவி ஒருத்தன் பாட்டிலெடுத்திட்டே வந்தான். அந்தக் கடைய அங்கேந்து எடுக்கணும்னு முனிசி பாலிட்டிக்குப் போயி எழுதிக்குடுத்தாரு.... அவருக்கு மிளகு சீரகம் பூண்டு தட்டிப் போட்டு ரசம்னா புடிக்கும்... டிஃப்ப னோடு ரசமும் பாட்டில்ல ஊத்திக்குடுப்பேன். பிளாஸ் டிக் பை புடிக்காது. சின்ன சம்புடம்— அதை ஒரு துணிப் பையில் போட்டுட்டு போவார். நாய்க்கும் ரெண்டு இட்டிலி இருக்கும்..."

"அப்ப... பாட்டில்ல ரசம்தா குடுப்பீங்களாம்மா?"

"ஆமாம்...?... அவர் வரதுக்கு மின்ன சில தடியங்க பாட் டிலப் பதுக்கிட்டே வருவாங்க—ஒண்ணுக்கும் விளங்காத புருசனையும், ஸ்கூலில் படிக்கும் குழந்தைகளையும் காப் பாத்த நான் பிழைக்கணுமேம்மா? பாட்டில் கடக்கும் மூலை யில்... அப்படி ஒண்ணைக் கழுவி, சின்னதா பட்டையா

இருக்குன்னு ரசம் ஊத்திக் குடுத்தப்ப, சிரிச்சாரு, பிறகு போயிட்டாரு. ராத்திரி நான் சூடா டிபன் போடும் வரை இருப்பார். எவனாலும் குடிச்சிட்டு வரான்னு தெரிஞ்சா சட்டையப் புடிச்சி இழுத்துத் தள்ளிடுவார். எனக்கு அது பெரிய பலமா இருந்தது. இப்படிப் போயிட்டாரே?..."

அந்த சந்தேகக் கரும்புள்ளிகளை அவளுடைய ஒவ்வொரு சொல்லும் அறைந்து கலைத்தன.

## 7

அவர் போனபின் அந்தக் குடிலும், தோட்டமும் பராமரிப்பார் இல்லாமல் பாழாயின. கரையான் புற்றும் காடாய் மண்டிய செடிகளுமாக ஆயின. சில நாட்களில் அவள், அதெல்லம் சுத்தம் செய்து அவர் நினைவாக விளக் கேற்றி வைக்கலாம் என்று நினைப்பாள். வெள்ளிக்கிழமை காந்திபஜனை அவருக்குப் பின் களை கட்டவேயில்லை. பிறகு ஒருநாள் பராங்குசமே வந்தான். அவன் வந்தால் பேச்சு ரங்கனுடன்தான். அவளை முறைத்துப் பார்த்துவிட்டு மாடிக்குப் போவான். "தாயி!" என்று அதட்டலாகக் கூப்பிடு வான். 'தாயம்மா' கூடக் கிடையாது. "மாடிப்படியெல்லாம் சுத்தமாப் பெருக்கித் துடைக்கிறதில்ல?... வா, மாடியெல்லாம் பெருக்கித் துடை" என்பான். அவள் தெய்வமாகக் கருதிய அந்த ஆண்டைகூட அவளை அப்படி ஏவியதில்லை. அவள் முத்துதிர்க்காமல், அல்மாரி, புத்தகங்கள், பத்திரிகைக்கட்டு கள் புகைப்படங்கள் எல்லாம் வைத்திருந்த அடுக்குத் தட்டு கள், எல்லாவற்றையும் தட்டிப் பெருக்குவாள். இரண்டு மணி நேரமேனும் ஆகும். அதுவரையிலும் அவன் அலமாரியைத் திறந்து காகிதங்கள், ஃபைல்கள் என்று பார்ப்பான். அவளுக்கு, ஏதோ ஓர் அரிய புதையலை அவன் களவாடிச் செல்வது போல் தோன்றும்.

அந்தத் தடவை அவனை வெகுநாட்களுக்குப் பிறகு பார்த்ததால் போலும், ஆள் மாறி இருந்தான். மினுமினுவென்று

சதைபிடிக்க, வெள்ளையும் கருப்புமாகத் தாடியும், தங்க பிரேம் கண்ணாடியுமாகக் காட்சி அளித்தான். முடி மட்டும் கரேலென்று பிடரியில் தொங்கியது. ஒரு பழுப்பு நிற கதர் ஜிப்பா போட்டிருந்தான். அதன்மேல் ஒரு உருத்திராட்ச மாலை தெரிந்தது. ஆட்களைக் கூட்டி வந்து பக்கத்துக்குடில், தோட்டமெல்லாம் சுத்தம் செய்யப் பணித்தான். தலை மறையச் சற்றுச்சுவர் எழும்பியது. உள்ளே ஒரு கொட்டகை போட்டார்கள். பெரிய சாலையில், 'ஹார்ட்வேர்' கடை வைத்திருந்தவர்களுக்கு அது கிடங்கறையாக இருந்தது. ஏதோ தகராறு வந்து, அதுவும் காலியாகிவிட்டது. வெளிப் பூட்டுத் துருப்பிடித்து, கதவும் துருப்பிடிக்க, கொடிகளும் புல்புதர்களும் மண்ட, சுவரேறிக் குதித்து சீட்டாடுபவர் களுக்கும், குடிப்பவர்களுக்கும், தப்புக்காரியங்கள் செய்பவர் களுக்கும் இடம் கொடுத்துக் கொண்டிருக்கிறது. இந்த வீட்டு எல்லையில் இருக்கும் மாமரம், அந்த உறவை விடவில்லை. கிளைகளைச் சுவருக்கு மேல் பரப்பி, உரிமை கொண்டாடு கிறது. ரங்கன் மரத்தின் மேலேறி, அந்தப் பக்கம் இறங்கு கிறான்.

"நாரத்தைமரம் ஒண்ணு பெரி...சா வளந்து காச்சுத் தொங்குது?" என்று பறித்து வருகிறான். அந்தப் பக்கம் ஓர் ஏணியே சாத்தி இருக்கிறான். இவளுக்கு எந்த உரிமையும் இல்லை. ரங்கனை அவள் எதுவுமே கேட்பதில்லை. அவன் எஜமான நிலையில் இருந்து அவளை அதிகாரம் செய்வ தில்லை. ஆனால், அந்த வீட்டில் அவள் வாழ்கிறாள். ஒயர்பை பின்னுகிறாள். அவளுக்கென்று ஒரு தொகை வங்கியில் அய்யா கட்டியிருக்கிறார். அதன் வட்டி மாசத்தில் ஆயிரம் ரூபாய் போல் வரும். அவள் தனக்கென்று எந்தச் செலவும் செய்ய வேண்டி இருக்கவில்லை. மெயின் ரோடில் நெருக்கடியான சந்தைப் பகுதியில் மாடியில் வங்கி இருக்கிறது. முன்பு அவளுக்குப் பரிசயமாக இருந்த ஆட்கள் யாருமே இப்போது இல்லை. மாசம் பிறந்தால் பணம் செலவுக்கு எடுத்துக் கொண்டு, கேழ்வரகு, அரிசி, பருப்பு,

காய் என்று வாங்கி வந்து விடுகிறாள். அய்யா, அம்மா எல்லோரும் இருந்த காலத்தில், கிணற்றில் இருந்து நீர் இறைக்கும் பம்புசெட்— குழாய் எல்லாம் இருந்தன. மாடியில் உள்ள குளியலறைக்கும் நீர் போகும். முதன் முதலாக இந்த வீட்டில்தான் அந்தக் காலத்திலேயே பின்புறம் 'செப்டிக் டாங்க்' கட்டி, இது போன்ற கழிவறை கட்டினார்கள். அவளுக்குத் தெரிந்து சுமார், பத்து வருசங்கள் போல் அந்த மலக்குழி நிரம்பியதாகத் தெரியவில்லை. அதுவும் வீட்டை விட்டு அப்பால் பின் பக்கம் கொட்டில் தாண்டி, இருந்தது. அதிலிருந்து நீர் வெளியேறும் குழாயும், அது மண்ணுக் கடியில் வடியும் புதை குழியும் அமைத்திருந்தார்கள்.

ராதாம்மா இறந்து போவதற்கு முன், வீட்டில் வந்து தங்கியிருந்த கோவாலு, "தாயம்மா, செப்டிக்டாங்க் நிரம்பி மேலே ஈரம் வருது. எப்ப எடுத்தாங்க?" என்று கேட்டான். அவன் மதுரை காந்தி கிராமத்தில் இருந்து வந்திருந்தான்.

"எனக்குத் தெரியலியேய்யா? அப்பிடிக்கூட ஆகுமா?"

"ஆமா, இங்கே ஏது பாதாள சாக்கடை? அது பட்டணத்துலதானிருக்கு..."

அவளும் பார்த்தாள். கோவாலு மண்ணைத் தள்ளி, சிமிட்டிப் பலகை மூடலைக் கண்டு பிடித்தான். நிரம்பித் துளும்பி அழுக்குக் கசிந்தது...

"அய்யே! இது ரொம்ப மோசமில்ல? அன்னன்னைக்கு எடுத்திட்டுப் போறது கொடுமையின்னா, அத்தவிட இது பெரிய கொடுமையா இருக்குமே? இந்தக் குழிய, பத்துவருசக் கசடுகளை எப்படி எடுப்பாங்க?..."

அவள் கேட்கவில்லை. தோட்டம் துரவு என்று போவார்கள். மலம் அள்ளும் கொடுமையே, டவுன் நாகரிக வசதிகளை அநுபவிப்பவர் பெருகிய பிறகுதான் வந்திருக்கிறது. கோவாலுவே, அப்போதைய பஞ்சாயத்தில் சொல்லி, சாக்கடைக் கழிவு நீர் வண்டியும் ஆட்களுமாகக் கொண்டு வந்தான். இரண்டு ஆட்களும் நன்றாகக் குடித்துவிட்டு வந்தி

நந்தார்கள். ஒரு அரை டின் கிரஸினை அந்தக் குழியில் ஊற்றிக் கலக்கி, கம்பி வேலிக்கப்பால் வண்டியை நிறுத்தி ஒருவன் வாளிவாளியாக எடுத்துக் கொடுக்க, மற்றவன் வண்டியிலுள்ள பீப்பாயில் ஊற்றினான்.

"தாயம்மா, கதவசாத்திக்குங்க, நீங்க வராதீங்க?" என்று கோவாலு கத்தினாலும் அவளால் உள்ளே இருக்க முடிய வில்லை. அப்போதெல்லாம் இந்தப் பக்கம் பொட்டலாக இருந்ததால் எங்கோ பள்ளத்தில் வண்டி வண்டியாகக் கொட்டிவிட்டு வந்தார்கள். சாயுங்காலம் ஐந்து மணியுடன் துப்புரவு செய்து, பழைய சாக்குக் கந்தல்களால் துடைத்து, ஏழெட்டடி ஆழமுள்ள குழிக்குள் நின்றவனைப் பார்த்து தாயம்மாளுக்கு அன்று இரவெல்லாம் உறக்கம் வரவில்லை. அங்கே வந்த பிறகு, குப்பை கூட்டுபவர்களையும், வாளி களில் மலம் சுமந்து வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்லும் தொழிலாளரையும் பார்த்திருக்கிறாள். நானும் இந்த சாதி தான் என்ற உணர்வு முட்டும்.

நாகரிகம் பெருகப் பெருக, டவுன்கூட்டம் நெருங்க நெருங்க, வெளிமலக்குழிகளுடன், சமுதாயத்தின் உள் மலக் குழிகளும் பெருகிவிட்டன.

கழிவறையைத் தேய்த்துக் கழுவுகையில் அங்கு கிடந்த பீடித்துண்டுகள் அவளைப் பின்னோக்கி இழுத்துச் செல்கின்றன. இதற்கு முன் இங்கு புகை பிடிப்பவர்களே வந்ததில்லை என்று சொல்ல முடியாது. வெற்றிலை பாக்கு புகையிலை போடுபவர்கள், புகை குடிப்பவர்கள் எல்லாருமே வந்திருக்கிறார்கள். ஆனால், அந்தக் கூடம் அவளுக்குத் தெரிந்து புனிதமானதாகவே இருந்திருக்கிறது. அந்த நிழலே அவளுக்கு மற்றவர்களிடம் ஒரு மரியாதையைப் பெற்றுத் தந்திருக்கிறது.

சொர்ணம் குரல் கொடுத்துக் கொண்டே வருகிறாள்.

"என்னம்மா, வூடு திறந்து ஜிலோன்னிருக்கு, நீங்க இங்க இருக்கீங்க?"

''வாம்மா, என்ன விசயம்? குடமும் கையுமா வந்திருக்க?''

"ஒரு குடம் தண்ணி எடுத்திட்டுப் போறம்மா? பாவம், நா, வேல செய்யிற வூட்டுல கெணறு வத்திப் போயிடிச்சி. அய்யா வேற துபாயிலிருந்து வராங்க. இந்த வருசம் புதுசாக் கட்டின வூடெல்லாம் கெணறு வத்தி தண்ணியில்லாம போச்சு. ஒரு மழ பெய்யல. தூரு வாருனா தண்ணி ஊறும்னு, சுகுணா ஸ்டோர்ஸ் காரங்க வூட்டுல வாரு ணாங்க. உள்ளதும் போயிட்டது. போர் போடுறாங்க. லாரி தண்ணி தா ஒரு வாரமா வாங்குறாங்க. குடிக்க ஒதவாது..."

"யாரு, அன்னக்கு, புள்ளய ஸ்கூல்லேந்து அழச்சிட்டுப் போனியே அந்த வூடா?"

''ஆமாம்மா. பங்களாவூட்டுக் கெணறு, எப்பவும் வத்தாது. தோட்டக்கெணறு. அத்த இடிச்சி ஃபிளாட் கட்டு றாங்க. அந்தப் பக்கம் காஞ்சிபுரம் ரோடு வருதாம். இடிச்ச வங்க, முதல்ல கேணில கண்டதையும் போட்டுத் தூத் துட்டாங்க... கொடும..."

"சரி, சரி, நீ தண்ணி எடுத்திட்டுப் போ?"

ராட்டினம் கிரீச் கிரீச் சென்று சத்தமிடுகிறது.

''சொர்ணம், எண்ணெய்த் துணி கொண்டாரேன். கொஞ்சம் போடு. கேணிச் சுவரில ஏறிப் போட பயமாயி ருக்கு. நின்ன வாக்குல எட்டல....''

உள்ளே சென்று, விளக்கெண்ணெய்க்குப்பியை எடுத்து ஒரு கிழிந்த துணியில் ஊற்றிக் கொண்டு வருகிறாள். சொர்ணம் தண்ணீரைக் குடத்தில் ஊற்றி, அதில் ஒரு மூடியைப் போட்டு அப்பால் வைத்துவிட்டு ஏறி நின்று எண்ணெய் போடுகிறாள்.

"பத்திரம்மா, பத்திரம்..."

கீழே இறங்கி, சோப்புத்துண்டைத் தடவிக் கையைக் கழுவிக் கொள்கிறாள்.

"அவுரு... இல்லையா?..."

"யாரு?..."

"அதா, காரியக்காரரு... நார்த்தங்கா வோணுமான்னு கேட்டாரு. அம்மா என்ன வெலன்னு கேட்டுட்டுவரச் சொன்னாங்க. பத்து ரூபாக்கு ஆறுகான்னு மார்க்கெட்டில வச்சிருக்கா. இது புதிசா இருக்கும், வாங்கியான்னு அம்மா சொன்னாங்க. அதா கேட்டே... இங்கே எங்க நார்த்த மரம் இருக்கு?"

"அவுரு வருவாரு, அவருகிட்டயே கேளு" என்று சொல்லி அனுப்புகிறாள். சற்றைக்கெல்லாம் ரங்கன் வருகிறான்.

"ஏம்மா, அந்தப் பொம்புள இங்கேருந்தா தண்ணி எடுத்திட்டுப் போவுது?"

"ஆமா, புதுசா வந்திருக்கிற காலனில ஒரு வீட்ல வேலை செய்யிறா. குடிக்கத் தண்ணி இல்ல, ஒரு குடம் எடுத்திட்டுப் போறேன்னா..."

"அப்படீன்னா, விட்டுடறதா?..." விழிகள் உருள அவன் குரலின் ஏற்றம் ஒரு எசமானனுக்குரிய தோரணை காட்டுகிறது.

"ஏம்ப்பா, இந்த வீட்டு நிழல்ல ஒதுங்கி, கேணி நிறைய ஆண்டவனருளால நல்ல தண்ணி இருக்கறப்ப தாகத்துக்குக் குடிக்கப் பிச்சை கேட்டாப்பல வரவங்ககிட்ட இல்லேன்னு சொல்லச் சொல்லுறியா? அது என்னால முடியாது."

"அந்தப் பொம்புள அதைப் பாக்கெட் போட்டு விக்குது, பெரிய பஸ் ஸ்டாப்புல. ஒரு குடத்துக்கு இருநூறு முந்நூறு சம்பாதிக்கும்?"

இவளுக்குப் புரிகிறது. திரும்பிப் பார்த்துக் கொண்டு "நீயும் வாணா, எடுத்து வித்துக்க. நான் தடையா இருக்கல."

அவன் எதுவும் பேசவில்லை.

# 8

இவள் மனம் அமைதியிழக்கிறது. இந்த வீட்டைக் கட்டிக் காத்துக் கொண்டு இவள் எதற்காக இருக்க வேண்டும்?... ஆனால் எங்கே போவது? நிழலிலேயே இருந்து பழகிவிட்டால் என்ன? சொந்த நிழல் என்றோ, சொந்த மில்லாத நிழல் என்றோ ஒன்று கிடையாது. எல்லாம் மனசைப் பொறுத்தது. அவள் 'மகன்' அன்று வந்து கெஞ்சினான். போகப் பிடிக்கவில்லை. ஏன்? ஏன்?

வளர்த்த கடா மார்பில் பாய்ந்தது.

காந்தி துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்து போன போதுகூட அந்த வீட்டில் அப்படி ஒரு துயரம் வந்து கவ்வ வில்லை. ஊர் உலகமே அழுதது. ரகுபதிராகவ ராஜாராம், ஈசுவர அல்லா தேரே நாம் என்று, ஆங்காங்கு பிரார்த் தனைக் கூட்டம் கூடினார்கள். உண்ணாவிரதம் இருந்து துக்கம் காத்தார்கள். ஆனால் துக்கம் என்பது, அப்படிப் பகிர்ந்து கொள்ளக் கூடியதாக இல்லாமல், குறிபார்த்துச் சேதப்படுத்தும் அம்பாக, இம்சையாக வந்து விடிந்தது.

சுதந்தரம் வந்த பிறகு, எஸ்.கே.ஆர். தேர்தலில் நிற்க வேண்டும் என்று, கட்சித் தலைவர்கள் பலரும் அவரைக் குருகுலம் வீட்டில் வந்து பார்த்தார்கள்; வற்புறுத்தினார்கள். அவருக்குத் தொகுதி ஒதுக்கினார்கள்.

"பதவி இல்லாத மக்கள் சேவையே இதுவரையிலும் நான் செய்தது. இனியும் எனக்குப் பதவி வேண்டாம்..." என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார்கள். அவள் புருசனுக் குத்தான் மிகுந்த ஏமாற்றம்.

"என்ன ஆளு இவுரு? நேரு ஐயா தூதனுப்பிக்கூட வானாம்ன்னு சொல்றாரு?" என்று முண முனுப்பான்." "பொழுதுக்கும் இந்தத் தோட்ட வேலை எடுபிடி வேலைன்னு பவுசில்லாம கிடக்கிறதுக்கு, நம்ம ஊரு நாட்டுல போயி

பிழைச்சிக்கலாம்..." என்பான். அப்படியும் போகவில்லை. அந்த வளைவில்தான், மூன்று குழந்தைகளையும் அவளையும் விட்டுவிட்டுப் போய்ச் சேர்ந்தான். குடித்துவிட்டு இசைகேடாக விழுந்து மண்டையில் அடிபட்டுப் போனான்.

நேரு இறந்து போவதற்கு முன்புகூட அவரை எல்லோரும் வந்து கேட்டார்கள். சீனாவோடு போர் வந்தது. ராதாம்மாகூட வளையல்களைக் கழற்றித் தங்கம் கொடுத்தார்கள். தங்கத்துக்கு மாற்றுக் குறைந்தது. காங்கிரசுக்காரன், தமிழ்ப் பெண்ணின் 'தாலியை'ப் பற்றி இழுப்பது போல் நோட்டீஸ் அச்சடித்து ஒட்டினார்கள்...

ஆனால் இது, நடந்த நாள் குடியரசு தினம். வித்யாலயத்துச் சுவர்களில் இந்தி ஒலிக, தமிழ் வால்க என்று எழுதியிருந்ததைப் பார்த்து விட்டு உள்ளே வந்து சுப்பய்யா, பராங்குசம் எல்லோரிடமும் வந்து சொன்னார். 'இதைக்கூட ஒழுங்காக எழுதத் தெரியவில்லை!' என்று சுப்பய்யா, மையை எடுத்துக் கொண்டு போய்த் திருத்தினான். 'ஒலிக'ன்னா, நேர் மாறாகப் பொருள்..." என்று சிரித்தது அவளுக்கு நினைவு இருக்கிறது.

கொடியேற்றிவிட்டு, வேறு பல பள்ளிக்கூடங்களில் அவர் கொடியேற்றிக் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் பங்கு கொள்ளப் போனார். அப்போது ராதாம்மா அங்கு இருந்தாள். குழந்தை 'விக்ரம்' மூணுநாலு வயசிருக்கும். பள்ளிக்கூட வளாகத்தில், பாட்டு, பேச்சு, நாடகம் என்று தொடங்கி நடந்து கொண்டிருந்தது.

அப்போதுதான் போலீசு வண்டியும் கூட்டமுமாக உள்ளே நுழைந்தது. அம்மாவும் சுசிலா டீச்சரும் திடுக்கிட்டு ஓடினார்கள். இந்தி கலவரம் அப்போதெல்லாம் அதிகமாகவே இருந்தது. இந்தி பிரசார சபாவில் நுழைந்து, புத்தகங்களை நாசம் செய்தது.

தீ வைத்து, உள்ளிருந்தவர் சட்டையைக் கிழித்தார்கள் என்றெல்லாம் செய்தி கேள்விப்பட்டார்கள். ஆனால் அது

இந்த அய்யாவுக்கே வரும் என்று அவள் நினைத்திருக்க வில்லை.

குருகுலம் வீடு, பள்ளிக் கொட்டகைகள், மரங்கள் ஆகிய சூழலில், தனியாக, பழைய கால மச்சுவீடாகத் தெரியும். முன்புறம் ஒரு பெரிய வேப்பமரம் கிளைகளை விரித்து நிழல் பரப்பும். வாயில் வராந்தாவின் குட்டைச்சுவரில் ராதாம்மா உட்கார்ந்து புத்தகம் படிப்பாள். வராந்தவைக் கடந்த பெரிய கூடத்தில்தான் தேசத்தலைவர்களின் படங்கள் இருந்தன. கீழே அமர்ந்து தான் பேசுவதோ, நூற்பதோ, பிரார்த்தனைக் கூட்டம் நடத்துவதோ செய்வார்கள். அங்கே தான் அவரை வண்டியிலிருந்து இறங்கிக் கூட்டி வந்தார்கள்.

முதன் முதலில் உள்ளிருந்த அவள்தான் விரைந்து வந்தாள்.

"தாயம்மா, பேசினில் தண்ணீர் கொண்டு வா!" என்று சொல்லி அம்மா, அவர் காயங்களைத் துடைக்கப் பஞ்சும் துண்டும் கொண்டு வந்தார். ஒரு சாய்மான் திண்டைக் கொடுத்து உட்கார வைத்தார்கள். கதர்ச் சட்டை தாராகக் கிழிந்து தொங்க, உள்ளே இரத்தக் காயம்... சமையல் செய்து கொண்டிருந்த ருக்குமணி, இவள் மருமகன் பாப்பு, பஞ்சமி புருசன்... அவனை ஏனோ பாப்பு என்று கூப்பிடுவார்கள். கந்தசாமி 'எலக்ட்ரிக்' வேலை தெரிந்தவன்.

எந்த தீபாலங்காரமும் ஒயர் இழுந்து அவன் செய்வான். அவன்தான் கூட்டத்தை விலக்கி, டாக்டர் வர வழி செய்து, மருந்து வாங்கி வந்து, உதவினான். அன்று அவன் குடியரசு நாளை முன்னிட்டு, கூடத்தில் இருந்த படங்களுக்கு ஸீரியல் பல்ப் வேலையில் இருந்தான். ஸ்டூலில் அவன் நின்ற போதுதான் எதிர்பாராதது நடந்திருக்கிறது.

"அய்யா, ஒரு ஈ குஞ்சுக்குக் கூடத் தீம்பு பண்ண மாட்டாரே? அவருக்கு இது எப்படி நடந்தது? இப்ப சுயராச்சிய ஆட்சிதான நடக்குது?...." என்று புலம்பினான்.

"ஸார், கம்ப்ளெயின்ட் புக் பண்ணி, எஃப்.ஐ.ஆர். போட்டுடறோம்" என்று போலீசு அதிகாரியே சொன்னது கேட்டது.

"அப்பா, நீங்கதா இந்த அரசியலும் வோணாம் மண்ணாங்கட்டியும் வாணாம்னு ஒதுங்கியிருக்கிறீங்களே? இப்படி எதுக்கு அங்கிரமம் பண்ணாங்க?" என்று ராதாம்மா ஆற்றாமைப்பட்டாள்.

"நாட்டுக்கு சுதந்தரம்னு உங்ககாலத்தில் கனவு கண்டது நடந்தாச்சு. இங்கேயே கொண்டாடிய குடியரசு தின விழா இல்லாமல் வேறெ இடங்களுக்குப் போக வேணுமா?..."

"பிரிட்டிஷ் ஆட்சியில் கூட உங்களுக்கு இப்படி எதுவும் நேரல. காலில்தான் சாட்டையடி விழுந்தது. சட்டையைக் கிழித்து, கீறி கல்லடி கொடுத்து.... இந்தி படிக்காட்டி போகட்டும். இப்படி ஒரு வன்முறையில் ஈடுபடணுமா?.... இன்னும் கேஸ், கீஸென்று போனால் என்னென்ன நடக்குமோ தெரியலியே?..." என்று அம்மா புலம்பினார்.

"இல்லீங்கம்மா, இந்தக் கும்பல் கொள்ளி எடுத்திட்டு திரிவது, வெறும் ஸ்கூல் பிள்ளைகளின் எதிர்ப்பு இல்ல. திட்டமிட்டு பிள்ளைகள் மனசில் விஷம் விதைச்சு, இந்த சந்தர்ப்பத்தை நெருக்கடியாக்கியிருக்காங்க. நேத்து தெற்கே ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டரை அடித்துப் போட்டு எரிக்க முயற்சி நடந்திருக்கு. அய்யா உயிருக்கே ஆபத்தா முடிஞ்சிருக்கலாம். இத இப்படி சும்மா விடக்கூடாது. கேஸ் புக்பண்ணி..." என்று போலீசுக்காரர் சொன்ன போது, அய்யா அவர் கையைப் பற்றிக் கொண்டார். "கேசும் வாணாம், ஒண்ணும் வாணாம். இந்த நாட்டு அரசியல் இப்படித் தாறுமாறாக் குழம்பும்னு நான் நினைக்கல. எல்லாரும் துடிப்புடைய பள்ளிப் பிள்ளைகள். குமரப் பருவத்து வேகம். அவர்களுடைய எதிர்காலம் கெடக் கூடாது. கொள்ளி எடுத்தவன், கொளுத்தியவன், கொலை செய்ய வன்முறையில இறங்கியவன்னு நம் கண்களிலேயே நாம் திராவகம் ஊத்திக் கொள்ளுற செய்கை— எதிர்வினை

வேணாம். அவர்கள் அமைதி வழியில் செல்லாததற்கு நாமே காரணம்னு உறுதிபடுத்தக் கூடாது. குழந்தை தீயின் பக்கம் உட்கார்ந்து குச்சி கொளுத்துகிறது. அம்மா அதை வாங்கித் திருப்பிச் சூடுபோடுவாளா? விடுங்கள். நாம்தான் இப்ப பாடம் கற்றுக் கொள்ள வேணும். எப்படி இந்த எழுச்சியைச் சமாளிக்கலாம்னு பார்க்கணும்..."

"இது எழுச்சி இல்லை ஐயா. இது ஓர் அரசியல் கட்சி யின் சூழ்ச்சி. பிள்ளைகளைத் துருப்புச் சீட்டாக்குகிறார்கள்."

"இருக்கட்டும். எப்படியும் வன்முறைக்கு வன்முறை தீர்வு அல்ல.."

கூட்டம் கலைந்து போயிற்று. அந்தப் போலீசு அதிகாரி இப்போது ஓய்வு பெற்றிருப்பார். எங்கிருக்கிறாரோ, என்னமோ?

அந்த இரத்தக்கரை படிந்த வேட்டி, கிழிந்த சட்டை எல்லாவற்றையும் அவள்தான் சோப்புப் போட்டுத் துவைத்து உலர்த்தினாள்.

அய்யா அன்று முழுதும் பச்சைத் தண்ணீர் அருந்த வில்லை. "யாரும் என்னை வந்து பார்க்க வேண்டாம் என்று சொல்லம்மா..." அலுவலக அறையில் தொலைபேசியின் பக்கம் சுப்பய்யாதான் உட்கார்ந்திருந்தான்.

எதிரே, காந்தி படம், கஸ்தூரிபா அம்மையின் படம்... பக்கச் சுவர்களில் அப்போதைய தேசத்தலைவர்களின் படங் கள். ஸீரியல் பல்ப் எரிய இணைப்புக் கொடுக்கவில்லை.

கண்களில் நீர்வழிய விம்மினார். அப்படி அவர் துயரத்தை வெளிப்படுத்தி அவர்கள் கண்டதில்லை.

"அப்பா, வெறுமே பட்டினி இருக்கக் கூடாது. கொஞ்சம் கஞ்சி குடியுங்கள்..."

"வேண்டாம்மா...." என்று சைகை காட்டினார்.

"ராதா, நீ வேணா, தம்புரா வச்சிட்டு ஹரிதுமஹரோ பாடு!" என்றார் அம்மா. அவள் தம்புரை எடுத்து வந்து உட்கார்ந்ததும் விக்ரம் ஓடி வந்து விட்டது. "நானும்... நானும்..."

தம்புரை அவள் மீட்ட முடியாமல் தொந்தரவு செய்யவே "தாயம்மா, குழந்தையை மரத்தடிப் பக்கமோ தோட்டத்துக்கோ கொண்டு போய் விளையாட்டுக் காட்டு!" என்றார் அம்மா.

குழந்தை கையையும் காலையும் உதறிக் கொண்டு முரண்டு பிடித்தான். அவள் அவனைப் பற்றி வளாகத்தில் கொண்டு சென்றாள். பசு, கன்று, மற்ற பிள்ளைகளின் கொஞ்சல், எதுவுமே அவனை மாற்றவில்லை. அவள் பின்னாலிருந்த தங்கள் குடிலுக்குத் தூக்கிச் சென்றாள். கிணறு, துளசி மடம், மல்லிகைக் கொடி என்ற பசுமையான சூழல். பஞ்சமி அப்போது கடலூர் பக்கம் கிராம சேவிகா வாக இருந்தாள். பாப்பு வந்து வந்து போவான். சந்திரி எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்து, ஆஸ்பத்திரி பயிற்சிக்குச் சேர்ந்தி ருந்தாள். குருவிகளைக் காட்டிக் கொண்டு, அரிசி நொய்யை முற்றத்தில் இறைத்தாள்.

"அய்யாவுக்கு இப்படிச் செஞ்சவுங்க யாரு தெரியுமா?" என்று கேட்டுக் கொண்டே பாப்பு நின்றான்.

மனதில் சந்தேகம் குத்திட அவள் விழித்துப் பார்த்தாள்.

"அவங்க ஸ்கூல்தா..."

அவள் திகைத்துப் போனாள்.

ஒன்பது, பத்து என்று தேறாமல் அரசியல் பேசிக் கொண்டு திரிந்தது அவள் உணர்வில் படிந்தது. அடுக்குத் தமிழ் பேச்சு, பாட்டு, நாடகம், சினிமா என்று பாதி நாட்கள் வீட்டுக்கே வருவதில்லை.

வந்தாலும், சோத்தைப் போடு என்ற அதட்டல்தான். சந்திரி டிரெயினிங் சேர்ந்த பிறகு வாரத்தில் ஒருநாள்தான் வருவாள். பஞ்சமியும் இல்லை. இவள் அநேகமாக சாப்பாட் டுக் கூடத்தில் இருப்பாள். இவன் ஒருத்தனுக்கு சில நாட் களில் அந்தச் சாப்பாடே கொண்டு வந்து வைத்திருப்பாள். வெறுமே தான் வாயிற்கதவைச் சாத்தியிருப்பாள். "இதென்

னம்மா சோறு? எனக்கு வாணாம் போ!" என்று கோபித்துக் கொண்டு போவான். தட்டைத் தள்ளியிருப்பான்.

சந்திரி பூப்போட்ட சில்குச் சேலை உடுத்திக் கொண்டு எங்கோ கிளம்பிக் கொண்டிருந்தாள் அன்று.

"எங்கடீ?"

"ஆஸ்பத்திரிக்குத்தா. இன்னிக்கு நைட். தெரியுமில்ல?"

"அதுக்கு ரெண்டு மணிக்கே சீவிச்சிங்காரிச்சிக்கிட்டுக் கிளம்புற?"

"ஃபிரன்ட்ஸ்கூட சினிமாக்குப் போறோம்மா, அஞ்சறைக்கு முடிஞ்சதும் ஏழுமணி ட்யூட்டிக்கு அப்படியே போயிடுவேன். மிட்லன்ட்..."

"நீ காலைல கூடச் சொல்லாம, இன்னிக்குப் பாத்து என்ன சினிமா? ஊரே அல்லோலமாயிருக்குது?..."

"என் ஃபிரன்ட் டிக்கெட் வாங்கி வச்சிருக்காம்மா. காலையில இங்க கொடியேத்தம், பிறகு கலவரம், பேச முடியல. கலவரம்னா, நேர ஆஸ்டலுக்குத்தா போவே..." என்று கூறிவிட்டுப் போகிறாள். குழந்தை பாப்புவிடம் விளையாடிக் கொண்டிருந்தான். இவளுக்கு மனம் கொள்ளவில்லை.

அனுசுயாவும் சுசீலா டீச்சரும் விழா நடந்த இடத்தில் போடப்பட்ட விரிப்புகளைச் சுருட்டிக் கொண்டிருந்தார்கள்.

"தாயம்மா, பாப்பு எங்கே? இங்கே அஞ்சாறு பிள்ளங்க வெளில போகவே பயப்படுதுங்க. லஸ், குளத்தங்கரைப் பக்கம் தான் வீடாம். அவனக் கொண்டுவிட்டுட்டு வரச் சொல்லு..."

"ஏம்மா? அவ்வளவுக்கு கலவரமா?"

"இல்ல ஆயா, வெளியே சில பாய்ஸ், வந்து நாங்க இந்தி படிக்கிற ஸ்கூல்னு, தாலியக் கட்டிடுவோம்னு மஞ்சக்கயிறு வச்சிட்டு நிக்கிறாங்க. இந்தி நோட்டெல்லாம் வாங்கிக் கிழிக்கிறாங்க..."

"அட பாவிகளா? எவன்டாவன்? குலைய உருவிப் போடுறே? இவனுவ வாணா படிக்க வானாம்? அதுக்குன்னு ஏ, ஊரைக் கொளுத்தறானுவ? நீங்க வாங்கம்மா, உங்க

வீடுகள்ள நான் பத்திரமா சேக்குறேன்? ஏன் பயப் படுறீங்க?.... தாலியா கட்டுறானுவ?''..... அடிவயிற்றிலிருந்து கிளர்ந்து வந்தது. அந்தக் குழந்தைகளை அவள் அன்று நடத்திக் கொண்டு வீடுகளில் சென்று சேர்த்தாள். ஆங்காங்கு போக்கற்ற விடலைகள் நின்று கொண்டிருந்தார்கள். எங்கே பார்த்தாலும், சுவர்களில் தட்டிகளில் கரிக்கோட்டால் இந்தி அரக்கி! போட்டு அடிப்பதுபோல் படம். திரும்பி வரும் போது, கொடும்பாவி கட்டி இழுத்துக் கொண்டு, தேனாம் பேட்டைச் சந்தொன்றில் கோசம் போட்டுக் கொண்டி ருந்தார்கள். எங்கு பார்த்தாலும், இந்திக்குப் பாடை; தமி ழுக்கு மேடை; தமிழுக்கு உயிர்; இந்திக்கு மயிர் என்பது போல் கொச்சையான வசவுகளும், எதிர்ப்பதங்களுமாகச் சுவர்கள் அசிங்கப்படுத்தப்பட்டிருந்தன. தேசியக் கொடி களும்கூட கவுரவம் பெற்றிருக்கவில்லை.

கப்பலே கவிழ்ந்த துயரத்துடன் திரும்பி வந்தாள். அடுத்த வாரம் பஞ்சமி வந்த போது, இவள் கண்ணீர் வடித்தாள். இந்தித் தீ, மாநில மெங்கும் பற்றி எரிந்தது.

“எம்மா, உங்கப்பாரு, திருட்டுச் சாராயத்தக் குடிச்சிட்டு இப்பிடிப் பின்பக்கமா நுழைவாரு. ‘இப்பிடி பால் வாத்த இடத்துல நஞ்சக் குடிச்சிட்டு வரீங்களே'ன்னு அடிச்சிப்பேன். போலீசு புடிச்சிட்டுப் போயிடும். “தாயம்மா, போ, ஜாமின் கட்டிட்டுக் கூட்டியா”ம்பாரு. கடசில அஞ்சும் குஞ்சுமா விட்டுட்டுச் செத்தாரு. உங்க மூணு பேரையும் இந்த நிழல்லதா வளர்த்தேன். அவன் எப்படி இப்படியானான்?

இங்க வந்தா, “இதென்ன சோறு, மனிசன் திம்பானா? இந்த வீட்டுல, ஒரு “பண்டம் ருசியா, கிடையாது. சாதில பெரிய... அய்யிருன்னு நெனப்பு. இங்க யாரும் உசந்ததில்ல. எல்லாம் கோழியடிச்சி, ஆடடிச்சிக் கறி தின்னவங்க. வேசம் போடு றாங்க. எங்கப்பாரே உன்னாலதா செத்தாருன்னு எல்லாரும் சொல்றாங்க” என்று கத்திக்கச்சை கட்டினான். மீசை அரும் பித்துளிர்க்க, அடங்காத காளையாக கைமாறிப் போனான்.

மெல்ல மெல்ல அவனாகவே துண்டித்துக் கொண்டான்.

அந்த அடியில் இருந்து அய்யா தேறவேயில்லை.

அன்றாடம் கத்தலும் கோசமும், பள்ளிக் கூடங்களை அடைக்கச் சொல்லி, கறுப்புக் கொடிகாட்டுதலும் அங்கே அரங்கேறின. அவள் மைந்தன் தலைமையிலேயே காலிக் கும்பல் வித்யாலயத்துள் நுழைந்தது.

உள்ளேயே இருந்த விடுதிச் சிறுவர் சிறுமியர் பலரும் பெற்றோரற்றவர்கள். சுப்பய்யாவும் மருதமுத்துவும் வன் முறையைச் சந்தித்தார்கள். பள்ளி மூடப்பட்டது.

அந்த வருசம் பாடங்கள் சரியாக நடக்கவில்லை. கோடை விடுமுறையோடு, அய்யா குடும்பம், பெயர்ந்து இந்த இடத்துக்கு வந்தது. பராங்குசம், நிர்வாகியானான்.

அவர் வைத்திருந்த காரை அன்றே காலிக் கும்பல் நசுக்கி உடைத்துவிட்டது. அதற்குப் பிறகு அவர் கார் எதுவும் வாங்கவில்லை. இங்கே வந்த பிறகு, சைகிள் ரிக்சாவில், தாம்பரம் ரயில் நிலையம் சென்று, மாம்பலத்தில் இறங்கிப் பள்ளியைப் பார்வையிட நடந்தே செல்வார். சில நாட்களில் வெளியூர் பஸ்களில் ஏறிச் சென்றும் இறங்கிக் கொள்வார். அப்போது, யார் யாரெல்லாமோ அந்த வீட்டுக்கு வந்தி ருக்கிறார்கள்.

அப்போது.... ராதாம்மா குழந்தையுடன் பம்பாயில் இருந்ததாக நினைவு. அவள் பையன் அந்த வீட்டுக்குள் வந்தான்.

## 9

காலை பத்தரை பதினோரு மணி இருக்கும். அவள் வீட்டின் வலப்பக்கம் படர்ந்து கிடந்த அவரைக் கொடிக்குக் குச்சிகள் நட்டு ஏற்றிவிட்டுக் கொண்டிருந்தாள். இன்னும் தை பிறக்கவில்லை. இது ஊன்றிய வித்தில் இருந்து வந்த கொடி அல்ல. ஏற்கனவே பந்தலில் அவரைபூக்கத் தொடங்கி இருந்தது.... வாசலை ஒட்டி, கம்பி வேலி கட்டி இருக் கிறார்கள். முன்புறம் நேராக வீதிதான். ஆனால் எதிர்ச்சாரி

யில் வீடுகள் இல்லை. ஆடுமாடு உள்ளே நுழையாதபடி கம்பி வேலி இருக்கிறது.

இவள் அங்கிருந்தே பார்க்கையில் கார் ஒன்று, வாசலில் வந்து நின்றது தெரிந்தது. 'மண்ணாங்கட்டி' ஓடி வந்து கம்பிவேலிக்கு அப்பால் நின்று அவளை அழைத்தான்.

கூழையான கூலிக்காரன். பெரிய சாலையில் உள்ள ரேசன் கடையில் மூட்டை சுமப்பவன். அவனுடைய பெயர் என்னவென்று யாருக்கும் தெரியாது 'மண்ணாங்கட்டி' என்ற பெயரில் அவன் சந்தோசமடைந்தது போலவே சிரிப்பான்.

"யம்மா? உம் மக வந்துகிறாரு!" அவள் டக்கென்று நிமிர்ந்தாள் "யாரு, யாரப்பா சொல்றீங்க?"

"ஆமாம்மா, தமிழ் புரவலர், இளவழுதி அய்யா... பிள்ள நிலாப் படம் போடு போடுன்னு போடுதல்ல? இவருதானே பாட்டு கதை வசனம் எல்லாம்?.... வந்துகீறாரு...!"

அவளுக்குச் சொல்லத் தெரியாத ஒரு குழப்பம். வீட்டுப் பக்கம் போகலாமா, வேண்டாமா என்று நின்றாள். அவளைப் பொறுத்த மட்டும் புருசனால் வந்த புள்ளை குட்டி உறவுகள் இல்லாமலாகிவிட்டன. ஏனெனில், பஞ்சமி இந்தக் கலவரங்கள் நிகழ்ந்த போது மூன்றாவதாகக் கருப்பமாக இருந்தாள். முதல் இரண்டு தரம் கருவுற்று கலைந்து போனதால், மூன்றாவதாக அவள் கருவுற்ற போது, தாய் வீட்டுக்கே வரவில்லை. பாப்புவுக்குப் பெற்றோர் இல்லை. ஒரு அண்ணன் திருச்சியில் பாலக்கரையில் கடை வைத்திருந்தான். அவன் சம்சாரம் பெரியாசுபத்திரியின் உதவியாளராக இருந்தாள். இரண்டு குழந்தைகளுடன் வீட்டில் அவன் சின்னம்மாவும் இருந்தார்கள். அங்கே பிரசவத்துக்குப் போனாள்.

எட்டுமாசத்திலேயே நஞ்சுக்கொடி முதலில் வந்து, அவளும் பிழைக்கவில்லை, பிள்ளையும் பிழைக்கவில்லை. தந்தி வந்து, அவள் பதறப்பதறப் போனாள். பயனில்லை. நல்ல மருமகன். அதற்குப் பிறகு அவன் கல்யாணமும் செய்து

கொள்ளவில்லை; இங்கு வரவும் இல்லை. குடி, சூது, கெட்ட வழக்கம் எதுவுமே கிடையாது. ராதாம்மா போன போதுகூட வந்தான். திருப்பராய்த்துறை ஆசிரமத்தில் வேலை செய்திட்டிருக்கேன்மா, அப்பப்ப அண்ணன் குழந்தை களைப் பார்ப்பேன்... முந்தாநாதா, பேப்பருல செய்தி பார்த் தேன்... பொய்யா இருக்கக் கூடாதான்னு நினச்சேனே"ன்னு அழுதான். அப்போதே உடம்பு வத்தி, எதிலும் பிடிப்பில்லா தவனாக இருந்தான். காவேரி புதைமணலில் சிக்கி இறந்ததாக ஒரு கார்டு வந்தது. அப்போது அம்மா இருந்தார். சந்திரி 'நர்ஸ்' படிப்பு முடித்துவிட்டு, கொஞ்ச நாட்கள், ஒரு தனியார் மருத்துவமனையில் முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தாள். பிறகு ஏதோ வாய்ப்பு வந்ததென்று அமெரிக்கா சென்றாள். எப்போதேனும் ஒரு கடிதம் வரும். அவள் திகைத்து நிற்கையில்.

அம்மாவே பின்புறமாகக் குரல் கொடுத்தாள். "தாயம்மா...?" அவள் தலையைத் தொங்க விட்டுக் கொண்டு சென்றாள்.

"மோகன் வந்திருக்கான், கலியாணம். சினிமாப்படக் காரர் பொண்ணாம். சந்தோச சமாசாரம் வா...!"

"அம்மா, நா அவனைப் பார்க்கவே பிரியப்படல..." மனசுக்குள் சொல்லத் தெரியாமல் வேதனை. ஆத்திரம், பொங்க அவளை அசையவிடாமல் தடுத்தன.

"அட, சீ! இதென்ன அசட்டுப் பிடிவாதம்? ஒரு நல்ல காரியம், பெத்தவங்க பெரியவங்களுக்குப் பத்திரிகை வச்சு, ஆசீர்வாதம் வாங்கணும்னு வந்திருக்கிறான், அய்யாவே சந்தோசப்படுறார் வா!"

அவள் போய் கூடத்தில் நின்றாள். அவன் நேராக அவள் காலில் வந்து விழுந்தான். இது போல், அய்யா, அம்மாவுக்கும் மாலைகள் கொடுத்துக் காலில் விழுந்தி ருப்பதாகத் தெரிந்தது. இவளுக்கு மாலை இல்லை.

"அம்மா, நீங்க எல்லாரும் கட்டாயம் வரணும், நீங்க தா மாப்புள வீட்டுக்காரங்க. இப்படி ஒரு சம்பந்தம் கிடைக்க நான் குடுத்து வச்சிருக்கணும்...." என்றார்.

சிவப்பாக, முன் வழுக்கை மின்ன, ஒரு நாமக்காரப் பெரியவர், கதர்சட்டை அணிந்து வந்திருந்தார். இவளைக் கண்டதும் கைகுவித்தார்.

"தாயம்மாதானே? நினைப்பிருக்கா? இந்தாத்துல பர்மாக்காராளுக்கெல்லாம் தங்க இடம் கொடுத்து அவா வாளுக்குச் சொந்த ஊருக்குப் போக உதவி செய்த போது... கிணற்றுத் தண்ணி இழுத்து, குஞ்சு குழந்தைகளுக்குத் துணி மணி வாங்கிக் குடுத்து...

"ஓ... தம்பி விஜயராகவனில்ல?" என்றாள் அவள் வியந்து. மனசுக்குள், அதற்குள் எப்படிக்கிழவனாய்ப் போனாய் என்ற கேள்வி முளைத்தது.

"ஆமா உங்கம்மா கைக்குழந்தையை எடுத்திட்டு செயிலுக்குப் போனாங்க. இப்ப எப்படி இருக்காங்க? 'நீங்க கல்யாணம் கட்டி நல்லாயிருக்கீங்கல்ல?"

"இருக்கேம்மா. காங்கிரஸ் தியாகத்துக்கு, மக்களுக் குன்னு இருந்த காலம் போயிடிச்சம்மா. வருங்கால சந்த திக்கு கடனைத்தான் வைக்கப் போறோம்னு பெரியவர் ராஜாஜி சொல்றதுதான் பலிச்சிருக்கு. டம்பாச்சாரி திட்டங்கள். காந்திஜி எதெல்லாம் வாணாம்னு சொன்னாரோ, அதெல்லாம் நாட்டுல வந்திட்டது...." என்றார்.

"அய்யா, நீங்க இப்ப ஒதுங்கக் கூடாது. வரணும், பெரியவர் என்னை அதுக்காகவே இன்னிக்கு அனுப்பிச்சார். நாளைக்கு நரசிம்மன் சார் வருவார், உங்களைக் கூட்டிட் டுப் போக. இப்ப ஒதுங்குவது விவேகம்னு படலன்னு, அவர் சொன்னதை நான் சொல்லுகிறேன். சுதந்தரத்துக்கு முந்தி இருந்த காங்கிரசைக் கலைச்சிடணும்னு காந்திஜி சொன்னார். ஆனால் யார் கேட்டாங்க? அப்பாக்குப் பிறகு பொண்ணுன்னு ஆட்சி மாறிருக்கு... நீங்க ஒத்துக்கணும்..."

"என்னப்பா, மோகன்தாசு, நீ கல்யாணத்துக்குத்தானே கூப்பிட வந்திருக்கே, எப்ப கல்யாணம்?"

பெண்ணின் தந்தையாகத் தெரிந்த ஒருகடுக்கன்காரர், அவளைத் திருப்பிப் பார்த்து "வணக்கம்மா... பொன்னம் பலம், எம்பேரு. உங்க மகன், எழுதிய பிள்ளை நிலாம் படம் நாத்தான் எடுத்தேன். இங்கேயே ஜி.டி. ரோட்ல, வெற்றில ஓடுத. முதல்படமே பேரும்புகழும் சம்பாதிச்சிக் குடுத்திருக்கு. அண்ணா தலைமையில் பாராட்டு விழா வச்சிருக்கிறோம். இப்ப அய்யாகிட்ட ஒரு குடும்ப பாஸ் குடுத்திட்டுப் போறேன். அவசியம் வந்து பாக்கணும்..." அவள் குழம்பிப் போனாள். கல்யாணப் பத்திரிகையா, சினிமா பாஸா, அய்யாவைப் பாக்கவந்தது, தேர்தல் விசயமா?

"அய்யா அவசியம் வந்து பார்க்கணும்... தேர்தல் வருது. அது முடிஞ்சதும் தை பிறந்து கலியாணம்னு நினைச்சிட்டி ருக்கிறோம். பெரியம்மா, இதான் பொண்ணு. ஃபோட்டோ...."

பெரிய தோல்பையைத் திறந்து பெண்ணின் புகைப் படத்தை எடுத்து அவர் அய்யாவிடம் கொடுத்தார். அய்யா, அம்மாவிடம் கொடுக்க, "பொண்ணு, லட்சணமா இருக்கா. இந்தா, பாரு தாயம்மா..." என்று கொடுத்தாள்.

"இதில நான் சொல்ல என்னம்மா இருக்கு? நீங்க சொன்னா சரி...."

"பொண்ணுக்கு என்ன வயசு?..."

"இந்த மாசி வந்தா பதினெட்டு முடியிது... அதெல்லாம் சிக்கல் இல்ல. ஊரில பொம்புளப்புள்ளங்க ஸ்கூல் எட்டு முடியத்தானிருக்கு. அத முடிச்சிட்டா. நல்லா சமைப்பா, மனுசங்க குணம் அறிஞ்சு நடப்பா. நான் சொல்ல வேணாம் நீங்களே தெரிஞ்சிப்பீங்க..." என்றார் அவளைப் பார்த்து.

அம்மா அதற்குள் சமையலறைக்குள் காபி தயாரிக்கச் சென்றாள். அவள் உடனே அம்மாவை விடுவிக்கச் சமையலறைக்குச் சென்றாள்.

"நீ போய்ப் பேசிக்கொண்டிரு தாயம்மா, உறவுகள் விட்டுப் போகக்கூடாது. அரசியல் வேற, இது வேற. போம்மா..." என்று அம்மா வற்புறுத்தியும் அவள் கேட்க வில்லை. அவளே காபி தயாரித்துக் கொண்டு சென்றாள்.

பழத்தட்டுகளும் பூவிதழ்களும் ஒரு புதிய துவக்கத் துக்குக் கட்டியம் கூறினாற்போல் இருந்தது.

படத்துக்கான இலவச பாஸை அய்யா அம்மாவிடம் கொடுத்தார்.

"ராதா இருந்தால் போய்ப் பார்க்கலாம். அவளுக்குத் தான் மோகன் எழுதியதுன்னா, கொண்டாட்டமாகப் போகலாம்பா..." என்றார் அம்மா.

"ஏன், நீயும் தாயம்மாவும் போய்ப் பார்த்துவிட்டு வாங்களேன்?"

"அய்யா, எனக்கொண்ணும் அதைப்பார்க்க வேண் டாம்!" என்றாள் அவள் நெஞ்சடைக்க. சினிமாவுக்கு அய்யா சென்ற நினைவே இல்லை. அம்மாவும் ராதா அம்மாவும் சென்றிருக்கிறார்கள். பத்மினி சிவாஜி நடித்த இராமாயணம் போனார்கள். அவளுக்குத் துவக்க முதலே சினிமாவில் ஈடுபாடு இல்லை. காங்கிரஸ் பொருட்காட்சி நடக்கும். அங்கே சென்றிருக்கிறார்கள். பஞ்சமியும் சந்திரியும் ராதாம்மாவும், மருதமுத்து, எல்லோருடனும் போயிருக் கிறார்கள். அங்கே காதிக்கடையில பராங்குசமும் சுப்பய்யா வும் மாறிமாறி வந்தவர்களிடம் உள்நாட்டுக் கைத்தொழில் பிரசாரம் செய்வார்கள். அய்யா மிகத் தீவிரமாக ஈடுபட்ட காலம். அங்கே நாடகம் நடக்கும். நவாப் இராஜ மாணிக்கத் தினை... ராமதாஸ் நாடகம் பார்த்திருக்கிறாள். எல்லாரும் சிறுபிள்ளைகள். நாடகம் முடிய ஒன்பது மணி ஆகும். கூட்டத்தோடு நடந்தே குருகுலம் வந்துவிடுவார்கள். ... அங்கே அவர்கள் இருந்தபோது தான் அவ்வையார் படம் வந்தது. சுந்தராம்பாள் அம்மாள் குருகுல வித்யாலயா நிகழ்ச்சியில் வந்து பாடியிருக்கிறார்கள். வெள்ளைச் சேலை

உடுத்து, வெள்ளை ரவிக்கை போட்டுக் கொண்டு வந்து எல்லோரிடமும் பேசினார்...

அந்த சினிமா பற்றி அப்போது, அவளுக்குத் தவறுதலான கருத்தே விழவில்லை.

தன் மகனைச் சுற்றியே அவள் செவியில் விழுந்த செய்திகள், அங்கு ஒழுக்கம் என்ற வரை முறைகளுக்கு இடமில்லை என்ற கறை அவள் உணர்வில் வெறுப்பூட்டிவிட்டது.

"இந்தாங்க, போஸ்ட் வந்திருக்கு..."

ரங்கன் ஒரு கார்டைக் கொண்டு வந்து பெஞ்சியில் போடுகிறான். ஈரச் சேலையை உலர்த்திக் கொண்டிருப்பவள் திரும்பிப் பார்க்கிறாள். வானம் மூட்டமாக இருக்கிறது.

"எனக்கா, போஸ்டு? எனக்காரு எழுதப் போறாங்க?"

ரங்கன் வெறும் சவடால்தான். படிக்க எழுதப் பவிசில்லை என்பது அவள் அனுமானம். அவளுக்கு சம்பு அம்மா எழுதப் படிக்கக் கற்பித்திருக்கிறாள். இந்தியும் ஆங்கிலமும் கூட, குருகுலக் கூடத்தில் அந்தக் காலத்தில் பிள்ளைகள் பயிலும்போது உடன் இருந்து நனைந்திருக்கிறாள். பேச எழுத வராது. எழுத்துப் புரியும். கறுப்பு மை தடவி, வந்திருக்கும் துக்கக் கடிதம்...

"சென்ற 28ந்தேதி வியாழக்கிழமை, இரவு பத்து மணிக்கு, எங்கள் தந்தையும், சின்னம்புலியூர் மிராசுதாரருமாகிய தெய்வ நாயகனாரின் புதல்வர் தியாகி, தண்டபாணி, அமர பதவியடைந்தார் என்று தெரிவித்துக் கொள்கிறோம். இப்படிக்கு, ராஜேசுவரி அம்மாள் மனைவி..."

மூன்று மகள்கள்— மருமகன்களின் பெயர்கள், மகன்களின் பெயர்கள் எல்லாம் எழுதியிருக்கிறார்கள். இரண்டு மாசம் முன்பு அங்கே வந்த இளைய பெண் மணிமேகலையின் புருசன் பெயரும், நந்தகுமார் என்று பதிவாகி இருக்கிறது. குடும்பப் பெருமை. கடமைகளைக் காற்றில் பறக்க விட்டவர்களை விலக்க முடியாத, ஊர், சமூகக் கட்டுப்பாடுகள், கவுரவங்கள்.

"இந்த ஆளை ஒவ்வொரு நாள் ராத்திரி கழுத்தைப் பிடித்து நெறித்து விட்டு, போலீசில் போயி சரணடைஞ் சிடலாம்னு வருது சின்னக்கா! இந்தப் பொண்ணு, ஆதரவில்லாம வந்திடிச்சே, இதுக்காக நான் உசிரோடி ருக்கிறேன்..." என்றழுத குரல் நெஞ்சில் உயிர்க்கிறது. ஒரு வழியாக செத்துத் தொலைந்தான்....

ஒருவேளை, துபாயோ எங்கேயோ போயிருந்த மருமகன் வந்திருப்பானோ?

யார் கண்டார்கள்? ஒருவீடு... பெரிய வீடு... அதற்குப் பங்கு கேட்டு வெட்டுக்குத்துக்குக் கூடத் தயாராவார்கள்!

சட்டென்று, ஒரு நடை ஊருக்குப் போய்ப் பார்த்து விட்டு வரலாமா என்று ஆவல் எழும்புகிறது. இங்கே இவள் எதற்காக, எதைக் கட்டிக் காத்துக் கொண்டு இருக்க வேண்டும்?....

அவள் இந்த எல்லையை விட்டுப் போய் வெகுகாலம் ஆய்விட்டது. அம்மா இறந்தபின் அவள் எந்த இடத்துக்கும் நகரவில்லை. அய்யாவும் கூட, சொந்த பந்தம் என்று சென்று பழகிய தொடர்புகள் என்று மதுரை, சின்ன மங்கலம் போய் வந்திருக்கிறார். பொதுக் கூட்டங்கள், அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளுக்குப் போனதில்லை. நட்பும் உறவும், தோழமை யும் விட்டுவிடாமல் தாமரையிலைத் தண்ணீர்போல ஒட்டி யும் விடாமல் வைத்துக் கொண்டிருந்தார். நிக்கொலஸ், சாயபு, பத்மாவதி அம்மா, எல்லாரும் வருவார்கள். பழைய கனவுகளை அந்தக்கால சந்தோசத்துடன் பேசுவார்கள். காந்தி சிந்தனை நடக்கும்.

நிறையப் புத்தகங்கள் வாங்குவார்; படிப்பார். ஆனால் அவரை அரசியலில் ஈடுபடப் பெரியவர்கள் வற்புறுத்தியும் ஈடுபடவில்லை. அவள் மகன் கல்யாணம் எத்தனை ஆரவாரத்துடன் நடந்தது?

அவன் சார்ந்திருந்த அரசியல் கட்சி ஆட்சியைப் பிடித்து விட்டதே? ராதாம்மா விக்ரமுடன் கல்யாணத்துக்கு வந்தாள்.

ராதாம்மா ஒரு கைத்தறிச் சேலை அணிந்து, தாலிக் கொடியும் இரண்டு வளையல்களும் அணிந்து எப்போதும் போல் வந்தாள். அம்மா கதர்ச்சேலை; அவளும் வெள்ளைச் சேலை.

மணமகளின் தந்தைக்குத் தெய்வநம்பிக்கை அதிகமாம். முதல் நாளே குல தெய்வக்கோயிலில் குடும்பத்துடன் சென்று, சடங்கு செய்து திருமணம் முடித்துவிட்டார்களாம். மாலை வரவேற்பு, மிகப் பெரிய திருமணமண்டபத்தில் நடந்தது. அரசியல் தலைவர்கள், சினிமா நட்சத்திரங்கள், வண்ண விளக்கு ஜோடனைகள், என்று மிக ஆடம்பரமாக இருந்தது. அய்யா, தாமே பெரியவர் இராஜாஜியைப் போய்ப் பார்த்தாலும், புதிய கட்சியை ஏற்றுக் கொண்டு அரசியலில் நுழைய வில்லை. விலகியது விலகியதுதான். இவர்களைத் தூக்கி சிம்மாசனத்தில் வைத்த பெரியவரின் கட்சி இருந்த இடம் தெரியாமல் போனதாகச் சொன்னார்கள்.

இவர்கள் கல்யாண வரவேற்புக்குச் சென்ற போது, அந்த அரசியல் கட்சித் தலைவராகிய முதல்வரே, அய்யாவை கைபிடித்து வரவேற்றார். போட்டோ பிடித் தார்கள். அம்மா இரண்டு வெண்கலக் குத்து விளக்குகளைப் பரிசாக அளித்தார். பெண்ணைப் பெற்றவள் நல்ல மாதிரியாக இவளிடம் வந்து பேசினாள்.

"அம்மா, எங்க பொண்ணு, கிராமத்துல வளந்தது. நாங்க ரொம்ப ஆசாரம். இங்கே எழும்பூரில் ஒரு வீடு வாங்கி யிருக்கு. அதுலதான் ரெண்டு பேரையும் தனிக்குடும்பம் வைக்கிறதா யோசனை. நீங்க வந்து கூட இருந்து, அவளுக்கு நல்லது பொல்லாதது எதுவும் சொல்லிக் குடுக்கணும்..."

ராதாம்மாதான் சூழலைக் கலகலப்பாக்கிப் பேசிக் கொண்டிருந்தாள். "சம்பந்திம்மா, இவங்க நல்லது சொல்லிக் குடுப்பாங்க. பொல்லாதது நிச்சயமாச் சொல்லிக் குடுக்க மாட்டாங்க..." என்று சிரித்தாள்.

"ஒரு பேச்சு வழக்குத்தாம்மா சொன்னேன். இது நல்லது, இது சரியில்லன்னு பிரிச்சறியத் தெரியாத பொண்

ணும்மா. பொம்புள ஸ்கூல்லதா படிச்சா. இவுரு சினிமா லைன்ல எறங்கினதே தாத்தாக்கு சம்மதமில்ல. விவசாயந்தா பரம்பர பரம்பரையா. கட்சில சேர்ந்ததும், புதுசா இப்படி அகலக்கால் வச்சிருக்காங்க. முதமுதல்ல எடுத்த படம், நூறு நாள் தாண்டிடிச்சின்னதும், தொடர்ந்து இவங்க எலக்சன்ல செயிச்சதும், நல்ல படியா வந்திருக்கு. அந்தக் காலத்துல, எங்க மாமா, நாகபட்டனத்துல நாடகக்காரங்களக் கூட்டு வச்சிட்டு நாடகம் நடத்தி ஏகமாத் தோத்தாரு. நாடகக் காரங்க, சினிமாக்காரங்கன்னாலே குடும்பத்துக்கு ஒதவா துன்னு நினச்சிட்டிருந்த குடும்பம்... ஏதோ பெரியவங் கல்லாம் பாத்து நடத்திருக்காங்க. எங்காலத்துல, ஒரு 'உள் பாடி' போடுறதுக்கு எங்க மாமியா, அப்படிப் பேசுவாங்க!... காலம் மாறிப்போச்சி...."

"நீங்க ஒண்ணும் கவலப்படாதீங்க சம்பந்தி அம்மா, தாயம்மா போய் இருந்து, நல்லாக் கவனிச்சிப்பா..."

அவளுக்குத் துணுக்கென்றிருந்தது.

புதிய உறவு, புதிய தொடர்புகளா? இது சாத்தியப் படுமா? அவள் போய் அந்த வீட்டில்... எப்படி?

கல்யாணம் முடிந்ததும் அவர்கள் வீடு திரும்பி விட்டார்கள். புது வீடு வாங்கி, சம்பிரதாயமாகக் குடும்பம் வைக்க அவள் மகனும், அவள் சம்பந்திகளும் அழைத்துச் செல்ல வந்தார்கள்.

"தாயம்மா, மாட்டேன்னு சொல்லாம போ! நீரடிச்சு நீர் விலகாது. அரசியல் வேற, மனித உறவு வேற. அரசியல்ல அப்பப்ப மாற்றம் வரலாம். வேற வேற வாழ்க்கை முறை வரலாம். மனித உறவுகள், மனித நேயம், அது மாறாமல் இருக்கணும்..."

தன்னுடைய இரண்டு வெள்ளைச்சீலைகளைப் பையில் வைத்துக் கொண்டு அவள் முதன் முதலாக அந்த நிழலை விட்டிறங்கினாள்; மகனுடன் சென்றாள்.

# 10

**“ஏ**ம்மா! யாரு இறந்து போயிட்டாங்க?... துக்கக் கடிதாசி போல இருக்கு?”

ரங்கன் பின்புறத்தில் இருந்து ஏணியைத் தூக்கிக் கொண்டு வருகிறான்.

“ஊருல, அன்னைக்கு மகளைக் கூட்டிட்டு வந்தாளே. அதொரு ரெண்டு மாசம் இருக்கும். அவபுருசன் செத்திட்டான்.

“அந்தக் காலத்துல, எப்படி இருந்தாங்க? காசில போயிப் படிச்சான். துப்பாக்கிக் குண்டு போட்டு பணக்கார மிராசுகளை ஒழிக்கணும்னு ஒரு மிராசைச் சுட்டுட்டு, மூட்டையோடு நெல்லையும் அரிசியையும் குடிபடைகளுக்குக் குடுப்பேன்னு புதுமுறை கொண்டாந்தான். போலீசு புடிச்சிட்டுப் போயி மரண தண்டனை, ஆயுள் தண்டனைன்னு குறைச்சி, அதையும் மனநிலை சரியில்லன்னு பைத்தியக்கார ஆசுபத்திரிக்குப் பெத்தவங்க சொல்லி மாத்தினாங்க. அவன் அப்படிவே தியாகின்னு செத்திருக்கலாம். அம்பது வருசம், அஞ்சு புள்ளங்களையும் குடுத்து, அவளையும் வதைச்சிட்டு ஒழிஞ்சான். இன்னும் சோறு வடிக்கல... தலையை முழுகறேன். ஒட்டு ஒறவு இல்ல. அவ பாவம் தொலஞ்சிதே!”

கிணற்றடியில் சென்று தண்ணீரைச் சேந்தி அப்படியே தலையோடு ஊற்றிக் கொள்கிறாள். வெயில் நேரத்துக்கு ஊற்ற ஊற்ற இதமாக இருக்கிறது. சேலையைப் பிழிந்து கொண்டு உள்ளே மாற்றுச் சேலை எடுக்க வருகிறாள். கூடை நிறைய நாரத்தங்காய், மணத்தை வீசி என்னைப் பார், பார் என்று அழைக்கிறது.

இதற்கு யார் வித்துப் போட்டார்கள்? யார் நீரூற்றிப் பராமரித்தார்கள்? யார் பலனெடுக்கிறார்கள்? வேலிக்கு

மறுபுறம் மாவில் எரி பூச்சிகள் விழுந்து, பயன் குத்துப்பட்டு, மரம் சோகம் காக்கிறது.

இந்தக் காயில் என்ன பளபளப்பு? சில காய்களில் பொன்னின் மின்னலாய், பருவமடைந்த கன்னியின் பூரிப்பாய் மெருகிட்ட நேர்த்தி. இந்தக் கொல்லையில் இப்படி ஒரு நாரத்தை விளைந்ததாக அவருக்கு நினைவில்லை. முன்பு எப்போதோ எலுமிச்சை காய்த்ததென்று குருகுலம் வீட்டுக்கு வந்ததுண்டு. பெரிய பெரிய சாடிகளில் ஊறுகாய் போடுவார்கள். பிறகு இரண்டொரு இடங்களில் பெரிய பெரிய முட்களுடன் எலுமிச்சையோ, நாரத்தையோ என்று தெரியாமல் செடிகள் முளைத்துப் பெரிதாக வந்து காய்ந்து போயிருக்கின்றன. "இந்தக் கொல்லையில் மாமா காலத்தில் வந்து பட்டுப்போன எலுமிச்சைக்குப் பிறகு அந்த சாதி மரமே வரதில்ல..." என்று அம்மா சொல்லிவிட்டு, நர்சரியில் இருந்து ஒரு சாத்துக்குடிக் கன்று வாங்கி வந்து நட்டார். நட்ட மூன்றாம் வருசமே அது காய்த்தது. உயரவே இல்லை. பரந்து, பின்புறமும் முட்களை நீட்டிக் கொண்டு ஒரு பெரிய இராட்சசி போல் அமர்ந்திருந்தது. வெண்மையாகப் பூக்கள். அது காய்த்தது என்றால், பருவம் கிருவம் என்பதெல்லாம் இல்லாமல் காய்த்துக் குலுங்கிற்று. பறிப்பதுதான் கஷ்டம். அப்போதெல்லாம் இந்த மண்ணாங்கட்டிதான் கூழை உடம்பை வைத்துக் கொண்டு, குச்சியால் கிளைகளை நீக்கிப் பழங்களைப் பறிப்பான்.

யார் வீட்டுக்கு வந்தாலும் சாத்துக்குடி ஜூஸ்தான். "நெல்ல ருசிம்மா!" என்று, பழத்தை உரித்துச் சுவைக்கும் மண்ணாங்கட்டி சந்தோசத்தின் மொத்த உருவமாகத் தெரிவான்.

ராதாம்மாவுக்கு அவனை மிகவும் பிடிக்கும். விக்ரம் பையனாக அங்கு வந்த போது, குழந்தையின் கன்னத்தைத் தொட்டுக் கொஞ்சுவான்.

“மாமா, உங்களுக்கு ஏன் மண்ணாங்கட்டின்னு பேரு?” இதைக் கேட்டவுடன் அவன் சந்தோசம் நிரம்பி வழியச் சிரித்தான்.

“கண்ணு, எங்காயிக்கு முதப் பொறந்த நாலுபுள்ள செத்துப் போச்சி. நா... அஞ்சாவது. முதப்பொட்ட புள்ள, குலதெய்வத்து பேரு வச்சாங்க, அங்காயின்னு. சத்துப் போச்சி. ரண்டாவது ஆம்புளப்புள்ள, முனியசாமின்னு பேரு வைக்கணும்னிருந்தாங்க. மூனே நாளுல பூடுத்து. மூணாவது, நாலாவது ரண்டும் பொறந்தவுடனே பூடிச்சாம். அப்ப, எங்காயி நினைச்சிசாம். இது மண்ணாங்கட்டியாக் கெடக் கட்டும்னு நினச்சாங்க. பேரே வய்க்கல. நா... மண்ணாங் கட்டியாவே உருண்டிட்டிருக்கிற....”

அந்த சிரிப்பு, வாழ்க்கையில் தூக்குமரத்துக்குப் போய் விட்டு மீண்டும் வாழ வந்த ராமுண்ணியின் சிரிப்பை நினை வூட்டும். ஒவ்வொரு கணமும் வாழ்வை நேசிப்பவர்கள். வாழ்க்கையில் இழப்புகள், நோவுகள், சித்திரவதைகள், கொடுமைகள், குரூரங்கள், அபாயங்கள் எல்லாம் இருக் கின்றன. இவற்றுக்கு நடுவே, எப்போதும் சிரிக்கும், நிறைவைக் காட்டும், வாழ வைக்கும் மண்ணுக்கு நன்றி சொல்லும் உழைப்பாள மனிதர்கள்.

அந்தச் சாத்துக்குடி, ராதாம்மா பம்பாயில் நோவாக இருக்கையில் பூவும் பிஞ்சுமாகக் காய்ந்து, பட்டுப் போயிற்று. அது இன்னதென்று விவரிக்க முடியாத பூமியின் சோகமாகத் தோன்றியது. எலுமிச்சங்காய் அளவு பிஞ்சுகளே ஓராயிரம் இருக்கும்போல தோன்றியது. மண்ணாங்கட்டிதான் பறித்துக் கொண்டு மரத்தை வெட்டிச் சுத்தப்படுத்தினான். அப்போது தான் கோவாலு வந்ததும், மலக்குழி சுத்தம் செய்ததும் நடந்தது.

“யம்மா இந்த சாதி—ஐயிருமாருதி ஒசந்த சாதி. சிப்டிக் டாங்கிதா தீட்டாப்பூடிச்சி...” என்றான்.

இப்போது அவன்தான் உள்ளே வருகிறான்.

"வணக்கம் பெரீ....ம்மா..."

"என்னாப்பா, எப்படீருக்கிறீங்க, உங்களப் பாக்குற தேயில்ல?"

"நெல்லாகிறேம்மா. பொண்ணு நர்சு படிச்சிட்டி வீனஸ் ஆஸ்பத்திரில இருக்குது. பைய, இன்ஜினீர் படிக்கிறான். நமக்கு எப்பவும் போலதா வேல. கிழக்கால, ஜோதிகாபுரம் ஃபிளாட் கட்டுறாங்க இல்ல? அங்கதா வாட்சமேனா க்றேன். நைட்டு, பகல்ல இப்படீ எதானும் வேல செய்யறதுதா. காரிய காரரு சொன்னாரு. காயெல்லாம் பறிச்சிக்குதே. முன்ன இங்க ஆரஞ்சி இருந்திச்சே? அது காயி... ஆனா இதும் நெல்லா ருக்கும் கொழுஞ்சி. அந்த மிலிடாரிக்கார ஐயா இருந்தாரே, அப்ப எப்டீருந்திச்சி, வூடும் தோட்டமுமா... எனக்கு சொம்மா வாடகக்கி வுட்டிருந்தாகூட நெல்லா வச்சிருப்பேன்..."

"ஏன், நீங்க, உங்க தலவரையா மூலமாக் கேக்க வேண்டியதுதானே?"

"அதெப்படி? இவுங்க வேற கச்சி. நாம போயி எப்டீப் பேச...? எம் பொஞ்சாதி சொல்லிச்சி, அதெல்லாம் போயி கேக்காத. இங்கியே நமுக்கு சவுரியம்னிடிச்சி. இன்னா? ஒதுங்க எடமில்ல. பொம்பிளங்க, வயசுப் பொண்ணுங்க, ஒரு தீட்டுத் தொவக்கம்னா, கட வீதிக்குப் பின்னால ரயில்வே லயன்பக்கம்தான் போவணும்னு இருந்திச்சி. இப்ப பொது கழிப்பற கட்டிட்டாங்க..."

"பொண்ணுக்குக் கலியாணம் கட்டிட்டீங்களா?"

"இல்லீங்க, பெரீம்மா... உங்கையில சொல்லுறதுக் கென்ன. அதுக்கு நர்சு படிக்க எடம் வாங்க எத்தினி கஸ்டப் பட்டந் தெரிமா...? அப்ளிகேசன் போட்டு, தாசில்தார் சர்ட்டி வேட்டு அது இதுண்ணு அல்லாம் வாங்கிக்கினு போனா, அங்க, ரூவா அம்பதாயிரம் வச்சாதா எடம்னா, ஒரு கஸ்மாலம். தலவர், புரவலரையா கீறாருங்க, அமைச்சரா, இந்த வட்டம்மிச்சூடும் கச்சில நாந்தாகிறே... உனுக்குக்கூட தெரீஞ்சிருக்கும். மின்ன, இங்க தியாகி அய்யா ஒடம்பு

முடியாம படுத்துகிறாரு. எதுக்க மீட்டிங் போட்டிருந்திச்சி. எம்.ஜி.ஆர். ஆச்சி வந்த பெறகு இது எதர்க்கச்சி. ஆனாலும் தலவர் புரவலரையா, அந்த ஆச்சில அமைச்சரு... பெரீம்மா,. நீங்க வந்து சொன்னீங்க, "இந்தாப்பா, அய்யா, தூக்க மில்லாம அவுதிப்படுறாரு. மைக்க நிறுத்திடுவீங்களான்னு. பத்து மணிக்கு மின்னயே கூட்டம் முடிச்சிட்டம்..."

"ஆமாமாம். நினப்பிருக்கப்பா. உங்கள மண்ணாங் கட்டின்னு கூப்புட மாட்டாங்க, ஒரு பேரு வச்சாங்க..."

"ஆமாம்மா, கொழந்தவேலுன்னு வச்சாங்க. அத சொல்லியே கூப்டுவாங்க... ஆனா இப்ப நீங்க ஆரும்கூட அப்படிக் கூப்புடறதில்ல. எங்காயி வச்ச மண்ணாங்கட்டிதா நெலச்சிருக்கு" என்று சிரிக்கிறான்.

"சரிங்க கொழந்தவேலு, பொண்ணுக்கு நர்சு படிக்க அம்பதாயிரம் குடுத்தா எடம் வாங்கினீங்க?"

"வுடுவனா? நேர, புரவலர் அய்யா வூட்டுக்குப் போன... போல்சு, துப்பாக்கி, காவலு எல்லாம் மறிச்சாங்க. 'போயி சொல்லுங்க. நா ஆதிநா கச்சிக்காரன். அவங்கம்மா இருக்கற ஊருக்காரன். மண்ணாங்கட்டி பாக்கணும்னு வந்துகிறான்னு சொல்லுங்க'ன்னே. ஒடனே ஆளுவந்திச்சி... உள்ளாற கூப்புட றாருன்னு. "இன்னாயா, எப்டீகிற"ன்னாரு. நா சொன்ன. த பாருங்கய்யா, நா தாழ்த்தப்பட்ட ஆதிதிராவிட சாதி. அங்கபோனா, எம் பொண்ணுக்கு நர்ஸ் படிக்க அப்ளி கேசன் போட்டு, லெட்டர் வந்துகிது. எடுத்திட்டுப் போனா, அம்பதாயிரம் கட்டணும்ங்கிறாங்க. இன்னா நாயம்?ன்ன. அவுரு கையக்காட்டி அமுத்தினாரு. ஒடன போன் போட்டு ஆரிட்டயோ பேசினாரு. ஒரு லட்டர் டைப் செய்து குடுக்க சொன்னாரு. கொண்டாந்து குடுத்தே. சீட்டுக் கெடச்சி, படிச்சி முடிச்சி, இப்ப வீனஸ் ஆசுபத்திரிலதா நர்சாகீது. வாரம் ஒருநா தா ஆஃபு. அப்ப வூட்ட இருக்கும்..."

"பெரிய பெரிய மனிசருங்க, மினிஸ்டருங்க வந்து வைத்தியம் பாத்துக்கிற ஆஸ்பத்திரியாச்சே அதுவா?"

“ஆமாம்மா. புரவலர் அய்யாகூட செக்கப்புக்குப் போவாராம். அவங்க சம்சாரத்துக்குக்கூட மூணு மாசம் மின்ன ஆபரேசன்னு சொல்லிச்சி...”

“அப்ப உங்க பொண்ணு, பத்தாயிரத்துக்கு மேல சம்பாரிக்கும்...” மண்ணாங்கட்டியின் முகத்தில் அந்த சந்தோசத்தின் பூரிப்பில் நிழல் படிகிறது. அவள் துணுக் குற்றுப் பார்க்கிறாள்.

“கவுர்மென்டு ஆசுபத்திரியன்னா சம்பளம் அதிகம் கெடைக்குமா? பிறகு லீவு அது இதுண்ணு குடுக்குமா. இங்கே நாலாயிரந்தா குடுக்கிறாங்க...”

“ஏம்பா, சீட்டு வாங்கினாப்பல, ஆதிதிராவிடர்னு, வேலையும் வாங்க வேண்டியதுதான?”

“ஆமாம் பெரிம்மா. அது முன்னமே அப்ளிகேசன் போட்டிச்சி. இப்பதா, போன மாசம் வேலைக்கு வந்திச்சி. லட்டர எடுத்திட்டு ஆசுபத்திரிக்குப் போன. அமைச்சரூட்ல கூட உள்ளாற பூந்துற முடிஞ்சிச்சி. இங்கே போக முடியல. ஒரே காரா வருது. யார் யாரோ கதவத் தொறந்து உடுறாங்க. போறாங்க. நா கெஞ்சுன. ப்பா, தமிழ் செல்வின்னு, நர்சாகீது. எம் பொண்ணு. முக்கியமான லட்டர் குடுக்கணும் பேசணும்னு கெஞ்சுன. பத்துமணிக்கு காலேல போன. வாசல்லியே நின்னுக்கிட்டிருந்தே. அது பன்னண்டுமணிக்கு வராந்தால அந்தக் கடுதாசியையும் எடுத்திட்டு வந்திச்சி. மூஞ்சி, காலு கையெல்லாம் தொப்பி போட்டுட்டு...” என்று சொல்லும் போதே பெருமை பொங்க சிரிப்பு வழிகிறது. “நீ ஏம்பா இங்கெல்லாம் வந்தீங்க? பெரிய ஆபீசருங்க, தலைவர் கள்ளாம் வர எடம், இங்க வந்து ஏன் பேரைக் கெடுக் கிறீங்க? நாவூட்டுக்கு வருவேன்ல? அப்ப பாக்குறது. இப்ப வூட்டுக்குப் போங்க”ன்னு சொல்லிடிச்சி...”

அவன் சிரித்தாலும் அவனுடைய துக்கம் கண்களில் உருகி வழிகிறது. துடைத்துக் கொள்கிறான்.

“ ‘கவுர்மென்ட் வேலை எல்லாம் வாணாம்பா. இங்க சென்டிரல் மினிஸ்டர் எம்.பி. பெரிய பெரிய ஆளுக, நடிகருங்க

எல்லாம் வராங்க. கவுர்மெண்ட் ஆசுபத்திரில ஒண்ணு மில்லாத ஏழைங்க வந்து உருண்டிட்டுக் கெடக்கும். சுத்தம் சுகாதாரம் ஒண்ணிருக்காது... அங்க பத்தாயிரம் குடுத்தாலும், பாஞ்சாயிரம் குடுத்தாலும் இதுக்கு சரியாவாது'ன்னிடிச்சி...''

“ஏம்பா, இங்கென்ன கதையளந்திட்டு நிக்கிற? இந்தக்காயெல்லாம் சாக்குல போட்டு, ஏசண்டு வூட்ல கொண்டு குடுத்திடு.'' ரங்கன் வந்து சொல்றான். எந்த ஏசன்டு, யாரு ஏசென்டு என்று கேட்க முடியவில்லை. ஏதோ ஒரு நாகரிகம் நாவை அழுத்துகிறது. சிலும்புகள் கையைக் குத்துகின்றன. ஆனாலும் அவளால் எதுவும் செய்ய முடிய வில்லை. சொர்ணம் வந்து கேட்டா என்று சொல்லலாமா?

அவன் சாக்கைக் கொண்டு போன பிறகு, நான்கு காய் களைச் சமையலறை மேடை மீது வைத்திருப்பதைப் பார்க் கிறாள். பின்னால் இலைக் குப்பைகளை வேலியோரம் தள்ளி விட்டு, துரட்டுக் கோலுடன் ரங்கன் செல்வதைப் பார்க்கிறாள்.

“ஏம்பா, நாலு காய் எதுக்கு வச்சிருக்கே?...''

“உனுக்குத்தா. உப்புப் போட்டு கஞ்சிக்குக் கடிச்சிக்கலா மில்ல?'' அவனுடைய பேச்சின் தோரணை மெல்லிய உணர்வு களில் முட்களாய் குத்துகிறது. வாங்க போங்க மரியாதை எல்லாம் சுத்தமாகப் போய்விட்டன. அந்தக் காயை இனி எடுத்து நறுக்கக்கூட மனம் ஒப்பாது. அற்பப் பொருள் இல்லை இது. அருமையான பொருள். ஆனால் இவர்களுக்கு எல்லாம் காசு...

வாயில் கீழ்த்திண்ணையில் நின்று ஈரமுடியை அவிழ்த்து விடுகிறாள். எங்கோ அருகில் ‘போர்' பூமிதுளைக் கும் ஓசை நாராசமாகச் செவியில் விழுகிறது. கம்பிக்கதவைத் திறந்து கொண்டு தெருவில் நின்று பார்க்கிறாள். எதிர்ப்புறம் ‘பிளாட்' போட்டிருக்கும் இடத்தில்தான் கிணறு தோண்டு கிறார்கள் போலிருக்கிறது. ஏரி இருந்த இடம்தான். குப்பை களைக் கொட்டி மூடினார்கள். முள் காடாய் இருந்தது.

சுற்றி ஒரு வேலி போட்டுச் சுத்தப் படுத்தினார்கள். ஆஸ்டல் கட்டுவதாகச் சொன்னார்கள். தகரக் கொட்டகை மாதிரி நீண்ட 'செட்'கள் தான் தெரிந்தன. இடிதடியன்கள் போல் இரண்டு மூன்று காப்பிரிப் பையன்கள் தாம் பன மரங்களூடே புகுந்து அந்த செட்டுக்குள் போவார்கள். "பரங்கிமலைப் பக்கம் பெரிய காலேஜிருக்காமே, இன்ஜினிர் காலேஜி, அதில படிக்கிறாங்களாம். ஆனா, அவனுவ படிக்கிறதாத் தெரியல. கஞ்சா விக்கிறானுவ" என்று ரங்கன் சொன்னான். இது போன்ற செய்திகளை அவள் செவிகளில் போடத் தவறமாட்டான்.

இப்போது பறங்கிமலையில் அந்தக் காலேஜே இல்லையாம். சங்கரியின் அண்ணன் மகனை அங்கே சேர்க்கத்தான் வந்து இங்கே குடும்பம் போட்டாள். அப்போதே அது வேறங்கோ போய்விட்டது. அந்தக் காப்பிரிகளும் இல்லை. இப்போது அந்த இடம் கைமாறி, கிணறு தோண்டுகிறார்கள்.

இரும்புக் கம்பிகளை ஏற்றிக் கொண்டு ஒரு லாரி போகிறது. பின்னே ஓர் ஆட்டோ. இரண்டு சக்கர பைக் என்று தெருவில் இந்தப் பகல் நேரத்திலும் சந்தடி. எவர் சில்வர் பாத்திரக்காரர், வழுக்கை மண்டை பளபளக்க, சைகிளைத் தள்ளிச் செல்கிறார். பின்னால், ஜயந்தி டீச்சர்... பை, குடை எதையும் காணவில்லை. முகம் செவசெவ என்று இருக்கிறது. இவள் ஜூபிலி ஸ்கூலில் வேலை செய்கிறாள். இந்தத் தெரு மூலையில்தான் பழைய ஓட்டுவீட்டை வாங்கிக் கட்டிக் கொண்டிருந்தாள்... இங்கே தான் வருகிறாள்.

"ஆச்சிம்மா, கெஞ்சம் உள்ள வரீங்களா?"

"வாங்க, என்ன விசேசம்?" அவள் வாசல் கதவைச் சாத்திவிட்டு உள்ளே செல்லும்போதே ஜயந்தியும் வருகிறாள். "என்னம்மா? இன்னிக்கு ஸ்கூல் இல்லையா?"

"இருக்கு. லீவு போட்டேன். சங்கரி இங்க வந்ததாம்மா?" கேள்வியில் உள்ள பதற்றம் அசாதாரணமாக இருக்கிறது.

"யாரு... உங்க வீட்டில குடியிருந்த சங்கரியா?"

"ஆமாம்மா, பத்து நாளா அவளக் காணல..."

"என்னது? காணலியா?..."

"முத ஞாயித்துக்கிழம மாசாமாசம் நானோ, அவுங் களோ வந்து வாடகை வாங்கிட்டுப் போவோம். அவ இங்க வந்து அஞ்சு வருசமாகப் போவுது— அண்ணன் புள்ள படிச்சி முடிச்சிட்டுப் போயிட்டான். இங்கியே கிரிச் மாதுரி புள்ளங்கள வச்சிட்டு இருந்தா. "மேடம், நா பிழக்கணுமே, இப்டிச் செய்யிறதுக்கு நீங்க ஒண்ணும் சொல்ல மாட்டீங் கன்னு நினைக்கிற..."ன்னிச்சி. சரின்னு ஒத்துக்கிட்டேன். பாவம்மா, அது. வாசப்பக்கத்துல உள்ள ரூமுல, காலம எட்டு மணிக்கு ஜெரோம் டாக்டர் வருவாரு. ரெண்டு மணி வரையிலும் பாப்பாரு. ஓமியோபதிதான். ஏழை எளிசுங் களுக்கு மருந்துக்கு மட்டும் பத்து ரூபா வாங்குவாரு. சாயங் காலம் மெயின்ரோடு வீட்டுல இருப்பாரு. புள்ளங்களக் கொண்டு விடுற எஸ்தர், ஈசுவரி ரெண்டுபேரும் கதவு பூட்டி ருக்கிறத பாத்திட்டு டாக்டர்ட்ட கேட்டிருக்காங்க. அவருக்குத் தெரியல. சாதாரணமா அது எங்கும் போகாது. ஞாயிற்றுக் கிழம புள்ளங்க வராது. எப்பவானும், ரயில் கேட் தாண்டி, ஆஞ்சநேயர் கோயிலுக்குப் போகும்... இப்ப பத்து நாளாக் காணலன்னு சொல்றாங்க. இந்தப் பக்கம் துணிக்கடைக்காரர் வீட்டுல தெரியலன்றாங்க..." அவள் சொல்வது வெறும் விவரங்களாக இல்லை.

"ஏம்மா இவ்வளவு பதட்டப்படுற? அண்ணன், இல்ல உறவுகாரங்க, தெரிஞ்சவங்க வீடுகளுக்கு அவசரமா கௌம்பிப் போயிருப்பா... அவளுக்கு... கலியாணம் ஆயி புருசன் வச்சுக்கலியா?..."

"அய்யோ, அது பெரும்பாவம் ஆச்சிம்மா! வயசுக்கு வந்த நேரம் சரியில்லயாம். அதுனால கலியாணம் காட்சின்னு ஆகாமலே அந்தக் கன்னித் தெய்வம் போல நெருப்பா நின்னிட்டிருந்தா..."

சொல்லும் போதே ஜயந்திக்குக் கண்களில் குளம் கட்டு கிறது. இப்படியும் ஒரு பாவம் உண்டா என்று நெஞ்சு பதைக்கிறது.

"இவங்கல்லாம் புனாவில இருந்தாங்க. இவருக்கு இன்னொரு அண்ணன் இருக்கிறான். ஒரு தங்கச்சி அமெரிக் காவில் இருக்கிறா. அப்பா நடுவயசுல எறந்துட்டாரு போல. கஷ்டப்பட்டு பையங்களப் படிக்கவச்சி, கலியாணங்கார்த்தி செஞ்சிருக்காங்க. அம்மா கடோசி வருசங்கள்ள, பாரிச வாயு வந்து படுத்திட்டாளாம். இவளக் கலியாணம்னு கழிச்சி யார் வூட்டுக்கானும் அனுப்பிச்சிட்டா, மாமியாருக்கு ஆரு செய்யிறதுன்னு அண்ணிகாரியே வந்த எடமெல்லாம இதச்சொல்லித் தடுத்திட்டான்னு சொல்லுவாங்க. எங்கக்கா புனாவுல இருந்தா. அப்படி அவுக மூலமாத்தான் இந்த வீட்டில வச்சேன்... நானும் எல்லாப் பக்கமும் விசாரிச் சிட்டேன்... ஆச்சியம்மா, அரச புரசலாச் சொல்லிக்கிறாங்க. குரோம்பேட்டப் பக்கம் பத்து நா மின்ன ரயில்ல அடிபட்டு நசுங்கி ஒரு பொம்புள பொணம் இருந்திச்சாம். பரங்கிமல போலீசு டேசன்ல விசாரிச்சதுல, பெரியாசுபத்திரிக்கு அனுப்பிச்சி, பாடி கிடங்கில வச்சிருந்தாங்க. ஆரும் வரல. எரிச்சிட்டாங்கன்னு தெரியுது. ஆச்சிம்மா.... வயிறே துடிக்கிது. வூட்ட சாவிபோட்டுத் தெறந்து, தேடின. அவண்ண அட்ரசுக்கு, டில்லிக்கு ஃபோன் போட, ஒண்ணும் தெரியல. தந்தி ஒண்ணு அனுப்பிருக்கிற. எந்தப் படுபாவி என்ன செய் தானோ, என்னேமா..."

நா ஒட்டிக் கொள்கிறது. உடலிலுள்ள கோடானு கோடி அணுக்களும் குலுங்கினாற் போல் இருக்கிறது. சுவரைப் பிடித்துக் கொண்டு ஒட்டிக் கொள்கிறாள்.

"ஆச்சி, காஞ்சிவரம் ரோட்டுல, அங்க ஒரு அம்பாள் கோயில் ஆசிரமம் வச்சிருக்காங்களாம், வாரீங்களா, போய் வரலாம்..." என்று கேட்டு குரல் ஒலிக்கிறது. அவள் போக வில்லை.

“ஏம்மா, அந்த வாசல் டாக்டர் எப்பிடி வயசான வந்தா...”

“ஐயம்மா, அவுரு ரெம்ப நல்ல மனிசரு. அவருக்கு வயசா—தொண்ணூறாகப் போவுது. செத்துப் போன சம்சாரம் நினைவாத்தான் தரும வைத்தியமே பண்ணுறாரு. அவுருக்குன்னு ஒரு சைகிள் ரிச்சா, அதுலதா வருவாரு போவாரு. அவுருதா சொல்லப்போனா, காபந்து.”

“ஆமா, நானும் பாத்திருக்கிற... வெளுப்பா வேட்டி சட்டை போட்டுட்டு மூக்குக் கண்ணாடி போட்டுட்டு வருவாரு. இந்தப் பக்கம் அந்தப் பக்கம் ஏழை எளிசெல்லாம் வந்த பெறகுதா அவுரு உங்க வீட்டு ரூம்புல வச்சிட்டாருன்னு தெரியும்...”

“ஆச்சிம்மா... எனக்கு, அந்த ஸ்கூல்ல ஒரு தடியன் இருக்கிறான். மோசமான ஆளு. அவன் சங்கரியக் கூப்புட்டுவுட்டு, ‘ஏம்மா, இந்தப் புள்ளீங்கள வச்சிட்டு லோலுப்படுற. கான்டீன்ல லஞ்ச்பாக்கெட் போடற உத்தேசம் இருக்கு ஒரு லெமன் பாத், இல்லாட்டி விஜிடபிள் தக்காளி பாத், காலம பத்துமணிக்கு வந்தா ஒரு மணியோட வேலை குளோஸ். இப்படி ஆறுமாசமம் மூணு மாசமுமான புள்ளங்க. அழுகைய மாத்தி, மூத்தரம் பீ எடுத்து, நோவு நொடிபாத்து, உனக்கு என்ன கெடக்கிது? இதுல மாசம் ரெண்டாயிரம் வரும். காபி சாப்பாடு கழிஞ்சு போகும்’ன்னானாம்...” டாக்டர்ட்ட சொல்லிச்சாம.

“யாரு, அந்தப் பாவி, தாசனா?”

“தாசனே வந்து கேப்பனா? அவனுக்கு எடுபிடிகள் இருக்கே? சீ? ஸ்கூலா? அங்கேயும் ரெண்டாயிரம் புள்ளங்க படிக்கிதுங்க. பணமா கறக்கிறான். ஹேமான்னு ஒரு பொண்ணு. அவகிட்ட ஏழப் பொண்ணு தானேன்னு பல்ல இளிச்சிருக்கிறான். அவ மேச்சாதி இல்ல. அதுங்க தா, போலி கவுராதி பாத்திட்டு விட்டுக் கொடுத்துப் பூசி மெழுகும். இவ நேர போலீசுக்குப் போயிட்டா. மாதர் சங்கம்கூட

வந்தது. ஆனா, எங்கெங்கோ பணத்தக்கட்டி, வாயக்கரிசி போட்டு எந்தப் பேப்பரிலும் ஒரு சமாசாரமும் வராமப் பாத்துக்கிட்டான். பொம்பிளக, வயித்திலல்ல, நெஞ்சில நெருப்ப வச்சிட்டு வேல பாக்குறோம். என்னமோ படிச்சிட்டா, வேல பாத்துட்டா சொதந்தரம் வந்திரும்னாங்க. ஒரெழவும் இல்ல...''

இவளுக்கு ஒன்றும் பேசத் தெரியவில்லை.

"இப்ப, நமக்கு ஒரு துப்பும் கெடக்கல. இவதா ரயில் பாதையில விழுந்து தற்கொலை பண்ணிட்டாளா, இல்ல, எதானும் நடந்து பாதையில வீசிட்டாங்களா? அடிவயிறு சொறேல் சொறேல்னு இழுக்குது. நானும் ரெண்டு பொம் புள புள்ளங்கள வச்சிருக்கிறேன். ஒண்ணு இத நாலா வருசம் மெக்கானிகல் படிக்கிது. ரெண்டாவது, பிளஸ் ஒண்ணில நிக்கிது. எந்நேரமும் டி.வி. முடிய பாப் பண்ணிட்டு வந்திட்டா. நா காலேல ஏழர மணிக்கு வூட்டவிட்டா, பொழு தடஞ்சி வர. சனிக்கிழமை ஞாயித்துக்கிழம கூட லோலுதா... அங்கியும் எல்லாம் பொம்புளபுள்ளங்க. எச்.எம். நல்ல மாதிரி... ஸ்கூல நல்லா கொண்டாறனும், நல்ல பேரு வாங்கனும்ன... எல்லாம் பாவப்பட்ட வீட்டுப் புள்ளங்க. அதுங்களுக்கு ஒரு வழி காட்டுறோம்ங்கற திருப்திதா. இங்க வீட்டுல வந்தா இந்த மனிச, பொம்புள புள்ளயப் போயி சிகரெட் வாங்கிட்டு வரச்சொல்றாரு. அத்தப் புடிச்சித் திட்ன...

''யாரிடமேனும் சொல்லி அழவேணடும் என்று தோன்றும் ஆவேசம். ஆற்றாமை. யாரைக்குறை சொல்ல?...''

"படிக்கிறபுள்ளங்கள இந்த நாசகார டி.வி.யே கெடுக்குது ஆச்சியம்மா? இந்தாளு, வி.ஆர்.எஸ். எதுக்கு வாங்கிட்டாரு?... ரெண்டு வளர்ந்த புள்ளகள வச்சிட்டு, வீட்டிலியே பாட்டில வாங்கி வச்சிட்டுக் குடிக்கிறாரு. இதுக்குதா அவுசிங் போர்டு வீட்டுக்குப் போனம். சீ...?'' கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

"இப்ப வீட்ல ரணகளம். சின்னவ, பேசாம என் ஸ்கூலி லேயே படிக்க வச்சிட்டிருப்பேன். அது ஒழுங்கா வந்தி ருக்கும். அரசுப் பள்ளிக்கூடம், இவுரு அந்தசுக்கு சரியில் லேன்னு, ஆயிரம் ஆயிரமாப் புடுங்குற ஸ்கூல். அங்கேந்து, 'மிஸ் எலிகென்ட்' போட்டிக்கு இந்த இளசுகள அனுப்புறாங் களாம். இவ போவேன்னு நிக்கிறா. மாசம் ஆயிரம் ரூபாய்க்குக் குறையாம அதுக்கு லோஷன், கிரீம், லொட்டு லொசுக்கு... கண்ணத்துறந்திட்டே குழில புடிச்சி ஒரப்பன் தள்ளூறான். நா என்ன செய்யட்டும் ஆச்சிம்மா? வெள்ளம் கரைபுரள வருது. வெறும் கரையும் மண்ணு. குடும்பம்ங்கறது எப்பிடி நிக்கும்?... இன்னிக்கு இந்த சங்கரி. நாளைக்கு இது எனக்கு, எம்புள்ளங்களுக்கு நேராதுன்னு என்ன நிச்சியம்? முதல்ல இந்தக் குடிக்கடைகளை மூடமாட்டாங்களா? எங்க ஸ்கூல்லேந்து, எட்டுனாப்புல ஒயின்கடை. அதுக்குப் போறவார எடமெல்லம் அம்புக்குறி போட்ட போர்டு. ராச்சசன்கள அழிச்ச, காளி எப்ப அவுதாரம் எடுத்து எல்லாம் நிர்மூலம் ஆக்கப் போறாளோ...!"

ஒருவாறு மூச்சு விட்டுத் தணிகிறாள்.

"ஆச்சி, கூடை எதானும் வச்சிருக்கீங்களா? இருந்தா குடுங்க... பணம் கொண்டாந்திருக்கிறேன்..." இடுப்பில் இருந்த சிறுபையை எடுக்கிறாள்.

"இல்லையேம்மா, நா போட்டு வைக்கிறேன். இப்ப முருகன் கடையில் அந்த நாருஇல்ல. மெயின் பஜார்ரோடுல இருக்குன்னான். நீங்க இப்ப பணம் ஒண்ணும் தரவேண்டாம். நா போட்டு வைக்கறேன்... பதனமாப் போங்கம்மா..."

## 12

"பதனம்... எது பதனம்? யாருக்கு? எப்படி?..."

ஆயி முகம் தெரியாது அவளுக்கு. கிழமாகச் சவுங்கிப் போன அப்பனின் முகம் நினைவில் நிழலாகத் தெரிகிறது. அவளை இரண்டு தோள்களிலும் கால்கள் விழத்

தூக்கிக் கொண்டு மாரியம்மன் கோயில் திருவிழாவுக்குக் கூட்டிப்போவார். பெரி...ய காவிரி. அதன் கரை மேல் இருக்கும். இறங்கினால் பரிசல் துறை. கூடைபோல் பரிசல் இருக்கும். அதில் உட்கார்ந்து ஒருநாள்கூடக் காவிரியில் போனதில்லை. திருவிழா ஆடிமாசத்தில் வரும். படையல் போடும் கும்பலைப் பார்த்துக் கொண்டு நிற்பாள். கூட்டம் கோயிலிலா, ஆத்துக்கரையிலா என்று நினைவுத் தெளிவில்லை. அம்மன் தேர் வரும். அய்யா, ஆட்டுத்தலை, மாவிளக்கு, பழம் எல்லாம் கொண்டு வருவார். இந்த நிழல் படங்களும்கூட மங்கும்படி, அவர் ஒருநாள் செத்துப் போனார். சின்னாயி அவளை அதே காவிரியாத்தின் பக்கம் நிறுத்திவிட்டு, "போடி, உங்க மாமன் வூட்டுக்கு?" என்று சொல்லிவிட்டுப் போய்விட்டாள். இடுப்பில் ஒரு முழ சீலைத் துண்டு மட்டுமே உடுத்தியிருந்தாள். கரகரவென்று பரிசல் துறையின் பக்கம் இறங்கி நின்றாள். பரிசலில் இருந்து செவத்த அய்யாமார்கள், கோட்டு, கடுக்கன் போட்டவர்கள், பொம்புளைகள் இறங்கி கரைமேல் இருந்த வண்டியில் போனார்கள். நடந்தும் போனார்கள்.

"சேரிப்புள்ள போலிருக்கே? பொழுது எறங்கிப் போச்சே, ஏம்மா நிக்கிற...?" என்று பரிசல்காரர் கேட்டார்.

"எங்கப்பாரு செத்திட்டாரு. எங்க சின்னாயி, 'நீ மாமவூட்டுக்குப் போயிடு'ன்னு இங்க கொண்டாந்து வுட்டுப் போயிட்டாங்க..." என்று அழுதாள்.

"யாரு உங்கப்பன்...?"

அவளுக்குச் சொல்லத் தெரியவில்லை.

"சின்னாயி அடிக்கும், சூடுவைக்கும்..." என்று பெரிதாக அழுதாள்.

"அடபாவமே?..." அவர் சுற்றுமுற்றும் பார்த்தபோது, இன்னொராள் வந்தார்.

"அதாம்பா, ராயர் பண்ணையாளு. சித்தாதி. குடிச்சிட்டுக் காவாயில வுழுந்து செத்திட்டான். அவம் பொண்ணு

போல இருக்கு இது...” என்ற விவரம் சொன்னதும், பரிசல் காரர் அவளுக்குச் சோறு வாங்கிக் கொடுத்து அவர் குடிசையில் தங்க வைத்துக் கொண்டதும் மறக்கவில்லை.

பிறகு அடுத்த நாள் அவர், காலையில் ஆபீசுக்குக் கச்சேரிக்குச் செல்பவர்கள் செல்கையில், பரிசலில் ஓர் ஓரத்தில் உட்கார்த்தி வைத்தார். முதல் நாள் கோட்டும் கடுக்கனும் தலைப்பாவுமாக வந்த பெரியவர், “ஏம்ப்பா சோலை? உனக்குக் கல்யாணமே ஆவல, இது யாரு பொண்ணு?” என்று கேட்டார். அவர் என்ன சொன்னார் என்பதை அவள் கேட்டுக் கொள்ளவில்லை. அவளுடைய கனவு நிறைவேறிக் கொண்டிருக்கிறது. பெரிய மூங்கில் கம்பை உள்ளே விட்டு, அவர் பரிசலைத் தள்ளிக் கொண்டிருந்தார். பரிசலுக்குள் வெறும் ஒற்றைச் சீலைத் துண்டுடன் கையைக் குறுக்கே கட்டிக் கொண்டு நின்று, காவிரியையும் வெள்ளத்தையும், மூங்கில் கம்பினால் தள்ளிச் செல்லும் விந்தையையும் பார்த்துக் கொண்டிருந்தாள். மூங்கிலை எடுத்து உயர்த்தி மறுபுறம் வைக்கும் போது நீர் சொட்டியது. மேலே பட்டபோது எப்படி உடல் சிலிர்த்தது? இந்தப் பயணத்துக்கு முடிவே வராமல், இவருடன் இந்த ஆற்றின் குறுக்கே போயும் வந்தும்... நீள வேண்டும் என்ற கற்பனை யில் இருந்தாள். ‘மறுபடியும் சின்னாயி வீட்டுக்கோ, சின்னாயி போல பொம்புளகள் உள்ள வேறு எந்த வீட்டுக்கோ என்னிய அனுப்பிடாதீங்கையா’ என்று பரிசல்காரரின் கால்களைப் பிடித்துக் கெஞ்ச அவள் உறுதி செய்து கொண்டிருந்தாள். அக்கரை வந்து எல்லோரும் இறங்கிச் சென்றனர். கோட்டுக் காரர்கூட இறங்கி நடந்து போனார்.

“எறங்கு புள்ள, உம் பேரென்ன?”

அவள் இறங்குவதாக இல்லை. பேரும் சொல்லவில்லை. பேரென்று அவளுக்கு என்ன இருந்தது? அப்பன் ‘கண்ணுத் தாய்’ என்று செல்லமாகக் கூப்பிடுவான். ‘உங்காயி எட்டுப் பெத்தா, நீ ஒருத்திதாம்மா எனக்கு அழகாயி போட்ட பிச்ச...’

என்று கள்வாடை வீசும் சுவாசம் முட்ட, அணைத்து உச்சிமோந்து பாசத்தைக் கொட்டுவார்.

சின்னாயியோ ஆயிரம் பேதிக்கும், கழிச்சலுக்கும் கூப்பிட்டுச் சாபம் கொடுப்பாள். இவள் பொழுதுக்கும் மண்ணில் தனியாக விளையாடிக் கொண்டிருப்பாள். அப்பன்தான் காலையிலும், பொழுது சாய்ந்த பின்னும் சோறோ கூழோ, எதுவோ கொடுப்பான். அவர் அருமையாக முடிச்சுக்குள் வைத்து வேகவைத்த வள்ளிக்கிழங்கோ, பொட்டுக் கடலையோ கொடுத்தது இப்போதும் கண்களில் நீரை வருவிக்கிறது.

பரிசல் துறையில் நின்றது 'பெண்' என்று யாரும் அவளைக் குலைப்பதற்குரிய பொருள் என்று நினைக்க வில்ல. "பொம்புளப்புள்ள அய்யா?" என்று பதனமாகப் பார்க்க, அக்கரையில் வக்கீல் அய்யர் வீட்டில் சேர்த்தார். அவர் காந்தி கட்சி. அவளைப் பின்புறமாகத் தான் பரிசல்காரர் கூட்டிச் சென்றார். மாட்டுக் கொட்டகை, எருக் குழிகள்... வாழை மரங்கள், அவரைப் பந்தல்... இவரும் பின்னாலிருந்து தர்ன் கூப்பிட்டார்.

"ஏம்ப்பா, என்ன விசயம்?...."

மஞ்சட்சீலை உடுத்த சிவப்பாக ஒரு பெண் பிள்ளை. அம்மா... அய்யர் சாதிக்கட்டு. காதுகளில் வயிரத் தோடுகள் மின்னின. மூக்கில் பொட்டுகள் பளபளத்தன. இவர்கள் வீட்டிலா...?

"பரிசக்காரையா, என்னிய இங்கெல்லாம் வுட்டுட்டுப் போகாதீங்க? நா உங்ககூட வாரேன். உங்கக்குக் கஞ்சி காச்சித்தாரேன். ஒங்கக்கு எதுன்னாலும் செய்யிறே..." என்று அவர் காலைப் பிடித்துக் கொண்டாள்.

"யாரப்பா, குழந்தை, உள்ளே வாயேன்?"

"இருக்கட்டும்மா..." என்று சொல்லிக் கொண்டு கொட்டில் கடந்து கிணற்றுக்கரைப் பக்கம் நின்றார்கள்.

"இது... சேரி... குடிபடைச்சாதிங்க. அப்பன் ஆயி செத்து, அநாதியா வந்து நிக்கிது. பொம்புளப்புள்ள. அம்மா, காபகம் வந்திச்சி. ஏதோ கொட்டில்ல சாணி சகதி அள்ளிப்போடும். ஒரு நேரம் ரெண்டு நேரம் சோறூத்துங்க. உங்கக்குப் புண்ணி யமாவும்..."

"அஞ்சு வயசுகூட இருக்காது போல... பாவமே?..." என்ற வள் அருகில் வந்து அவள் கையைப் பற்றினாள். விலாவில் சின்னாயி போட்ட சூடு புண்ணாக இருந்தது. அதில் ஈ வந்து குந்தியது...

"என்னம்மா இது? இது சூட்டுக்காயம் போல... அடாடா... சீக்கோத்திருக்கு?" அவள் கோவென்று பெரிதாக அழுதாள்.

"ரெம்ப பயப்படுதுங்க. பொம்புளப்புள்ள, உங்களுக்குப் புண்ணியமாப் போவுதும்மா, சின்னாயி கொடும, நாளும் தெரிஞ்சவ...."

"நீ கவலப்படாத. என் வீட்டுப் பிள்ளையாப் பாத்துப் பேன். எங்க வீட்டுக் கமலி போல பாத்துப்பேன். போயிட்டுவா..." என்று அவனை அனுப்பினாள். இவளுக்குப் பயம் பிடித்துக் கொண்டது. தேம்பித் தேம்பி அழத் தொடங் கினாள். "சீ... அழாத. அழக்கூடாது..." என்று அவள் கண் களைத் துடைத்தாள். சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி னாள், கிணற்றில் நீரிறைத்து ஊற்றி.... ஓ! அவர்களுக்குக் கிணறு கிடையாது. மோட்டுவாய்க்கால் கரையில்தான் சட்டி பானைக்கழுவி, துணி அலசி... அப்பன் செத்தபிறகு அவள்தான் எல்லாம் செய்வாள். சின்னாயி காலையில் வயலுக்குப் போனால், மாலையில் அந்த இன்னொரு ஆளுடன் வருவாள். இருவரும் கள் குடிப்பார்கள். சோறு காய்ச்சினால் ஒரு வாய்கூட வராது. கேட்டால் அடிப்பாள். குளிப்பாட்டி, சூட்டுக்காயத்தைப் பஞ்சால் துடைத்து ஏதோ களிம்பு போட்டாள். புண்ணில்படாமல், கால்வரை தொங்கும் கவுன்... பூப்போட்டது. அவளைக் குளிப்பாட்டிக்

கொண்டிருக்கையில் இன்னோர் அம்மா அங்கு வந்தாள்... "என்ன சம்பு? அப்பா ஒத்துப்பரா?" அம்மா திரும்பிப் பார்த் தாள். "உம்? அவர் செஞ்சது எதையும் நான் ஒத்துக்கல!"

துணி கொடுத்து காயத்துக்கு மருந்து போடுகையில் உள்ளிருந்து சமையல்காரர் போலிருக்கிறது, வந்தார்.

"சம்பும்மா, உங்கப்பா பாத்தா ரகளயாகப் போறதே?"

"ஓய், உம்மக்கேக்கல. இனிமே நீர் சமைக்க வரவேண் டாம். நாங்களே சமைச்சிக்கறோம்! சாப்புடறவா சாப்புடட் டும், இல்லாதவா போகட்டும்!" என்றார் கோபமாக.

இவளுடைய கத்தலில், மொட்டைத் தலையில் ஒரு உச்சிக் குடுமியும் சந்தனக்குறுக்கும், விசிறி மட்டையுமாகப் பெரியவராகிய அவள் அப்பா கூடத்தில், நடை ஓரத்தில் வந்துவிட்டார்.

"அடி., சம்பு? நன்னாயிருக்கா? கேக்கறேன், வழிவழியா வேதத்யயனம் பண்ணின குடும்பம்டீ இது?... ஏ, பற மூதேவி? போடி கொல்லப்பக்கம்? எங்கேந்து இங்க கொண்டு விட்டி ருக்கான்? எல்லாம் இந்தத் தாமு குடுக்கிற எடம். போடி....!" விசிறிக் காம்புடன் ஓடி வந்த அவரைப் பார்த்து அம்மா சிரித்தார். அவள் மருண்டு ஓடிப்போக முடியாதபடி தன்னு டன் ஒட்டிக் கொண்டாள்.

"கிட்ட வராதீங்க. தீட்டு ஒட்டிக்கும். அப்பா, நீங்க என்ன பண்றேள், வாசப்பக்கம் ரூம்ல மடியா இருந்துக் குங்கோ. நாங்கதா சமைக்கப் போறோம். சமைச்சு சாப் பாட்டை, மடியா, ராகவனக் கொண்டு குடுக்கச் சொல் லுங்கோ!"

"பிராரப்தம்... ஏண்டி சம்பு இப்படி வதைக்கிற?"

"யாரப்பா உங்கள வதைக்கறா இப்ப?... அதான் தாமு, உங்க மாப்பிள, அவனவிட்டு இந்த வீட்ல இதெல்லாம் கூடாதுன்னு சொல்லச் சொல்லுங்கோ, நான் இவளையும் கூட்டிண்டு போயிடறேன்...."

உள்ளே கூட்டிச் சென்று, இலை போட்டு, வாழைக் காய்ப் பொரியலும் பருப்புக் குழம்பும் நெல்லுச் சோறுமாகப் பிசைந்து போட்டாள். தேவதைக் கதைகளை யாரும் அவளுக்குச் சொன்னதில்லை. ஆனால் ஒரு தேவதை அவளுக்குத் தாயாக இருந்து, பாதுகாத்தாள். அன்று சாப்பிட்ட உடனே, பழைய சேலை மடிப்பில் அம்மா படுக்க வைத்ததும் தூங்கிப்போனாள். எத்தனையோ நாளைய ஆதரவற்ற, பயம், வயிற்றுப்பசி, எல்லாம் அந்த தேவதைக் கையால் நீங்கிவிட்டன. அந்த வீட்டில் அவள் பல விஷயங்களைப் புரிந்து கொண்டாள். பெரியவருக்குப் பெண்சாதி முதலிலேயே இறந்துவிட்டாள். இரண்டு மகன்கள், இவள் ஒரு மகள். மகன்கள் இருவரும் படித்து, டில்லி பம்பாய் என்று கல்யாணம் கட்டி வேலையில் இருந்தார்கள். கமலி இவருடைய அண்ணன் மகள். இவளை, பத்து வயசுக்குள், வீட்டில் எடுபிடி வேலை செய்ய வந்த தாமுவுக்குக் கட்டிவிட்டார். தாமுவை அவர்தாம் படிக்க வைத்தார். தாமுவுக்கு அக்கா முறையில் ஓரம்மாள் அங்கே அடிக்கடி வந்து அதிகாரம் செய்வாள்.

கமலி, உள்ளூர் பள்ளிக்கூடத்தில் நாலாவது படித்துக் கொண்டிருந்தாள். தாமு, சம்பகாவின் புருசன், வக்கீல்... வாசல் பக்கம், கலகலவென்றிருக்கும் நடையில் மாடிப்படி. மாடிக்கு யார் யாரோ கட்சிக்காரர்கள் வருவார்கள். சீனு அய்யர் குமாஸ்தா. வீட்டில் பெரிய வில்வண்டி இருந்தது. கிழவர் வாசல் மேல் திண்ணை, கீழ் திண்ணை, முன் பக்க அறை இத்துடன் நிறுத்திக் கொண்டார். கொல்லைப்புறம் போக வேண்டுமானால்தான் காதில் பூணூலை மாட்டிக் கொண்டு போவார். அந்த சமயம் அவள் எங்கேனும் மூலையில் ஒண்டிக் கொள்வாள். அம்மாவைப் பார்க்க, கதரணிந்த இளம்பிள்ளைகள் வருவார்கள். நிறைய புத்தகங்கள் கொண்டு வருவார்கள். கமலி இவளை விடப் பெரியவள். அம்மா இவளுக்கும், தமிழ், இங்கிலீசு எல்லாம் கற்றுக் கொடுத்தாள்.

வக்கீலையா, மாடியில் இருந்து இறங்கி, வீட்டைச் சுற்றிச் செல்லும் சந்து வழியாகவே பின் பக்கம் போவார். அவருக்கென்று குளியலறை ஒன்று இருந்தது. மாரிமுத்து என்ற வண்டிக்காரன் அநேகமாக வீட்டோடு இருந்தான். அவன்தான் அவருக்கு வெந்நீர் போட்டு, துணிதுவைத்து, வண்டியோட்டிக் கச்சேரிக்குக் கூட்டிச் சென்று எல்லா வேலைகளும் செய்தான். கமலியும் அவரும், கூடத்தில் ஒரு பக்கம் படுத்துக் கொள்வார்கள். ஊஞ்சல் பலகையில் அம்மா படுப்பார். விசுபலகை ஒன்று உண்டு. அவளுக்கு அப்போது எதுவும் புரிந்து கொள்ள வயசாகவில்லை. அய்யர் வீட்டு நடைமுறைகளைப் பற்றி எதுவும் தெரிந்திராததால், சாப்பாடு, துணி, அன்பு, புழங்க பெரிய இடம் எல்லாம் கிடைத்த எதிர்பாராத சந்தோச மூச்சு முட்டலில் பழகியபின் இவள் புரிந்து கொண்ட செய்திகள்...

கிழவர் ஒரு நாள் தவறாமல் இவளைப் பார்க்க நேர்ந்து விட்டால், பறப்பீடை, தொலைஞ்சு போடி, திமிரு திமிரு... என்று கத்துவார். அவள் பின்புறம் கொட்டிலில் சென்று ஒட்டிக் கொள்கையில் அம்மா உடனே வந்து விடுவார்.. "அவ ஒண்ணும் பீடையில்ல. இந்த வீட்டுக்கு நல்லது வந்திருக்கு. கண்ணம்மா, நீ பயப்படாதே! அந்தக் கிழம் இப்படி எதை வேணாச் சொல்லட்டும். உன்கிட்ட வராது..." என்று தேற்றுவாள்.

இவள் வந்து தீட்டுப்பட்ட வீட்டில், அவர் சாப்பிடுவ தில்லை. அவருக்கு, தலை மொட்டையடித்த, வெள்ளைச் சீலை அம்மா சாப்பாடு கொண்டு வந்து வாசல் அறையிலேயே கொடுப்பார். அந்தக் கூடத்தில் சாமிபடங்கள், பூசை சாமான்கள், விளக்கு எல்லாம் இருந்தன. எல்லாமும் வாசல் அறைக்குப் போய்விட்டன. சீனு அய்யர்தான் கிழவருக்கும் எடுபிடி. கிழம் கந்து வட்டிக்குக் கடன் கொடுக்கும். ஏழை எளியதுகளின் இரத்தம் உறிஞ்சுவது போல் வட்டி வாங்கும், என்பதெல்லாம் அம்மா அதைத் திட்டும்போது உதிர்ந்த உண்மைகள்.

சுந்தரம் சுந்தரம் என்று ஒருவர் வருவார். அம்மா ராட்டை வைத்து நூல் நூற்பார். அவர் பஞ்சுபட்டை கொண்டு வந்து கொடுப்பார். நூற்ற நூலை சிட்டத்தில் சுற்றுவதை அவள் பார்த்துக் கொண்டே இருப்பாள். அம்மா அவளை எழுதச் சொல்லிவிட்டு, நூற்பார்.

"காந்தி, கடங்காரன், சண்டாளன், இப்படி பரம்பர தர்மங்களை நாசம் பண்ணிட்டானே?" என் வீட்டில, எனக்குக் கை நனைக்க வழியில்லாம இப்படி அட்டூழியம் பண்றாளே? அம்மா இல்லாத குழந்தைன்னு கண் கலங்காம வச்சிண்டிருந்தேன். பாவி நெருப்பை அள்ளிக் கொட்டுறாளே? ஆசாரிய சுவாமிகள் வராராமா?"

"ஆமா. பிரும்மதானபுரம் சத்திரத்தில் தங்கறாராம். இந்தத் தெரு வழியா நாளைக்கு வறாராம். பூரணகும்பம் குடுத்து உபசாரம் பண்ணனும்னு எங்கண்ணா சொல்லிண்டிருந்தான். பத்து நாள் தங்குவார் போல. இப்பத்தான் விவஸ்தையே இல்லையே? தலை எடுக்காம, எவளானும் என்னைப்போல இருக்கறவா தெருப் பக்கம் வந்தோ எட்டிப்பாத்தோ தொலைக்கக்கூடாது. அப்படி ஓராத்துல பிக்ஷை பண்ணிட்டிருக்கப்ப, ஒரு மூதேவி தெரியாம, அந்தாத்துல வந்துடுத்தாம். பிக்ஷை எடுக்காம போயிட்டாராம்..."

"ஏ ருக்மிணி! இங்க வாடி! ஏற்கெனவே அது ஆடிண்டிருக்கு, நீ கள்ள ஊத்திக் குடுக்கிறியா? வந்து சோத்தப் போட்டுட்டுப் போயச் சேரு? என்னடி பேச்சு?" என்று அம்மா கத்தியபோது அவளுக்கே தூக்கி வாரிப்போட்டது. பாவம், அந்தம்மா...

"அஞ்சு வயசிலும் பத்து வயசிலும் கல்யாணத்தப் பண்ணி வச்சிட்டு, பொண்ணுகள வதைக்கிறது? யாருடி அந்த ஆசாரியன், எதுக்கு இப்படிக் கொலை பாதகம் பண்றான்?..." என்று அம்மா, சம்பு என்றழைக்கப் பெற்ற தெய்வம், காளி அவதாரம் எடுத்தாற்போல் கத்தினாள்.

''இவனுவ வண்டவாளங்களை எடுத்துவிட்டால், பள்ளுப் பறைன்னு ஒதுக்கி வச்சிருக்கிற குடிசைக் குப்பை மேட்டு நாத்தமும் அழுகலும் பரிசுத்தம்னு தோணும். மரியாதையாப் போய்க்கோ?'' அந்தம்மா வெலவெலத்து ஒட்டிக் கொண்டாள், சுவரோடு. அவள் அங்கு இருந்தபோது தான் அந்தக் கூடத்தில் பெரிய காந்தி படம், நேரு படம், சுபாஷ் சந்திரபோஸ் படம், எல்லாம் கொண்டு வந்து மாட்டினார்கள். அம்மா மஞ்சள் கதர்ப்புடவை உடுத்திக் கொண்டு, அவளையும் கமலியையும் அழைத்துக் கொண்டு, தெருவில் சென்றால், யாரும் பார்க்க மாட்டார்கள். கதவை அடைத்துக் கொண்டு உள்ளே போவார்கள். தெருக் கோடியில் பெருமாள் கோயில் இருந்தது. அம்மா எந்தக் கோயிலுக்குள்ளும் போனதில்லை. ஒருநாள் கதர்சட்டை அணிந்த சுந்தரம், பிச்சமுத்து, தங்கவேலு எல்லாரும் வந்தார்கள்... எல்லாரும், அம்மா, அவள், கமலி தெருவில் மகாத்மா காந்திக்கு ஜே! வந்தே மாதரம், சுபாஷ் சந்திரபோஸுக்கு ஜே...'' என்று கத்திக் கொண்டு போனார்கள். மருதமுத்துதான் பெருங் குரலில் கத்துவான். இவர்கள் ஜே சொல்வார்கள். ஆனால் தெருவில் ஒரு குஞ்சு குழந்தைகூட இல்லை. திருச்சிபோகும் ரயில்பாதை. அதைக் கடந்தால் அங்கே தாலுகா கச்சேரி இருந்தது... ஒருகூரை பிராமணாள் காபி கிளப் இருந்தது. இவர்கள் தாலுகா கச்சேரிக்கு முன் கத்தினார்கள். பக்கத்தில் தான் கமலி படித்த பள்ளிக்கூடம். அன்று பள்ளிக் கூடம் இல்லை.

டவாலி போட்ட சேவகன் வந்து விரட்டினான். ஒரு போலீசுக்காரர் வந்தார்.

''எல்லாம் போயிடுங்கம்மா, ஏ புள்ள முழிய நோண்டிடுவேன்'' என்று அவளைப் பார்த்துப் போலீசுக்காரன் சாடையாகப் பயமுறுத்தினான். அவள் அம்மாவின் பக்கம் ஒட்டிக் கொண்டாள். மருதமுத்துவையும் சுந்தரத்தையும் விலங்கு கொண்டு வந்து பூட்டி அழைத்துச் சென்றார்கள். இவர்கள் மறுபடியும் கத்திக் கொண்டே வீடு திரும்பினார்கள். அன்று

சாயுங்காலமே கைதானவர்கள் இருவரும் திரும்பி வந்து விட்டார்கள்.

## 13

அந்த வீட்டில் அவள் வந்தபிறகுதான் அம்மா, அவர்களுடன் கள்ளுக்கடை மறியலுக்குப் போனார். காங்கிரஸ் பெரியவர்கள் யாரேனும் வந்து சிவன் கோயில் முன் கூட்டம் நடக்கும். தவறாமல் அம்மாவுடன் இவள் போய் விடுவாள். கமலியின் தாய் தந்தையருக்கு, இவள் தங்கள் மகளை இப்படித் தவறான பாதைக்கு இட்டுச் செல்வது பிடிக்கவில்லை. கமலியின் அப்பா, அந்தக் கோடையில் புறப்பட்டு வந்தார். "சம்பு, நீ இப்படி நடப்பது கொஞ்சமும் சரியில்ல. அப்பா கிடக்கிறார். உன் புருசனுக்கு வந்தவளா நடந்துக்க வேண்டாமா? அவன் என்ன ஆனாலும் உனக்குத் தாலி கட்டின புருசன். அவனை நீ மதிக்கணும். என்னமோ உன் வீட்டு மாட்டுக்காரன விட மோசமா நடத்தற?"

அம்மா சமையலறையில்தான் இருந்தார். அவள் அங்கே இருப்பது தெரியாமல் அவர் தணிந்த குரலில் கண்டித்தார்.

"ராமு, இந்த விஷயத்தில் நீ தலையிட வேண்டியது அநாவசியம். இது நான் பிறந்த வீடு. என் தாய் வீடு. இங்கு நான் என் இஷ்டப்படிதான் இருப்பேன். இங்கே குழந்தை இருக்கா. இவளை வச்சிண்டு இதுக்குமேல் பேச விரும்பல. உன் பெண்ணை நீ தாராளமா கூட்டிண்டு போ?"

"...யாரு... இதுதான் அந்தப் பறச்சனியனா?" ஒட்டிக் கொண்டிருந்த அவளை, அடிக்கக் கை ஓங்கினார். அப்போது அம்மா அந்த ஓங்கிய கையைப் பற்றிக் கொண்டார்.

"இத பார் ராமு. உம் பொண்ண நீ கூட்டிண்டுபோ. வேற விவகாரம் பண்ணாதே. வீணா வார்த்தையைக் கொட்டாதே!"

''என்னடி பயமுறுத்தற? உன்ன இந்த நிமுசமே வெளியேத்தி ஜயில்ல களிதிங்க வைக்க முடியும் என்னால! என்ன நினைச்சிண்டிருக்கே! நாளக்கி, இந்தப் பறக்கழுதயே, உம்புருசனக் கைக்குள்ள போட்டுண்டு உன்ன இந்த வீட்ட விட்டு வெறட்டலன்ன என்ன ஏன்னு கேளு! பாம்புக் குட்டிக்குப் பால் வாக்கிற! ஏதோ ஆம்புளக் கழுதயானாலும் பொதி சுமக்கும். இது உண்ட வீட்டுக்கு ரெண்டகம் செய்யும் சாதி! கேட்டுக்க!'' என்று கத்திவிட்டு ஒருவாய் தண்ணீர் கூடக் குடிக்காமல் கமலியை அழைத்துக் கொண்டு கிளம்பி விட்டார்.

அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது. எங்கேனும் ஓடிப்போய் விடலாமா என்று நினைத்தாள். அவள் அழ அழ, அம்மா கண்ணீரைத் துடைத்தாள். ஆனாலும் சாப் பிடப் பிடிக்கவில்லை. படுத்தால் தூக்கம் வரவில்லை. "அம்மா... என்ன எங்கூருக்கே, எங்னாலும் அனுப்பிச்சிடுங்க. என்னால உங்கக்குக் கஸ்டம்— என்னத் திட்னாத்திட்டட்டும். நா உசந்த சாதில பிறக்கல...''

இப்படிச் சொன்னபோது, அம்மா அவளைக் கட்டிக் கொண்டாள். அவளுக்கும் அழுகை வந்தது. அம்மா அழு வதைக் காண முடியவில்லை. எந்நேரமும் அவள் எங்கும் போய் விடாதபடி பாதுகாத்தாள்.

அன்று நூல் நூற்றாள். அறுந்து அறுந்து போயிற்று. அவர்கள் வீட்டில் கையால் 'கீ' கொடுக்கும் ஒரு கிராம போன் இருந்தது. என்றைக்கானும் இரவில் அம்மா அதில் பாட்டு வைப்பார். அதில் காந்தி பாட்டு வரும். 'நம்பிக்கை கொண்டெல்லோரும் கை ராட்டைச் சுற்றுவோம்' என்று ஒரு பாட்டு வரும். மதிச்சயத்துல குடியிருக்கிறது; மதுரையில் பாலு விக்கிறது. மோரு விக்கிறது...'' இந்தப் பாட்டைக் கேட்டால் கமலியும் அவரும் விழுந்து விழுந்து சிரிப்பார்கள். ட்ரியோ டேயன்னா என்று ஆடு மேய்க்கும் பாட்டு வரும்... பிறகு, நாடித்துதிப்பேன் நமசிவாயவே...ன்னு ஒரு பாட்டு...

அன்று அவளைச் சந்தோசப் படுத்த அம்மா பாட்டு வைத்தார். ஆனால் அவளுக்குப் பிடிக்கவில்லை. குப்புறப் படுத்துக் கொண்டு விம்மினாள்.

அந்த நாட்களில்தான் சிவன் கோயில் மீட்டிங்கில் பேச இந்தையா வருகிறார் என்று சுந்தரம் வந்து சொன்னார்.

"நான் நினைச்சால் உன்னை ஜயிலில் தள்ளிக் களிதிங்க வைக்க முடியும்" என்று அண்ணன் சொன்னதிலிருந்து தானோ என்னமோ அம்மாவுக்கு ஒரு பயம் வந்திருந்தது.

"சுந்தரம், அவரை நம் வீட்டுக்குக் கூட்டி வாயேன்? எங்கே வந்து தங்கிருக்கார்?... நடராஜ சுந்தரம் வீட்டிலா?"

"ஆமாம். அவர் சம்சாரமும்கூட வந்திருக்காங்க. அவங்களும் ஜெயிலுக்குப் போனவங்க. கள்ளுக்கடை மறியல் செய்து மூணு மாசம் தண்டனை பெற்று வந்திருக்கிறார்..."

அப்போதுதான் அவர்களை, இந்தப் புதிய பாதுகாவலர்களை அவள் பார்த்தாள், அவர்களுடனேயே வந்துவிட்டாள்.

நல்லவர்களை எல்லாம், கடவுள் ஏன் சோதிக்கிறார்?

ஐந்தாறு வருசங்கள்கூட சம்பு அம்மா பிறகு உயிரோடு இருக்கவில்லை. காச நோய் என்று சொன்னார்கள். போர்க் காலம். இவள், அம்மாவின் அம்மா, பாட்டி, சுற்றம் அகதிகள் என்று இந்த வீட்டில்தான் இருந்தாள். காந்தியோடு எல்லாத் தலைவர்களும் அய்யாவும் சிறையில். குண்டு பயம் என்று ஊரே காலி செய்து கொண்டு சனக் கும்பல் எங்கெங்கோ கிராமங்களில் அடைந்திருந்தது.

அவள் அங்கு வரும்போது ராதாம்மா பிறக்கவில்லை.

சம்பு அம்மாவைப் பார்க்க குரோம்பேட்டை ஆசுபத்திரிக்குப் போன போது, ராதாம்மாவுக்கு நாலைந்து வயசிருக்கும். இவள் வயசுக்கு வந்து, எட்டு கசம் கதர் சிற்றாடை உடுத்து, கல்யாணத்துக்கு நின்ற நேரம். "தாயம்மா, சம்பும்மா ஆஸ்பத்திரில படுத்திருக்காங்களாம், உன்னைப் பார்க்கணும்னு சுந்தரத்துக்கிட்ட சொல்லி அனுப்பியிருக்கா. இப்படியே குறுக்க ஒரெட்டு நடந்து போகணும், வரியா?"

பின் கட்டில் புளி கொட்டை எடுத்துக் கொண்டிருந்தவள் ஓடி வந்தாள். அம்மாவும் அவரும் வெளிச் செல்வதைப் பார்த்து விட்டு, ராதாம்மாவும் "நானும் நானும்" என்று ஓடி வந்தது.

"நீ பாட்டிட்ட இரு. ஜானு, பல்லாங்குழி ஆடச் சேத்துக்க!" என்று சொல்லிவிட்டு, இரண்டு பேரும் கிளம்பி னார்கள். சுந்தரம்... அவர் முடிவழுக்கையாகி, அடையாளமே தெரியாமல் மெலிந்து இருந்தார். அவளைப் பார்த்து அடையாளப் புன்னகை செய்தாரே ஒழிய, பேசவில்லை.

தோப்பும் துரவும் குளமும் குட்டையுமாக இருந்த இடங்கள் கடந்து அந்த ஆஸ்பத்திரிக்குப் போனார்கள். காவல் என்று எதுவும் இருந்ததாக நினைவில்லை. ஒரு குன்றின் மேல் ஏறினார்கள். ஓராளிடம் சுந்தரம் அய்யா, ஒரு சீட்டைக் காட்டினார். சாத்துக்குடியும், பிஸ்கோத்தும் அடங்கிய வலைப்பையை அவள் சுமந்து வந்திருந்தாள். 'காட்டேஜ்' என்றார்கள்.

கட்டிலில் படுத்திருந்தது... சம்பு அம்மாவா?

வயிரங்கள் பூரிக்க, நெற்றியில் பொட்டுடன் மஞ்சட் கதர் சேலையில் முதன் முதலாக அவள் பார்த்த அந்த சம்பு அம்மாவின் உருவமா இது?...

"அம்மா...!" என்று அவள் அலறிக் கொண்டு அருகில் போனாள். ஆனால், இந்தம்மா அவளை அருகில் செல்லக் கூடாது என்பது போல் தடுத்தாள்.

கண்கள் இருந்த இடத்தில் இரண்டு வங்குகள் தெரிந்தன. முகம் சப்பி முடிகத்திரிக்கப்பட்டு...

உணர்ச்சி வசப்பட்டு அவள் கண்ணம்மா என்று நீட்டிய கை வெறும் எலும்பாக, நரம்பாக இருந்தன. இருமல் வந்துவிட்டது.

இவள் சட்டென்று தாவிப் பற்றிக் கொண்டாள்; நெஞ்சை நீவிவிட்டாள். சளிதுப்பும் மூடிபோட்ட பெட்டியில் இரத்தத்துடன் விழுந்த கோழை....

''அம்மா... அம்மா... அந்த தெய்வத்துக்குக் கண் குருடா...?''

''கண்ணம்மா... என்னைத் தொடாதே, வானாம். சரோஜா... குழந்தை நல்லாருக்காளா? எத்தனை வயசாச்சு...?''

கிணற்றுக்குள்ளிருந்து பேசும் குரல்.

ஆனால் அவள் விடவில்லை. பேச்சே எழும்பாமல் இவளுக்குத் துயரம் முட்டியது. "சரோ, கண்ணம்மாவுக்கு நல்ல பையனா, உடம்பு உழைக்கும் உழைப்பாளியாக ஒருத்தனைப் பார்த்துக் கல்யாணம் செய்து கொடுத்துடுங்க. கண்ணம்மா, எப்டீருக்கே? படிக்கிறத விட்டுடாதே..."

இவள் எதுவுமே பேசத் தெரியாமல் பிரமை பிடித்தாற் போல் நின்று கொண்டிருந்தாள்.

"கண்ணமங்கலத்துல ஒரு நல்லபையன் இருக்கான். அங்க ஸ்கூல் படிப்பு முடிச்சிட்டு எங்க வீட்டோடு தானிருக்கிறான். தூரத்து உறவு. அவப்பா அந்தக் காலத்தில் சிலோன் தேயிலைத் தோட்டத்துக்கு வேலை செய்யப்போயி, அங்கேயே செத்திட்டார். அம்மா மட்டும் இருக்கா..."

''கண்ணம்மாக்குப் புடிச்சாக் கட்டிக்கட்டும். அவ சம்மதிக்கணும்...'' அம்மா எங்கோ பார்த்துக் கொண்டு இதைச் சொன்னார்.

பிறகு, "கண்ணம்மா, நீ போய்ச் சேர்ந்திருக்கும் இடம் பரிசுத்தமான இடம். நா எதச் சொல்றன்கிறத நீயே... தெரிஞ்சிப்ப. ஆனா, நான்தான் மேலானவன்னு திமிருல இருக்கிறவந்தா முக்காவாசி ஆம்புளயும். அந்த ஆம்புளக்கும் ஒழுக்கம், சத்தியம்தான்னு காந்தி மகான்தான் சொல்லிருக்கார்...

இவள் சம்பு அம்மாவின் கையைப் பற்றி அழுத்தமாகத் தன் உணர்ச்சியைக் கொட்டினாள். கை கதகத வென்றிருந்தது.

"பொண்ணாப்பிறந்தவ அவனுவ என்ன செஞ்சாலும் பொறுக்கணும். இல்லேன்னா... இல்லேன்னா... நீ பொம்புள தாண்டி, பொம்புள தாண்டின்னு..."

"சம்பு... வாணாம், வாணாம்மா, அழக்கூடாது..." என்று அம்மா சாத்துக்குடியை நறுக்கி, அங்கே அலமாரியில் இருந்த கண்ணாடியை எடுத்து அழுத்தி சாறு எடுத்தார். அவளே வாங்கி அதைப் பருகச் செய்தார்.

அலமாரியில் இருந்த அட்டைப் பெட்டியை, ஊசி மருந்தை எடுத்துப் பார்த்தார்.

"அம்மா, நா இங்கியே தங்கி அம்மாக்கு வேண்டியதச் செய்யட்டுமா?"

"வாணாம், வாணாம்மா, யாருமே இங்க தங்கக் கூடாது. பத்திரமா வீட்டுக்குப் போங்க. ஒட்டுவாரொட்டி சீக்கு. போங்கம்மா... நீங்க வந்ததே எனக்கு ரொம்ப ஆறுதல். சுந்தரந்தா அப்பப்ப கவனிச்சுக்கறான். எனக்கென்ன வேணும்...? சுதந்தரத்தத்தான் பாக்கமாட்டேன்?" இதற்குள் மூச்சிரைத்து இருமல் வந்துவிட்டது.

யமவாதனை என்றால் இதுதானா...?

வீட்டுக்கு வந்ததும் பின் பக்கம் நச்சுக் கொல்லி சோப் போட்டுத் தேய்த்து அம்மாவும் அவளும் குளித்தார்கள். துணிகளைத் துவைத்து உலர்த்தும் போது அழுகை அழுகையாக வந்தது.

இப்போதும்கூட அந்தத் துயரம் ஆறாத புண்ணாக மேலுக்கு வருகிறது. சாவு வீட்டுக்குச் சென்று வந்தாற் போல் குளித்தார்கள்.

ஒரு மாசத்துக்குள் சம்பு அம்மா இறந்துவிட்டார்கள். சேதியை இங்கே வந்து சுந்தரம் சொல்லவில்லை. ஒரு மாசமான பிறகுதான் தெரிய வந்தது.

அப்போது, இவளுக்குக் கல்யாணம் செய்ய அம்மா அய்யா, ராதாம்மா எல்லோரும் கண்ணமங்கலம் கூட்டிச் சென்றிருந்தார்கள்.

# 14

ஜயந்தி டீச்சர் கூடைக்காக வரவில்லை. கொட்டு வதை எல்லாம் திறந்து மடையாக வெளியாக்கிய பிறகு, 'கூடை' என்ற காரணத்தை முத்தாய்ப்பாக வைத்துவிட்டுப் போயிருக்கிறாள். இங்கேயுள்ள முருகன் கடையில் இப்போ தெல்லாம் பிளாஸ்டிக் வயர் கிடைப்பதில்லை. பெரிய சாலை நெடுக நடந்து, ஆஸ்பத்திரிப் பக்கம் முளைத்துள்ள ஒரு நெருக்கடி பஜாரில், ஒயர், மற்றும் பல்வேறு கை வேலை களுக்கான பொருட்கள் இருக்கின்றன. பெரிய சாக்கடை பக்கத்திலேயே செருப்புக்கடை, போட்டோ ஸ்டுடியோ, காய்கறி மண்டி, தேங்காய்க்கடை, கண்களைப் பறிக்கும் மஞ்சள், கேசரி கலர்களில் ஜாங்கிரி லட்டு வகையறாக்கள் தெரியும் மிட்டாய்க்கடை.... சாக்கடைக்குப் பக்கத்தில், ஒரு நரிக்குறத்தி இடுப்பு— முதுகு ஏனையில் ஒரு பெண்ணுடன் சரம்சரமான மாலைகளைத் தொங்க விட்டுக் கொண்டு போகிறாள். அந்த வரிசையில்தான் அந்தக் கடை இருந்த தாக நினைவு. உள்ளே சந்தை... காய்கறி வந்திறங்கும் லாரி கள் ஆக்கிரமிக்கும் நெரிசல். இல்லாதவர் வாங்கும் துணிக் கடைகள்... அங்கேயே தையல் மிசினை வைத்து வாணிபம் செய்பவர்கள்.

அவளுக்கு எதற்கு வந்தோம் என்ற உணர்வே அழிந்து விட்டாற்போல் இருக்கிறது. ஒரு பெண், சாலையில் பலரக வயர்கூடைகளை வைத்துக் கொண்டு வாணிபம் செய்கிறாள்.

"ஏம்மா, கூடைக்கு வயர் எங்கே வாங்கினீங்க?" அவள் இவள் வினாவுக்கு விடை அளிப்பவளாக இல்லை. அவளைச் சுற்றி இருக்கும் கூடைகளை வாங்க வந்தவர் களிடம் பேரம் பேசுவதில் குறியாக இருக்கிறாள்.

"என்னம்மா, ஒரேயடியா எண்பது ரூபா சொல்லுற...? அம்பதுன்னுதான் நான் போன மாசம் வாங்கினேன். தங் கச்சி ஊருக்கு எடுத்திட்டுப் போயிட்டா... சொல்லிக்குடு!"

"ஒரே விலை. அம்பது ரூபா பை நானும் குடுத்திருக்கிற. இந்த ஒயர பாத்தியா? இருபத்தஞ்சு வருசம் தாங்கும். அப்பிடிப் போட்ட பையி. பிளாஸ்டிக்பை, கேடு கேட்டது, மூணு மாசத்தில புடி புட்டுக்குது, அது அம்பது அறுபதுன்னு விக்கிறாங்க..."

"சரி, எழுபத்தஞ்ச வச்சிக்க!..."

"ஒரு பைசா குறையாது. தொண்ணூறுன்னா தர கட்டு படியே ஆகும். ரயில் செலவுக்குக்கூட வராத கிராக்கி..."

அந்தப் பெண் மேலும் பார்த்து ஒன்றை எடுக்கிறாள். கைப்பையில் இருந்து ஒரு ஐம்பது ரூபாயும், மூன்று பத்து ரூபாய் நோட்டுகளையும் எடுத்துக் கொடுக்கிறாள். அடுத் தடுத்துப் பை வாங்க வருகின்றனர்.

ஒயர் எங்கே கிடைக்கிறது என்ற வினாவுக்கு விடை தெரியவில்லை. முன்பெல்லாம் கடைகளில் இதே பைகள் மாட்டியிருப்பார்கள். அவர்களிடமே ஒயரும் கிடைக்கும்.

"ஏம்ப்பா, ஒயர்... கூடைபின்னுறது இருக்கா?"

"இப்ப யாரும்மா இந்தக் கூடை எடுத்திட்டுப் போறாங்க? விதவிதமா பிளாஸ்டிக் பை வந்திடிச்சி. அல்லாப் பொம்புளகளும் டுவீலர்ல சர்ருனு வேலைக்குப் போறாங்க? காய்கறி, துணி மணி எல்லாம் 'கேரி பேக்' வந்திடிச்சில்ல?" என்று விளக்கம் கூறுகிறான் கடைக்காரப் பையன்.

தள்ளுபடி விற்பனை! ஆடிக்கழிவு... வாங்க, வாங்க என்று பாத்திரக்கடையில் இருந்து அடுக்கடுக்காக ஆட்டு உரல் 'கிரைண்டர்'களும் குளிரலமாரிகளும் குவித்திருக்கும் கடைகளில் விற்பனைப் பையன்கள் அழைக்கிறார்கள். தெருவில் தலையணையில் இருந்து, போர்வை வரை போட்டுக் கொண்டு விற்பனை நடக்கிறது. ஒவ்வொரு கடை யிலும், பொருட்களைக் காட்டவும் பேசவும், இளவயசுப் பெண்கள் தாம் இருக்கிறார்கள்.

இரவு ஒன்பது, பத்து மணி வரையிலும் இவர்கள் வேலை செய்து விட்டு, பதனமாகப் போய்ச் சேருவார்களா? மறுபடி மறுபடி சங்கரியின் முகம் தோன்றுகிறது. வீட்டுக்குள் ஆண் துணை இல்லாத பெண் என்றால், இந்த அளவுக்கு, குடும்பம் இருக்கமாக மக்கள் வசிக்கும் தெருவில் துணிந்து...

சே, நினைக்கப் பொறுக்கவில்லை, வேறு எதுவும் தோன்றவும் இல்லை.

இன்னைக்கு சங்கரி... நாளைக்கு எனக்கோ, என் பெண்ணுக்கோ... என்று நெருப்புக் குரலில் வெந்து வடித்தாளே, பத்து நூறு பிள்ளைகளுக்குக் கல்விப்பணி செய்யும் ஜயந்தி டீச்சர்...

அந்தக் காலத்திலும் இப்படி. அரசப் பொரசலாக, தொடர்பு கற்பிப்பது உண்டு. ஆனால், உண்மையோ பொய்யோ, வித்யாலயத்தில், மருதமுத்து தன்மீது மாசுபட்டு விட்டது என்ற சொல்லையே தாங்காமல் ரயில் தண்டவாளத்தில் தலை கொடுத்தான். ஓராண் பெண் தொடர்பு, உறவு என்பது, கல்யாணம் என்ற புனிதப் பெட்டிக்குள் வைத்துப் பாதுகாக்கப்படும் விலை மதிப்பில்லாத பொக்கிசம். அதை இப்படிக் காலில் போட்டு மிதித்து சூறையாடுகிறார்களே?... இதை எல்லாம் கேட்கவா, உயிர் வாழ்கிறாள்?...

"என்ன, ஆச்சிம்மா? எங்கே இந்தப் பக்கம்?..."

சட்டென்று நின்று பார்க்கிறாள். "யாரு...?..."

பருமனாக சிவப்பாக, சுருளான செம்பட்டை முடியை அழுந்த வாரிய பெரிய கொண்டை... வயிரங்கள்...

"என்ன, பழமானூர்தெரு பங்களா வீட்டு ஆச்சிதானே? புரியலியா என்ன? குஞ்சம்மா பொண்ணு சவுந்தரம்... பாத்து ரொம்ப நாளாச்சி... பாய் மாமா மவுத்தான சேதி கேட்டு அந்தப் பக்கம் வந்தேன். நீங்க வந்திட்டுப் போனதா சொன்னாங்க. நான் தலைய காட்டிட்டு உடனே காரில வந்திட்டேன். இவ எம் பொண்ணு. ஊர்மிளான்னு பேரு. இவ கல்யாணத்துக்குப் பத்திரிக்கை வைக்கிற சாக்குல கூட வந்து

பாக்க முடியல. கல்யாணம் திருப்பதில வச்சுக்கிட்டோம். ஜார்ஜும் அவள் அம்மாவுந்தா வந்தாங்க...”

“அதுசரி, நீ தி.நகர்ல்ல இருந்தே? அங்கதான இருக்க?”

“இல்லீங்க ஆச்சி. இவங்கப்பா எட்டுவருசமா மஸ்கட்ல இருக்காங்க. நரேந்திரன் இப்பதா படிப்ப முடிச்சிட்டு யு.எஸ். போயிருக்கிறா. நா இப்ப நங்க நல்லூர் பக்கம் வந்திட்ட. எங்க மாமனாரு பெரிய பையன் எறந்தபிறகு ரொம்பப் படுத்திட்டாரு. பையன், பொண்ணு, எல்லாரும் யு.எஸ். போயிட்டாங்க. எங்க ஓரகத்தியாவும் ஸ்கூல் டீச்சரா இருந்தாங்களா, ரிடயர் ஆகி மகனோட போயிட்டாங்க. பிறகுதான் நாங்க இங்க வந்தோம்... நீங்க அதே பங்களாவுலதா ஒத்தைக்கு இருக்கீங்களா? ராதாம்மா, புருசன், மகன் யாருன்னாலும் வந்து பாக்குறாங்களா?”

“ஒரு நா வருவாங்கன்னு நினச்சிட்டிருக்கிறன்...”

“அப்ப... உங்களுக்கும் வயசாச்சில்ல, மகன் கூட போயிரலியா?”

“ஏம்மா, யாருக்கு வயசானா, யாருக்கு என்ன? நீயே இப்ப சொல்ற, புருசன், மகன் எல்லோரும் எங்கேயோ. யாருட்ட கேட்டாலும் தாய் நாட்டு மண்ணத் தட்டிட்டு ஓடுறதிலியே இருக்காங்க. இங்க எங்கவந்த சொல்லு...”

“அதா ஆச்சி, ஆடிக்கழிவுன்னு போட்டிருக்கா. தீவாளி வருது. துணி மணி வாங்கலான்னு வந்தேன். இவ புருசனும் சொன்னாப்புல யு.எஸ்.தா போறா. எல்லா ஏற்பாடும் ஆயிட்டது. முதத் தீவாளி. போகலான்னு சொன்னா. இன்னிக்கு இவளுக்கு லீவு. எங்க வீட்ல சனிக்கிழமதா துணி எடுப்போம்...”

“துணி எல்லாம் எடுத்தாச்சா?...”

“இத, காருக்குள்ள இருக்கு. வாங்களே ஆச்சி, அப்படியே நம்ம வீட்ல வந்து நாலுநாள் இருந்திட்டுப் போகலாம்? ஒத்தைக்குத்தானே இருக்கிறீங்க? எங்கூடவே கூட இருக்கலாம்... ஆனா, நீங்க மகன் கூப்பிட்டுக் கூடப் போகல.

அது எப்படியோ போகட்டும், இப்ப என் கூட வாங்க ஆச்சி...''

"நீ இப்படி நடுத் தெருவில நின்னு கூப்பிட்டா நா வருவனா?''

"சரி ஆச்சிம்மா, அப்ப வாங்க, வூட்டுக்குக் காரில போகலாம். அங்க வந்து கூப்புடறேன்...'' என்று சவுந்தரம் சிரிக்கிறாள்.

"வாணாம். நீங்க பத்திரமாப் போயிட்டுவாங்க. இந்த மட்டும் ஆச்சிய நினப்பு வச்சிட்டு விசாரிச்சியே. அதுவே சந்தோசம்...''

"எனக்கு சந்தோசம் நீங்க வந்தாதா...'' என்று அவள் கையை வலியப்பற்றி இழுத்து கார்க்கதவை டிரைவர் திறக்க, உள்ளே அவளை உட்காரச் சொல்கிறாள். "ஊர்மி, நீ முன்ன உக்காந்துக்க...''

"என்னம்மா, நீ?...''

"ஒண்ணுமில்ல. காரை விடுங்க மயில்சாமி. இப்படியே பழைய மானூர் ரோடு வழி போயி கிராஸ் பண்ணி, வண்டியக் கொண்டுட்டுப் போங்க!''

சொகுசு வண்டி. உள்ளே குளுகுளுவென்றாகிறது... துணிப்பார்சல்களைத் தள்ளி பின்னால் வைக்கிறாள். பெரிய கார்...

இவள் பாட்டி குழந்தைகளை தாத்தா ரங்கூன் சண்டை வருமுன்பே கப்பலில் ஏற்றி பத்திரமாக ஊருக்கு அனுப்பி விட்டார். ஆனால், அவர் இந்திய தேசிய ராணுவத்தில் இருந்து கைதாகி, தப்பி வந்து குற்றுயிராக, வந்தவர். அவள் இருக்கும் அந்த பங்களாவாசல் அறையில் உடம்பெல்லாம் கொப்புளங்களும் காயங்களுமாகப் படுத்திருந்த நினைவிருக்கிறது. சம்பு அம்மா இறந்த பிறகு சுந்தரம் இங்கே வந்து தொண்டாற்றினான். உடல் தேறி, அவர் டில்லிக்குச் சென்றார். நன்னிலம் பக்கம் சொத்துபத்தெல்லாம் இருந்தது...

எப்படியோ அந்தக் கிளை மறுபடியும் சொந்த மண்ணில் தறிக்காமல்...

சட்டென்று வண்டி ஒதுங்கி நிற்கிறது.

"என்னப்பா?..."

காரோட்டி வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு இறங்கு கிறார். கண்ணாடியை இறக்கி, சவுந்தரம் பார்க்கிறாள். "எதோ ஆக்ஸிடன்ட் போல இருக்கு. போலீசு ஏகத்துக்கு நிக்கிறாங்க?"

பேசாமல் அவள் வீடு திரும்பியிருப்பாள்.

வயிற்றை சங்கடம் செய்கிறது. "யம்மா, கதவத் தொறந்துவுடு; நா எறங்கிக்கிறேன்."

"கதவைத் திறந்து கொண்டு அவள் முதலில் இறங்க, இவளும் இறங்குகிறாள். நிறைய வண்டிகள் நிற்கின்றன. சாலையின் போக்குவரத்தே நின்று கிடக்கிறது. இருவழியில், ஒரு வழியிலும் போக்குவரத்தில்லை. டிரைவர் வியூகத் துக்குள் புகுந்துவிட்டு வருகிறார்.

"சவுந்தரம் இதத்தானே, பார்க்குகிட்ட வந்திருக்கிறோம். நான் இப்படியே குறுக்க திரும்பி, பொடி நடையாப் போயிடுவேன். இன்னிக்குக் கிளம்பின நேரம் சரியில்ல போல. நீங்க பண்டிகைத் துணி வாங்கிட்டுப் போறீங்க, பதனமாப் போய்ட்டு வாங்க..."

"ஒரு பொண்ணு அடிபட்டுக் கிடக்கு. பிரியாணி பொட்டலங்க சிதறிக்கிடக்கு. கட்சிக் கொடி போட்ட ஆட்டோ நிக்கிது..."

"சரியான 'ஈவ்டீசிங்' கேசுப்பா, இந்தப் பொறுக்கிக, ஆட்டோவில பிரியாணிப் பொட்டலத்த வச்சிட்டு, பார்க்குப் பக்கம் நடந்திட்டிருந்த பொண்ணுகளத் துரத்திட்டு கைபுடிச்சி இழுத்திருக்கானுவ. முக்கியமான நபர் போன எடம் தெரியாம நழுவிட்டாகூட இருந்த பொறுக்கிக அம்புட்டுக்கிட்டாங்க..."

செவிகளில் விழும் செய்திகள், செவிப்பறையைத் துளைத்து, உணர்வுகளைப் பந்தாடுகின்றன.

இந்த பூமியில் எதற்காக இருக்கிறோம் என்று பலவீனம் ஆட்கொள்கிறது. பட்டப்பகலில் நடுவீதியில் இந்தப் பெண் வேட்டை நடக்கிறது. முன்பெல்லாம் அவள் ஒரு தமிழ் தினசரி வாங்கிப் படித்துக் கொண்டிருந்தாள். கொலை, கொள்ளை, கற்பழிப்பு, கட்சிமாறும் புண்ணியங்கள், மக்களை ஏமாற்றிப் பதவி பிடிக்கும் சாதுரியங்கள், கட்சி பலம் காட்டும் மாநாடுகள், இவர்களிடையே பந்தாடப்படும் வாக்குறுதிகள், என்ற செய்திகள் தவிர ஆரோக்கியமாக, தெம்பு கொடுக்க, நம்பிக்கை கொடுக்க எந்தச் செய்தியும் இல்லை. மாசம் நூறு ரூபாய் மிச்சம் என்று நிறுத்திவிட்டாள். ஒருபழைய ரேடியோ இருந்தது கையடக்க டிரான்ஸிஸ்டர். காலை நேரத்தில் அதில் செய்திகள் கேட்பாள். வெள்ளிக் கிழமைச் சடங்காக காந்தி பஜனை வரும். அதை எடுத்துக் கொண்டு போன பராங்குசம், ஒரு மிகச்சிறிய டிரான் ஸிஸ்டர், பாட்டரியில் ஓடுவதைக் கொண்டு வந்து வைத்தான். இப்போது அதில் என்ன கோளாறோ, காதடி யில் வைத்துக் கொண்டாலும் கேட்பதில்லை. மாடியிலேயே கொண்டு வைத்துவிட்டாள். அவள் நடமாடும் சூழலே செய்திகளாக இருக்கின்றன. இன்று அவள் சாதாரணமாக, யதேச்சையாக, வெளிக்கிளம்பி வந்திருக்கிறாள். எத்தனை செய்திகள்? அவலங்கள்? நடுவீதியில் வேட்டையாடப்பட்ட பெண் யாரோ?

மண்ணாங்கட்டி மூலமாகக் கட்சியில் பிறந்த நாள், இறந்த நாள் விழாக்கள் கொண்டாடப்படும் போது, பிரியாணி பொட்டலங்களே விழாச் சின்னங்களாக மணம் வீசும். ரங்கனும் இந்தப் பிரியாணி விழாக்களில் ஆதாயம் பெறுவான் என்பது அவளுக்குத் தெரியும். மட்டன்குருமா— ஏ.ஒன். பீஃப், ஸூப் ரெடி என்று ரயில் பாதை யோரம் குடிசைக் கடைகளில் எழுதியிருக்கும். வெட்டித் தோலுரிப்

பதும் அங்கேயே நடக்கும் என்று சொல்கிறார்கள். இந்த லட்சணத்தில், பசுவதைத் தடுப்புச் சட்டமாம்!

வேகுவேகென்ற அந்தக் குடிசைக் கடைகள், இரத்தம் கருகிப் போன சாக்கடைகள், கறி கொத்தும் கட்டைகள் எல்லாம் கடந்து வருகிறாள்.

கோமாதா குலமாதா... பசுக்களைக் கும்பிட்டுப் பூசை செய்ய வேணும் என்று மடத்து ஆசாரிய சுவாமிகள் இப்போதும் சொல்கிறார். பத்திரிகைகளில் அவருடைய வண்ணப்படங்கள்.

பத்திரிகைக் கடைகளில் தொங்குகின்றன. கோமா தாக்கள், குப்பைத் தொட்டியில்தான் வயிற்றுப் பாட்டைப் பார்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. சொந்தக்காரன் இவை கறக்கும் வரை காலையிலும், மாலையிலும் தேடி வந்து கொண்டு போய்க் கரந்து கொள்வான்.

"யாருடீ அந்த ஆசாரியன்? எதுக்குக் கொலை பாதகம் பண்றான்?" என்று சம்பு அம்மாவின் ஆங்காரக் குரல் மின்னல் பாய்ந்தாற்போல் ஒரு கணம் உலுக்குகிறது. வண்டிக்காரன் தங்கவேலு சில நாட்களில் தன் மூன்று நான்கு வயசுப் பிள்ளைகளை அழைத்து வருவான்.

"டேய், முருகா? இங்க வாடா!" என்று அம்மா கூப்பிடுவார்.

"சாப்பிடுறியா?" என்று கேட்பார். எப்போது கேட்டா லும் அழகாக 'உம்' என்று தலையசைப்பான். அந்தப் பெரு மாட்டிக்கு எந்தக் குழந்தையைக் கண்டாலும் சோறு பிசைந்து ஊட்டும் தாபம் தோன்றும் போலும்! ஒரு பட்டை வெள்ளிக் கிண்ணத்தில் தயிரூற்றிச் சோறு பிசைந்து கொண்டு வருவாள். அவனை ஊஞ்சற் பலகையில் உட்கார்த்தி வைத்துச் சோறூட்டுவாள். "கொழம்பு சோறு வேணுமா?"

அதற்கும் 'உம்' என்று தலையசைப்பான். "வயிறு என்னை இடிக்கிறது... உங்கம்மா இன்னிக்கு என்ன குழம்பு

வச்சாங்க?'' என்று கேட்பாள். தங்கவேலு மூலையில் நின்று பார்த்துக் கொண்டிருப்பான். "மி...மீன்..." என்று வார்த்தை வருமுன் "டேய்" என்பான் தங்கவேலு.

"...இல்ல...மு முருங்கக்காய்க் குளம்பு" என்று பொக்கைப் பல்லைக் காட்டிச் சிரிப்பான். அம்மா அவன் வாயைத் துடைத்துவிட்டு, கன்னம் கிள்ளி முத்தம் கொஞ்சுவாள்.

மரக்கறி உணவு, அப்படி நாகரிகப் பண்பாட்டின் அடையாளமாக இருந்தது.

ஆனால் அதே அம்மாவின் அண்ணன்மார், அப்போது ஆடும் கோழியும் சாப்பிடுபவர்கள் என்ற உண்மை அம்மா வின் சொற்களில் தெறித்துவிழும். "இங்கே நான் தீட்டாக்கி, குலாசாரம் கெடுக்கிறேனாம், பெண்ணைக் கூட்டிட்டுப் போறான்! இவன் வீட்டில பெரிய துரைக்கெல்லாம் 'தீர்த்தம் பிரசாதம்' கொடுக்கும் பார்ட்டியப் பார்த்துப் பழகட்டும்?'' என்று கடுகடுத்தாள். அந்த புருசன் தாழுவுக்கும் இதெல்லாம் இருந்திருக்குமோ என்று நினைக்கத் தோன்றுகிறது. கடைசியாகச் சொன்ன சொல்...

'ஆம்புள பொம்புளய, இவதான்னு ஓங்க முடியாம, நீ பொம்புள பொம்புளன்னு... ஒடுக்கிடுவான்' என்று தானே சொன்னாள்? இத்தனை படிப்புப் படித்து, வேலை செய்து சம்பாதித்து, என்ன உசத்தி வந்திருக்கு? என்ன மதிப்பு வந்திருக்கு?...

அவள் புருசன்... எத்தனையோ வகைகளில் வேறு பட்டான். எல்லோரையும் போல் வெள்ளையும் சள்ளையு மாகப் போட்டுக் கொண்டு மதிப்பாக இருக்க வேணும், வாழ்க்கையை அனுபவிக்க வேணும் என்ற ஆசைதான். அவன் கிராமத்தில் செய்த அதே வேலையை நகரத்துக்கு வந்தும் செய்கிறான். எட்டாவது தேறியிருக்கிறேன். இந்தப் படிப்புக்கு ஒரு கவுரவ வேலையில்லையே என்று குறை பட்டுக் குடிபழகினான். அது கூடச் சேர்வார் சரியாக இல்லாததனால். ஆனால், அவன், அவளை மறந்து எந்தப்

பெண்ணையும் வேறு கண் கொண்டு பார்த்ததில்லை. “என் கண்ணுத்தாயத் தவிர பாக்கிற பொம்புள எல்லாம், தெய்வம் எனக்கு, புள்ளாரு ஏன் கலியாணம் கட்டல? பாக்குற பொம்புள எல்லாம் பெத்த தாயாத் தெரியிறது தாயுன்னு சொன்னார். பொறுக்கிப் பயனுவ...” என்று குடிபோதை யிலும் தன்னை வேறு பக்கம் இழுப்பவனை, பெண் சுகம் தேடி, எங்கெங்கோ நுழைபவர்களுடன் மோதிச் சண்டை இழுத்திருக்கிறான்... ஆனால், மகனிடம் அந்த நேர்மையே இல்லை.

இந்த ஒழுக்கச் சூழல் இல்லாமல் இருந்திருந்தால், அவள் புருசனும் ஒரு கால் பிசகி இருப்பானோ?... அவனுக்கு அவள் இந்தக் குடிலில் மீனும் கறியும் சமைத்த தில்லை. அவள் வளர்ந்ததும் பதம் பெற்றதும் மரக்கறி இல்லங்களிலும் சாத்துவீக மக்களிடமும்தாம். எனவே, அவள் கணவன் வேறு உணவு கொண்டாலும், வெளியே இருந்த உறமுறை வீடுகளில் தான் சாப்பிடுவானாக இருக்கும். அவளை அவன் சமைக்கச் சொன்னதில்லை. கடற்படையில் இருந்த ராதாம்மாவின் புருசன் எல்லாம் சாப்பிடுவார்; குடிப்பதும் உண்டு என்று சொல்லிக் கொள்வார்கள். அதையும் அவள் பையன்தான் சொல்லிக் காட்டினான்.

ஆனால், கட்டிய மனைவிக்குத் துரோகம் செய்வ தென்பதை அவளால் சீரணம் செய்ய முடியவில்லை.

## 15

மகனையும் மருமகளையும் குடித்தனம் வைக்கையில் சம்பந்தி அம்மாளும் பெண்ணைப் பெற்ற அப்பனும் அவளையும் அழைத்துச் சென்றுதான் எழுமூரில் புதிய வீட்டில் குடித்தனம் வைத்தார்கள்.

“எம்பொண்ணு ரஞ்சிதத்துக்கு டவுன் பழக்கம் எதும் தெரியாது. விவசாயக் குடும்பம்மா. உங்க மகன் பெரிய

மனிசாளோடு பழகுறவரு... அதுலய இவள உங்க மகளப் போல பாத்து, ஏத்தாப்புல சொல்லிக் குடுங்கம்மா...!" என்று சொல்லிவிட்டு மறுநாளிரவே அவர்கள் ஊருக்கு வண்டியேறிவிட்டார்கள். மறுவீடு அழைத்துச் செல்லக்கூட, மருமகப்பிள்ளைக்கு, புதிய அரசியல், வெற்றிப் படப் புகழ் போதையில் மேலும் அதே துறையில் பல வேலைகள். புதிய மொசைக் போட்ட தளம். குளியலறை, கழுவும் பீங்கான், பாத்தி ரங்கள் கழுவும்இடம், காஸ் அடுப்பு, குக்கர், எல்லாம் பெண்ணுக்குப் பார்த்துப் பார்த்து வாங்கி இருந்தார்கள். அவளுக்கே இந்தக் குக்கரை உபயோகிக்கத் தெரியாது. அதிகம் பேர் சாப்பிடுவதற்கு, பானைதான் வைத்து வடிப்பார்கள், அவள் புழங்கிய சமையற் கூடத்தில். அவள் வீட்டிலும் சிறுசிறு பிளாச்சு விறகாகக் கட்டை தொட்டியில் இருந்து வாங்கி வருவாள். சூளையில் வைத்த மண் அடுப்பு, ஒரே கட்டைத் தீயை அடக்கமாகப் பாத்திரத்தில் ஏற்றி சமையலை மிக எளிதாக்கும். சமையற் கூடத்தில், பெரிய இட்டிலிக் கொப்பரை உண்டு. ஆட்டாங்கல்லில்தான் மாவாட்டுவார்கள். அம்மி, கல்திரிகை எல்லாம் புழக்கத்தில் இருந்தன.

"அத்தே, எனக்கு இதவச்சி சமைக்கத் தெரியாது. என்ன செய்ய?" என்றாள் ரஞ்சிதம். "நா எதக்கண்டேன்? இத எப்பிடிக் கொளுத்துறதுன்னு கத்துக்கிட்டதோடு, அதையும் அந்த சமையக்காரப் பயகிட்டக் கேட்டிருக்கலாம் இல்ல?"

"தெரியல அத்தே..."

"போவுது..." என்று ஒரு புதிய அடுக்கைத் தேர்ந்து அதில் ஒரு பாத்திரத்தில் அரிசியும், மேலே பருப்பும் வைத்து, நீரூற்றி மூடி அடுப்பில் ஏற்றச் சொன்னாள். அந்தக் காலத் தில் புனாவில் இருந்து அப்படி ஓர் அடுக்குப் பாத்திரம் வாங்கி வந்திருந்தார் அம்மா. காலையில் நல்லபடியாக இட்டிலி காபி அவளே தயாரித்துப் புதிய மருமகளைக் கொடுக்கச் செய்தாள். மேசையில்தான் பரிமாறல். அப்போ

தெல்லாம் சாப்பாட்டு மேசை, அவள் பழகியிருக்கவில்லை. பித்தளை செம்புப் பாத்திரங்களுக்குப் பதிலாக, 'ஸில்வர்' என்று சொல்லும் பாத்திரங்கள் இடம் பெற்றிருந்தன. அவள் மகனின் முன் விழிக்கவுமில்லை. பேசவுமில்லை. காலையில் கார் வந்தது, அவன் போய் ஏறிக் கொண்டான்.

வீடு பெருக்கித் துடைத்து, பாத்திரம் கழுவி, நீர் பிடித்து வைத்து எல்லா வேலையையும் அவளே செய்தாள்.

"அத்தே, நீங்க எதுக்கு இதெல்லாம் செய்யறீங்க? வேலைக்கு ஒரு ஆள் போட்டுக்கலாமில்ல?" என்றாள் ரஞ்சிதம்.

"வாணாம்மா, நா இருக்கிற வரையிலும் ஆளெல்லாம் வாணாம். இதெல்லாம் எனக்குப் பழக்கம்தானே?" என்று மறுத்துவிட்டாள்.

காலையில சென்றவன்தான். மதியம் சாம்பார், பொரியல், எல்லாம் வைத்துச் சமைத்தாள். புதுமணம் என்ற கருக்கு மாறாத வீடு, வெற்றிலை பாக்கு பழம் தேங்காய், இனிப்பு வகைகள், எல்லாமே இருந்தன.

"முதல்ல சாப்பிட வரச்சே, ஒரு லட்டுவும் பழமும் வச்சுப் பரிமாறும்மா? உங்க வாழ்க்கை நல்லா, புள்ள குட்டியோட சந்தோசமா இருக்கணும்மா!" என்றாள். முடிசீவிப் பூச்சூடி அலங்கரித்தாள். சுவாமி அறை என்று ஒரு தனி அறை இருந்தது. லட்சுமி, சரஸ்வதி, பிள்ளையார், முருகன் என்று வெள்ளிப் படங்கள் சுவரில் மாட்டியிருந்தார்கள். இரண்டு அழகிய குத்து விளக்குகள் சுவாமி அறையில் எரிய விட்டிருந்தார்கள். பகல் ஒரு மணிக்கு அவன் சாப்பிட வருவான் என்று எதிர்பார்த்திருந்தாள். 'காம்பவுண்டு' சுவர் தலைமறைவாக உயரம். பெரிய இரட்டைக் கதவு வாசல். கார் வந்து போக வசதியாக இருந்தது. வீடுகட்டி வெள்ளையடித்து 'பெயின்ட்' அடித்த மிச்ச சொச்சங்கள், சுற்றிலும் நிறைந்திருந்தன. வசதியாக நல்ல பூச்செடிகளும் காய்கறிகளும் பயிரிடலாம். இந்த இடம் புதிய பகுதி. சற்று எட்ட

நடந்தால் பூந்தமல்லிச் சாலை. அக்கம் பக்கம் என்று வீடுகளின் நெருக்கம் இல்லை.

"மணி ஒன்னே காலாயிடிச்சி. கண்ணு, நீ சாப்பிட்டுக்க, முகம் வாடிப் போச்சு..." என்றாள் மருமகளிடம்.

"வாணாம் அத்தை, அவங்க வரட்டும்..." என்றாள். மாறாக, "நீங்க சாப்பிடுங்க அத்தை, காலம நீங்க டிபனும் சாப்புடல. வெறும் கேழ்வரகு கஞ்சிதா குடிச்சீங்க" என்றாள் அவள். இவளுக்கு அடிவயிற்றில் சில்லிடத் தொடங்கியது.

திருமணம் நடந்து, மஞ்சளின் பசுமை மாறவில்லை. மணி மூன்றாயிற்று. "ஆம்புளங்க, போனா ஆயிரம் வேலை இருக்கும்மா; நீ உக்காரு, நான் சோறு வைக்கிறேன்" என்று லட்டுவும் பழமும் வைத்துச் சோறு வைத்தாள். சோற்றை எடுத்து வாயில் போட்டுக் கொள்கையில் அழுகை வந்து விட்டது. "இப்படி ஒரு பாவமா?..." செல்லமாக வளர்த்த பெற்றோரை விட்டு வந்து முன்பின் தெரியாதவனிடம் உறவு கொள்வது, பெரிய புரட்சி. அவளுக்கு அப்பனின் ஆதர வைத் தவிர எதுவுமே புரிந்திராத வயசு. பயமும் தெரியாது. வந்து சேர்ந்த இடமோ அன்பைப் பொழிந்தவர்கள். புருசனும் அவள் மீது மதிப்பையும் உயிரையும் வைத்தி ருந்தான். ஆனால், இவன்...

இரவுச் சாப்பாட்டுக்கும் வரவில்லை.

மாடிப்படுக்கையறைக்கே போகாமல் கீழே போட்டிருந்த சோபாவில் உட்கார்ந்தே சோர்ந்திருந்தது. "எதானும் சாப்பிடம்மா? பட்டினியே படுத்துக்கக் கூடாது..."

இவளுக்கே பேசப்பிடிக்கவில்லை. பகலில் சமைத்தது ஆறியிருந்தது. சூடு செய்து, கொஞ்சம் சாப்பிடச் செய்தாள். இவளும் ரசத்தை ஊற்றிக் கரைத்துக் குடித்துவிட்டு, கீழே ஒரு பலகையைத் தலைக்கு வைத்துக் கொண்டு படுத்தி ருந்தாள். முதன் முதலாக, சம்பு அம்மா அரவணைப்பில் அந்தக் கூடத்தில் பழைய புடவை மெத்தையில் முடங்கி

உறங்கிய நினைவு வந்தது. குழந்தைப் பருவம் எவ்வளவு தூய்மையானது? இவளும் குழந்தைதான். "எங்க புள்ளக்கி ஒண்ணும் தெரியாதுங்க, நல்லது பொல்லாதது..." என்று அவள் தாய் கூறியது செவிகளில் ஒலிக்கிறது. இவள் பிள்ளை எப்பேர்ப்பட்டவன்? அவன் இந்தியை எதிர்க்கட்டும், அதிரடி அரசியல் பேசட்டும், சினிமா வசனம் எழுதட்டும், வசனம் பேசி நடிக்கட்டும்; குடிக்கட்டும். இவனையே நம்பி கைபிடித்திருக்கும் இந்தக் குழந்தைப் பெண்ணைப் பூப்போல் வைத்துக் கொள்ள வேண்டுமே?

பஞ்சமியைப் புருசன் எப்படி அன்போடு வைத்திருந்தான்? அவளுக்குக் கொடுப்பினை இல்லை. ஆனால், சம்பு அம்மா, புருசன், தாமு?

இப்போது நினைத்துப் பார்க்கிறாள். அவர்களிடையே எந்த உறவும் இருந்திருக்கவில்லை என்றே ஊகிக்கிறாள்.

விடியற்காலையில் இவள் கதவு திறந்து குழாய் நீரைப் பிடித்து முன் வாசல் தெளிக்க வருகையில் கார் வந்து நின்றது.

இவள் திகைத்துப்போய் வாளியோடு ஒதுங்கினாள். மேல்வேட்டி விசிற இவன் கார்க் கதவை ஓங்கி அடித்து விட்டு உள்ளே சென்றான். மாடிப்படியில் அவன் ஏறிச் சென்றது தெரிந்ததும் அவள் வாசல் பெருக்கி, கோலமிட்டாள். திரும்பி வந்து சோபாவிலேயே படுத்துத் தூங்கிவிட்ட மருமகளை மெள்ள எழுப்பினாள்.

"அம்மா, ரஞ்சிதம், உம்புருசன் வந்திட்டாப்புல. போயி காப்பி கீப்பி வச்சிட்டு வரவான்னு கேளு..." என்றாள்.

அவள் திடுக்கிட்டாற்போல் எழுந்தாள். "ஒண்ணுமில்லம்மா, பயந்திட்டியா? போயி முகம் கழுவிக் கிட்டு, காப்பி வச்சித் தாரேன், எடுத்திட்டுப் போ! மணி ஆறாயிடிச்சி..."

முதல் நாளிரவு காய்ச்சிய பால் இருந்தது. புதிய பால் இன்னமும் வந்திருக்கவில்லை. பொடி போட்டு, பில்டரில் இறக்கி, அந்தப் பாலைச் சுடவைத்துக் காபி போட்டாள்.

புதிய டவரா தம்ளரில் ஊற்றிக் கொடுத்து அனுப்பினாள். பயந்த புறாவைப் போல் போயிற்று.

காபியைக் கொடுத்து விட்டு அவள் வரவேயில்லை. எட்டு, ஒன்பது, பத்துமணியாகிவிட்டது. இவள் அடுப்பை அணைத்துவிட்டு, பின் பக்கம் தாழ்வரையெல்லாம் சுண்ணாம்படித்த தடயங்களைத் தேய்த்துக் கழுவினாள். பால்வாங்கிக் காய்ச்சி வைத்து விட்டுக் குளித்தாள். சேலை துவைத்து உலர்த்தினாள். பழைய குழம்பும் பொரியலும் முதல் நாளிரவே கலந்து கொதிக்க வைத்திருந்தாள். சோற்றில் நீரூற்றி வைத்திருந்தாள். எந்தப் பொருளையும் வீணாக்கிப் பழக்கமில்லை. இரவுக்குள் தீர்த்து விடுவார்கள்.

பத்தரை மணி சுமாருக்கு, கலைந்த தலையும், கலைந்த பொட்டுமாகக் கீழே வந்த பெண்ணின் முகம் அழுது அழுது சிவந்திருந்தது இவளுக்குச் சொறேலென்றது.

"ஏம்மா, அழுதியா?..."

"இல்லேத்தே..." என்றாலும் பிழியப்பிழிய அழுகை வந்தது.

"அசடு, அழாத. ஒரு பொம்புளைக்கு வாழ்க்கைங்கறது இதுதா. போவட்டும்... அழுவாதம்மா!..." இதற்குமேல் எதையும் கேட்பது நாகரிகம் இல்லை.

"சரி, நீ காபி குடி, ராத்திரியே சரியா சாப்புடல. வா, முகத்தைத் துடச்சிக்க. பல்லு விளக்கிட்டு வா!"

அப்போது, மாடியில் குளியலறை இல்லை.

"சரி அத்தே..." என்று போனாள். அதிர்ந்து பேசத் தெரியாததென்பது முழுசும் உண்மை.

"இன்னைக்கு எப்ப போகப் போறான்? தூங்கி எந்திரிச்சிக் குளிச்சுக் கௌம்பறச்சே, மணி பன்னண்டடிச்சிடும். எல்லாம் தலகீழா இருக்கு..." என்று சொல்லிக் கொண்டே,

அவள் பழைய சோற்றில் உப்பையும் தயிரையும் சேர்த்துப் பிசைந்து தாளித்தாள்.

"எங்க வீட்டிலும் இப்படித்தான் அத்தை செய்வோம்! எங்கம்மா, இப்படித்தா எதுன்னாலும் கொதிக்க வச்சி, சுண்டவச்சிடுவாங்க. எங்கண்ணெ, அப்பா, சித்தப்பா, அத்தை எல்லாரும் சாப்பிடுவம். ஆனா, உங்க மக..."

"ஆமா, எங்க ஆகாசத்திலேந்து வந்திட்டானோ? எப்ப எந்திரிச்சி வரானோ? என்னமோ?..."

"அத்தே..." என்றவள் நிலத்தைப் பார்த்தாள்.

"ஏம்மா..."

"... ஒண்ணில்ல... நீங்க கறி மீனு ஒண்ணும் சமைக்க மாட்டீங்களா?"

'கரண்ட்' ஓடும் கம்பியைத் தொட்டுவிட்டாள்.

"ஏம்மா? உனக்குத் தெரியுமில்ல? சமைச்சிப்போடு!"

அவள் ஒன்னும் சொல்லவில்லை.

மாடு கொண்டு வந்து பால் கறக்க ஒருவன் வந்தான். ஃபிரிட்ஜ் வந்தது. கறி மீன் மசாலாப் பொருட்கள் எல்லாம் வாங்கித் தந்து வேலை செய்ய ஒரு பெண் வந்தாள். சுருட்டை சுருட்டையான முடியும் மூக்கும் முழியாகக் களையாக இருந்தாள்.

இவள் தனக்கு வேண்டிய கஞ்சியோ, குழம்போ வைத்துக் கொண்டு பின்பக்கம் தனியே தோட்டத்தைக் கொத்திக் கொண்டோ தண்ணீர் பாய்ச்சிக் கொண்டோ இருப்பாள்.

மரகதமும் ரஞ்சிதமும் சமையலறையில் பேசிக் கொண்டே, மீன் கழுவுவதோ, மசாலை அரைப்பதோ, வித்தாரமாகச் செய்வார்கள். அவன் எப்போது வந்தாலும் எதுவும் தயாராக இருந்தது. ஃபிரிட்ஜில் குடி வகைகள், குழம்பு, கறி எது வேண்டுமானாலும் இருந்தது. தோட்டத்தில் கீரை போட்டு, நன்றாக வளர்ந்திருந்தது. அப்போதுதான் கடலூர் ஆஸ்பத்திரியில் வேலை பார்த்துக் கொண்டிருந்த

சந்திரி, ஒருநாள் வந்தாள். கல்யாணத்துக்கு ஒருநாள் வந்து விட்டுப் போனாள். தோட்டத்தில் இருந்த அவள் கையைக் கழுவிக் கொண்டு பின்புறமாக வந்தாள்.

"யேய், ஜூஸ்? நீ எங்கே இங்கே? என்னமோ, பின்னணி பாடகியாகி ஒரு கலக்குக் கலக்குவேன்னே, குழம்பு கலக்கிட்டிருக்கிற?"

சந்திரி உயரமாக வளர்ந்திருந்தாள். முடியை தொள தொளவென்று பிடரியில் புரள நுனியில் மட்டும் பின்னி விட்டிருந்தாள். செவிகளில் வளையங்கள்.

"குழம்புகலக்கினா கொறஞ்சா போயிடும்? எனக்கு சான்ஸ் கிடைச்சிடுத்துன்னு வச்சிக்க!"

"இவங்கள உங்களுக்குத் தெரியுமா சந்திரி அக்கா?"

"தெரியுமாவாவது? இவ மூணு வயசில மூக்கொழுக நின்னிட்டு அழுத போதே, இவ பின்னணி பாடகியா வணும்னு தா அழுதா..."

"ஏம்மா, சந்திரி!... யாரு?..."

"உனக்குத் தெரியாதாம்மா? காத்தமுத்து மாம மக. இவளுக்கு எப்பம் மூக் கொழுகும். அண்ணெதா இதுக்கு ஜூஸ்னு பேர்வச்சது. சொந்த உறவுமுறைகளே தொடர்பு விட்டுப் போய்விட்டன. இவ நம்ம குருகுல வித்யாலயாவில படிச்சால்ல?..."

"படிச்சா... பிறகு படிப்ப நிறுத்திட்டு, அவம்மா, வூட்டு வேலைக்கு அனுப்பிச்சிட்டா..."

"இல்லக்கா, கார்ப்பரேசன் ஸ்கூல்ல பிறகு படிச்சேன்... கமலவேணி அம்மா வீட்லதா இருந்தே. அவுங்க பாடுற பாட்டெல்லாம் அப்பிடியே பாடுவேன். அண்ணெ எனக்கு நிச்சியமா சான்ஸ் தரதா சொல்லிருக்காங்க, புதுப்படத்துல..."

சந்திரி, அமெரிக்காவுக்குச் செல்ல வாய்ப்பு வந்திருந்த சந்தோசத்தில் மிதந்தாள். சாமான்கள் வாங்கினாள். அவளையும் கூட்டிக் கொண்டு பங்களா வீட்டுக்கு வந்து அம்மா, அய்யாவிடம் ஆசி பெற்றாள்.

"சந்திரி, உனக்குப் பிடித்தவர் யாரானாலும், நல்லவராக ஒருத்தரை வாழ்க்கைத் துணையாகக் கொள்" என்று அய்யா வாழ்த்தினார். டெல்லி சென்று அங்கிருந்து விமானத்தில் செல்வதாக இருந்தாள். அய்யாதான் நண்பர்களுக்கு எழுதி எல்லா ஏற்பாடுகளையும் செய்ததாக அறிந்தாள்.

"ஏம்மா, மகன் வீடு எப்படி இருக்கு?"

அம்மா கேட்டார். "எதைச் சொல்ல அம்மா? ஒண்ணும் சரியில்ல. ஆனா, மருமகப் பொண்ணு நல்ல பொண்ணு. கவடில்லாத பொண்ணு. இப்ப மெய்யோ பொய்யோன்னு இருக்கு. அவங்க அம்மா வீட்டுக்கு எழுதிப் போட்டு, அழச்சிட்டுப் போகச் சொல்லுறதான்னு தெரியல..."

"சந்தோசமான சமாசாரம் சொல்ற! இந்தாங்க, சர்க்கரை வாயில் போட்டுக்குங்க!" என்று அம்மா சர்க்கரை வழங்கினார்... ஆனால் இவளுக்கு சர்க்கரை இனிக்கவில்லை.

## 16

"எம்புள்ளிய எப்படின்னாலும் காப்பாத்தச் சொல்லுங்க தாயி. அவெ அப்படியெல்லாம் நடக்கிறவனில்ல தாயி! காடுகழனி வெள்ளாம இல்லாம, இங்ஙன பஞ்சம் புழைக்க வந்து, பாடுபடுறம். என்னமோ படம் வரயிவா. கடயில வேலை செய்திட்டிருந்தவனக் கூட்டிட்டுப் போயி, படம் நல்லா வரயிறான்னு, வச்சிட்டாங்க. கட்சில சேத்திட்டாங்க. அக்கா தங்கச்சின்னாக்கூட எட்ட இருந்துதா பேசுவா தாயி. அவம் போயி, ரோட்டுல போற பொண்ணப் புடிச்சி இழுத்தான்னு புடிச்சிட்டுப் போயிட்டுது தாயி!"

வீடு துடைத்துக் கொண்டிருக்கும் அவள் திடுக்கிட்டாற் போல் பார்க்கிறாள். அவளுடன் வழுக்கை மண்டையும், குங்குமம் திருநீறுப் பொட்டுமாக ஒரு பெரியவர் நிற்கிறார். எங்கோ பார்த்த நினைவு.

இவள் நிமிரும் போது, அந்தப் பஞ்சைத்தாய், இவள் காலடியில் விழுந்து கண்ணீரால் நனைக்கிறாள்.

''இந்தாம்மா எழுந்திரு...'' என்று எழுப்புகிறாள். சட்டென்று அந்தப் பெரியவரின் நினைவு வருகிறது. இவள் பணம் வாங்கச் செல்லும் வங்கியில் இவர் பழக்கம். ராம லிங்கம் என்று பெயர். பென்சன் வாங்கிக் கொண்டு விட்டார். ஒரே பையன் கிறிஸ்தவப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு மதம் மாறிப் போனான்.

“.... வாங்கையா எங்கே இம்புட்டுத் தூரம்? எல்லாம் நல்லாருக்கீங்களா?...''

மடமடவென்று வாளியையும் சுருணையையும் பின் பக்கம் கொண்டு வைத்துக் கைகழுவிக் கொண்டு வருகிறாள்.

“இந்த ஏழைப் பெண்ணுக்கு ஒரு வழி செய்யணும். உங்களால் தான் முடியும். இந்த அரசியல் கட்சிக்காரங்க என்ன அக்கிரமம் செய்தாலும் கேட்பார் கேள்வி இல்லேன்னு ஆயிடிச்சி. இந்தம்மா காஞ்சிபுரத்திலேந்து அவல் கொண்டு வந்து தெருத் தெருவா விப்ப. இருக்கிறது அங்கதா. வள்ளுவர் குருகுலத்துல ஒம்பது படிச்சிட்டிருந்தப்ப, ஒருநா வாத்தியார் அடிச்சாரு. காது சரியா கேக்கலன்னு சொல்றா. என்ன விசயம்னு புரியல. படிப்பு நின்னு போச்சு. ஒரு கடையில, இங்கதா மளிகைக் கடையில வேலைக்கு வச்சா. காது சரியா கேக்கலன்னு சொல்ல முடியாது. கொஞ்சம் மந்தமா இருப்பான். ஒருதரத்துக்கு ரெண்டு தரம் சொல்ல ணும். முதலாளி வீட்டில மாடில, கடைப்பையன்கள் அஞ்சாறு பேர்— தட்டிமாடி. அங்கேயே படுத்துப்பாங்க. பின் பக்கம் வெளில வெறகு, மட்டை, அது இது வச்சி பொங்கித்திம்பாங்க. ஒரு நேரம் அப்ப ஒருநா, ஒரு கரியை வச்சிட்டு, பின் பக்க சுவரில, கிணறு, தென்னமரம், சூரியன்னு வரஞ்சிருக்கிறான். மத்தியானம் குளிச்சிட்டு, முதலாளிக்கு வீட்டிலேந்து சோறு கொண்டு போகணும். கடைக்கும் வூட்டுக்கும் சைகிள்ல போனா, பத்து நிமிசம்

ஆகும். ரயில் கேட்டு மூடிட்டா, ரொம்ப நேரமாயிரும். இவன் பின்னாடி வெள்ளயடிச்ச சுவரப் பாழு பண்ணிருக்கறத பாத்து, செவிட்டுப்பயல, அவருக்கு சோத்து நேரம் தப்பினா தாங்காது, சக்கர நோயிக்காரரு என்று செமையாக அடித்து விட்டாள். அழுது கொண்டே பையன் முதலாளியிடம் நேரமானதைச் சொல்லி மன்னிப்புக் கேட்டிருக்கிறான்.

இவனுக்குப் படுக்கை, பூட்டிய கதவின் பக்கம் கடையில்தான். இரண்டிரண்டு பேராக இரவு காவல். இவன் காவலிருக்கவில்லை. பஸ் ஏறி ஊருக்குப் போய்விட்டான். அவள் அம்மா திட்டி, அவல சுமந்து வருகையில் இவனைக் கூட்டி வந்து மன்னிப்புக் கேட்க வைத்தாள். "டேய், நீ நல்லா வரையிறனு ஏன் சொல்லல? உனக்கு இனிமே வரையிற வேலதா. உனக்கு வர்ணம் பிருஷ் எல்லாம் வாங்கித் தாரேன்! இந்தக் கடை வாணாம்!" என்று ஆச்சரியத்தில் ஆழ்த்தினார். அப்போது தேர்தல் வர இருந்தது. அவர் அரசியல் கட்சியின் பிரதான ஆதரவாளர். ஒவ்வொரு தெரு விலும் கட்சிச் சின்னங்கள், தலைவர் உருவம், சுலோகங்கள் எழுதுவது வேலையாயிற்று. பிடித்த வேலை, சம்பளம், மற்றவர் குடித்தாலும், பீடி சிகரெட் புகைத்தாலும் இவன் ஒழுக்கமாக இருந்தான். கட்சியில் இளைஞர் அணித் தலைவனாக இவள் பெயரன் நாகமணிதான் கட்சியை இளைஞர் அனைவருக்கும் உரியதாக ஆக்கினான்.

"அம்மா, இவுனப்போல வரையிறவனுக்கெல்லாம் சாராயம், பிரியாணி, இதெல்லாம் தா கொடுப்பாங்களாம். இவெ குடிக்கமாட்டா. இவுங்கப்பெ குடிச்சிக் குடிச்சிப் பாழாயிதா, நா ரெண்டு பொட்டபுள்ளகளயும் ஆத்தாளயும் கூட்டிட்டு இங்கு வந்து சந்தியில நிக்கிற. அந்த கடக்கார சாமி ரொம்ப நல்லவரு. அவுரு இவனுக்கு சம்பளமா குடுத் திடுவாரு. சாராயத்த வாங்கி ஊத்தி அடுத்த கட்சிக்காரனுவ இவனப்போல பயங்களக் கூட்டிட்டுப் போவாங்களாம். இவன ஒருக்க ராவுல போட்டு அடிச்சிட்டானுவ. மேலே பானர் எழுதிட்டிருந்தானா... எம்புட்ட நல்லா வரயிறா!

தலவரு, அண்ணா படம் அச்சா வரஞ்சிருந்தா. அடிச்சி கைய ஒடச்சிட்டாங்க. சாமி, கச்சி வாணாம் அவனுக்கு கட வேலயே போதும்னு அழுத. அவருதான் புத்தூரு கட்டுப் போட கூட்டிட்டுப் போகச் சொல்லிப் பணம் குடுத்தாரு. இப்ப ஒண்ணில. பல்லாவரம் திடல்ல பெரி...ய கூட்டம். தோரணம் கட்டி, மைக்கு செட்டு போட்டு அட்டை வச்சி ஏற்பாடு பண்ண கூட்டியிருக்காங்க. அஞ்சுபேரு, ஆட்டோல பிரியாணி பொட்டலம் பாட்டில் எல்லாம் எடுத்திட்டுப் போனாங்களாம். நம்மபய்ய உள்ள, குந்திட்டிருந்திருக்கா பச்சை—சிவப்பு வெளக்கு வருமே அங்க சிவப்பு வரப்ப, வண்டியெல்லாம் நிப்பாட்டிட்டா, அப்ப அந்தப் பொண்ணு ஓரமாப் போயிட்டிருந்திச்சா நின்னிச்சா தெரி...ல... மோட்டார் பைக்கில, இளைஞர் அணித்தலவர் நின்னா ருங்கறாங்க. சட்டுனு வண்டி கிளம்பறச்சே, அந்தப் பொண்ணக்கையப் புடிச்சி, ஓகோகோன்னு சத்தம் போட்டு இழுத்தாரு. அது வரல. இழுத்திட்டுப் போகுமுன்ன அது கீழ வுழ, பின்னாடி வந்த வண்டி சக்கரத்துல அடிபட்டிச் சின்னு பாத்தவுங்க சொல்றாங்க; என்ன நடந்திச்சோ ஆண்டவனுக்குத்தா வெளிச்சம். ஆட்டோவும் சாஞ்சிடிச்சி. அல்லாரும் ஓடிட்டாங்க. எம்பய்யனும், இன்னொரு பய, அவன் குடிப்பான்னு சொல்லுவா. ரெண்டு பேரையும் போலீசு புடிச்சி கொலக்கேசு போட்டிருக்கு, தாயி!"

அவள் கதறலில் உடலும் உள்ளமும் மட்டும் குலுங்க வில்லை. பூமா தேவியே குலுங்குவது போல் இருக்கிறது. பூமாதேவி குலுங்கிக் குமுறுகிறாள். 'நா இன்னு என்ன சாட்சி கொடுப்பேன்'னு ஆகாசத்த பாத்து, அன்னிக்கு சீதை, குலுங்கினாளே, அது மனசில தோணுகிறது. இவ சீதையா? அஞ்சு புருசன் இருக்கிறீங்களே, இப்பிடி மானம் உரிக்கிறா னேன்னு துரோபதை கதறினாளே, அந்தக் காட்சியா இது? இவள் வயிற்றில் உதித்ததெல்லாம் துச்சாதனன் வாரிசா?....

அவளை இழுத்து அணைத்துக் கொள்கிறாள்.

அந்தக் காட்சி இவளுக்கும் கண்முன் உயிர்க்கிறது. ஆரஞ்சு வண்ண மேலாடை. முகம் சாய்ந்துகிடந்தது. இடுப்புக்குக் கீழ்... சிதைந்த கோலம்... கால் செருப்பு ஒன்று தள்ளிக் கிடந்தது. அவள் உன்னிக் கொண்டு பார்த்த காட்சி...

அவளுக்குப் புரிகிறது. வார்த்தைக்கு வார்த்தை அல்ல. தெருவில் நடக்கும் பெண் வேட்டை. அந்தக் காலத்து ராஜா ராணிக் கதைகளில், மோசமான ராஜகுமாரன் வருவான். அவன் குதிரையில் வந்தாலே பெண்கள் எல்லோரும் ஓடி ஒளிவார்கள். எவளேனும் தட்டுப்பட்டுவிட்டால், அவள் அந்தப்புரத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு... கசக்கப் படுவாள்.

இங்கே அந்தப்புரம் தேவையில்லை...

"அம்மா... நீங்க மனசில வாங்கிட்டீங்களோ என்னவோ. பெத்தவங்க தேவையில்லேன்னு, தீந்து போயிட்ட காலம் இது. நீங்க ரொம்ப வயிராக்கியமா, உங்க மகன், இன்னைக் குப் பெரிய பதவியில இருக்கிறவர் வந்து ரெண்டு மாசத் துக்கு முன்ன கூடக் கூப்பிட்டதாகவும், நீங்க முகம் குடுத்தே பேசலன்னும் ரங்கசாமி சொன்னான்னாலும், இந்தப் பய்ய, அப்புராணி. அப்படிச் செய்யிறவ இல்ல. ஏதோ பிரியாணி சாப்பாடுன்னுற ஆசயிலதா போயிருக்கா. அவன் தண்ணி கிண்ணிகூடப் போடுறவ இல்ல. போர்டு எழுதுற தொழில்னு ஒண்ணு நடத்துற பயல் தண்ணிலேயே மிதப்பவன். இவந்தா வேலை செய்யிறவன். கண்ணால பாத்தவங்க, உங்க பேரன் நாகமணிதா அந்தப் பெண்ணத் துரத்திட்டு வந்து கையப்புடிச்சி இழுத்தான்னு சொல்றாங்க. ஆனா அவன் விர்ருனு ஸிக்னல் எது இருந்தான்னன்னு தப்பிச்சிட்டான். பைக் மட்டுந்தா இருந்திருக்கு. எதுவும் புரியல. குற்றம் பண்ணினவங்க தப்பிச்சிடுறாங்க. இது வெறும் ஈவ் டீசிங் மட்டுமில்ல. கொலைன்னு வழக்குப்பதிவு செஞ்சிட்டாங்க. அந்தப் பொண்ணு, கல்யாணமான பொண்ணாம். புருசன்காரன் துபாய்ல பணம் சம்பாதிக்கப்

போயிருக்கிறான். இது, அம்மாகூடத் தங்கி, சீட்டுக் கம்பெனி நடத்திட்டுருக்குன்னு சொல்றாங்க. நமக்கு அதெல்லாந் தேவையில்ல. நீங்க போயி உங்க மகனப் பாத்து ஒரு நாயத்தைச் சொல்லணும்.''

மலை உச்சியில் நிற்பது போல இருக்கிறது. சறுக்கிக்கீழே விழும் அபாயம் நாகமணின்னா, மரகதம் பெத்த புள்ள தான். ரஞ்சிதத்துக்கு மூத்தது மகள். ரஞ்சிதத்தை மணக்கு முன்பே, பாட்டுசான்ஸ் என்று வந்து வலையில் மாட்டிக் கொண்டு கர்ப்பமான நிலையில்தான் அவள் மீன் கழுவவும், கறிவாங்கி வரவும் மசாலை அறைக்கவும் வருவது போல் வந்து ஊன்றினாள். அவளே தான் வந்து சேர்ந்ததாகத் தெரிந்தது.

முழுகாமல் இருக்கும் மகளை ஆடிமாசத்துக்கு முன்பே வந்து வளையலடுக்கிக் கூட்டிச் செல்கையில் அவள் மகன் வீட்டில்தான் இருந்தாள். வளையல் அடுக்கும் வைபவத்தை இங்கேயே பெரிதாகக் கொண்டாடினார்கள்.

"அத்தே, நீங்க இந்த வீட்டிலிலே இருங்க...'' என்று மருமகள் அவள் கையை பற்றிச் சூசகமாகச் சொல்லிவிட்டுக் காரில் சென்று ஏறிக் கொண்டாள்.

கார் அகன்றதும், உறமுறைகள் எல்லாரும் சென்றதும், விறிச்சிட்டுக் கிடந்த வீட்டில் அவளும் மரகதமும் மட்டுமே இருந்தார்கள்.

அந்தப் பெண் தடாலென்று அவள் காலில் விழுந்தாள். "அத்தே, நீங்கதா இப்ப எனக்குத் தெய்வம். இப்ப, ஒரு தாலிக்கவுரு போட்டதால, பணம் இருக்கிறதால, வளையல், நகை, சீலைன்னு விருந்து கொண்டாடுறீங்க. ஆனா, என் வயித்தில சுமக்கிறது உங்க மகன் மூலமான புள்ள. அப்பவே என்னக் கலியாணம் பண்ணிக்கிங்கன்னு கெஞ்சுனேன். ராயப்பேட்டையில கமலவேணி அம்மா வீட்ல இருக்கை யிலேயே அடிக்கடி வருவாரு. ஒருநா, ரூமுக்கு வந்து பாடிக் காட்டுன்னு அழச்சிட்டுப் போனாரு.

பாடுனே. 'கங்கைக்கரைத் தோட்டம்னு பாடின.'

"ரொம்ப நல்லாப் பாடுற. பாட்டோட எனக்கு ஒன்னியும் ரொம்பப் புடிச்சிருக்கு"ன்னு சொன்னாரு.

கண்களில் நீர், நடந்ததை உணர்த்தியது.

"பிறகு கட்சிக்கூட்டம் நடக்குற எடத்திலல்லாம், பாட்டுப்பாட அவுரே எழுதின பாட்டப் பாடச் சொல்லிக் கூட்டிப் போனாரு. போஸ்டரெல்லாம் போட்டாங்க. ரெண்டு தபா, மருந்து குடிச்சி கருவக் கலச்சிட்டேன். 'எப்பங்க நம்ம கலியாணம்'பே. எலக்சன் முடியட்டும். நாம ஜெயிச்சதும் முதல் கலியாணம் நம்முதுதான்னு தலமேலடிச்சி சத்தியம் பண்ணிட்டு, இப்படித் துரோகம் பண்ணிட்டாரு. அத்தே!..."

கொதிக்கும் நெஞ்சோடு, அந்தத் தலையைச் சார்த்திக் கொண்டு ஆறுதல் மொழிந்தாள்.

"நீங்க விட்டுப் போட்டுப் போயிட்டீங்க. அவுங்க, குளிக்கப்போயிருக்கப்ப, என்னக் கூப்பிட்டுக் கன்னத்தில அடிச்சாரு. "ஏண்டி? நீ திட்டம் போட்டுட்டு இங்க வந்தி ருக்கியா? நன்றிகெட்ட நாயே! குடுக்கிற பணத்த வாங்கிட்டு எங்கினாலும் போயிச் சாவு! நீ இங்க வந்து என்ன பயமுறுத் துறியா? வேசி!"ன்னு வெரட்டினாரு... அவுங்க குளிச்சிட்டு வந்து "ஏ மரகதம் என்னமோ மாதிரி இருக்க? அழுதியா"ன் னாங்க..."

"இல்லங்க ஒட்டட அடிச்சனா, தூசி விழுந்தி டிச்சி..."ன்னு சொல்லிச் சமாளிச்சேன்.

"இப்ப நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது அவுரு எப்படீன்னாலும் ஒருநா வீட்டுக்கு வருவாரு. நீங்க அவுர மரிச்சி, அவரு கையால என் கழுத்தில ஒரு மஞ்சக் கவுறு கட்டச் சொல்லணும். என் வயித்தில இருக்கிற புள்ளக்கு அப்பா இவுருன்னு எல்லாரும் அறியணும். நான் வேசியில்லன்னு நீங்கதான் உலகுக்குச் சொல்லணும்..."

ஒரு வாரம் அவன் வீடு திரும்பவில்லை.

ஓர் அதிகாலைப் பொழுதில் வந்து கதவைத் தட்டினான்.

அவளும் மரகதமும் முன் கூடத்தில்தான் படுத்திருந் தார்கள். அவன் மேவேட்டி விசிற மேலே ஏறிப்போனான். காலையில் பத்தரை மணிக்கு அவன் கிழிறங்கி வந்து, குளிய லறையில் பல் துலக்கி முகம் கழுவிக் கொண்டான். "காபி கொண்டா, மரகதம்?" என்று சட்டமாக ஆணையிட்டுவிட்டு முன் கூடத்தில் சோபாவில் உட்கார்ந்து பத்திரிகையைப் பிரித்துக் கொண்டிருக்கையில் காபியுடன் இவள் சென்று நின்றாள்.

"ஏ கெளவி! உனக்கென்ன வேலை இங்க? ஏ இங்க வந்து தாவறுக்கிற? ஒரு தரம் சொன்னாப் புரியாது?"

"புரியிதுரா! புரியிது! நான் நீ இங்க சொன்னாலும் நிக்கப் போறதில்ல. போயிட்டே இருக்கிற. அதுக்கு முன்ன ஒரு காரியம் இருக்கு. அது ஆனதும் இந்த நிமிசமே கிளம்பிடுவ..."

"என்ன நீ? வெவகாரம் பண்ணுற? இதபாரு, ரஞ்சிதத் துக்கும் எனக்கும் எடைல புகுந்து எதுனாலும் பண்ண... பெறகு உன்னப் பெத்தவன்னு கூடப் பாக்கமாட்டேே?"

"நீ பாக்கமாட்டன்னு தெரியிண்டா எனக்கு. அந்தப் பொண்ணு நல்லபடியா பெத்துப் பொழக்கணும். என் வாரிசு வெளங்கணும்னுதா இருக்கே. நீ போயி காபி குடிச் சிட்டு குளிச்சு முழுவி சித்த சுத்தியோட வா... உனக்கு சாமிபூதம்னு ஒண்ணும் நம்பிக்கை இல்லேன்னாலும், அவுங் களுக்கு இருக்கு. நீ அறிஞ்சோ அறியாமலோ, நம்பிக்கை உள்ளவங்ககூட சம்பந்தம் வச்சிட்டே. அதுனால..."

"அதுனால...?"

"ஒரு நேர்ச்சடா... நீ குளிச்சி முழுவிட்டு வா, அது கும்பிட்டு முடிஞ்சதும், நானே கெளம்பிப் போயிடுவ..."

அவன் காபியை உதட்டில் வைத்துப் பருகிவிட்டுப் போனான். குளியலறையில் சோப்பு மணம் வந்தது. இவள் பூசையறையில் குத்து விளக்குகளை ஏற்றி வைத்தாள். சாமி படங்களுக்குப் பூச்சாத்தினாள். ஊதுபத்திகளைக் கொளுத்தி வைத்தாள். அறையின் கதவு மறைவில் நீராடிப் பூச்சூடி, பொட்டிட்டு மங்கலகோலத்துடன் மரகதம் இருந்தாள். அவள் கையில் மஞ்சட் கிழங்குடன் கூடிய புதிய தாலிக் கயிறு இருந்தது.

"உள்ளே போயி, நல்லபடியா வமுசம் தழைக்கணும்னு வேண்டிக்கிட்டுக் கும்பிடு... முருகன் வள்ளி தேவயான கூட இருக்குற படந்தா..."

"நீ... வுடமாட்டே...?" என்று உள்ளே சென்றதும் அவள் அந்தக் குறுகலான வாயிலில் நின்று கொண்டாள்.

"டேய், அந்தத் தாலிய வாங்கி அவ கழுத்துல கட்டு?" என்றாள் உரத்த குரலில்.

குத்துப்பட்ட உணர்வை விழுங்க முடியவில்லை "யே கெளவி, இதெல்லாம் என்ன நாடகம்!"

"நா நாடகம் ஆடலடா! வீணாப் பொண்பாவம் தேடிக்காத! இவவயித்துப் புள்ளதா மொத வாரிசு! சும்மா பேசாம, தாலிய வாங்கிக் கட்டு?"

தாலியைக் கட்டினான்.

"ரகசியமா நீ குடுத்திட்டா, அது அப்பன் பேர் தெரியாம போகும்டா! ஒத்துக்கோ!..."

பேச வழியில்லை. குங்குமத்தைக் கொடுத்து வைக்கச் சொன்னாள் மரகதம். சரேலென்று அவன் வெளியேறு முன், மரகதம் அவள் காலில் விழுந்து பணிந்தாள். கண்ணீருடன் அவளைக் கட்டிக் கொண்டாள். "ஆயிசுபூர நீங்க செய்த இந்த உதவிக்கு, நான் உங்களுக்குச் செருப்பா உழைக்கணும்..." என்றாள்.

ரஞ்சிதம் செல்வத்தில் வளர்ந்த அப்பாவிப் பெண். கவடு சூது தெரியாது. ஆனால் இவள், அப்படியல்ல—நெளிந்து வளைந்து எகிறித் திமிறி, தன்னிடத்தை உறுதி செய்து கொள்ளும் குணம் படைத்தவள். சில நாட்கள் இரவில் வரமாட்டான். இவனுக்கும் தொண்டர் குழாம், மாலை, பாராட்டு என்று வருபவர் போகிறவர் அதிக மானார்கள். சமையலும் சாப்பாடும் வசதிகளும், பெருகு வதற்கு முன் இவள் கழுத்தில் காதில் மூக்கில், கையில் என்று தேடிக் கொண்டாள்.

"அத்தே, எனக்கு இவுங்க இந்த நெக்லேசு வாங்கி வந்தாங்க! நல்லா இருக்கா, பாருங்க!" என்று காட்டுவாள்.

சில நாட்களில், "அத்தே, ஷூட்டிங் இருக்குதாம். கூப்பி டுறாங்க, நானும் ஊட்டிக்குப் போறேன்"னு தெரிவித்துக் காரிலேறிக் கொள்ளும் அளவுக்கு, இவளுடைய முக்கியத் துவம் மழுங்கிவிட்டது. வாசல் பக்கம் ஒரு கொட்டகை போட்டிருந்தார்கள். சின்னு, பழனி என்று இரண்டு பிள்ளைகள் அங்கே பத்திரிகை அலுவலகம் நடத்தினார்கள். ஒருநாள் இவள் கதவைப் பூட்டிச் சாவியை அவர்களிடம் கொடுத்து விட்டுக் கிளம்பிவிட்டாள்.

"என்ன தாயம்மா? திடீர்னு வந்திட்ட?"

ராதாம்மா வந்திருந்தாள். "எப்ப வந்தீங்கம்மா? மருமகப்புள்ள வந்திருக்காங்களா?..." என்று கேட்டு, அம்மா வின் காலோடு ஒட்டி நின்ற குட்டிப் பையனைப் பார்த்து, "ராசா... எப்டீருக்கே? தாயம்மா பாட்டிய நினப்பிருக்கா?" என்று கொஞ்சினாள்.

"ஏம்மா, சாமி இல்லன்னு சொன்ன உங்க புள்ள முருக பக்தனாயிட்டான் போல இருக்கு?" என்றார் வந்த விநாயக சாமி, பழைய காலத்துக் கதர்த் தொண்டர். நிறைய கதை கட்டுரை எழுதுவார். புத்தகங்களை மாடியில் கொண்டு வந்து அடுக்குவதும், படிப்பதும் பேசுவதும் வேலை, காந்தி நூற்றாண்டென்று. அதே வீட்டில் வாசலில் ஒவ்வொரு

வெள்ளியும் காந்தி பாசறை என்று நடத்தினார்கள் என்பதெல்லாம் தெரியும். விநாயகசாமி மதுரையில் இருந்து வந்திருந்தார். கல்யாணம் காட்சி இல்லாதவர்.

"என்ன சொல்றீங்க மாமா?... இப்ப வாரியார் சுவாமி பிரசங்கம்னா, கூட்டம் கொள்ளல. அன்னைக்குக் கடவுளை நம்புறவன் முட்டாள்னு சொன்னவரே, இப்ப பேச முடியாம ஆயிட்டார் போல இருக்கு..."

"இல்ல ராதாம்மா.... இத, இந்தப் பத்திரிகையப் பாருங்க..." அவர் கொடுத்த பத்திரிகைத்தாளை அவளும் பார்த்தாள்.

"என்ன, குருவியாரே? இளவழுதிப்புரவலர், இரு மனைவியருடைய கடவுள் தொண்டராய்விட்டாராமே? உண்மையா?"

"அன்னையாரின் நெருக்கடிக்கு, காதும் காதும் வைத்தாற் போல் தலை குனிந்து விட்டதாகக் கேள்வி. நமக்கெதற்கையா இந்த உள்துறை சமாசாரமெல்லாம்?"

ராதாம்மா சத்தம் போட்டுப் படிக்கிறாள்.

அவள் அங்கே நிற்கப்பிடிக்காமல் பின் பக்கம் சென்றாள்.

"ஆமாம், மாமா, இந்தப் பத்திரிக்கைக் குப்பை எல்லாம் நீங்க வங்குறீங்களா?"

"ராம் ராம்! எனக்கென்ன வேற வேலை இல்லையா, காசை இப்படிச் செலவழிக்க? நம்ம அய்யா பேர் போட்டு இந்த விலாசத்துக்கு இது அனுப்பப் பட்டிருக்கு?"

அய்யா மாடியில் இருந்ததால் அவள் அன்று அவரைப் பார்க்கவில்லை.

"பத்திரிகைகள் சீரழியிது இன்னிக்கு! நா இங்க பட்டணம் வந்த புதுசில, மௌண்ட் ரோட்லயோ டவுன் லயோ எதோ பெரிய கடையில, அப்பல்லாம், பொம்பிளங்க இப்படிப் போக முடியாது, செல்லலாமோ, எதுவோ,

நினப்பில்ல, ஒரு பொம்புள பொம்மை, இடுப்பளவுக்கு வச்சி, 'பாடிசைஸ்' அளவெடுக்கறாப்புல... எனக்கு சரியாக் கூட நினப்பில்ல. அங்கெல்லாம் அந்நியத்துணி வாங்காதேன்னு சொல்லத்தான் போவோம். அந்த பொம்மயப் பாக்கவே கூச்சமாயிருந்திச்சி. இப்ப நினச்சிப் பாக்குறேன். இந்தப் பத்திரிகை, சினிமா, சுவரொட்டி எல்லாத்திலும், பொம்புள யத் துகிலுரியிற வேலயாத்தானிருக்கு. ஒரு துரோபதயத் துகிலுரிஞ்சான் துச்சாதனன். பாரத யுத்தம் வந்தது. இப்ப, ஒரு பத்திரிகைய, குடும்பத்திரிகையைப் பார்க்க முடியல. எல்லாம் வக்கிரமாயிருக்கு?'' என்று அம்மா அலுத்துக் கொண்டார்.

"அம்மா, இதே நான் அங்க மதுரை வாசகர் வட்டத்துல சொன்னேன். பொம்பிளகதா, இந்த மாதிரி விஷயங்களப் பார்த்து எதிர்க்கணும். அது எங்க? நாலுபேர் சேருமுன்ன? பத்துபேர் பிரிக்க வராங்களே?''

''எனக்குக்கூடத் தோணும். இப்ப நம்ம தமிழ்ப் படங்களப் பாக்கிறேன்—பத்திரிகைகளும் படிக்கிறேன். ஆனா, இதிலென்ன தமிழ் கலாசாரம் புதிசா இருக்குன்னு புரியல. கையில் டிரிங்க்ஸ் வச்சிகிட்டு பேசுறதும், ஆணும் பெண்ணும் பார்ட்னர் சேர்ந்து 'பால்' டான்ஸ் ஆடினதும் கலாசார மோசம்னு சொன்னாங்க. ஆனா, வெள்ளைக் காரன் போயி, நம்மை நாமே என்ன கலாசாரத்த மீட்டுக் கிட்டிருக்கிறோம்?... நம் தமிழ்ப்படங்களில், வரும் காதலிகள், நாயகிகள், உடம்பைக் காட்டுறதில்தான் எல்லாம் இருக்கு. அதுவும் ஹீரோயின் கனவில் வரும் 'காதல் காட்சிகள்...ஆகா' இதான் கலாசாரம்! பாம்பேல, ஒரு மராத்தி சிநேகிதி நம்ம பத்திரிகை கதைகளில் வரும் படங்களப் பார்த்துட்டு, 'உங்க மெட்ராசில பொண்ணுக ஸாரியே உடுக்கிறதில்லையா'ன்னு கேட்டா. 'இல்லியே? எனக்குத் தெரிஞ்சி அப்படியில்ல. படம் ஒரு கவர்ச்சிக்காகப் போடுவ'ன்னு சொன்னேன்....'' என்று ராதாம்மாவும் அதே கருத்தைச் சொன்னாள். அவள்

அன்று திசை தெரியாப் பிரமையில் நின்றாற்போல் உணர்ந்தாள்.

நம்மை ஆள வந்த பரங்கியன், இந்த சனங்களைப் புழுவாகப் போட்டுமிதிக்கும் வகையில் அதிரடியாகச் செய்ய முடியவில்லை. ஏனெனில் படிக்காத கிராம வாசியிடமும், ஏழையிடமும், ஒழுக்க கலாசாரம், அதனால் பற்றிய நேர்மை, பிடிவாதம் எல்லாம் இருந்தன. அந்த ஆதாரத்தில்தான் காந்திஜி, இந்த நாட்டு மக்களுக்கு உகந்தது அஹிம்சை வழின்னு செயல்பட்டார். இதெல்லாம், அடியோடு வேரறுக்க படுது இன்னைக்கு. தூலமா இருக்கிற தீவிரவாதம்கூட ஒத்துக்கலாம். ஓர் அரசியல் கட்சி, சினிமான்னு ஒரு நவீனக் கருவியை மக்களை மயங்கவைக்கும் தந்திரங்களில் கவர்ந்து...

"விநாயக மாமா, நீங்க வரவர எல்லாமே பிரசங்கம் கட்டுரைன்னு ஆரம்பிச்சுடுறீங்க. இதுக்கெல்லாம் யாரும் வரமாட்டா. வேற எதானும் யோசனை பண்ணுங்க...

அவர் தலையைத் தடவிக் கொண்டு போனார்.

அப்போதுதான் அம்மா கேட்டார்.

"தாயம்மா? அப்ப நீதான் அவனைக் கல்யாணம் பண்ணிக்கச் சொல்லி கட்டாயப்படுத்தனியா?"

"எனக்கு வேற வழி தெரியலம்மா? அப்பன் தெரியாத புள்ளன்னு வச்சிட்டு அவ சங்கடப்படுவாளே?"

"'இருதாரத் தடைச்சட்டம்'ன்னாலும், இவங்க தப்பிச்சிடுவாங்க! ஏன்னா, இவங்கதானே எதையும் ஒப்புக் கொள்ளும் வோட்டு மந்தைய உருவாக்கி இருக்காங்க?"

"அதுவும் சரிதான்" என்றாள் அம்மா.

## 17

இப்போது, மின்னல் கீறுகள் மண்டையைக் கூறு போடுகின்றன. தப்பு வழியில் வளரும் சந்ததி, தப்பு வழியிலேயே பூவும் பிஞ்சும் உதிர்க்குமா?

ஆனால், பழியோரிடம், பாவமோரிடம் என்றல்லவோ விடிந்திருக்கிறது? அவன் அன்று வந்து கூப்பிட்டான்; கெஞ்சினான்.

அன்று மட்டுமில்லை. இதற்கு முன்பும் ரஞ்சிதம் அனுப்பி வந்திருக்கிறான். ரஞ்சிதத்துக்கும் அவள் மீது அன்றிலிருந்தே கோபம்தான்.

''கௌவி இருத்து வச்சிக் கழுத்தறுத்திட்டதே?'' என்றாளாம் ரஞ்சிதத்தின் பாட்டி.

தான் செய்தது தவறோ என்ற உறுத்தல் அவள் அடி மனதில் மணலாய் வேதனை தந்து கொண்டிருக்கிறது...

காந்தி வழியில் கதருடுத்தி, மதுவிலக்குப் பிரசாரம் செய்து சிறை சென்ற பெண்மணிகள், பிறகு சமூக சேவை என்று ஆதரவற்ற, ஆநாதை விடுதி என்றுதான் தங்கள் சேவைகளைத் தொடர்ந்தார்கள்.

அப்படிப்பட்ட நிறுவனம் ஒன்று வெற்றிவிழா கொண்டாடியபோது அம்மா இல்லை; அய்யா இருந்தார். டில்லியில் இருந்து அப்போதைய பிரதமர் இந்திரா அம்மையார் வந்து பேசினார். இவருக்கு அந்த ஆங்கில வார்த்தைக்கு அர்த்தம் புரியவில்லை என்றாலும் ஒருவர் மொழி பெயர்த்தார். "வெள்ளிவிழா கொண்டாடும், இந்த நிறுவனத்தின் மூலமாக சேவை செய்யும் பெண்கள் சிறந்த சமூக சேவகர்கள் தாம். சந்தேகமில்லை. ஆனால் இது சிறப்பாகப் பொன்விழாக் கொண்டாட வேண்டும் என்று சொல்லமாட்டேன். ஏன் என்றால், ஒரு முன்னேற்ற சமுதாயத்தில் ஆதரவற்ற பெண்கள், கர்ப்பிணிகள், அநாதைகள் என்ற கரும்புள்ளிகள் இருக்கலாகாது..." என்று சொன்னாராம்.

அநாதைப் பெண்கள், கர்ப்பிணிகள்... அநாதைகள்...

அநாதைகள் எப்படி வருகிறார்கள்?

மரகதம் ஒரு பிள்ளையைப் பெற்று, அதை அநாதை யாகக் குப்பைத் தொட்டியிலோ எங்கோ விடக்கூடாது என்று

தான் அவள் ஆதரவு கொடுக்கும் ஒரு நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தினாள். ஒரு சமயம் ஒரு பெரிய வக்கீல் வீட்டில் வேலைக்கிருந்த பெண் கர்ப்பமாகிவிட்டாள். வக்கீலா, அவர் மகனா என்று அந்தப் பெண் சொல்லவில்லை. பயத்தில் உறைந்து போனாள். அம்மாதான் அவளை அந்த இல்லத்தில் கொண்டு சேர்ப்பித்தார். 'உங்க குருகுலத்திலேயே வைத்துக் கொள்ளலாமே, சரோம்மா' என்று அவர் கேட்டாராம்... அம்மா அய்யாவிடம் வந்து சொன்னார். "இங்கு தப்பு நடக்கக் கூடாது தாயம்மா, நீ உன் பிள்ளையைத் தாலியைக் கொடுத்து குழந்தைக்கு ஒரு அங்கீகாரம் கொடுத்தது ரொம்ப சரி..." என்றார்.

ஆனால் தவறாக ஒரு பிள்ளைக்குத் தாயான பிறகு, மரகதம், எந்தப் பாட்டைத் தொழிலாகக் கொண்டு வாழ்க்கை நடத்த வந்தாளோ, அந்தப் பாட்டின் பக்கமே திரும்பி வைராக்கியமாக இருந்திருக்கலாம். இல்லையேல்...?

சீ! ஆண் திருந்தாமல், பெண் எங்கிருந்து வைராக்கியம் காப்பாள்? இவள் இப்போது, துப்பிய எச்சிலை எடுத்து விழுங்குவாளா? ஓர் ஏழைத்தாய்க்கு நியாயம்.

குருகுலத்தில் அடிபதித்து எத்தனையோ ஆண்டுகளாகி விட்டன. பராங்குசம் இவளைப் புல்லுக்கும் மதிக்கமாட்டான். சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட, சண்டைக்காரன் காலில் விழலாம்.

அவர்களுடைய முறையீட்டை வாங்கிக் கொண்டு மகன் வீடு செல்ல முடிவு செய்கிறாள்.

பிற்பகலில் ரங்கன், மாமரத்துக்கும் தென்னமரத்துக்கும் எரு வைப்பவர் என்று ஒருவனைக் கூட்டிக் கொண்டு வருகிறான். வாசலில் ஆட்டோவில் ஒரு பாலிதீன் சாக்கில் இருந்து வெளிர் நீலப் பொடியைக் கொண்டு வருகிறார்கள். மரத்தைச் சுற்றிக் கொத்தித் தூவுகிறார்கள்.

இவளுக்குச் சும்மா இருக்க முடியவில்லை.

"ஏம்பா, மாமரம் முச்சூடும் பூச்சி... புழுபுழுவா இருக்கு. கடிச்ச எடம் நெருப்புப் பட்டாப்பில கொப்புளிக்குது..."

"அதெல்லாம் போயிடும் பாட்டிம்மா? இது, பூச்சி கொல்லி, உரம் எல்லாம் சேத்த காம்பிளெக்ஸ் உரம்..."

ரங்கன், உடனே, "குருகுலத்திலேந்து டாக்டர் அம்மா தான் அனுப்பி வச்சிருக்காங்க!" என்று தீர்க்கிறான்.

இவளுக்குப் பேச வாயில்லை. என்றாலும், "ரங்கா, உங்கிட்ட ஒரு சமாசாரம் சொல்லணும், அவரை அனுப்பிட்டு வா" என்று தயங்கி நிற்கிறாள்.

"என்ன விசயம்...?"

கேட்கும் தோரணையே அவளை ஒதுக்கித் தள்ளப் போதுமானதாக இருக்கிறது.

ராமலிங்கம் வந்ததையும் அந்தப் பெண் பிள்ளை கதறியதையும் சொல்கிறாள்.

"மனசு அடிச்சுக்கிது. அவுங்க இப்ப இருக்கிற எடம் எனக்குத் தெரியாது. அசோக் நகரோ, அண்ணா நகரோ சொன்னாங்க. உனக்குத்தான் அந்தப் பக்கமும் பழக்கம். இட்டுட்டுப் போறியா?"

"இதென்னம்மா, நாயம்! வூடுதேடி வந்தவங்கள வெறட்டி அடிச்சீங்க. இப்ப என்னியும் சேத்து அடிப்பாங்க! தவுரவும் இப்ப அவுங்க கட்சி இவங்ககட்சிக்கு ஆதரவு கூட இல்ல. உங்களுக்கு அட்ரசு வாணா மண்ணாங்கட்டியக் கேட்டு வாங்கிட்டுவரேன். போயிட்டு வாங்க!" என்று கடித்துத் துப்பிவிட்டுப் போகிறான்.

'மண்ணாங்கட்டியாகிய குழந்தைவேலு' பொங்கிவரும் சந்தோசச் சிரிப்புடன் தலைத்துணியை உதறிக் கொண்டு மாலை ஆறரை மணிக்கு வருகிறான்.

"அம்மா, கூப்புடீங்களாமே! காரியகாரரு வந்து சொன்னாரு. நா, ஜகஜோதி பௌன்டேசன்லதா கிற. உம்புள்ள, புரவலரய்யாவப் பாக்கணும்னு சொன்னாரு..." கடலை

உடைத்தாற் போல் இருக்கம் உடைபடுகிறது. "வ்லாசம் கேட்டாரு. வ்லாசம் என்ன, நான் கூட்டிப் போறேன். எதுக்கும் அவுரப் பாக்கணும்... தா, பூங்காவார்டு பக்கம், தொந்தரவாகீது. ஒரு மீட்டிங் ஏதுனாலும் வய்க்கணும். நம்ம சின்னவரக் கூட்டிட்டு வரணும்... கொஞ்சம் காசு செலவு பண்ணனும். இலக்சன் வருதுன்னு சொல்றாங்க..." தேடிச் சென்று அருவருப்பை மிதித்து விட்டாற் போல் கூச்சம் ஏற்படுகிறது.

"கச்சி விவகாரமெல்லாம் வாணாம்பா, குழந்தவேலு. சும்மாத்தான் மருமக, பேரப்புள்ளங்கல்லாம் பாக்கணும்னு கேட்டே. என் மக, அமெரிக்காலேந்து வந்திருக்காளாம்..."

"ஆமாம்மா, சந்திரி டாக்டர்தானே? அவங்க மககூட பெரி டாக்டர் படிச்சிட்டு, எம்மக இருக்கிற ஆஸ்பத்திரி யிலதா வந்திருக்குதாம்... சந்திரி அம்மாக்குத்தா, அமெரிக் கால கார் ஆக்ஸிடென்டாகி, ஒரு கை பலமில்லாம போயி டிச்சாம்..."

இவளுக்குத் தெரியாத பல செய்திகளை வைக்கிறான்.

"அப்ப நாளக்காலம, நா டூட்டி முடிச்சி, குளிச்சி முழுவிட்டு வாரன். வாடகக்காரெடுத்திட்டு வரட்டுமா?"

"அய்யய்ய, அதெல்லாம் வாணாம்பா! நீ எப்படிப் போவ...?"

"நாம் போவ..." என்று வானைப் பாத்துப் பொக்கைப் பல் தெரிய ஒரு சிரிப்பு மலருகிறது.

"பஸ்சிலியா போவ... அதலு நானும் வார...?"

இரவு முழுவதும் உறக்கம் வரவில்லை.

வரவேற்பு எப்படி இருக்கும் என்பதை அநுமானிக்க முடியவில்லை.

காலையில் எழுந்து நெடுந்தொலைவு பயணம் செய்யப் போகும் உணர்வுடன் தயாராகிறாள்.

“அநாவசியமா ஒரு பெண் பாவத்தை... இல்லை ஏழைத் தாயின் சாபம் வேண்டாம். அந்த விபத்தை நானே கண்ணால் பார்த்தேன். அந்தப் பையன் மீதுள்ள வழக்கை இல்லாமலாக்கி விடுங்கள்.”

குழந்தைவேலு, அவளை மின் வண்டியில் ஏற்றிக் கூட்டிச் செல்கிறான். சைதாப்பேட்டையில் இறங்கி, ஓர் ஆட்டோவைப் பிடித்து அவளை ஏற்றிச் செல்கிறான். அவள் போகும் இடங்கள் எதுவுமே அவளுக்குப் பரிசயமாகத் தெரியவில்லை. பெரிய கட்டிடங்கள். அடுக்கு மாடிகள். பெரிய சாலையிலிருந்து திரும்பி, வழியில் முன்பே போலீசு... காவல் அறையில் துப்பாக்கியுடன் காவலர்கள். யார்யாரோ வெள்ளையும் சள்ளையுமாக. ஆட்டோவை அங்கேயே நிறுத்தி விடுகிறார்கள். சிறிய ஷெட்போல் ஒரு இடத்தில் கரைவேட்டிப் பையன் இவர்களை நோக்கி விசாரிக்கிறான்... “யாரோன்னு நெனச்சுக்காத தம்பி. அம்மா...” அவனைச் சற்றே விலகி அழைத்துச் சென்று காதில் கிசுகிசுக்கிறான்...

பெரிய கோட்டைக் கதவுகளை அவன் திறந்து அவர்களை மட்டும் விடுகிறான். உள்ளே எவ்வளவு பெரிய இடம்?

முன் வாயிலில் உள்ளேயும் காவல்.

அலுவலக அறை. குழந்தைவேலு உள்ளே சென்று தகவலைச் சொல்கிறான். அப்போதுதான் அவளுக்கு வெறுங் கையாய் வருகிறோமே என்று உறுத்துகிறது. மரகதத்துக்கு முதலில் இரண்டு பிள்ளைகள். அடுத்து இரண்டும் பெண்கள். எல்லாருக்கும் அநேகமாகக் கல்யாணமாகிவிட்டது. திருமணம் என்றால், முன்பு வந்து அவர்கள் அழைப்பு வைத்தார்கள். அப்போது அய்யா இருந்தார்கள். மஞ்சு கல்யாணத்துக்குச் சென்றாள். மிகப் பெரிய ஆடம்பரத்துடன் நடந்தது. அங்கே அவளுக்குத் தன்னை முன்னிலைப்படுத்திக் கொள்ளவோ அறிமுகம் செய்து கொள்ளவோ கூட இடமில்லை. ரஞ்சிதம் மட்டுமே, ‘வாங்கத்தே’ என்று ஒரு வாய்ப் பேச்சு உபசரணை செய்தாள்.

பேரப்பெண்ணுக்கென்று ஒரு வெள்ளிக் குங்குமச் சிமிழும் ரவிக்கைத் துண்டும் வாங்கிக் கொண்டு சென்றிருந்தாள். அதை மணவிடையில் ஏறிக் கொடுக்கவும் அவளுக்குச் சங்கடமாக இருந்தது. மரகதத்தின் கையில் கொடுத்து, "நான் கொடுத்தாகக் குடுத்திடம்மா? நல்லாருக்கியா?" என்று கேட்டுக் கொண்டாள். "அத்தே, சாப்பிட்டுட்டுப் போங்க...? த, நவீ, பாட்டிய சாப்பாட்டுக் கூடத்துக்குக் கூட்டிட்டுப் போம்மா?" அந்தப் பெண் யாரென்று தெரியவில்லை. சிவப்பாக வயிரமும் பட்டுமாக, பெரிய இடத்துப் பெண் போல் இருந்தாள்.

அவளைக் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றாள். பெரிய கூடத்தில் பந்தியில் முதல் நாற்காலியில் உட்கார வைத்தாள். தனிப்பட்ட முறையில் கவனிக்கச் செய்தாள். சாப்பாடு முடிந்த பின், வாயிலில் தாம்பூலப்பை வழங்கி வெளியில் அனுப்பி வைத்தாள். தெரு நிறைந்த கார்கள். போலீசுக்காரன் நின்றிருந்தான். அந்தச் சூழலில் நகை நட்டின்றி, காலில் செருப்பு மின்றி, ஒரு வெள்ளைச் சீலையுடன் இவள் வெளியேறுவதைப் பார்த்து போலீசுக்காரன், 'யம்மா?...' என்றான். இவள் எண் சாணும் ஒரு சாணாகக் குன்றிப் போனாள். "என்னப்பா...."

"பையக் காட்டு?..."

அவளுக்குச் சரீரென்று தேள் கொட்டிற்று.

"இந்தாப்பா, தாம்பூலப் பையி. வாணாம், நீயே வச்சிக்க?"

கண் கலங்கிவிட்டன. "உனக்கு வேணும்டி, தாயம்மா, வேணும்? அவர்கள் ஆடம்பரத்துக்கு, ஊருக்கு மெய்ப்புக்கு வந்து அழைப்பு வைப்பார்கள். உனக்கு இங்கே கால் வைக்க என்ன தகுதி?" அதற்குப் பிறகு அவள் இன்றுதான் கால் வைக்கிறாள்.

பெரிய கூடம், ரத்தினக் கம்பளம். சோபாக்கள். எதிரே அண்ணா, பெரியார், காந்தி படங்கள். பசுமையான

பூத்தொட்டிகள். கூடத்தில் யாருமே இல்லை. தொலைபேசி, அவள் மகன் அண்ணாவுடன் இருக்கும் புகைப்படம்...

குழந்தைவேலு ஏன் உள்ளே வரவில்லை?

இவள் அந்தக் கூடத்துக்குப் பின்புறம் செல்லும் வாயிலில் உள்ள மணித்திரையைப் பார்த்துக் கொண்டு நிற்கையில், குழந்தைவேலுவிடம் பேசிய அலுவலகக்காரன் வருகிறான். இளைஞன். வேட்டி சட்டையுடன் சாமானியனாக இருக்கிறான்.

"அம்மா, ஏன் நிக்கிறீங்க? உள்ளாற போங்க?..."

"இருக்கட்டும்பா, இந்த வீட்டையா, அவுரு... இருக்கிறாரா?..."

"புரவலர் அய்யா, ஊரில இல்லீங்க. காலமதான் மதுரைக்குப் போனாங்க. நீங்க அம்மாளப் பாக்கலாமே? போங்க..."

"இல்லப்பா, அவங்க, மரகதம்மா இருக்காங்களா? அவங்களத்தா பாக்கணும்..."

அவன் தொலைபேசியை எடுத்து உள்ளே செய்தி தெரிவிக்கிறான். சற்று நேரத்தில் மஞ்சு... மஞ்சு வருகிறாள். ஒடிசலாக வடிவாக இருக்கும் பெண். முடியைக் குட்டையாக வெட்டிக் கொண்டு, பருமனாக, லேசுவைத்த நைட்டியில் வருகிறாள்.

"ஓ, நீங்க... அப்பாம்மாதான?" அருகில் சென்று அவள் கன்னத்தைத் தடவுகிறாள். கண் விழிகள் சோர்ந்திருக்கின்றன. செவிகளில் வளையங்கள். வேறு ஒரு நகை இல்லை. அவள் கையைக் கன்னங்களிலிருந்து விலக்குகிறாள்.

"ஏம்மா, மஞ்சு... நல்லாருக்கியா?"

"ம், இப்ப யாரப் பாக்க வந்தீங்க? அப்பா ஊரில இல்ல. அம்மா நர்ஸிங்ஹோமுல இருக்காங்க..."

இதற்குள் மரகதமே அங்கு வந்து விடுகிறாள்.

மரகதம்... மினுமினுப்புச் சேலையும் கை கொள்ளா வளையல்களுமாக அவளைப் பார்த்து, "எங்க இம்புட்டுத் தூரம்?" என்று குத்துகிறாள்.

"மரகதம், நல்லாயிருக்கியாம்மா?..."

"ஏதோ ஒம் புண்ணியத்துல நல்லாருக்கோம்..."

அவள் அருகில் சென்று மரகதத்தின் கைகளைப் பற்றிக் கொள்கிறாள்.

"மரகதம், அநாவசியமா, ஒரு பொண்பாவத்த, ஏழைத் தாயின் சாபத்துக்கு ஆளாக வேணாம். நீங்கல்லாம் ரொம்ப நாளைக்கு நல்லா இருக்கணும். அந்த விபத்தை நானே கண்ணால பாத்தேன். நான் வாரப்ப, அந்த ரோடிலதா நடந்தது. ஏழை பாழை, பிரியாணிக்கு ஆசப்பட்டுக் கூட்டத் துக்குப் போயிருக்கா. அந்தப் பையன்தான் பொண்ணு கையப்புடிச்சி இழுத்து சக்கரத்துக்கு அடில வுட்டான்னு, கொலை வழக்குப் போட்டிருக்காம். நாகமணிதா..."

"ஏ, கௌவி!" என்று அவள் குரல் அரிவாள் வெட்டாகப் பாய்கிறது.

"நீ கண்ணால பாத்தியா? ஏ இப்பிடிப் பொய் சொல்லுற? உனக்கு அதுதான் தொழிலு! பெத்த மகனுக்கு எதிராக் கட்சி கட்டுற சன்மம்! ஆடு நனையிதேன்னு ஓநாய் அழுதிச்சாம்! எதிர்க்கட்சிங்க, வேணுமின்னே கத்தியக் கையில வச்சிட்டுத் திரியுதுங்க. நாகு அண்ணக்கு ஊருலியே இல்ல. எதிராளிக கிட்டப் பணத்த வாங்கிட்டு, ஒண்ணுமே அறியாத புள்ளய வம்புல மாட்டி உட்டிருக்கா, அந்தப் பரதேசிக் கும்பல். இது சூதுவாது அறியாத புள்ள. போஸ்டர், பானர்னு இவங்கிட்டப் பணம் வாங்கிட்டு, அடுத்தவனுக்குச் சாதகமாக பிரசாரம் பண்ணுனா. நீ இப்ப அந்தப் பயலு களுக்கு வக்காலத்து வாங்கிட்டு வரியா? எந்த மூஞ்சிய வச்சிட்டு இங்க வந்த?..."

இவளுக்கு இந்த அடிகள் பழக்கமில்லாதவை. ஈனச் சாதியில் பிறந்தாலும், அன்பின் அரவணைப்பும் பரிவின் குரல்களுமே அவளுக்கு நியாயங்களைப் பதிய வைத்திருக்கின்றன. அநியாயங்களுக்கு அவள் தலை வணங்கியதில்லை. ஆனால், ஒதுங்கியே பழக்கமானவள். நேராக நின்று இழிவம்புகளைத் தாங்குகிறாள்.

“இதபாரு மரகதம், என்ன நீ என்ன வேணாப் பேசிட்டுப்போ! அதனால எனக்கு ஒண்ணும் இல்ல. ஆனா, நீ ஒரு பொம்புள. நாலு மக்களப் பெத்தவ. இன்னிக்குக் கண்ணியமான ஒரு இடத்துல நீ இருக்கேன்னா, இது எப்பிடி வந்ததுன்னு ஒரு நிமிசம் நெனச்சிப்பாரு. நம்ம புள்ளங்களுக்கு நாமதான் நல்ல வழி காட்டணும். மறுபடி சொல்ற. ரோட்டுல அன்னாடம் வண்டி கவுந்து மோதி சாவு நேருது. அதெல்லாம் விதின்னு தான் போறாங்க ஆனா...”

“இதபாரு கெளவி! ஆனா ஆவன்னா கேக்க நா வரல. மரியாதையா எடத்தக் காலி பண்ணு! போ!” என்று வெட்டுகிறாள், வெரட்டுகிறாள்.

அன்று கல்யாண மண்டப வாயிலில் போலீசுக்காரன், அவள் தாம்பூலப்பையைத் திறந்து காட்டச் சொன்னானே, அப்போது நெஞ்சில் தைத்த ஊசி அவளுக்கு வேதனையே அளிக்கவில்லை. இந்த வேதனையை விழுங்கிக் கொள்ள இயலவில்லை. சந்திரி வந்திருப்பதாகக் குழந்தை வேலு சொன்னதெல்லாம் அந்த வேதனை எரிச்சலில் நினைவுக்கு வரவில்லை.

அவள் வெளியேறியதைக் கவனித்து விட்டு குழந்தை வேலு வாயில் அறையிலிருந்து ஓடிவருகிறான்...

“அதுக்குள்ள வந்திட்டீங்க...?”

அவள் பதிலேதும் கூறாமல் விடுவிடென்று நடக்கிறாள். குழந்தைவேலு, கிடுகிடென்று உள்ளே ஓடி, “வரேன்... வரேன் தலவரய்யா கிட்ட மறக்காம ஒரு பேச்சுப் போடுங்க.

சின்னவருதா ஏற்பாடு செய்வாரு... வரன்... வணக்கம் அய்யா. வணக்கம்..." ஒவ்வொரு போலீசு, வாசல்படிக்காவல் எல்லோருக்கும், சலாம், வணக்கம் சொல்லிவிட்டு அவன் வருகிறான். விடுவிடென்று அந்தத் தெரு திரும்பிப் பெரிய சாலைக்கு வருகிறார்கள்.

"பெரி...ம்மா, ஆட்டோ கூப்புடட்டுமா?"

"அட வேணாம்பா, இத ஓரெட்டு, பஸ்சில ஏறினாப் போயி எறங்கலாம்."

குழந்தைவேலுக்குப் பேசவே அவள் இடம் வைக்கவில்லை.

## 18

இந்த வருசம் மழைக்காலம் என்று பெய்யவேயில்லை. அவர்கள் கிணறு, கைவிட்டு வாளியில் எடுக்குமளவுக்கு நீர் ஏறும். உள்வரையோடு நிற்கிறது, நீர். மார்கழிக்குளிர் என்று குளிரும் இல்லை. பக்கத்தில் காடாய்க்கிடந்த இடங்களைத் துப்புரவு செய்ய ரங்கனுடன் இரண்டு ஆட்கள் வருகின்றனர். நாரத்தை வேம்பு, கொவ்வைக் கொடிகள், நொச்சி, ஆடாதொடை, கீழாநெல்லி என்று மருந்து தேடுபவர்கள் இங்கே வருவார்கள்.

எல்லாம் இப்போது குவியல்களாகக் கழிக்கப்படுகின்றன. 'பாம்பு...!'

தப்பி ஓட முயன்ற உயிர்களைத் தடியால் அடித்துக் கொல்கிறார்கள். ஒரு பன்றி அங்கே குட்டிக் குடும்பம் வைத்திருக்கிறது போலும்? அவைகளும் குடுகுடென்று எதிரே அரையும் குறையுமாக நிற்கும் சுவர்களுக்கிடையே ஓடுகின்றன. அந்த அறை சுவர் கட்டுமானங்களை ஒட்டி, பழைய கீற்று, சாக்கு, சிமந்துப்பலகை என்று மறைப்புகளுடன் ஒரு இடம் பெயர்ந்த கும்பல் குடியேறி இருக்கிறது.

''நாங்கள் எல்லாருமே, கிராமங்களை விட்டு, வியாபாரம் படிப்புன்னு, இடம் பெயர்ந்தவங்கதான்'' என்று அய்யா சொன்ன குரல் ஒலிக்கிறது. ஆனால் இப்படிப் பிழைக்க வழியில்லாமலா வந்தார்கள்? இப்படிக் குஞ்சும் குழந்தையுமாகவா வந்தார்கள்?

சைக்கிளில், சுருக்கு வளையக்கம்பி, கயிற்றுடன் இரண்டு பேர் அங்கே போகிறார்கள்.

சற்றைக்கெல்லாம் பன்றியின் மூர்க்கமான பிளிறல் அந்தப் பக்கம் மெங்கும் எதிரொலிக்கிறது.

தாயம்மாளுக்கு வயிற்றை சங்கடம் செய்கிறது.

“கிறிஸ்துமஸ் வருதில்ல?...'' என்று சொல்லிக் கொண்டு ரங்கசாமி பீடிக்காரலை உமிழ்கிறான்.

“கிழக்கால பெரிய ஜபக்கூடம் கட்டுறாங்க.”

“புதிசில்ல. அது கூரைக் கொட்டாயா இருந்திச்சி; அத்தப் பெரிசா கட்டுறாங்க. வெளிநாட்டுலேந்து பணம் கொட்டுதையா...'' இவள் பார்த்துக் கொண்டிருக்கையிலேயே இரண்டு கார்கள் வந்து நிற்கின்றன. முதலில் வந்து நிற்கும் காரின் கதவைத் திறந்து கெண்டு ஒரு பெண் இறங்குகிறாள். நல்ல வெளுப்பாக, உயரமாக, கிராப்தலையும், நீண்ட தொங் கட்டானும், மூக்குக்கண்ணாடியுமாக இருக்கிறாள். சல்வார் கமிஸ், பாதம் தூக்கிய செருப்பு... பின்னால் பருமனாக.... ஓ, சந்திரி... கரையில்லாத இளநீலப் பட்டுச் சேலை, கரேலென்று சாயம் போட்டமுடி... அச்சாக அப்பனே போல், ஒரு பையன் கருப்புக் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு, அந்த வீட்டை மேலும் கீழுமாகப் பார்க்கிறான். இவன் ரஞ்சிதத்தின் பையனா? ரங்கன் பரபரவென்று வந்து கதவை நன்றாகத் திறந்து “வாங்க... வாங்கம்மா, வாங்க...! முன்னியே ஒரு போன் போட்டு சொல்லிருக்கலாமில்ல?'' என்று மாடிக்கு ஏறிச் செல்கிறான்.

இவள் மூச்சடைக்க நிற்கையில், மின்னும் காசாய பட்டு ஜிப்பாவுடன், அதே பட்டு வேட்டியும், வெளியில் துலங்கும் உருத்திராட்ச தங்க மணிகளும் மார்பில் புரள, பிடரியில் விழும் எள்ளும் அரிசியுமான முடி தாடியுடன் அவன்... பராங்குசம் இறங்குகிறான். நல்ல கருப்பில், சேலை உடுத்திய பருமனான ஒரு பெண், சிவந்த கழுத்தில் மெல்லிய சங்கிலியில் கோத்த சிலுவை, வயிரத் தோடுகள், புதையப்புதைய வெள்ளை மஸ்லின் ரவிக்கை...

"அம்மா எப்படி இருக்கிற? ரெண்டு மாசம் முன்ன நீ வந்திருந்தியாம், உடனே போயிட்டியாம். மஞ்சு சொல்லிச்சி. எனக்கும் உன்னை ஒரு நடை வந்து பார்க்கணும்னதா, மகளிரணிப் பொறுப்பு வந்த பிறகு நிக்க நேரமில்ல. எப்படியோ பொழுது ஓடிப் போயிடுது, எனக்கும்" சந்திரி முடிக்கு முன் "போதும்" என்று சொல்வது போல் கையைக் காட்டுகிறாள்.

அவள் மகன் வீட்டு பந்தம் நினைக்கவே கசப்புப் பந்தாகத்திரளுகிறது. இவள் அங்கு சென்று வந்தபின் மகன் மாரடைப்பு வந்து ஆஸ்பத்திரியில் படுத்திருந்ததாகச் செய்தி வந்தது. குழந்தைவேலுவே வந்து சொன்னான். இவள் அசையவில்லை.

"அம்மா, எப்படி இருக்கிறீங்க...?"

பராங்குசமா, அம்மா என்று கேட்டு, கை குவிக்கிறான்? இது கனவா நினைவா? ஒருகால் தேர்தலுக்கு நிற்கிறானா? "தாயி, மாடிய வந்து பெருக்கிட்டுப்போ! துடப்பம் எடுத்திட்டு வா? இங்க ஏன் நிக்கிற, போ!" என்று பேசிய பராங்குசமா? காசாயத்தின் மர்மம் என்ன? அந்தக் காலத்தில் நாடகங்களில் ஆசாடபூதி வேசம் கட்டுவார்கள் அப்படியா?...

இவள் திகைத்து நிற்கையில் அந்த அரும்பு மீசை இவள் காலைத் தொட்டுக் கும்பிடுகிறது. அந்த லோலக்கு சுந்தரியும் அதைச் செய்கிறது.

"என்னம்மா, திகச்சிப் போயிட்டீங்க? இவ என் மக அர்ஷிதா. யு.எஸ்.ல மெடிசின் முடிச்சிட்டு வந்திருக்கா. இவன் தமிழ்ச் செல்வன், ரஞ்சிதத்தின் இரண்டாவது பையன். என்ஜினீரிங் முடிச்சிட்டு, நம்ம கம்பெனிலியே இருக்கிறான். கூடப்படிச்ச சுதாவயே கட்டிக்கிட்டான்..."

"ஏம்மா வாசல்லியே பேசுறீங்க? உள்ள வாங்க. எல்லாம் உள்ளே வாங்க... அம்மா, வாங்க!" மேலிருந்து விரிசமக்காளம் தட்டிப் போடப்பட்டிருக்கிறது.

"உக்காருங்க. முன்னமே ஒரு ஃபோன் போட்டு..." என்று ரங்கன் சொல்லும் போதே, இன்னொரு மஸ்லின் ஜுப்பா, உருத்திராட்சம் வருகிறது. பள்ளிக் கூடத்துப் பத்மதாசன்.

"அடாடா... வாங்க, வாங்க ஸார், வணக்கம்..."

"நமஸ்காரம். சாமிஜிய நம்ம ஸ்கூல்ல ஒரு நாள் சிறப்புச் சொற்பொழிவுக்குக் கூப்பிடணும்னு அப்பாயின்ட்மெண்ட் நேரம் கேக்க நேத்துக்கூட ஃபோன் போட்டேன்..."

"...நா இப்பல்லாம் குருகுலம் சென்டரில இருக்கிற தில்ல— சாமிஜி ஆசிரமத்திலதான் என்ன இருக்கும்படி உத்தரவு. இன்னைக்குக்கூட அவங்க அனுமதியில்தான் வந்தி ருக்கிறேன்... எல்லாம் இவங்கதான் நிர்வாகம். டாக்டர் எமிலி, லட்ச லட்சமா புரளும் டாக்டர் தொழில வுட்டுட்டு, இங்க கல்விச் சேவைக்காக வந்து வாழ்க்கையையே கொடுத் திருக்காங்க. இதும் சாமிஜியின் ஆணைதான்."

அந்தப் பூசணி முகம் கை குவிக்கிறது.

இதற்குள் ஓராள் ஆப்பிள் ஆரஞ்சு மலை வாழை அடங்கிய தட்டு, பெப்சி, கோலா, பான வகைகள் எல்லாம் கொண்டு வந்து வைக்கிறான்.

அவள் சுவரில் இருக்கும் அந்தப் படங்களை நிமிர்ந்து பார்த்த வண்ணம் சுவரோடு சாய்ந்து நிற்கிறாள். கண்களில் நீர் மல்குகிறது. ராஜலட்சுமி சொன்ன செய்திகள் முட்டு கின்றன.

இந்தப் பத்மதாசன்... ஜயந்தி டீச்சர் சொன்ன செய்திகள், சங்கரி... சங்கரி, அடேய் பொறுக்கிகளா, இந்தப் புனிதமான இடத்தை மாசு படுத்தவந்திருக்கிறீர்களா? எந்தி ருங்கடா? என்று கத்த வேண்டுபோல் இருக்கிறது... ஆனால், அவள் யார்? இந்த வீட்டின் உண்மையான உரிமையாளர் யார்? எங்கே! ராதாம்மாவின் பையன், விக்ரம், சுருண்ட முடியுடன் துருதுருவென்று இருக்கும். ராம்துன் பாடினால், அழகாகத் தாளம் போடும்...

ஏக் தோ... ஏக் தோ...

காந்தியடிகளின் ஓரே பிரார்த்தனைக் கூட்டம்தான் அவள் பார்த்தாள். அப்போது, பையன் பிறக்கவில்லை. ராதாம்மா பாவாடை சட்டை போட்டுக் கொண்ட வயசு. காந்திஜி இந்தி பிரசார சபைக்கு வந்திருந்தார். அதுதான் அவர் கடைசியாகச் சென்னைக்கு வந்த நேரம். அம்மா அய்யா எல்லோரும் பிரார்த்தனைக் கூட்டத்துக்கு முன்பு போய்விட்டார்கள். சந்திரி, பஞ்சமி, ராதாம்மா, எல்லோரை யும் சுசீலா தேவி, மீனாட்சி என்று குருகுலத்தில் சேர்ந்த குழந்தைகளுடன் முன்பே கூட்டிக் கொண்டு போய் விட்டார்கள். குருகுலத்தில் அந்தக் காலத்தில் டயர் போட்ட பெரிய ரெட்டை மாட்டு வண்டி ஒன்று உண்டு. அதை அவள் புருசன்தான் ஓட்டுவான். ஆனால் அன்று அந்த வண்டியைச் சுப்பய்யா ஓட்டிக் கொண்டு போனதாக நினைவு. இவளும் இவள் புருசனும் சாயங்காலமாகச் சென்றார்கள்.

என்ன கூட்டம்?

ஒரே தலைகள். சேவாதள தொண்டர்கள். கூட்டத்தைக் கட்டுப்படுத்திக் கொண்டிருந்தார்கள். இளமஞ்சள் கதர்ச் சேலையும் ரவிக்கையும் அணிந்த பெண் தொண்டர்கள்... அம்மாவும் இந்தக் கூட்டத்தில் தான் இருப்பார்... என்று நினைத்துக் கொண்டு தெரிந்த முகத்தைத் துழாவினாள். ஆங்காங்கு மரங்கள் இருந்தன. அந்த மரங்களிலெல்லாம்

மக்கள்.... நடுவே உயரமாக ஒரு மேடை போடப்பட்டிருந்தது, ஏணி போன்ற படிகளில் காந்தி ஏறியது தெரிந்தது. மேடையில் பெண்கள், ஆண்கள் இருந்தார்கள். மாயமந்திரம் போல் இருக்கிறது.

ஏக் தோ... ஏக் தோ... என்று அவர் சொன்ன மந்திரக் குரலில் கூட்டம் அப்படியே கட்டுப்பட்டுத் தாளம் போட்டது. அந்த சுருதி, தாளம், எல்லாம் தாறுமாறாகி விட்டன. அவளுக்குக் கண்ணீர் வடிந்து கன்னங்களை நனைக்கிறது. சூழலை மறந்து அவள் நின்ற நிலையில் யார் என்ன பேசினார்கள் என்று புரியவில்லை.

"அப்பா... நான்... வரேன். ரிபப்ளிக்டே செலிப்ரேஷ னுக்கு எப்படியானும் சாமிஜியக் கூட்டிட்டு வரணும்..."

"நிச்சியமா. நான் தகவல் சொல்றேன். நீங்க வந்து பாருங்க..." அவர் சென்ற பிறகு, பராங்குசம் தாடியை உருவிக் கொள்கிறான். பிறகு எமிலியிடம் எதோ பேசுகிறான். லட்ச லட்சமாகப் புரளும் மருத்துவத் தொழில் ஏதாக இருக்கும்? இந்தப் பொறுக்கிகளின் அநியாயங்களைக் கரைக்கும் மருத்துவத் தொழிலாகத்தான் இருக்கும். இப்போது, பொட்டைப் பிள்ளைகளே வேண்டாம் என்று கருவிலேயே பெண் குழந்தைகளைத் தாய்மார் அழித்துக் கொள்ளும் முன்னேற்றம் வந்திருக்கிறது. 'ஏண்டி, உனக்குப் புருசன், பிள்ளை இல்லாது போனாலும், பெண் என்ற ஈவு இரக்கம், நியாய அநியாய மனசும் இல்லையா? ராஜலட்சுமி பெண் ணுக்கு இடம் இல்லைன்னு சொல்லவா இந்த அய்யா இப்படி ஒரு நிறுவனத்தை உண்டாக்கினார்?... இந்த இடம், அந்த மாதிரி ஒரு குருகுலத்துக்கு உதவணும். என்றிருந்தாலும் ராதாம்மாவின் அந்தப் பையன், விக்ரம்... தம்பி, குழந்தே, நீ எங்கப்பா இருக்கிற? பன்னிகளையும் பாம்புகளையும் விடக் கீழான சன்மங்கள் பெருகவா அய்யா இந்த மண்ணைத் தத்தம் செய்திட்டுப் போனாங்க?...'

கண்ணீரை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"அம்மா... அம்மா...?..."

சந்திரிதான் எழுந்து நின்று அவள் கையைப் பற்றுகிறாள்.

"ஏனிப்ப அழுவுற? நீ எதுக்கு அழணும்? உம்மகன் செத்துப் புழச்சிருக்கு. அவ மனசுக்குள்ள, அம்மா கிட்டேந்து ஒரு இதமான பேச்சு வரலன்னு தாபந்தான் அதிகமா யிருக்கு. நீ யாரோ ஒரு பொறுக்கிப் பயலுக்காக, வீடு தேடி வந்து, அவங்கள அவமானம் செய்திட்டுப் போனத ரஞ்சிதத்தால கூடத் தாங்க முடியல. ஆசுபத்திரிக்கு ஒரு எட்டு வந்து பாத்திருக்கலாமில்ல? நா அங்கதா இருந்தே..."

"சந்திம்மா, அதெல்லாம் இப்ப எதுக்குச் சொல்லுறீங்க? அது உங்க குடும்ப விசயம்... அதெல்லாம் இப்ப வாணாம்."

"... தாயம்மா, இப்ப நான் நேரா விசயத்துக்கு வரேன்..." என்று பராங்குசம் அவளைப் பார்த்து உட்காருகிறான். தாடியைத் தடவிக் கொண்டு, மேலே பார்க்கிறான்.

"அய்யா... தியாகி எஸ்.கே.ஆர். என் கனவுல வந்தாங்க. புழுதில தேய வேண்டிய என்னை, சேவையில் புடம் போட்டு இன்னிக்குக் கல்விக்குன்னு ஒரு வாழ்நாள் தொண்டுக்கு அர்ப்பணிக்க ஆளாக்கியவரு, அந்த வள்ளல். உனக்கு நா ஏன் காசாயம் போட்டுக்கணும்னு தோணியிருக்கணும். அது நியாயமானது தான். 'தம்பி, நான் தோற்றுவித்த குருகுலக் குடிலை நீ பெரிய கல்வி சாம்ராச்சியமா வளர்த்திட்டே. மக்கள் குலத்துக்கு நீ இன்னும் சேவை செய்யணும். 'ஆன்மிகம்' இல்லாத வாழ்க்கை இல்ல. நீ முழுசா அதில் ஈடுபடணும்...'ன்னாங்க. எனக்கு முதல்ல ஒண்ணும் புரியல. சாமிஜிகிட்ட ஓடினேன். நம்ப அய்யா படம் அங்கேயும் ஆசிரமத்துல இருக்கு இப்ப. அவங்கதான் சொன்னாங்க. நீ... காவி உடுத்தணும்னு உத்தரவாயிருக்குன்னு... இந்த பாரத தேசம் மகான்கள் உருவான தேசம். சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், காந்திஜி, நம் தியாகி, எல் லோரும் வழிகாட்டி இருக்காங்க. அந்த வழியில் நீ இன்னும்

சேவை செய்யணும்னாங்க. இப்ப, நகரத்தில் மூலைக்கு மூலை ஆஸ்பத்திரி இருந்தாலும், நோய்க்கூட்டம் பெருத்துப் போச்சு. இப்ப இந்த இடம் முழுதுமாக, எல்லா வசதிகளையும் அடக்கிய நவீன சிகிச்சைகள் செய்யுமளவுக்கு ஒரு ஆஸ்பத்திரி கட்டணும்னு இருக்கிறோம்...'' அவன் நிறுத்துகிறான்.

சந்திரி தொடருகிறாள். ''ஆமாம்மா. இப்ப தம்பி, 'ஹார்ட்ஃபெய்லியர்'ன்னான பிறகு பிழைச்சு நடமாடுறான்னா, அது நவீன மருத்துவம்தான். அமெரிக்காவுல இருக்கிற மாதிரியே அத்தனை வசதிகளுடன், அங்கேயே பயிற்சி பெற்ற டாக்டர்கள், அதுக்கு வேண்டிய சாதனங்கள் எல்லாம் வரவழைச்சி உருவாக்கும் திட்டத்தில இறங்கி இருக்கிறாங்க. என்னிக்கிருந்தாலும், உங்களுக்கும் வயசாவுது எண்பதுக்குமேலே ஆயிட்டுது. எதுக்கு இங்கே கஞ்சி காச்சிக் குடிச்சிட்டுத் தனியே இருக்கணும்?... சொல்லுங்க?''

தாடி உருவல், அவளுக்கு மிக அருவருப்பாக இருக்கிறது. ''நீங்க உங்க மகன் வீட்டுக்குப் போக இஷ்டப்படலன்னா வேணாம். பேசாம, குருகுலம் 'கார்னரில்' உங்களுக்குன்ன ஒரு ரூம் வசதியா, இப்படியே காந்திபடம், அய்யா படம் மாட்டி, வச்சிக் குடுத்துடறோம். உங்களுக்கு என்ன வசதி வேணுன்னாலும் அப்படி...''

அவளுள் ஒரு பிரளயமே நடக்கிறது.

'தாயம்மா, சத்தியம் மயிரிழை போல் இருந்தாலும் அதன் வலிமை பெரிது. விடாதே. அந்தக் கல்விச்சாலை போல்தான் இந்த ஆஸ்பத்திரியும் இயங்கும். எந்த ஏழைக்கும் இங்கே இடம் இருக்காது. ஜயந்தியின் பழைய வீட்டில், அந்த கிறிஸ்தவ டாக்டர், தொள தொளவென்று வெள்ளைச் சராய் போட்டுக் கொண்டு வரும் பஞ்சைப் பராரிகளுக்கு வைத்தியம் செய்கிறாரே, அதற்கு மாற்றில்லை இது. இது முதலைகளுக்கு...'

''என்னம்மா? யோசிக்கிற? இப்ப உலகமுச்சூடும், ரொம்ப வேகமா வளர்ச்சியும் மாறுதலும் வந்திருக்கு.

2005க்குள், சர்க்கரை நோயும் மூட்டு வாதமும் மிக வேகமா வளரும்னு சொல்றாங்க. வசதி, சவுரியங்கள் இப்படியும் பாதிப்பை உண்டாக்குது. நான் இப்ப எத்தினி கிராமங் களுக்குப் போறேன்? நிலத்துல வேல செய்யிறவங்களுக்கு அந்த காலத்துல கஞ்சி, கூழுன்னு குடுத்திருப்பீங்க. இப்ப ரஸ்னா, கோக்னு கேக்குறாங்க. பொம்புளங்க களிமண்ணத் தேச்சித் தலகசக்குவாங்களாம். இப்ப...? சில்க்சாம்பு, கிளீன் சாம்புன்னு விதவிதமா பாக்கெட் வாங்கித் தலை கசக்குறாங்க. டி.வி. இல்லாத குடிசை இல்ல. அதுனால, வளர்ச்சியோட, பாதிப்புகளையும் நாம நினச்சிப் பார்க்க வேண்டி இருக்கு..."

இப்போது, குழந்தைவேலு கூடத்து வாயிலில் தென்படு கிறான். சந்திரியைப் பார்த்து, கூழையாகவே கும்பிடு போடுகிறான்.

"வணக்கம் டாக்டரம்மா!..."

ஒரே மலர்ச்சி உருவம். "வாய்யா, மண்ணாங்கட்டி! எப்டீயிருக்கே?"

"வணக்கம் சேர்மன் ஐயா!"

பராங்குசத்துக்கு 'சேர்மன்' பதவியா?

இவன் வருகை இறுக்கத்தைத் தளர்த்துகிறது.

"யோவ், வீனஸ் ஆஸ்பத்திரியைவிட மிகப் பெரிசு இங்க ஒரு ஆஸ்பத்திரி வரப்போகுது...."

அவன் முழுதாக மலர்ந்து, "சந்தோசம் அய்யா, வரட்டும்" என்று ஆமோதிக்கிறான்.

இளைய தலைமுறைகள் இரண்டும் அதற்குள் பின்புறம் சென்று சுற்றிவிட்டு வருகிறார்கள்.

"வணக்கம், சந்திரிம்மா மகளா?..." அதற்கு ஒரு சிரிப்பு, கைகுவிப்பு.

"அச்சா புரவலரய்யா மாருதியே கிறாரு... வணக்கமையா, இளைய புரவலர்..." என்று மீண்டும் சிரிப்பு.

அரசியல் கட்சி என்பது இப்படி ஒரு பலாப்பழமாக ஈக்களைக் குந்தவைக்குமோ?

"என்ன, ப்பா! பாத்தியா?..."

"பின்னாடி ஒரு ரோ பழைய வீடுங்க இருக்கு... அதையும் சேத்துக்கிட்டா, இந்த இடம் ஒரு ஃபைவ் ஸ்டோரி பில்டிங்கா, பேஸ்மென்ட்—காலேஜ், பெரிய ஓபன் ஸ்பேஸ், எல்லாம் செய்துக்கலாம். அந்தப் பக்கம் எதோ சர்ச் கட்டுறாங்க போல..."

"அதெல்லாம் தொல்லையில்ல. நாம ஒரு பிள்ளையார் கோயில் மாஸ்க்—எல்லாமே பக்கத்துல ஏற்பாடு பண்ணி டலாம்— ஏன்னா, நோய்ன்னு வரவங்க எல்லாருமே கடவுள் நம்பிக்கையத்தான் வச்சு வருவாங்க. நாமும் 'கடவுள்' அருளைத்தான் வைக்கிறோம். எம்மதமும் சம்மதம்..."

சந்திரியும் இளையவர்களும் ரங்கன் உடைத்துத் தரும் பானத்தைக் குடிக்கிறார்கள்.

".... உம், வரட்டுமா?" என்று உறுத்துப் பார்ப்பது போல் பராங்குசம் கேட்டுவிட்டுப் போகிறான்.

"அம்மா, நீ ஒண்ணும் யோசனை பண்ணாதே. நீரடிச்சி நீர் விலகாது. இப்பவே நீ வந்தாகூட கூட்டிட்டுப் போயிடுவ. அப்பிடி நினைச்சிட்டுத்தா வந்தே..."

"சரி சரி, நீ போயிட்டுவா!" எல்லோரும் போகிறார்கள்.

## 19

முதலை... முதலைதான் அவளை விழுங்கக் கவ்வி விட்டது. யானையை முதலை கவ்விய போது, யானை ஆதி மூலமே என்று துதிக்கையை உயரத் தூக்கிப் பிளிறியதாம். துதிக்கையா, தும்பிக்கையா?... இவளுக்கு எந்தத் துதிக்கையும் தும்பிக்கையும் தெரியவில்லை...

குறைந்தபட்சம் மன வேதனையைச் சொல்லிக் கொள்ளக் கூட யாரும் இல்லை. அந்தத் தலைமுறையே பட்டுப் போய்விட்டதா? புதிய தளிரே வராதா?...

கடைசி காலத்தில், அய்யா, மன உளைச்சலோடு உடலும் பாதிக்கப்பட்டிருந்தார். நோயென்று எதுவும் இல்லாமலே படுக்கையோடு இருக்க வேண்டிய அளவுக்கு நலிந்து போனார். ஆதிநாட்களில் அக் குடும்பத்தில் சமையல்காரராக இருந்த சிங்காரம் அம்மா இறந்தபின் வந்திருந்தான். என்றாலும், அவனுக்கும் வயதாகி கண் பார்வை மங்கி இருந்தது. "தாயம்மா, நா அடுப்பு வேலய பாத்துக்கிறேன்; கஞ்சியோ, இட்டிலியோ எதுன்னாலும் செய்துதாரேன், மத்ததெல்லாம் நீ பாத்துக்க" என்று சொல்லி விட்டான்.

குளிக்க நீர் எடுத்து வைத்து, துண்டு, வேட்டி வைத்துப் பணி செய்வது, அவரைக் கை பிடித்துக் குளியலறைக்குக் கூட்டிச் செல்வதாயிற்று. குச்சியை ஊன்றிக் கொண்டு வீட்டைச் சுற்றி, எதிரே விரிந்த தோப்புத்திடலில் அவர் காலையில் நடந்தால் இவள் உடன் செல்வாள். இந்த நடமாட்டமும் குறைந்து, இறுதியில் வீட்டோடு முடங்கி, படுக்கையிலும் தள்ளிவிட்டது. அப்போது காமத் டாக்டர் இருந்தார். பர்மாலட்சுமியின் தம்பி நிரஞ்சன், இவர்கள் எல்லோரும் வருவார்கள். பிடிவாதமாக மருந்து சாப்பிட மறுத்துவிட்டார். பர்மாலட்சுமி, தீங்குரலில் பாடுவாள். 'மந்திரமாவது நீறு; வானவர்தாமுள நீறு' என்று அவள் பாடும் போது கண்களில் எல்லாருக்குமே நீர் கசியும்.

அவர்கள் வந்து சென்றதும், "தாயம்மா..." என்று கூப்பிடுவார். குரல் தழுதழுக்க, என்னைத் தூக்கி விடுறியா? என்பார். முதுகில் திருநீற்றைத் தடவுவாள். படுக்கை யோரத்தில் வேப்பிலைதான் வைத்திருப்பாள். அவர் எழுந்து இயற்கைக் கடன் கழிக்கும் பாண்டத்தில் அமரும்போது அவள் உதவ வேண்டி இருக்கும். ஏறக்குறைய ஒரு மாத

காலம் அதுவும் தெரியாமலே இயலாமலே இருந்தார். கைக் குழந்தையைப் பேணுவது போல் அவள் தொண்டாற்றிய போது, "தாயம்மா, நீ என் தாய், தெய்வம்" என்று விம்மு வார். அவளோ, "அப்படி எல்லாம் சொல்லாதீங்கய்யா, என்னைப் பெத்த அப்பனுக்கு நான் செய்யும் கடன் இது. இது செய்ய நான் குடுத்து வச்சிருக்கணும்" என்பாள்.

"தாயம்மா, அய்யாவக் கவனிச்சிக்கோம்மா?" என்று அம்மா சொன்ன சொல் ஒலிக்கும்...

'பராங்குசத்தை சத்தியத்தூண் என்று கபடில்லாமல் நம்பினீர்களே... அதனால்தான் அவன் கனவில் வந்தீங்களா, அய்யா? எனக்கு ஒருநாள் கூடக் கனவில் வரவில்லையே? அவன் கனவில் வந்து, ஆஸ்பத்திரி, விருந்தினர் விடுதி, அமெரிக்கா போல வசதின்னு, அமெரிக்காவை இங்கு கொண்டு வரச் சொன்னீங்களா?... புரியவில்லையே?'

## 20

**மா**ர்கழிக்குளிர் என்பார்கள். எதிரே அரைகுறைக் கட்டிடம் ஒன்றில் ஐயப்ப பூசைக்கு பெரிய பந்தல், தீபாலங் காரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இவர்கள் தெருவில், பள்ளிக்கூட முக்கிலிருந்து வாழைத் தண்டு விளக்குகள்; முருகன், கணபதியின் தீபக்கோலங்கள் விளங்கும் தோரண வாயில்கள். கருப்பு வேட்டிகள், அச்சிட்ட தாள்கள், ரசீது புத்தகங்கள், உண்டியல்கள், சந்தன குங்குமக் கீற்றுகள், உருத்திராட்சமாலைகளின் பவனிகள் சூழலையே எப்போதும் இல்லாத வகையில் இந்த ஒதுக்குப் புறத்தைக் கலகலக்கச் செய்கிறது.

ஒலி பெருக்கியை இவர்கள் வீட்டுப் பக்கம் திருப்பி வைத்திருக்கிறார்கள். தேனினும் இனிய குரலில் வரும் பக்திப் பாடலும் இவளுக்கு நாராசமாக ஒலிக்கிறது. காலை யில் வாழை மரங்களைக் கொண்டு வந்து வெட்டி, 'ஐயப்பன் எழுந்தருளத்திருக்கோயில்' அமைத்த பிறகு, அந்தக்

கழிவுகளை இவர்கள் வீட்டின் இன்னொரு பக்கத்தில் குவிய லாகப் போடுகிறார்கள். அங்கேயே எங்கோ அடுப்பு மூட்டியோ காஸ் கொண்டு வந்தோ காலைப் பலகாரம் செய்து சாப்பிட்டபின் அந்த எச்சில் இலைகளும் கழித்த வாழைக் குவியல்களில் விழுகின்றன. பின் பக்கமும், கிழக் கேயும் உருவாகும் குடியிருப்புகளுக்குச் செல்லும் வழித்தடம் அது. இன்னமும் அதிகார பூர்வமான வழித்தடமாகவில்லை.

எப்போதும் போல் ரங்கன், பின்புறம் மாட்டுக்கு வைக் கோல் உதறிப் போட்டுவிட்டுப் பின் கதவைப் பூட்டிக் கொண்டு சாவியை மாட்டுகிறான். பிறகு போகிறான். இப்போதெல்லாம் அவன் எதுவும் பேசுவதில்லை.

பாட்டொலியும் பஜனையின் சரணக் கூவலும் மண்டை கனக்கச் செய்கின்றன. அய்யா காலத்திலும் இது போன்ற பூசை உண்டு. மணிக் கூண்டுக்குப் பக்கத்தில் ஐயப்ப பக்த சமாஜம் கட்டுவதற்காக ஓமியோபதி டாக்டர், சிவராமன் அன்பளிப்பு வாங்கிச் சென்றதும் கூட நினைவி ருக்கிறது... அவரே இங்கும்கூட வெள்ளிக்கிழமை பஜனைக்கு வருவார்... இப்போது அவர் குடும்பமே இங்கு இல்லை... காவி, கருப்பு, பக்தி, வாழ்வு, எல்லாமே, இலக்கு எது என்று தெரியாமலாகிவிட்டன....

ராதாம்மா சீக்காகப்படுத்திருந்த நாட்களில், அம்மாவும் அய்யாவும் இங்கே சேர்ந்தாற்போல் ஒரு மாதம் கூடத் தங்கியதில்லை. மாற்றி மாற்றி இரத்தம் கொடுக்கும் நோயாக இருந்தது. அவர்கள் ஒரு சமயம் அவசரமாக விமானத்தில் பம்பாய் கிளம்பும் நேரத்தில், பராங்குசம் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வந்தான். முடியை முழுசாக வெட்டிக் கொண்டு காதில் ஒரு சிறு சிவப்பு நட்சத்திரம் மின்ன, மெலிதான ஒரு நூல் சேலை உடுத்திக் கொண்டிருந்தாள்... நெற்றியில் சிறு குங்குமப் பொட்டு. “என்னைத் தெரிகிறதா மாமா?...'' என்று இருவர் கால்களையும் தொட்டுக் கும்பிட்டாள்.

"ஏய், அநு இல்ல? எப்ப வந்தே?" நீ முடிய வெட்டிட்டாலும் சாடை மாறிடுமா?... கிரண் எப்படி இருக்கிறான்? குழந்தை... நிசா இல்ல? குழந்தையக் கொண்டு வரலியா?"

"ராதா பத்திக் கேள்விப்பட்டேன், கஷ்டமா இருக்கு மாமா, கிரன் பார்டர்ல இருக்கார். எனக்கு போரடிச்சிப் போச்சு. குழந்தையோட தான் வந்திருக்கேன். உங்க குருகுலத்துல எனக்கு இப்ப அவசியமா வேலை வேணும். தரீங்களா?...

"என்னம்மா இப்படிக் கேட்டுட்டு? உனக்கில்லாத வேலையா?"

"அப்பா எப்படி இருக்காங்க?..."

"இருக்காங்க. சின்னண்ணா, அக்கா யாரோடும் ஒத்து வரல. அம்மா எல்லாத்துக்கும் ஈடு குடுத்திட்டிருந்தா. இவரால யாரோடும் அட்ஜஸ்ட் பண்ணிக்க முடியாது... சரி, மாமா, குழந்தைய அங்கேயே ஹோம்ல விட்டுட்டு வந்தேன்..."

"நீயும் அங்கேயே தங்கிக்கிறியா?..."

"ஆமாம். எனக்கு அந்தச் சூழல் புடிச்சிருக்கு..."

பேசிக் கொண்டே அவர்கள் காரிலேயே ஏறிக் கொண்டு போனாள்.

அந்தத் தடவை மகளை வாரிக் கொடுத்து விட்டுத்தான் அவர்கள் வந்தார்கள். சோலையில் பாய்ந்த மின்னல், இளநீர் குலுங்கும் மரத்தைக் கருக்கிவிட்டாற் போல் துயரம் படிந்த காலம். துயரம் விசாரிக்க வருபவர்கள் மாற்றிமாற்றி சோகக் குழியைக் கிளர்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அரசியல் சூழலும் ஏதோ கிரகணம் பிடித்தாற்போலிருந்தது. இந்திரா காந்தி ஆண்ட நாட்களில் ஏற்பட்ட நெருக்கடிகளில் அவர்கள் மிகவும் மனம் நொந்து சோர்ந்தனர்.

அன்று காலை... ஆனி, ஆடி என்று நினைவு. விடியும் நேரத்தில் முன் வாசல் தெளித்துப் பெருக்கிக் கொண்டிருந்தாள். சோகம் சுமக்கும் வீடாதலால் கோலம் போடுவ

தில்லை. அப்போது, மொட்டைத் தலையில் சிறுகுடுமியும், காவித்துணி ஜிப்பாவும் வேட்டியும், தோளில் மாட்டிய பையுமாக ஒருவர் வந்து நின்றார்.

"மாதாஜி, பாக்கி பாய் இருக்கிறாரா?" என்று கேட்டார். அவர் தமிழ் இந்திக்காரர் பேசுவதுபோல் இருந்தது.

அவள் தலை அசைத்தாள். ஆனால் அவர் இவள் எதுவும் பேசுவாள் என்பதை எதிர்பாராதவர் போல், விடு விடென்று உள்ளே நுழைந்து விட்டார். அவள் கொஞ்சம் வெலவெலத்துப் போனாள். நாட்டு நடப்பு, அப்போதைய அரசியல் பின்னணி எதிலும் இவள் சிந்தை செல்லவில்லை. வீட்டின் ஒளியே மாய்ந்திருந்தது. வரமிருந்து பெற்ற மகள் கண்களை மூடி வீட்டை மீளாத் துயிலில் ஆழ்த்திவிட்ட தாகவே இப்போதும் தோன்றுகிறது.

இந்த சாமியாரின் பின் அவளும் உள்ளே விரைந்தே கினாள். அம்மா அப்போது தான் எழுந்து பின் பக்கம் கிணற்றடியில் பல்துலக்கிவிட்டு அடுப்படிக்கு வந்து கொண்டிருந்தார். அய்யாவுக்குக் கொத்துமல்லி-- சுக்குக் காபிக்கு நீர் வைக்கையில் இவள் சேதியைச் சொல்ல சமையல் கட்டின் பின் புறமாக வந்தாள். 'பால் கறந்திட்டு வரியா தாயம்மா?'

இவள் எதுவும் பேசாமல் கொட்டிலுக்குப் போனாள். கைகழுவிவிட்டு, மடிகழுவ நீரும், செம்புமாகப் பால் கறக்கப் போனாள். பாலைக் கறந்து கொண்டு வருகையில், அந்தச் சாமியார், கிணற்றடியில் நீரிழுத்து, பல்பொடியில் பல்துலக்குவதைப் பார்த்தாள். இப்போது மாடுகள் நின்ற அந்தப் பெரிய கொட்டில் இல்லை. கிணற்று முற்றத்தில் முன்பிருந்த துளசி மடம் மட்டும் இருக்கிறது.

குளிப்பறையில் பெரிய தண்ணீர் தொட்டி உண்டு. அதன் பக்கச் சுவரில், கிணற்றில் நீரிழுத்து, உள்ளே தொட்டி நிரப்பும்படி விடுவதற்கு ஒரு கோமுகம் போன்ற 'வாய்' உண்டு. குளிப்பறையில் சென்று தண்ணீர் இருக்கிறதா என்று

பார்த்துவிட்டு நடையைப் பெருக்கிச் சுத்தம் செய்தாள். அப்போது அவர் கிணற்றில் இருந்து நீரிறைத்து அங்கேயே நீராடலானார்.

“அம்மா, ரூமில் தொட்டில தண்ணீர் இருக்கே?” என்று மெதுவாகச் சமையலறையில் வந்து தெரிவித்தாள்.

அம்மா பேசவில்லை.

அவருக்கு அறுபது வயசுக்கு குறையாது. நல்ல உயரம். குளித்து முடித்து துண்டை உடுத்த கோலத்தில் தம் சட்டை, வேட்டி எல்லாம் சோப்புப் போட்டுத் துவைத்து ஓரமான கொடியில் உலத்தினார். பிறகு, நின்ற கோலத்தில், கண்களை மூடி தியானம் செய்தார். இவள் குளிப்பறை வாயிலிலேயே நின்றாள். முற்றத்துக்கு வராமல் பிறகு தண்ணீரை எடுத்து இரு கைகளாலும் சூரியனை நோக்கிக் காட்டி விழச் செய்தார்...

அம்மா உள்ளே காபி வடிகட்டிக் கொண்டிருந்தார். அய்யாவும் நடை வழியாகப் பின்புறம் சென்ற போது, இவள் கேட்டாள்.

“எதுக்கம்மா அப்படித் தண்ணியை மேலே காட்டி, விடுறாங்க?”

“சூரியனுக்கு அர்க்கியம் விடுவதாகச் சொல்வாங்க. வடக்கே பெண்கள்கூட இதைச் செய்வாங்க. தாயம்மா... சந்நியாசிகள் நெருப்பு மூட்ட மாட்டார்கள். ஏன்னா, அவங்களே நெருப்புன்னு அர்த்தம். அதுக்குத்தான் காவி உடுத்துறாங்க. எல்லா ஆசைகள், பந்தங்கள் பொசுங்கிய நெருப்பு...”

அவள் எதுவும் சொல்லவில்லை. அவர் மீது மிகுந்த மரியாதை ஏற்பட்டது. கூடத்தில் வந்து வானொலிச் செய்தியைக் கேட்டார் அவர். அம்மா, பின்பக்கம், அய்யாவிடம், “யாருன்னு தெரியல, இங்க வந்திருக்காரே?” என்று மெதுவாகக் கேட்டார்.

அய்யா, "இப்ப என்ன? பயமாயிருக்கா? என்ன பயம்? நடப்பது நடக்கட்டும், நாம் ஒரு சதியும் பண்ணல..." என்றார். பூடகமாகவே இருந்தது.

"யாருன்னு உங்களுக்கே தெரியலியா?" எந்த பதிலும் வரவில்லை.

"தாயம்மா, அவர் என்ன சாப்பிடுவார்னு தெரியல. கோதுமை வாங்கி வச்சிருக்கு. தட்டிப்புடைச்சிட்டு மிசினில கொண்டு போய் அரைச்சிட்டு வா!" என்றார் அம்மா.

"கேப்பை மா இருக்கில்ல? அதையே ரொட்டியோ, தோசையோ செய்யலாமே?" என்றார் அய்யா.

அப்போதெல்லாம், இப்போது போல் அரசியல் அன்றாட மனிதர் வாழ்க்கையில் மலினப்பட்டு இரைந்து கிடக்கவில்லை என்று தோன்றுகிறது. அவள் கோதுமை அரைத்து வந்தாள். சாமியாரும் அய்யாவும் இந்தியில் பேசிக் கொண்டார்கள். அம்மா ரொட்டி சப்ஜி செய்தார். சோறும் வடித்தார். நடையில் மெத்தைப்படி வளைவில் உள்ள அறை மிகப் பெரியது என்று சொல்லலாம். அங்கே ஒரு பெஞ்சு, அலமாரியில் புத்தகங்கள், கீழே உட்கார்ந்து எழுத படிக்க சாய்வு மேசை எல்லாம் உண்டு. சாமியார் பத்தரை மணிக்கே ரொட்டியும் சப்ஜியும் சாப்பிட்டு விட்டு அந்த அறைக்குத் தூங்கப்போய்விட்டார்.

மாடிக்குச் செல்ல வெளிப்புறத்தில் ஒரு படி உண்டு. இப்போது அது இல்லை. அய்யா காலமாகு முன்பே, அது பத்திரமில்லை என்பது போல் தகர்த்து, வாசலைப் பூசிவிட்டார்கள்.

சாமியார், தூங்கினார், தூங்கினார், அப்பிடி! உள்ளே தாழ்போடவில்லை. அய்யாதான் பார்த்து விட்டுத் தூங்கு வதை அறிந்து ஓசையின்றி வந்து கூடத்துப் பாயில் அமர்ந்தார்.

அந்த நேரத்தில் அநு பரபரப்பாக வந்தாள். அவள் வேலை ஒப்புக் கொண்டபின், இவர்கள் துயரப்பட்டிருந்த

காலத்தில்தன் குழந்தையையும் எடுத்துக் கொண்டு அடிக்கடி வந்தாள். மகள் போன சோகத்துக்கு, இவள் வந்து பழகியது ஆறுதலாக இருந்தது. குழந்தை நிசா நல்ல அழகு. சுருண்ட முடி. கருவண்டுக் கண்கள். எல்லோரிடமும் மழலை சிந்திப் பழகும். இவள் விரலைப் பற்றிக் கொண்டு "போலாமா?" என்று கேட்கும்.

"நான் கடைக்குப் போறேன், நீ வரியாடா கண்ணு?" என்பாள்.

"தாயம்மா, அவ கடையில் வந்து கண்டதையும் வாங்கிக் குடுன்னு கேப்ப... எங்கும் போவாணாம். உக்காரு. பாட்டிக்கு காக்கா வட கத சொல்லு" என்று அநு பேச்சை மாற்றுவாள்.

ஆனால் அப்போது குழந்தை வரவில்லை... அவள் மட்டுமே வந்திருந்தாள்.

"அப்பா?..." என்றாள்.

"வாம்மா?..."

அவர் அருகில் பாயில் உட்கார்ந்தாள்.

"வெரி ஸாரி அப்பா, எனக்கு வழி தெரியல. அங்கே வந்திட்டார்." கூடத்துத் தூணில் சாய்ந்தவாறு நின்ற அம்மா வுக்கு அப்போதுதான் புரிந்தது போலும்!

"அநு... உன் சித்தப்பாவா?"

"ஆமாம். சத்தம் போடாதீங்கம்மா. இவர் போலீசுக்குப் பயந்து வந்திருக்கிறார். காலேஜில படிக்கிறபோதே ஆர்.எஸ்.எஸ்.ல சேர்ந்திட்டாரு. எங்க பாட்டி, நினைச்சா கண்ணீர் விடுவா. அப்பவே சந்நியாசம் வாங்கிட்டாங்க. ருஷிகேசத்தில இருந்தார். இப்ப கிளம்பிட்டாரு..."

"ஏம்மா, உன் கல்யாணத்துல வந்திருந்தாரே? டில்லில.... ராதா கூட வந்திருந்தா. எல்லாரும் காவி— சந்நியாசின்னா விழுந்து விழுந்து நமஸ்காரம் பண்ணினாங்க..." என்று அய்யா நினைவூட்டினார்.

“அம்மா பேரில தனி விசுவாசம். மாதாஜி, மாதாஜிம் பாரு... பெரியப்பா, அத்தை அவங்க வீட்டுக்கெல்லாம் போக மாட்டாங்க.”

“உங்கம்மாக்கு அந்தக் காலத்து தேசிய ரத்தம்...”

“இப்ப ஒண்ணும் பேச வாணாம்” என்பது போல் அய்யா சாடை காட்டினார்.

“அப்பா, நீங்க மொள்ள எதானும் சொல்லி அனுப்பிச் சிடுங்க. நீங்க என்னதான் அரசியல்லேந்து விலகிட்டாலும், அரசியல்கட்சி, தேசியம்னு ஊறினவர். அடிமரம். பழசு புதுசுன்னு முகத்துல போட்டுக்கலன்னாலும், இந்த நேரத் தில் என்ன நடக்கும், நடக்கிறதுன்னு தெரியாது. உங்களுக்கு எந்தக் கஷ்டமும் வரக்கூடாது அப்பா!”

அவர் கைகளைப் பற்றிக் கொண்டு சொல்லிவிட்டு அவள் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

“நா வரேம்மா....!” எழுந்து நின்ற அம்மாவைத் தழுவிக் கொண்டாள். தாயம்மாளின் கையைப் பற்றி “வரட்டுமா தாயம்மா” என்று விடை பெற நின்றாள்.

“எதும் சாப்பிடாம போறீங்களே அநும்மா?”

“ரிக்ஷா நிக்குது வாசல்ல, குழந்தைய விட்டுட்டு ஓடி வந்தேன்... நீங்க நல்லா இருக்கணும்... எதும் வரக்கூடாது.”

விடுவிடென்று அவள் வாசலில் சென்று ரிக்ஷாவில் அமர்ந்தாள். அய்யாவும் அம்மாவும் பிடித்து வைத்த சிலை போல் அமர்ந்திருந்தார்கள். துயரம் கவ்வியபோது, அச்சம் தெரியவில்லை. இப்போது, இனம்புரியாத கருமை சூழ்ந்தாற் போல் இருக்கிறது.

எத்தனை முறைகள் சிறைக்குப் போயிருக்கிறார்கள்? போலீசே வந்து முன்னெச்சரிக்கை செய்தும் தடைமீறி அச்சமில்லை அச்சமில்லை என்று சிறை சென்றார்கள்.

இப்போது... நேரு மகள் ஆட்சியில்...

அவளுக்குப் புரியவுமில்லை; புரியாமலும் இல்லை. காந்தியைச் சுட்ட கட்சி. ஆனால் அப்போதெல்லாம், இத்தனை நாட்கள் இல்லாமல் இப்போதென்ன கெடுபிடி?... இவளுடைய பையன் வீட்டிலும் கூடச் சோதனைகள், அதிரடி நடவடிக்கைகள், சிறை என்று பராபரியாகக் கேள்விப் பட்டிருந்தாள். வானொலி இருபது அம்சத்திட்டப் பாடல்களும் கிளிப் பிள்ளைச் செய்திகளுமாக அவிழ்க் கின்றன. பட்டென்று மூடுகிறாள். அவள் மகன் வீட்டில் சோதனை, காவல், சிறை என்ற செய்தியில்கூட அவளுக்குச் சங்கடம் அழுத்தவில்லை. ஏனெனில் அவர்கள் உப்பைத் தின்பவர்கள், தண்ணீர் குடிக்கிறார்கள் என்று பதிவாகி இருக்கிறது. காலையில் நீராடி, சூரியனுக்கு அர்க்கியம் விட்டு..... பிராமணர்... பிராமணர்களை அடி உதை என்று கட்சி கட்டிய நாட்களில்கூட, அதற்குச் செயல் வடிவம் வரவில்லை. அந்தப் பகுத்தறிவுப் பெரியாரும், எதிர்துருவ மான ராஜாஜியும் இதயம் தொட்ட நண்பர்களாகத்தானே இருந்தார்கள்?... இந்த சந்நியாசி என்ன செய்துவிட முடியும்?

அவர் மாலை ஆறுமணிக்குத்தான் உறங்கி எழுந்து வந்தார். கிணற்றடிக்குச் சென்று தூய்மை செய்து கொண்டு கூடத்துக்கு வந்தார்.

"யார் வந்திருந்தார்...?" என்று அய்யாவிடம் கேட்டார். அங்கே அநு தவறவிட்டிருந்த வெள்ளைக் கைக் குட்டை கிடந்தது.

"நல்லாத் தூங்கிட்டீங்க போலிருக்கு?"

"ஆமாம். ஒரு வாரமாத் தூங்காத, ஓய்வெடுக்க முடியாத நடை, அலைச்சல்... உங்கள் மகள் தவறிவிட்டதைக் கேள்விப்பட்டேன்... அநுதான் சொன்னா. பாத்துட்டுப் போகலான்னு வந்தேன். கன்யாகுமரி போறேன்" என்றார்.

அம்மாவும் அய்யாவும் பேசவில்லை.

இவள் சமையலறை வாசற்படியில் நின்றாள். அம்மா விளக்கேற்றினார். கீதை தியான சுலோகம் சொன்னார். கண்களை மூடி மவுனப் பிரார்த்தனை செய்தார்கள்.

இரவு கஞ்சி அருந்தும் போது,

"அநு வந்திருந்தாளோ?" என்று கேட்டார்.

இவர்கள் ஏதும் விடையளிக்கு முன் அவரே, "நான், நீங்கள் அங்கே இருப்பீர்கள் என்று போனேன். பிறகுதான் தெரிந்தது. இங்கே வந்தேன். ரெண்டு நாள்... தங்கலாமா?"

"தாராளமா... உங்களை அநு கல்யாணத்தில் பார்த்தது."

"ஆமாம்... அப்ப பங்களாதேஷ்... அது ரொம்ப விவேகமாகச் செய்தா... இப்ப இது விவேகம் இல்ல. பயம்... எல்லாம் பயம், ஆசை, அதீதமான ஆசை; பயம்..."

யாரைச் சொன்னார், எதற்குச் சொன்னார் என்று அவளுக்குப் புரியவில்லை...

"பாவம் அநு. இந்த வயசில் குழந்தையை வச்சிட்டுத் தனியாக..."

"அதென்னமோ, ராதா போனபிறகு, இப்ப இவ வந்து அம்மா, அப்பான்னு பழகுவது மனசுக்கு ஆறுதலாக இருக்கு."

"அந்தப் பையன் நல்லவன். ஏர்ஃபோர்ஸ் எல்லை, நெருக்கடின்னு வாழ்க்கை. இளவயசுப்பிடிவாதம், வீம்பு. ரெண்டுபேருக்கும் பொருந்தல. அவன் அம்மா அப்பா ரெண்டு பேரும், ருஷிகேசத்திலதான் இருக்கா. இவ டிவோர்ஸ் அது இதுன்னு குழந்தையத் தூக்கிட்டு நாக்பூர் வந்திட்டா. எனக்கு இப்ப அவகிட்ட இதெல்லாம் பேச சந்தர்ப்பம் இல்ல. இங்க இருக்கட்டும். பத்திரம்தான்..."

யாருமே பேசவில்லை...

அந்த நெருக்கடி காலத்தின் ஒரு முகத்தை இப்போது நினைத்துப் பார்க்கிறாள்.

இரவு முழுவதும் துணுக்குத் துணுக்காக நினைவுகள், மயக்கமா, கனவா என்று புலராத காட்சிகள்.

ராதாம்மா பம்பாயில் ஸ்டேஷசனில் வாங்கிக் கொடுத்த தாகக் குழந்தை விக்ரம் ஒரு பூதக்கண்ணாடி கொண்டு வந்திருக்கிறான். அந்தக் குழாயில் பொருந்திய கண்ணாடி யில் கண்ணை வைத்துத் திருப்பிக் கொண்டே இருந்தால், அழகழகாக, புதிசு புதிசாக கோல மாதிரிகள் வருகின்றன. வண்ண வண்ணக் கோலங்கள்.

"பாட்டி, பயாஸ்கோப் பாக்குறீங்களா?..." அவள் கண்களில் பொருத்தி, குழந்தையே திரும்புகிறான்.

தொடர்ச்சியாகத் தெரியவில்லை. பையனில்லை. அவளே வைத்துப் பார்த்துவிட்டு வைத்து விடுகிறாள். குரு குலக்குடிலில், அது இருக்கிறது. அவள் பிள்ளை... படிப்பவன், "அக்கா, சோறு வை!" என்று வருகிறான்... பஞ்சமி தான் தையல் இலை போட்டு, பொங்கல் போன்ற சோற்றை வைக்கிறாள். அவன் எழுந்து காலால் இடறுகிறான்.

"இது என்ன சோறு? ஒரு முட்டை கிட்டை பொரிச்சு வய்க்கிறதில்ல? மனசுக்குள்ள பாப்பாரசாதின்னு நினப்போ? ஆதிக்க சாதி — திராவிடக் குடிமக்களை மிதித்துக் கொக்கரிக்கும் சாதி..." என்று அந்தக் குழாயைத் தூக்கி எறிகிறான். அது உடைந்து சிறுசிறுவெனும் கண்ணாடித் துண்டுகளாகச் சிதறுகிறது.

"அய்யோ..." என்று கண்விழிக்கிறாள்.

சட்டென்று எழுந்து உட்காருகிறாள்.

கனவா... கனவு...? பஞ்சமி இல்லை. ராதாம்மா இல்லை, குடில்வாழ்வு எதுவுமில்லை. அந்தக் குழாய் கண்ணாடி, குழந்தை வைத்து விளையாடியது உண்மை. அது கீழே விழுந்து உடையவில்லை. விக்ரமே காகிதங்களை உரித்து, கண்ணாடியை வெளிப்படுத்திவிட்டான். பிறகு பொருத்த முடியவில்லை. வெறும் கண்ணாடித் துண்டுகள்.

குழந்தை விளையாட்டுத் தனமாக அந்தப் பொருளை வீணாக்கிவிட்டு மறுபடியும் பொருத்த முடியாமல் அழுதான்.

"வேறு வாங்கிக் கொடுக்கிறேன்..." என்று சமாதானம் சொன்னார்கள்.

குழந்தை விளைவு தெரியாமல் விளையாடியது.

நல்லதொரு கோலம் காட்டிய பொருள் அழிந்தது.

குழந்தை அந்த ஓட்டுக்காகிதங்களை விளையாட்டாகப் பிரித்தது. இப்போது இவர்களும் அதே போன்ற விளை யாட்டில்தான் ஈடுபட்டிருக்கிறார்களா? இந்திரா அம்மை அஞ்சிக் கரித்துக் கொட்டி சிறையில் தள்ளியவர்கள் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். நாட்டில் என்னென்னமோ நடக்கிறது. கண்ணாடித் துண்டுகள் சிதறி விழுந்தாற் போல், அத்தனை வண்ணங்களும் இந்த தேச மக்களை, வாழ்க்கையை பொய், கபடு, சூது, வன்முறை இரத்தக்கறை என்றாக்கிவிட்டு அழிந்துவிட்டன.

அவள் இப்போது என்ன செய்ய வேண்டும்? குருகுலத்தில் அவர்கள் காட்டும் மூலையில் குடிபெயர வேண்டுமா? சந்திரி கூப்பிட்டதை ஏற்று, நீரடித்து நீர் விலகாது என்பதை நிரூபிக்க வேண்டுமா?...

ஒன்றும் புரியவில்லை. அந்தக் காலத்தில் தேசாந்தரம் போவது என்பார்கள். எல்லாவற்றையும் துறந்து காசிக்கு நடந்தே போனார்களாம்! கேதர்நாதம், பத்ரிநாதம் என்று போவார்கள், திரும்பி வரமாட்டார்கள் என்பார்கள். ஏன்? இந்த அய்யப்பர்கள் கறுப்பைக் கட்டிக் கொண்டு தொண்டை கிழிய காது செவிடு படச் சரணம் கூவுகிறார்கள். கோயிலுக்குப் புறப்படுமுன் வாய்க் கரிசி போடுகிறார்கள்... காரணம் அவ்வளவு அபாயங்களையும் கடந்து போகிறவர்கள் திரும்பி வரமாட்டார்கள்...

காலையில் இவள் வாசல் தெளிக்கும் போது, மாலை போட்ட பக்தர்கள் சுமையுடன் கிளம்பிவிட்டார்கள். கண்

எரிச்சல் தீர இவள் நீராடுகிறாள். அடுப்பு மூட்டவோ சமைத்துச் சாப்பிடவோ மனமில்லை. கதவைப் பூட்டிக் கொண்டு கிளம்புகிறாள். ரங்கனிடம் பூட்டுக்கு வேறு சாவி உண்டு.

அவள் எங்கே போகிறோம் என்ற சிந்தனை இல்லாமல், பெரிய சாலையில் நடந்து, போகிறாள்.

## 21

புதிய புதிய கட்டிடங்கள், வணிக வளாகங்கள்... நெருக் கடிகள் குறைந்து, வேற்றூர் செல்லும் வண்டித்தடம் தெரிகிறது. இளவெயில் இதமாக இருக்கிறது.

'அய்யாவும் அம்மாவும் அவளிடம், வீட்டை விட்டுப் போகிறாயா, தாயம்மா?' என்று கேட்பது போல் தோன்றுகிறது.

என்னை மன்னிச்சிடுங்க... எனக்கு எதுவும் தெரியல. நீங்க காட்டிய சத்தியம் இப்ப என்னை வெளியேற்ச் சொல்கிறது.

அப்போதுதான் கையில் மாற்றுச் சேலை கூட இல்லாமல் வந்திருப்பது உணர்வில் தைக்கிறது... 'காஞ்சி' என்று ஊர் பேர் விளங்கும் பின்புறம் காட்டிக் கொண்டு ஒரு பேருந்து போகிறது.

ஒரு காலத்தில்... இரண்டு புறங்களிலும் பசிய வயல் களாக இருந்தன. இப்படி நல்ல சாலையாக அப்போது இல்லை... ஆனால், இருபுறங்களிலும் ஏதேதோ பேர் போட்ட குடியிருப்புகளுக்காக, வீட்டுமனை எல்லைக் கற்கள் முட்டுமுட்டாகத் தெரிகின்றன.

ஒரு பெரிய சுற்றுச்சுவருக்கு இடையே மேலே வெண்மையான தூபியும் சிலுவைச் சின்னமும் தெரிகிறது.

சாலையில் இருந்து அந்தக் கோயிலுக்குச் செல்ல ஒழுங்கான வழியும், பூச்செடிகளும் அமைந்திருக்கின்றன. சட்டென்று இடது கைப்பக்கம் பார்க்கிறாள். பசிய மரங்கள் தெரிகின்றன. சாலையின் எல்லையில் பாதுகாப்பான முட்கம்பி வேலிக்குள், சிவந்த தெச்சிப்பூக்கள் குலுங்கும் பசுமையான அரண். பெரிய எழுத்துக்களில் 'சிவசக்தி ஆசிரமம் பசுஞ்சோலை' என்று எழுதப்பட்டிருக்கிறது. பெரிய வாயிலின் அகன்ற கதவுகள் திறந்திருக்கின்றன. உள்ளே, மிக அமைதியான சூழல், மாமரங்களில் பூமித் தாயைப் பாதுகாக்கும் பசுங்குடைகள் போல் சூழ்ந்தி ருக்கின்றன. இன்னும் பூக்கத் தொடங்கவில்லை. மிகப் பெரிய பரப்பு. பல்வேறு வண்ண மலர்களின் தோட்டம்.

ஆங்காங்கு ஒன்றிரண்டு பேர் தோட்ட வேலை செய்பவர் தெரிகின்றனர்... பாதையில் அம்புக்குறி காட்டும் இலக்குகள். சிவசக்தி ஆலயம்... கிணறு... பொதுக்குடில்...

"ஆச்சி, காஞ்சி ரோடில சிவசக்தி ஆசிரமம்னு ஒண்ணு இருக்குதாம். மனசுக்கு ஆறுதலா இருக்குமாம். ரொம்ப அழகா, அம்பாளின் பதினாறு வடிவங்களை அமைச்சி ருக்காங்களாம். ஒருநா போவலாமா? வரியளா?"

சங்கரி... சங்கரி... நீ இங்கு வந்தாயா?...

ஒரு கால் இங்கு இருப்பாளோ? கேள்விப் பட்ட தெல்லாம் பொய்யாகப் போகட்டும்.

சங்கரி... உடன் பிறந்தவனின் குடும்பம், மக்கள் என்று உழைக்கவே, அக்கினிமேல் நின்று தவம் செய்தாயே அம்மா?...

நெற்றியில் திருநீறும், கீழே குங்குமமும் துலங்கும் முகமும் ஒடிசலான, மாநிறமேனியில் கழுத்து மூடிய ரவிக்கையும் கைத்தறிச் சேலையுமாக அவள் "ஆச்சிம்மா!" என்று கூப்பிடுவ்துபோல் தோன்றுகிறது.

வெண்மையும் நீலம் சிவப்பு அழகு விளிம்புகளுமாகத் தெரியும் தேவியின் ஆலயம். முன்புறம் எதிரே ஒரு பாதாம் மரம், அழகிய தீபாராதனைத் தட்டுகளைப் போல் கிளை பரப்பிக் கொண்டிருக்கிறது. அதைச் சுற்றி வழுவழுப்பான மேடை. அதில் வெறும் காவித் துண்டணிந்த, சிவப்புக் கயிறில் கோத்த ஒற்றை உருத்திராட்சம் அணிந்த சாமியார் இருக்கிறார். தாடி மீசை இல்லை. சற்று தொலையில் ஓட்டுக்கூரை கொட்டடிகள் தெரிகின்றன.

பளபளப்பாய் இழைக்கப்பட்ட படிகள்.

பட்டும் பளபளப்புமாக ஏழெட்டு ஆண் பெண்கள், பக்தர்கள் தெரிகின்றனர். மிகப் பெரிய சலவைக்கல் கூடத்தில் ஓர் அழகிய விதானமுடைய மண்டபத்தில் தேவி சலவைக் கல்லில் எழுந்தருளி இருக்கிறாள். சரிகைக்கரை யிட்ட மஞ்சள் அரக்குச்சேலை. பச்சை ரவிக்கை. முத்தும் இரத்தினங்களுமான மாலைகள். சிம்ம வாஹினியாக, அபயம் கொடுத்து அருள் புரியும் அம்பிகை. இந்தப் பிரதானமான அம்பிகையைச் சுற்றி, பதினாறு தூண்களில், மாடங்களில் அம்மனின் வெவ்வேறு திருக்கோலங்கள். காயத்ரி, சண்டிகை, துர்க்கை, என்றெல்லாம் பெயர் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவளுக்கு எந்த வடிவிலும் சங்கரியே தெரிகிறாள்.

கொத்துக் கொத்தாக வெண்மையும் சிவப்புமாக மலர்கள் அலங்கரிக்கும் பிரதிமைகளில், கண்களைத் திறந்து கொண்டாலும் மூடிக் கொண்டாலும் அவளே தெரிகிறாள்.

சங்கரிக்கு நாற்பது, நாற்பத்தைந்து வயசிருக்குமா?

எத்தனை பூக்களை இந்தப் பூமி பிரசவிக்கின்றன?

எல்லாமே காயாகின்றனவா? காயாகாத பூக்கள் தாம் கடவுளுக்கு என்று அருள் பெறுகின்றன... ஆனால் கடவுளுக்கு மட்டுமே பூசனைக்குரிய பூக்கள், ஆணையும் பெண்ணையும் தெய்வ சாட்சியாக இணைத்து, உலகை

வாழவைக்கும் ஒரு தொடக்கத்துக்கான மணமாலைக்கும் பயன்படும் பூக்கள்... ஆனால், மாலைகள் கட்சிகளின் வெற்றிச் சின்னங்களாக, அழுக்குப் பிரதிமைகளை அலங்கரிக்கும் கட்சி மாலைகளாக... மிதிபடும் பூக்களாக, புழுதியில் வீசப்பட்டுக் கருகும்...

நெஞ்சைச் சுமை அழுத்துகிறது. இலக்குத் தெரியாமல் ஒவ்வொரு பிரதிமையின் முன்னும் நின்று மீள்கிறாள்.

பெரிய இடமாக இருப்பதால், கூட்டம் இல்லை போல் தோன்றுகிறது. ஆனால், பிரதான மண்டபத்தின் முன் ஐம்பது பேருக்குக் குறையாமல் வந்திருப்பது தெரிகிறது.

வெள்ளை வேட்டி அணிந்த ஒரு பிரும்மசாரி போன்ற இளைஞர் பூசை செய்கிறார். அவர் என்ன மந்திரம் சொல்கிறார் என்பது செவிகளில் விழவில்லை.

பிரதானமான இராஜராஜேசுவரி—அம்மனைப் பூசித்த பிறகு, பதினாறு வடிவங்களுக்கும் அவர் பூசை செய்கிறார். ஆங்காங்கு அவருடன் பூசையைப் பின்பற்றுவதுபோல சில பக்தர்கள் நகர்ந்த வண்ணம் இருக்கின்றனர். அப்போது, வெளிப்பக்கம், திண்ணை விளிம்பில் நின்று, பார்க்கும் வித்தியாசமான ஒருவனை அவள் பார்க்க நேரிடுகிறது. ஒல்லியாக, கூன் விழுந்த முகம். வெள்ளை வேட்டி... கதர்... கதர்சட்டை. வழுக்கையில்லை; முடி தும்பைப் பூவாக இருக்கிறது.

அவன் முகத்தைப் பார்க்கும் ஆவலில் அவள் அதே இடத்தைச் சுற்றி வலம் வருவது போல் வருகிறாள். முன்பக்க வாயிலில் பெரிய மணி தீபாராதனை என்றழைக்க சுநாதமாக ஒலிக்கிறது. அவன் திரும்புகிறான். அவளும் பார்க்கிறாள்.

கழுத்துமணி தெரிய... நெற்றியில் பச்சைக்குத்துடன்...

“என்னம்மா, பாக்குறீங்க?... எனக்கும் பாத்தாப்புல இருக்கு...”

“நா... தாயம்மா... குருகுலம்... எஸ்.கே.ஆர். தியாகி...”

“அம்மா...! நான் சுப்பய்யா, தெரியல...?”

ஏதோ பிடிகிடைத்தாற்போல் மனம் சிலிர்க்கிறது.

பேசவில்லை. தீபாராதனைக்குப் போகிறார்கள்.

இவன் அம்மா அஞ்சலை. அப்பா கிடையாது. சேவா கிராமம் போய் பராங்குசம் வந்து ஆசிரியப் பொறுப்பேற்ற போது இவனும் வந்தான். ராதாம்மாவுக்கு இந்தி பேசப் பயிற்சி கொடுத்திருக்கிறான். நல்ல கறுப்பு; இப்போது, உடல் வெளுத்து சோகை பாய்ந்தாற்போல் இருக்கிறான்.

திடுமென்று ஒருநாள், குடிலைவிட்டுப் போய்விட்டான். அம்மா அஞ்சலை குருகுலத்தில்தான் பின்னர் வேலை செய்தாள்.

பேச்சே எழவில்லை. வெகுநாட்கள் சென்றபின் அறிமுகமானவர்களைப் பார்த்த மகிழ்ச்சி பிரதிபலிக்கவில்லை.

தனியாகத்தான் வந்திருக்கிறானா? எங்கிருந்து எங்கு வந்து முளைத்திருக்கிறான்? பிரதான தேவிக்குப் பின் சுற்றிலும் வந்து தீபாராதனை முடிகிறது. கர்ப்பூரத்தட்டை அங்கேயே நடுவில் பீடமொன்றில் வைத்து விடுகிறார் பூசாரி.

பக்தர்களுக்கு அந்தப் பூசாரி இளைஞரே, பூக்களும் தீர்த்தப் பிரசாதமும் தருகிறார்.

குங்குமப்பூ, கர்ப்பூர மணமும் கரைந்த தீர்த்தம் நாவுக்குப் புனிதம் கூட்டுகிறது. புலன்கள் ஒடுங்கிவிட்டால் எந்தச் சுவையும் கவர்ச்சி கொடுக்காது அய்யா. ராதாம்மாவின் மறைவுக்குப் பிறகு, வழக்கமாக, கீதைபடித்துச் சொல்வார். அம்மாவுடன் அவளும் கேட்பாள்.

யோகத்தில் ஒடுங்கியவர் அம்மா. ஒரு குழந்தை வேண்டுமென்று, காந்திஜியைத் தனியாகச் சந்தித்து, புருசனின் பிரும்மசரிய விரதத்தை மாற்றிக் கொள்ள

அறிவுரை பெற்றார். முத்தாக ஒன்று பெற்றதை இழந்த சோகம்... ஒரே வருசம்தான்...

இரவு படுத்தவர், உறக்கத்திலேயே இறைவனடி சேர்ந்தார். நோய், நொடி, எதுவுமே அநுபவிக்கவில்லை... ஆனால், அய்யாவுக்குத் துயரம் இல்லையா?...

புரியவில்லை.

அவள் அந்தப் பிரசாத தீர்த்தத்திலேயே, கனவில் மிதப்பது போல் நிற்கிறாள்.

ஒரு பெரிய 'ஸில்வர்' அடுக்கில் சர்க்கரைப் பொங்கல் தேவிக்கு நிவேதனமாயிருக்கிறது.

எல்லோருக்கும் வாதா மரத்தடியில் கண்ட சாமியார் வாழை இலைத் துண்டுகளைக் கொண்டு வந்து கொடுக்கிறார். பூசாரி ஒரு வாளியில் பொங்கலை எடுத்து வந்து பெரிய கரண்டியால் ஒரு கரண்டி எடுத்துப் போடுகிறார். பட்டுக்கரை வேட்டிகள், சரிகைப் புடவைகள், குழந்தைகள் என்று எல்லோருமே அந்த விசாலமான கூடத்தில் பளிங்குத் தரையில் அமர்ந்து பிரசாதம் உண்ணுகின்றனர்.

"அம்மா, நீங்களும் வாங்கிக்குங்க?"

இலையில் சர்க்கரைப் பொங்கல். நெய் மணக்கும், முந்திரி திராட்சை தெரியும் பொங்கல். சுவாமியும் பக்தர் களும் மட்டும் செழிப்பில்லை; பிரசாதமும் செழிப்புத்தான்.

பொங்கலுடன் அவள் படியில் இறங்குகையில், படிக்குக் கீழே உள்ள சுத்தமான கடப்பைக்கல்லில், சாமியார் ஒரு வாளிப் பொங்கலைப் போடுமுன், ஏழெட்டு நாய்கள் வருகின்றன.

எல்லாமே 'அநாதைகள்'தாம். தாமே தெருப் பொறுக்கி இன விருத்தி செய்யும் உயிர்கள். அவற்றில் ஒன்று சொறி நாய். அது அவசர அவசரமாக விழுங்கிவிட்டு, இன்னும் இன்னும் என்று குலைக்கிறது. சுப்பய்யா, தன் இலையில்

இருந்து கொஞ்சம் போடுகையில் சாமியார் ஓடி வருகிறார். "நீங்க போடாதீங்க சுவாமி. அது பசியில்லை; வெறி" என்று கையால் விரட்டி, "போ" என்று துரத்துகிறார். ஆனால் அது சுப்பய்யாவைக் குறி வைத்து ஓடிவர, தாயம்மா, தன் இலையில் இருந்து கொஞ்சம் கீழே போடுகிறாள். அதற்கு அது அடங்கவில்லை.

"நீங்க சாப்பிடுங்கம்மா...?" என்று சுப்பய்யா வற்புறுத்துகிறான். ஆனால் தாயம்மாவைத் துரத்தி, அவள் காலில் பாய்ந்து புடவையை இழுத்துக் கடித்ததும் அவள் பொங்கலை அப்படியே இலையுடன் நழுவவிட்டதும் மின்னல் வெட்டாக நிகழ்ந்து விடுகின்றன.

"அடாடா... நான் சொன்னேனே, கேட்டிங்களா?... ஒண்ணும் ஆகாது தாயே, குழாயடியில் புண்ணைக் கழுவிக் கொள்ளுங்கள்."

"சாமி! கொஞ்சம் குங்குமம் குடுங்க, கடிவாயில் வைக்கட்டும்" சுப்பய்யா குங்குமத்தை வாங்கி வருகிறான்.

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை.

மண்ணில் பொங்கல் சிதறி இருக்கிறது... நாய் வெறி தணிந்தாற் போல் ஓடியிருக்கிறது.

"தாயே, இப்படி உக்காருங்க, கொஞ்சம் பிரசாதம் தரச் சொல்றேன், சாப்பிடுங்க!" என்று பாதாம் மரத்தடி மேடையில் அமர்ந்த அவர்களைச் சாமியார் உபசரிக்கிறார்.

"இருக்கட்டுங்க. இத இவரே வச்சிருக்காரு..." சுப்பய்யாவின் பிரசாதத்தில் இருந்து சிறிதளவு உண்கிறாள். அவளுடைய உறுதி, துணிவு எல்லாம் நைந்து கரைகின்றன. வெறிநாய், சொறிநாய் கடித்திருக்கிறது... இதுவும் ஊழ்வினையா?

குடிலில் ஒரு பையனை நாய் கடித்துவிட்டது. உடனே அய்யா அவனை ராயப்பேட்டை ஆஸ்பத்திரிக்கு

அழைத்துச் சென்றார். தொப்புளைச் சுற்றி பதினாறு ஊசிகள் போடவேண்டும் என்று போட்டார்கள். 'அம்மா மாதிரி' உறக்கத்தில் பிராணன் போகுமா?

பசி, பட்டினி, எல்லாம் உச்சக்கட்ட மரண பயத்தில்தான் கொண்டுவிடுமோ? சாயபு, சிறை உண்ணா விரதத்தில் எப்படியெல்லாம் ஆசை காட்டி அதை முறிக்கச் சொல்வார்கள் என்று கூறியிருக்கிறார். ராமுண்ணி...? சே! அந்த நெஞ்சுரம் ஏனில்லை?

மவுனமாக அவர்கள் அந்தப் பெரிய ஆசிரமத்தைச் சுற்றி வருகிறார்கள். ஆங்காங்கே நின்ற கார்களில், வந்திருந்த பக்தர்கள் போகிறார்கள்.

மவுனம் கனத்திருக்கிறது.

"நீங்க எங்கியோ, வடக்கு அப்பவே போயிட்டதாச் சொன்னாங்க? இங்க வந்து எத்தினி நாளாச்சு? இப்பதா எங்கியும் இந்தி இல்ல. எங்க இருக்கிறீங்க? உங்கம்மா..."

"அவங்க அப்பவே ஊருக்குப் போனாங்க. அஞ்சாறு மாசத்துல போயிட்டாங்க. இருபது வருசமாச்சு. நீங்க எப்படி இங்க? பெரிய வீட்டில இல்லியா?"

அவள் அதற்கு விடை கூறாமல், "குருகுலம் போனீங்களா? பராங்குசத்தைப் பாத்தீங்களா?" என்று கேட்கிறாள்.

"என்ன என்னத்துக்கு வாங்க போங்கன்னு சொல்லுறீங்க? நா உங்க மகன் போல. சும்மா, சுப்பய்யா, இங்கு எங்க வந்தேன்னு கேளுங்க..."

அவள் மனம் இலேசாகிறது. "என்ன இருந்தாலும் நான் படிச்சு வேல பாக்குற கவுரவம் இல்லாதவ. எதோ நல்லவங்கள அண்டி ஊழியம் செய்ததில் பூப்பந்த வச்சிட்ட எலச்சருகுபோல. இப்ப இதுல பூவும் இல்ல; பசுமையும் இல்ல. நொறுங்கிப் போனாலும், உசுரு உணர்வு, அடங்கல..."

கண்ணீர் பொங்க, குரல் கரகரக்கிறது.

''இதபாருங்க, விதின்னு சொல்றத இப்ப நானே நம்புறேன்... ராதாம்மா ஆஸ்பத்திரில இருந்தப்ப பார்த்தேன். பிறகும்—கடைசில, அய்யா அம்மாளையும் பார்த்தேன். அந்த இந்திக்களேவரத்துல, உங்க பய்யன் என்னை நேராக அடிச்சி, சட்டையக் கிழிச்சி, அவமானம் பண்ணினான். அப்புறமும் இங்கே இருந்தேன். அதுக்கும் மேலான அவமானம் வந்தது. ஓடிப்போனேன். எது அவமானம், எது இழுக்கு, எது தர்மம்னு ஒண்ணும் இப்ப புரியல. விதியின் கை எழுதிச் செல்லும் வாழ்க்கை...''

''ஏம்பா, சுப்பய்யா, ராதாம்மா வீட்டுக்காரர், பையன்லாம் எங்க இருக்காங்க தெரியுமா?...''

"அவங்க அப்பவே நேவிலேந்து ரிடயராகிட்டாங்க. வடக்கே இமாலயப் பக்கம், போனாங்க. சிப்கோ மூவ்மெண்ட்ல தீவிரமா இருந்தாதா கேள்விப்பட்டேன்."

"அது என்னப்பா?..."

"அதுவா, அங்கே பெரிய மரத்தெல்லாம் வெட்டிக் காடுகளை அழிச்சி, பரிசுத்தங்களை மாசுபடுத்துவதை எதிர்த்து ஓர் இயக்கம். 'சிப்கோ'ன்னா ஒட்டிக்கிறதுன்னு அர்த்தம். கன்டிராக்ட் தடியங்க மரம்வெட்ட வரச்ச உங்கள மாதிரி பொம்பிளங்க அதை அப்படியே கட்டிட்டு ஒட்டிட்டு, எங்கள வெட்டிட்டு பின்னால மரத்த வெட்டுங்கன்னு சொல்ற இயக்கம்..."

நெஞ்சு உருகுகிறது "அய்யா, பய்யன்...?"

''பையன் அமெரிக்காவுல பி.எச்.டி. பண்றான்னு சொன்னாங்க அவங்க அத்தை இறந்து போனாங்க. வேற சேந்த மனிசங்க யாரையும் நான் பார்க்கல...''

''விக்ரம்... அதுக்கு ஒரு கல்யாணம் காட்சி பண்ணிலியா?''

"தெரியல. இப்ப உலகமே கிராமம் மாதிரி சுருங்கிப் போச்சின்னு சொல்றாங்க. வியாபார, அதர்மத் தொடர்பு

கள்தா இறுக்கிப் புடிச்சிட்டிருக்கு. அதுக்குள் மனுசங்க ஒருத்தொருத்தர் தெரியாம வலைக்குள் இறுகிப் போயிட்டாங்க. எங்கியோ இருந்து வந்து கடை துறந்து கோழிக்கறி பண்ணி விக்கிறான்...”

“அய்யோ, அதெல்லாம் சொல்லாதீங்க...”

நிகழ்காலமே வேண்டாம் என்று சொல்வது போல், மரங்களினூடே வந்து வெளியே நிற்கிறார்கள். வரிசையாகச் செருப்புகள் வைத்திருந்த இடத்தில் சுப்பய்யா தன் செருப்பை இனம் கண்டு மாட்டிக் கொள்கிறான். அவளுக்குச் செருப் ''ணிந்து பழக்கமில்லை. வெளியேறுகிறார்கள்.

## 22

அவர்கள் சாலையில் அடிவைக்கையில் ஒரு பஸ் வருவது தெரிகிறது இந்த ஆசிரமத்துக்கே ஒரு கும்பல் இறங்குகிறது.

“வாங்க ஏறுங்க; நாம போகலாம்?”

“வாணாம்பா, ஒரெட்டு நடந்து போயிரலாம்?”

“இப்ப இந்தப் புடிவாதம் வாணாம். ஏறுங்க.” அவன் பலவந்தமாக அவளைப் பஸ்ஸில் ஏற்றுகிறான். “கே.ஜி. ஆஸ்பத்திரி. ரெண்டு டிக்கெட்” என்று சொல்லிவிட்டு மகளிர் இருக்கையில் காலியாக இருந்த இடத்தைப் பார்த்து உட்கார்த்தி வைக்கிறான்.

‘‘கே.ஜி. ஆஸ்பத்திரியா? அங்கெ எதுக்கப்பா போவணும்? நாம மின்னாடியே எறங்கிட்டா குறுக்குச் சந்தில புகுந்து ஸ்கூல் பக்கம் திரும்பிடலாமே?”

“கொஞ்சம் வாய மூடிட்டு வரீங்களா?”

அவன் முகம் ஏனிப்படிக் கடுப்பாக மாறவேண்டும்?

பெரிய சாலையில் அந்த ஆஸ்பத்திரி இருக்கிறது. வெகு நாட்களாகச் செயல்படும் ஆஸ்பத்திரி என்று பெயர். ஆனால் சென்று நெருங்கும் பிரபலம் பற்றி அவளுக்குத் தெரியாது.

சாலையில் அவர்கள் வந்திறங்கும் போது, பிற்பகல் மூன்று மணி இருக்கலாம். கிறிஸ்துமஸ், புத்தாண்டு பொங்கல் என்று எங்கே பார்த்தாலும் தள்ளுபடி விழா. ஃபிரிட்ஜ், வாஷிங் மிசின் கிரைண்டர் என்று நடுத் தெருவுக்கே வருவதுபோல் கடைபரப்பி இருக்கிறார்கள். துணிக்கடைகளோ, பழக்கடையில் மொய்க்கும் ஈக்களைப் போல் மக்களைக் கவரும் பரபரக்குள்ளாக்கி இருக்கின்றன. ஒரு புறம் தலையணை மெத்தை விரிப்பு என்று மக்களைக் கூவி அழைக்கும் வாணிபம். இடைஇடையில் சிக்கன், மட்டன் மசாலா நெடி வீசும் உணவுக்கடைகள். குப்பைத் தொட்டிகளும் நிரம்பி வழியும் கழிபட்ட பிளாஸ்டிக் குப்பைகள்... ஏதோ தோசைக்கு இடையே வைக்கப்பட்ட உருளை மசாலா போல் உயர்ந்து போயிருக்கும். ஆஸ்பத் திரிக்குள் அவன் அவள் கையைப் பற்றிக் கொண்டு அழைக் கிறான்.

“யே, இப்ப எதுக்கு ஆசுபத்திரி? வுடுங்க!”

“எதுக்கா? சொறி நாய்; வெறி நாய், விசம் நீரை உறிஞ்சி, நீர்சுண்ட, எச்சிமுழுங்க முடியாம, நாயபோல” அவள் விலுக்கென்று கையை உதறிக் கொள்கிறாள்.

“அதெல்லாம் ஒண்ணுமாகாது. அதான் அம்பாள் குங்குமம் வச்சாச்சே!”

“எனக்கு அதிலெல்லாம் நம்பிக்கை இல்ல. முரண்டு புடிக்காம உள்ள வாங்க... ஏதோ சக்தி உங்களையும் தள்ளிட்டு வந்திருக்கு என்னையும் தள்ளிட்டு வந்திருக்கு. காரண காரியம் புரிபடல; வாங்க...”

ஆஸ்பத்திரியிலும் அந்த நேரத்தில் கெடுபிடி தெரிய வில்லை. ஒரு பழைய வீடுதான். நுழைந்ததும் கூட மறைப்பில் தட்டி போல் ஒரு தடுப்பு. ஒழுங்கை போல் பின்புறம் செல்லும் இடத்தில் ஒரு கட்டிலில், நோயாளிப் பெண் படுத்திருக்கிறாள். சொட்டு இறங்கும் அந்த நிலை யருகில் ஒரு பெண் கவலையுடன் நிற்கிறாள். பெஞ்சியில் வரிசையாக நோயாளிகளோ உறவினர்களோ குந்தியி ருக்கின்றனர். எங்கோ ஒரு குழந்தை வீரிட்டுக் கத்தும் குரல் செவியில் விழுகிறது.

மருந்தகமும் உள்ளே இருக்கிறது. அருகில் உள்ள திட்டி வாசலில் சுப்பய்யா தலை நீட்டி "ஒரு நாய்கடி கேஸீங்க. ஊசி போடணும்" என்று சொல்வது செவியில் விழுகிறது.

"வளர்ப்பு நாயா, தெரு நாயா?" என்று நர்ஸ் கேட்கிறாள்.

"தெரியல. ஆனால் அது கோயில் நாய்!"

"என்னய்யா? வெளயாடுறியா? கோயில்ல நாய் வளக்கிறாங்களா?"

"ஏன், கூடாதா?" என்று கேட்டுவிட்டு, "அது சொறிநாய், வெறிநாய்..." என்று முடிக்கிறான்.

அவள் அவன் சட்டையைப் பற்றி இழுக்கிறாள். "ஒண்ணும் வாணாம்பா!"

"அப்ப, அந்தப்பக்கம் போயி சீட்டுப் போட்டுட்டு வாங்க. அஞ்சு ஊசி போடணும்; ஆயிரம் ரூபாய் ஆகும்."

"இப்பவே அஞ்சு ஊசியும் போட்டுடுவீங்களா? ஆயிரம் ரூபாயும் குடுத்திட...?"

"என்னய்யா, எகன முகனயா பேசுறீங்க. இவ்வளவு ஆகும்னு சொன்னேன். சொறிநாய், வெறிநாய்னு சொன்னீங்க. அஞ்சு ஊசி போட்டாத்தான் பத்திரம். இப்ப முதல்ல முந்நூறு கட்டிட்டுச் சீட்டு வாங்கிட்டு வாங்க!"

அவன் அந்தப் பக்கம் நகர்ந்ததும் இவள் வந்த வழியில் நடையைக் கட்டுகிறாள். கோயிலுக்குப் போனாள், நாய் கடித்தது, சரி. இவனைப் பார்த்து எத்தனை வருசம் ஆயிருக்கிறது? இப்ப தீரும் என்று வந்த வழியில் ஆயிரம் ரூபாய்க்கு ஊசியா? முருகா? இவள் மாசச் செலவு கூட அவ்வளவு ஆகாதே?

விடுவிடென்று கடைகளூடே அவள் நடக்கையில் அவன் விரைந்து வந்து அவள் கையைப் பற்றி நிறுத்துகிறான். கைப்பிடி இறுகுகிறது எலும்பும் நரம்புமாகத் தெரியும். அந்தக் கைக்கு இத்துணை வலிமையா?

'என்னம்மா? திரும்பப் பாக்குமுன்ன எதோ பி.டி. உஷான்னு ஒடுறீங்க? நா முந்நூறு கட்டிச் சீட்டு வாங்கிட்டே! வந்து ஊசி போட்டுக்குங்க?"

"எனக்கு ஊசிகீசி ஒண்ணும் வாணாய்யா, நா அப்படி நாய் மாதிரி ஊளையிட்டுச் சாவணும்னு விதியிருந்தா, சாவறேன். என்ன வுடய்யா!"

அவன் விடையே கூறாமல் அவளை இழுத்து வருகிறான்.

கட்டுக்கட்டும் இடத்தில் ஒரு நர்ஸ் பெண், அவள் சேலையை அகற்றி, காலில பட்ட கடிக்காயத்தைப் பார்க்கிறாள். முழங்காலுக்குக் கீழ் ஆடு சதையில் கவ்வி இருக்கிறது. இரண்டு சுற்றுச் சீலையும் கிழிபட்டிருக்கிறது. இரத்தம் பட்டிருக்கிறது.

கடிவாயை மருந்து நீர் போட்டுக் கழுவிச் சுத்தம் செய்கிறாள்.

''பல் ஆழமா மூணெடத்துல பதிஞ்சிருக்குபாரு... ஏம்மா போயி சொறி நாயக்கடிக்கிறீங்க இந்த வயசில...?" அவள் சிரிக்காமலே கடிபட்ட இடத்தில் மருந்துத் துணி வைக்கிறாள்.

"இந்தம்மாக்கு, புள்ள குட்டி, பேரன் பேத்தின்னு இல்ல. பொழுது போகல நேரா கோயிலுக்குப் போயி, சொறி நாயக் கடிச்சிட்டாங்க. போனாப் போவுதுன்னு, நா கோயிலுக்கு வந்தவ, இவங்கள தத்து எடுத்துக்கலான்னு இருக்கே..."

"அதும் சரிதா. வயசு எழுபத்தெட்டுன்னு போட்டி ருக்கிங்க. இது இரண்டாவது குழந்தைப் பருவம். தத்தெடுக் கிறது சரிதான்.."

பஞ்சால் நன்றாகத் துடைத்து, பதமாக பிளாஸ்திரி போடுகிறாள்.

பிறகு, இடது கையில் ஊசியும் போடுகிறாள் இன்னொரு நர்ஸ்.

"ரொம்பத் தண்ணி படாம வச்சுக்குங்கம்மா? நாளக்கழிச்சி வாங்க. அடுத்த ஊசி போட்டுக்கலாம்."

வெளியே வருகிறார்கள்.

சுப்பய்யா ஓர் ஆட்டோவைக் கூப்பிடுகிறான்.

"ஏம்ப்பா, உங்கிட்டக் காசு ரொம்ப இருக்குதா? பொடி நடையா நடந்து போயிரலாமே?"

"உங்க கால்ல செருப்பில்ல. கால்ல காயம். ஏறி உக்காருங்க..." அவள் உட்காருகிறாள்.

"பள்ளிக்கூட வாசலில் கலகலப்புக் கூட்டம் இல்லை.

திரும்பும்போது, சங்கரி இருந்த வீட்டுக்கூரை ஓடுகள் பிரிக்கப்பட்டிருக்கின்றன.... சொரேலென்கிறது...

"ஏம்ப்பா... கொஞ்சம் நிறுத்து?...."

அவன் தாண்டிப் போய் விடுகிறான். வீட்டுப் பக்கத்தில் அய்யப்பன் வாழைகள் இலைக்குப்பைகள் அலங் காரங்களை இரண்டு மூன்று நோஞ்சான் மாடுகள், பன்றிகள் இழுத்துப் போட்டிருக்கின்றன.

அவள் வண்டியில் இருந்து இறங்குகிறாள்.

"த...சூ..." என்று கை ஓங்கிப் பன்றிகளை விரட்டுகிறாள்.

இடுப்பில் இருந்த சாவியை எடுத்துக் கதவைத் திறக்கிறாள். வீட்டில் அடி வைத்ததுமே, வயிறு கூவுகிறது.

"உள்ள வாங்க... வாப்பா..." என்று திருத்திக் கொண்டு, பின் புறமிருந்து துடைப்பம் எடுத்து வந்து முன் வாசல் அலங்கோலங்களைப் பெருக்குகிறாள். அந்த வாழைக் கழிவுகளை உண்ணும் மாடுகளில் கொல்லையில் கட்டப் பட்டிருந்த செவலையும் இருக்கிறது. இவளைக் கண்டதும் அது தானாக வீட்டுப் பக்கம் போகிறது. உள்ளே வந்து பின்புறக்கதவைத் திறந்து அழைத்துக் கொள்கிறாள். சேலை நுனியில், இரத்தக் கறை தெரிகிறது. கசக்கியும் முழுதும் போகவில்லை.

வேறு சேலை மாற்றிக் கொண்டு, அடுப்பைப் பற்ற வைக்கிறாள். அரிசியைக் களைந்து வைத்துவிட்டு, சேலையை சோப்புப் போட்டுத் துவைத்து உலர்த்துகிறாள். அரைமூடி தேங்காய் இருக்கிறது. அதை நசுக்கி வற மிளகாய், புளி வைத்து அறைக்கிறாள்.

சமையலை முடித்துவிட்டு அவள் வெளியே வந்து பார்க்கிறாள். மாடிப்படி அறை பூட்டி இருக்கிறது. கூடத்தில், வெளித்திண்ணையில் இல்லை. எங்கே போய்விட்டான்?

பக்கத்து மனைக்கட்டில் செங்கல் வந்து இறங்கி அடுக்கி இருக்கிறார்கள். தெருவில் கம்பி கொண்டு போகும், சிமிட்டி மூட்டை சுமந்து செல்லும் ஏதேதோ வண்டிகள் செல்கின்றன.

"எங்கே போனான், சொல்லாமல் கொள்ளாமல்? ஆனால், எங்கிருந்து எப்படி வந்தான்?..."

சூனியமாக இருக்கிறது கனவா, நிகழ்வா?

உள்ளே சென்று சாப்பிடவும் பிடிக்கவில்லை. வாயிலிலேயே நிற்கிறாள். கறுத்து வாடிய முகத்துடன் வருகிறான்.

"ஏம்பா? எங்கே போயிட்டே? நா ஒரு சோத்தப் பொங்கி வச்சிட்டுக் காத்திருக்கிறேன். பொழுது சாஞ்சு போச்சி? ஒருவேள சாப்புடத்தான் போனீங்களோ?..." வேகமாகச் சொற்கள் வருகின்றன.

"வந்து... அந்த ஓட்டு வீடு பிரிக்கிறாங்களே, அங்க யார் இருந்தாங்க?" சுருக்கென்று நெஞ்சில் கத்தி குத்திவிட்டாற் போல் வேதனை தோன்றுகிறது.

"வயசான ஓமியோபதி டாக்டர், ஏழைகளுக்கு வைத்தியம் பண்ணிட்டிருந்தார். இப்ப வரமுடியல போல இருக்கு. அவரு படப்பை பக்கத்திலேந்து வருவார்.... சாப்பிட வரியா?"

"ஒரம்மா கிரீச் நடத்திட்டிருந்தாங்கன்னு சொல்றாங் களே, சங்கரின்னு..."

"அ... ஆமாம்.. அவளத்தான் நாலு மாசமாக் காணல. புறந்தவன் வந்து கூட்டிட்டுப் போயிட்டாப்பல..."

"நீ முதல்ல சாப்புட வா. எனக்குப் பசிக்கிதப்பா, ஊசிபோட்டதோ என்னமோ, என்னிக்கும் தெரியாத பசி...."

"நீங்க அவுங்களப் பாத்திருக்கீங்களா தாயம்மா...."

"முதல்ல நீ பசியாறு. பிறகு பாக்கலாம்..." இலையைப் போட்டு மணை போடுகிறாள். அவன் முகம் கழுவிக் கொண்டு வருகிறான்.

சோறு ரசம், துவையல்... மோர்...

அவன் இலையை எடுத்துக் கொண்டு செல்கிறான். இவள் கரைத்துக் குடிக்கிறாள்.

அப்போது ரங்கன் உள்ளே வருகிறான். பெஞ்சியில் கிடந்த தந்தி பேப்பரைப் பார்த்துக் கொண்டு நிற்கும்

சுப்பய்யாவைப் பார்க்கிறான். என்னம்மா, சொல்லாம கொள்ளாம கதவப் பூட்டிட்டுப் போயிட்ட? காலம இல்ல, மத்தியானம் இல்ல, புள்ள வீட்டுக்குத் தான் போயிட்டி யோன்னு போன் போட்டுப் பார்த்தேன், சரி வித்யாலயா வுக்குத்தான் போயிட்டியோ மனசுமாறின்னு விசரிச்சேன், அங்கும் இல்ல. எங்க போயிட்டு வரே? இவுரு யாரு?"

இவன் இப்போது எஜமானனாகிவிட்டான். வரீங்க, போறீங்ககூட இல்லை...

"இவுரு யாரு?"

"இவுரு, அந்தகாலத்து ஆளு. குருகுலத்துல வேலை செய்தவரு. பேரு சுப்பய்யா..."

சுப்பய்யா நிமிர்ந்து பார்க்கிறான்.

"வணக்கமுங்க. நீங்களே சொல்லுங்க. என்ன இந்த இடமெல்லாம் பொறுப்பா பாத்துக்க சேர்மன் அய்யா, வச்சிருக்காங்க. இப்படித்தா. சொல்லாம கொள்ளாம திடுதிடுன்னு போயிடறாங்க. வயிசாயிடுச்சி. மகன் கூப்பிடுறாங்க. அங்க போகணும். இல்லன்னா குருகுலம் பக்கமே அவுட் அவுஸ் தாரேன்னு கூப்பிடுறாங்க. அதுவும் மாட்டேன்னு இப்புடி நடக்குறாங்க. எனக்குத்தானேய்யா, பொல்லாப்பு? நீங்க எந்த டிரெயின்ல, எங்கேந்து வாரீங்க? எனக்கு ஒரு சேதி சொன்னா டேசனுக்கு வந்திருப்பேன்ல? தியாகி அய்யா சொந்தக்காரங்களா?" ரங்கனின் நிலை கொள்ளாத பரபரப்பு வெளிப்படுகிறது.

"அவங்களுக்கு ரொம்ப வேண்டியவன்தான். இப்பதா அவங்க யாரும் இல்லையே?"

"அது சரி. நீங்க எந்தூரிலேந்து வந்திருக்கிறீங்க?"

"புனா... ஒரு காரியமா வந்தேன். இந்தம்மாவை எதிர் பாராம கோயில்ல பார்த்தேன். அங்க இவங்கள ஒரு நாய்

கடிச்சிட்டது. கூட்டிட்டுப்போயி ஆசுபத்திரில ஊசி போட்டுக் கொண்டாந்துவிட்டேன்.”

“அடாடா... என்னம்மா? இதுக்குத்தா நான் சொல்லிட்டேருக்கிறன். எந்த கோயிலுக்குப் போனீங்க? திருநீர்மலையா? ஏகாதசி கூட இல்லியே?...”

“இதபாரு ரங்கா. நா ஒண்ணும் வீட்டுக் கைதி இல்ல. உன் சோலியப் பார்த்திட்டுப் போ. அப்பிடிப் போனா போயிட்டுப் போறன்...”

அவன் ஒன்றும் பேசாமல் போகிறான். முகம் உப்பியிருக்கிறது.

சுப்பய்யா விளக்கு வைத்து, பிரார்த்தனை என்று அரைமணி உட்கார்ந்திருக்கிறான்.

“ஏம்ப்பா, நீ என்ன காரியமா வந்தேன்னே சொல்லல. அய்யா பாட்டுக்கு டிரஸ்ட்னு, எல்லாம் வச்சிருக்கிறதா சொல்றாங்க. ஆனா, கடைசி மூச்சை அவங்க வுடறப்ப நாந்தா இருந்தே. சுத்தப் பாலிலும் விசம் சேந்திடும்னு அப்பவே புரிஞ்சிட்டாங்க. இந்த இடத்துல, சத்தியமா, ஏழை எளிசுங்களுக்குக் கல்வியோ வைத்திய சேவையோ பண்ண, அம்மா பேரை வச்சி நடத்தணும்னு அவங்க எண்ணம். மாடில பீரோல, அம்மா, ராதாம்மா உபயோகிச்ச சாமான்கள், போட்டோ படங்கள், துணிமணி, வீணை எல்லாம் இருக்கு. அப்பவே பராங்குசம், என்னை அவங்க நெருக்கத்திலேந்து விலக்கணும்னு பார்த்தான் சுப்பய்யா. அய்யா, அம்மாவும் போன பிறகு, இந்த தேசத்த நினச்சி மனசொடிஞ்சி போனாங்க...”

“புரியிது...”

“என்னமோ, உன்னக் கண்டது எனக்கு இப்ப தெம்பா இருக்கு. முந்தாநா வந்து... அவ... என்ன மிரட்டுறாப்பல சொல்லிட்டுப் போயிருக்கிறா. இந்த இடம் மிச்சூடும்

வளைச்சி பெரிய ஆஸ்பத்திரி; கெஸ்ட் அவுஸ், அது இதுன்னு அமெரிக்காவுக்கு மேல வரப்போவுதாம். இதபாரு, கிழக்கால, குடும்பம் குடும்பமா பொழப்பத் தேடி வந்து அல்லாடுதுங்க. எதுக்கால, அங்க பழைய பங்களா ஒண்ணு இருந்திச்சே, அதை இடிக்க வந்த சனங்களப் பாத்தேன். கடப்பாறய வச்சிட்டு வெயில்ல இடிப்பானுவ. அஞ்சும் குஞ்சுமாக இடிச்சத எடுத்து அடுக்கும். காலம அரிசி பருப்பு, கறி மீனு வாங்கி வந்து அடுப்பு வச்சிப் பொங்கும். தின்னும். எண்ணெய் காணாத முடி. அழுக்கு. சாங்காலமா தண்ணி சேந்திக் குளிக்கும். ஆம்புளங்க ராத்திரி குடிச்சிப் போட்டு கட்டயா தரயில கெடப்பானுவ. ஒரு பொம்புள, பாவம், ரெண்டு புள்ள, இங்க திண்ணையில படுக்கிறேம்பா... படுத்துக்கம்பேன். இதையும் அப்படி இடிப்பாங்க..."

இவளுக்குத் தொண்டை கம்மிப் போகிறது. "எல்லா இடத்திலும் இதே வரலாறுதாம்மா. நா இப்ப ஒரு முக்கிய விசாரணையா நேத்துதா வந்தே. வந்ததும், விசாரிச்சேன். இந்த இடம், வீதி எனக்கு நல்லா தெரியுமே? ஆனா, இந்தத் தெருவுக்கு இப்ப, மயில் ரங்கம் தெருன்னல்ல போட்டி ருக்கு! புதுநகர் காலனி அதுவும் தெரியல. மணிக்கூண்டு கிட்ட விசாரிச்சேன். அங்கே மெஸ் வச்சிருக்கிற அம்மா, அட்ரசப் பாத்திட்டுச் சொன்னாங்க. அந்த வீட்டக் காட்டி னாங்க. வூடு டீச்சர் வீடு, வித்திட்டாங்க. மூணு லட்சம்னு வாங்கி ரிஜிஸ்தர் ஆயிடிச்சின்னாங்க. அப்பதா அங்க டாக்டர் இருந்ததா— வயித்தியம் பண்ணுவாருன்னு பூவிக்கிற பொம்புள சொல்லிச்சி. டீச்சரத் தேடிட்டுப் போகு முன்ன, ஸ்கூல்ல விசாரிச்சேன். வாச்மேன் சொன்னான், நீங்க விசாரிக்கிற பொம்புள, இங்க நாலு மாசமா இல்ல. அவங்க, சிவசக்தி ஆசிரமம் போகணும்னு சொன்னாங்க. அப்படியே போய்த் தங்கிட்டதாக் கேள்வி. நீங்க யாருங் கன்னு கேட்டான். நான் புனாவிலேந்து வந்திருக்கிறேன். அவங்க... அண்ணன்னேன். அப்ப நீங்க வேறயா? முன்ன கூட ஒரண்ணன் இப்படித்தா வந்து விசாரிச்சாரு. அந்தப்

பொம்புள ஒரு மாதிரின்னு இழுத்தா... பளார்னு அவன் கன்னத்துல ஒரு அறை விட்டிருப்பேன். அடக்கிக்கிட்டு ஆசிரமத்துல போய்ப் பார்ப்போம்னு தா வந்தே. அங்க யாரும் தங்கறாப்புலவே தெரியலேன்னாங்க..."

"சுப்பய்யா...!" என்று பீறிடும் அவள் குரல் அலறலாக ஒலிக்கிறது. அப்போது அவன் சட்டை உள் பையில் இருந்து அந்தக் கடித உறையை அவளிடம் கொடுக்கிறான். கை நடுங்குகிறது. அவள் பிரிக்கிறாள்.

தேவரீர், உயர்திரு, சுப்பய்யா வாத்தியார் அவர்களுக்கு, அடியாள் சங்கரி, அநேக கோடி நமஸ்காரங்கள். என்னைத் தங்களுக்கு நினைவிருக்கும். நான் இப்போது, 13 மயில்ரங்கம் வீதி, பாரதி புது காலனி என்ற விலாசத்தில் இருந்து இந்தக் கடிதம் எழுதுகிறேன். என் பெரியண்ணன் ராஜஸ்தானிலும் சின்னண்ணன் சிங்கப்பூருக்கும் போய்விட்டார்கள். அம்மாவும் காலமான பிறகு என் நிலை மோசம். நான் உங்களை அநுமான் சௌக்கில் பார்த்துப் பேச முயற்சி செய்தேன். கண்டு கொள்ளாமல் போய்விட்டீர்கள். பிறகு அண்ணன் மகனுக்கு இங்கே இன்ஜினியரிங் காலேஜில் இடம் கிடைத்தது. ஒரு வீடு எடுத்துக் கொண்டு அவனைப் படிக்க வைக்க— அவனுக்கு சமையல் பண்ணிப்போட என்று முடிவு செய்து என்னை இங்கே கொண்டு வைத்தார்கள். முதலில் மூன்று வருசம் ஒருவீட்டில் மாடியில் இருந்தோம். பிறகு அவர்கள் காலி செய்யச் சொன்னதால், பக்கத்திலேயே சிறு வீடொன்றில் இப்போது இருக்கிறேன். அண்ணன் பையன் படிப்பு முடிந்து சிங்கப்பூர் போய் விட்டான். எனக்கு அவன் இருந்த வரையிலும் பாதுகாப்பாக இருந்தது. பிறகு, நானே ஒரு ஜீவனம் தேட வேண்டி, இதே இடத்தில, வேலைக்குப் போகும் தாய்மாரின் சிறு குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறேன். இந்த வீட்டின் வாசல் புறத்தில் ஒரு நல்ல டாக்டர், வயசானவர், ஏழை களுக்கான வைத்தியசாலை நடத்துகிறார். இரவு எட்டு

மணிக்கு அவர் போய்விடுவார். காலை பத்தரை மணிக்கு வருவார். அதனால் இரவு நேரங்களில் எனக்குப் பயமாக இருக்கிறது. இங்கே யாரையும் நம்ப முடியவில்லை. எனக்குத் திக்கு இல்லை. இந்தக் கடிதம் கண்டவுடன் என்னை வந்து ஏற்றுக் கொள்ளுங்கள். என்னைப் போன்ற ஆதரவற்ற பெண் களுக்கு இங்கே எந்தப் பாதுகாப்பும் இல்லை. உங்களைத் தான் தெய்வரூபமாக நம்பியிருக்கிறேன். உடனே தந்திபோல் பாவித்து வந்து தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும். தாள் பணிந்து கேட்டுக் கொள்கிறேன். அடியாள், சங்கரி....

## 23

ஜயந்தி டீச்சர் தெரிவித்த விவரங்கள் இரத்தக் கோடுகளாய் மின்னுகின்றன. தெய்வத்துக்கே உரியதாகப் புனிதம் காத்த மலரைக் கசக்கிப் புழுதியில் தேய்த்துவிட்டு, அதன் மீது, நாக்கூசும் அபவாத முட்களைப் படரவிட்ட கயவன் அரக்கனாக நின்று கொக்கரிக்கிறான். காவிப்பட்டு மணிமாலைகள்... சிவசக்தி ஆசிரமம் எப்படி?

பெத்த தாய், கூடப்பிறந்தவங்க, உழைப்பை வாங்கிட்டாங்க. யாருமே அவளைக் காப்பாற்றவில்லை. ஆணும் பெண்ணுமாக அஹிம்சைப் போராட்டத்தில் பங்குபற்றிச் சிறை சென்றார்கள்...

யு.ஜி.ல இருப்போம். சாப்பாடு கொண்டு வருவாங்க. சிநேகமாகப் பழகுவோம். தப்பு அபிப்பிராயம் வரக் கூடாதுன்னு கல்யாணம் பண்ணிக் கொள்வோம்....

பெண் நெருப்புத்தான். ஆனாலும் அவளைத் தவறாக ஆண் பயன் படுத்தினால், அழிவுதான். அந்த நெருப்பைப் பாதுகாக்க வேண்டும்.

சுப்பய்யா எங்கோ பார்த்துக் கொண்டு பேசுகிறான்.

இருபத்தஞ்சு வருசத்துக்கு முன்னே, குடில்ல, மருத முத்து ரயில் தண்டவாளத்துல தலைகொடுத்தான். நினப்பிருக்கா?

மைதானத்தில் பிள்ளைகளைக் கூட்டிப் பிரார்த்தனை செய்வதில் இருந்து உடற்பயிற்சி மேற்கொள்வது, தேசியகீதம், வந்தே மாதரம் இசைப்பது முதல் அனைத்துச் செயல் பாட்டு ஒழுக்கங்களும் அவன் தலைமையில்தான் நெறிப் படுத்தப்பட்டன. அப்பழுக்குத் தெரியாத உடை; தோற்றம். மாநிறம் தான். அவன் ஒழுக்கக் குறைவானவன் என்று கரும்புள்ளியை வைக்கவே முடியாது...

"ஏன்பா?"

"சுசீலா தேவியத் தெரியுமில்லையா?"

"தெரியும். ரொம்பத் துவக்க காலத்திலேயே இங்கே வந்து சேந்தாங்க. புருசன் சிறுவயசிலேயே போயிட்டான். ஒரு குழந்தை, மூணு வயசு, அதுவும் நம்ப ஸ்கூலுக்கு வரும். சுசீலாவின் அக்கா, வாரம் ஒருமுறை கூட்டிட்டு வருவாங்க. அம்மாவும் அய்யாயும் கூடக் கொஞ்சுவாங்க. வந்தே மாதரம் நல்லாப் பாடும்..."

"நீங்கல்லாம் குடிலை விட்டுப் போன பிறகு, கபட மில்லாம இருந்த சூழல்ல, ஒரு துரும்பப் பத்த வச்சி எறிஞ்சாங்க. ஒரு தடவை சுசீலா லீவுக்குப் போயிட்டு வந்தாங்க. என்ன நடந்திச்சின்னு தெரியல. மத்தியானம் சாப்பாட்டு நேரத்துக்குக் கிளம்பிப் போயிட்டாங்க. அன்னிக்கு சாயுங்காலம் அவங்கண்ணன் மட்டும் வந்தாங்க. என்ன நடந்திச்சின்னு தெரியல. விடுதியிலே இருந்த சரஸ்வதி டீச்சரையும், ஜானம்மா டீச்சரையும் கூப்பிட்டுப் பராங்குசம் விசாரணை செய்தாராம். இதெல்லாம் எனக்குக் கவனமே இல்ல. ஆனா, மாலைப் பிரார்த்தனைக்கு மருத முத்து வரல. மறுநா காலையிலே சைதாப்பேட்டைத் தண்ட வாளத்துல, எக்ஸ்பிரஸ் வண்டிக்குத் தலை கொடுத்திட்டார்.

ஆசிரமமே கொல்லுனு ஆயிட்டது. ரயில் பாதையைக் குறுக்கே தாண்டிப் போயிருக்காரு, விடியக்காலம் பாதை யோரம் நடக்கப் போவாரு, விபத்துன்னு பேப்பர்காரங்க தகவல போட்டாங்க— அய்யாகூட இரங்கல் கூட்டத்துக்கு வந்து கண்ணீர் விட்டார். பராங்குசம் உருகினான். சுசீலா டீச்சர் பிறகு வரவேயில்லை...''

''அட...பாவி...? இ...இது கொலையில்லியா? ஒரு அகிம்சைக் கோயிலில கொலைகாரப் பாவி அப்பவே உருவாயிட்டானா?....''

''ஆமாம்மா. இவன் சுசீலா டீச்சருக்கு மருதமுத்து சகவாசம் நெருக்கமாக இருப்பதாகவும், அவர்கள் திருமணத்தை நடத்தி வைத்து ஆசிரமத்தின் பேரைக் காப்பாற்றுங்கள் என்று ஒரு சக டீச்சர் எழுதுவதுபோல் மொட்டைக் கடிதாசி அண்ணன் பேருக்கு எழுதி இருக் கிறான். அவங்க உசந்த சாதி. சநாதனக் குடும்பம். இவரு தாழ்ந்த சாதி. அதுவும் விதவா விவாகத்தை ஏத்துக்காத வங்க. குழந்தை வேற இருக்கு. மருதமுத்துவை விசாரணை என்ற பேரில் என்ன சொன்னானோ? அவரு உசிரையே தியாகம் செய்தாரு... அடுத்த இலக்கு நான்.''

ஏலக்காயும் கிராம்பும் கர்ப்பூரமும் மணக்கும் பெட்டி என்று நினைத்திருந்தாளே? அதன் உள்ளிருந்து மோசமான பாச்சைப் புழுக்கையும் கரப்பான் புழுக்கைகளும் வெளியா கின்றன.

''அம்மா போயி, அய்யாவும் ஓய்ந்து போயிருந்தாங்க. இவன் அவங்க வரபோதெல்லாம் பிரமாதமா சத்திய ஜோடனை செய்து வச்சிருப்பான். எனக்கே ஒண்ணும் அப்பல்லாம் தெரியலன்னா பாருங்க? நிர்வாகமே கொஞ்சம் கொஞ்சமா காந்தி சத்தியத்தில் இருந்து நழுவி, கறைபடிய ஆரம்பித்திருக்கு— கணக்கு வழக்கெல்லாம், அவன் பேரில் தனிச் சில்லறை சேரும் வழி கண்டு பிடிக்கச் சொல்லிக் கொடுத்தது. எல்லோரையும் கைக்குள் போட்டுக் கொள்ளும்

சாதுரியங்கள் சேர்ந்தன. அதனால அடுத்த களை எடுத்தல் நான்தான்...''

''என்னமோ இந்தி எதிர்ப்புச் சூழலில் ஒட்டாம வடக்கே போயிட்டன்னு தான் நினைச்சிருந்தேன். அய்யா விடம் வந்து நீ அப்படித்தான சொல்லிட்டுப் போனே?''

''ஆமாம்மா. இதெல்லாம் மோசமான பண்பாட்டு ஒழுக்கச் சிதைவுகளில் கட்டிய அரசியல் ஆட்சிகளில் விளைந்த பயன்கள். மது விலக்கை எடுத்து, கண்ட கண்ட இடங்களிலெல்லாம் கடைதிறந்து மது சாரத்தை ஓட விட்டது, சினிமா கடைவிரித்த இழிவுகள், 'கற்பழிப்பு' என்ற சொல்லே உச்சரிக்கச் கூசிய ஒழுக்கங்களை பத்திரிகை ளெல்லாம் 'மஞ்சளாக' மாறியதால் சுத்தமாத் துடைத்தன. (ஏ) சினிமாங்கற முத்திரைதான் பணத்தை அள்ளித்தரும்னு, இந்த சென்னைப் பட்டினத்து சாலை, மூலைமுக்குக ளெல்லாம் விளம்பரங்கள்... மருதமுத்து, மயிர்நீப்பின் உயிர் வாழாக் கவரிமானானார். எனக்கு உயிரை விடுவது கோழைத்தனம்னு பட்டது. மழலைப்பள்ளி இருந்தது. அய்யா இருந்த நாளில் பக்கத்தில் இருந்த குப்பத்துக் குடிசைப் பிள்ளைகள்கூட வரும். அநு அம்மா வந்த காலத்தில் மழலைப்பள்ளிக்குக் குடிசைக் குழந்தைகள் வருவ தில்லை. ஓரளவு வசதியாக இருக்கும் குழந்தைகள் வந்தன. எல்லாக் குழந்தைகளும் வெளியே இருந்து தான் வந்தார்கள். தோட்டக்காரன், காவலாளி யாருக்குமே உள்ளே குடும்பம் இல்லை. அநேகமாகத் தங்கும் பிள்ளைகள், டீச்சர்களுக்கு மட்டுமே விடுதி. அநு அம்மா இங்கே வரும் நாட்களில் குழந்தையை விட்டுவிட்டு வருவார்கள். அது தானாக ஆடிப்பாடிட்டிருக்கும். அநுசுயா டீச்சர், நான், ஆபீசில் இருந்தால் அது அங்கேயே இருக்கும். திடும்னு ஒருநாள் வித்யாலயாவின் வெளிப்புறச்சுவரில், என்னையும் அநுவையும் பற்றி, கேலிப்படம் போட்டிருந்திச்சி. அநு சுப்பய்யான்னு எழுதி, ''நாங்க புதிசா கட்டிக்கிட்ட ஜோடி

தானுங்க''ன்னு பாட்டுப் போட்டிருந்திச்சி. குழந்தை திகைச்சுப்போயி பாக்குறப்பல...

"நல்ல வேளையா, நான் காலம சூரியன் உதிக்கும் போதே நடக்க வெளியே வந்தவன் பாத்திட்டேன். ஓடனே உள்ளே கொட்டடிக்குப் போயி தேங்கா மட்டையக் கொண்டு வந்து அழிச்சேன். நேரா பராங்குசத்து வீட்டுக்குப் போனேன். உள்ளாறதான அப்ப வீடு? அவங்க சம்சாரம், வாசல்ல கோலம் போட்டிட்டிருந்தாங்க. 'இந்தாங்கம்மா, மருதமுத்துகிட்ட யாரோ வெளயாடினாங்க, அந்த நெருப்புல அவரு உசிரைக் குடுத்தாரு. இப்ப ஏங்கிட்டயும் அதே வெளயாட்ட ஆரோ ஆடுறாங்க? நானொண்ணும் உசுரவுடமாட்டேன். சத்தியத்த நிரூபிக்க, குத்தம் பண்ணுறவங்களக் கொண்டு வர எனக்கு முடியும். ஆனா, சம்பந்தபட்ட, ஒரு அப்பாவித் தாய்க்கு அது கேடாக முடியும்?' என்று சொல்லிவிட்டு, சுண் ணாம்பை எடுத்து நானே அழித்தேன். அடுத்த நாளே கால் கடுதாசிய நீட்டிட்டு இங்கே அய்யாட்ட வந்து சம்பிரதாயமாச் சொல்லிட்டுப் போனேன்....

"அப்ப போனவன், இந்தப் பட்டணத்து மண்ணை இப்படி வந்து மிதிப்பேன்னு கொஞ்சமும் நினைக்கல..."

அவன் குலுங்கிக் குலுங்கி அழுகிறான்.

"அட... சுப்பய்யா? சுப்பையா? என்ன இது? ஏம்ப்பா, ஏதோ நடந்திச்சி. அதுக்குப் போய் இவ்வளவு வருத்தப்படுற? அநு பிறகும் இங்கு வந்திட்டுத்தானிருந்தா. ரெண்டு வருசத்துல அவளும் புருசன் கூடப் போறதாச் சொல்லிட்டுப் போனா. அய்யா இறந்தபோது அவ பேப்பரில 'தியாகின்'னு கட்டுரை எழுதியிருந்ததா நிக்கெலஸ் டாக்டரு படிச்சிச் சொன்னாரு, கூட்டத்துல..."

அவன் தேறி முகத்தைத் துண்டால் துடைத்துக் கொள்கிறான்.

"தாயம்மா, நா இப்ப போறேன். மணிக்கூண்டு பக்கத்துலதான் பழைய ஆளு, ராமலிங்கம்னு, அங்க

தங்கியிருக்கிறேன். நா வரேன், நாளைக்கு. நீங்க மறுக்க ஊசி போட்டுக்கணும்'' என்று சொல்லிவிட்டு எழுந்திருக்கிறான்.

"இரப்பா ஏ, இங்க ரா தங்கக்கூடாதா? இப்ப கூட அவதூறு கட்டுவாங்கன்னு பயமா?..."

"பயந்துகிட்டு ஓடல. இன்னும் கொஞ்சம் விவரம் விசாரிக்க வேண்டியிருக்கு வரேன்..."

அவன் சென்ற பிறகு, அவளுக்கு கையகல இருளை விரட்டியடித்த ஒளித்திரியும் அணைந்துவிட்டாற்போல இருக்கிறது.

பராங்குசத்தின் அசாத்திய வாதனைகளால் மட்டும் அவன் காயப்பட்டிருக்கவில்லை.

சங்கரி விசயத்திலும் காயப்பட்டிருக்கிறான்.

'அடியாள் சங்கரி' என்னை உடனே வந்து ஏற்றுக் கொள்ளவேண்டும்; பாதுகாவலில்லை...

அப்படி என்றால், இவன் அவளைத் திருமணம் செய்து கொண்டானா? வரதட்சணைக்கோ எதற்கோ அவளை இம்சைப்படுத்துபவன் இல்லை. இவனைச் சேர்ந்த தாயும் அப்படிப்பட்டவள் இல்லை... நினைத்துப் பார்க்கிறாள். சங்கரியின் கழுத்தில் தாலிச்சரடு இருந்ததாகத் தெரிய வில்லை. ஒரு சிறு மண்பவழ மாலை மட்டுமே தெரியும். கழுத்து இறங்காத ரவிக்கை; விலகாத மாறாப்புச்சேலை. தலைப்பு, தொங்காது. இழுத்து மடி உடுத்தி இருப்பாள்...

அவன் மறுநாள்தான் அவளை ஊசிபோட, வந்தழைத்துச் செல்வதாகக் கூறி இருக்கிறான்.

ஆனால், ஒருகால் வருவானோ என்று வாசலிலேயே நின்று பார்க்கிறாள்.

ஓடுகள் எடுத்த பிறகு அந்த வீடு இடிக்கப்படுகிறது.

குழந்தைவேலு வருகிறான்.

நடையில் சோர்வு. எப்போதும் போல் சிரிப்பு இல்லை; பொங்கி வரும் பெருமிதம் இல்லை. வந்து வராந்தா திண்ணையோரம் குந்துகிறான்.

"ஏம்பா, சோர்வா இருக்கிற? நீ இப்படி இருந்து நா பார்க்கலியே?"

"தல நோவுதும்மா. டீ வாங்கிக் குடிச்ச. மருந்து கடக்காரரு ஒரு மாத்திரை குடுத்தாரு. கேக்கல..."

"ஏம்பா...? உங்களப் பாத்தாலே இருக்கிற துக்கம் பறந்து போகும்? பனி வெயிலோ?...."

"இன்னாவா? வூட்லே ஆரும் இல்ல. மன்சே செரியில்லீங்க."

"ஏ, உங்க சம்சாரம் இல்லியா?"

"அவ மவன் வூட்டோடு போயி குந்திகினா..."

"ஓ, மகனுக்குக் கலியாணம் ஆயிட்டுதா?"

"ஒரு புள்ளயும் கீது!"

"மகன் வேலையாயிருக்கிறாரா?"

"கீறாரு. இன்சினிரு வேல....."

"அப்ப சந்தோச சமாசாரம்தான். நீங்க எம்புட்டுக் கஷ்டப்பட்டு, பொண்ணு புள்ளயப் படிக்க வச்சி ஆளாக்கி நல்ல நெலமைக்குக் கொண்டாந்திருக்கிய? பொண்ணு பெரி...ய ஆஸ்பத்திரில வேல பாக்குது, அப்பாவுக்கு ஒடம்பு சுகமில்லன்னா, பாக்காதா?"

அவன் பேசவில்லை. சிறிது நேரம் மௌனம்.

"அம்மா, உங்களக் கும்புடுட்டுக்கிற. நாங்கூட எத்தினியோ தபா நெனச்சிட்டுகிற. இந்தம்மா, அமைச்சர் புள்ளிய வுட்டு, இப்டீ வந்து குந்தினுகிதேன்னு. பொண்ணாவுது, புள்ளியாவுது!"

இவளுக்கு ஒன்றும் தோன்றவில்லை.

''உங்கிட்ட சொல்றதுக்கிண்ணாம்மா; சருக்கார் ஆசுபத்திரி வேல வந்திச்சி. எனக்கு ஒரு நோவுன்னா, போயி வயித்தியம் பாத்துக்கலாம்... இப்ப... அந்த ஆசுபத்திரி வாசலுக்கே போவுறதுக்கில்ல...''

“வாரம் ஒரு தபா உங்கள வந்து பாக்குறதில்ல?”

“அதும் பேச்ச வுடும்மா. நா நென்ச்சாப்புல அது இல்ல. போன வாரம் வந்திச்சி. நா, கல்யாணம் கட்டிக்கிறேன்னு சொல்லிச்சி. நா ஒண்ணும் பேசல. அந்தப்பய இன்னா செஞ்சான்? படிக்கிறப்பவே, லவ்வுன்னு ஆயி அப்பனுக்குத் தெரியாமயே கட்டிக்கிட்டான். பொண்ணுகூட பெரி...வூடு புருசன் பொஞ்சாதி ரெண்டு பேரும் வேலைக்குப் போவணும். அப்ப வந்து ஆயியக்கூப்புடுறான். இவ, மண்ணத்தட்டிட்டுப் போறா... தனி வூடுதான வச்சிகிறாங்க? அப்பா, நீங்க வாங்கன்னு கூப்புடல. போம்மா...”

குறையே சொல்லாத மனிதன். தன் மக்கள் கடைத்தேற கூழையாகி எங்கெங்கோ கவடு தெரியாமல் புகுந்து புறப் பட்டவன். அவனுக்கும் தன்மான உணர்வு, காயப் பட்டிருக்கிறது.

“ஆரோ ஒரு பெரி... டாக்டராம். வயசு அம்பதாவுதாம். இது.... தேவையாம்மா? எங்கூரு பையனே ஒருத்தன் மருந்து கடை வச்சிகிறான், கன்டோன்மென்ட் பக்கம். ‘மாமா, எப்டீகிறே’ன்னு விசாரிப்பன். இது எப்பவானும் வந்து கண்டா, கேலி பேசுவா. ஒரு அஞ்சு சவர அப்டி இப்டியா சேத்து வச்சிகிறே. நெல்ல படியா ஒரு கலியாணம் கட்டி வச்சி, கெடக்கலான்னு நெனச்சது கெனாவாப்பூட்டுது.”

“நீங்க கலியாணத்துக்கே போவலியா?”

“நா புள்ளவூட்ல போயி, என் சம்சாரம் கையில அத்தக் குடுத்தே... ஒரு சவரன் மோதிரம், மூணுசவரன் செயின். ஒரு சவரன் காதுக்குத் தொங்கட்டாணும், பூமாதிரி

தோடும்... எனக்குத் தெரிஞ்ச சேட்டு கடயிலதா சீட்டுப் போட்டு வாங்கின. புள்ள கலியாணம் போவல. பேரப் புள்ளிக்குக் காது குத்து வைப்பாங்கன்னு நெனச்சே. ஒருநா பய்ய காருல வந்தா. புள்ள பாத்துக்கணும். தனி வூடு வச்சிகிறேன்னு இட்டுகினு போனா.”

“நீங்க போகலியா?”

“ஒரு வாட்டி போன. நம்ம புரவலர் அய்யா வூட்டுக்குக் கூடதா போவ. அங்க இன்னான்னாலும் கச்சின்னு ஒரு மருவாதி உண்டு. ஓடனே ஃபோன் போட்டு சீட்டு வாங்கிக் குடுத்தாங்க... அங்க மதிக்கலன்னாக்கூட, அட போன்னு வுட்டுடல... என் சம்சாரம்கிறாளே, அவக்கு ஆருமில்ல. எங்க சொந்த ஊரு, திருச்சி பக்கம், சிமிட்டி ஃபாக்டரிக்குப் பக்கம். மானம் பாத்த சீம. சிமிட்டி பாட்டரி கட்டுறப்ப அங்க வேல செய்யிற. பங்காளியோட சண்ட போட்டுட்டு அடிச்சிட்டே. போல்சில சொல்லிடுவான்னு ஓடியாந்தே. இங்க அப்ப லீக்கோ கரி ஏசண்டு ஒருத்தர் இருந்தாரு. அவுரிட்ட மூட்ட செமப்பே. அப்படி உருண்டு வந்த மண்ணாங்கட்டி நானு. மூட்ட செமக்கிற பயலுவல்லாம் குடிப்பானுவ. கண்ட பொம்புள சாவாசமும் வச்சிப்பானுவ. நா... இத இது போல, இப்ப ஏ.ஜி. ஆசுபத்திரி கிதே, அதுக்குப் பின்னால, ஏசன்டு அய்யா வூடு. நாயுடு... ராமம்போட்டுட்டு செழுப்பாருப்பாரு... பீடி சிகரெட்டு ஒண்ணும் தொட மாட்டே... காலம பெரி...கெணறு. அதுல தண்ணி எறச்சிக் குளிச்சிப்பேன். வாரத்தில ரெண்டு வாட்டி, சினிமாக்குப் போவ. எம்.ஜி.ஆர். படம்னா, மொத்தல் போவ... கலியாணம் காச்சின்னு நெனக்கல. அப்ப, இவ கலியாணங்கட்டி புருசன் செத்திட்டான். ஆருமில்லாம தா இருந்தா. அப்ப, ரயில் பாலம் புதிசா கட்டுறாங்க. எல்லாப் பொம்புளக கூடவும் போவா வருவா. நா அம்பது கிலோ மூட்டையச் செமந்து வண்டில வைப்பேன். குடோனிலேந்து வாரப்ப, பாப்பா ஒரு நா ராத்திரி பொம்புளகளோடு சினிமா போயிகி நானும் அடுத்தாவுல குந்திகிறே. எவனோ இவகிட்ட ஂ

பண்ணிகிறான். அயுதுகினே வெளியே போயிட்டா. அப்பால, மக்யா நா போயி, நாஞ்சொன்ன. உன்னிய கல்யாணம் பண்ணிகிறே சம்மதமான்னே.

“நாயுடு சாருக்கு ரொம்ப சந்தோசம். “மண்ணாங்கட்டி, நீதா நல்ல மனிசன். நீ வெறும் மண்ணில்ல. தங்கக் கட்டி!”ன்னு சொல்லி, அவுருதா இருநூறு ரூவா செலவு செஞ்சி, திருநீர்மலைக்கு இட்டுப் போயி கட்டி வச்சாரு. அவ, அவங்க வீட்ல வேல செஞ்சா. நல்ல மனிசன். லீக்கோ கரியுமில்ல. அவுரு, அந்தம்மால்லாம் பூட்டாங்க. வூட்டையும் இடிச்சிட்டாங்க...”

“சுவரோடோனும் சொல்லி அழு” என்று மனச் சுமையைக் கொட்டுகிறானோ?

“அவ இப்ப, புருசன் பெரிசில்ல, வசதியாகிற மகம் வூடுதா பெர்சுன்கிறா. மருமகப் பொண்ணு டக்குபுக்குனு வூட்டுக்குள்ளாறவே ஷூ போட்டுகினு தஸ்ஸூபுஸ்ஸூ இங்கிலீசில பேசுறா. ‘செவுந்தி, உனுகு இது தேவயா? யார் யாரோ, எசமானுங்க, வூட்ல, சம்பளத்துக்கு வேல செஞ்சம். அல்லாருமே நன்னி விசுவாசமா கீறாங்க. ஆனா, பெத்த வங்கள வேலக்காரங்கன்னு நெனக்கிற எசமானுவ தேவயா? வா, போவலாம்’ன. அட, போய்யா, நம்ம புள்ளிங்கதான். எனக்கு ஒண்ணும் கொறயில்லன்னிட்டா. பெத்த புள்ளிங் களே நம்ம மதிக்கல. பேரப்புள்ளிங்களா மதிக்கப்போவுது?... சரி, வாரம்மா... உங்கிட்டப் பேசுன. தலவலி கொறஞ்சா போல கீது... வாரம்மா...”

“ஏய்யா, கௌம்பிட்டீங்க? அப்ப தனியே சமையல் பண்ணி சாப்பிடுறீங்களா?”

அவன் திரும்பிப் பார்க்கிறான். “இல்ல, நானும் தனியாதா இருக்கிற. அட, வயிசான காலத்துல, ஒரு பிடி சோறு, தண்ணி நான் குடுக்கமாட்டனா? ஒரு கஞ்சி, கசாயம் எதுன்னாலும்...” அந்தச் சிரிப்பு எட்டிப் பார்க்கிறது.

கையெடுத்துக் கும்பிடுகிறான். "ஒங்க நெல்ல மன்சு புரியிது. என்னிக்காலும் வுயுந்து போனா, வாரன், வார பெரி...ம்மா?" என்று செல்கிறான்.

பொய்யும் களவும் வஞ்சகமும், கஞ்சிக்கில்லாத வறுமையிலும் உடலுழைப்பிலும் பிறக்கவில்லை.

உலகில், இன்னமும் பரிசுத்தங்களும் தன்மான உணர்வுகளும், நேர்மைகளும் இருக்கின்றன. காந்திஜியின் சத்திய வாழ்வைப்போலவே இந்த மண்ணாங்கட்டியின் வாழ்வும் சத்தியமானதுதான். இந்த சத்திய அப்பனின் பரம்பரை, பொய்ம்மைகளால் கவரப்பட்டு அந்த மாயையிலேயே முழுகுகிறது. ராதாம்மாவின் பையன் எப்படி இருப்பான்?

.....

அன்றும் மறுநாள் காலையிலும் சுப்பய்யா வரவில்லை.

ஆஸ்பத்திரிக்குக் கூட்டிப்போக நிச்சயம் வருவான் என்று நம்பியதும் நடக்கவில்லை.

மாலை ஐந்து மணிக்குத் தன் ஜோல்னாப்பையுடன் வருகிறான்.

"வாப்பா, நேத்திலிருந்தே எதிர்பார்த்திட்டிருந்தேன். ஆசுபத்திரிக்கு ஊசி போட கூட்டிட்டுப் போறேன்னு சொன்ன நெனப்பு..."

"....அடடா... மறந்துபோயிட்ட. இப்ப கௌம்புங்க போயி ஊசி போட்டுட்டு வந்திடலாம்?"

"அட... அதெல்லாம் வாணாம்... நீ இப்ப உக்காரு. ஒரு டீ போட்டாந்து குடுக்கட்டுமா?"

"அதெல்லாமும் வச்சிருக்கீங்களா?..."

"நான் சாப்பிடுறதில்லன்னாலும் வச்சிருப்பேன். யாருன்னாலும் வந்தா கெடக்கட்டும்னு. ஒரு தூள் பாக்கெட்..."

"அதெல்லாம் வாணாம். அப்ப உங்களுக்கு இப்ப ஆசுபத்திரிக்குப் போக வாணாமா?"

"எனக்கு ஒண்ணும் ஆகாது. ஒரு ஊசி போட்டாச்சி, போதும். அம்பாள் குங்குமமே போதுன்னே, கேக்கல. சரி, நீங்க எங்க போயி என்ன விசாரிச்சீங்க?..."

"எல்லாம் விசாரிச்சேன்... நான் பாவி, பாவி, மன்னிக்க முடியாத பாவி!" என்று தலையில் அடித்துக் கொண்டு முகத்தை மூடிக் கொண்டு விம்முகிறான்.

பிரும்மசரியம். அது ஒழுக்கம். என்ன ஒழுக்கம்?

"நான் எங்கே போய் இந்த மகாபாவத்துக்குக் கழுவாய் தேடுவேன்? உயர்குன்றில் தீபமாக என்னை நினைத்து இறுமாந்திருந்தேன். குழியில் விழுந்திருக்கிறேன். அந்தத் தீபம் பெருந்தீயாய் என்னைச் சூழ்ந்து கருக்குகிறது. எங்கே போய் இறக்கிவைப்பேன்? காவிப்பட்டு, மஞ்சள்பட்டு, ஸ்படிகம், உருத்திராட்சம், திருநீறு குங்குமம், சந்தனம் எல்லாமே கறை பிடித்துப்போன, சீழ்பிடித்துப்போன சமூக அடையாளங் களாய்விட்டது தாயே, இதைக் கீறி யாரே வைத்தியம் செய்யப் போகிறார்கள்? தீவிரவாதிகளா? வெடி குண்டுக் காரர்களா?...

"கடைசி காலத்தில் பாபுஜியிடம், அமெரிக்கப் பத்திரி கைக்கு ஃபோட்டோ எடுக்கும் பெண் ஒருத்தி வந்து கேட்டாளாம். அணுகுண்டு வந்துவிட்டது; உங்கள் அஹிம்சை நெறி தாக்குப் பிடிக்குமா என்றாளாம். உண்டு — அணுகுண்டைப் போட வருபவன், கடைசி நிமிடத்தில் மனம் மாறிவிட முடியும. அணுகுண்டைவிட அஹிம்சை சக்தி வாய்ந்தது என்றாராம். அன்று மாலையே, அவரைச் சுட்டுப் பொசுக்கிவிட்டோம்..."

முதல் நாள் மண்ணாங்கட்டியாகிய குழந்தைவேலு, காட்டிய சோகமுகத்துக்கும் இதற்கும் வேறுபாடு இல்லை என்று அவளுக்குத் தோன்றுகிறது.

"அம்மா, சங்கரியைத் துடிதுடிக்க வதைத்து அழித்தவன் நான், நான்தான். பாவி, ஆண் என்ற கருவம், இறுமாப்பு. அகங்காரம். சாந்தி, சத்தியம், அஹிம்சை, பிரம்மச்சாரியம் எல்லாமே ஆண் அகங்காரங்கள்... இவனுக்குத்தான் பிரம்ம சாரியமா? அவளுக்கும் உண்டு. ஆனால், இந்த ஆண் வருக்கம் அவளை விடுவதில்லை. அபலையாக என்னிடம் புகலிடம் கேட்டாள். ஒரு பெண்ணாகப் பிறந்த குற்றத்துக் காகவே, .... ஐயோ, ஐயோ" என்று அறைந்து கொள்கிறான்.

அவள் அவன் கையைப் பற்றி இதம் செய்கிறாள். நெற்றிப் பொட்டைத் தடவுகிறாள்.

"தம்பி, நீ தெரிந்து செய்யல. வருத்தப்படாதே. எதுவும் நம் இச்சையில் நடக்கவில்லை. விதியின் கை என்று நீதானே சொன்னாய்? ஆறுதல் கொள்..."

## 24

குருகுலத்தில் இருந்து சென்ற சுப்பய்யா, புனேயில் ஒரு வித்யாலயத்தில் இந்தி கற்பிக்கச் சேர்ந்தான். தமிழர் அதிகமாக வசிக்கும் பேட்டை ஒன்றில், ஒரு வீட்டு மாடி யறையில் குடியிருந்தான். அவர்கள் தாம் அந்தப் பகுதிக்குச் சொந்தக்காரர். கீழ்த்தளத்தில்தான் சங்கரியின் அண்ணன் குடும்பம் இருந்தது. வாயில்புறம் கடப்பைக் கல் வரந்தாவில் மரத்தாலான மாடிப்படி. வராந்தாவில் இருந்து நேராகத் தெருவுக்குக் குழந்தைகள் போக முடியாதபடி, கம்பியழிப் பாதுகாப்பும் கதவும் இருந்தன. அந்த வீட்டுப் பின்புறம் செல்ல, பின்புறம் முற்றத்துக்குக் கொண்டு செல்லும் படி களும் இருந்தன. அது மராத்திய தம்பதியின் பகுதியில் இருந்தது. முற்றத்தில் தகரக்குடிசைகளில் சில எளிய குடும்பங்கள் இருந்தன. இடையில் பெரிய பொதுத் தண்ணீர்த் தொட்டி; குளிக்க, துவைக்க வசதிகள். சுப்பய்யா அந்தப்

பகுதியில் இறங்கி தன் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வான். மேல் தளத்தில் பொதுவான கழிப்பறை வசதி இருந்தது. கீழ்த்தள முற்றத்திலும் அந்த வசதி இருந்தது. சங்கரியின் குடும்பம் குடியிருந்த பகுதி முன் கூடம், ஒரு படுக்கையறை, சமையல், சாப்பாட்டுக்கான கூடம், குளியல், கழிப்பறை வசதிகள் கொண்டிருந்தன. அவர்கள் முற்றத் துக்கு வரவேண்டாம், என்றாலும் மேல் தளத்திலும், கீழ்த் தளத்திலும் வேலை செய்த ஹீராபாய், அவர்கள் வீட்டுத் துணிகளை முற்றத்தில் துவைத்து உள் வராந்தாவில் உலர்த்து வாள். ஏற்கெனவே ஒரு சூடு விழுந்த உணர்வில் இருந்த சுப்பய்யா, அக்கம் பக்கம் தமிழர் குடும்பங்களில் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளக் கூடக் கூசியிருந்தான். அவன் கற்பித்த வித்யாலயத்தில் மராத்தி மொழி பிரதானமாக இருந்தாலும் அந்த மொழியும் அவனுக்கு நன்கு தெரிந்தி ருந்தாலும், அவனுக்கு அந்தப் பிரதேசமும் சமூகமும் அந்நியப் பட்டிருக்கவில்லை. அவன் கற்பித்த வித்யாலயத்தில் இருபாலரும் படித்தார்கள்.

அவன் அன்றாட நியமங்களுக்கப்பால், எந்தத் திசையிலும் கருத்தைச் செலுத்தியிருக்கவில்லை. தானே தன் உணவை அநேகமாகத் தயாரித்துக் கொள்வான். ரொட்டி, காய், பருப்பு... ஸ்டவ்வில் இதைத் தயாரித்துச் சாப்பிட்டு விட்டுப் போவான். அங்கே காலை, ஏழரைக்கு ஒரு பகுதி யும், பிற்பகல் இரண்டு மணிக்கு ஒரு பகுதியும்— இரண்டு அடுக்குகளாகப் பள்ளி வகுப்புகள் நடைபெறும். மேல் தளத்து தம்பதி அடிக்கடி கதவைப் பூட்டிக் கொண்டு மாலை வேளைகளில், பஜன், பூஜா என்று போய் விடுவார்கள். அவர்களுடைய மகள் ஒருத்தி கோலாப்பூரில் இருந்தாள். இரண்டு மகன்களும் வெளிநாட்டில் இருந்தனர். இராணுவம் தொடர்பான கணக்குத் தணிக்கை அலுவலராக வேலை பார்த்து அவர் ஓய்வு பெற்றவர். அந்த அம்மை யாரும் வீட்டிலிருந்தபடி படித்து மராத்தியில் எம்.ஏ. பட்டம் பெற்றவர். அவர்கள் அவன் மீது அளவிறந்த அன்பு காட்டி

னார்கள். 'கீர்' 'கடி' என்று ஒற்றையாக இருக்கும் அவனுக்கு அந்த அம்மை சிறு கிண்ணத்தில் ஏதேனும் கொண்டு வந்து கொடுப்பாள். அவர்கள் கோலாப்பூருக்குப் போகும்போது, வாயில் முன் கதவுச்சாவி ஒன்றை அவனிடம் கொடுத்து வைப்பார்கள்.

அவனுக்குத் தெரியும் போது, சங்கரியின் அண்ணனும் அண்ணியும் வேலைக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். மூன்று வயசில் ஒரு பெண் குழந்தை. இன்னும் கொஞ்சம் பெரியவனாக ஒரு பையன்; கைக்குழந்தை என்று மூன்று குழந்தைகள் இருந்தார்கள். அண்ணன் கறுப்பாக, தாட்டி யாக இருப்பான். மனைவியும் பருமன்தான். காலையில் எட்டரை மணிக்கு அவர்கள் பைக்கில் வேலைக்குச் செல்வார்கள். கைக்குழந்தை சங்கரியின் இடுப்பில் இருந்து அழும். பிறகு டாடா சொல்லும்.

இதெல்லாம் செவிவழிக்காட்சிகள் தாம். முன் கூடத்தில் ஒரு கட்டிலில் பெரியம்மா, படுத்திருப்பார். நலிந்த குரலில் அவள், "சங்கரி, புள்ள தொட்டில்ல என்ன பண்ணி ருக்கான் பாரம்மா, முருகா, என்னிய இப்படிச் சோதிக்கிறியே?" என்று புலம்புவது செவிகளில் விழும்.

அவனையும் அறியாமல், அந்தக் குடும்பத்தில் உள்ள சங்கரி யார் என்று தெரிந்து கொள்ளும் ஈர்ப்பு... குடியேறியது என்று இப்போது தோன்றுகிறது.

அந்த மூன்று வயதுக் குழந்தை அருகேயுள்ள ஒரு பாலபவனத்துக்குப் போய்க் கொண்டிருந்தது. ஐந்தாறு வீடுகள் தள்ளி உள்ள அந்த மழலைப் பள்ளிக்குக் காலையில் அம்மாவோ, அப்பாவோ கொண்டு விடுவாரோ, அல்லது ஆயா யாரேனும் இருந்தார்களோ? ஒருநாள் மதியம், சங்கரி இடுப்பில் கைக்குழந்தையுடன் இந்தக் குழந்தையைப் பள்ளி யில் இருந்து அழைத்து வந்ததை அவன் பார்த்தான். அவள் தலை குனிந்து நடந்தாள்.

அந்தக் குழந்தை 'பாட்டி' என்றழைத்துக் கொண்டு மேலே வரும். குழந்தை பெயர் பவானி. ''பவானி காய்கர்தோ?'' என்பார்.

தாத்தா "மீ ஜேவ்லா" என்று அது மராத்தியில் பதில் சொல்லும். தன் கவனம் சிதறக்கூடாதென்று அவன் கதவை ஒருக்களித்துக் கொள்வான்.

மாலையில் சில தமிழ் மாணவர்கள் அவனிடம் வந்து இந்தி கற்றுக் கொண்டார்கள். எல்லோரும் பையன்கள். ஒரு தடவை அந்தக் குழந்தை அப்போது அவன் அறைக்குள் வந்தது. "பாட்டி இல்லே?"

"இல்ல. அவங்கல்லாம் ஊருக்குப் போயிருக்காங்க. நீ இப்ப சமர்த்தா, நல்ல பிள்ளையாக் கீழே போயிடம்மா, கிளாஸ் நடக்குதில்ல?" என்று அனுப்பி வைத்தான்.

அப்போது குளிர்காலம். விடுப்பு நாட்கள். வீட்டுக்காரர்கள் ஊரிலில்லை. அவன் அறையை ஒட்டடை அடித்துச் சுத்தம் செய்தான். போர்வை தலையணை உரை, சட்டை எல்லாவற்றையும் கீழே கொண்டு சென்று சோப்புப் போட்டுத் துவைத்துப் பிழிந்து விட்டு நீராடினான். சில்லென்று நீராடிவிட்டு வருகையில் கீழ்த்தளத்து சமைய லறையில் இருந்து குழந்தை அலறும் ஒலி கேட்டது. 'ஒண்ணு மில்ல... இதபாரம்மா...' என்ற சமாதானங்கள் எடுபடவில்லை. தாளாத நோவில், குழந்தை துடிக்கிறது; தவிக்கிறது. அவன் மேலே துணியைக் கொண்டு செல்கையில் பின் வாயில் கதவு திறந்தது. 'ஹீரா...? ஹீரா...?' யாருமில்லை. அவள் அலறிப் புழுவாய்த் துடிக்கும் குழந்தையை எடுத்துக் கொண்டு முன்புறம் போகையில், தொட்டில் குழந்தையும் சேர்ந்து அழுதது.

"குக்கரை இறக்கிட்டு, பருப்பை எடுத்திட்டிருந்தேம்மா, சீலயப்புடிச்சி இழுத்து வம்பு பண்ணினா. அண்ணி அவளுக்கு வயிறு மந்தமா இருக்கு, உடம்பு சுடுது,

ரசஞ்சோறு தவுர எதும் குடுக்காதன்னு சொல்லிட்டுப் போயிருக்காங்க. காலம எந்திரிச்சி பேடா வோணும் சேவு வோணும்னு தொந்தரவு பண்ணுனா. ரெண்டு கிண்ணத்துல போட்டுக் குடுத்தே. திங்கியவுமில்ல. வாரி எறச்சிருக்கா... இப்ப கைப்பருப்பு இடுக்கிலேந்து நழுவி, இவகையில கொட்டிடிச்சி... தேங்காண்ணை ஒறஞ்சி கெடக்கு... என்ன பண்ணுவே...'' என்று சங்கரி பிரலாபிக்கும் குரலில் விசிறிக் கொண்டிருந்தாள்.

"இப்படிப் புள்ளிகள வுட்டுப்புட்டு பெரிச மட்டும் கூட்டிட்டு இவுங்க போயிடறாங்க... சங்கரி, தோசமாவு இருக்கில்ல, பூசு... வாடிகண்ணு, பாட்டி விசரறேன்...''

அந்த நேரத்தில்தான் அவன் சென்றான்.

"என்னம்மா? என்ன ஆச்சி?...''

"அத்தே... அத்த... பருப்பக் கொட்டிட்டா... அடுப்பி லேந்து கொட்டிட்டா...''

"அடி செருப்பால. கேக்குறவங்க என்ன நெனப்பாங்க? அம்மயோட துக்கிரித்தனம் அப்பிடியே வருது?'' என்று பாட்டி பாய்ந்தாள்.

"அம்மா நீ எதுக்கு இப்பிடி எல்லாம் பேசுற? புள்ளக்கு வலி எரிச்சல்...''

தோசை மாவை எடுத்து வந்து அவள் போட முனைந்த போது, அவன் பாட்டியின் பக்கத்தில் உட்கார்ந்திருந்த குழந்தை பவானியைப் பார்த்தான்.

புறங்கை, பிஞ்சு விரல்கள், மணிக்கட்டுப் பின்புறம், முழங்கைக் கீழ்ப்பகுதிகளெல்லாம் சிவந்து ரணம் பட்டிருந்தது. "தோசை மாவெல்லாம் வேணாம். சில் தண்ணி கொண்டாங்க... இருங்க, ஐஸ் வாங்கிட்டுவரேன்!'' என்று அவன் எதிர்ப்பக்கம் இருந்த கடையில் இருந்து ஐஸ் துண்டுகள் வாங்கி வந்து தடவினான். பிறகு அவனே டாக்டரிடம் தூக்கிச் சென்றான்.

அவர் பார்த்துவிட்டு "நல்லவேளை, குளிர்ந்த ஐஸ் வைத்தீர்கள்" என்று சொல்லி, களிம்பு தடவி, பாதுகாப்பாக ஆங்காங்கு மருந்துத்துணி வைத்து பிளாஸ்திரி போட்டார். கையில் ஒரு சாக்லேட் கொடுத்தார்.

"யார் பெத்த புள்ளயோ? சமயத்துக்கு வந்து உதவி பண்ணின. இல்லேன்னா, என்ன செய்யும் அது?... அவுங்க ரெண்டுபேரும் பெரி புள்ளயக் கூட்டிட்டு ஹாயா லீவுன்னு பம்பாய் போயிட்டாங்க. நாளக்கி மதியம் வராங்க. தம்பி சமயத்துல உதவின...." என்று நன்றி சொன்னாள் பெரியவள்.

இப்படித்தான் பரிசயம் தொடங்கியது. மறுநாள் பம்பாயில் இருந்து வந்த மகன், காத்திருந்து, இவன் வாசகசாலைக்குப் போகும் நேரத்தில் வாயிலில் மகளுடன் நின்றிருந்தான்.

"ரொம்ப தேங்க்ஸ் ஸார்! நீங்க தமிழ்க்காரர்னு இப்பதாந் தெரியும். அம்மா சொன்னாங்க. ரொம்ப ரொம்ப தேங்க்ஸ் ஸார். ரோட்டில விழுந்தாலே கவனிக்காம போற காலம் இது... டாக்டருக்கு என்ன ஆச்சு ஸார்?"

"நோநோ... அதெல்லாம் ஒண்ணுமில்ல. நீங்க ஒண்ணும் குடுக்க வாணாம். பாப்பா, எப்படியிருக்கு?" என்றான்.

"அங்கிளுக்குத் தேங்க்ஸ் சொன்னியா?... நீங்க சாக்லேட் வாங்கிக் குடுத்தீங்களாமே? ரொம்ப சேட்ட ஸார்."

அவன் உள்ளே அழைத்ததை மென்மையாக மறுத்து விட்டு வெளியேறினான்.

பொள்ளிக் கொப்புளம் கிளம்பாமல் சூட்டுக்காயம் ஆறிவிட்டது. அதிகம் சிவப்பில்லை என்றாலும் இளந் தோலில் தேங்காயெண்ணெய் பளபளக்க குழந்தை வருவாள். இதற்காகவே அவன் மிட்டாய் வாங்கி வைத்தி ருப்பான்; கொடுப்பான்.

பத்து நாட்கள் சென்ற பின் ஒரு நாள், வெயில் படும் படி, பெரியவள் வாயிலுக்கு நேராகக் காலில் எண்ணெய்

தடவிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். அவன் ஏழரைக்குச் சென்றுவிட்டு, பதினொன்றரை இடைவேளையில் வந்திருந்தான். காலை உணவு எதுவும் தயாரித்திருக்கவில்லை. சில நாட்களில் நேரமாகிவிவிட்டால், இந்த நேரத்தில் ஏதேனும் 'கிச்சடி' தயாரித்து உண்டுவிட்டு இரண்டு மணிக்குப் போவான்.

அவன் வரும்போது, ஸ்டவுக்கு எண்ணெய் வாங்கி வருவதைப் பார்த்து, "தம்பி? என்ன, இப்ப வரீங்க?" என்று கேட்டாள்.

"இல்லீங்க, ஸ்டவ் எண்ணெயாயிட்டுது. அதான் வாங்கிட்டு வந்தேன்..."

"அடாடா, நீங்க ஏன் சிரமப்படுறீங்க?... எங்க வீட்டுல எண்ணெய் இருக்கு. இங்க காஸ் அடுப்பானதால, எண்ணெய் உபயோகமில்ல. ஹீராகிட்ட சொன்னா, வாங்கிட்டு வாரா, கார்டுதான். ஆமாந் தம்பி, நா கேக்குறேனேன்னு தப்பா நினைச்சிக்காதீங்க, தனியா சமச்சி சாப்பிடுறீங்க...? வீட்ல... யாரும் இல்லியா?... பொறந்த வூட்டுக்குப் போயிருக்காங்களா?... இல்லாட்டி இப்பதா, புருசன் பொஞ்சாதி ரெண்டு பேரும் வேலை செய்யிறாங்க. ஒரே எடத்துல இருக்க முடியாம..."

"....சே, சே அதெல்லாம் இல்லம்மா. நான் தனி ஆள்..." என்று சொல்லிவிட்டு விடுவிடென்று மேலேறி வந்து விட்டான். இப்படி ஆரம்பித்து அந்தம்மாள் அதிகமாகப் பேச்சுக் கொடுக்கலானாள்.

"தம்பி, செத்த நில்லுங்க..." குழந்தை பவானி ஒரு டப்பியை எடுத்து வந்து கொடுக்கும்.

"இன்னிக்குப் பொங்கல்... உள்ள வாங்க... ஏனிப்படி ஓட்டிக்கிடுமோன்னு போறீங்க?..."

“...அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா” என்றான் அவன். சாரதா !... அம்மா.... மருமகள் வந்தாள். “உள்ள வாங்க ஸார். எங்களுக்கு டயம் இல்லாம போயிடுது. வாரத்தில ஒரு நாதா லீவு.... அம்மா சொல்லிட்டே இருக்காங்க. பையனக் கூட்டிட்டு அவுங்க ‘டென்டிஸ்ட்’ கிட்டப் போனாங்க. எனக்கு வாஷிங், அது இதுன்னு வேலை. சங்கரி மட்டும் இல்லன்னா இந்தக் குடும்பம் நாறிப்போகும்.’’ மாமியாருக்காகத்தான் அவள் அழைத்திருக்கிறாள்.

மேலே சாவித்திரி அம்மாவும் சுக்டன்கர் பாயும் ஊரிலிருந்து வந்தார்கள். அவர்களிடம் சங்கரியின் தாயார் எல்லாம் பேசியிருக்கிறாள். அவர்கள் இருவரும் அவனிடம் வந்து பேசினார்கள்.

‘சங்கரிக்கு வயதுக்கு வந்த நேர சாதகம் சரியில்லையாம். இதனால் பெண் கேட்டு வரும் இடங்களில் வரன் அமையவில்லை. சங்கரியின் தங்கைக்கும் கூடக் கல்யாணமாகிவிட்டது. சுக்டன்கரும், சங்கரியின் அப்பாவும் ஒரே தணிக்கைத் துறையில் வேலை செய்தவர்களாம். இந்த வீட்டுக்கு அவர்கள் வந்த போது சங்கரிக்குப் பதினைந்து வயசிருக்குமாம். அவர் வெவ்வேறு இடங்களுக்கு மாற்றலாகிப் போன போதெல்லாம் குடும்பத்தைத் தூக்க முடியாமல், சங்கரியையும் அண்ணன்களையும் வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். அவர் ஓய்வு பெற்று ஒரு வருசம் கூட இருக்கவில்லை. இங்கே இருக்கும் அண்ணன் இரண்டாவது அண்ணன். மூத்தவன் டெல்லியில்—ஓர் அக்கா—தங்கை. தங்கைக்கு இங்கே வந்து தான் கல்யாணம் செய்தார். அவர் இறந்து போன மறுவருடமே, அந்தம்மா ‘ஸ்ட்ரோக்’ வந்து படுத்துவிட்டார். கை கால் அசைக்க முடியாமல் இருந்தது. அவன் பார்த்தபோது — இப்போது தேவலையாக இருக்குது.

சங்கரிக்குக் கல்யாணம் என்று யார் மூலமாக வேனும் வரன் வந்தாலும், அண்ணனும் அண்ணியுமே தடுத்து

விடுவதாக, அவள் அம்மா சொல்லி வருந்தினார்களாம். ஏதோ, நகை, பாத்திரம் என்று சேகரித்து வைத்திருக் கிறாளாம். தான் கண் மூடுமுன் கெட்ட பழக்கம் எதுவும் இல்லாத நல்ல பையனைப் பார்த்து ஒப்புவிக்க வேண்டும் என்று இருக்கிறார்களாம்.

"சுப்பய்யா, சங்கரி ரொம்ப நல்ல பெண். இங்கே வந்து தான் தமிழ் ஸ்கூலில் எஸ்.எஸ்.எல்.ஸி. முடித்தாள். உனக்கும் ஒரு துணை. அவளுக்கும் ஓர் ஆதரவு. மாட்டேன்னு சொல்லாம ஏத்துக்கப்பா...ன்னு சொன்னாங்க."

அவன் கண்களில் நீரருவி வழிகிறது.

சூடுபட்ட குரங்கு போல் அவன் அந்த இடத்தைவிட்டு அடுத்த வாரமே காலி பண்ணிக் கொண்டு வேறு பேட்டைக்குப் போனான். அங்கிருந்து பஸ்ஸில் பள்ளிக் கூடம் வருவான். யார் கண்ணிலும் படக் கூடாது என்ற மாதிரி ஓடிப்போனான்.

ஒருநாள், பஸ்ஸில் சுக்டன்கர் அவனைப் பார்த்து விட்டார்.

"சுப்பய்யா!" என்று கத்திவிட்டு அவன் இறங்கும் இடத்தில் இறங்கினார்.

"என்னப்பா? என்ன ஆச்சு, உனக்கு? எதுக்காக இப்படி ஓடுற?... இப்ப நாங்கல்லாம் கல்யாணம் பண்ணிட்டு குடும்பம்னு சுகமா இருக்கலியா? உனக்கு என்ன பிரச்னை?" என்று கேட்டார். அவன் அறைக்கு வந்தார். ஏதேதோ ஊகங் களைக் கிளப்பி அவனைச் சந்தேகக்கண்ணால் ஆராய்ந்தார்.

"ஓ, அதெல்லாம் இல்ல சார், என்னை மன்னிச்சிடுங்க. கல்யாணம் குடும்பம்னு இல்லாம, ஆசாரிய வினோபா பாவே போல மனித குலத்துக்கு சேவை பண்ணனும்னு..."

அவர் ஆத்திரத்துடன் பல்லைக் கடித்துக் கொண்டு போனார். பிறகு, சுக்டன்கர், மகள் வீட்டுக்குச் சென்ற

இடத்தில் மாரடைப்பு வந்து காலமானார் என்று கேள்விப் பட்டான்.

நன்றி கொன்ற பாவியாக, சாவித்திரியம்மாளைப் பார்க்கக்கூட அவன் போகவில்லை.

மேலும் ஒரு வருசமாயிற்று. ஒருநாள் அநுமான் மந்திர் பக்கம் ஒரு மாணவனுடன் நடந்து கொண்டிருந்தான்.

சங்கரி கையில் காய்கறிப் பையுடன் குறுக்கிட்டாள்.

"மன்னிச்சுக்குங்க..." என்றாள் தலை நிமிராமல்.

"அம்மா இறந்து போயிட்டாங்க. சாவித்திரி அம்மா தான் சொன்னாங்க, உங்களை வீட்டுக்கு வரச் சொன்னாங்க..." என்றாள்.

"ம்... அதுக்குன்னு வழில வந்து மறிக்க வேணாம்..." என்றான். அப்படி ஏன் கடுமை காட்டினான்? பொறிகடலை நடுவே கருக்கென்று கடிபடாமல் ஒன்று இருக்குமே? அப்படி... ஏன்? ஏன் அப்படி வெடுக்கென்று பேசினான்? என்ன காரணம்? பயமா? பயம் அவன் மீதே அவனுக்குப் பயம். ஏனென்று தெரியவில்லை. பயத்தில் எழுந்த வீம்பா, வீம்பில் எழுந்த பயமா? புரியவில்லை.

அந்த வருசமே மராத்வாடா கிளைக்குப் போனான். எதிர்பாரா விதமாக பேஷ்வா பார்க்கில் சாவித்திரி அம்மாவைப் பேரக் குழந்தைகளுடன் பார்த்தான்.

"சுப்பய்யா?... எப்படி இருக்கே?... உனக்குத் தெரியுமா? நீ வருவேன்னு அந்தப் பொண்ணு சங்கரி ரொம்ப எதிர் பார்த்திட்டிருந்தா. இப்ப அவங்களே இத்தனை வருசமா இருந்த வீட்டைக் காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க. புருசன் பெண்சாதி இரண்டு பேருக்கும் டிரான்ஸ்ஃபர் கிடச் சிடிச்சு. டெல்லிக்குப் போயிட்டாங்க..." என்றாள் வருத்தத்துடன்.

சிறிது காலத்துக்குப் பிறகு அவனும் நாக்பூர் வித்யா பீடத்துக்குப் போனான். இத்தனை வருசங்களுக்குப் பிறகு,

புனேயில் ஒரு கருத்தரங்கில் கலந்து கொள்ள வந்தான். பழைய பள்ளித் தலைவர் கங்காதர் சர்மா, "சுப்பய்யா, உனக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு. மூணு நாலு மாசமிருக்கும். வச்சிருக்கிறேன். ஸ்கூல் பக்கம் வா, நாளைக்கு!" என்றார்.

அந்தக் கடிதம் ஏதாக இருக்கும் என்ற யோசனையே அவனுக்கு எழவில்லை. பழைய பள்ளிக்கூடம் பத்து வருசமாகுது, பார்ப்போம் என்றுதான் போனான்.

அந்தக் கடிதம்தான் அவள் பார்த்த கடிதம்.

"அம்மா, நான் வந்து விசாரித்து மணிக்கூண்டு பக்கம் மெஸ் அம்மா சொன்னதும், இங்கே ஸ்கூலுக்குத்தான் வந்து நேராகப் போனேன். தாய்மார், பிள்ளைகளைக் காலையில் பள்ளியில் விட்டுவிட்டுப் போனால், இவள்தான் அந்தக் குழந்தைகளைத் தன் வீட்டுக்கழைத்து வந்து தாயோ தகப்பனோ மாலை, ஆறு அல்லது ஏழு மணிக்கு அழைத்துச் செல்லும் வரை வைத்துக் கொள்வாளாம். பள்ளியில் விசாரி யுங்கள் என்றார்கள். நான் வாட்ச்மேன் தடுத்ததைப் பொருட் படுத்தாமல் உள்ளே போனேன். அந்த ஆபீசில், பட்டுஜிப்பா உருத்திராட்சம் ஸ்படிகம், திருநீறு குங்குமம் என்று உட்கார்ந்திருந்தான். 'சங்கரின்னு இங்க கிரீச் வச்சி ருந்தாங்களாமே'ன்னு வாயெடுத்ததும், அவன் முகம் சிவந்து விட்டது.

"யார்ரா இவங்க? ஏய்யா? எங்கேந்து வரீங்க, சங்கரி, கிங்கரின்னு, கழுத்தப் புடிச்சி வெளியே தள்ளுய்யா, வாட்ச் மேன்! வாட்ச்மேன்! சீய்! ஒரு நடத்தை கெட்ட கழிசடை, அதைத் தேடிட்டு ஆளாளா, இங்க வரானுவ? நானே அவளக் காணமேன்னு சொல்லி, அண்ணன்காரன் யாருன்னு கண்டு தகவல் சொல்லச் சொன்னேன். கேடு கெட்டது ஸ்கூலுக்குக் கெட்ட பேரு. எவங்கூட ஓடினாளோ?... உடம்பு சரியில்லன்னு டாக்டர்ட்ட சொன்னாளாம். எச்.ஐ.வி. இருந்திச்சின்னு சொல்லிகிறாங்க... கருமம்..."

அவன் கழுத்தைப் பிடிக்கப் போயிருப்பான். அதற்குள் வாட்ச்மேன் இவனை வெளியில் கொண்டு வந்து தள்ளி விட்டான்.

"என்னால தாங்க முடியல... தாங்க முடியல. கத்தியால் குத்திச் செய்யும் கொலையைவிட மாபாதகம் இது. இந்தப் பாதகத்தைச் செய்தவன் நான். நான்... அவளுடைய நெருப்புப் புனிதத்துக்குக் குலைத்து அழித்த பின்னும் களங்கம் கற்பிக்கிறாங்களே? எந்த டாக்டர்... எவன்... இவனுகளை சம்ஹாரம் பண்ணனும்..."

கண்கள் சிவந்து வெறிபிடித்த நிலையில் அவன் வெளியே பாய்கையில் நல்ல வேளையாக ரங்கன் எதிரே வருகிறான்.

"இன்ன சாரு?... எதானம் போட்டுட்டாயா?" என்று குடிப்பது போல் சாடை காட்டுகிறான்.

அவனை ஒரு தள்ளுத்தள்ளும் போது, அவள் விரைந்து முன் வாயில் கதவைச் சாத்துகிறாள்.

"சுப்பய்யா, வேண்டாம், போவுதுப்பா, அது அவ விதி.... ஆறுதல் கொள்ளு. ரங்கா, உனக்கு ஒண்ணுமில்ல, நீ போ..." மாடிப்படி அறைக்கதவைத் திறந்து அங்கே அமரச் செய்கிறாள்.

"சுப்பய்யா, இப்படிப் பொங்குவதால தீர்வு இல்ல— லட்சோப லட்சம் பெண்கள், படிக்கிறாங்க வேலைக்குப் போறாங்க. ஆனா, அவுங்களுக்கு வேணுங்கற மனிச மரியாதை கிடைக்கல.... ஆறுதல் கொள்ளப்பா..."

அவன் பேசாமல் உட்கார்ந்திருக்கிறான். கதவை மெள்ளச் சாத்திக் கொண்டு வருகிறாள்.

## 25

**சு**ப்பய்யா வந்து போனது விடியற்காலைக் கனவு போல் நம்பிக்கையளிப்பதாக இருக்கிறது.

"நீங்க இங்க விட்டுப் போகாதீங்க. கையில் பிடிக்க வேண்டியதை முழுகவிட்டுட்டேன். இப்ப ஒரு துரும்புதா இது. இதைப் புடிச்சிட்டுப் போராடணும். பழசெல்லாம் அழுகல். இருங்க. இங்கேயே இருங்க. நான் வருவேன். அய்யாவின் வழி... வரும் இளம்பயிரைத் தேடிட்டுப் போறேன். நம்புங்க..." என்று சொல்லிவிட்டுப் போய் ஒரு மாதத்துக்கு மேலாகிவிட்டது. இவளை ரங்கன் இப்போ தெல்லாம் அதிகமாகக் கண்காணிக்கிறான். லாரியில் செங்கல் வந்து பக்கத்தில் அடுக்குகிறார்கள். தை பிறந்து, மா, புதிய மொட்டுகள் குலுங்க நிற்கிறது. அடிபருத்து வாடிய இலைச்சருகுகளும் பூச்சியும் ஒரு பக்கம் இருந்தாலும், நம்பிக்கை உண்டு என்று பூத்திருக்கிறது. அதைப் பார்த்து விட்டு நம்பிக்கை கொள்கிறாள்.

வங்கிக்குச் சென்று செலவுப் பணம் எடுத்துக் கொண்டு வருகையில், காந்திபிறந்த மாநிலத்தில், பூகம்பம் வந்து குஞ்சு குழந்தை நல்லவன் கெட்டவன் என்று பாராமல் பலி கொண்டது போதாதென்று மதக்கலவரம் பற்றி எரியும் செய்திகளை தொலைக்காட்சி, பத்திரிகைத் தலைப்பு என்று கடை விரிக்கின்றன. வெளியில் வரும் போதுதான், அன்றாட, வண்டி சாவு, தீப்பற்றி எரிதல், குத்து வெட்டு கொலை கொள்ளை எல்லாம் உணர்வில் குத்துகின்றன. இப்போது எல்லாம் கேட்டுப்பழகினாற்போல், மரத்துப் போயிருக்கிறது. முன்பெல்லாம், அங்கே அநீதி இங்கே அக்கிரமம் என்று போராட்டங்கள் பற்றிக் கேள்விப் படுவாள். சர்வோதய அமைப்பைச் சேர்ந்தவர்கள், இவளை அழைத்துக் கொண்டு கோட்டை முன் போராட்டத்தில் கலந்து கொள்ள வைத்தனர். "அணுகுண்டு வேண்டாம்; இன்னொரு சண்டை வேண்டாம். மனிதர் ஒற்றுமையுடன் வாழ்வோம்..." என்றெல் லாம் கோசங்கள் வைத்தனர். யார் யாரோ இவளுக்கு முகமறியாத ஆண்கள், பெண்கள், இளைஞர்கள், வேலை செய்யும் பெண்கள்... ராமலிங்கம்தான் இவளை வந்து கூட்டிச் சென்றார். அந்த ஏழைத்தாயின் மகனுக்கு நியாயம்

வேண்டி அழைத்து வந்த இராமலிங்கம்.... மணிக்கூண்டின் பக்கம் ஒரு கடை மாடியில் இருக்கிறார். அவர்தாம் சுப்பய்யாவுக்குச் செய்தி தெரிவித்தவர். மனைவியும் இறந்து, மகனும் வேற்று மதத்துக்காரியைத் திருமணம் செய்து கொண்டு போனபின் ஒற்றையாக, 'சர்வோதயம்' என்ற இயக்கத்தில் தன்னை ஆட்படுத்திக் கொண்டு இருக்கிறார். அவரைப் பார்க்கப் படி ஏறுகையில், கீழே வரிசையாக இருக்கும் கடைகளில் ஒன்றான 'பேக்கரி'யின் ஆள், "யாரம்மா? மேலே எங்கே போறீங்க?" என்று கேட்கிறான்.

"ராமலிங்கம்னு வழுக்கைத் தலை; உயரமா, முன்ன வங்கில இருந்தாங்க..."

"அவுரு இப்ப இங்க இல்லம்மா. ரூமைக் காலி செய்திட்டுப் போயிட்டாங்க!"

"போன மாசம் பாத்தேனே?"

"ஆமாம்மா, அவுரு சொந்த ஊருக்குப் போயிட்டாரு. இப்ப அந்த ரூமெல்லாம், 'பிரைட்' ஓட்டல்காரரு எடுத்தி ருக்காரு...."

சுப்பய்யா துரும்பு என்றான், துரும்பும் நழுவிவிட்டதா? மனது சோகமாக இருக்கிறது.

திடீரென்று ஏன் போனார்? செய்யாத குற்றத்தைப் போட்டு ஒரு ஏழைப்பையனுக்குக் கடுங்காவல் தண்டனை கொடுத்ததை எதிர்த்துக் கேட்கச் சொன்னாரே, அதற்காக அவரையும் வெருட்டினார்களா? இந்த இடம் வேண்டாம் என்று போய்விட்டாரா?

அவள் மடியில் பணத்துடன் உச்சி வேளை கடந்து விடுவிடென்று வீடு திரும்புகையில், உள்ளே ஆளரவம் கேட்கிறது. வாயில் வராந்தா கம்பிக் கதவு உள் பக்கம் பூட்டியிருக்கிறது. சுற்றிக் கொண்டு அவள் பின்புறம் செல் கிறாள். இரண்டு மூன்று ஆட்கள் வந்திருக்கின்றனர். பெரிய

மாமரத்தின் கிளைகளை வெட்டிச் சாய்த்திருக்கின்றனர். பூவும் இலைகளுமாக ஒட்டக்கழிபட்டு மொட்டையாக நிற்கிறது. ரங்கன் பெரிய கிளையை இழுத்துக் கொண்டிருக்கிறான். அவளுக்குப் பகீரென்கிறது.

பின்பக்கம் செல்லும் போதெல்லாம் சிநேகமாக விசாரிக்கும் மாமரம். அது எத்தனை, காய், கனிகள் கொடுத்திருக்கின்றன? கண்ணமங்கலத்திலிருந்து வந்த சொத்து அது. காய் குடம் குடமாக இருக்கும். பழுத்தால் அப்படி ஒரு இனிப்பு. ஊரிலிருந்து வந்த பழத்தைத் தின்று, கொட்டையை ராதாம்மா குழந்தையாகப் புதைத்துத் துளிர்த்து வளர்ந்து கனி கொடுத்த மரம்.

“ஏம்ப்பா இதை வெட்டுறீங்க? நிறுத்துங்க? ஆயியப்பனை வெட்டுறதுக்குச் சமானம். ஏன் ரங்கா? இப்படி அழிச்சாட்டியம் பண்றே? அது உன்னை என்ன செய்தது?”

“சேர்மன் சார்தான் வெட்ட சொன்னாரு. இது பூச்சி புடிச்சிப் போயி நிக்கிது. வெறும் குப்பை. கிட்ட போக முடியல...”

“அதுக்காவ? உன் ஆயியப்பனுக்கு நோவு வந்தா இப்பிடித்தான் வெட்டுவீங்களா? சேர்மன் சொன்னாராம்? யார்ரா அது சேர்மன், போர்மன்? விட்டுடுங்கையா, உங்கள கையெடுத்துக் கும்புடறேன்!” அவள் அந்தக் கிளைகளின் நடுவே நின்று கையெடுத்துக் கும்பிடுகிறாள்.

“கிழவி, இந்த சென்டிமண்ட், நாடகமெல்லாம் எங்கிட்ட வச்சிக்காத. நா அவுரு ஆளு. அவுரு சம்பளம் குடுக்கிறாரு. இன்னிக்கு மரத்த வெட்டுன்னாரு. நா செய்யிறேன். நீ தடுக்கணும்னா அவருகிட்டப் போயி இதெல்லாம் சொல்லு...”

துயரம் தாளாமல் மண்டுகிறது.

‘மரத்தை வெட்டுற கன்ட்ராக்டர்கள் வந்தால், பொம்புளங்க சுத்தி மரத்தைக் கட்டிப்பாங்க. எங்கள வெட்டிட்டு

மரத்தை வெட்டுங்கம்பாங்க... அப்படி ஒரு இயக்கம் இருக்கு. அதுல தான் ராதாம்மா புருசன் இருக்கறதாச் சொன்னாங்க...'

"தம்பி! இங்க வாங்க! எங்கேயோ நடக்குற அநியாயம் இல்ல. உங்க வூட்டிலியே நடக்குது..." என்று அழுகிறாள்.

சோறு பொங்கி வைத்துவிட்டுப் போனாள். சோறெடுக்கத் தோன்றவில்லை. இன்று மரத்தை வெட்டுகிறார்கள். நாளைக்கு என்ன நடக்கும்?....

வாசலில் நின்று வெறித்துப் பார்க்கிறாள். வெயில். பார வண்டிகள், கட்டடம் கட்டும் சாதனங்கள் சுமந்து செல்லும் அந்த கிளப்பும் புகை, புழுதி எல்லாம் அவள் இயலாமையை மேலும் கூர்மையாக்குகின்றன. அப்போது தெருவில் செல்லும் பெண் ஒருத்தி, புன்னகையுடன் அவளை நோக்கி, 'நமஸ்தே' என்று கைகுவிக்கிறாள். கருத்து, மெலிந்த உடல். கன்னங்கள் பூரித்தாற்போல் முகம் இருந்தாலும், தாடை எலும்புகள் துருத்திக் கொண்டு தெரிகின்றன. அடர்த்தியில்லாத முடி பின் கழுத்தோடு கத்திரிக்கப் பட்டிருக்கிறது. கண்களில் ஒரு நம்பிக்கையொளி. கைத்தறிச் சேலை; வெட்டு, ஃபிட்டிங் இல்லாத ரவிக்கை. நகை நட்டு எதுவும் இல்லை. காதுகளில் சிறு வளையங்கள்...

"நா உள்ள வரட்டுமா?..."

கம்பிக் கதவை நன்றாகத் திறக்கிறாள். "வாம்மா, நீ யாருன்னு எனக்குத் தெரியல. இந்தப் பக்கத்தில பார்த்ததா நினைப்பில்ல. புதிசா, அங்கே கிழக்கே நிறைய வீடுகள் கட்டி வந்திருக்காங்க.. நீ யாரத் தேடி வர? யாரும்மா?"

இவள் ஆவலும் பரபரப்பும் கட்டுக்கடங்காமல் போகிறது.

"நாங்க மேற்கே, புதிசா இருக்கும் எக்ஸ் ஸர்விஸ் காரங்களுக்கான காலனிக்கு வந்திருக்கிறோம். வந்து ஒரு மாசம் தானாகுது..."

"ஓ, அப்ப... உங்க..." என்று கேட்குமுன் இதயம் வலிப்பது போல் இருக்கிறது. கார்கில், அங்கே இங்கே என்று போர் வந்து அன்றாடம் வீரர்களின் உடல்களைச் சுமந்து பெட்டிகள் வந்தன. இந்தக் குழந்தையைப் பார்த்தால் முப்பது வயசு இருக்காது. அதற்குள்...

"இங்க யாரம்மா இருக்காங்க?"

"அம்மா இருக்காங்க. அவங்களுக்கு நடக்க முடியி தில்ல. அதா என்ன அனுப்பிச்சாங்க. வாசல்ல வராந்தா இருக்கும். எதிரே மரமெல்லாம் இருக்கும். சோலையில் நடுவே பெரிய வீடுன்னு சொன்னாங்க. ராம்ஜி மாமா, நா அப்பான்னு கூப்பிடுவேன்னாங்க..."

"கண்ணு? உங்கம்மா பேரு அநுதானே? அநு... அநு.. குருகுலத்துல வேலை செய்ய வந்தா. இந்தப் படுபாவி பண் ணின தில்லுமுள்ளுல, குழந்தையத் தூக்கிட்டுப் போயிட்டா. அப்ப, உங்கப்பா உங்கப்பா, ரிடயராகி வந்திட்டாங்களா? நீ... நீ... எப்படிடா, அடயாளம் தெரியாம ஆயிட்ட? சிவப்பா, தலைநிறைய சுருட்டை முடியும், ரோஜாப்பூ மாதிரி முகமும் இருப்பே... கறுத்து மெலிஞ்சி... கல்யாணம் ஆயிருக்காம்மா?"

"உம்.. ரெண்டு குழந்தை இருக்கு..."

"அம்மாடி, அந்த ஆண்டவனே, முருகனே உன்னிய இங்க அனுப்பியிருக்காரு. என்ன செய்யுறதுன்னு திண்டா டிட்டிருந்தேன். உங்கம்மாவ நான் இப்பவே பார்க்கணும். இதே வரேன்..."

"இருங்க தாதிமா, நான் போயி ஒரு ஆட்டோ கூட்டிட்டு வரேன்?"

"ஆட்டோவெல்லாம் எதுக்கு? இந்தப் பக்கம் தானே? நான் நடப்பேன்மா?"

"இல்ல தாதிமா, கொஞ்ச தூரம் போகணும். நீங்க வயசானவங்க."

"வயசா? ஏம்மா, நீ வரச்சே, நான் நடப்பேன். அந்தப் பக்கம் தானே போகணும்? அவன் அம்பது நூறும்பான். அடாவடி... அடாடா, உன்னை உள்ளே கூப்பிட்டு ஒரு வாய் தண்ணி கூடக் குடுக்காம. கிளம்புறேன் பாரு" என்று சொல்லி உள்ளே அழைக்கிறாள்.

கூடத்தில் அந்தப் படங்களை அவள் பார்க்கிறாள்.

"ஓ... எனக்கு மங்கலா நினைப்பு வருது. இங்கே பெரிய பிரம்பு சோபா... அதில தாத்தா... மடில உக்காத்தி வச்சிப் பாங்க. நான் அவர் கண்ணாடிய எடுத்துத் திறப்பேன்..."

அவள் கண்களில் நீர்மல்க, அந்தக் கன்னங்களை வழித்து, நெற்றியில் பொட்டில் சொடுக்கிக் கொள்கிறாள்.

"கண்ணு, பொழுது உச்சிக்கு வந்து இறங்குது. நீ சாப்பிட்டியோ?..."

"இனிமேத்தான். குழந்தைகள் ஸ்கூல்லேந்து வர ரெண்டு மணியாகும். சப்ஜி பண்ணி சோறு பண்ணி வச்சி ருக்கு. காலம ப்ரக்ஃபாஸ்ட் ஆயிருக்கு..."

"கண்ணு, ஒரு வாய் தயிர் சோறு தாரேன். சாப்பிடுடா..." அவசரமாகப் பொங்கிய சோற்றில் உறை தயிரையும் உப்புக்கல்லையும் போட்டுப் பிசைகிறாள். ஒரு ஸில்வர் தட்டு இருக்கிறது. பின்னே சென்று இலையறுக்கும் மனம் இல்லை. இப்படியே, இப்படியே கிடைக்கும் இலக்கு...

தட்டில் சோறும், அப்போது போட்ட நார்த்தங்காய் ஊறுகாயும் வைத்துக் கொடுக்கிறாள். பின்புறம் குளியலறை யில் அவள் கைகழுவச் செல்கையில் கொல்லையில் மரம் வெட்டுவது தெரிகிறது.

பெஞ்சில் அமர்ந்து கையில் தட்டை வைத்துக் கொண்டு அவள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டே நிற்கிறாள். இளநீல வண்ணச் சேலை. தூய வெண்மை ரவிக்கை. 'சத்திய தேவதையா?'

"நீங்க சாப்பிடுங்க, தாதிமா!"

அவள் சாப்பிட்டு முடிக்கும் வரை நெஞ்சு நெகிழப் பார்க்கிறாள்.

மனது நிறைந்தவளாகத் தானும் மீதிச் சோற்றைப் பிசைந்து சாப்பாட்டை முடித்துக் கொள்கிறாள். அவள் பாத்திரங்களைக் கழுவும் வரை, அந்தப் பெண் கூடத்தி லேயே படங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள். இவள் கிளம்பும் போது, ரங்கன் மரக்கிளைகளை அப்புறப்படுத்தும் வேலையில் ஊன்றியிருக்கிறான் "சீ! பூச்சிங்க... உடம் பெல்லாம் தடிச்சிப் போச்சி!" என்று கிளைகள் இழுக்கும் ஆள் சொல்கிறான்.

"இதை எப்பவோ வெட்டிப் போட்டிருக்கணும். அப்படித் தள்ளிப்போடு. கிரசின் ஊத்தி எரிச்சிடலாம்..."

காதில் கேட்டும் கேட்காமலும் அவள், "ரங்கா, நா கொஞ்சம் வெளியே போறன். சொல்லாம போயிட்டேன் காத! வாசக்கதவப் பூட்டிக்க!" என்று சொல்லிவிட்டு நடக்கிறாள். அப்போதுதான், அவன் அநுவின் மகளைப் பார்க்கிறான்.

"யாரிவங்க? அன்னிக்கு வந்திட்டுப் போனாரு... இது...?" என்று அவன் யோசனையுடன் "எங்கேம்மா, இந்த பக்கம்?" என்று கேட்கையில் அவள் விடை கொடுக்காமல் நடக் கிறாள்.

"ஏம்மா, உம் பேர் மறந்திட்டது, உம் பேரென்ன?"

அவள் புன்னகை செய்கிறாள். "நிசா... நிசாந்தினின்னு பேரு. இரவு பூக்கும் பூன்னு எங்கப்பா பேரு வச்சாராம். நான் ராத்திரிதான் பிறந்தேனாம்..."

"ஆமா, பாரிஜாதப்பூ ராத்திரிலதான் பூக்கும். பக்கத்தில் அந்த மரம் இருந்திச்சி. ஒம்பது மணிக்கு கும்முனு வாசனை

வரும். இப்பக்கூட இருந்திச்சி. பாம்புவந்திச்சின்னு வெட்டிப் போட்டானுவ... உங்கப்பா இப்ப வீட்டோட இருக்காரா? ரிடயராகி இருப்பாங்க..."

"இல்ல... அப்பா போயிட்டாங்க..."

அவளுக்கு அந்த சாமியார், சித்தப்பா என்று சொன்ன உறவு முறை, அவர் தங்கிய போது, கூறிய செய்தி ஊசிக்குத் தாய்த் தைக்கிறது. இவளிடம் அதையெல்லாம் கேட்கத் தெரியவில்லை. நீள நெடுக சாலையே வந்து இரு புறங்களிலும் குடியிருப்புகள். இடையே வேலைக்காக இடம் பெயர்ந்து குடும்பமும் குட்டியுமாகத் தங்கும் முட்டு முட்டான குடிசைகள்; சாக்கடைகள். ஊர்க்குப்பைகளை எல்லாம் கொண்டு கொட்டும் இடம்... ஒரு காலத்தில் ஏரியல்லவா? 'பாவிகளா! சுற்றுச்சூழல் மாசு என்று சொல்லிக் கொண்டு!' ஈக்கள் மொய்க்கின்றன. நிசா முகத்தை வாயை சேலைத்தலைப்பால் மூடிக் கொள்கிறாள்.

"சீ, எந்த ஊரிலேந்து இவ்வளவு கழிவையும் கொண்டு கொட்டுறாங்க?..."

"முகத்தை அதான் மூடிட்டேன். அதனாலதான் ஆட்டோ வச்சிட்டு வரலான்னே..."

அந்த இடம் தாண்டிய பிறகு, சாலையோரங்களில் மரங்களின் பசுமை விரிகிறது. ஒரு பக்கம் கல்லூரி..."

"இது இன்ஜீனியரிங் காலேஜ். இதுக்குள்ளதான் அம்ரித்ஸிங் அங்கில் இருக்கிறாங்க. அவருதான் இங்க... எங்களுக்கு இடம் ஏற்பாடு பண்ணினார். இதோ... இதான், வாங்க..."

"பரம்வீர் முன்னாள் ராணுவ வீரர் குடியிருப்பு" என்று எழுதிய வளைவு வாயிலுக்குள் நுழைகிறார்கள். பத்துப் பதினைந்து வீடுகள் தாம் முழுமை பெற்றிருக்கின்றன. வீடுகளைச் சுற்றிய தோட்டங்கள் இப்போதுதான் உருவாகி வருகின்றன. வரிசையாகத் தெரியும் வீடுகளில் ஒன்றில் நிசா

வாயில் மணியை அடிக்கிறாள். தோட்டத்துக்கு நீர் பாய்ச்சு வதற்காக வாயிலில் ஒரு குழாய் இருப்பதை அவள் பார்க்கிறாள். திருகுகிறாள். தண்ணீர் வருகிறது. கால்களைக் கழுவிக் கொள்கிறாள். கதவை உச்சியில் கைக்குட்டை போன்ற ஒன்றால் முடியைக் கட்டிக் கொண்டிருக்கும் ஒரு சிங் பையன் திறக்கிறான். ஐந்து வயசு ஆறு வயசு மதிக்கத் தகுந்த ஒரு பெண், பையன் இருவரும் தாயின் மீது கோபம் காட்டும் படி இந்தியில் பேசியபடி அவளுடைய சேலையைப் பற்றிக் கொள்கிறார்கள். "உள்ள வாங்க தாதிமா! நிகில், நித்யா, தாதிமாக்கு பிரணாம் பண்ணுங்க!..."

"அட கண்ணுகளா?" என்று குழந்தைகளைத் தழுவி முத்தமிட்டுக் கொள்கிறாள். மட்டியாக, வெறுங்கையுடன் வந்திருக்கிறாளே?... அடாடா, ஏம்மா, இங்கே பக்கத்தில கடை ஏதானும் இருக்கா? நீ கூப்பிட்ட, உடனே ஓடி வந்திட்டேன்..."

"இங்க பக்கத்தில காலேஜ் காம்பஸில இருக்கு..."

"அப்ப, நீ வழிகாட்டுறியா போயி மிட்டாய் வாங்கிட்டு வாரேன்..."

"நோ, தாதிமா, நானே சைகிள்ள போயி வாங்கிட்டு வாரேன். என்ன வாங்கட்டும், கேக், மிட்டாய்..."

"எதுனாலும் வாங்கிட்டு வா தம்பி" என்று ஒரு நூறு ரூபாய் நோட்டைக் கொடுக்கிறாள். அதற்குள் அநு, அவளைப் பற்றிக் கொண்டு, முன்னறைக்கு வந்து விடுகிறாள்.

"அம்மா என்ன இது...?"

"தாயம்மா..."

அவள் தாவிப் பற்றிக் கொள்கிறாள்.

அநும்மா...!

அடர்ந்து கறுத்த முடி, நரைத்து முன்புறம் மண்டை தெரிய, முகம் முழுதும் வாழ்க்கையின் அதிர்வுகளையும்

சோகங்களையும் தாங்கிய கீறல்களுடன்... பல்வரிசை பழுது பட்டு... அந்த அநுவா?...

"அம்மா...? என்னம்மா இப்படி? அடையாளமே தெரியலியே? முன்னறைச் சோபாவில் உட்கார்த்தி வைக்கிறாள்.

நிசா குழந்தைகளை அழைத்துச் சென்று, ரொட்டி தயாரிக்க முனைகையில், "நாங்க ரொட்டி சப்ஜி சாப் டாச்சி?" என்று குழந்தைகள் குரல் கேட்கிறது.

"நிசா, அமர் என்னமா ரொட்டி பண்ணுறான்? நாங்க எல்லாம் சாப்பிட்டாச்சி. உனக்குப் பரோட்டா பண்ணி வச்சிருக்கிறான் பாரு!"

"அட....?"

நிசா ரொட்டி சப்ஜி தட்டுடன் வருகிறாள்.

## 26

"நீங்க சாப்பிட்டீங்களா, அம்மாஜி?"

"ஆச்சும்மா. நீதான் மாவு பிசைஞ்சு வச்சிட்டுப் போயிருந்தே. அவன் மடமடன்னு ஃபுல்கா பண்ணிப் போட்டுட்டான். உனக்கு பரோட்டா பண்ணி வைக்கிறேன் னான். வாணாம்பா, அவ வந்தா சூடா பண்ணிப்பான்னேன். கேக்கல. பைங்கன் பர்த்தா பண்றேன்னு பண்ணி வச்சிருக்கு பாரு?" இவளுக்கு பக்கத்தில் குடியிருந்தவருக்கு நண்பராக வரும் சிங் குழந்தைகள், மனைவி நினைவு வருகிறது.

"ஏம்மா, இந்தப் புள்ள யாரு?"

அதற்குள் சைகிளில், கேக், மிக்ஸ்சர் வாங்கிய பையுடன் அமர் வந்து விடுகிறான்.

"டபிய்...? ப்ளம் கேக் வேணுமா, செர்ரி கேக் வேணுமா? இவன் தூக்கிப் பிடிக்குமுன் இரு குழந்தைகளும் ஓடி வருகிறார்கள்.

“எனக்கு...! எனக்கு...!”

“தாதிமாக்கு!”

அவள் வாங்கிக் கொள்கிறாள்.

பையில் ஒரு பெட்டியில் இருவகை கேக்குகள்—ஆறு — ஆறு என்று பன்னிரண்டு இருக்கின்றன. ஒன்றை எடுத்து அவள் பெண் குழந்தையிடம்—நித்யா—வாயைக் காட்டு கிறது, அவள் ஊட்டுவது போல் கொடுக்க, பற்றிக் கொள் கிறது. பிறகு பையனுக்கு... இந்தா தம்பி— உன்பேர் அமாரா?... அவனும் வாயில் வாங்கிக் கையில் பற்றிக் கொள்கிறான். “நிசாம்மா?” என்று கூப்பிட்டு அவளுக்கு ஒன்றைக் கொடுக் கிறாள். அவளும் வாயில் வாங்கிக் கொள்கிறாள். பிறகு இன்னொரு துண்டை அநுவின் வாயில் வைக்க, அநு கண்ணீருடன் கையில் எடுத்துக் கொண்டு இன்னொரு துண்டை அவளுக்கு ஊட்டுகிறாள்.

ஆண்டவனே! நீ இத்தனை கருணையுள்ளவனா? இந்தச் சின்னச்சின்ன செய்கைகளில், இவ்வளவு மனநிறைவு கிடைக்குமா?

“இந்தப் புள்ள யாருன்னு சொன்னம்மா?...”

“பக்கத்து இன்ஜீனியரிங் காலேஜ் இல்ல; அதுல புரொபசரா இருக்காரு. இவங்க மாமா கிரணோட நெருங்கிய சிநேகிதர். ஏர்ஃபோர்ஸில் இருந்தார்... அவர் மூலமாத்தான், இந்த இடமே எனக்கு செய்து குடுத்தாங்க...”

“அப்படியா? இவுங்க எத்தினி நாளா இங்க இருக்காங்க?”

“இருக்கும் எனக்கே தெரியாது. பத்து வருசமிருக்கும்னு நினைக்கிறேன். தாயம்மா...?”

குரல் உடைந்து கண்ணீர் வழிகிறது.

“கடைசில ஒரு தீச்சொல்லைச் சொல்லி.... நானே என் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக்கிட்டேன். நானே.... நானே....”

அவள் குலுங்கும்போது இவளுக்கு ஏதோ புரிகிறது; புரியவுமில்லை.

"நீ என்னம்மா சொல்ற..."

"ஆமாம் தாயம்மா, இனி உங்களுக்கும் எனக்கும் பந்தம் இல்லை. என் குழந்தையை எடுத்திக்கிட்டு நான் போறேன். இனிமே நமக்குள் எந்தத் தொடர்பும் வேண்டாம்... நீங்க என் புருசனும் இல்ல, என் குழந்தைக்கு அப்பாவும் இல்லன்னு கத்தினேன். தாயம்மா, உனக்கு மன்னிப்பே இல்லைன்னு போயிட்டாங்க... அவரை நான் மன்னிக்க மாட்டேன்னேன். அவரு நீ மன்னிக்க வேண்டாம், உனக்கும் மன்னிப்பில்லேன்னு..." குலுங்கிக் குலுங்கி அழுகிறாள்.

தோட்டக்கதவுத் தாழ் அகற்றும் ஒலி கேட்கிறது.

உள்ளே வருபவர்கள், சிங்கும் மனைவியும்...

"பிரணாம் மாதாஜி! ஞாபகம் இருக்குதா? நீங்க கோலம் போடச் சொல்லிக் குடுத்தீங்களே...?"

"அம்மா... தேவா அங்கே வந்திருந்தபோது வருவோமே?..."

அப்ப... அப்ப... அநும்மா... அந்த அவரு...

மீசையைப் பல்லால் கடித்துக் கொண்டு அரும்புப் பற்கள் தெரியச் சிரிக்கும் கோலம் தோன்றுகிறது.

"உங்களுக்கு, மக்க மனுசங்க?..."

"எல்லாம் இருக்காங்க...."

அதற்குமேல் அவள் கேட்கவில்லை. கேட்கவில்லை...

"அநுவுக்கும் புருசனுக்கும் சரியில்லை. அவங்க பிரிஞ்சிட்டாங்க..." சாமியார் சொன்ன சொல்...

"அப்பா, அவர் திடும்னு வந்துட்டார். எனக்கு என்ன பண்ணுவதுன்னு தெரியல. அனுப்பி வச்சேன்..."

“அநும்மா, நிசாவின் அப்பா பேரு என்ன சொன்ன?...”

“கிரண்ணு வீட்ல சொல்லுவாங்க. சூர்ய கிரண் தேவ்னு பேரு. இவங்கல்லாம் தேவான்னு தான் கூப்பிடுவாங்க.”

“சிங்கு, ஏம்மா, உங்க பேரு தெரியல. நீங்கல்லாமும் எனக்கு எதுவும் சொல்லாம இருந்திட்டீங்களே?...”

“எங்களுக்கு எப்படித் தெரியும் மாதாஜி?... அவரே அங்கே வந்து தனியா இடம் பார்த்துக்கிட்டு வந்துதான் சொன்னது...”

“எல்லாம் என் பாவம்...”

‘‘மாதாஜி, நீங்க இப்பவும் இங்கே இருக்கலாம். பக்கத்தில் வந்திருக்கிறீங்க. அநுபஹன் ரொம்ப ஒடிஞ்சி போயிட்டாங்க பாவம்... ரொம்ப.... அவங்களுக்கு வந்த மாதிரி கஷ்டம் ஆருக்கும் வராது, வரக்கூடாது...”

நாங்க அந்தப் பக்கம் பைக்ல போவோம், நீங்க சில நாளைக்கு நிப்பீங்க.

“ரொம்ப நன்றி அய்யா. இந்த தேசத்துல, எல்லாம் கந்தலா குளறு படியா மனுச உறவே இல்லாம போகும் போது, நீங்கல்லா இருக்கீங்க. உங்க பய்ய ஓடிப் போயி கேக்கு வாங்கியாந்து வாயக்காட்டி வாங்கிட்டா. நல்லா இருக்கணும்... புது நாத்துங்க. நா இனி அடிக்கடி வருவே...”

‘‘நாங்க வரோம் மாதாஜி.”

அவர்கள் மறுபடியும் வணங்கி விடைபெறுகிறார்கள்.

அவர்கள் சென்றபின், இறுக்கம் தளர்ந்து, மீண்டும் இறுக்கமாகும் உணர்வுகளில் நினைவுகளில் அவள் மிதக்கிறாள்.

“தாயம்மா, எங்கள்ள எந்த பூசை வழிபாடு செய்தாலும் ஒருவரி கடைசியில் வரும். தெரிந்தும், தெரியாமலும் அறிந்தோ அறியாமலோ நான் செய்த பாவங்களை எல்லாம் மன்னித்து விடுங்கள் என்று கடவுளிடம் சரணடைவது

போல் இருக்கும். சிறுபிள்ளைகளில் தும்பியைப் பிடித்து சிறகடித்துத் துடிப்பதைப் பார்க்க, பசுங்கன்றின் உடலில் சிறு கல்லை வீசி அதன் உடலில் சிலிர்ப்பலைகள் பரவுவதைப் பார்க்க என்று துன்பம் செய்வார்கள். நானோ....

"தாயம்மா, உங்களுக்குத் தெரியுமோ, என்னேமா? உயர் குலத்துக்கும் ஒரு மனிதரின் நடத்தைக்கும் சம்பந்தமே இல்லை என்று சிறுவயதிலேயே நான் அறிஞ்சுகிட்டேன். என் அம்மா எனக்கு அஞ்சு வயசாக இருக்கும் போதே 'பிலட்கான்சர்' வந்து போயிட்டா. என் சித்தியையே அப்பா கல்யாணம் பண்ணிக் கொண்டார். சித்திக்குத்தான் இரண்டு பிள்ளைகள். என் அப்பாவின் தம்பிதான் அந்தக் காலத்தில் ஆர்.எஸ்.எஸ்.ஸில் சேர்ந்து, சாமியாராகப் போனவர். என் அம்மா மேல் அவருக்கு ரொம்பப் பிரியம். நான் குழந்தை யாக இருந்த போது அடிக்கடி வருவார். அவரைக் கண்டால் சித்திக்கும் பிடிக்காது, அப்பாவுக்கும் பிடிக்காது. அப்பாவுக்கு டெல்லி, மேல் தட்டு சமூக—பார்ட்டி, ஆடம் பரம் எல்லாம் பிடிக்கும். அம்மாவுக்கு அந்த வாழ்க்கையில் பிடிப்புக்கிடையாது என்று சித்தப்பா சொல்வார். ஆனால் ரொம்ப நாள் இருக்கல. அப்பா அம்மா செத்துப் போகு முன்பே சித்தியை வீட்டில் கொண்டு வைத்துக் கொண்டி ருந்தாராம். எனக்கும் நினைவு இருக்கு. அப்பா குடித்து விட்டு வருவார்... சின்ன வயசிலேயே எனக்கு அந்த சமாசாரம் மனசில் பதிஞ்சுடுத்து. என் வாழ்க்கை பின்னால் இடிஞ்சு போனதுக்கே அதுதான் காரணம்... தாயம்மா...!"

முகத்தை மூடிக் கொண்டு அவள் விம்முகிறாள்.

"அவுரு குடிக்கிறாரு. பாட்டில் இருக்கு..."

"அந்த பாட்டில்ல இஞ்சி பூண்டு மிளகு சீரகம் தட்டிப் போட்ட ரசம் குடுப்பேன்..."

பனிப்புகையாய் காட்சிகள்.

"மக்க மனிசா இருக்காங்களா?"

"இருக்காங்க... அந்தச் சிரிப்பில் எதுவுமே தெரிய வில்லை. பழகுபவரிடம் அந்தச் சிரிப்பே ஒட்டிக்கொண்டது."

"சித்தி அவரைக் கல்யாணம் பண்ணின்ட பிறகு, என்னை ஆயாவிடம் விட்டுவிட்டு அவளும் அப்பாவுடன் வெளியே போவாள். அப்பதான் மாமா என்னை நாக்பூருக்குக் கூட்டி வந்தார். அவர்களுக்கு இரண்டு குழந்தைகள் பிறந்து தங்கவில்லை. அவர் அங்கே 'இங்கிலீஷ்' ஹைஸ்கூலில் டீச்சராக இருந்தார். மாமியும் சரஸ்வதி வித்யாலயத்தில், பிறகு, எனக்குப் பத்து வயசான பின் வேலை செய்தார். கிரண் குடும்பம் ஒரு வகையில் மாமிக்கு உறவுதான். கிரண் அப்பா பண்டாரா கார்டைட் ஃபாக்டரியில் வேலையாக இருந்தார். கிரண் ஐ.ஐ.டி.யில் படித்துவிட்டு, ஏர்ஃபோர்ஸில் சேர்ந்தான். என் தம்பிகள் இரண்டு பேரும் படித்துக் கொண்டிருந்தார்கள். நான் படிப்பு முடித்து, லிட்டரேச்சர் எம்.ஏ. பண்ணினேன். டெல்லியிலேயே பப்ளிக் ஸ்கூலில் வேலைக்குச் சேர்ந்தேன். அப்ப, அப்பாவுக்குக் குடியினால், உடம்பு கெட்டுவிட்டது. பி.பி., ஷுகர்... ஏறி, ஒருதரம் 'மைல்ட்' அட்டாக்கும் வந்ததால், சித்தி ரொம்பக் கட்டு பாட்டில் வைத்திருந்தாள். அதோடு, பக்தி மஞ்சரியாகி விட்டாள். பெரிய மனிதர் வீட்டு, மேம் சாப்கள், பஜனை செய்வார்கள். 'கிட்டி பார்ட்டி' சீட்டாட்டம், இதெல்லாம் தலைநகர் நாகரிகம். கிரண் அப்போது டெல்லியில் இருந்தான். சாதாரணமான பழக்கம், அவனை, சித்தியின் பஜனைக் குழுவில் ஒருத்தனாக அடிக்கடி ஞாயிறு பஜனைகளில் வரச் செய்தது. நல்ல குரல். தமிழ், ஹிந்தி, வெஸ்டர்ன் என்று பாடுவான். எனக்கு மிக ஆச்சரியமாக இருக்கும். நாக்பூர் வாழ்க்கை, எளிய நூல் சேலை வாழ்க்கை. அது ஒரு 'மிடில் கிளாஸ்', சாதாரண, பந்தா இல்லாத மனிதர் கொண்டது, எனக்கு அது பிடித்திருந்தது. ஞாயிறென்றால் கிரண் காலையிலேயே வருவான். நாங்கள்,

கலை இலக்கியம், சினிமா என்று பேசுவோம். 'பிடிச்சிப் போச்சு, கல்யாணம் பண்ணிடுவோம்'னு தீர்மானித்து, டெல்லியிலேயே நடத்திவிட்டார்கள். அப்ப என் தாத்தா கூட இருந்தார். ஆறுமாசம் கழிச்சுத்தான் செத்துப்போனார்.

"ஆனால், அவருடன் டெல்லி குவார்ட்டர்ஸில் குடித் தனம் பண்ணப்போன பிறகுதான், அந்த வாழ்க்கை புரிந்தது."

"என்ன சொல்ல தாயம்மா? சாயங்காலம்னு ஒண்ணு வரதே, கிளப்புக்குப் போகத்தான்... என்னைப் போலிருந்த மனைவிகளும் போவார்கள். பார்ட்டி... குடி, கூத்து...

"முதல் நாள் 'திருமண பார்ட்டி' கொண்டாட்டமே எனக்கு வெறுப்பாகிவிட்டது. 'என்னை ஏமாத்திட்டீங்க! சீட், ரோக்'ன்னெல்லாம் கத்தினேன். அழுதேன். வீட்டுக்கு வந்து சித்தியிடமும் அப்பாவிடமும் சண்டை போட்டேன். 'ரிலாக்ஸ், அநு, ராணுவம் கட்டுப்பாடான வாழ்க்கை. பார்டர் ஏரியாவில், அவர்கள் இந்த நாட்டைக் காக்கிறார் கள். உத்தமமான பணி. கிரண் நல்ல பையன். நீ அவனோடு இருந்து மாற்றலாம். ஏதோ கொஞ்சம் ரிலாக்ஸ் பண்ணிக் கொள்வது உள்ளதுதான்..."

கிரண் அன்றே வந்து, அவளைச் சமாதானப் படுத்திக் கூட்டிச் சென்றான். அப்படியும் இப்படியுமாகச் சில மாசங்கள்...

கர்ப்பமானாள். அப்போது பங்களாதேஷ் நெருக்கடி. இவளுக்கு சித்தி வளை காப்பு செய்தாள். பட்டு சரிகை, நகை, எதுவும் இவளுக்குப் பிடிக்காது. அதனாலேயே ராம்ஜி மாமா குடும்பம் அவளுக்குப் பிடிக்கும். அவளுடைய வளை காப்பு சமயத்தில் அவர் டெல்லி வந்திருந்தார். சித்தி திட்டினாள். "காது மூக்குன்னு ஒரு நகை இல்லை. அந்த காலத்துலதான் கதர் கட்டிண்டு அழுமூஞ்சி மாதிரி இருந்தே, இந்தப் பட்டெல்லாம் நம் நாட்டுதுதானே? காது வளையத்தைக் கழற்றி எறி. உன் அம்மாவின் தோடு, நகை

எல்லாம் போட்டுக்கணும்” என்று போட்டாள். அப்ப கூட அழுதேன்.

“ராம்ஜி மாமா, நீங்க சொல்லுங்க! இந்த சமயம் என் சந்தோசம் முக்கியமா, அவங்க சந்தோசமா?”

“ரெண்டும்தான். ஒரு நாளைக்குத்தானேம்மா? ‘விட்டுக் கொடு’ன்னார். அந்த முதல் பிரசவம், ஏழு மாசத்திலேயே குழந்தை பிறந்து தங்கல. கிரண் சண்டிகர்ல இருந்தார். இதே வாழ்க்கைதான். “இனி இல்லைம் பாரு. குவார்ட்டர்ஸ். காலைக்கெடுபிடி.... ஒரே மாதிரி சூழல். தடித்த லிப்ஸ்டிக், கையில்லாத ரவிக்கை, பளீரென்ற ஆடைகள், கம்பளிப் பின்னல்கள், பார்ட்டி, டின்னர், அது, இது... எல்லாம். உடனே மறுபடி கர்ப்பம். அப்போது மாமா வந்து நாக்பூருக்கு அழைச்சிட்டுப் போனார். அங்கேதான் ஆஸ்பத்திரியில் இவள் பிறந்தாள். ஓடி வந்தார். சந்தோசமாக, குழந்தையைத் தூக்கினார். “அநு, பழைய கிரண் இல்ல. புதியவன், நான் ஒரு தந்தை, நீ அம்மா”ன்னு கண் கசிந்தார், ‘புதியதோர் உலகு செய்வோம், கெட்ட போரிடும் குணமதை வேறொடு சாய்ப்போம்’ன்னு பாடினார். அந்தக் குரலில் மயங்கிப் போனேன். புதிய நம்பிக்கையுடன், குழந்தையையும் எடுத்துக் கொண்டு, பெங்களூருக்குப் போனேன். மாமாவும் மாமியும் கொண்டு விட்டார்கள். இரண்டு மூன்று நாட்கள், புதிய இடத்தில் எதுவும் தெரியல. சண்டைக்காலத்தில், எல்லைப் புறங்களில் ‘டென்ஷன்’ ஆனால் அதெல்லாம் இல்லாத போதுமா?

“மாலை நெருங்கும்போதே எனக்கு டென்ஷன். இரவு வரும் வரையிலும் அது ஏறி வெடிக்குமளவுக்கு வரும். அழுவேன். திட்டுவேன். குழந்தைக்கு ஒன்றரை வயசு முடிந்த சமயம். ஒருநாள் இரவு குடிச்சிட்டு டூவீலர்ல வரப்ப எங்கேயோ மோதி, தலையில இரத்தக்காயம். கட்டோடு வந்தார். நான் எப்படித் துடிச்சிருப்பேன்னு பாத்துக்குங்க! நான் எந்த முடிவும் எடுக்க வேண்டி இருக்கல. அன்னிக்குத்

தான் அப்பா 'அட்டாக்' வந்து செத்துப் போன தகவல் வந்தது. சித்திக்கு நான் கிரண் மேல் குற்றம் சாட்டியது பிடிக்கல. எல்லாம் சரியாயிடும். உங்கப்பா, ஒண்ணுமில்லாம வீட்டில வச்சிண்டே குடிச்சார். ஒரு அட்டாக் வந்தப்புறம் நானும் எப்படி எப்படியோ வழிக்குக் கொண்டு வந்தேன். இந்தக் காலத்தில் காந்தி சமாசாரம் எதுவும் செல்லுபடியாகாது. நிவீணா உன் தலையில் மண்ணள்ளிப் போட்டுக்காதே. சர்வீஸ்ல இருக்கறதுன்னா இப்படி இருக்கத்தான் இருக்கும்..."

"ஆனால், என்னால சகிச்சிக்க முடியல. ஒரு நாள் கண்டபடி திட்டிட்டு, 'நீ சத்தியத்தை மீறுறவன். எனக்குப் புருசனும், என் குழந்தைக்கு அப்பாவும் வேண்டாம்னு கிளம்பிட்டேன். நாக்பூருக்குப் போனேன். மாமாவின் உபதேசம் பிடிக்கல. அப்ப பவனாரில் வினோபா இருக்கிறார். அங்கே போய் ஒரு மாசம் இருந்தேன். பிரஸ்ஸில் வேலை செய்தேன். பஜாஜின் மனைவி, பெரியம்மா இருந்தார். பிரார்த்தனை, கூட்டு யோகம்... எதிலும் மனசு ஈடுபடல... அங்கேருந்து தான் ராம்ஜியின் குருகுலத்துக்கு வந்தேன்..."

அவள் எங்கோ பார்க்கிறாள்.

" 'இன்னும் ஒரே ஒரு தடவை எனக்கு சந்தர்ப்பம் குடு அநு, ஒரே ஒரு தடவை!'ன்னு கெஞ்சினார், நாக்பூர் வந்து. நான் கேட்கல தாயம்மா, கேட்கல... 'சந்நியாசி' சித்தப்பாக்கு நான் கடைசி காலத்துக்கு ஒரு கால் கட்டா இருந்தேன் காங்டா குருகுலத்தில் நான் டீச்சராகச் சேர்ந்தேன். இதுவும் படிச்சது... அதுக்கப்புறம்..."

"அம்மாஜி, கஸ்தூரி வீட்டுக்குப் போறேன்றா...!" நிமிர்ந்து பார்க்கிறாள்.

"ஓ... மணி ஆறரை ஆயிட்டுதா? மணி ஆனதே தெரியல... தாயம்மா, உங்களுக்கு இன்னிக்குப் போகணுமா? இங்கே இருங்களேன்?"

இவள் சங்கடப்படுகிறாள். அவள் நினைத்து வந்த இலக்கு இப்போது இன்னும் சிக்கலாக இருக்கிறது. என்றாலும், இப்போது முடிவெடுக்க முடியாது. "நா, நாளைக்குக் காலம வரேன் அநும்மா, அங்க ஆளுவ வந்து மரம் வெட்டிட்டிருந்தானுவ. ஆள்தான் பாத்துக்கறான். நா, உதவாம என்ன செய்யப் போற? கடசீ காலத்துல, அந்தத் தம்பி..."

நெஞ்சு கமறிக் கண்ணீர் தழுதழுக்கிறது.

"சொக்கத்தங்கம். இந்தக் கேடு கெட்ட உலகத்துல, இப்பிடி ஒரு மனிசன் இருக்க முடியாதுன்னு ஆண்டவன் அழச்சிட்டாருன்னு நெனப்பே... விதி... விதிம்மா!... பக்கத்துல தோட்டம் போட்டு கிளி கொஞ்சும். ஒரு நாயி. சக்தின்னு பேரு. வாரா வாரம் பஜனைல வந்து அருமையாப் பாடுவாரு. பானைய வச்சிட்டு தாளம் தட்டுவாரு... உடம்புகென்னு தெரியாத பேச்சேம்மா...!" என்று வருந்துகிறாள்.

குழந்தைகள் டாடா காட்டி விடை கொடுக்க, 'நாள வரேன்' என்று சொல்லி வெளி வருகிறாள்.

இருட்டு வரும் நேரம். அவள் சூழலின் நினைவின்றி நடக்கிறாள்.

## 27

**பி**ன்னால் விடுவிடென்று சத்தம் அவளைத் திரும்பிப் பார்க்கச் செய்கிறது...

"மாதாஜி, பிரணாம். நான்தான்!" தாடி, தலைப்பா... "அமாரின் அப்பா."

"நான் கூடவரேன். இருட்டிப் போச்சி. வழியில கண்ட கஸ்மலங்கள்..."

அவள் சிரிக்கிறாள். "சிங்கு, நீங்க இந்தத் தமிழெல்லாம் பேசுறீங்க?" அவனும் சிரிக்கும் ஒலி கேட்கிறது. "கஸ்மலம்'ங்கறது சமஸ்கிருத வார்த்தை மாதாஜி. அப்படின்னா அழுக்கு,

கச்சடான்னுதான் அர்த்தம். இங்க சென்னை பாஷையில, எல்லாம் இருக்கு. "டாப் கயன்டுபூடும், வெத்ல பேட்டுக்குவ... தெரிமா...!" என்று சொல்லி ரசித்துச் சிரிக்கிறான்.

"அதெல்லாம் வாணாம் சிங்கு, எனக்கு இத்தினி நாள் நீங்க இங்க இருக்கிறதே தெரில... இங்க ஏரி இருந்திச்சி. ஏரிவரையிலும் கூட வருவேன். இந்த வூடு இடிக்கிற சனங்கள்ளாம் அங்கங்க கீத்து மரச்சிட்டு குடி இருக்கும்."

நாற்றம் வந்து விட்டது. முகத்தை மூடிக் கொண்டு நடக்கிறார்கள்.

ஆட்டோ. இரண்டு சக்கர வண்டிகள் போகின்றன. ஒரு பாரவண்டி பளீரென்று ஒளி காட்டி வருகிறது...

"சிங்கு, நீங்க எங்க கடவீதிக்கா வரீங்க? நீங்க பைக்குல போவீங்கல்ல? நடந்து வாரீங்க?"

"உங்களுக்காகத்தா வாரேன், மாதாஜி. உங்ககிட்டப் பேசணும்னு..."

"அப்பிடியா! அநும்மா பத்தித்தான பேசப் போறீங்க? எனக்கு அங்க ஒண்ணும் சரில்ல, சிங்கு. கடசி காலத்துல இவங்களுக்குத் துணையா இருக்குறதுன்னு முடிவு பண்ணிட்டிருக்கிறன். அவுங்க இன்னைக்கு மரத்த வெட்டு றானுக. நாளைக்கே கடப்பாரைய எடுத்திட்டு வீட்ட இடிக்க வரமாட்டானுவன்னு என்ன நிச்சியம்...? ஆமா, சிங்கு, நிசாப் பொண்ணு புருசன் எங்கே இருக்காரு, இப்பல்லாம் துபாய், சவுதின்னு பணம் சம்பாதிக்கப் போறாங்க, அப்படியா?..."

"அதைச் சொல்லதா வந்தேன். மாதாஜி. அநுகிட்ட எதும் கேட்காதீங்க. மனசு சரியில்லாம ஒரு மாதிரி இருந்து இப்பதா நல்லாயிருக்காங்க. தேவா போனபோது, அவங்க அங்கிளுக்கு நாங்க சேதி அனுப்பினோம். அநுவோட பிரதர்ஸ் ரெண்டு பேரும், யு.எஸ். போயிட்டாங்க. அவங்க சித்தியும் டில்லில இல்ல. கருணானந்த சாமியும்

போயிட்டாங்க. நிசா, படிச்சிட்டு, 'நியூதியேட்டர்'னு, கிராமங்களிலெல்லாம் 'அவேர்னெஸ்' கொண்டாரத்துக்காக தெருவோர நாடகம் எல்லாம் நடத்திட்டிருந்திச்சி. அதில ஒரு பிஹாரி பையன்... அவனுக்கும் இதுக்கும் லவ்னு சொன்னாங்க. ஆனா, கல்யாணம் பண்ணல. ஒருநா, பிஹார்லதா, தாகூர் ஆளுங்க நாடகம் நடக்கிறபோதே குத்திட்டாங்க. அநு... டெல்லிலதா இருக்கா... எங்க அங்கில் பாத்து, பென்சன், அது இதுன்னு எல்லாம் ஏற்பாடு பண்ணிட்டிருக்காங்க. அப்ப இந்த ஷாக்..." இது நடப்பா, கனவா, எங்கே என்று புரியாது அதிர்ச்சியால் அவளுக்கும் கால்கள் இயங்காமல் உறைகின்றன. சில விநாடிகளில் சமாளிக்கிறாள்... முருகா...!

ரெண்டு புள்ளிங்க...

"அது, அநு, வளர்ப்புக்கு எடுத்திட்ட பிள்ளைங்க. தீவிரவாதிங்களால அப்பா அம்மாவைப் பறி கொடுத்தப் பச்சைப் பிள்ளைங்க. பஞ்சாபில ஒரு ஸ்தாபனத்து மூலமா இவ வளக்க எடுத்துக்கிட்ட பிள்ளைகள். அநுவும் நிசாவின், அவ லவர் பையன் சுதாகர் எல்லாரும் சேர்ந்து தான் எடுத்திட்டாங்க..."

எதுவும் பேசத் தோன்றவில்லை.

"மாதாஜி, நீங்க வந்திருந்தால் ஆறுதலாக இருக்கும். இப்பவும், நிசா, அந்த அதிர்ச்சிலேந்து மீளல. பீஹாரிங்க, இதையும் தீவிரவாதின்னு, முத்திரை குத்தி அரெஸ்ட் பண்ணிருப்பாங்க. ஆனா, நல்ல வேளையா, அதெல்லாம் நடக்காதபடி, வேற ஸ்தபானங்கள், சுதாகர் கொலைக்காகக் கண்டனம் செய்த இயக்கங்கள் பாதுகாத்திருக்கு. நிக்கலஸ் சாபுக்குத் தெரியும். நிசாவின் குழந்தைகள்னு சொல்லும். புருசன் இறந்திட்டார்னு, சொல்லும். இந்தப் பக்கம் ஒதுக்குப் புறமா இருக்குன்னாலும், நிசா இப்பகூட ஒரு 'என்.ஜி.ஓ.' இயக்கத்துல இருக்கு. இங்க இன்னும் பழகல. நேத்துத்தா

எங்கோ, 'எய்ட்ஸ்' குழந்தைகளுக்கு ஒரு பராமரிப்பு ஹோம் இருக்குன்னு போயிட்டு வந்தா. அப்பதா உங்களப் பார்க்கச் சொல்லி நான் அனுப்பினேன்..."

வீடு வருகிறார்கள். சிங்கும் வருகிறார்.

"ஏம்மா, காலம போனவங்க... எங்க போறீங்க, யாரு வராங்கன்னு புரியல. வூட்டுக்கு வூடு தீவிரவாதி ஒளிஞ்சிட்டிருக்கிறானான்னு தேடுறாங்க. அன்னைக்கு ஓராளக் கூட்டிட்டு வந்து குசுகுசுன்னு பேசிட்டிருந்தீங்க. சோறு பண்ணிப் போட்டீங்க. அவரு பைய எடுத்திட்டுப் போனாரு. ஆரைத் தேடிட்டு வந்தாரு, எதுக்கு வந்தாருன்னு புரியல. இப்ப இந்த ஆளூ ஆரு?..."

சிங்கு பார்க்கிறார். "க்யாஜி? என்னத் தெரியல? பொத்துரி காலேஜில இருக்கிறேன். தேவா சாப் இருக்கிறப் பஜனைக்கு வந்திருக்கிறேன். புரியல?... நா தீவிரவாதி இல்லப்பா?..."

"இல்ல... இல்ல சாரு, ரொம்ப நாளாயிட்டுதா? அதாகப் போகுது பத்து வருசம். வந்திட்டுப் போயிட்டு இருந்தாதான் புரியும்? ஒரு பொண்ணு வந்திச்சி. அதும் ஆருன்னு தெரியல..."

"இது பாரு ரங்கா, அது யாரும் இல்ல. உங்க சேர்மன் அய்யா கிட்ட சொல்லு. அன்னிக்கு வந்தது, சுப்பய்யா. இங்க இருந்த அய்யாவின் தொண்டர். குருகுலத்தில் சேவை பண்ணினவரு. மத்தியானம் வந்தது, அநும்மாவின் மக. போதுமா?..."

"எனக்கொண்ணுமில்லம்மா, நீங்க சொன்னதை அவங்க கிட்டப் போயிச் சொல்றேன். எனக்கென்ன?..."

"மாதாஜி, நா வரேன். உலகம் எப்பிடியோ போயிட்டிருக்கு. கவலைப்படாதீங்க... வரேன்..."

சிங்கு போகிறார்.

அவள் அந்தப் படங்களைப் பார்த்துக் கொண்டு நிற்கிறாள். உலகில் எத்தனை விதமான துன்பங்கள்! தலை முறைகள் தாருமாறாக வளர்ந்திருக்கின்றனவா? சாலையில் போகும் பெண்ணைக் கையைப் பிடித்து இழுத்துக் கொலை செய்துவிட்டு அந்தப் பழியை ஒரு ஏழையின் தலையில் சுமத்திப் பாவத்தைக் கொட்டிக் கொள்ளும் தலைமுறை. ஆட்சிக்காரர்களின் அக்கிரமங்களைப் புரிந்து கொண்டு, உரிமைகளுக்குப் போராட இந்த ஏழைகளுக்கு விழிப் பூட்டுவது பற்றிப் பேசுகிறார்கள். வழக்கமாக நடக்கும் கட்சிக் கூட்டங்களில், ஆனால் கட்சிக்கு எதிர்க்கட்சிகள் மேடை போட்டுப் பேசும் போது இந்தச் சொற்கள் செவியைப் பிளக்கும். இங்கேயும் கூட நாலைந்து ஆண்டுகள் எதிரே மைதானத்தில், ஜனவரி ஒன்றாந்தேதிக்கு முந்தைய ராவில் 'கலை இரவு' என்று நாடகங்கள், பேச்சு பட்டி மன்றம் என்று நடத்தினார்கள். இவளும் பார்த்திருக்கிறாள். தப்பட்டையைத் தட்டிக் கொண்டு சட்டையின் மேல் இடுப்பிலும் தலையிலும் சிவப்புத் துணியைச் சுற்றிக் கொண்டு பாடுவார்கள். நடிக நடிகையர் பேரைச் சொல்லி, அவருக்குப் பொண்ணு பிறந்தா கொண்டாட்டம், இவங்களுக்குப் பொண்ணு புறந்தா கோலாகலம். ஆனா குடிசையிலே குப்பாயிக்குப் பொண்ணு புறந்தா கள்ளிப் பாலும் நெல்லுமணியுமா?ன்னு கேப்பாருக. ஏழையின் முன் கடவுள் ரொட்டி ரூபத்தில தான் வருவாருன்னாரு காந்தி. எங்க கட்சியே 'பிரியாணி'ப் பொட்டலத்தாலதா வளருது'ம் பான். ஆனால் இந்த நாடகங்கள் நடக்கும்போதே அக்கிர மங்கள் நடக்கும். விழிப்புணர்வு வந்ததாக இவளுக்குத் தெரியவில்லை. இப்படி நாடகம் போட்டு, மக்கள் விழிப்பு ணர்வு கொண்டு, ஆதிக்கக்காரர்களை எதிர்க்க மக்கள் கிளம்பி விடுவார்களோ என்றுதான் குத்தினார்களா?...

அந்தக் காட்சியைப் பற்றிக் கற்பனை செய்தாலே உடல் சிலிர்க்கிறது. துவளுகிறது. சங்கிரியைக் குலைத்துக் கொலை செய்த பாதகம்...

இந்த மண்ணுக்கே தஞ்சம் என்று வந்திருக்கிறார்களா?

சூது வாதறியாத பெண், தீவிரவாதிகளால் பெற்றோரை இழந்த பச்சைக் குழந்தைகளைக் கை நீட்டி அரவணைத்து வளர்க்கும் பெருங்கருணை, இந்தக் 'கசுமால' மண்ணில் பிழைத்திருக்குமா? இவர்களுக்கும் தீவிரவாதிகள் என்று முத்திரை குத்தி உள்ளே தள்ளி விடாதா?

இரவு முழுவதும் உறக்கம் பிடிக்கவில்லை. மண்டை நரம்புக்குள் பல முரண்கள் பிய்த்துப் பிராண்டுகின்றன. பயங்கள், சோகங்கள், இழப்புகள்... ஏன் இப்படி? மண்ணில் விளையாடியது, அப்பனின் தோள் மீது அமர்ந்து திருவிழா பார்த்து, பரிசலில் ஏறிச் சென்றது, சம்பு அம்மா பிசைந்து ஊட்டிய தயிர்ச்சோறு, மொடமொடவென்ற கதர்ச்சீலை யணிந்து, ஒரு துணையைக் கைபிடித்தது, பசுமையான தாலி அளித்த பாதுகாப்பு, முதல் பிரசவத்தின் போது, சரோ அம்மாவின் மாமியார் இவளைப் பிடித்துக் குடிலுக்குள் பிரசவம் பார்த்தது, அந்த முதல் அழுகை...

எல்லாமே இன்பமான பொழுதுகள். மாலையில் அந்தக் குழந்தைகள் கழுத்தைக் கட்டிக் கொண்டது, வாயில் 'கேக்' வாங்கிக் கொண்டு, அவளையும் ருசிக்கச் செய்தது, எல்லாமே மனசில் பரமசுகம் அளித்த அநுபவங்கள். ஆனால், ஒரு கையகலத்துணிக்குள் பெண்ணுடம்பின் மானத்தை மறைக்கப் போராடும், அபலையாய், மூர்க்க, வெறியர்களின் சூழலில்... சத்தியங்கள்.

எப்படி? எப்படி?... முருகா! முருகா... முருகா... கண்களை மூடித் தூங்க முயற்சி செய்கிறாள். எல்லாவற்றையும் மறக்க வேண்டும்... காலையில் எழுந்து கோபமோ, ஆத்திரமோ படாமல் வீடு துப்புரவாக்க வேண்டும். முருகா, உன்னைக் கூப்பிடுவதைத் தவிர எனக்கு ஒன்றும் புரியவில்லை.

முருகன் சூரனை 'சம்ஹாரம்' செய்யப் பிறப்பெடுத்தார். சம்பு அம்மாவுடனும் கமலியுடனும் சிவன் கோயில் முன்

நடக்கும் இந்தக் காட்சியைப் பார்ப்பார்கள். சூரனுக்கு ஒவ்வொரு தலையா முளைக்கும். பிறகு, எல்லாம் போகும். மயில் வாகனத்தில் முருகன் அங்கிருந்த வீதிகளில் மட்டும் உலா போவார். இவர்கள் இருந்த தெருவுக்கு வராது. அதனால் சம்பு அம்மா அவர்களை இரவு அழைத்துப் போவாள். அந்த சிவன் கோயில் முன் மைதானத்தில்தான் காங்கிரஸ் கூட்டங்கள் ஏற்பாடு செய்வார்கள்... பத்துப் பேர்கூட இருக்கமாட்டார்கள். பயம் தெரியாது. அவளும் கமலியும் உரத்து வந்தே மாதரம் என்று கத்துவார்கள். கமலி இப்போது எங்கு இருக்கிறாள்?

சிறிது நேரம் கூடக் கண்கள் சோரவில்லை. இப்படி இருந்ததே கிடையாது... வாசலில் அடிச் சத்தங்கள் கேட்கின்றன.

பால்வண்டியா போகிறது? பள்ளிக் கூடத்துக்குப் பக்கத்தில் பிளாஸ்டிக் தொட்டிகளை அப்படியே இறக்குவார்கள். அருகில் சாக்கடை இருக்கும். வீட்டிலேயே மாடு கறந்தார்கள். இப்போது இல்லை. பின்புறம் நாடார் கடை ஆச்சி மாடு வைத்திருக்கிறாள். அவளிடம் தான் இப்போது உழக்குப் பால் வாங்கி தோய்க்கிறாள்.... ஏதேதோ எண்ணங்கள் ஓடுகின்றன....

பேசாமல் கண்ணமங்கலம் போனால் என்ன?... அழகாயி கோயில் இருக்கும். ஆத்தில் குளித்துவிட்டு அங்கேயே ஏதேனும் வேலை செய்து, பொங்கித் தின்றால் என்ன?...

இரவு முழுவதும் புடைத்த நரம்புகள், மண்டை கனக்கச் செய்கிறது ஊர்... கண்ணமங்கலம் எப்படி இருக்கும்? அய்யாவின் மூதாதையர் ஊர். அங்குதான் அவள் திருமணம் நடந்தது. அழகாயி, ஊர்த் தெய்வம். பக்கத்தில் பாமணி வாய்க்கால். அடுத்த பக்கத்தில் காலம் காலமான பண்ணையடிமைகளின் குடில்கள் இருந்தன. ஊர்ப்

பெரியதனக்காரர்கள், மேல சாதி என்பவர்கள், ஒரே ஒரு தெருதான் ஐயமார் தெரு என்று ஒன்று இருந்தது.

நாலைந்து வீடுகள் தாம். ஏறக்குறைய அம்பது அம்பத்தைந்து வருசங்கள். அய்யாவின் பங்காளி — வகை, பெரியப்பா மகன் ஒருத்தர் தான் ஊரோடு இருப்பதாக ராஜலட்சுமி சொன்னாள். இது மிக உகப்பாக இருக்கிறது. விட்டபந்தம்—மீண்டும் தொற்றிக் கொள்ள வேண்டாம். வாய்க்கால்; காவேரி முங்கிக் குளித்து, சீலையைத் துவைத்து மரத்தில் கட்டி உலரவைத்துக் கல்லைக் கூட்டி சட்டியில் பொங்கி...

உடனே வண்டியேறிவிட வேண்டும் என்ற கிளர்ச்சியில் அவள் எழுந்திருக்கிறாள். உட்காரும் போதே தலை சுற்றுகிறது.

இதென்ன... இப்படி? ஆட்சி...!

கையை ஊன்றிக் கொண்டு சமாளிக்கிறாள். இரவு உறக்கமில்லை என்றால், பின் கட்டைத் திறந்து கொண்டு இயற்கை வாதனையைத் தீர்த்துக் கொள்ளக் கழிப்பறை நாடும் தொல்லை வரும். ஆனால் முதல் நாள் அவள் அப்படியே படுத்திருந்திருக்கிறாள். சுவரைப் பற்றிக் கொண்டு விளக்கைப் போடுகிறாள். கதவுத் தாழைத் திறக்கிறாள். வாயில் படியைக் கடந்தாள். தலை கிர்ரென்று சுற்ற, நிலை தடுமாறுகிறது. விழுந்தது நினைவில்லை.

## 28

அவளுக்கு நல்ல நினைவு வரும் போது, அவள் வண்டியில் போய்க் கொண்டிருக்கிறாள். அவளை வண்டியில் ஏற்றியது, மங்கலாக நினைவில் நிழலாடுகிறது. 'ஏம்பா, என்னிய எங்கே கொண்டு போறீங்க?...' அவள் கேள்விக்குப் பதில் இல்லை. முன்னே யாரோ வண்டி ஓட்டுகிறான். கார்...

அவள் தலையை யாரோ பற்றிச் சாய்த்துக் கொண்டிருக் கிறார்கள். யார்...? யாரோ ஒரு பெண்...

அவள் உட்கார முயலுகிறாள். ஏதோ இறுக்கிக் கட்டியிருந்த கட்டுகள் எல்லாம் அவிழ்ந்து விட்டாற்போல் உடல் வெலவெலத்துத் துவளுகிறது... முருகா...! இது என்ன பயணம்?...

கண்களை மூடி மூடித் திறக்கிறாள்.

"அப்பவே புள்ள வந்து கூட்டபோது மருவாதியாப் போயிருக்கலாம்ல! இப்பபாரு. காலம வந்து பாக்குற. கதவு துறக்கர உள்ள பூட்டிருக்கே. பின்னால வந்து, குதிச்சி, பாத்தா வுழுந்து கெடக்குது. வயிசானாலும் வீம்புல கொறவில்ல..."

ரங்கனின் குரல்தான்.

ஆக, முருகனே இவளை அப்புறப்படுத்துகிறான்.

எங்கே கொண்டு போகிறான்?

குடிலில், அந்த குண்டு, சப்பை மூக்கியின் ஆளுகைக்கா?

இல்லை.... மரகதம் கடித்துத் துப்பும் வீட்டுக்குள்ளா?

"நான் மாபாவி... மாபாவி. பிரும்மசரியம், ஒழுக்கம் எல்லாம் பொய்" என்று சுப்பய்யாவின் குரல் மின்னுகிறது.

"நான் பாவி. மன்னிக்கமாட்டேன்னு சொன்னேன்; நீ மன்னிக்க வேண்டாம்; ஆனால் உனக்கும் மன்னிப்புக் கிடையாதுன்னு போயிட்டார் தாயம்மா!"

அநு அழுகிறாள்.

இவள் எங்கே கொண்டு செல்லப்படுகிறாள்?

உலகத்தில் என்ன அதிசயம் என்று குளத்தில் இருந்த யட்சன் கேட்ட கேள்விக்கு தருமபுத்திரன் என்ன சொன் னான்? நாள் தோறும் உயிர்கள் மடிவதை மனிதன் பார்க் கிறான். ஆனால் தான் வாழ்வதைப் பற்றி கனவுகளையும்

கற்பனைகளையும் சமைத்துக் கொள்வதுதான் அதிசயம் என்று தானே சொன்னார்?

அப்படி இவள் கண்ணமங்கலக்கனவில் நின்றாள். ஆறு, கோயில், நல்லநீர், மனித சிநேகம், மாசுபடாத சூழல்... ஏதோ ஒரு வாயிலில் இவள் வண்டி வருகிறது. வண்டியிலிருந்து இறங்கி அந்தப் பெண்ணும் ரங்கனும் வீட்டுப்படி ஏற்றிக் கூட்டிச் செல்கின்றனர். இவளால் நிமிர்ந்து பார்க்கக் கூட முடியவில்லை.

அங்கே ஒரு கூடத்தில், நாற்காலியில் உட்கார வைக்கிறார்கள்.

வீட்டில் யாரும் இருப்பதாகக் குரல் கேட்கவில்லை. ஒரு சாப்பாட்டு மேசை; அதைச் சுற்றிய நாற்காலிகளில் ஒன்றில்தான் அவளை உட்காரவைத்திருக்கிறார்கள். தலை தரிக்கவில்லை. மேசை மீது கவிழ்ந்து கொள்கிறாள்.

அப்போது தான் பார்க்கிறாள். அவள் சேலை...யில்லை, உடுத்தியிருப்பது. நீளமாக கவுன்... நைட்டி, 'அது' போட்டி ருக்கிறாள். 'முருகா?' இதென்ன கோலம்? இதையா இவளுக்கு மாட்டிவிட்டார்கள்?

"ஏம்மா? நீ ரங்கன் பொஞ்சாதி மருதுதானே? என் சீலய ஏண்டி எடுத்திட்டு இத்தை மாட்டினீங்க? இதென் னடி கோலம், இந்த வயசில எனக்கு?"

"கோச்சுக்காத தாயி, நீ சீலைய நனச்சிட்டுத் தொப்ப யாக் கெடந்த. ஒடனே அது போன் போட்டுச் சொல்லிட்டு எனக்கு ஆளனுப்பிச்சிது. ஒடம்பு நாத்தமெடுக்காது?... இது புதுசுதா... என் தங்கச்சி வச்சிருந்தா. ஆபத்துக்கு ஒண்ணில் லேன்னு தூக்கி மாட்டின..." சிறிது நேரத்தில் ரங்கன் இன்னொரு பணியாளனுடன் வருகிறான்.

"நீங்க போன் போட்டப்பவே அம்மா ரூம் சுத்தமாக்கச் சொல்லிட்டாங்க..."

அவளை இருவருமாக நடத்திக் கூட்டிச் செல்கின்றனர்.

கீழே பளிங்காகத் தரை. ஒரு வாயிலில் நுழைந்து ஒழுங்கை போன்ற பகுதி கடந்து ஓர் அறைக்கு வருகிறார்கள்.

அந்த அறையில் ஒரு கட்டிலில், மெத்தை—விரிப்பு—தலையணை அதில் உட்கார்த்துகிறார்கள்.

"படுத்துக்கம்மா? உம்மவன் வூடுதா. அவுரு டில்லிக்குப் போயிருக்கிறாரு. சந்தோசமா இரு...!"

அவள் பதிலை எதிர்பாராமலே ரங்கனும் அவன் சம்சாரமும் போகிறார்கள். அவளுக்குத் துயரம் கரையும் கண்ணீர்கூட வரவில்லை.

'என் ஆயுசில நான் கட்டில் மெத்தைன்னு சாய வில்லை. இப்ப, இதெல்லாமும் தண்டனையா, முருகா?'

நான் என்ன தப்பு பண்ணிட்டேன்? கருப்பு, அசத்தியம், பொய்யின்னு துணை போக மாட்டேன்னு சொன்னது தப்பா? முருகா, என்னைக் கீழே தள்ளினியே, அப்பிடியே சாகவுட்டிருக்கக் கூடாதா?....

"ஆ... படுத்துக்குங்க பெரியம்மா! அப்புறம் நாங்கல்லாம் எப்படிப் பிழைக்கிறது?"

'வெள்ளையில் சிறு பூப்போட்ட சல்வார் கமிஸ் அணிந்த ஓர் அழகான பெண் கழுத்தில் ரப்பர் மாலை யுடன் அவளைப் படுக்க வைக்கிறாள்.

பன்னீர்ப்பூப்போல முகம். சிரிப்பு. பளீர்ச்சாயம் இல்லை. ஒரு மென்மையான மணம்; அவள் தொட்டபோது உணர்வே இதமாக இருக்கிறது.

காதுகளில் அதை மாட்டிக் கொண்டு, அவளும் நாற்காலி யில் அமர்ந்து அவள் நெஞ்சை, முதுகைப் பரிசோதிக்கிறாள். கண்களை நீக்கிப் பார்க்கிறாள். இரத்த அழுத்தம் பார்க்கிறாள்.

"பெரிம்மா, நீங்க சரியாவே சாப்பிட மாட்டீங்களோ? ஒடம்புல ரத்தமே இல்ல...?"

"ஏன் சாப்புடாம?.... நேத்துக்கூட அநு புள்ளங்களோட, இங்க புள்ள கேக் வாங்கியாந்து குடுத்தா..."

அவளுக்கு அதெல்லாம் புரிந்திருக்காது.

மென்மையாகச் சிரிக்கிறாள்.

"உங்க உடம்புக்கு ஒண்ணில்ல. நல்லா சாப்புடணும்; ரெஸ்ட் எடுக்கணும், தூங்கணும். ஒரு நாலஞ்சு நாள்ள சரியாயிடும். பிறகு உங்க அநு, புள்ளங்க, சிங்கா, அதென்ன சிங்கு?... அங்கே போயி ஜாலியா இருக்கலாம்... இப்ப உங்களுக்கு ஒரு பொண்ணு சாப்பாடு கொண்டு வரும். சாப்பிடுங்க. எந்திரிச்சி நடக்கக் கூடாது. மாத்திரை கொண்டாந்து குடுப்பேன். போட்டுட்டு நல்லா தூங்குவீங்க. எதுவானும் வோணுன்ன, இத, மணி கொண்டாந்து தலப்பக்கம் ஸ்டூல்ல வைக்கிறேன். அடியுங்க. கன்னிம்மா ஒரு பொண்ணு வருவா இப்ப. அவ உங்களுக்கு எது வோணுன்னாலும் செய்வா. வரட்டுமா?..."

மென்மையாகச் சிரித்து விட்டுக் கதவை மூடிக் கொண்டு போகிறாள்.

யார் இந்தப் பெண்? சந்திரியின் மகள்... பேரென்னவோ சொன்னாள். அர்ச்சனாவோ, என்னவோ, அவளில்லை இது... ஒரு கால் இது மரகதத்தின் மகளா? ரஞ்சிதத்தின் மருமகளா?... அந்தக் கொடியில் இப்பிடி ஒரு மலரா?... ஆனால் நஞ்சை உள்ளே வைத்திருக்கும் பூக்கூட அழகாக இருக்கிறது. இல்லை. எல்லாப் பூக்களும் தியாகம் செய்யத் தானே மண்ணில் உதிக்கின்றன?

சற்றைக்கெல்லாம் தட்டில் சாப்பாட்டுடன் கன்னி யம்மா என்ற பெண்ணைக் கூட்டிக் கொண்டு, டாக்டர் பெண் வருகிறாள். நீர்ப்பாத்திரத்தை ஓரமாக இருந்த மேசை மீது வைக்கிறாள்.

"இதபாருங்க, இவதான் கன்னிம்மா. உங்களுக்கு என்ன தேவைப்படுதோ அத இவ கிட்டச் சொல்லுங்க. உங்களுக்கு இவ ஒரு பேத்தி..." அழுந்த வாரிய பின்னலும், ஒரு பூப் போட்ட மஞ்சள் வாயில் சேலையுமாக பளிச்சென்று இருக்கும் பெண், கை குவிக்கிறாள்.

"இவங்க யாரு தெரிமில்ல? எம்.பி. அய்யாக்கு அம்மா. பெரியவங்கள இப்படிக் கும்பிட்டா போதாது. நல்லா பாத்துக்கணும். சீக்கிரம் நல்ல படியா உடம்ப குணப் படுத்தணும்."

"சரிங்க டாக்டரம்மா!"

"முதல்ல இவங்கள மொள்ள பாத்ரூமுக்குப் போக ணுன்னா கூட்டிட்டுப்போ. முகத்தைத் துடைச்சிவிட்டு, சாப்பாடு குடு. பிறகு, இதா, இந்த மாத்திரை வச்சிருக்கிறேன், மூணு மாத்திரை. குடுக்கணும்..."

"சரிங்க டாக்டரம்மா."

"அப்ப, நா வரேன் பெரிம்மா? மாத்திரை சாப்பிட்டுட்டு நல்லாத் தூங்குங்க..."

கன்னத்தைச் செல்லமாகத் தட்டிவிட்டுப் போகிறாள்.

கன்னியம்மா, கதவைத் தாழிடுகிறாள்.

அவளை மெள்ள எழுப்பி, அருகிலுள்ள குளியல றைக்குக் கொண்டு செல்கிறாள்.

ஓ... குளியலறையா? பளபளவென்று பளிங்கு. எதிரே கண்ணாடி, கழுவும் தொட்டி. கண்ணாடியில் அவள் முகத்தைப் பார்க்க, கருப்பும் வெளுப்புமாகப் பம்மென்று முடி, முகம் 'அசிங்கமாக'ப் படுகிறது. எப்போதேனும் அவள் கண்ணாடியில் முகம் பார்த்துக் கொண்டிருக்கிறாளா? புருசன் இருந்த நாட்களில் கூடக் கண்ணாடி பார்த்து முகம் சீவிப் பொட்டு வைத்துக் கொண்டதில்லை. அடங்காத முடியை ஒரு மரச்சீப்பினால் அழுந்த வாரி கையால்

சுமாராக வகிடு பிளந்து... முடிந்து கொள்வாள். ஒரு ஊசி செருக வேண்டும்... இப்போது முடி கூழையாகிவிட்டது. என்றாலும், இறுக முடிவதுபோல் செருகிக் கொள்வாள்....

உக்காருங்க...

"அடிம்மா... இதுல..."

உயர கால் தொங்கப்போட்டு உட்காரும் கழிப்புக்கலம்.

"கீழ வழுவழுன்னு இருக்கு, பத்திரம், உக்காந்துக்குங்க..." அவள் உட்கார்ந்து கொள்கிறாள். பல்விளக்க ஒரு பற்பசை தருகிறாள். நிற்க முடியவில்லை. அப்படியே விரலால் துலக்கிக் கொள்கிறாள். பல் பொடியோ, வேப்பங்குச்சியோ வைத்துத் துலக்கித்தான் பழக்கம். கடையில் ஏதேதோ பற்பொடிகள், கொடுக்கிறான். அவள் பற்களுக்கு ஒரு கேடும் இல்லை. அநுவுக்கு எப்படிப் பற்கள் தேய்ந்தும் விழுந்தும் முகத்தையே மாற்றிவிட்டன?

கன்னியம்மா, அவள் முகத்தைத் தேங்காய்ப் பூத்து வாலையால் துடைத்து, படுக்கைக்குக் கூட்டி வருகிறாள்.

பக்குவமாக பருப்பும் சோறும் ரசமுமாகப் பிசைந்து, முன்னே ஸ்டூலில் வைக்கிறாள்.

அழுக்குக் குளத்தில் தாமரைகளா?...

வயது முதிர்ந்து, உடலும் உள்ளமும் நலிந்த காலத்தில், இந்தப் பரிவும் பேணுதலும் எத்துணை ஆறுதல் அளிக்கிறது?

"கொஞ்சம் தயிரூத்தி சோறு பிசையட்டுமா பெரிம்மா? இஞ்சி ஊறு காய் இருக்கு."

"வாணாந்தாயி, எனக்குத் தாயா நிக்கிறீங்க. போதும்மா. வழக்கத்தைவுட நெறய சாப்புட்டேன். நீ போட்ட கையி..." என்று அந்தக் கையைக் கண்களில் வைத்துக் கொள்கிறாள். கையில் ஈரம் படிகிறது. சம்பு அம்மா, நீங்க இந்த ரூபத்துல வந்திருக்கீங்களா? என்னிய இந்தக் கண்ணம்மாளக் கரை யேத்த கன்னியம்மா ரூபத்துல வந்திருக்கீங்களா? அம்மா,

உங்களுக்கு நா ஒண்ணுமே செய்யலியே?...'' என்று விம்முகிறாள்.

மாத்திரை சாப்பிட்ட சற்று நேரத்தில் அவள் மயங்கி, உறங்கிப் போகிறாள். கனவுகள், பிரிசல்கள் எதுவும் இல்லாத ஆழ்ந்த உறக்கம். நேரம் என்ற உணர்வையே மிதித் தெறிந்துவிட்ட உறக்கம்.

கண்ணை மெல்லத் திறக்க உணர்வு வரும்போது, அறைக்குள் வெளிச்சம் பரவி இருக்கிறது.

உனக்கு எது தேவைப்பட்டாலும் 'மணி அடி, கன்னி யம்மா வருவாள்' என்று டாக்டர் பெண் சொன்னது நினை வுக்கு வரவில்லை. மெள்ள எழுந்திருக்கிறாள். வயிற்றில் உள்ள பலங்களைத் தோண்டிப் போட்டுவிட்டாற் போல் பலவீனம் ஆட் கொள்கிறது. நரம்புகளே அறுந்தாற் போன்று துடித்த நிலை இல்லை என்றாலும், நிற்கத் திராணி இல்லை. மெல்ல கட்டிலில் நகர்ந்து சுவரைப் பற்றி நடந்து குளிய லறைக்கு வருகிறாள். விழுந்து விடுவோமோ, பளிங்குத் தரை பாழாகிவிடுமோ? கேலி பேசுவார்களோ என்றெல்லாம் அச்சம் வதைக்கிறது. தரையின் அப்பழுக்கற்ற தன்மை பாழாகிறது. போர்க்களத்தில், கோழைக்கும் வீரம் வருமாம். அவள் எப்படியோ சமாளித்து, வாளியில் நீர்பிடித்து ஊற்று கிறாள். கழுவ முடியவில்லை. மெள்ள எழுந்து வாய் கழுவிக் கொள்கிறாள். கண்கள் பாதாளத்தில் போய், முகம் தேய்ந்து சோர்ந்து, வீம்பும் துணிவும் அடிபட்ட சருகாய்க் காட்சி அளிக்கிறாள்.

மெள்ள சுவரைப் பற்றிக் கொண்டு படுக்கைக்கு மீள்கிறாள். ஸ்டூலில் உள்ள மணி, கவனத்தைக் கவருகிறது.

அதை அடிக்கிறாள்.

கன்னியம்மா வருவாள்; வந்ததும், 'இந்தச் சனியன் நைட்டி வேண்டாம், எனக்கு சீலை கொண்டு வந்து தாம்மா, வெள்ளைச்சீலை...' என்று கேட்க வேண்டும்.

கதவு திறக்கப்படுகிறது.

கன்னியம்மா இல்லை. ஒட்டு மீசை வைத்துக் கொண்டாற் போல் ஒரு பணியாளன். அவன் மேசையைப் பார்க்கிறான்.

"இன்னா பெர்சு? அதா நாஷ்தா இட்டிலி சட்டினி சாம்பாரு வச்சிகிற, சாப்புடல?..." பிளாஸ்கைத் தூக்கிப் பார்க்கிறான்.

"காபியும் அப்படியே கீது?... மணி ஒண்ணடிக்கப் போவுது. லஞ்ச் அவுரு வந்திடிச்சி. இந்நேரமா தூங்கின?"

"எனக்கு இட்லி காபியெல்லாம் வாணாந்தம்பி... கண்ணம்மா இல்ல? அவளக் கொஞ்சம் வரச் சொல்லுங்க."

"யாரு அது, பெர்சு?..."

"...அ.... கண்ணம்மால்ல, கன்னிம்மா. அவதா எனக்கு எதும் செய்யும்னு டாக்டரம்மா சொன்னாங்க... அவங்க இல்லியா?"

"ஆரு, அர்சிதா மேடமா? அவங்க அய்யா கூட டெல்லிக்கில்ல போயிகிறாங்க?..."

"அவங்க என் பேத்திதா. இவங்க வேறப்பா, நேத்து வந்து பாத்து, மாத்திரை குடுத்தாங்க..."

"ஓ, அவங்களா, அவுங்க உனக்குப் பாத்து மாத்திரை மருந்து குடுத்தாங்களா?"

"ஆமா. அவங்கதா கன்னிம்மாளை இங்க கூட்டி வந்தாங்க. நேத்து தூக்கமாத்திரை குடுத்திட்டாங்க போல இந்நேரம் தூங்கி இருக்கிறேன்."

"கன்னிம்மா இங்க இல்ல, சிந்தாமணி பங்களாவுக்குப் போயிருக்கும். நான் இப்ப லஞ்ச் கொண்டாறேன். அசுவினி மேடம் ஆபீஸ் ரூமுல இருந்தா சொல்லி அனுப்புறேன்..." என்று சொல்லிவிட்டு நாஷ்தா சமாசாரங்களை எடுத்துப் போகிறான்.

இதுவரையிலும் மரகதம், மஞ்சு, சந்திரி யாருமே இங்கே வரவில்லை. பெரிய அரண்மனைகளில் இப்படித்தான் நடக்குமோ? சிந்தாமணி பங்களா என்பது மூத்தவளின் வாசஸ்தலமோ?

அவள் வாழ்ந்த உலகுக்கும் இந்த நடப்பியல் உலகுக்கும் எத்தனை வித்தியாசம்?

அவள் மகனுக்கு எத்தனை மகன்கள், எத்தனை மகள்கள்?

அந்த ஒட்டு மீசை சாப்பாடு கொண்டு வருகிறான்.

பெரிய தட்டில் சாப்பாடு வைத்து மேலே இன்னொரு தட்டால் மூடிக் கொண்டு வருகிறான். கட்டிலுக்கருகில் ஸ்டூலில் வைக்கிறான். தண்ணீரையும் கிளாசில் ஊற்றி வைக்கிறான்.

தட்டைத் திறந்து விட்டு, “பெர்சு, குர்மா பொரியல், அல்லாம் ஸ்பெசல் இன்னிக்கு. உனக்குன்னு கொண்டாந்தி ருக்கிறேன்... சாப்பிடு... வர்ட்டா?” என்று போகிறான்.

மசால் நெடி மூக்கைத் துளைக்கிறது.

சிறு கிண்ணங்களில் குழம்போ, குர்மாவோ ஏதோ வைத்திருக்கிறான். பருப்பும் ரசமும் போட்டுப் பாங்காகப் பிசைந்து கொடுத்த அந்தச் சோறு இல்லை இது....

சோற்றைத் தொடவே கை கூசுகிறது. கீழே அவன் வைத்த தட்டை எடுத்து மூடிவிட்டுப் படுக்கிறாள்.

உண்ணாவிரதம் என்று அவள் அறிந்து இருந்ததில்லை. ஆனால் எத்தனையோ சந்தர்ப்பங்களில், வயிற்றுக் குணவு கொள்ளத் தோன்றியதில்லை. நேரம் இருந்ததில்லை. பசி தெரிந்ததில்லை. அவள் கால்களும் கைகளும் நன்றாக இயங்க, சுதந்தரமாக இருந்த நாட்களில் பசித்து, பட்டினி கிடந்ததில்லை.

சிறை உண்ணாவிரதம் பற்றிச் சொல்வார்கள். சுதந்தரம் வந்த பின்னரும், தொழிற் சங்கம், போராட்டம் என்று பெண்கள் சிறைக்குப் போனார்கள். உண்ணா விரதம் இருக்கும் போது, உறவினர்களை விட்டு நல்ல நல்ல பண்டங் களைக் கொண்டு வந்து கொடுக்கச் சொல்வார்களாம். ஆனால், உயிர் போனாலும், கோரிக்கை நிறைவேறாமல் உண்ணா விரதத்தை முடித்துக் கொள்ள மாட்டார்கள்.

இப்போது இவளுக்குப் பசிக்கிறது. ஆனால் எழுந்திருக்க வேண்டாம். கண்களை மூடிக் கொண்டு கிடக்கிறாள்.

எத்தனை நேரமாயிற்று என்று தெரியவில்லை.

''ஆயா...ஆயா...? எந்திரி... கன்னிம்மா சோறு கொண்டாந்திருக்கிறேன். வாழக்காப் பொரியல்... வெந்தியக் குழம்பு வச்சிருக்கிற. எந்திரு, பாவம், கசுமாலங்க, கொல பட்டினி போட்டுட்டானுவ... எந்திரம்மா... மணி ஓம்ப தடிக்கப் போவுது..."

இது நிசமா, மறுபிறப்பா?...

"அந்தப் பொறுக்கி வோனுன்னே கோழிக்குருமாவும் அதும் இதும் கொண்டாந்து வச்சிட்டுப் போயிருக்கு! என்ன, ரஞ்சிதம்மா கூட்டுவிட்டாங்க. அவுங்க பங்களாலதா நா இருப்பேன். அசுவினி மேடம் கூட்டியாந்தாங்க, வந்தேன். ம், வா, பாவம்..."

ஈரத்துண்டால் முகம் திருத்தி, அவளைச் சாப்பிட வைக்கிறாள்.

"நீ சாப்பிட்டியா கன்னிம்மா?"

"என்னபத்தி இன்னா ஆயா? நீங்க வயசானவங்க. சீக்காளி. சாயங்காலந்தா அசுவினி மேடம் ஃபோன் போட்டு விசாரிச்சாங்க. என்னக் காலமேயே அங்க போகச் சொல்லிட்டாங்க. இங்க, சந்திரி அம்மாதான் எலலாம் பாக்கும். அவங்க கட்சி காரியமா வெளியூர் போயிட்

டாங்க...'' சாப்பாடு கொடுத்து முடித்துத் துடைத்து விடுகிறாள். குளியலறைக்குக் கூட்டிப் போகிறாள்.

அப்போது கதவைத் திறக்கும் ஓசை கேட்கிறது.

அறைக்குள் அசுவினி—டாக்டர் பெண் வந்திருக்கிறாள்.

"எப்படி இருக்கிறீங்க பாட்டியம்மா?''

"....வாம்மா, நீ நல்லா இருக்கணும். நீ சொன்னாப்புல எனக்கு ஒண்ணில்ல. மொதல்ல, எனக்கு என்னோட வெள்ள சீல ரவிக்கை வோணும்மா. நேத்து, இன்று முழுக்கத் தூங்கி இருக்கிற. குளிக்காம, கழுவாம, நா இப்பிடி சோறு தின்னதில்ல... என்ன மாத்திர குடுத்தியோம்மா, தூங்கி, பசி... சோறு... பாவச்சோறுன்னு நெனப்பே. ஆனா... ஒங்க அன்பு எனக்குப் புதிசா இருக்கு. யாரு பெத்த பொண்ணுகளோ, நீங்க நல்லா இருக்கணும். என்சீல ஒண்ணும் எடுத்துக்காம, இத்த மாட்டி... கண்ணு, எனக்கு சீல கொண்டாந்து குடுத்திரு. நல்லாப் போச்சி. நான் பாட்டுக்கு என் வழில போயிடறேன்...''

"சேலைதானே? நிச்சயமா தாரேன். இப்ப, நீங்க நடந்து போக முடியுமான்னு பாத்து சொல்லுறேன்... படுங்க...''

"கன்னியம்மா, இதெல்லாம் எடுத்திட்டுப் போ...''

அவள் குழாய் வைத்து இவளைப் பரிசோதிக்கிறாள்.

பிறகு கதவைத் தாழிட்டுவிட்டு உட்காருகிறாள். அவள் கையைத் தன் கையில் வைத்துக் கொள்கிறாள்.

"உங்களுக்கு இங்கே இருக்கப் பிடிக்கலியா?''

"வாணாம்மா. எங்கியோ பாடி பரதேசி மாதிரி இருக்கிற சுகம் இதுல இல்ல. நீ யாரோட மகன்னு, எனக்குத் தெரியல. மகன், மகள், உறவு, சொத்து சுகம் எல்லாம் பாவமலை மேலே நிக்கிறதுன்னு மனச்சாட்சி குத்துது. அதுனாலே தான் எல்லாம் துறந்தேன். நான் அண்டிய இடம் சத்தியம் குடியிருந்த கோயில். இப்ப அங்க, ஆசுபத்திரி கட்டுறாங்களாம்; 'லாட்.ஜ்' கட்டுறாங்களாம். என்னப் போ போன்னு வெரட்டினாங்க— ரா முச்சூடும் தூக்கமில்ல. எப்படி

வுழுந்தேன்னு தெரியல. முருகன்... என்ன நினச்சிருக்கிறான், எந்த கதிக்கு ஆளாக்கப் போறான்னு தெரியல...''

''ஏம்மா, உங்க சொந்த மகன் வூட்டுக்குத்தானே வந்திருக்கிறீங்க?''

''சொந்தம். இந்த வயித்தல எடம் குடுத்தேன். அவங்கப் பாரு, குடிப்பாரு. ஆனா... கட்டின பொண்சாதியத் தவுர ஒரு நிழலக்கூட அந்த எண்ணத்துல நினைக்கல. அந்தப் பெரி மனிசர், பத்து நாளயப் புள்ளயக் கையிலெடுத்து, 'மோகனதாசு'ன்னு அந்த மகாத்துமா பேர வச்சாரு. "தாயம்மா, நம்ம புள்ள பெரி...ய ஆளா வருவாம்பாரு!"ம் பாரு. அவரு எதும் பார்க்காம நல்ல படியாப் போய்ச் சேர்ந்தாரு...''

அவள் இவள் கையை அழுத்திப் பிடிக்கிறாள். அவளும் உணர்ச்சி வசப்படுவது தெரிகிறது... இவள் ரஞ்சிதத்தின் இளைய மகளா? பேரன் மனைவியா?

''கண்ணு, நீ யாருன்னு இன்னும் தெரியலம்மா?''

''நான் யாரா?...''

கேட்டுவிட்டுப் புன்னகை செய்கிறாள்.

''நிச்சியமா தெரியணுமா?...''

''உனக்குச் சொல்ல விருப்பமில்லேன்னா வேணாம். ஒண்ணே ஒண்ணு கேட்டுக்கறேன்...''

''உங்களுக்குச் சேலை கொண்டுக் கொடுக்க வேணும். வெளியில கொண்டுவிட வேணும்... அதானே?''

''முருகா, எனக்கு அது போதும். ரோட்டுமேல சின்னஞ் சிறுசுகல்லாம் வண்டிகளுக்குப் பலியாகுதுங்க. அப்படி எங்கியாலும் நா ரோட்டு மேல வுழுந்திருக்கக் கூடாதா?...''

''ஆமாம் பாட்டிம்மா. இந்த முருகனுக்குக் குசும்பு ரொம்ப. என்ன செய்ய, அவுரே ரெண்டு பொண்டாட்டிக்

காரரு. பத்தாததுக்கு, எக்கச்சக்கமான பக்தர்கள் வலையிலே சிக்கிட்டு பண்ணாட்டு வாணிப பேரங்களில் தவிச்சிட்டி ருக்காரு. அதான் குளறுபடி பண்ணிட்டாரு...”

“நீ யாரம்மா சொல்லுற?”

“உங்க கடவுள் முருகனத்தான்...”

அவள் சட்டென்று நிலைப்படுகிறாள். இந்த இளந்தலை முறை பற்றி அவளுக்குத் தெரியாது. அவன் மகள் தானோ?

“ஏங்க, நா கேக்குற. நீங்க கும்புடற சாமி, முருகனோ, ராமனோ, ஈசுவரனோ, யாராக வாணாலும் இருக்கட்டும். மூலைக்கு மூலை கோயில், கும்பாபிஷேகம், தீமிதி, காவடி, பாயசம்னு கும்பிடுறாங்களே, எங்கியானும் ஏழைக்கு நியாயம் நடக்குதா? நா கவுர்மென்ட் ஆசுபத்திரிலதா இருக் கிறேன். சீட்டுப் போடுறதிலேந்து, ஆபிரேசன் டேபுள் வரை யிலும் பணம் உருவுறாங்க. மயக்கம் குடுக்குமுன்ன, பணம் கேக்குறான். இல்லேன்னா, எறக்கிவுட்டுடறான். எங்கியா னும் அற்புதம் நடக்குதா?... கட்சி... கட்சிக்காக ஏழை, கட்சி மாற, புதுக்காட்சி துவக்க, எல்லாத்துக்கும் அவுங்க வேண்டி இருக்கு. பதவி புடிக்க, அவங்களையே சுறண்டிக் கொள்ளை யடிக்க... சினிமா, டி.வி. அது இதுன்னு எத்தினியோ வலை. அதுக்குள்ள உங்க சாமியே வுழுந்திட்டாரு...”

“கண்ணு, நீ சொல்லுறது அத்தினியும் மெய்தா...”

அவள் உருகிப் போய், ஒரு பஞ்சையின் பிள்ளையைக் காப்பாற்ற அந்த வீட்டுக்கு வந்து அவமானப்பட்டதைச் சொல்கிறாள்.

“பாட்டி, கொஞ்சம் பொறுத்துக்குங்க. உங்கள நல்லா ஆக்கி, வெளில கொண்டுவுட்டுடறேன். நீங்க, இளைய வங்கள ஒண்ணு சேத்துப் போராடத் தயாராகணும்... உங்களுக்குத் தெரியுமா? இது ‘கெஸ்ட்ரூம்’னு பேரு. எத்தினி பொண்ணுகளக் கதறக்கதறக் குலைச்சிருக்காங்க தெரியுமா? சினிமா, டி.வின்னு மயங்கி, அழகழகான பொண்ணுகள்

இவங்க வலையில் விழுந்து... எங்கம்மா...” கண்கள் குளமாகின்றன.

“‘நிர்வாணக்காதல்’னு ஒரு படம். பேரே கழிசடை. அது வெளிவரல. எங்கக்காவுக்குச் சான்ஸ் குடுக்கிறதா, சொல்லி, இங்கே கொண்டாந்து, குலைச்சானுவ. அப்பன் அன்னிக்கு, மகன் இன்னிக்கு.”

“சிவா சிவா....” என்று காதைப் பொத்திக் கொள்கிறாள்.

“தற்கொலை, யாரையோ டயரக்டரைக் காதலிச்சா, ஏமாற்றம்னு’ பத்திரிகைக்காரங்க மூடிட்டானுவ.... எல்லா மீடியாவும் இவங்க கிட்டத்தானே இருக்கு? அமுக்க வச்சி, மலத்தைத்தின்னு பிழைக்கிற தொழில்களாப் போயிட்டுது...”

“அம்மா, நீ வேற எதுனாலும் பேசு. ரணத்தைக் கிளறும் ஆபிரேசன் வாணாம். ரொம்ப வலிக்குது... உன்னியப் போல ஒரு பத்து, நூறு ஆயிரம் பேருக சேரணும். நான் சாவக் கூடாது...”

“வாங்க. அதான் ஸ்பிரிட்...” கையை அழுத்தமாகப் பற்றுகிறாள். ‘டொக்டொக்’ கென்று கதவு தட்டப்படுகிறது.

எழுந்து கதவைத் திறக்கிறாள்.

“குடீவினிங் மேடம். இப்பதா இவங்கள— பி.பி. பாக்க வந்தேன்....”

“பார்த்தாச்சில்ல?... போ!” அவள் மின்னல் போல் இவளை ஒரு கணம் பார்த்துவிட்டுப் போகிறாள்.

“அத்தே...? வாங்கத்தே...” என்றவள் அறை வாயிற் படியில் நின்று அவள் ஒழுங்கை கடந்து செல்வதையே பார்க்கிறாள். பிறகு கதவைச் சாத்திவிட்டு வருகிறாள்.

“இதுங்கல்லாம் கொஞ்சம் சந்து தெரிஞ்சாலே நுழைஞ்சு பத்திக்கும். தாசி குலம். சீரழிஞ்ச குலம். இவ பாட்டி தொண்ணூறு வயசு, இன்னும் இருக்கா. இதுங்களல்

லாம் இந்த வட்டத்துக்குள்ள நுழயவுடக் கூடாதுன்னு சொன்னா, உங்க மகன் காதிலியே போட்டுக்கிறதில்ல. நம்ம வீட்ல, சின்னஞ்சிறிசு நடமாடுற இடம்.

"இவ சிரிச்சிக்குழஞ்சி, சாதுரியமாப் பேசி, புளியங் கொம்புன்னு புடிச்சிக்குவாளுவ. லாட்ஜிலை ஓட்டல்ல வாடிக்கை வச்சிட்டு, வயித்தில வாங்கிக்கிட்டு, உங்க மகன்தான்னு சத்தியம் செய்யத் துணிஞ்சவளுக..."

அவளுக்குக் காதுகளைப் பொத்திக் கொள்ளக் கைகள் பரபரக்கின்றன. பாம்பின் கால் பாம்பறியும்... இவள் அப்படி வந்தவள்தானே?

"ஏம்மா, அநாவசியமா ஒரு பொண்ணு இன்னொரு பொண்ணைப் பழி சொல்லணும்...? டாக்டருக்குப் படிச்சிருக்கிற பொண்ணு..."

"அத்தே, அப்படியெல்லாம் நினச்சி எடபோடக்கூடாது. இந்தக் காலத்தில இதுபோல பொண்ணுகளுக்கு வெக்கம் மானம் கூச்சம் ஒண்ணுமே கிடையாது. கூட்டத்துல தோள் உரசினாக்கூட, காது மூக்கு வச்சி, இவன் கற்பழிச்சான்னு கோர்ட்டுல துணிஞ்சி விவரிக்கும் சாதி. நாமன்னா செத்திடுவம். அதும் இவ டாக்டர்ங்ற பேருல லைசன்ஸ் இல்லாம நுழையிற வருக்கம். அதும் இது பெரிய ரவுடி.. மெடிகல் படிக்கணும், இன்ன குலம், மறுவாழ்வுன்னு உதவி கேட்டு வந்தா. சூடிகையா இருக்கான்னு, இவங்க உதவி செஞ்சாங்க. அதையே சாக்கா வச்சிட்டு, அக்காவைப் பாக்க வரும். நானும் கபடில்லாம தான் நினச்சிருந்தேன்... இப்ப நீங்க கூட அன்னைக்கு அந்தப் பையனுக்காக நியாயம் சொன்னீங்களே. எந்தப் பயலோ, எவ கையையோ புடிச்சி இழுத்திருக்கிறா. விபரீதம் நடந்திடிச்சி. அத நம்ம பையன் மேல போட்டு கேசு தொடுக்கத் தூண்டுனதே இவதா. ஒரு குடும்பத்துக்குள்ளியே எதிர்க்கட்சி பண்ணுது. மானம் கெட்ட சன்மங்க. இந்த வூட்டுமருவன்னு சொல்லிட்டுத் திரியிறாளாம். இவ படிச்சிப் பாஸ் பண்ணா, சர்வீஸ் பண்ணனும்..."

தன் குற்றங்களை மறைக்க, பிறர் முகத்திலும் குப்பையை வீசுவதுதான் பரிகாரமா?... அவள் பேசவே யில்லை.

"சரி, அது கெடக்குது விடுங்க, அத்தை. கடசில நீங்க வந்து சேந்தீங்களே, அதாம் பெரிசு. நா கும்புடாத தெய்வம் இல்ல. ஒவ்வொருத்தரும் வந்து கூப்புட்டு, நீங்க வரயில்ல. அவங்களுக்கு இதே குறையிலதான் 'அட்டாக்' வந்திச்சி. இத இப்ப கூட்டம்னு போயிருக்காங்க. அர்ச்சிதா கூடப் போயிருக்கு. அது யு.எஸ்.ல படிச்சிதா, அதுதா ரொம்பக் கவனம். நா, இத இப்பக்கூட ரெண்டுநா, திருப்பதிக்குப் போயி, அங்கப்பிரதட்சிணம் பண்ணிட்டு வார. திருக் கல்யாணம் பண்ணி வைக்கிறேன், கேசுகீ செல்லாம் போகட் டும்னு வேண்டிட்டிருக்கிற.... அங்க தங்கிருக்கிற காட்டேஜ்ல அக்காதா ஃபோன் போட்டா. அத்த தல சுத்தி விழுந்திட் டாங்க, உடனே ரங்கன இங்க கொண்டாரச் சொல்லி ருக்கிறன்னு... நல்லாப் பாக்கச் சொல்லுங்க. ஸ்பெஷலிஸ்ட் சுந்தரராசை வந்து பாக்கச் சொல்ங்க, ஸ்கேன்'கீன்' எதுன்னாலும், என்ன செலவானலும் பாக்க வோணாம்னே. சாப்புட்டீங்களா?... துரும்பா எளச்சிட்டீங்க..."

மூச்சு விடாமல் பட்டுப்பாய் விரிக்கிறாள்.

"உங்கக்கா ரஞ்சிதம் இந்த வூட்ல இல்லையா?"

"இதே காம்பவுண்டுதா. சொல்லப்போனா, அவுங்கதா இங்க படுத்திருப்பாங்க. அக்காவுக்கு அந்த ஆபிரேசனுக்குப் பிறகு நடமாட முடியல. தெரபிஸ்ட் வராங்க. கால்ல, நாலு விரல எடுத்திட்டாங்க. இப்பக்கூட அத்தையப் பாக்கணு முன்னாங்க. பாக்கலாம்னு சொல்லிட்டு வந்தேன். உங்களுக்கு எது வோணுன்னாலும், தயங்காம கேளுங்க. நானும் உங்க சந்திரி போலதா..."

அவள் கையைப் பற்றுகிறாள்.

"எனக்கு என்னாம்மா வேணும்? இந்த எளவு 'டிரஸ்' எனக்கு ஒடம்பையே அறுக்குது. என் வெள்ள சீல, ரவிக்கை ரெண்டும் அங்கே அந்த வூட்டுல தகரப் பொட்டில இருக்கு. அதை ரங்கனுக்கு போன் போட்டுச் சொல்லிக் கொண் டாரச் சொன்னாப் போதும்..."

"அந்த சீலதான் வேணுமா? இப்பவே ஃபோன் போடு றேன்... நான் உங்களுக்குப் புதிசா, அரை டசன் வெள்ளைச் சேலை, நல்ல மெல்லிசு ஆர்கன்டியோ, ஃபுல்வாயிலோ, செட்டா கொண்டுவரச் சொல்றேன். வயசுகாலத்துல நீங்க சவுரியமா இருக்கணும்..."

அவள் பேசிக் கொண்டே போகிறாள். அவள் உணர்வில் சேலையைத் தவிர வேறொன்றும் புரியவில்லை.

## 29

காலையில் விழிப்பு வந்து எழுந்து உட்காருகிறாள்.

"நீங்க உடம்பு நல்லாகணும். எழுந்து, உங்க சேலையை உடுத்து வெளியே போகணும். ஆயிரமாயிரம் பேர் உங்களைப் போல் உறுதியாகப் போராடுபவர்களைச் சேர்ப்பீர்கள்..."

இதுதானே டாக்டர் பெண் சொன்ன கருத்து?

ஆங்காங்கு இருக்கிறார்கள். குடும்பம் குடும்பமாகக் கிராமத்தில் இருந்து பெயர்ந்து, பூமிதேவிக்குச் சொறி சிறங்கு பற்றினாற் போல் குப்பை மேடுகளிலும் சாக்கடைத் தேங்கல் களிலும் விளையாடும் தலைமுறைகளை வளர்ப்பவர்கள்... மாறவேணும்.

"ஆயா, வணக்கம். எப்டீகிறீங்க?" கையில் பிளாஸ்டிக் பை முடமுடக்கிறது.

"நல்லாயிட்டேன் கன்னிம்மா, சீலை கொண்டாந்தி ருக்கியா?"

"இந்தாங்க, வெள்ள சீல இல்ல. இன்னிக்கு எப்படியும் வாங்கியாந்திருவ." அவள் பையைத் திறந்து துணிகளை எடுக்கிறாள். இரண்டு உள்பாவாடைகள்; இரண்டு வெள்ளை ரவிக்கைகள். தொட்டால் வழுக்கும் இரண்டு சேலைகள். ஒன்று வெள்ளையில் சிறு சிவப்புப் பூக்கள் போட்டது; இன்னொன்று மஞ்சட்பூக்கள் போட்டது. அவள் எட்டுகஜம் சேலை—வெள்ளையில் பின் கொசுவம் வைத்துத் தான் உடுத்துவாள். அப்படியே பழக்கமாயிருக்கிறது. கதரில் பூப்போட்ட சேலை உடுத்திய காலம் உண்டு. பிறகு உள்பா வாடை உடுத்தி ஆறுகஜம் சேலை உடுத்தினாள். கைத்தறிச் சேலைதான். பஞ்சமி இறந்து போன பிறகு அவள் வெறும் வெள்ளைச் சேலை என்று மாறிவிட்டாள். குஞ்சிதம் துணிக் கடையில், காதிபந்தாத் துணியே விற்பான். அவன் கடை யிலேயே ஒரு தையற்காரன் உண்டு. அதே துணியை இவ ளுக்கு கழுத்து மூடி, இடுப்பு இறங்க தைத்துக் கொடுப்பான்.

காலைக்கடன் கழித்து, நீராடி, புதிய ஆடைகளை அணிந்து கொள்கிறாள். இந்த மாதிரி உடைகள் இவள் இது வரை அணிந்ததில்லை. ரவிக்கை தொளதொளவென்றி ருக்கிறது கழுத்து இறங்கி, இடுப்பு ஏறி...

"இது, ரஞ்சி அம்மாவோட அம்மாவுக்குத் தச்சி வச்சது. எடுத்துக் குடுத்தாங்க. பணம் குடுத்திருக்காங்க. நான் அப்பால வெள்ள சீல எடுத்தாரேன்... போயி, நாஷ்தா கொண்டாரேன்" என்று போகிறாள்.

நைட்டி உடைமாறினாலும், இந்த உடை ஏதோ சர்க்கஸ் கோமாளி போல் தோன்றுகிறது, பின் முதுகை இழுத்து இழுத்து விட்டுக் கொள்கிறாள். சிறையில் இருப்பது போல் ஓர் உணர்வு. அறையின் ஒருபுறம் குளியலறை. சிறு இடைவெளி. பின் வாயில் கதவைத் திறக்கிறாள். காலியான பூச்சு வர்ணத்தகரங்களும், செடிகளில்லா மண் தொட்டிகள்,

தட்டுமுட்டுகள் அடங்கிய தாழ்வரை. சிறு மண் முற்றம். அதில் புல்லும் முள்ளும் வளர்ந்திருக்கின்றன. தலைமறையும் உயர்ந்த சுவர். அந்த எல்லைச்சுவரின் மீது கண்ணாடித் துண்டுகள் பதிக்கப்பட்டிருக்கின்றன.

.... அசுவினி சொன்ன சொற்கள் அந்தக் கண்ணாடிச் சில்லுகளில் நிழலாடுகின்றன. அபலைப் பெண்களின் குரல் களை அவை வெளியே விடாமல் வாங்கிக் கொண்டிருக்கும்.

“இன்னாம்மா, கதவத் துறந்திட்டுக் குச்சி போவலா மான்னு பாக்குறியா?”

தூக்கிவாரிப் போட்டாற்போல் திரும்பிப் பார்க்கிறாள்.

கன்னிம்மாதான். அகலப்பொட்டு. பளீரென்று சிரிப்பு. கழுத்தில் பருமனான தாலிச்சரடு...

“ஒண்ணுமில்லம்மா, சும்மா உக்காந்தே பழக்க மில்லையா, கதவு இருக்கேன்னு துறந்து பாத்தே...”

“வாங்க, சுடசுட பொங்கல் கொணாந்திருக்கிறேன்...” அவள் திரும்பி வருகிறாள். தட்டில் பொங்கல், சட்னி.... இப்படி ஒரு காலம்... சாப்பிடுமுன், “நீ ஒருவாய் சாப்பிடு கன்னிம்மா?”

“ஐய்யே, நான்லாம் இப்ப சாப்புடமாட்டே...”

“ஏன்...? நீ ஒருவாய் சாப்புட்டாத்தா நான் எடுப்பேன். நானே குடுக்கிறேன்... வாயத் தொற?”

அவள் சிரிப்பும் சந்தோசமுமாக மறுக்கிறாள்... “அட இன்னா நீ... யார்னாலும் பாத்தாங்கன்னு வச்சிக்க, என்னியக் கழுத்தப்புடிச்சி வெளிலே தள்ளி போலீசுக்கும் குடுத்திருவாங்க. வாசல்லியே போல்சு உக்காந்திருக்கு தெரியுமில்ல?”

“இல்ல கன்னியம்மா, தெரியாமதா கேக்குற, போலீசில புடிச்சிக் குடுக்கிற அளவுக்கு நீ என்ன குத்தம் செஞ்சே,

ஏன் பயப்படுற? நாம் பாத்துக்கறேன். நீ பாதி நான் பாதி சாப்பிடுவம்..."அவள் உருகிப் போகிறாள்.

"போதும், போதும், நான் எங்காத்தாளயே பாக்குறேன், அவ என்னில் எப்படியோ பாடுபட்டு, முதல்ல எனக்கு ஊட்டுவா. அப்பன் குடிகாரன். அவன் அடிச்சே செத்தா. இன்னொருத்திய வூட்ல கொண்டாந்தா. அவ என்ன இஸ்கூலுக்குத் தொரத்திட்டு எல்லாம் தின்னுக்குவா. ஆப்பக்கட வச்சிருந்தா. இஸ்கூல்ல போடுற சோறுதா. அப்பன் லாரி மோதி செத்துப் போச்சி. நஷ்ட ஈடுன்னு ஒரு லட்சம் குடுத்தாங்க. அத்த வாங்கிட்டு அவ ஓடிட்டா. எங்க பக்கத்து வூட்ல ஒராளு இருந்தாரு. அவுரு கிரீ ஆசுபத்திரில வார்டுபாயா இருந்தாரு. அப்ப ரஞ்சி அம்மாக்கு ஆபுரேசனாகி ரொம்ப ஒடம்பு காயலாவா இருந்தாங்க. பாவம், அவங்களுக்கு வூட்டோட இருந்து கவனிச்சிக்கத்தா வந்தே. அப்பதா நா மனிசி ஆயிருந்தே.... அப்பிடிதா இங்க வந்த..."

இதைச் சொல்லிவிட்டு, அவளை மார்போடு— தலையைச் சாய்த்து அணைத்துக் கொள்கிறாள்.

"தாயி, ஆயா, எப்பிடி வேணாலும் வச்சுக்க, நீங்க போறச்சே இந்த எடத்துலேந்து என்னியக் கூட்டிட்டுப் போயிடுங்க. உங்களுக்குக் கடசி வர ஒழச்சி, என் கண்ணா காப்பாத்துவே. இது அசிங்கம் புடிச்ச எடம்..."

கதவு தட்டப்படும் ஓசை...

சட்டென்று சுதாரித்துக் கண்ணைத் துடைத்துக் கொண்டு கதவுத் தாழைத் திறக்கிறாள்.

வந்தவள் சந்திரி... கன்னியம்மாளை உறுத்துப் பார்க்கிறாள்.

"நீயா? கதவைத் தாப்பா போட்டுக்கிட்டு என்ன ரகசியம்? நாஷ்தா குடுத்தாச்சில்ல? எல்லாம் எடுத்திட்டுப் போ?"

கல்பட்ட நாய்க்குட்டி போல சுருண்டாலும் சமாளிக்கிறாள்.

“இல்லீங்க டாக்டரம்மா, அவங்க டிரஸ் பண்ணிட்டாங்க. சாத்துன.”

“ஆமாமாம். எல்லாத்துக்கும் பதில் வச்சிருப்பியே? இவங்க பதினெட்டு வயசுப் பருவம். கதவ சாத்தினாளாம். போ, போ, அந்த வூட்ல இருக்கறவ, இங்க எதுக்கு வரணும்? இங்க குருவம்மா, லச்சுமி ஆரானும் பாத்துப்பாங்க, நீ வாயக் கய்யப் பொத்திட்டுப் போ!” இவள் சுருண்டு போகிறாள்.

சந்திரியா! நர்ஸ் வேலைக்குப் படித்த அந்த சந்திரியா! கனடாவிலோ அமெரிக்காவிலோ யாரையோ கொச்சிக்காரனை கல்யாணம் பண்ணிக் கொண்டாளாம்...

“யம்மா, இங்க வர வேலைக்காரிங்ககிட்ட நீ எதும் பேச்சு வச்சிக்காத. வயசு காலத்துல நீ தனியா இருக்கக் கூடாது. பெத்தவ பிச்சை எடுக்கிறா. இவன் ஏ.ஸி. காரில போறான்னு எதிர்க்கட்சிக்காரன் மேடை போட்டு அசிங்கமா பேசுறான். இப்பக்கூட, அடியாள் சுவாமியப் பாத்து ஒரு பூசை வைக்கத் தான் போயிட்டு வரேன். மாத்ருசாபம், பித்ருசாபம் இருக்குன்னு சொன்னாரு. அருள் வாக்கா வந்திட்டதேன்னு கவலையா இருக்கு...”

“உன் தம்பியாண்டானுக்கு இதிலெல்லாம் இப்ப ரொம்ப நம்பிக்கை வந்திட்டாப்பல போல.” இடக்காக அவள் உதிர்த்த சொற்கள் குத்திவிடவில்லை.

“ஆமா, எல்லாரும் எப்பவும் ஒரே மாதிரி இருக்காங்களா? காலத்துக் கேத்த மாதிரி மாற வேண்டியிருக்கு. உன் காலத்துல இருந்த காங்கிரசே இன்னிக்குப் பொய் பித்தலாட்டத்திலும், சூதிலும் அடுத்தவங்க காலை வாரி விடுறதிலும் தான் புழச்சிருக்கு. அன்னிக்கு ராட்டை நூத்திங்க. இப்ப யாரு செய்யிறாங்க? கூலிக்கு மாரடிக்குற ஆளுகதா—நீராரம் சாப்பிட்ட சேரி ஆளுவ, ரசனா, கோலா, பெப்சி கேக்கு

றானுவ. வூட்டு வேலைக்கு வரவ, கேபிள் டி.வி. வாசிங் மெசின் இருக்கான்னு கேக்குறாளுவ. கிராமத்துல, ஒரு நேரக்கஞ்சிக்கு மாடா உழச்சவனுகள, நம்பிக்கைன்னு தூக்கி வச்சிது தம்பி. அவனுவ நம்ம சோத்தையே தின்னுப்பிட்டு, நமக்கெதிரா கட்சி மாறி கொடி பிடிக்கிறானுவ...''

இவள் கையைப் பற்றி நிறுத்துகிறாள்.

“சந்திரி, இந்த வெவகாரம் கேட்க எனக்குத் தெம்பு மில்ல, திராணியுமில்ல. நான் என்னிக்குமே யாரும் கெட்டுப் போகணும் தும்பப்படணும்னு நெனக்கலம்மா. இப்பவும் எல்லாரும் நல்லா இருக்கணும்னு தான் நினைக்கிற. பித்ருசாபம், மாத்ருசாபம்னு ஏன் உறுத்தணும்?...அவங்கவுங்க நெஞ்சைத் தொட்டுப் பாத்துத் திருந்தணும். தப்புத்தப்பாப் பண்ணி ஒரு தப்ப மூட முடியாது... இந்தத் தேசமே, சனங் களே உங்க அரசியலால பாழாயிட்டிருக்கு தாயி! உன்னைக் கையெடுத்துக் கும்பிடாத குறையா கேட்டுக்கிடறேன். எனக்கு இந்த மாளிகை வாசம் வோணாம். நான் போயிட றேன். கேக்கிறதெல்லாம் ஒரு வெள்ளத்துணிச் சீல. வெளில எறங்கினா இது ஒட்டாம நழுவிடுமோன்னு பயமா இருக்கு...''

கண்ணீர் மல்குகிறது.

“இத பாரு, உனக்கு இதுதான் வீடு. நீ ஒரு பத்து பைசா தேடி, புள்ளைக்கு நல்லது பொல்லாது பண்ணல. அவனே தலைதூக்கி முன்னுக்கு வந்தன். நீ எதுக்கு ஆரு சொத் தையோ, ஆரு வச்சதையோ பாம்பு மாதரி காக்கணும்? அத்தனை அக்கறை உள்ளவங்க, அந்த மக புருசன், புள்ள. அவுக தாயாதி பங்காளியக் கூட்டு வரட்டும், என்னமும் செய்யட் டும்? நீ அங்க அட்டையா புடிச்சிட்டுகிறதுக்கு பராங்குசம் மட்டுமல்ல— வேற எல்லாருமே என்ன சொல்றாங்க தெரியுமா? அவங்களல்லாம் வரவுடாதபடி நீயே செய்திட்டி யாம். எனக்கே நாக்கப் புடுங்கிட்டுச் சாவலாம் போல இருந்திச்சி. “பெரியவரு, அந்தப் பொம்புளய வச்சிட்டி

ருந்தாரு— அரச பொரசலா சரோ அம்மாக்குத் தெரியும். மக செத்ததும் அதா செத்திட்டாங்க. இப்ப, வூட்ட எம் பேருல எழுதி வச்சிருக்காங்க. யாரும் வரமுடியாதுன்னு சொல்ற துன்னு... சொல்றாங்க. இதெல்லாம் இன்னிக்கு அரசியல். கட்சி தலைவரா கவுரவமா, எம்.பியா இருக்கவருக்கு எத்தினி கேவலம்?'' இவளுக்கு உடலே பற்றி எரிகிறது சீதை அக்கினியில் எரிந்த போது இப்படி இருந்ததா? அடிபாவி? நீ என் உதிரத்தில் ஜனித்தவளா?

பளார் பளாரென்று அவள் கன்னங்களிலும் முகத்திலும் அறைகிறாள். கை எரிகிறது.

சந்திரி விக்கித்துப் போகிறாள்.

"ஏண்டி, எலும்பில்லா நாக்குன்னா, எது வேணாலும் யாரை வேணுன்னாலும் பேசுமா? நீ நர்சு வேலைக்குப் படிச்சவடீ? ஆம்புள பொம்புளன்னு பேதம் இல்லாம எல்லாரையும் தொட்டே— அதனால உனுக்கு அத்தினி பேரும் தொடுப்புன்னு ஆயிடுமா? எந்தப் பன்னி சன்மண்டி இதைச் சொல்லிச்சு? அத்தத் தூக்கிட்டு வந்து எம்மூஞ்சில அவுத்துக் கொட்டுற? நா இந்த நிமிசமே இங்கேந்து போயிடுவ. அன்னைக்கு நான் வுழுந்தா, அப்படியே சாவட்டும்னு வுடவேண்டியது தான?... நாக்கு அழுவணும்னு நா சொல்ல மாட்டே. அன்னைக்கு, அந்த மனிசன்மேல, வுழுந்து அடிச்சி சட்டையக் கிழிச்சி காரை நொறுக்கி அவுமானம் பண்ணினானே, உன் தம்பி பெரி..... அரசியல் தலவன்! அப்போ, இளம்புள்ளைங்க. கேசுகீசு ஒண்ணும் வாணாம், வுட்டுடுங்கன்னு போலீசு இன்ஸ் பெக்டர்கிட்ட சொன்னவருடி அந்தப் பெரி...மனிசர்! அவங்கல்லாம் தெய்வம். அந்தப் பத்தினி பேரில உன் விசத்த கக்குற. பொம்புளக்கிப் பொம்புள சேத்தவாரி அடிச்சிக் குதறுற சாதியில்லடி நாங்க! அப்புடி ஆகக்கூடாது''ன்னு... கண்கள் கலங்கிக் குரல் தழுதழுக்கிறது.

"அந்தப் புண், கடசீ வரை ஆறல, எந்தப் பொம்புள யின்னாலும் அவளைத் தொட்டுக் குலைக்கிறது, கல்லு கட்டி சைகிள் செயின் சோடா பாட்டில் கத்திகுத் தெல்லாந்தான் நீங்க ஆரம்பிச்சிவச்ச கட்சிக் கலாசாரம். அதான் இன்னிக்கு இந்தச் சீரழிவுக்கு எல்லாரையும் கொண்டாந்திருக்கு. ஒரு கட்சிக்கும் ஒரு கொடிக்கும் இன்னைக்கு அந்த சத்தியம் இல்ல."

இந்தச் சீலையே நெஞ்சை அறுக்குது.

இவளுடைய பொங்கெழுச்சி, புயல்போல் வந்த சீற்றம், அவளைக் கட்டிப் போட்டாற்போல் பிரமிக்க வைக்கிறது

அப்போது, எங்கிருந்தோ குரல்கள், ஐயோ, ஐயோ என்ற சோகக் குரல்கள் எதிரொலிக்கின்றன. சந்திரி சட்டென்று கதவைத் திறந்து கொண்டு விரைகிறாள்.

அவளுக்கும் புரியவில்லை. மெள்ளக் கதவைத் திறந்து கொண்டு ஒழுங்கையில் நிற்கிறாள்.

ஒரு பணியாளன் வருகிறான். கண்ணைக் கசக்கிக் கொண்டு அழுகுரலில், "அய்யா, தலைவர் அய்யா, மாரடைப்புல பூட்டாரு..." என்று செய்தி தெரிவிக்கிறான்.

அவள் புருசன் இறந்த போது, அவளைச் சுற்றி யாரும் அடித்துக் கொண்டு அழவில்லை. குருகுலமே உட்கார்ந்து, துதிப்பாடல்களைப் பாடியது. பெரிய பெரிய ஆட்களெல்லாம் வந்தார்கள். அவன் திருட்டுத்தனமாகக் குடித்தான். போலீசு பிடித்துவிடும். ஆனால் ஜாமீன் வழக்கு இல்லாமலே, தண்டனை கொடுத்து விடுவிப்பார்கள். கண் கொத்திப்பாம்பு போல் உன்னைக் கவனிக்க வேண்டியி ருக்கப்பா, எங்கே கிடைக்குது, சொல்லு? என்பார் அய்யா. ஒருநாள் போதையில் வரும்போதுதான் விழுந்து கல்லில் அடிபட்டு மாண்டான். ஆனால் அவன் அப்போதைய இலட்சியப்பாதையில் ஒரு முள்ளாக நெருடினான் என்று வசை பாடவில்லை. மரியாதை செய்தார்கள். இந்தத்

தோட்டம் அவன் உழைப்பு; படைப்பு. தாயம்மா, இத்தனை மரங்களும், அவன்பேர் சொல்லும் குழந்தைகள் என்பார். அவள் பொட்டை அழிக்கவில்லை. இகழவில்லை; வண்ணச் சேலையை உரிந்து வெள்ளை வழங்கவில்லை. துணையை இழந்தவளுக்குக் குழந்தைகள்தாம் ஆதரவு என்று வலியுறுத்தினார்கள்.

இப்போதே, அவள் பிடித்துவைத்த களிமண்ணாக அமர்ந்திருக்கையில் பேர் பேராக வந்து, யார் யாரோ முக மறியாதவர்களெல்லாம் வந்து அடித்துக் கொண்டு அழுகிறார்கள்.

"இத்தை எதுக்குடி மரகதம் கூட்டியாந்தே?... கொள்ளி... கொள்ளி... கோட்டான், கழுவு போல உக்காந்திருக்கு. அப்ப லேவுடியா ஆசுபத்திரிக்குக் கொண்டுட்டுப் போனப்பகூட மவராசன் புழச்சி வந்து, எல்லாரையும் பாத்து விசாரிச்சாரு. அத்தினி பேருக்கும் சீல துணி வாங்கிக் குடுத்தாங்க. இது கரிக்கால வச்சதும், ஒண்ணுமே இல்லாம சிரிச்சிட்டுப் பறந்து போன ஆளு, திடீர்னு மார்வலிக்கிதுன்னு சொன்னவரு ஆசுபத்திரிக்கு இட்டுப் போகுமுன்ன உசிருபோகுமா? பாவி, பாவி, மூதேவி, சண்டாளி, முதல்ல நீ செத்துத் தொலையக் கூடாதா? முழிச்சிக்கிட்டுப் பாக்குது பாரு? பெத்தபையங்கிட்டக் கொள்ளி வாங்கிட்டுப் போவணும்னு இருக்காதா? புருசனை முழுங்கினா. பெத்த பொண்ணு, மருமவன், அல்லாரையும் வாயில போட்டுக் கிட்டா. ஒண்டின எடத்திலண்ணாலும் ஆரவுட்டா?... பிசாசு... துக்கரி..."

செவிகளில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றி மாரடிக் கிறார்கள். ஏன் இப்படியெல்லாம் நடக்கிறது?

கண்கள் எரிகின்றன—

'முருகா! என் மீது உனக்குக் கருணை இல்லையா? ஏனிப்படி வாட்டி வதைக்கிறாய்?'

அலையடித்து ஓய்ந்து இருள் வருகிறது, நேரம் என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. அவளைப் பொறுத்த வரையில் 'காலமே' நின்று போகிறது.

உறக்கமோ, மயக்கமோ, நினைவு மறப்பது, முருகா, உன் கருணை....

இருள் படலங்கள். கரைகின்றன.

உதயக்கதிர் போல் கன்னியம்மாவின் குரல் செவிகளில் விழுகிறது.

"ஆயா... ஆயா, நான் கன்னிம்மா..."

"ஆ....? கன்னிம்மா..."

அவள் கையில் ஒரு தம்ளர் இருக்கிறது.

"வாங்க. ஆயா, மூஞ்சி கழுவிகினு இந்தக் காபிய குடியுங்க. உங்களுக்கூடத் தெம்பு இருக்காது. பிசாசுங்க, பிசாசுங்க, உங்கள என்ன கோரமா சொல்லுதுங்க? பொறம் போக்கு... வாங்க...." அவளை அழைத்து முகம் கழுவ, நீராடச் செய்கிறாள். ஒரு பூப்போட்ட வாயில் சீலை கொண்டு வந்திருக்கிறாள்.

"இது என் சீலை. நீ உடுத்திக்க ஆயா..." உடுத்த பின் கட்டித் தழுவி முத்தமிடுகிறாள்.

"அசுவினி மேடம் கிட்டச் சொல்லிருக்கிறேன். உனக்குச் சீல வாங்கி எப்படீன்னாலும் தந்திருவாங்க. நாம போயிரலாம். நாளைக்கி..."

"நாளைக்கி வேணாம். இப்பவே போகலாம் கண்ணு. என்ன எப்டீன்னாலும், டேசன்ல கொண்டு வுட்டுடு... அது போதும்."

அவள் குனிந்து மெதுவான குரலில், "நீ உம் புள்ளயப் பாக்க வோணாமா? கண்ணாடிப் பொட்டில ஐஸ் வச்சி, ஆகாசத்தில பறந்து வருது. சனமோ சனம், மாலையும் பூவுமா நிக்குதுங்க. டெல்லிலேந்து அமைச்சர்

பெரியவங்கல்லாம் வாராங்க. முதலமைச்சர் வருவாரு. எல்லாக் கட்சித் தலவருங்களும் வராங்க. டி.வி. காமிராவா வந்திருக்கு. அதெல்லாம் பாக்க வாணாமா?..."

"எனக்கு ஒண்ணும் பாக்க வாணாம் கன்னிம்மா. இந்த எடத்த வுட்டு எப்பிடின்னாலும் வெளில கொண்டு போ. அவங்க வேற அம்மான்னு இங்க வந்து என்னப் பாக்க, போட்டோ புடிக்க வாணாம்...."

"சரி, இந்த காபியக் குடிச்சிக்க, நா வாரேன்..."

காபியைப் பருகுகிறாள்.

"நீ யார் பெற்ற மகளோ? இப்ப நீதான் எனக்கு மகள் மகன், அப்பன் அம்மை, எல்லாம் கண்ணு?...."

"அழுவாத, அழுவாத ஆயா, அநாதைக்கு அநாதை துணை. நா உன்னோட வருவேன். எந்நேரமும் இந்தப் புள்ளீங்க சீண்டல்; உனக்குக் குருமா சோறு கொண்டாந்திச்சே, அந்தக் கசுமாலத்துக்கு பெரிசு என்னக் கட்டி வச்சித் தாலி போட வச்சிருக்கு. மூணுவாட்டி இந்தச் சந்திரி அம்மாவே மாத்திரை குடுத்துக் கலச்சா, பாவி. பெறகுதா தாலி— நீ வா, அசுவினிமேடம் ரொம்ப நல்லவங்க. பெரியம்மா. ரஞ்சியம்மாவும் நல்லவங்கதா. ஆனா, இவுங்கல்லாம் விசம். எப்டின்னாலும் போயிடுவம்..."

வெளி உலகெல்லாம் அலை ஓய்ந்து, துடிப்புகள் மங்கிய இருள் நேரத்தில், ஒரு போர்வையைப் போத்தி அவளைக் கன்னியம்மா எப்படியோ ஒழுங்கை, சந்து, என்று கூட்டிச் செல்கிறாள். பின்னே ஒரு சிறு திட்டி வாயில். கதவு திறந்ததும் ஒரு வீதி—அரவம் அடங்கிய தெரு. அசுவினி ஓர் ஆட்டோவுடன் நிற்கிறாள். அவள் கையில் ஒரு பை இருக்கிறது.

"கன்னிம்மா, பத்திரம்.... நா சொன்னதெல்லாம் நினைப்பிருக்கா?..."

"சரி மேடம். பாத்துக்க. பெரியசாமி, பத்திரமா கூட்டிட்டுப் போயி ஸ்டேசன்ல எறக்கிடுங்க!"

அவன் கையில் ரூபாய் நோட்டை வைக்கிறாள்.

அவர்கள் அந்த எல்லையை விட்டுச் செல்கிறார்கள்.

## 30

இருளே பிரியவில்லை. கன்னியம்மா அவள் கையைப் பற்றி, எழும்பூர் ரயில் நிலையப் படியில் உட்கார்த்தி வைக்கிறாள். எதிரே, ஏதோ பஸ்கள் உறுமுகின்றன. பயணிகள் ஏறுகின்றனர். தேநீர்க்கடையில் சுருசுருப்பாக வியாபாரம் நடக்கிறது. ஏதேதோ ஊர் பெயர் சொல்லிக் கொண்டு ஆட்களை அழைக்கிறான் ஒரு பையன்.

"ஒரு டீ வாங்கியாரட்டுமா ஆயா?"

"வாணாம்பா, உனுக்கு வாங்கிக் குடிச்சிக்க..."

அவள் எழுந்திருக்கவில்லை. மின் வண்டிக்குச் செல்லும் பாலத்திலும் கீழும் பரபரப்பு. விடிந்து விட்டது. தபதபவென்று கூட்டம். ரயில் பெட்டிகளில் இருந்து இறங்கி ஓடி வருகிறது. திடீரென்று காக்கிச் சட்டைப் போலீசு எங்கிருந்தோ வந்து மொய்க்கிறது. கன்னிம்மா இவளை உள்ளே பெஞ்சியில் கொண்டு உட்கார்த்துகிறாள். பையை அவளிடம் கொடுத்து "பத்திரமா வச்சிக்க, நான் டிக்கெட் எடுத்திட்டு வாரேன், எதனாலும் வாங்கியாரேன். இத நிக்கிற வண்டிதா போவும்கிறாங்க. பத்திரமா இரு..." அவள் போகிறாள்.

சூரியன் பளீரென்று தெரிகிறது.

இந்த நிலையத்தில் நேராகக் கார் உள்ளே வரும். இவள் இப்போது உட்கார்ந்திருக்கும் இடத்தில் கார் வருமா? எதுவும் தெரியவில்லை.

கண்ணமங்கலமா, கிளியந்துறையா?.... சம்பு அம்மா வோடு இருந்த பூவனூரா?

எந்த ஊர்? எந்த ஊருக்கு அவள் சீட்டு எடுத்தி ருக்கிறாள்? கண்ணமங்கலம், ஆத்து மேட்டில், மறுபக்கம் பெரிய வாய்க்கால், வாய்க்கால் மேட்டில் கோயில். முன்புறம் பெரிய மைதானம். பெரிய அரசமரம். வேப்பமரம். மேற்கே ஆற்றுப் படித்துறையில் இதே போல் மரமுண்டு. அங்கே பிள்ளையார் இருப்பார்.

அழகாயி கோயிலை அடுத்து, வாய்க்காலின் மறுபுறம் குடிசனங்களின் ஊர். அதை அழகாபுரி என்றே சொல்வார்கள். அய்யா குடும்பத்துக்குச் சொந்தமான நிலங்கள் அந்தப் பகுதி முழுவதும் இருந்தன. எல்லா வற்றையும், அந்தக் குடிமக்களுக்கே வழங்கி, கீழ்ச்சேரி என்ற பெயரையும் வினோபா அடிகள் வந்த போது மாற்றி வைத்தார்... அந்தக் கோயில் முன் அவர்கள் திருமணம் நடந்தது. அவள் சேரிச்சாதிதான். ஆனால், புருசர் அய்யா வுக்கு உறவுள்ள மேல்சாதி. அந்த இடங்களை 'சமீன்'போல் ஆண்ட சாதி. எத்தனையோ முறைகள் அழகாயி திருவிழா வுக்கு அம்மாவுடன் அவள் சென்றிருக்கிறாள். அம்மாவின் மறைவுக்குப் பிறகு ஊருக்குச் செல்லவில்லை. அய்யாவும் காலமான பிறகு, அவருக்குச் சிற்றப்பா மகனாகும் முறையில் ராமலிங்கம் என்பவர் வந்தார்.

"தாயம்மாவா? எப்படிம்மா இருக்கே?..." என்றார்.

"ஊரே, நம்ம உறவெல்லாம் காலி. எவனெவனோ கட்சி வந்திருக்கிறா. ஈசுவரன் கோயிலுக்கு ஒருவேளைப் பூசைக்கு வரும்படி இல்ல... அழகாபுரின்னு பேர வச்சி நிலம் நீச்சுக் குடுத்து வாழவச்சாரே, எல்லாம் எடுபட்டு பணம் சம்பாதிக்க, அங்க இங்கேன்னு பூடிச்சி. அவவ சாமி பேரச் சொல்லி, அருவா கத்தி எடுக்கிறானுவ. போன பஞ்சாயத்துத் தேர்தல்ல, ஊரே ரெண்டு பட்டுப் போயிடிச்சி. எதோ

இருக்கிற...'' என்று சொன்னது நம்பிக்கைக் கனவுகளின் இடையே கரும்புகைத் திரள் போல் நினைவில் உயிர்க்கிறது.

முன்பு, அழகாயி திருவிழாவில், நான்கு மூலைகளிலும் குட்டியறுத்து இரத்தபலி இடுவார்களாம். முத்துக் கருப்பப் பூசாரியின் மீது அம்மன் ஏற, அவர் குட்டியறுத்து இரத்தம் குடிப்பாராம். அவளுக்குத் தெரிந்து அதெல்லாம் நடக்க வில்லை. ஆனால் அந்தப் பூசாரியைப் பார்த்திருக்கிறாள். சந்தனமும் குங்குமமும் தரித்து அவர்களை வரவேற்பார். கோயில் வளைவில் பொங்கல் வைப்பார்கள்.... பாட்டு கூத்தெல்லாம் நடக்கும். அந்தப் பூசாரி மகன் சிவசாமி படித் தான். தஞ்சாவூர் தமிழ்க் கல்லூரியில் வேலை பார்ப்பதாக அய்யாவைக் காண வந்தான்.

ஏதேதோ நினைவுகள்.

“பாட்டி! பாட்டி!...”

அவள் திடுக்கிட்டவள் போல் பார்க்கிறாள். ஒரு பெண் போலீசு. கையில் எதையோ பெரிய சோடா உடைப்பான் போல் வைத்து அவளை, அந்தப் பையைத் தடவுகிறாள்.

நிலையம் கொள்ளாமல் கூட்டம். “பையில என்ன வச்சிருக்கிற?...”

அவளுக்கே தெரியாது. திறந்து காட்டுகிறாள். இருண்டு புதிய வெள்ளைச்சேலை, உள்ளாடை, ரவிக்கை, ஒரு கவரில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுகள்; இன்னொரு பையில், கன்னி யம்மாளின் சீலை துணிகள். “எங்கே போற?”

“கண்ணமங்கலம். எம்பேத்தி டிக்கெட் எடுத்திட்டா, சாப்பிட எதானும் வாங்கியாரன்னு போனா...”

வண்டிப் பெட்டிகளில் சாக்குக் கட்டியால் புரவலர், கலைச் செம்மல், நாடு போற்றும் தமிழாளர், அடலேறு, இளவழுதி அய்யா மறைவு... என்று செய்தி எழுதுகிறார்கள்.

தபதவென்று வெளியே கூட்டம் வாழ்க, வாழ்க என்ற மோதியடித்துக் கொண்டு ஓடுகிறது.

வெள்ளைக் குர்த்தாவும் கால் சட்டையுமணிந்த இளம் பிள்ளை ஒருவனும், அதே போல் உடையணிந்த ஒரு பெண்ணும் அங்கே வருகிறார்கள். “பாட்டியம்மா, இங்க உட்காரலாமா?” பையை மடியில் வைத்துக் கொண்டு அவள் இடம் கொடுக்கிறாள். அந்தப் பையன் அழகாகப் புன்னகை புரிந்து ‘தாங்க்யூ’ என்று நன்றி சொல்கிறான். ஆனால் நெருக்கியடித்து உட்காரவில்லை. “இந்த வண்டிதா விழும்புரம் போவுதா?” என்று கேட்டுக் கொண்ட குஞ்சும் குழந்தையும் சாப்பாட்டுப் போகணியுமாக ஒரு குடும்பம் முன்னேறுகிறது.

நேரமாக ஆக, இவளுக்குக் கவலை மேலிடுகிறது. கன்னியம்மாவைக் காணவில்லையே?

இன்னும் யார் யாரோ இளைஞர், வருகிறார்கள். படித்தவர், படியாதவர், கூட்டம் நெருக்குகிறது. மாடிப்படிகள் அதிரும் கூட்டம். பத்திரிகை, புத்தகம், காபி, டீ, தண்ணீர் வாணிபங்கள் நடக்கும் மேடை.

“ஏம் பாட்டி, உங்க பேத்தி வரலியா இன்னும்?... நீங்க போற வண்டி, அதா அந்த பிளாட்ஃபாரத்திலேந்து போயிடிச்சி...”

“அப்பிடியா? எனக்குத் தெரிலியே? இப்ப வாரேன்னுதா போனா...”

“பணம் குடுத்திருக்கீங்களா?”

“இல்ல தாயி...”

“இப்ப டிக்கெட் இருக்குதா?....”

“இல்லியே?...” அழுது விடுவாள் போலிருக்கிறது.

“ஒரே கூட்டம். எங்கேயானும் மாட்டிட்டிருக்கும். சரி, உங்களுக்கு நா சீட்டு வாங்கிட்டு வரேன். இத வண்டி

பொறப்படும். விழுப்புரத்துல எறங்கி மாயவரம் வண்டில போங்க!" அவள் இவளிடம் எதுவும் கேட்காமல், சென்ற மறு நிமிடத்திலேயே ஒரு பயணச் சீட்டு வாங்கி வந்து கொடுக்கிறாள். நூறு ரூபாய் நோட்டு—"சில்லறை இல்லையே?..."

"பரவாயில்லை..." என்று அவளிடமுள்ள ஆறு பத்து ரூபாய் நோட்டுகளைக் கொடுக்கிறாள். பிறகு அவளை, அங்கு ஒரு பெட்டியில் ஏற்றி விடுகிறாள்.

போலீசு... பொம்பிளைப் போலீசிடம் இவளுக்கு அநுபவம் இல்லை. பார்த்திருக்கிறாள். போலீசென்றால் அஞ்சி ஒளிந்த நாட்கள், 'போலீசிடம் புடிச்சிக் குடுத்திடுவாங்க' என்று சொன்ன கன்னியம்மா, எங்கே? நிசமாக போலீசிடம் புடிச்சிக் குடுத்துவிட்டார்களா? முருகா?

கூட்டம் குஞ்சும் குழந்தையும் இளவட்டமும், பளீர் வண்ணங்களுமாக நெருங்குகிறது. அவள் சன்னலடியில் ரயிலடி மேடையை ஆதூரத்துடன் கன்னியம்மாவுக்காகத் துழவும் கண்களுடன் நிற்கையில் மோதித்தள்ளுகிறார்கள். 'கக்கூசுக்கு'ப் போகும் வழியில், கொழுக்கட்டைக்குள் அவியும் பருப்பு பண்டம் போல் அடைபட்டிருக்கிறாள். வெள்ளை உடுப்பு—பச்சை சிவப்புக் கொடிக்காரர் விரைந்து அடுத்த பெட்டிக்கு முன்னேறுகிறார்... அதோ கன்னிம்மா...

அவள் எப்பிடித்தாவி ஏறினாள் என்று தெரியவில்லை. ஏறிவிட்டாள். படியில் நிற்கும் நாமக்காரர் அவளை இழுத்து உள்ளே தள்ளிவிட்டார். வண்டி வேகம் பிடிக்கையில் அவள் மனம் இறுக்கம் தளர்ந்து லேசாகிறது "கண்ணு, நீ வந்திட்டியா? என்னிய அந்தப் போலீசுகாரம்மா டிக்கெட் வாங்கிக் குடுத்து ஏத்திவுட்டாங்க. நீ எங்கம்மா போயிட்ட?..."

அவள் குரல் அந்தச் சந்தை இரைச்சலில் எடுபடவில்லை. அந்தச் சன நெருக்கடி வாடையில், அழுத்தத்தில், சுடர் விட்ட மனிதநேயம்... நாமக்காரர் பட்டை நாமம், திருப்பதிப் பெருமாளா? சிக்குவாடை வீசும் ஒரு பெண்

இடுப்பில் குழந்தையுடன் இடிக்கிறாள். கக்குசு வாடை, நெடியடிக்கிறது.

கன்னியம்மா எப்படியோ எத்தனையோ பேச்சுக்களை ஏற்று அவளிடம் வந்து விடுகிறாள். ஒரு பெஞ்சியில் துணி விரித்து இரண்டு குழந்தைகளை விட்டிருக்கிறாள். நெருக்கமாக இரண்டு பெஞ்சுகளிலும் மக்கள். கீழே, குண்டான் சட்டி, பெட்டி, பை என்று சாமன்கள். வழியில் ஒரு கொய்யாப்பழக்கூடை இருக்கிறது. ஒரு கைக்குட்டை வியாபாரி, முறுக்கு வாணிபம் செய்யும் பெண் பிள்ளை...

இவர்களெல்லாம் எப்போது எப்படி ஏறினார்கள்?

“ஆயா, இது பாசஞ்சர் வண்டி. பெரி... வண்டில இட்டுட்டு நேரா மாயவரத்துல எறங்கி பஸ்ஸில் போகலான்னு அசுவினி மேடம் சொன்னாங்க. மட்டி, டிக்கெட் எடுத்தே, வண்டி ஓம்பதரைன்னாங்க. அதுக்கு உக்காரன்னு இடம் போடணுமா, தெரியல. வண்டிலியே பாரும்மா, இருக்கும்னாரு, ஒருத்தர். சரின்னு பாத்தா, அந்த வண்டி அந்த பிளாட் ஃபாரத்துல போயிட்டுது. உன்னக் கூட்டிக் காம நா எப்பிடிப் போறது? அந்தக் காசு பூரப் போச்சி. திரிம்ப வந்து வெளில ரெண்டு டிக்கெட் எடுத்தே. உன்னிய போலீசுக்கார அம்மா கூட்டிட்டுப் போறதப் பாத்து, விழுப்புரம் ரெண்டுன்னு டிக்கெட் எடுத்திட்டு ஓடியாரேன்... அசுவினி அம்மா, ஆயிரம் ரூவா குடுத்தாங்க. அஞ்சு நூறு எடுத்து வேஸ்டாக்கிட்ட. பையி பத்திரம்...”

கபடமில்லாமல் இவளும் நடந்ததைச் சொல்கிறாள்.

“தாயி, இந்நேரம் அடிபட்டுச் சாவ இருந்தியே?...”

“போவட்டும். எப்படியோ, வண்டில ஏறிட்டம்?”

வண்டி ஊருகிறது; நிற்கிறது; கூட்டம் ஏறுகிறது பிதுங்குகிறது. இவளை பெஞ்சியில் இருக்கும் பிள்ளைகளை நகர்த்தி, கன்னியம்மா உட்கார்த்தி வைக்கிறாள்.

கீழே, லோலாக்கும் பெரிய மூக்குப் பொட்டுமாக, ஒரு பெண், குண்டானிலிருந்து புளிச்சோறு எடுத்து அட்டைத் தட்டில் வைத்துப் பிள்ளைகளுக்குக் கொடுக்கிறாள்.

இவர்கள் எல்லோரும் எங்கோ கல்யாணத்துக்குப் போகிறார்கள். நாலைந்து இளம் பெண்கள், விடலைப் பிள்ளைகள், நடுத்தர வயசு சம்சாரி— இரயில் பயணத்தின் சந்தோசங்களை அநுபவிக்கிறார்கள்.

ஒரு இரண்டுங்கெட்டான் பிள்ளை உட்கார்ந்த படியே மரச்சட்டம் நனைய, சிறுநீர் கழிக்கிறது.

"அய்ய, இன்னாமா, இதுபாரு, அது வெளிக்கிருந்திருக்கு இப்படியே சோறு வைக்கிறீங்க?"

கன்னியம்மா கத்துகிறாள்.

கைகழுவக் கூட நீரில்லை. ஒன்றரை இரண்டு வயசு இருக்கும். மண்டை தெரியும் முடியை வாரி உச்சியில் கட்டி நாடாவும் பூவும் வைத்து அலங்கரித்திருக்கிறாள். கன்னத்தில் நெற்றியில் கரிய பொட்டுகள்.

பெண்.... இக்கட்டான நிலைமைகளை அவளே சமாளிக்கிறாள்.

சட்டியையே கழற்றித் துடைத்தாற் போல் சன்னலுக்கு வெளியே வீசுகிறாள். பிறகு பிள்ளையுடன் கழிப்பறைப் பக்கம் போகிறாள். அங்கே தண்ணீர் கொஞ்சம் வந்திருக்க வேண்டும்.

"தண்ணியே கொஞ்சூண்டுதா வந்திச்சி.... வூட்டேந்து புறப்பிடறப்ப இருக்காம, இங்க வந்து அம்மாளக் கஷ்டப் படுத்தலாமா?..."

அதற்கு ஒரு முத்தம்.

அந்த ஆண் பெரியவனாகி இவளை வாழவைப்பானா?

கன்னியம்மா எதையோ நினைத்தாற் போல் சிரிக்கிறாள்.

"எதுக்குமா சிரிக்கிற?..."

"இல்ல, போலீசுக்காரிங்க, மூட்டமுடிச்செல்லாம் தடவினாங்க. நாய வுட்டு மோந்து பாக்க சொன்னாங்க அந்த பிளாட் பாரத்துல. நெனச்சேன். சிரிப்பு வந்திச்சி."

"இன்னாமோ அவுங்க கடமை. இந்த சனங்க, நம்மைப் போல கபடில்லாம காதுகுத்து, கலியாணம்னு போகுது! என்னியே அவ தடவிப் பாத்தா..."

மனதுக்குள் இந்தக் கூட்டத்தில் குண்டு வைக்கும், குத்தியெறியும் தீவிரவாதி இருப்பானா? ஆனால், எவன் ஒழுக்கம், எவன் ஒழுக்கமில்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? பெண்... பெண் குழந்தைதான் வாழ வைக்கிறது. இவளிடம் அந்த ஒட்டு மீசையோ, கிருதா மீசையோ, 'ஆயா' என்று பரிவு காட்டவில்லை...

காந்தி மூணாம் வகுப்பு ரயிலில் தான் போவாராம். இப்ப மூணு கிடையாது எத்தனையோ இருக்குதாம். ஆனா, 'ரெண்டு'ன்னு நிறுத்திருக்காங்க. சாமி நீங்க போயி அம்பது வருசத்துக்குமேல ஆச்சி. இப்ப அருவமாவானும் வந்து இந்தப் பொட்டில பாருங்க சாமி? இந்த தேசம் எப்படி இருக்குன்னு?

விழுப்புரம் வரும் போது பொழுது சாயும் நேரம்.

அடேயப்பா? என்ன கூட்டம்?...

ஒரு மாதிரி இறங்குகிறார்கள். தள்ளுமுள்ளு, அவசரங்கள்...

ஒரே தலைகளாகத் தெரியும் மனிதக் கூட்டம்.

பள்ளிப்பிள்ளைகளின் சீருடைகள்; சல்வார் கமிஸ்கள்; கறுத்த அங்கிகளுக்குள் மூச்சு விடும் வலைகளுடன் துலுக்கப் பெண்கள்... வெள்ளை உடுப்பு கார்டு சுருட்டிய கொடிகளுடன் போகிறார். புரவலர், கலைக்கோ, எழுத்துச்

செம்மல், தலைவர், இளவழுதி மறைவு.... கறுப்பு எழுத்து அச்சு— நோட்டீசுகள் ஒட்டப் பட்டிருக்கின்றன.

அவன் புகழ் நாடெங்கும் அலையடிக்கும், இரங்கல் பாடும் கட்சிக் கொடிக்கூட்டம்.

அவளை மெள்ள அழைத்துச் சென்று, ஒரு இருக்கை தேடி உட்கார வைக்கிறாள் கன்னியம்மா.

யார் யாரோ போகிறார்கள். அறிமுகமில்லாதவர்கள்; இந்த நாட்டு மக்கள். இவர்களை சத்தியப்பாய் கொண்டு ஒருங்கிணைக்க முயன்றார்.

கன்னியம்மா, ஒரு காகிதத்தில் நான்கு வடைகளும், பிளாஸ்டிக் பை குடி நீருமாக வருகிறாள்.

"இக்குணூண்டு போண்டா, மூணு பத்து ரூபாங்குறான். அதுக்கு சட்டனி கிடையாதாம். பேமானி!" என்று திட்டிக் கொண்டே அதைப் பை மீது கீழே வைக்கிறாள். ஒரு பிளாஸ்டிக் பையைப் பல்லால் கிழித்துத் தண்ணீரைத் திறக்கிறாள். "ஆயா, கையக் கழுவிக்குங்க..." கொஞ்சம் கையில் விட்டு அவள் முகத்தைத் துடைக்கிறாள்.

"யம்மா, இது குடிக்கிற தண்ணி இல்ல?"

"குடிக்கிறது கழுவுறது அல்லாத்துக்கும் இதுதா. ரயில்ல, அத்தினிகாசு டிக்கெட்டுக்குப் புடுங்கினா, கழுவத் தண்ணி இருந்திச்சா? இப்ப எங்க தண்ணி தேடிட்டுப் போக?... நாலரை மணிக்கு வண்டி இருக்காம். நாம உடனே போகணும். நா வெளியே போயி டிக்கெட் எடுத்திட்டு வர." அவசர அவசரமாக முடித்துக் கொண்டு, அவள் கையைப் பற்றி அழைத்துச் செல்கிறாள். படி ஏறாமல் இருப்புப் பாதை கடந்து, வண்டியில் ஏற்றி விடுகிறாள். உட்கார இடம் கிடைத்து விடுகிறது. நெருக்கம்தான். சாய்ந்தாற்போல் கண்களை மூடிக் கொள்கிறாள்.

வண்டி எப்போது புறப்படுகிறதென்று தெரியவில்லை. அடிபிடிகள், கூச்சல், நெருக்கங்கள் உறைக்காத ஆசுவாசம்.

இருட்டி இரவாகிவிட்டது. சிதம்பரம், சீர்காழி என்று குரல்கள் கேட்கின்றன. வண்டி எங்கே நிற்கிறது, புறப்படு கிறது என்று அவள் கண்களைத் திறக்கவில்லை "முருகா... நீ நல்லது தா செய்யிவே, என்னிய எப்படிக் கொண்டு போவணும்னு, நீதா நெனக்கிற !..."

"பாவிப் பயலுவ. எழவு சினிமா, ஊரு உலகத்தைக் கெடுத்துக்குட்டிச் சுவராக்குது. ஏதோ படமாம். பத்து ரூபா குடுத்து டாலர் வாங்கி மாட்டிகிட்டு, நூறு இருநூறுன்னு டிக்கெட் வாங்கிட்டு அழியிது. கும்பிகாயுது. ஒழவு, நடவுன்னு புழைக்கத்தண்ணி இல்ல. கட்சிக்காரனுவ கொடி புடிச்சிக் கிட்டு இந்த இளசுகளை அடி வெட்டுன்னு திசை திருப்ப றானுவ. நேத்து எவனோ செத்திட்டானாம். அதுக்குன்னு ஒரு பய மண்ணெண்ணை ஊத்திக்கிட்டு எரிய நிக்கிறானாம். அப்பன் ஆயி லபோலபோன்னு அடிச்சிட்டு சாவுக்குப் போவ தாலிய வச்சி துட்டுக் குடுக்கிறா."

அவள் கண் விழித்துப் பார்க்கிறாள். மூலையில் அரைக்கை வைத்த அழுக்குப் பனியனும் வேட்டியுமாக ஒரு முதியவர் மஞ்சள் பையைப் பிடித்துக் கொண்டு நிற்கிறார். அவர் வாயிலிருந்துதான் சொற்கள் வருகின்றன.

மீண்டும் கண்களை மூடுகிறாள்.

வண்டி கடக்கென்று நிற்கிறது. "அல்லாம் எறங்குங்க, ஏறங்குங்க !"

"இது இனிமே போவாதாம். எறங்கி, பஸ் புடிச்சிப் போகணும். ஏம்மா, எங்க போவணும்?"

"நாங்க புதுக்குடி போயி அப்பால கண்ணமங்கலம் போவணும்?"

"இது புதுக்குடில நிக்யாதா?"

"நிக்கும். ஆனா, இன்னாமோ போராட்டமாம். ரயில் பாதையில் நின்று ராத்திரியில மாறியல் செய்யிறாங்க! போகாதுன்னு கார்டு சொல்லிட்டுப் போறாரு..."

இறங்குகிறார்கள்; பஸ் நிறுத்தத்துக்கு வெளியேறும் கும்பலுடன் கலந்து கொள்கின்றனர். விளக்குகளைச் சுற்றிப் பூச்சிகள்... கன்னியம்மாளின் கையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டிருக்கிறாள். படி ஏறி இறங்கி வருகையில், எழும்பூரில் கண்ட பையன், அந்தப் பெண், இன்னும் அவர்களைப் போல் நாலைந்து பேர்கள்... இவங்களும் எங்கே போகிறார் கள்? அவர்கள் இந்தியில் பேசிக் கொண்டு முன்னே நடக்கிறார்கள்.

கசகசவென்ற பஸ் நிறுத்தம்.

"ஏம்பா, புதுக்குடி போற பஸ்..."

"இல்ல... நாகபட்டணம், திருவாரூர்" என்று ஏதேதோ பேர் சொல்கிறான். "கும்மாணம் பஸ் போயிடிச்சி. இனி காலம நாலுமணிக்குத்தான்..."

பஸ் நிறுத்தத்தின் பக்கம், இரவு கடைகளில் சொய் யென்று தோசை போடுகிறான். கூட்டம் மொய்க்கிறது. உறுமி விளக்கடிக்கும் பஸ்கள். குடிக்க, கழுவ தண்ணீ ரில்லை. கீழே சகதியாக ஈரித்த கும்பி அழுக்கு.

கழிப்பறையில் இயற்கைக்கடன்—வெளியேற்ற முடியாத நாற்றம். கன்னியம்மா, அந்தத் தங்கும் கூடத்தில் ஓர் இடம் பிடித்து உட்கார்த்தி வைக்கிறாள். இரண்டு வாழைப்பழம் வாங்கி வருகிறாள். சூடான பால் என்று விரல் நீள தம்ளரில் இனிப்பாகக் கொண்டு வந்து கொடுக்கிறாள். காலையில்... காலையில் போய்விடலாம். "முருகா... இந்த அத்தினி சனங் களையும் கரையேற்று!" கண்களை மூடுகிறாள்.

கன்னியம்மா யாரிடமோ விசாரிப்பது செவிகளில் விழுகிறது.

"கண்ணமங்கலமெல்லாம் போவாதம்மா. புதுக்குடியே போவுதோன்னு சந்தேகம். அங்கெல்லாம் ஒரே கலவரம். பஸ்ஸையே மறித்து நிறுத்தி, வெட்டிப் போட்டுட்டானுவ!..."

புற்றுக்குள் கைவிட்டுவிட்டாளா? பாம்புகள் வந்து சுற்றிக் கொள்கின்றன. கன்னியம்மா ஏதும் பேசவில்லை.

பொழுது நன்றாகவே விடிகிறது. கீழ்வானில் உதயம் சிவந்து, சாலையில் பொற்கிரணங்களைப் படிய விடுகிறது. நம்பிக்கைக் கதிர்கள் அவளை இதமாகத் தடவுகின்றன. ஓரத்து இருக்கை. இருவர் இருக்கை.

''கண்ணமங்கலம் போகுதாப்பா?'' குங்குமப் பொட்டளிந்த நடத்துனன், வெளியே இறங்கி வெற்றிலைச் சாற்றைத் துப்புகிறான்.

"புதுக்குடி ரோட்டுல எறங்கிக்க?"

கன்னியம்மாளிடம் இரண்டு பத்து ரூபாய் நோட்டு களை வாங்கிக் கொண்டு சீட்டைக் கிழித்துக் கொடுக் கிறான். டிக்கெட்.... டிக்கெட்....

"மானரேந்தல், மல்லிகாபுரம் அதெல்லாம் போகாது, நிக்காது. புதுக்குடி ரோட்டுல எறங்கிக்குங்க?"

ஒரு மொட்டைப்பயல் தேநீர் கொண்டு வருகிறான். கன்னியம்மா இரண்டு தேநீர் வாங்குகிறாள்.

பல் விளக்கவில்லை, கழுவவில்லை. தேநீரருந்துகிறாள். கன்னியம்மாளைப் பார்த்துக் கசிகிறாள்.

தாய், தெய்வம். புடம் போட்ட சொக்கத்தங்கம். இவளுக்குத் தனி வழி அச்சம் இல்லை. எந்த முரடனும் எந்தக் காமுகனும் இவ்ளுக்குப் புதிதல்ல... அழகாயியே வந்து இவள் உருவில் அழைத்துச் செல்கிறாளோ?...

புதுக்குடி சாலையில் இறங்குகிறார்கள். வழியில் அசாதாரணமான அமைதி தெரிகிறது. ஓட்டுப் பள்ளிக் கூடச் சுவரில் அசிங்கமான ஆண் பெண் கிறுக்கல்கள் கண்களில் படுகிறது. ஓட்டல், பெட்டிக்கடை, சுவரொட்டி, தட்டிகள் கிழிக்கப்பட்ட கொடும்பாவி எரிக்கப்பட்ட

சிதிலங்கள். ஓட்டலுக்குள் இரண்டு போலீசுக்காரர் செல்கின்றனர்.

கண்ண மங்கலம் திரும்பும் வழியில் ஈகாக்கை இல்லை. இவர்கள் நடக்கிறார்கள்.

## 31

கண்ணமங்கலம் கிராமம் என்பது பெரிதில்லை. காலையில் இருந்து உள்ளே வந்து ஊத்தங்கரையோடு சென்று, பிறகு பெரிய சாலையில் பேருந்துகள் செல்லும். அதுவும் முன்பு கிடையாது. இந்தத்தடம் வந்த பிறகு அவள் ஒரே ஒரு தடவைதான் வந்திருக்கிறாள். ராதாம்மாவுக்கு உடல் நலம் இல்லை என்று தெரிந்த பின் அப்படி வந்து, அங்கிருந்து ஒரு மாட்டு வண்டியில் ஊர் வந்தார்கள். அழகாயிக்குப் பூசை வைத்து நேர்ந்து கொண்டார்கள். புதுக் குடிச்சாலையில் இருந்து ஐந்தாறு கிலோ மீட்டர் இருக்கும். முன்பெல்லாம் வழியில் கட்டிடங்கள் இருக்காது. ஒரே சோலையாக இருக்கும். பூவரசு, வாதமடக்கி, வேம்பு எல்லாமே இருக்கும். அழகாயி கோயிலுக்குக் குறுக்கே சென்றுவிடலாம். ஆனால் இப்போது அந்தப் பசுமைகள் இல்லை. ஆளே இல்லாத பன ஓலைக் குடிசைகள், முள் படல்கள் தெரிகின்றன. சாலையில் கண்டாற் போல் ஒரு ஓட்டுப் பள்ளிக் கூடம். துவக்கப்பள்ளி என்று விள்ளுகிறது, பலகை. அதன் இடிந்த திண்ணையில் இரண்டு ஆடுகள் படுத்திருக்கின்றன. ஓர் அடி குழாய். அங்கிருந்து பார்த்தால் பசுமையான வயல்கள் தெரியும். வெள்ளையும் சள்ளையு மாகக் கட்டிடங்களே தெரிகின்றன. தெருவீடுகளை ஒட்டிய கொல்லைகளில், தென்னமரங்கள் மட்டை தொங்கக் காய்ந்திருக்கின்றன. ஈசுவரன் கோயில் கோபுரம் தெரிகிறது. வழியில் ஏதேதோ கடைகள்... சாம்பு, காபித்தூள், சரம் சரமாகத் தொங்குகின்றன. அந்த ஒரு கடைதான்

திறந்திருக்கிறது. நேராக வாய்க்கால். அந்தப் பாலம் தாண்டினால், ஆற்றுமேடு வரும் வரை தென்னந்தோப்பும், வெற்றிலைக் கொடிக்கால்களும் இருக்கும். ஏதோ வீடுகள், மட்டும் தெரிகின்றன. குடை ஆன்டெனா...

அவர்கள் முன் ஒரு போலீசுக்காரன் வருகிறான். தொந்திதெரிய, நடுத்தர வய்சுக்காரன். கையிலுள்ள தடியால் தரையைத்தட்டி, "நில்லுங்க? எங்க வரிங்க?" என்று அதிகாரமாகக் கேட்கிறான். கன்னியம்மா பேசவில்லை.

இவள் யோசனை செய்கிறாள். சட்டென்று, 'அழகாயி வூட்டுக்கு' என்று சொல்கிறாள். அதற்குள் கன்னியம்மா சமாளித்து, "ஆ, எங்கத்த வூடு இருக்கு" என்று தொடரு கிறாள்.

"அத்த வூடா? ஆரு, பேரு சொல்லு!"

"அதா அழகாயின்னு சொன்னேன்ல? அழகாபுரிப் பக்கம்..."

"அழகாபுரிப்பக்கம் ஆரும் போகக்கூடாது. நடங்க, ஸ்டேஷனுக்கு?"

"ஏய்யா? எதுக்கு நாங்க ஸ்டேஷனுக்கு வரணும்? எங்க மக்க மனுசங்கன்னு இருக்கமாட்டாங்களா? நா வாக்கப் பட்டது இந்த ஊருதா. இது பேத்தி. நாங்க பட்டணத்தி லேந்து புறப்பட்டு, ஒரு நேர்ச்சக்கடன்னு வாரோம். இங்கியே தங்குவோம். உங்களுக்கு தியாகி எஸ்.கே.ஆர். தெரியுமாங்க?"

"இதபாரு, இந்தத் கதயெல்லாம் வாணாம். இங்க இப்ப தியாகியுமில்ல, ஆருமில்ல. ஊருக்குள்ள ஆருவரதானா லும் எங்களுக்குத் தெரியணும். நட ஸ்டேஷனுக்கு. கலவரம் நடந்த ஊரு, சேதி தெரியாது?"

"நாங்க என்னப்பா பேப்பர் படிக்கிறது? நேத்து ராத்திரி வண்டிய நடு வழியிலே நிறுத்திட்டாங்க. அங்கேந்து பஸ் புடிச்சி காலம புதுக்குடி வந்தோம். ரயில் பாதையில் தண்ட

வாளத்துல நின்னு மறிக்கிறாங்கன்னாங்க. இப்ப பஸ்ஸு ரோட்டோட போவுது. சனங்கள ஏம்பா இத்தினி கஷ்டப் படுத்தணும்?''

"இதெல்லாம், இன்ஸ்பெக்டர்ட்ட வந்து சொல்லு...''

சரி, வெவரம் இல்லாத ஆளாக இருக்கிறான். என்ன கலவரம் நடந்து இவ்வளவுக்கு ஆயிருக்கும்? பட்டணத்தில் தான் துப்பாக்கி, கொள்ளை வண்டி மோதிச் சாவு அன்றாடம் அரங்கேறுது. கிராமத்தில வந்து, தங்கி எதானும் நல்லது செய்யலாம் என்று பசுங்கனவுகளில் மிதந்தாளே?

வாய்க்கால் கரை ஓரத்தில், ஊத்தங்கரை எல்லையில் புதிய போலீசுச்சாவடி இருக்கிறது. கூரைதான். தியணைப்பு வாளி. சைகிள். எங்கிருந்தோ முளைத்தாற் போல் ஓர் அழுக்குக் கவுனுடன் ஒரு பெண் குழந்தை அவர்களைப் பார்க்கிறது. போலீசுப் பயம் இல்லையோ?

அந்தக் காவலன், மேசையடியில் தொலைபேசியில் பேசிக் கொண்டிருக்கும் அதிகாரியின் முன் விறைப்பாக வணக்கம் தெரிவிக்கிறான்.

அந்த அதிகாரி இளம் பிள்ளையாக இருக்கிறான்.

"ஸார், இவங்க அழகாபுரிப் பக்கம் வராங்க...''

அவன் அவர்கள் இருவரையும் ஏற இறங்கப் பார்க்கிறான். பிறகு மரியாதையாக, "என்னம்மா? யாரு நீங்க? எங்கிருந்து வந்திருக்கிறீங்க!'' இவளுடைய வயதுக்கும், நலிவுக்கும் மதிப்புக் கொடுக்கிறான். அங்கே ஒரு பெஞ்சு இருக்கிறது. "உக்காந்து பேசுங்கம்மா, யாரு நீங்க?''

"தியாகி குடும்பம் அய்யா. காந்தி, நேரு எல்லாம் வந்திருக்காங்க. சரோ அம்மா, காந்தி கிட்ட பேசிருக்காங்க. கலியாணம் பண்ணி, புருசம் பொஞ்சாதியா வாழாம, தேசத்துக்குன்னு செயில் போனாங்க. ஈசுவரன் கோயில் வீதிங்க... அய்யா, அம்மா ரெண்டுபேருக்கும் இதா ஊரு.''

காவலன் இடைமறித்து, "ஏதேதோ கதை சொல்லுதுகள்" என்று அவசரப்படுகிறான்.

"கதை இல்ல, தம்பி நிசம்... தியாகி எஸ்.கே.ஆர். அவுங்க காலத்துலதான் அழகாபுரின்னு பேரு வச்சாங்க. நிலமெல்லாம் வினோபா வந்தப்ப பூதான இயக்கமா, அந்தக் குடி மக்களுக்கே எழுதி வச்சாருங்க... சரோஜினி அம்மா. அவரு அப்பாவுக்கு ஒரே வாரிசு..." கண்கள் கசிகின்றன.

"என்ன பேரு சொன்னீங்க?"

"தியாகி எஸ்.கே.ஆர். சின்னி கிருஷ்ணன் அப்பா, இவுரு பேரு இராம சந்திரன். எஸ்.கே.ஆர்னா எல்லாருக்கும் தெரியும்..."

"நீங்க அவுங்களுக்குச் சொந்தமா? இந்தப் பொண்ணு யாரு...?"

"அவுங்க நிழலை அண்டி, சத்தியக் குடையில் மூணு தலைமுறையா வாழ்ந்தவ. காந்தி சொன்ன பிறகு, வாழ்ந்து பெத்த ஒரே மக போயிடுத்து, அம்மா அய்யா எல்லாம் போயிட்டாங்க. எம் பேத்தி இது. அங்க நாட்டு நடப்பு, மக்கமனுசங்க எதும் புடிக்கல. இத்த ஒரு கலியாணம் கட்டி வச்சே. அவ... பாவி, கூசாம, செய்யாத அக்கிரமமெல்லாம் செய்யிறான. பச்சையா இருக்கிற மண்ணுன்னு வந்தே, இங்கியும் எரிஞ்சி கெடக்கிது... ஒண்ணுமே புரியலங்க..."

"சரி, சரி, அழுவாத. இந்த மூட்டைய வாங்கி வையிப்பா. சைகிள எடுத்திட்டுப்போயி, புதுக்குடி ஓட்டல்லந்து பிளாஸ்கில் காபியும் பத்து இட்டிலியும் வாங்கிட்டு ஜல்தி வா!" ஒரு நூறு ரூபாய் நோட்டை வைக்கிறான். சரி என்று மறுபடியும் விறைப்பாக ஒரு வணக்கம். தெரிவித்துவிட்டுப் போகிறான். அப்போதுதான் இன்னும் இரு காவலர்கள் சைகிளில் வந்திறங்கி வணக்கம் தெரிவிக்கின்றனர்.

"பெரிம்மா, நீங்க இருங்க..."

"காபி ஸார்!" என்று வந்த காவலன் பிளாஸ்கைத் திறந்து கிளாசில் ஊற்றி வைக்கிறான்.

"அந்தப் பெரிம்மாக்குக் குடு!" என்றவன், கன்னியம்மாளைக் கூப்பிடுகிறான். "நீ வாம்மா, எங் கூட?" என்று அழைக்கிறான். அவள் எதுவும் கேட்காமல போகிறாள்.

அடபாவி, இட்டிலி காபி வாங்கிட்டுவான்னு நூறு ரூபாத்தாளக் குடுத்திட்டு, அவள மட்டும் எங்கே கூட்டிட்டுப் போறான்? அவள் பதைபதைப்புடன் எழுந்திருக்கிறாள்.

"ஏ கௌவி, உக்காரு! உனக்குத்தா காப்பி. குட்சிக்க!"

"ஐயா எம்பேத்தி அவ. அவள எதுக்கு எங்க கூட்டிட்டுப் போறாரு, உங்க எஸ்.ஐ.?" அவள் காபியையும் வெள்ளைச் சீலையையும் மறந்து வெளியே விரைகிறாள்.

ஆனால் அந்தக் காவலன் இவளைப் பற்றிக்கொண்டு வந்து உட்கார்த்துகிறான். "இப்படிக் குந்துங்க. பெஞ்சி போட்டிருக்கில்ல? உங்க பேத்திக்கு ஒண்ணும் ஆவாது; பயப்படாதிய."

"ஒண்ணும் ஆவாதா? என்னிய இங்க உக்காத்தி வச்சிட்டு...."

மேலே பேசச் சொற்கள் வரவில்லை.

நிலை கொள்ளவில்லை. பார்த்தால் நல்லபிள்ளை மாதிரி இருந்தானே? பாவி? பிணந்தின்னிக் கழுகு கூடப் பார்க்க அழகாகத்தான் இருக்குமோ? அவளுக்குத் துணை நான், எனக்குத் துணை அவள்ன்னு வந்தமே? அழகாயி, இது உனக்கே நல்லாயிருக்கா? நீ இங்க தெய்வமா இல்லியா? ஊரே சூனியம் புடிச்சாப்புல இருக்கு. பஸ்ஸில என்னமோ வெட்டிப் போட்டா, குத்திப் போட்டான்னானுவ...

உடம்பே துடிக்கிறது. அந்தப் பாவத்தில் இருந்து இந்தப் பாவத்துக்கா?

காபியில் ஈ வந்து குந்துகிறது.

அவள் அதையே வெறித்துப் பார்க்கிறாள். கன்னிம்மா, நீதான் அழகாயி. நீ ஆங்காரியாயிடுவ. உனக்காக நான் பயப்படல. அழிஞ்சி போயிடுவிங்கடா?...

அவன் மட்டும் தொப்பியைத் தலையில் இருந்து எடுத்துக் கொண்டு குனிந்து உள்ளே வருகிறான்.

இவளுடைய பொங்கல் வெடிக்கிறது.

"ஐயா, எம் பேத்தி எங்க? அவள என்ன பண்ணினிய?... இப்படி நீங்கல்லாம் பொம்புள வெறிபுடிச்சி அலையுற தாலதா நாடு இப்படி ஈரமில்லாத பாலவனமாயிடிச்சி. குடும்பக் கட்டுப்பாடுன்னு, லட்சலட்சமா கருக்கொல பண்ணிப் போட்டீங்க. வெறி அதிக மாயிடிச்சி. அது கொறயல. பூமாதேவி தாங்குவாளா? பாவிங்களா? இந்த மண்ணு, தண்ணி மரம் மட்டை எல்லாம் உங்க ஒழுக்கத்துல தாய்யா துளிக்கணும். அன்னாடம் கொலை. ஆத்தாளே, பெத்தது பொண்ணுன்னா அழிக்கிறா. ரத்தவெறி."

அவள் கையை அவன் பற்றுகிறான். அழுத்தமாகப் பற்றி உட்கார வைக்கிறான். அவனுக்கும் கை நடுங்குகிறது.

"உணர்ச்சி வசப்படாதீங்க பெரியம்மா. நீங்க சொல்லுற குற்றச் சாட்டுக்கெல்லாம் என்னால பதில் சொல்ல முடியாது. ஏனுன்னா ஆதிக்கம் செலுத்தும் ஆண்வர்க்கமா பொறந்திருக்கிறேன். உங்க முன்ன வெக்கப்படுறேன், ஆணாப் புறந்ததுக்காக. உங்க பேத்தியால எங்களுக்கு உதவ முடியும். நீங்க காபி குடியுங்க, உங்களைக் கூட்டிட்டுப் போற..."

"எனக்குப் புரியலியே தம்பி, அவ உதவறத என்னால யும் முடியும். நாந் தப்பாப் பேசிட்ட போல..."

"தப்பாப் பேசல. நாயமாத்தான கேட்டீங்க. இங்கே மூணு நாளக்கு முன்ன ரத்தக்களரி. அழகாபுரத்திலேந்து

ஓராம்புள, ஊத்தங்கரை மேச்சாதிப் பொண்ணைக் கூட்டிட்டுப் பஸ்ஸிலே போயிட்டான். பஸ்ஸ மறிச்சிப் போட்டு, ஊத்தக்கர ஆளுவ அவங்க ரெண்டு பேரையும் வெட்டிப் போட்டானுவ. தடுக்க வந்தவங்களுக்கெல்லாம் அடி, உதை, பஸ் டிரைவரும் கண்டக்டரும் ஓடிட்டாங்க. ஓடனே அடுத்த நாள், அழகாபுரி ஆளுங்க ராவே புகுந்து ஊத்தங் கரையில அந்த தெருவையே எரிச்சாங்க... போலீசு, நாங்க என்ன செய்ய முடியும்? அழகாபுரில ஒரு தெருவே கைது பண்ணிருக்கிறோம். ஊத்தங்கரைக்காரங்களும்தான்... காபி குடிச்சிக்குங்க... வாங்க..." அவள் அந்தக் காபியை அருந்து கிறாள். பிறகு அவனே அவள் கையைப் பற்றி அழைத்து வருகிறான். வாய்க்காலில் அங்கங்கே முட்செடிகளும், புல்லும் பரவிக்கிடக்கிறது. அதைக் கடந்து அங்கே தெருவுக் குள் நுழைகிறார்கள். எல்லாம் மச்சு வீடுகள்; ஒன்றிரண்டு மாடி வீடுகளாக மாறி இருக்கின்றன. அதைக் கடந்து ஒற்றையாக அரசு கட்டிக் கொடுத்த வீடுகள் ஏழெட்டு தெரிகின்றன. ஒரு வீட்டில் இருந்து யாரோ குழந்தை எட்டிப் பார்த்து விட்டு உள்ளே ஓடுகிறது. ஒரு வீட்டுக்குள் அவளை அவன் அழைத்துச் செல்கிறான். செருப்பில்லாமலே நடந்து பழகிய அவளுக்குக் கால்களில் முள் தைத்தால் வலித்த தில்லை.

குடிசைகளாக இருந்த அழகாபுரி, மச்சு வீடுகளாக இருக்கின்றன. டி.வி. சாதனத்துக்கான உச்சிக் கொடிகள் இருக்கின்றன. உள்ளே... தரையில், பாய்களிலும் கந்தய் சேலைகளிலும் வெட்டுப்பட்டும் குத்துப்பட்டும், தீக்காயப் பட்டும், உடல்கள், சின்ன அறையில் நான்கு பேர். பாதி உயிர் போகும்— போன நிலையில் ஒரு கிழவனுக்கு மூச்சு வாங்குகிறது. ஒரு பிஞ்சுக் குழந்தை. காய்ச்சல் கொதிக்கக் கண் மூடித் துவண்டிருக்கிறது. அதன் தாய், மண்டையில் அடிபட்டுக் கிடக்கிறாள். ஏதோ ஓர் அழுக்குத் துணி இரத்தக்கறையுடன் முடியோடு ஒட்டிக்கிடக்கிறது. பதினைந்து பதினாறு வயசுப் பிள்ளை ஒருவன் கால் ஒடிந்த

நிலையில் இருக்கிறான். கிடைத்த துணியைச் சுத்தி இருக்கிறார்கள். கன்னியம்மா, முற்றத்தில் அடுப்பெரிய விட்டு, ஒரு மண் சட்டியில் எங்கிருந்தோ நீர் கொண்டு வந்து சூடு செய்கிறாள். பிறகு, கந்தல் துணிகளை நனைத்து ரத்தக்காயங்களை, அந்தப் பெண் பிள்ளை முகத்தைத் துடைக்கிறாள்.

அவன் ஒன்றும் பேசாமல், அடுத்த வீட்டுக்குக் கூட்டிச் செல்கிறான். அங்கு ஒரு நிறை கருப்பிணி கண் விழிக்காமல் கிடக்கிறாள். ஒரு இளைஞன் கண் விழித்தாலும், பசி, பசி, வலி வலி என்று சாடை காட்ட முடியாமல் முனகுகிறான். கைகள் இரண்டும் கட்டுப் போட்டிருக்கிறான். இரத்த வீச்சம் கப்பென்று மூச்சைப் பிடிக்கிறது. அங்கே ஒரு பெண், நர்சம்மா போல், இரட்டைப் பின்னல் போட்டுக் கட்டிக் கொண்டிருக்கிறாள். இட்டிலியை ஒரு இலையில் வைத்துப் பிய்த்துக் கொடுக்கிறாள்.

“டெட்டால் வாங்கி வரச் சொன்னனே, வரல?...”

“போட்டேன் சார். நாத்தம் இங்கல்ல. வேற பக்கம், பின்னாலேந்து வருது. கோயில் கிணத்திலேந்து தண்ணி கொண்டாந்தார் கான்ஸ்டபிள்.”

“ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போக வண்டி இல்ல. இத இப்ப வரும், அப்ப வரும்ங்கறாங்க.... அடிபட்டுக் கிடக்கிறவங்க என்ன சாதி, என்ன ஊரு?....”

“இந்தம்மாதான கவலையாயிருக்குது. குழந்தையின் துடிப்பு வயத்தில் கேக்கல... அதிர்ச்சியா இருக்கிறாங்க. அட்வான்ஸ்ட் ஸ்டேஜ்'' அவர் தலையைக் குனிந்து கொண்டு வெளிவருகிறார்.

“உங்க பேத்திய சமயத்தில் கூட்டி வந்தீங்க. நாங்க கலவரத்த அடக்கத்தான் வந்தோம். ஆனா, இந்தப் பாவங்களை எப்பிடி வுட? காக்கிச்சட்டைக்குள்ளயும் மனசு இருக்கு. காக்கி போடாட்டியும் வெறி இருக்கு. சொந்த பந்தம் ஏது என்னன்னு பாராம ஓடுறவங்க ஓடிட்டாங்க.

பிடிபட்டுப் போனவங்க, உள்ள. கோர்ட்டு கேசு இருக்கு. ஆனா, இவங்க?..."

அப்போது அங்கே, வயதானவர் ஒருவர், வாயிலில் நிற்கிறார்.

"என்ன, தாயம்மா? நினப்பு இருக்கா?..."

"ஐயா சாமி, இதென்னய்யா கோலம்...?"

"அதெல்லாம் ஒண்ணும் கேக்காதிய. இவுரு. எஸ்.ஐ. சொல்லி அனுப்பிச்சாரு, இப்படின்னு வந்திருக்காங்கன்னு. பேத்தியயும் கூட்டிட்டு வந்திருக்கிங்கன்னாங்க. நானும் ஆசுபத்திரிக்கு இவங்களக் கொண்டுட்டுப் போவணும்னு பாக்குற. அவவ... மென்னு முழுங்கறானுவ. இருக்கிற லாரி, காரு எல்லாத்தையும் எடுத்துக்கிட்டு கட்சித் தலவர் போயிட்டார்னு ஓடுறானுவ...."

அவர் கண்கள் இடுங்க, வியப்புடன் "நீங்க எப்டீம்மா வந்தீங்க?" என்று விசாரிக்கிறார்.

அவள் கையெடுத்துக் கும்பிடுகிறாள். "அதெல்லாம் இப்ப வாணாம் அய்யா. வர்ற வழி எல்லாம் சங்கட்டம். அம்மா வயித்தில இருக்கற குழந்தை, நேரம் வரப்ப எத்தினி சங்கடப்பட்டு வருது? அழகாயி மேல பாரத்தப் போட்டுட்டு வந்தோம். இங்க வந்தது... வெளி உலகக்காத்து, மூச்சு புதுசா வுடுறாப்பல இருக்கு. அய்யா..."

"நா ஒடனே இவன புதுக்குடிக்கு அனுப்பிச்சி, மருந்து கட்டுக் கட்டத் துணி, எல்லாம் கொண்டாரச் சொன்னே. எல்லாரும் கதவப் பூட்டிட்டு ஓடிட்டானுவ. புதுக்குடிலகூட தீவைப்பு, அடிதடி...."

குரலைத் தாழ்த்தி "இந்தத் தெருவிலியே, உங்க மகங்கட்சி தாதா ஒருத்தன் இருக்கிறான். போலீசு புடிச் சிட்டுப் போயிருக்கு. வீட்ல பழைய சீலை துணி எல்லாம் தேடிக் கொண்டாந்து போன. ஒரு பொம்புள போலீசு

கான்ஸ்டபிள், மல்லிகாபுரம் ஊரு. பொம்புளன்னா, அதுக்கு இயல்பா ஒரு பரிவு, மென்மை இருக்கு. தண்ணி பொதுக் கிணத்துக்கு எவ்வளவு தொலவுக்குப் போகணும்? அந்த காலத்துல வாயக்கால்ல தண்ணி வரும்... ரெண்டு வருச மாச்சி. எல்லா எழவும் அரசியலாக்கிட்டானுவ... நீங்க சொன்னாப்புல சமயத்துக்கு வந்தீங்க..."

மனம் நெகிழ்ந்து போகிறது.

அன்றிரவு கருப்பிணிப் பெண் இறந்து விடுகிறாள். அவள் புருசனும், அவன் தாயும், அவள் சகோதரனுக்கும் சொல்லி அனுப்பி வந்து சேர ஒரு முழு நாளாகிறது. அதற்குள் ஒரு போலீசு வண்டி வந்து, அடிபட்டவர்களை ஏற்றிச் செல்கிறது.

அவளைக் கொண்டு சுடலையில் இறுதிச் சடங்கு செய்வதற்கும் போலீசுதான் முன் நிற்க வேண்டி இருக்கிறது. அவளும் போகிறாள்.

சுடலை, இன்னும் கிழக்கில் இருக்கிறது. முன்பு அங்கே படுகைக்காடு போல் இருக்கும். வாய்க்காலுக்கும், ஆற்றுக்கும் இடையே மூட்டம் தெரியும். இப்போது காடு இல்லை. வாய்க்கால் மூட்டோடு சென்று இறுதி முடித்து ஆற்று மேட்டில் இறங்கி, அங்கே குட்டை போலிருக்கும் தேங்கிய நீரில் குளிக்கிறார்கள். ஈரத்துடன் அவர்கள் வரும்போது, அழகாயி கோயிலின் சுவர் தெரிகிறது. புதிய வண்ணக் கோபுரம்.

முன்பு சுற்றுச்சுவர் கிடையாது. பெரிய திடல் இருக்கும். அதில்தான் பொங்கல் வைப்பதும் உடுக்கடித்துப் பாடும் போதும், கூத்துக்கட்டும் போதும் சனங்கள் கூடி இருப்பார் கள். பின்னாலிருந்த பெரிய வேப்பமரம் இல்லை. வாய்க் காலோரம் இருந்த அரசும் வேம்பும் கூட இல்லை. பிள்ளையார் மட்டும் அநாதையாக இருக்கிறார். அங்காயி சிறைவைக்கப்பட்டாற் போல் சுற்றுச் சுவர், வாயிற்

கதவுக்குள் இருக்கிறாள். ஊரே, கோயில் முன் நிற்கக் கால் கழுவ, அவளுக்குத் தெரிந்து, தோண்டப்பட்ட கிணறு, சுற்றுச் சுவருக்குள் சிறைப்பட்டிருக்கிறது. இந்தக்கரைகளில், வீடுகட்ட கடைகால் தோண்டினால் மணல் பரிந்து தண்ணீர் வந்துவிடும். அப்படி உறை இறக்கிய கிணறு...

"அவள் வெளியில் நின்று பார்க்கிறாள்.

சூலத்தை மட்டும், 'கேட்டுக்கு' வெளியே யாரோ, அச்சுறுத்துவது போல் நட்டு வைத்திருக்கிறார்கள்.

அப்போதுதான் ஓர் இளைஞர் கூட்டம் அங்கு வருகிறது. எழும்பூர் ரயில் நிலையத்தில் அவள் பார்த்த பெண், இளைஞன். பிறகு மாயவரத்தில் இறங்கி இவர்கள் பஸ்ஸுக்குச் செல்கையில் கூட்டமாகச் சாலையில், முதுகில் சுமைப் பைகளைப் போட்டுக் கொண்டு நடந்தவர்கள்.

அவர்கள் வரும் போதே, வழியில் உள்ள முட்செடி களை, வாய்க்காலில் படர்ந்த முட்களை அப்புறப்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஒருவன் கோயில் முன் நட்ட சூலத்தை அசைக்கிறான். எடுத்து ஒருபுறம் வைக்கிறான்.

"ஆயுத கலெக்ஷன். மூன்று வாள், வேல்கம்பு, இப்ப சூலம்..." என்று கறுப்பாக, உச்சியில் முடி கட்டிக் கொண்டு, கழுத்தில் காமிராவுடன் தெரியும் பெண் இந்தியில் பேசுகிறாள். புரிகிறது.

"காலித்! இத்த நீ தொட்ட, வெட்டிடுவாங்க? அது அப்படியே இருக்கணும்..." என்று சொல்கிறான் போல் இருக்கிறது. 'காலித்' என்று பெயருக்குரிய இளைஞன், அந்த சூலத்தைத் தூக்கி ஓங்கி சம்ஹாரம் பண்ணும் பாவனை யுடன் பார்க்கிறான்.

"தாயே, அருள்புரி... நாங்கள் இனி அஹிம்சை விரதம் மேற் கொண்டு, இந்த ஆயுதங்களை உன் காலடியில் போடு கிறோம். நீயும் போட்டுவிடு..." என்று ரயிலடியில் பார்த்த பெண் தமிழில் உரக்கச் சொல்கிறாள்.

“என்ன சொல்றா இவ?” என்று மற்றவர் சாடை காட்ட அது, ஆங்கிலம், இந்தி மொழிகளில் மொழி பெயர்க்கப் படுகிறது நெஞ்சு நிறைகிறது.

நேராக கன்னியம்மா, கழுவிச் சுத்தம் செய்திருப்பாள் என்று அந்த வீட்டுப் பக்கம் வருகிறாள்.

அந்த வீட்டின் முன், துணிகள் கசக்கிப் போட்டி ருக்கிறாள். அவள் வேறு சீலை உடுத்திருக்கிறாள்.

“ஆயா, வாங்க. எங்க குளிச்சீங்க? இத இவங்க பக்கத்து வூடு. உள்ள கிணறு இருக்கு. குளிச்சி, துணியெல்லாம் கசக்கி உலத்திட்டேன். இந்தச் சீல, முன்ன வந்தாங்களே, அவங்க அனுப்பிய மூட்டயில இருந்திச்சி. ஜாக்கெட் அதையே போட்டுட்டேன். உங்களுக்கு ஒரு சீல, ஜாக்கெட் கூட இருக்கு...”

“நப்ப மூட்ட போலீசு டேசன்ல இருக்கு. கன்னிம்மா, அத்தக் கேட்டு வாங்கியாரணும் இல்ல? உன் துணிமணி இருக்கு...?”

“ம்... கேட்டே, அந்த போலீசுகாரரு, அதா நம்ம முதல்ல வெரட்டினாரே, அவுரு “அப்டீல்லாம் தந்திட மாட்டம், அதுக்குள்ள நீங்க வெடிகுண்டு கத்தி வச்சிருக்கீங்களான்னு பரிசீலனை பண்ணிட்டு பிறகுதா தருவம்...”ன்னாரு.”

அந்தப் பக்கத்து வீட்டுக்காரியே அவர்களுக்கு உள்ளே அழைத்து, இலையில் பொங்கிய சோறும் குழம்பும் படைக் கிறாள். “காய் எதும் இல்லம்மா. ஊறுகாய் வேணுமா?”

“வாணாம்மா... இதே நல்லாருக்குது... நீங்கல்லாம் இங்கியே தா இருக்கீங்களா தாயி?”

“ஆமாம்மா. எங்க வூட்டுக்காரர போல்சு புடிச்சிட்டுப் போயிருக்கு. பயம்மா இருக்கு. டி.வி.லயும் சினிமாலியும் காட்டுறாப்புல ஆயிடிச்சி. அந்தப் பைய பெரி படிப்புப்

படிச்சா. துபாய்க்குப் போயி, முஸ்லிமாயிட்டான்னு சொல்றாங்க. ஆனா அதெல்லாம் எங்களுக்குத் தெரிய லம்மா. வசதிதா. படிச்சிட்ட பயங்க முன்னுக்கு வந்து வசதியாயிட்டாங்க. ஊத்தங்கரையில மேலத்தெரு பொண்ணு, அதும் இதோட பட்டணத்தில படிச்சிச்சாம். அவனக் கட்டுவேன்னு சொல்லிருக்கு. அவப்பா, பெரியப்பா, வியாபாரம், அது நொடிச்சிப் போச்சின்னாலும் வீம்பு. முறைப் பய்யனத்தான் கட்டணும்ன்னிருக்கா. அவ அம்பது சவரன் போடணும்னாளாம். இவுரு வூட்ட வாசல வித்து அவனக் கட்ட நிச்சியம் பண்ணியாச்சி. இவங்க ராவுக்கு ராவே புதுக்குடி போயி, காருல போனாங் கன்னாங்க. ஆளுவ பஸ்ஸில புகுந்து அழகாபுரி ஆளுங்க அஞ்சு பேர வெட்டிப்புட்டாங்க. பொண்ணையும் வெட்டிட் டானுவ..."

அவளுக்குக் கேட்க முடியவில்லை. வாயில் போட்ட கவளம் இறங்க மறுக்கிறது.

இப்பிடி ஒரு சாதிக் கொடுமையா இந்த ஊருல...?

"சாதி எதும் தெரியாமதா இருந்தம் அம்மா. சின்னச் "சாதி, நீ என்னடா?ன்னு வீம்புதான். அன்னிக்குப் படிப் பில்ல, வசதியில்ல. இப்பகூட வசதியில்லாம, பன ஓலக் குடிசயில இருக்குராங்க. தண்ணியில்ல, ஒழவில்ல, பொழப் பில்ல. எடுபட்டுப் போவுதுங்க. கட்டிடம் கட்ட கூலி வேலன்னு. வயசுப் பொண்ணுகள்ளாம் எங்கியோ போயி டவுனில பிழைக்கிதுங்க...தா, காவேரி ஏரிப் பாருங்க! சித்திர வையாசி, மாசி மார்கழி எல்லாம் ஒண்ணுபோலக் கெடக்கு அல்லாம் கச்சிதாம்மா இப்ப"ன்னு முடிக்கிறாள்.

"ஒங்கூட்டுக்காரரு என்ன வேலை செய்தாரு?"

"இஸ்கூல்ல வாத்தியாரு. எங்க மாமா, பெரிய வூட்டு மணியமா இருந்தாங்க. புதுக்குடிக்குப் போய் வருவாரு, பஸ்ல மாட்டிக்கிட்டாரு. கேசொண்ணுமில்ல. வுட்டுட்டாங்க.

ஆனாலும் கலவரம் முடிஞ்சிச்சி, வந்திருவாங்க...” சாதி, சமயம், கட்சி...

விளக்கு வைக்கும் நேரம். பக்கத்து வீட்டு அகிலாவிடம் எண்ணெய் திரி வாங்கிச் சென்று, கோயிலில் விளக்கேற்று கிறார்கள். வெளி மாடத்தில் உள்ள அகலில் ஒன்றும், இன்னொன்றைப் பிள்ளையார் முன்பும் கன்னியம்மா ஏற்றுகிறாள்.

## 32

“வாங்க, வாங்க... நீங்க இங்க சாப்பிட வருவீங்கன்னு மத்தியானமே சொன்னேன். இந்நேரமாச்சி?” என்று இராம லிங்கம் வரவேற்கிறார்.

“எப்படிங்க? வீட்டிலேந்து அவங்கல்லாம் போன பிறகு, கழுவி கிழுவி எல்லாம் சுத்தம் பண்ணினம். போட்டது போட்டபடி கெடக்கு. ஓடியிருக்காங்க. அந்த ரெண்டு வீட்டிலும் ஆரும் இல்ல. ஏதோ திட்டத்துல கட்டின வீடாம். அரசு, ஆட்சி மாறிட்டதாம், குடி இருக்க வுடலயாம்... போலிசுக்காரத் தம்பி நல்லவரு...”

“இந்த வூர்ப்பையன் தாம்மா, கருப்புசாமிப் பூசாரி மக, சிவசாமி தெரியுமா? அவம் பையன். கடேசிப் பையன். போலிசுன்னு சொல்றம், பந்தோபஸ்து காவல்னு உசிரைப் பணயம் வச்சிட்டு ட்யூட்டி பண்றானுவ. எதேனும் அங் கொண்ணு இங்கொண்ணு அடாவடி இருக்கும். ஆனா, மொத்தக் கட்சிகளும் ஆட்சியும் லஞ்சப் பணத்துல அமையும் கலாசாரத்துல என்ன நடக்கும்?...”

“உக்காரம்மா, ஏன் நிக்கிற? என்ன சாப்புட்டீங்க?” அவள் சொல்கிறாள்.

பெரிய கூடம். மேலே உயர்ந்த கட்டுமானம். குழல் விளக்கை உள்ளிருந்து வரும் பணியாளன் பொருத்துகிறான்.

"ட்யுப் வாங்கிட்டு வந்து பொருத்தினியா? எப்ப?" என்று அவர் கேட்கிறார். "மத்தியானம் சைக்கிள்ள புதுக்குடி போயி வந்தேன்" என்று அவன் சொல்கிறான். உயர, காந்தி படம்... அய்யா படம், அவருடைய தாயார், தகப்பனார் படங்கள் இருக்கின்றன.

"நாமட்டும் இந்த வூட்டுல அதே குடும்பத்தின் தலை முறையாக இருக்கிறேன்..."

"அப்ப பொம்புளங்க யாரும், இல்லய்யாய்யா?"

"பொம்புள ஆம்புள ஆரும் இல்ல. சம்சாரம் போயிட்டா. மூணு புள்ள, ஒரு பொண்ணு. பொண்ணும் போன வருசம் தவறிப்போயிட்டா. ஒரு புள்ள டெல்லில இருக்கிறான். ரெண்டுபேர் யு.எஸ்.ல இருக்காங்க. பேத்தி, மகவயித்துப் பேத்தி வந்திருக்கா. விவசாய, விதை வீரிய விதைன்னு ஆராய்ச்சி பண்ணி அமெரிக்கால பட்டம் வாங்கியிருக்கா. இப்ப இங்கே வந்திருக்கிறா. ஹைதராபாத்ல வேலை எடுத்திட்டிருக்கா..."

"கலியாணம் கட்டலியா?..."

"இந்தக் காலத்துல, அவங்கவங்க சொதந்தரம்... தவுர, கலியாணம் பண்ணி நகை நட்டப் போட்டுக்கிட்டு, புருசன் கூட ஜாலியா இருக்கணுன்னுற ஆசையவுட, இந்த மாதிரி இளந் தலைமுறைகள், புதுசான சமூக உணர்வோட செயல் படுறாங்க. எல்லாரும் புதிசா விஞ்ஞானம் படிச்சாலும், ஆகாசத்துல பறக்கிறதோ, அணு யுத்தம் பண்ணுறதோ பெரிசுன்னு நினக்கல. இந்த நாட்டு வறுமைகள் ஏன் தொலையல, ஏன் வெட்டு குத்துன்னு வாராங்க? ஏன் இந்தப் பன்னாட்டு முதலைகளுக்கு இரையாறாங்கன்னு சிந்திக்கத் தொடங்கிட்டாங்க. இன்னிக்கு இந்த கிராமங்கள் தேடி வந்திருக்கு ஒரு கூட்டம். நீங்க பாத்திருப்பீங்களே? அங்கே சம்பாதிச்சி, நிதி திரட்டி, தாய் நாட்டு சமூக சேவைக்கு வந்து செயல்படுறாங்க."

மனசு பொல்லென்று பூக்கிறது.

"நம்ம பேரப் பொண்ணு எதுங்க? ஒரே சைசில அஞ்சாறு பொண்ணுங்க இருக்காங்க..."

"சாதி இனம், மதம் இல்ல, முஸ்லிம் கிறிஸ்தவர் இருக்காங்க. கறுப்பா ஒரு பொண்ணு எடுப்பான பல்லோட முடியக் கட்டிட்டுப் பாத்திருப்பிங்களே?..."

"ஆமா, அதான் பேத்தியா?"

"அது மத்ய பிரதேசத்து ஆதிவாசிப் பொண்ணு. ஃபோட்டோ கிராஃபராம். நம்ப முடியல. சுதந்தர பாரதத்தில கண் முன்ன நிறைய அழிவுகளைத்தான் பார்க்கிறோம்னு எனக்கு மனசு ரொம்பத் தாங்கலா இருந்தது. நீங்க பாத்திருப்பீங்க, அழகாபுரி நிசமாவே அழகாபுரியாத் தான் இருந்திச்சி. சாராய கலாசாரம், டி.வி. சீரழிவு, வந்து தா முன்னேறப் பாக்குறவங்களையும் காலவாரி இழுக்குது... நீங்க வரப்ப, பன ஓலக்குடிசைப் பாத்திருப்பீங்களே? அதெல்லாம் சம்பாதிச்சும் சாராயத்திலும் லாட்டரிச்சீட்டி லும் சீரழியும் சனங்கள்..."

இவர்கள் பேசும் போதே அவர்கள் எல்லோரும் வரும் அரவம் கேட்கிறது.

"அழகாயி கோயில்ல மண்டபம் கட்டிருக்காங்க, புதுசா வர்ணம் எல்லாம் அடிச்சிருக்காங்க. ஆனா, ஒரு பெரிய வேப்பமரம் உண்டு. பெரிய எடத்த அடச்சி, புள்ளயாரை வெளியே தள்ளி, எதுக்கு மதில் எழுப்பி கேட்டுப் போட்டு, பூட்டுப் போட்டிருக்காங்க அய்யா? கெணறுகூட உள்ள அம்புட்டுக்கிச்சி, பொங்கல் வைக்கிறது, கூத்துக்கட்டுற தெல்லாம் இல்லியா?...."

"உள்ளுக்குள்ள பலிபீடம், சூலம் எல்லாம் இருந்திச்சி. இருக்கும். பெரிய உண்டியல் பொட்டி இருக்கு. முன்னெல் லாம் அழகாயி ஏழையா இருந்தாம்மா. மிஞ்சிமிஞ்சி

வெள்ளில கண் மலர்தாம் போடுவாங்க. சுத்தி நந்த வனமா இருந்திச்சி. வாய்க்கால்கரை பூர அடுக்கரளி பூத்திருக்கும் கலர்கலரா, வள்ளை ரோசு, சேப்புன்னு. இப்ப இருக்கா?"

"இல்லீங்கையா..."

"ஊத்தங்கரக்காரர் தா இப்ப கோயில் நிர்வாகம் முழுசும். கறுப்பு துட்டு சேத்தவனெல்லாம், அம்மனுக்கு திருவாசி, அது இதுன்னு வெள்ளிதங்கம் போட்டாங்க. திருவிழாவுக்கு எங்கேந்தோ, ரிகார்ட் டான்ஸ் போல பொம்புளகளக் கூட்டி வந்தாங்க. சாராயம் சண்டைன்னு ஆயி ஒரு வருசம் வெட்டு குத்துல திருவிழாவே நடக்கல. சின்ன காம்பவுண்ட பெரிசாக்கி பெரிய கதவு போட்டுட்டுப் பூட்டிட்டாங்க. நம்ம தெரு கோயில் விசயத்தில் எதுவும் காதுல போட்டுக்கிறதில்ல. இங்கே நாலாவது வூடு... மின்ன, உங்களுக்குத் தெரியாது, நம்ம ஒறவுதா. உம் புருசனுக்குக் கூட சொந்தம் உண்டு. அவங்கல்லாம் அப்பவே ஊரை வுட்டுப் போயி, பூட்டியே கெடந்திச்சி. அத்த வெலக்கி வாங்கிட்டு, இப்ப கூட குடை—ஆன்டெனா இருக்கும். கேபிள் டி.வி வச்சான். அவன்தான் எதே ஒரு கழகக்கட்சி. இப்ப எதுன்னு தெரியாது. ஒருநா ராவுல புள்ளாரப் பேத்து, வாய்க்காக்கரை மரத்தடில வச்சிட்டானுவ. உண்டிப் பொட்டி உடச்சிருக்கு. டாய், டூய்னு சண்ட நாறிச்சி. கோர்ட்டு கேசுன்னு போனானுவ. முன்ன, அழகாபுரத்து ஆளுதா, வள்ளுவகுலம், நல்லபையன், தமிழ் படிச்சவன், அவந்தா தமிழ்ல பூசை பண்ணுவா. அவனை வேணான்னு பழிபோட்டுட்டு, மல்லிகா புரத்திலேந்து ஒரு அய்யர் பய்யனைக் கொண்டாந்து வச்சாங்க. அவன் சைக்கிள்ள வந்து, அங்கியே ஒரு பொங்கலப் பொங்கி, பூசை பண்ணு வான்னு சொன்னாங்க. இப்ப, அந்த திருட்டுக் கல்யாணத் துக்கு அவன் உடந்தை. துபாய்ப் பையன் துலுக்கனா யிட்டான். அவனை இந்த அய்யர் பையன், ஒரு ஸ்கூல்ல படிச்ச சிநேகம்னு ஒரு பட்டாச யாரோ கொளுத்திப் போட,

அந்தப் பய்யன் எந்த திக்கில ஓடினான்னு தெரியல...” அவள் மவுனமாக இருக்கிறாள்.

எல்லோரும் உள்ளே வருகிறார்கள். ஒரு பெஞ்சும் ஒரு பழைய கால பிரம்புபின்னிய சாய்வு நாற்காலியும், இரண்டு மர நாற்காலிகளும் இருக்கின்றன. ராமலிங்கம் சாய்வு நாற்காலியில் சாய்ந்திருக்கிறார். தாயம்மா பெஞ்சில் அமர்ந்திருக்க, கன்னியம்மா, ஒட்டி நிற்கிறாள்.

அவர்கள் எல்லோரும் பெஞ்சிலும் தரையிலுமாக உட்காருகின்றனர்.

“எல்லாம் பாத்தீங்களா?”

“பார்த்தோம். மூணு அரிவாள், குத்துகம்பு... என்ன அது?” என்று அந்தப் பெண், தமிழில் பேசியவள் கேட்கிறாள்.

“இவதா, எம்பேத்தி. செங்கமலம்... இதா... விக்ரம்... உங்க வீட்டுப் பேரன், ஒரே வாரிசு.”

“இது சூஜி... மத்யப்பிரசேத்திலேந்து வந்திருக்கு இது, லீலா, ஓரிசா, இவன் தினு... வங்காளம், இது, மாயா... மணிபுரி... இதோ இந்த வீட்டு சிங்காரம்... உசரமா பாக்குறாரே? அவரு காலித்...”

எல்லாரும் அவள் காலைத் தொட்டு, வணங்குகிறார்கள்.

எல்லாரையும் முகத்தை வழித்து திருஷ்டிகழிக்க நெஞ்சு குழைகிறது.

“நீங்க எல்லாரும் எங்கேந்து வரீங்கய்யா?”

“காலித், தினு, லீலா, இவங்கல்லாம் ஏற்கெனவே இங்க பிராஜக்ட்ல பங்கெடுத்துக்கிட்டிருக்கிறாங்க. நீர் பராமரிப்பு, தூருவாருதல், இறால் பண்ணை எதிர்ப்புன்னு இயக்கங்கள்ள சம்பந்தப்பட்டிருக்கிறாங்க. அடிப்படையில், நமக்கு ஜனநாயக உரிமை இருக்கு. எங்க தாத்தா பாட்டி காலத்

திலேயே வந்தாச்சி. அப்ப ஏன் வறுமை தொலையல? இந்தக் கட்சிகளெல்லாம் ஏன் எல்லாப் பிரச்னைகளுக்கும், சரியா தீர்வு காணாமல், இருக்கு. மக்களெல்லாம் நாம சரியான ஆட்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றிருக்கிறோம்னு உணரல? ஏன் இவ்வளவு லஞ்சம்? சாராயம்... எங்க அமைப்பு, ஒரு கிராமத்துல சாராயமே இல்லாம மாத்தி முழு வெற்றி பெற்று இருக்கு. அது மாதிரி பெண்களுக்கு, விழிப்புணர்வு கொண்டு வந்து மாத்தற திட்டம். முதல்ல, வன்முறைய மாத்தணும்... இங்க தமிழ்நாட்டில் இருபத்தஞ்சு வருசம் போல மதுவிலக்கு நடைமுறையில் இருந்ததாம்...? தாத்தா சொல்றாரு..."

"ஆமாம்மா, இருந்திச்சி. எங்கோ சில மீறல்கள் இருந்தது. பள்ளிகள், கல்லூரிகள், ஆபீசுகள்னு, குடி ஒழிஞ்சிருந்தது. திருட்டை ஒழிக்க முடியல. அந்த புத்தி எப்பிடியோ வருது. அதுக்காக காவல் துறையே வேணாம்னு சொல்றாப்புல, மதுவிலக்க எடுத்தாங்க..."

"ஆமா, இப்ப அதைவிட்டுடுங்க. தாத்தா, ஊத்தங்கரைக் காரங்களும் அழகாபுரிக்காரங்களும், வெட்டிக்கிட்டாங்க. யாருக்கு நஷ்டம்? இதை உணரச் செய்யணும். இந்த ஊரு ஆளுக, அந்த ஊரு ஆளுகள சேத்து வச்சி... என்னென்ன குறைன்னு புரிஞ்சிட்டு, நல்ல குடியாட்சி மக்களாக உரிமையுடன் செயல் படச் செய்வோம்..."

"அப்ப நீங்கல்லாம் வெவ்வேறு இடத்திலேந்துதா வந்திருக்கீங்களா?"

"எல்லாரும், இந்த நாட்டுல பிறந்தவங்கதா பாட்டி. ஆனா, இந்த விக்ரம், தினு இரண்டு பேரும் அமெரிக்காவில் இருந்து வந்திருக்காங்க. அநேகமாக எல்லாரும் படிக்கணும், ஆராய்ச்சின்னு போனோம். ஆனா இப்ப, எங்க பிறந்த நாட்டுக்கு எதானும் பண்ணணும்னு வந்திருக்கிறோம், ஆயா..."

அவளுக்கு எதுவும் பேச முடியாத நிறைவில் மனம் துளும்புகிறது.

"விக்ரம் தம்பி, என்ன உங்களுக்கு நெனப்பிருக்கா?... இத்தினி நாளா நா உங்களப்பாப்பனான்னு கெடந்தே. உங்க தாத்தா வச்ச சொத்து... அது அழியிது. மரத்த வெட்டி னாங்க." துக்கம் தொண்டையை அடைக்கிறது.

"தாயம்மா, அவங்க வச்ச சொத்து என்னிக்குமே அழியாது. ஆராலும் அழிக்க முடியாது, நம்ம காலத்துல அது நிரூபணமாகுது. இம்சையில் இருந்து அஹிம்சைதான் வர முடியும். இருட்டுக்குப்பின் உதயம்தான்னு இந்தப் பிள்ளைங்க நிரூபிக்கிறாங்க."

"கோயில் கதவு சாத்திருக்கு. சூலத்தை கேட்டுக்கு முன்னாடி நட்டு வச்சிருக்காங்க. ஏதோ, பயங்கரமா..."

"இவுரு அத்தையும் ஆட்டிப் படுக்க வச்சாரு. ஆக, பூட்டின கதவுக்கு முன்ன எங்களுக்குப் புதரிலும் அங்கும் இங்கும் கிடச்ச ஆயுதங்கள கோயிலுக்கு முன்ன போட்டு நாங்க சரணடஞ்சிட்டோம்... தாத்தா!"

விக்ரம் சொல்கிறான்.

"அதுவும் சரிதான். இப்ப காந்தி இல்ல; வினோபா இல்ல; ஜய பிரகாஷ் நாராயணனும் இல்ல..."

விக்ரம் அவளையே பார்த்துப் புன்னகை செய்கிறான். அவருக்கு அசைப்பில், ராதாம்மா மாதிரி, அவள் தந்தை மாதிரி, தாய் மாதிரி தோன்றுகிறது.

"முன்ன, உங்களுக்கு நினப்பிருக்கா?... நான் குழந்தையா இருக்கையிலே, அம்மா, ரயில்வே ஸ்டேஷன்ல, ஒரு கலைடா ஸ்கோப்... வாங்கிக்குடுத்தா. கண்ணுல வச்சி திருப்பித் திருப்பிப் பாத்திட்டிருந்தேன். இங்கே, எல்லாரிட்டயும் காட்டினேன். நீங்க எனக்கு சோறூட்டினீங்க. அதை வச்சிப் பாத்தீங்க. பிறகு, அத உக்காந்து நானே ஒட்டின காகிதம்,

போக தண்ணில போட்டு வெளயாடி எல்லாம் பிரிச்சிட்டேன். கண்ணாடித்துண்டெல்லாம் கொட்டிப் போச்சு. உங்ககிட்ட ஒட்டித்தா ஒட்டித்தான்னு அழுதேன்...?"

அவள் கண்களைத் துடைத்துக் கொள்கிறாள்.

அவன் அதே சம்பவத்தை இந்தியில் சொல்கிறான். புரியாதவர்கள் இப்போது சிரிக்கிறார்கள்.

ஆனால் தாத்தா இந்தக் கலகலப்பில் கலந்து கொள்ளவில்லை.

"நம்ம கலாசாரம், அஹிம்சை, எளிமை, ஒழுக்கம் எல்லாம் இப்படித்தான் பிடிப்பு விட்ட கண்ணாடித் துண்டுகளாயிட்டன. ஆனா இளைய வாரிசுகள் அன்னிக்கு வெள்ளைக்காரனை எதிர்த்து, எல்லாரும் ஒரே இலட்சியத்தில் கூடினாப்பில வந்திருக்கிறீங்க. அதுதான் ஆறுதல்..." என்று ஆழ்ந்த குரலில் பேசுகிறார்.

"அன்றைய மாதிரி இல்லை" என்று காலித் சொல்லும் போது, செங்கமலம் ஆமோதிக்கிறாள்.

"நம் வரலாற்று ஆராய்ச்சி அண்ணன் சொல்வது சரி. சுதந்தரப் போராட்டத்தில் வெள்ளையனை வீழ்த்தனும் என்ற குறிதான் பொது. முதல்ல, அது துப்பாக்கி கலாசாரத்தில்தான் வெளிப்பட்டது. ஹிட்லர், ஜப்பான்னு, நேதாஜியின் ஐ.என்.ஏ. வரை போச்சு. காந்தியின் அஹிம்சையின் இலக்கு பிரிட்டிஷ்காரனை மட்டும் அப்புறப்படுத்தியது... இது அப்படியில்லை.

"சரியாச் சொல்லணும்னா பெரும்பான்மையான பேருக்கு அப்பவும் சுதந்தரத்தப் பத்தி எந்தத் தெளிவும் திட்டவட்டமான கருத்தும் இல்லன்னு தோணுது. அப்படி இருந்தால், இப்பவும், சுதந்தரம்னா என்ன, மனிதருடைய அடிப்படை உரிமைகள் என்னன்னெல்லாம் எதுவுமே தெரியாத அதே பெரும்பான்மையை வச்சி குடியாட்சிங்கற

பேரில, ஒரே குப்பை கூள மக்களாச் சிதறவிட்டிருக்காது... இப்ப எனக்கெல்லாம் இந்தப் பராம்பரியம் பற்றி, உணர்வு பூர்வமா ஒண்ணுமே தெரியாது. ஆனா, நான் ஒம்பது வருசமா வெளிநாட்டில இருக்கிறேன். அப்பப்ப வருவேன். அப்பாகூட ஒருவாரம், அங்கே இங்கேன்னு வரப்பதான் பிரச்னைகள் புரியிது. காவேரி, வாய்க்கால், கோயில், நம் கொள்கைகள், மனிதநேய உறவுகள் எல்லாம் சிதைந்து போன பிறகுதான் அருமையாகத் தெரியிது..."

"சிதையாது... கொண்டு வருவோம்... மீட்போம்" என்ற தொனியில் சூஜி—கையை உயர்த்திக் காட்டுகிறாள்.

"எதை, சாதி, மதம், தீண்டாமை, பெண் ஒடுக்கல், இதெல்லாமா? இவை யெல்லாமும் இங்கே இந்திய கலாசாரப் பண்பா இருந்திருக்கு, மறக்காதே!" சிரிப்பு, கூடவே கடுமையான முகங்கள்.

"அதாவது, பழையன சிலது கழித்து, புதியது புகுத்தி..."

இவர்கள் இங்கே பேசிக் கொண்டிருக்கையில், கன்னி யம்மா, சிங்காரம், காலித், லீலா ஆகியோர் பின்புறம் நழுவி விட்டதைக் கவனிக்கவில்லை.

"தம்பி, நீங்க..." என்று தாயம்மா துவங்குமுன் அவன் அருகில் வந்து கைபற்றிக் கொள்கிறான். "என்னப் போயி நீங்க நாங்கன்னு? நா உங்க பேரன்..."

"சரி, சரி... ராசா... நீங்க..."

"இதானே, ராசாவும் வாணாம். நீங்க போன வாரம், அநு ஆன்டியப் பாத்தீங்களாம். உங்க வீட்ட எதோ மல்டி நேஷனல் நிறுவனத்துக்கு வுடறாங்க, மரத்த வெட்டினாங் கன்னு சொன்னீங்களாம்.."

"நீ வூட்டுக்குப் போனியாப்பா? குருகுலத்துல உங்க தாத்தா வாழ்ந்த காலம் நினைப்பு இருக்குன்ன. இப்ப பாத்தியா?"

"நான் போகல. நான் நேர ராஜாப்பூர் போன. பஹ்ரி கட்வால பக்கம், அப்பா அங்கதா, சிப்கோ மூவ்மென்ட்ல ஆக்டிவா போராடிட்டிருக்காரு. பிளாஸ்டிக்குப் பைய சுத்தப்படுத்துவது, விழிப்புணர்வூட்டுவதுன்னு. அவரோட நிறையப் பேர் இருக்காங்க. சுப்பய்யான்னு ஒருத்தரப் பார்த்தேன். அவுரு உங்ககூட ஏதோ கோயிலுக்கு வந்தாராம். வெறி நாயி கடிச்சிச்சாம்..."

"அப்பா, எல்லாம் சொல்லிட்டானா?..."

"ஆமா, தம்பி, அங்க நீங்க போய், ஒரு வெறி நாய் ஒழிப்பு மூவ் மென்ட் செயல் படுத்துங்கன்னாரு. ஏதோ மனநிலை பாதிக்கப்பட்டவர் போல இருந்தார்..."

"நீ வீட்டுக்குப் போகலியா?"

"செங்கமலமும் நானும் வாசலோடு போனோம். சாமானெல்லாம் லாரில ஏத்திருந்தாங்க. நேரா அநு ஆண்டியப் பார்த்தோம்..."

"அவங்க உங்களுக்குத் தெரியுமா... இல்ல, உனக்குத் தெரியுமா?"

"நிசாவும், வினோதும் எனக்கு ரொம்பப் பழக்கம். நிசா ஸ்டேட்ஸ்ல, 'தியேட்டர்' ஸ்டடீஸ்க்கு வந்திருந்தா. ஏதோ ஸ்காலர்ஷிப்ல. வினோத் அருமையான ஆக்டர். ரெண்டு பேரும் டெடிகேஷனோட ஈடுபட்டவங்க. ஸஃப்தர் ஆஷ்மி யக் கொன்னாப்புல அவனக் கொன்னிட்டாங்க... இந்த நிறுவனங்களுக்கு எதிரா, தட்டிக்கேட்டா, உடனே தீவிரவாத முத்திரை விழுந்திருது. அதுவும் செப்டம்பர் 11க்குப்பிறகு, இந்த பயம், நிரபராதிகளையே தீவிரவாத விலங்குக்குள் தள்ளுது... அதா, ரொம்ப கவனமாச் செய்ய வேண்டியிருக்கு. அப்ப எனக்கு, ஐ மீன், அநு ஆண்டியோட பேசுறப்ப, நீங்க இங்க வந்திருப்பீங்கன்னு தெரியாது. உங்க மகன் வீட்டுக்கு அனுப்பிட்டதாகவும் மயங்கி விழுந்ததாகவும், அம்ருத்சிங் அங்கில் விசாரிச்சிட்டு வந்து சொன்னாராம். அது கூட,

உங்க மகன் இறந்த சேதி சொன்னப்ப நீங்கதா இறந்திட்டீங் களோன்னு குழம்பி ஃபோன் போட்டாங்களாம். ரெஸ்பான்ஸே இல்லைன்னாங்க...”

“நாங்க போனதுல, அந்த ஆன்டிக்கு ரொம்ப சந்தோசம். இப்ப நிசாகூட எங்க ப்ராஜக்ட் எதுலானும் ஆக்டிவா செயல் படுறேன்னிருக்கா. அவங்களுக்குப் பூவனூர் போகணும் ஆசை. தாத்தா, அங்கே அவங்க அத்தை அந்த காலத்து ஃப்ரிடம் ஃபைட்டராமே? டி.பி வந்து இறந்து போனாங் களாம்.. ரொம்ப ‘டேர் டேவில்’னு சொன்னாங்க ட்வென் டீஸ்ல, வீட்டுக்குள்ள ஒரு தாழ்த்தப்பட்ட அரிசனப் பெண் குழந்தைய எல்லோருடைய எதிர்ப்பையும் பொருட் படுத்தாம கொண்டு வந்து வளர்த்தாளாம்... எங்க சம்பு அத்தைய நான் படத்துலதான் பார்த்திருக்கிறேன். எங்கம்மா வும் அவளும் ஒண்ணா சாப்பிட்டுப் படுத்து, படிச்சி... அந்த காலத்துல தாலுகாபீசு முன்ன போயி, ‘மகாத்மா காந்தி ஜே’ன்னு கத்தினாளாம்?”

பூஞ்சாரல் விசிறி அடிக்கிறது... “அநும்மா, கமலி மகளா நீ?...”

“ஏம் பாட்டி அழுறீங்க...?”

“ஒண்ணுமில்ல தாயி, அந்த தயிரியம், நேர்மை, துணிச்சல், எல்லாம் உங்களுக்கு வரும். வந்திருக்கு...”

“என்ன, எல்லாம் பேசிட்டிருக்கீங்க? வாங்க, வாங்க... சுடச்சுட சப்பாத்தி... சப்ஜி, ரெடி... வாங்க, வாங்க தாத்தா, பாட்டி, ஹேய்...”

காலித் கையில் இலைகளுடன் அழைக்கிறான். தலை எண்ணி இலை போடப் படுகிறது.

“எல்லாரும் உட்கார்ந்தால் எப்பிடி? ரொட்டி யார் பண்ணுவாங்க?”

“நாங்க பண்ணிப் போடுவோம். கரம், கரம்...”

"கரமா கரம் வேண்டாம். எல்லாம் பண்ணி முடியுங்க. நாங்க சாப்பிட்டுட்டுப் போடுறோம்."

மதியம் சமைத்து வைத்த சோறு, குழம்பு சப்பாத்தி, பொரியல், இப்போது செய்த காய்—சப்ஜி என்று கலந்து பரிமாறி, கலந்து பேசி...

அவளை உட்கார வைத்துப் போடுகிறார்கள்.

"அடாடா, வாங்க தம்பி?... என்ன கையில?"

"இது, அவங்க, பெரியம்மாவுடைய பை. அதைக் குடுத்திட்டுப் போகலான்னு வந்தேன். அவங்களுக்கும் அவங்க பேத்திக்கும் நன்றி சொல்லணும்..." போலீஸ்காரத் தம்பி... எஸ்.ஐ...

"அடாடா... கைகழுவித் துடைத்துக் கொண்டு வருகிறாள்.

"நீங்களும் உக்காந்து சாப்பிட்டுப் போங்க தம்பி!" என்று ராமலிங்கம் உபசரிக்கிறார்.

"இல்லீங்க. பிறகு ஒரு நாள் பார்க்கலாம். நான் வீட்டுக்குப் போய் ஆறு நாளாவுது. குழந்தையும் அவளும் என்ன ஆச்சோன்னு கவலப்பட்டுட்டிருப்பாங்க. இப்ப மாசம் வேற. ஆயா, உங்க சேலை, எல்லாம் பத்திரம். பாத்துக்குங்க..."

"ஐயா... என் வெள்ள சீல, அந்தப் பொண்ணு குடுத்தது, சத்தியம், அதக் கற படாம... கொண்டு வந்திட்டீங்க... நன்றி, நன்றி ஐயா!"

■■■

## ராஜம் கிருஷ்ணனின் படைப்புகள்

| | | |
|---|---|---|
| ■ வனதேவியின் மைந்தர்கள் | இதிகாச நாவல் | 75.00 |
| ■ சத்திய வேள்வி | ,, | 75.00 |

### சமூக நாவல்கள்

| | | |
|---|---|---|
| ■ மலர்கள் | (ஆனந்த விகடன் பரிசு) | 150.00 |
| ■ பாதையில் பதிந்த அடிகள் | | 80.00 |
| ■ அலைவாய்க் கரையில் | | 95.00 |
| ■ சுழலில் மிதக்கும் தீபங்கள் | | 18.00 |
| ■ குறிஞ்சித்தேன் | | 115.00 |
| ■ புயலின் மையம் | | 62.00 |
| ■ ரோஜா இதழ்கள் | | 100.00 |
| ■ சேற்றில் மனிதர்கள் | (பாரதீய பாஷாபரிஷத் பரிசு) | 68.00 |
| ■ வேருக்கு நீர் | (சாகித்ய அகாதமி பரிசு) | 75.00 |
| ■ கோடுகளும் கோலங்களும் | | 75.00 |

### பெண்ணியக் கட்டுரைகள்

| | | |
|---|---|---|
| ■ காலம் தோறும் பெண் | | 55.00 |
| ■ காலம் தோறும் பெண்மை | | 47.00 |
| ■ இந்திய சமுதாய வரலாற்றில் பெண்மை | | 38.00 |
| ■ பெண் விடுதலை | | |

### சிறுவர் கதை

| | | |
|---|---|---|
| ■ ஆலிவர் ட்விஸ்ட். (படங்களுடன்) | 'மித்ரா' | 26.00 |


# தாகம்

ஃப்ளாட் எண் G3/ 8, மாசிலாமணி தெரு
பாண்டி பஜார், தி. நகர் சென்னை—600 017
✆ 2434 5904

மின் அஞ்சல் : tamilputhakalayam@yahoo.com
tamilputhakalayam@vsnl.com

வெப் தளம் : http://expage.com/tamilputhakalayam
http://akilan.50mpegs.com

## ராஜம் கிருஷ்ணனின்

# நாவல்கள்

| | |
|---|---|
| அமுதமாகி வருக | ஓசைகள் அடங்கிய பிறகு |
| வளைக்கரம் | முள்ளும் மலர்ந்தது |
| தங்க முள் | அன்னையர் பூமி |
| மாணிக்க கங்கை | பாரத குமாரிகள் |
| நிழற்கோலம் | இடிபாடுகள் |
| அலைவாய்க் கரையில் | தோட்டக்காரி |
| சோலைக் கிளி | ஆண்களோடு பெண்களும் |
| மானுடத்தின் மகரந்தங்கள் | சேற்றில் மனிதர்கள் |
| மலை அருவி | கரிப்பு மணிகள் |
| அழுக்கு | கோபுர பொம்மைகள் |
| பாதையில் பதிந்த அடிகள் | மாறி மாறி பின்னும் |
| விடியும் முன் | கூட்டுக் குஞ்சுகள் |
| குறிஞ்சித் தேன் | வேருக்கு நீர் |
| மாயச் சூழல் | புயலின் மையம் |
| புதிய சிறகுகள் | சுழலில் மிதக்கும் தீபங்கள் |
| பானுவின் காதலன் | மண்ணகத்துப் பூந்துளிகள் |
| வீடு | கோடுகளும் கோலங்களும் |
| பெண்குரல் | சத்திய வேள்வி |
| ரோஜா இதழ்கள் | வனதேவியின் மைந்தர்கள் |